தேசிக க்ரந்தவிசாரம் மட்டும்

ஸ்ரீவைஷ்ணவத்தின் இரு கண்கள்

ஸ்வாமி ஸ்ரீராமானுஜர்

ஸ்வாமி தேசிகன்

ஸ்ரீ:
அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:

என்னுயிர் தந்து அளித்தவரைச் சரணம் புக்கு யான் அடைவே அவர் குருக்கள் நிரைவணங்கி பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல் பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி நன்னெறியை அவர்க்கு உரைத்த உய்யக்கொண்டார் நாதமுனி சடகோபன் சேனை நாதன் இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.
(ஸ்வாமி தேசிகன் அருளியது)

தேசிக க்ரந்த விசாரம் மட்டும் - வாட்ஸப்குழு தொடக்கம் : 13-05-2019
श्रीमान् वेङ्कटनाथार्य: कवितार्किक केसरि / वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ।।

இங்கு, தண்ணீர்பள்ளி ஸ்ரீ. க்ருஷ்ணன் ஸ்வாமியின் வியாசங்கள் மற்றும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான ஸ்வாமி தேசிகன் வழி பதில்கள், உள்ளன.

அட்டவணை

வரிசை எண்	விஷய தலைப்பு	பக்கம்
	நிர்வாகத்தினரின் முன்னுரை	6
1	ஞானம், விஷயம், ஞாதா	7
2	ஆழ்வார் பாசுர விளக்கம் - சொல்லுவன் சொல்	9
3	அதிகாரி விசேஷணம்	10
4	ஆழ்வார் பாசுர விளக்கம் - அறியேன் மற்று அருள்	13
5	திருமுக பாசுரம்	15
6	பரவசம் - துக்க விஷயமா ?	19
7	ப்ருஹ்மத்திற்கு ஜகத் காரணத்வம் உபலக்ஷணமா விசேஷணமா?	22
8	சரணாகதர்களின் புத்தி பூர்வக அபசாரம்	23
9	பக்தி யோகத்தில் அங்க ப்ரபத்தி	26
10	ப்ரணவத்தில் ப்ராப்தி விரோதி	28
11	பெரிய பிராட்டியும் ஈஸ்வர தத்வமே	30
12	பெரிய பிராட்டிக்கு ஈஸ்வரத்வத்தை இசையாததற்கு காரணம்	31
13	ஜீவ ஸ்வரூபம் - சம்சய விளக்கம்	35
14	நாராயண சப்தார்த்தம் - மேலும் விளக்கம்	36
15	பூமி நீளா பிராட்டிகளும் ஈஸ்வர வர்க்கமா?	37
16	ஞானமும் ஞான யோகமும்	40
17	வடகலை தென்கலை ஒற்றுமை	41
18	த்வய அர்த்த அநுஸந்தானத்தில் சரண பதம்	43

வரிசை எண்	விஷய தலைப்பு	பக்கம்
19	ஆசார்ய லக்ஷணம் - தெளிவது அவசியமா?	48
20	தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாதா?	51
21	ஸித்தோபாயமான பெரிய பிராட்டி, புருஷகாரமாய் இருப்பது எப்படி?	56
22	விதிகளை மீறும் பாபங்கள் சரணாகதனுக்கு தீங்கை விளைவிக்காது?	59
23	அப்யுபகத ப்ராரப்தத்தில் பாப விநாசம் ஸாத்யமா?	63
24	ப்ரபத்திக்கு சம்சார பந்த ஹேதுவான ஸகல பாப நாசகத்வம் கூடுமோ?	67
25	நியத் ஆய்ஸ் மற்றும் அநியத் ஆய்ஸ் - மேலும் கேள்வி	71
26	பரதேவதா தெளிவுடைய ப்ரபன்னன் கர்ம ப்ரஷ்டனானாலும் பாகவதனே	74
27	பகவத் அபசாரத்தில் பாகவத அபசாரம் அந்தர்கதமா?	78
28	பாகவத அபசாரம் - 12 வகை	83
29	ஜீவர்களின் செயல்களில் அந்தர்யாமியான எம்பெருமானின் பங்கு	84
30	தன் எண்ணங்களுக்கு ஏற்றபடி பகவத் கைங்கர்யம் செய்யலாமா?	87
31	லௌகீக ஞானவான்களும் முமுக்ஷுக்களாகாதது ஏன்?	91
32	சரணாகதனுக்கு பாகவத சம்பந்தம் எத்தகையது?	95
33	பர தத்வ - பரம ஹித - பரம புருஷார்த்தம் - ஸத் ஸம்ப்ரதாய விளக்கம்	99
34	கீதையில் சரமஸ்லோகத்திற்கு விளக்கம் ஸ்வதந்திர ப்ரபத்தி ஆகுமோ?	103
35	ஸர்வ தர்மாந் - என்பது வர்ண ஆஸ்ரம தர்ம நிஷேதமா?	107
36	ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய - பக்தி யோகத்தின் நிஷேதமா?	110
37	பரித்யைஜ்ய - கர்ம ஞான பக்தி யோகத்தின் ஸ்வரூப த்யாகமா?	113
38	பரித்யைஜ்ய - பக்தி யோகத்தை நிஷேதிக்கும் பகவத் கட்ளையா?	117
39	கண்ணன் கீதையில் விதிப்பது உபாஸநமா அல்லது ப்ரபத்தியா?	121
40	மோக்ஷ உபாயமாக கீதையில் பார்த்தனுக்கு பரிந்துரைப்பது என்ன?	124
41	ஸாங்க்ய மத கபில ஸ்ம்ருதி அநாதரணீயம்	125
42	லோக ஸங்க்ரஹார்த்தம் வ்யாஸதிகள் உபாஸந்த்தை அநுஷ்டித்தனரா?	127
43	பாகவத நிஷ்டை	131
44	ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய - ஸகல வைதீக கர்மங்களின் த்யாகமா?	132
45	வாஸுதேவ ஸர்வம் என்கிற கண்ணன் வாக்கு	135
46	ஸர்வ கர்ம த்யாகம் சரணாகதிக்கு அங்கமா?	137
47	ப்ரபன்னன் சாஸ்த்திர வச்யனா?	140
48	ப்ரபன்னனின் பகவத் கைங்கர்யம் சாஸ்த்திர ஸாபேக்ஷமாகவா?	144

வரிசை எண்	விஷய தலைப்பு	பக்கம்
49	ஸ்த்ரீ தர்மம்	147
50	தேவதாந்தர நாமம் உள்ள கர்மா சரணாகதனுக்கு த்யாஜ்யமா?	148
51	பால்ய ப்ரபத்திக்குக் பின் விவாஹ அநன்தரம் புந: ப்ரபத்தி உசிதமா?	152
52	ஸநாதன தர்மத்தில் மத மாற்றத்துக்கு ப்ரமாணம் உண்டோ ?	153
53	சரணாகதன், விரும்பிய மந்திரம் கொண்டு கர்மாவை அநுஷ்டிக்கலாமா?	157
54	ப்ரபன்னனுக்கும் புத்த பூர்வக அபசாரம் ப்ரத்யவாயகரம்	161
55	ப்ரபன்னனுக்கு ஆக்ஞா கைங்கர்யம் அநுஷ்டேயமா?	165
56	சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கமா ?	169
57	த்வய மந்திரத்தின் சாமான்ய அர்த்தம்	173
58	அசக்யத்திலே ப்ரவ்ருத்தி என்பதை எப்படி விளக்குவது?	175
59	ஸுலபனுமாய் பரனுமான சரண்யன்	179
60	ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே	183
61	சரண்யனுக்கு துல்யமாக தன்னையும் உபாயமாக எண்ணுவதா?	187
62	சரணாகதி ஸித்தோபாய ப்ரிபத்தியா?	190
63	தேசிக க்ரந்த விசாரம் மட்டும் குழுவின் நோக்கம்	194
64	விபீஷண சரணாகதி - ஸ்ரீராமன் அளித்த அபயம்	196
65	பகவத் ஜீவ நவ வித சம்பந்தம்	196
66	மாம் ஏகம் சரணம் வ்ரஜ, பக்தி ப்ரபத்தியை நிஷேதிக்கிறதா?	198
67	மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்பதால் ப்ரபத்தி அங்கங்கள் நிஷேதிக்கிறதா?	201
68	பூர்வாசார்யர்கள் சரணாகதிக்கு அதிகாரிகளா?	205
69	மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்பதால் பிராட்டிக்கு ஸித்தோபாயம் கூடுமோ?	208
70	ப்ரபத்தி ஸ்ருதி ஸித்தம் என்னில் ஸர்வருக்கும் கூடுமோ?	211
71	சரமஸ்லோக வ்ரஜ எனும் பதத்தினால், சரணாகதி மனோ வ்யாபாரமா?	215
72	சரணாகதிக்கு அல்லது ஸர்வேஸ்வரன் மோக்ஷம் கொடான்	219
73	சரணாகதி அஸக்ருத் கர்த்தவ்யம் என்பது ப்ரமாண விரோதம்	222
74	பரதந்த்ர ஜீவனுக்கு சரணாகதி விதிக்கலாகுமோ?	225
75	பிள்ளான் வரி ப்ரபத்தி அநுஷ்டானத்தை நிஷேதிக்கிறதோ?	229
76	ஸ்ரீஆளவந்தார் ப்ரபத்தி அநுஷ்டித்து அதற்காக வருந்தினாரா?	233
77	ப்ரபன்னனுக்கு புத்தி பூர்வக அபசாரம் அநிஷ்டாவகமா?	237
78	ஆத்ம உஜ்ஜீவனத்தின் பொருட்டு ஒரு சிஷ்யனுக்கு பல ஆசார்யன்	242

வரிசை எண்	விஷய தலைப்பு	பக்கம்
79	சரணம் வ்ரஜ என்பதில் அநுஷ்டான விதி நோக்கல்ல என்பது சரியா?	244
80	மாம் ஏகம் சரணம் வ்ரஜ ஈஸ்வர-ஜீவ சம்பந்த ஞானம் சொன்னபடியா?	248
81	கலியனின் பெரிய திருமொழி	252
82	ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்பதால் ப்ரபத்தி அநுபாயமா?	254
83	த்வா என ஜீவ பாரதந்த்ரியம் கூறுவதால் ப்ரபத்தி அநுபாயமா?	257
84	நித்ய விபூதியிலிருந்து ப்ராக்ருத லோகத்தில் அவதாரம்?	261
85	உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப் பட்ட நாள் எது?	263
86	ஸர்வ பாபேப்யோ மோக்ஷம் புண்யங்கள் களையப் படாததாகுமோ?	266
87	பாப புண்ய கர்மாக்களின் விளைவு	270
88	செய்த வேள்வியர் ஆகமாட்டாதவர்கள் சரணாகதி அநுஷ்டிக்காதவர்	271
89	கலங்கி உபாய புத்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடே ஒக்கும்	273
90	ஸர்வ பாபேப்யோ மோக்ஷம் என்பதில் புத்தி பூர்வக அபசாரமும் சேரும்	276
91	தாள் பணிந்தோம், வன்துயரை மருங்கு கண்டிலமால்	280
92	ஸர்வ பாபேப்யோ மோக்ஷம் கேசவம் தோஷ போக்யம் என்பதா?	282
93	புத்தி பூர்வக பாபங்களுக்கு ப்ராயஸ்சித்தம் தேவியில்லையா?	286
94	ப்ராயஸ்சித்தம் பண்ணாத புத்தி பூர்வக அபசாரங்களுக்கு அநிஷ்டம்?	290
95	கொடியதான பாகவத அபசாரமும் பரிஹரணீயம்	294
96	ஸர்வ ஸ்வதந்த்ரனானவன் ஸாத்யோபாத்தை அபேக்ஷிப்பதில்லை	299
97	சரமஸ்லோகத்தில் சரணாகதி உபசந்தன மாத்திரம்	304
98	அப்ராக்ருத அசேதந்த்துக்கு ஞானத்வம் உண்டா?	308
99	ஸித்தோபாய ப்ரபத்தி ஸாத்யோபாயத்தை நிஷேதுக்குமா?	309
100	ப்ரபன்னனின் புத்தி பூர்வக புண்யம் மோக்ஷ விளம்பத்தை ஏற்படுத்துமா?	313
101	ப்ரபன்னனின் புத்தி பூர்வக பாப க்ருத்யங்களுக்கு தடையில்லை?	317
102	ஒருவரின் பாப புண்யங்களை மற்றவருக்கு பலனாக்க அடுக்குமோ?	322
103	ஆகாமியான பாபங்கள் சரணாகதியால் களையப் படுமோ?	325
104	அநிஷ்ட நிவ்ருத்தியில் இஷ்ட ப்ராப்தியும் அந்தர்கதமோ?	330
105	ஸர்வ பாப நிவ்ருத்தி கைவல்ய பல அநுபவத்துக்கும் ஸாத்யமோ?	333
106	மோக்ஷ பலனே கைவல்ய பலன் ஆகுமா?	336
107	கைவல்ய பலன் நித்யமான புருஷார்த்தமா?	341
108	கைவல்ய பலனுக்கு அர்ச்சிராதி கதி உண்டா?	345

வரிசை எண்	விஷய தலைப்பு	பக்கம்
109	ஸாத்வீக அபசாரம் என்றால் என்ன?	350
110	உத்தரக்ருத்யத்தில் தோஷங்கள் ப்ரத்யவாயகரமா?	351
111	சரணாகதனின் சோகம் மோக்ஷ பலனுக்கு தடையா?	355
112	சரணாகதி சோக நிஷேத விதி பரமா?	359
113	சரணாகதிக்கு அதிகாரம் சம்சார பயமா அல்லது சோகமா?	363
114	ஆர்த்த ப்ரபன்னனுக்கு ப்ரபத்திக்கு அநன்தரம் சோகம் ஸாத்யமா?	366
115	சரணாகதனுக்கும் சோக நிவ்ருத்தி இங்கு ஏற்படாமல் இருக்கிறதே	370
116	சம்ப்ரதாயத்துக்கு பரிசுத்தியாவது பிறவிப் பிணியைக் களைவது	374
117	சரமஸ்லோகம் சரணாகதியை விதிக்கிறதா?	378
118	சரணாகதி சாம்சாரிக சோக நிவ்ருத்தி ஹேதுவா?	382
119	ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயம் ஆன்மீக ருசியை அழிக்கிறதா?	385
120	என் கண்ணனைக் கண்ட கண்கள் - பூமாதிகரணம்	389
121	சரணாகதனுக்கு அர்ச்சாவதார கைங்கர்யம்	392
122	முமுக்ஷுவானபோதும் ஸாத்யோபாயம் சிலருக்கு ஏன் ஸித்திப்பவில்லை?	394
123	முமுக்ஷுவுக்கு எங்கும் திருவருள் பெற்று இன்புற்று இருக்க ப்ராப்தம்	397
124	ஸ்வ ரக்ஷண ஸ்வ அந்வயம் முமுக்ஷுவுக்கு ஸ்வரூப விருத்தமா?	402
125	ஸாத்யோபாயத்தை யுக்தியினால் நிஷேதிக்க ப்ராப்தமோ?	406
126	ஸ்வாமி நம்மாழ்வாரின் ஸாத்யோபாய விளக்கம்	410
127	யுக்தி வாதிகளான ஸித்தாந்த ஏகதேசிகளின் சம்பாஷணம் பரிஹரணீயம்	413
128	பகவத் ராமாநுஜர் அநுஷ்டித்த புருஷகார ப்ரபத்தி	417
129	சம்சாரி ஜீவர்களின் தாப த்ரயம்	419
130	ஆகார த்ரய ஸம்பன்னாம் என்பது எதைக் குறிப்பதாகும்?	420
131	நம: - சரணாகதி - ப்ரணாமம் - இவைகள் ஸக்ருத் கர்த்வ்யமா?	421
132	எம்பெருமான் வ்யாஜ நிரபேக்ஷமாக மோக்ஷமளிப்பானா?	425
133	எம்பெருமானின் ஸ்வாதந்திரயமும் தயையும் மட்டுமே மோக்ஷ ஸாதனமா?	430
134	வ்யாஜ நிரபேக்ஷமாக மோக்ஷம் என நைமிசாரண்ய பாசுர விளக்கமா?	434
135	எம்பெருமானுக்கு அவதார காலத்தில் துக்கமா?	436
136	கருணையாவது பர துக்க துக்கித்வம் அநுசிதமா?	439
137	அந்தரங்க சத்ரு மற்றும் பஹிரங்க சத்ரு	444
138	உபாயம் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரு வகை	447

வரிசை எண்	விஷய தலைப்பு	பக்கம்
139	சதுர் வித புருஷார்த்தங்கள்	451
140	ப்ராப்தி விரோதியான பகவந் நிக்ரஹத்தை சமிக்க வழி யாது?	452
141	மாம் எகம் சரணம் வ்ரஜ என்பது அதிகாரி விசேஷணமா?	453
142	ஸித்தோபாய ப்ரதிபத்தி என்றால் என்ன?	458
143	ஸித்தோபாய ப்ரதிபத்தியே சரமஸ்லோகம் வவியுறுத்துகிறதா?	459
144	சேஷ சேஷி சம்பந்தம்	463
145	சரமஸ்லோகத்தால் சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணமாகுமா?	464
146	பகவத் சம்பந்த ஞானம்	468
147	மோக்ஷ பலன் பெற பகவத் சம்பந்த ஞானமே போதுமா?	470
148	அத்யந்த பரதந்த்ரனான ஜீவன் ஒரு உபாயத்தில் யத்நிக்கலாமா?	474
149	ஸித்தோபாயத்வ விளக்கம்?	475
150	ஸ்வ ரக்ஷணார்த்தம் ஸ்வ யத்நம் ஜீவனுக்கு கூடாதா?	476
	நிகமனம்	480

நிர்வாகத்தினரின் முன்னுரை :

1. ஸ்ரீ தேசிக ஸத் ஸம்ப்ரதாய காலக்ஷேப அந்வயம் கொண்டவர்களால், உண்டாக்கப் பட்ட '**தேசிக க்ரந்த விசாரம் மட்டும்**' என்கிற வாட்ஸ்ஆப் குழு 13.5.2019 முதல் தொடங்கி, ஸ்வாமி தேசிகனின் க்ருபையால், இன்று வரை நீடிக்கிறது ; ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய விஷயங்களை, பூர்வாசார்யர்கள் வழியிலே, விஷய பரிமாற்றங்களையும், விவாதங்களையும் உள் அடக்கி இருக்கிறது இந்த குழு ; வேத மார்க்கமான, ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமான ஸ்வாமி தேசிகனின் க்ரந்த நோக்கை, சரி வர க்ரஹிக்க ஒரு ப்ரயத்னமாக இந்த குழு செயல்படுகிறது.

பலருடைய கருத்துக்களை ஏற்று, இதனை ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய அபிமானிகளுக்காக, இலவச ப்ரதி புத்தகமாக வெளியிட ப்ரயாசை மேற் கொள்ளப் பட்டது ; அதன் விளைவாக 16.12.2021 அன்று, இதன் **பாகம் - 1** வெளியானது ; பிறகு 5.10.2022 அன்று **பாகம் - 2** வெளியானது ; பிறகு 8.12.2022 அன்று **பாகம் - 3** வெளியானது ; பிறகு 15.1.2023 அன்று **பாகம் - 4** வெளியானது ;

தற்போது **பாகம் - 5** வெளியிட இருக்கிறது ; முதல் நான்கு பாகங்கள் ஒவ்வொன்றிலும், **150** கட்டுரைகள் பதிவாகி இருந்தன ; தற்போது, மேலும் **150** கட்டுரைகள் **பாகம் - 5ல்** வெளியிடப் பட்டிருக்கிறது.

2. இந்த பாகத்தில் பதிவான முக்கிய விஷயங்களின் முக்கிய அம்சங்களை அட்டவணையில் காணலாம்.

ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய வழியில், ப்ரமாண பூர்வகமான, சம்சயங்களும் விளக்கங்களும் பதிவு பெற்றிருக்கின்றன.

ஸ்ரீ தேசிக ஸித்தாந்த விரோத கருத்துக்களுக்கு, ப்ரமாண பூர்வகமான, ஆட்சேப விளக்கங்களும் பதிவாயிருக்கின்றன.

'தேசிக க்ரந்த விசாரம் மட்டும்' என்கிற வாட்ஸ்ஆப் குழு, தற்போது ஒலி உருவாக **விவாத மேடை** என்றும், எழுத்து உருவாக **கேள்வி-பதில்** என்றும் பரிணாமத்தை அடைந்திருக்கிறது.

இந்த குழுவில், விவாத விமர்சனங்களும், கட்டுரைகளும், விளக்கங்கும், ஸ்ரீதேசிக க்ரந்த ப்ரமாண வரிகளோடு, தண்ணீர்பள்ளி ஸ்ரீ. உ.வே. க்ருஷ்ணன் ஸ்வாமியால், பெரும்பாலும், பதிவிடப் பட்டிருக்கின்றன.

3. இவ்விஷயங்களை, பல ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய அபிமானிகள், கண்டு-விமர்சித்து-க்ரஹித்து-உணர, இதை புத்தக வடிவில் பல பாகங்களாக ப்ரசுரிக்கப் பட உள்ளன. **இந்த ப்ரதி இலவசமே**. இதில் எந்த ஒரு வணிக நோக்கும் கிடையாது. ஸம்ப்ரதாய ரீதியான விவாதங்கள், ப்ரமாண பலத்தோடு, மேலும் கொண்டு வர வழி செய்ய வேண்டும்; அதன் மூலமாக ஸ்ரீ தேசிக க்ரந்த அர்த்தங்கள் பூர்வர்கள் வழி மாறாமல் நிலைக்க வேண்டும், என்பதே இந்த ப்ரயாஸையின் முக்கிய ப்ரயோஜனம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸர்கள்

தேசிக க்ரந்த விசாரம் மட்டும் (நிர்வாகத்தினர்)

1. <u>ஞானம், விஷயம், ஞாதா</u>

1. பதங்களின் அர்த்தங்கள்:

ஞானம் - அறிவு ; கஸ்யசித் ப்ராகசகத்வம் ; ஏதேனும் ஒன்றை தெளிவிப்பதாவது

விஷயம் - ஞானத்தினால் அறியப் படுவது

ஞாதா - ஞானத்தினால் அறிபவன்.

2. இம்மூன்றிர்க்கும் நெருங்கிய சம்ந்தம் உண்டு ; ஞானம் (அறிவு) என்னும் போது இருண்டு கேள்விகள் அதனுடனேயே வந்து நிற்கும் ;

யாருடைய ஞானம் ?

எதைப் பற்றிய ஞானம் ?

முதல் கேள்வியின் விடை ஞாதா ; இரண்டாவது கேள்வியின் விடை விஷயம்

ஞானத்தின் இருப்பை, வேறொரு ஞானத்தின் தேவையின்றி தெளிவிப்பதால், ஞானம் ஸ்வயம் ப்ரகாசம் என்றாகும் ; அதாவது, ஞானமானது, தன் இருப்பைக் காட்ட வேறொரு ஞானத்தின் தேவையின்றி தெளிவிக்கும் ; இந்த ஞானத்தின் பொதுவான விளக்கமாவது, தன்னையோ தன்னைத் தவிர்த்த வேறொன்றையோ வ்யவஹரிக்க வகை செய்வதாகும்.

3. சேதந ஸ்வரூபம், ஞான மயமானது

ஞான மயமான சேதந ஸ்வரூபமாவது தர்மி ஞானம் எனப்படும் ;

இதனால், சேதன்னின் இருப்பு சேதனனுக்கே தெளிவிக்கும் ;

இந்த தன்மையை ஸ்வஸ்மை ஸ்வயம் ப்ரகாசம் என்றும் ஸ்வஸ்மை பாஸ மானத்வம் என்றும் ப்ரத்யக்த்வம் என்றும் வ்யவஹரிக்கப் படுவதுண்டு.

இந்த சேதந ஸ்வரூபமான தர்மி ஞானம் ஸங்கோச விகாசமற்று, பத்த முக்த நித்யருக்கு, எல்லா காலத்திலும் ஸமமாக இருக்கும்.

4. சேதநன் ஞானத்தை குணமாக உடையவன்.

சேதந ஸ்வரூபத்துக்கு குணமான ஞானமாவது, தர்ம பூத ஞானம் எனப்படும் ;

இதனால், சேதனனைத் தவிர்த்த பிற விஷயங்கள் சேதனனுக்கு ப்ரகாசிக்கும் ;

இது விஷய ப்ரகாசன வேளையில் ஸ்வ ஆஸ்ரயமான சேதனனுக்கு ஸ்வயம் ப்ரகாசம் ஆகும் ;

இந்த சேதந குணமான தர்ம பூத ஞானம் ஸங்கோச விகாசமற்று, முக்த நித்யருக்கு ஸமமாக இருக்கும். பத்த ஜீவருக்கு ஸங்கோச விகாசத்தோடே இருக்கும்.

ஸ்வாமி தேசிகன், தத்வ பதவீ என்கிற க்ரந்தத்தில்,

தர்ம பூத ஞானமாவது, பர அவர ஆத்மாக்களுக்கு, ஸ்வாத்மாவையும், ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்கவற்றான ஞானம்

என அருளி இருக்கிறார். அதாவது, சேதனர்களின் தர்ம பூத ஞானமாவது,

ஸ்வாத்மாவை ப்ரகாசப் படுத்துவது - தர்மி ஞானத்தினால் தன் இருப்பை மட்டும் அறிந்திருக்கும் சேதனன் மற்றும் பரம சேதனன், தான் எத்தகையவன் என்பதை தர்ம பூத ஞானம் கொண்டே அறிகிறான். அதாவது, இந்த ஜீவாத்மா பகவானுக்கு சேஷன், அணு ஸ்வரூபன் போன்றவைகளை தர்ம பூத ஞானம் கொண்டே அறிகிறான். அதே போல் பரம சேதனனும், தான் ஸர்வருக்கும் சேஷி என்பதையும், விபு ஸ்வரூபன் போன்றவைகளை தர்ம பூத ஞானம் கொண்டே அறிகிறான்.

ஸ்வ வ்யதிரிக்த வஸ்துக்களை ப்ரகாசப் படுத்துவது - மற்ற சேதன அசேதன வஸ்துக்களின் இருப்பு மட்டும் அதன் தன்மைகளை, தர்ம பூத ஞானம் கொண்டே, அறிகிறான்.

5. ஆக, தர்ம பூத ஞானத்துக்கு விஷயீத்வம் ஏற்றம் ; தர்மியான ஆத்ம ஸ்வரூபத்துக்கு (தர்மி ஞானம்) ப்ரத்யக்த்வம் ஏற்றம். ஞானத்வமும் ஸ்வயம் ப்ரகாசத்வமும் தர்மாதர்மிகளுக்கு ஸாதாரணம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

2. ஆழ்வார் பாசுர விளக்கம் - சொல்லுவன் சொல்

1. திரு மங்கை ஆழ்வாரின் பெரிய திரு மோழி (2-9-1)

சொல்லுவன் சொல் பொருள் தான் அவையாய்ச் சுவை ஊறு ஒலி நாற்றமும் தோற்றமும் ஆய், நல் அரன் நான்முகன் நாரணனுக்கு இடம் தான் தடம் சூழ்ந்து அழகாய் கச்சி, பல்லவன் வில்லவன் என்று உலகில் பலராய் பல வேந்தர் வணங்கு கழல் பல்லவன், மல்லையர் கோன் பணிநத பரமேச்சுர விண்ணகரம் அதுவே

2. பத உரை :

சொல்லுவன் சொல் பொருள் தான் அவைதான் ஆய் - ஸர்வ சப்த வாச்யனான ஸர்வேஸ்வரன்

சுவை ஊறு ஒலி நாற்றமும் தோற்றமும் ஆய் - சப்த ஸபர்ச ரூப ரஸ கந்தமென பஞ்ச தன்மாத்ரைகளும் தானேயாய் (ஸர்வ அந்தர்யாமியாய்)

நல்அரன் நான்முகன் நாரணனுக்கு - வ்யஷ்டி ஸ்ருஷ்டி கர்தாவான ப்ருஹ்மாவுக்கும் வ்யஷ்டி ஸம்ஹார கர்தாவான சிவனுக்கும் அந்தர்யாமியாய் இருந்து போகும் ஸ்ரீமந் நாராயணனுக்கு

இடம் தான் - வசிக்குமிடம்

தடம் சூழ்ந்து அழகாய் கச்சி - தடாகங்கள் சூழ்ந்த காஞ்சிபுரத்திலே,

உலகில் - இவ்வுலகத்திலே

பல்லவன் வில்லவன் என்று உலகில் பலராய் பல வேந்தர் - ப்ராக்ருத ப்ரஸித்தி உடைய பல அரசர்களாலே

வணங்கு கழல் பல்லவன் மல்லையர்கோன் - வணங்கப்பட்ட திருவடிகளை உடையவனும் திருக்கடல் மல்லையிலுள்ளார்க்குத் தலைவனுமான பல்லவராஜன்

பணிந்த - கைகங்கர்யம் செய்யப்பெற்ற

பரமேச்சுர விண்ணகரம் அது - பரமேச்வர விண்ணகரமென்கிற திவ்ய தேசமாம்

3. விளக்கம் :

பகவத் க்ஷேத்ரமான காஞ்சியில் உள்ள பரமேஸ்வர விண்ணகரம் உந்த பாசுரத்தில் பேசப் படுகிறது. 'வைகுண்டப் பெருமாள் கோயில்' என்று அழைக்கப்படும் 'பரமேஸ்வர விண்ணகரம்,' பரமேஸ்வர பல்லவன் என்ற மன்னனால் கட்டப்பட்டது, என்பது வரலாறு.

விதர்ப்ப தேசத்து மன்னன் விரோசனுக்கு புத்திர பாக்கியம் இல்லை. தனக்கு புத்திர பாக்கியம் வேண்டி காஞ்சிபுரம் கைலாசநாதரை வழிபட்டான். சிவன் திருவருளால் விரோசனுக்கு இரண்டு

மகன்கள் பிறந்தனர். பல்லவன், வில்லவன் என்ற அந்த இரு குழந்தைகளும் திருமால் மீது அளவு கடந்த பக்தியால் கைலாசநாதர் கோயிலின் வடக்கு மூலையில் யாகம் நடத்தினர். அவர்களது பக்தியை மெச்சிய திருமால் ஸ்ரீ வைகுண்ட நாதனாக காட்சியளித்தார் என்பது ஸ்தல புராணம்.

இந்த பாசுரத்தில், ஆழ்வார், பரதேவதா நிஷ்கர்ஷம் செய்து போகிறார்.

சொல்லுவன் சொல் பொருள் தான் அவைதான் ஆய் என்று, ஸர்வ சப்த வாச்யத்வம் ஸர்வேஸ்வரனான ஸ்ரீ வைகுண்ட நாதனுக்கே உண்டு, என உறுதிபடுத்துகிறார் ; ஸர்வ சப்தத்தினால் தெளிவிக்கப் படும் ஸகல சேதன அசேதன விஷயங்களுக்கும், ஸர்வ வ்யாபியான எம்பெருமான் அந்தர்யாமியான படியால், சரீரத்தை குறிக்கும் சொல்லும் சொல் ஆத்மா பர்யந்தம் செல்லும் என்கிற கணக்கிலே, பரதத்வ (பரமாத்மா என்று) நிஷ்கர்ஷம் செய்கிறார்.

சுவை ஊறு ஒலி நாற்றமும் தோற்றமும் ஆய் என்று அனைத்து அசேதன தத்வங்களுக்கும் உபலக்ஷணமாய், பஞ்ச தன்மாத்ரைகளும் தானேயாய் என்று, ஸர்வ அந்தர்யாமித்வத்தை விளக்குகிறார்.

நல்அரன் நான்முகன் நாரணனுக்கு என்று மனிதர்களால் தெய்வமாக நினைக்கப் பெரும் ப்ராக்ருத தேவதைகளான சதுர்முகன் ருத்ரன் ஆகியோருக்கும் தான் நாயகன் என தெளிவிக்கிறார்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

3. <u>அதிகாரி விசேஷணம்</u>

1. பத விளக்கம் :

அதிகாரி - ஒரு செயலைச் செய்ய அதிகாரம் கொண்டவன்

விசேஷணம் - அந்த அதிகாரியைக் குறிக்கும் தன்மை

உதாரணமாக : உற்பத்தி தொழிற்சாலையில், தொழிலாளி எனும் போது உற்பத்தி செய்பவன் தொழிலாளியாகிறான், அவன், உற்பத்தி செய்ய அதிகாரி; உற்பத்தி செய்யும் திறன் அந்த அதிகாரியின் விசேஷணம்.

2. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் **சரணம் வ்ரஜ** என்கிற பதங்களைக் கொண்டு, ஸித்தோபாயமான ஸர்வேஸ்வரன், ஜீவர்கள் மோக்ஷ காரணமாக ஏதும் செய்யாதிருக்க, தான் மட்டுமே உபாயம் ஆகிறான் என்று ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

எம்பெருமான் பலனளிக்க ஸித்தோபாயமாய் இருக்க, சம்சாரி ஜீவர்களின் செயலான சரணாகதியைப் பற்றி, ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், கூறுவதாவது,

அதிகாரி விசேஷணம்

அதாவது, பூர்வபக்ஷிகளின் வாதமாவது, முமுக்ஷுவானவன் மோக்ஷம் பெற : **அதிகாரி**

ஸ்வ ரக்ஷணார்த்தம் ஸ்வ வ்யாபார நிவ்ருத்தி அந்த முமுக்ஷுவிற்கு **விசேஷணம்** ; அதாவது ஸித்தோபாய நம்பிக்கையே முமுக்ஷுவிற்கு மோக்ஷ உபாயம் ; அதுவே **அதிகாரி விசேஷணம்**

இது பூர்வபக்ஷம்.

3. இந்த பூர்வபக்ஷிகளின் கூற்றை, ஸ்வாமி தேசிகன், **ஸாத்யோபாய சோதனாதிகாரத்தில்** விளக்கும் போது,

இதுவும் வாக்ய ஜன்ய ஞான மாத்திரத்தாலே மோக்ஷமென்கை போலே அநாதரணீயம்

என அருளினார்.

ஆக, பகவானுக்கு தாஸன் என்கிற ஸ்வ ஸ்வரூபத்தை, சம்சாரி ஜீவன் முதலில், ஆசார்ய உபதேசத்தாலே அறிய வேண்டும். அது **வாக்ய ஜன்ய ஞானம்** (சாஸ்த்திர வாக்கியத்தால் தெளிவிக்கும் அறிவு)

அதன் பிறகு, சாஸ்த்திரம் விதித்த, மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிக்க வேண்டியது. அது, **விதிக்கு விஷயமானது** ;

மோக்ஷ உபாய சாஸ்த்திர விதிகள் பயனுள்ளதாக இருக்க, இதுவே, தாத்பர்யம்.

சாஸ்த்திர விதிக்கு விஷயமாகாதது மோக்ஷ பலன் அளிக்க வல்லதாகாது.

ஆக, மோக்ஷ உபாயமான, சரணாகதி அநுஷ்டானத்தை மறுப்பது, வேத மார்க்கம் ஆகாது; பகவத் ராமானுஜ ஸித்தாந்தம் ஆகாது; ஸ்வாமி தேசிகனின் க்ரந்த நிர்தேசத்தோடு விரோதிக்கும்.

4. அத்வைதிகள், **வாக்ய ஜன்ய ஞானம் மோக்ஷ காரணம்** என்கின்றனர்;

அவர்களது மோக்ஷ ஸ்வரூபமாவது, **ஜீவ-ப்ருஹ்ம ஐக்கியம்**.

அந்த மோக்ஷத்திற்கு காரணமாய் இருப்பது, **ஜீவ-ப்ருஹ்ம ஐக்கிய ஞானம்** என்கின்றனர்.

அத்வைத தத்த்வத்தின் சாரமாக, வேதங்களிலிருந்தும் உபநிஷத்துக்களிலிருந்தும், நான்கு அபேத வாக்யங்களைத் தனிப்படுத்தினார் சங்கரர்.

அதாவது ஈஸ்வரனுக்கும் ஜீவர்களுக்கும், அசேதநங்களுக்கும் உள்ள ஒற்றுமை வாக்யங்களைத் தனிப்படுத்தினார் சங்கரர்.

அந்த வாக்யங்களை மஹாவாக்யங்கள் என குறிப்பிட்டார் சங்கரர்.

அதை விரோதிக்கும் அனைத்து உபநிஷத் வரிகளும் அதற்கான பொருள்களும் ஏற்க தகுந்தவைகள் அல்ல, என தன் அத்வைத மதத்தை ஸ்தாபித்தார்.

அந்த வரிகளுக்கு சங்கரர் கூறிய விளக்கங்களாவது :

 # ப்ரக்ஞானம் ப்ரஹ்ம

(ரிக் வேதம் – ஐத்தரேய உபநிஷத்)

‘உயர்ந்த ஞானமே ப்ரஹ்மன்’ என்று பரமாத்மாவை அளவிடற்கரிய ஞானஸ்வரூபமாக ரிக் வேதம் காட்டுகிறது.

 # அஹம் ப்ரஹ்மாஸ்மி

(யஜுர் வேதம் -ப்ருஹதாரண்யக உபநிஷத்)

‘நான் (அஹம்) ப்ரஹ்மாஸ்மி (பரப்ரஹ்மனாக இருக்கிறேன்)’ என்று, ஜீவாத்மா பரமாத்மா வேறுபாடின்மையைக் குறிக்கிறது.

 # தத்வமஸி

(ஸாம வேதம் – சந்தோக்ய உபநிஷத்)

‘நீயும் அதுவாக இருக்கிறாய்’ என்ற பொருளைக் குறித்து, (உலக ரீதியில்) ‘நீயும் அதே பரம்பொருளாய் இருக்கிறாய், என்கிறது இந்த வாக்யம்.

 # அயமாத்மா ப்ரஹ்ம

(அதர்வண வேதம் – மாண்டூக்யோபநிஷத்)

‘இந்த ஆத்மா தான் பரப்ரஹ்மம்’, யாராக இருந்தாலும் சரி, அவரவர் உடல், பொறி, மனம், எண்ணம், உயிர் இவற்றைத்தாண்டி ‘நான்’ என்று இருக்கிற பாவமே பரப்ரஹ்மம் என்பதை எள்ளளவு ஐயமும் இன்றி நிறுவுகிறது, என்கிறது அத்வைதம்.

இது போன்று அர்த்தம் கொண்ட மேலும் சில அபேத உபநிஷத் வாக்யங்களைத் தனிப்படுத்தி, ப்ரமாணமாக்கினார் சங்கரர்:

 # ப்ரஹ்மம் ஸத்யம் ஜகந் மித்யா (ப்ரஹதாரண்ய உபநிஷத்) - பரம்பொருளே உண்மையானது; மற்றவை பொய்யான தோற்றமே.

 # ஏகமேவ அத்விதீயம் (சாந்தோக்ய உபநிஷத்) - பரம்பொருள் ஒன்றே உளது; மற்ற எதுவும் கிடையாது.

 # ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம (சாந்தோக்ய உபநிஷத்) அனைத்தும் பரம்பொருளே.

பகவத் ராமானுஜர், ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தில், மோக்ஷ ஸாதனமாக, விதிக்கு விஷயமில்லாத ஞானம், **ராகத ப்ராப்தம்** (இச்சையினால் தெளிவது) என்றும், **ஜீவ-ப்ருஹ்ம ஐக்கிய ஞானம்** என்பது **வாக்ய ஜன்ய ஞானமான** படியால் அது மோக்ஷ காரணமாகாது, எனவும் ஸ்தாபித்தார்.

இந்த ஸ்ரீராமானுஜரின் விளக்கத்தைக் கொண்டே, ஸ்வாமி தேசிகன், ஸித்தோபாய நம்பிக்கையே முமுக்ஷுவிற்கு மோக்ஷ உபாயம் ; அதுவே **அதிகாரி விசேஷணம்** என்னும் பூர்வ பக்ஷிகளின் வாதத்தை நிரஸிக்கிறார்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

4. <u>ஆழ்வார் பாசுர விளக்கம் - அறியேன் மற்று அருள்</u>

1. ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி (8-7-8)

அறியேன் மற்று அருள் என்னை ஆளும் பிரானார், வெறிதே அருள் செய்வர் செய்வார்கட்கு உகந்து, சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகும், தம் நெறி ஆ வயிற்றில் கொண்டு நின்றொழிந்தாரே.

2. பத உரை :

அறியேன் மற்று அருள் - அல்ப வ்யாஜ அநுஷ்டானத்தைத் தவிர வேறு எதையும் உன் அருள் பெற அறியவில்லை

என்னை ஆளும் பிரானார் - என்னை அடிமை கொண்ட எம்பெருமானே

வெறிதே அருள் செய்வர் - வேறு எந்த உபாயத்தையுமே எதிர் பார்க்காமல் க்ருபை பண்ணுவர்

செய்வார்கட்கு - சரணாகதி அநுஷ்டித்தவர்களுக்கு

உகந்து - திருவுள்ளமுகந்து

சிறியேனுடை சிந்தையுள் - அக்ஞாத ஸுக்ருத த் தை மட்டுமே காரணமாக்கி அடியேனை ஆட் கொண்டு

மூ உலகும் நெறி ஆ - ப்ரளய காலத்தில் மூவுலகங்களையும்

தம் வயிற்றில் கொண்டு - தன் திருவயிற்றிலே கொண்டு

நின்றொழிந்தாரே - நின்று விட்டாரே

3. விளக்கம் :

ஸ்வாமி தேசிகனின் **அதிகாரி விபாகதிகாரம்** வரிகள்:

ப்ரபன்னாத் அந்யேஷாம் ந திஷதி முகுந்தோ நிஜபதம்

ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேஸ்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்க இரங்கான்

இதனால் தெளிய வேண்டுவது என்னவென்றால், ஆப்ரிக்க கண்டத்தில் உள்ளவனுக்கும் சரணாகதி அநுஷ்டானத்தால் மோக்ஷம் உண்டு; பகவத் க்ஷேத்ரமான திருவல்லிக்கேணியில் உள்ளவனுக்கும் சரணாகதி அநுஷ்டானம் இல்லையேல் மோக்ஷம் பெற இயலாது, என்பதேயாகும்.

இப்படிப்பட்ட நிவ்ருத்தி தர்மத்திலே (மோக்ஷ பலனிலே) இச்சை கொண்ட அதிகாரிகள் இரு வகையாக சாஸ்த்திரங்கள் கூறுகின்றன:

அத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் (மோக்ஷத்திற்காக செய்யப்படும் சரணாகதி அநுஷ்டானம்)

மற்றும்

ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் (மோக்ஷ பலனுக்கான பக்தி யோகம் தடைபடிமல் இருக்க செய்யப்படும் சரணாகதி)

ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (7-16), அர்ஜுனனுக்கு உபதேசிக்கும் போது,

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி க்ஞானீ ச பரதர்ஷப:

என்கிறான்.

அதாவது,

என்னிடம் (கண்ணனை) பக்தி யோகம் செய்பவர்கள் நால்வர் :

இழந்த ப்ராக்ருத பொருட்களையும், அநுபவங்களையும் பெற நினைப்பவன்.

அசேதன கலப்பற்ற (சரீர சம்பந்தமற்ற) தன்னுடைய ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன்.

புதிய ப்ராக்ருத பொருட்களையும், அநுபவங்களையும் வேண்டுபவன்.

ப்ராக்ருத சம்பந்தமற்று, இயற்கை நிலையில், என்னையே அடைய விரும்புபவன்.

ஸ்ரீ பராசர மஹரிஷி, ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்,

தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததாஸ் ஸுகம், யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்

அதாவது,

சரணாகதி அநுஷ்டானம் நான்கு வித (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) பலன்களையும் அளிக்க வல்லது

என விளக்குகிறார்.

ஆக, ஒரு பலனைப் பெற இச்சை உள்ளவர்கள், அவரவர்களுக்கான அதிகாரத்தின் அடிப்படையில், ஸாத்யோபாயமான **பக்தி யோகம்** அல்லது **சரணாகதி அநுஷ்டானத்தை** தேர்வு செய்து அநுஷ்டிக்க வேண்டியது, சாஸ்த்திர விதி.

ஆழ்வார் அகிஞ்சனன் விஷயமான சரணாகதி அநுஷ்டானத்தையே விளக்குகிறார்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

5. திருமுக பாசுரம்

1. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

இவ்வர்த்தங்களில் ஞாதவ்யமான ஸித்தோபாயத்தைப் பற்றவும் ஸாத்யோபாய விஷயமாகவும் இவ்வுபாய ப்ரபாவ விஷயமாகவும் கர்ம வச்யருக்கு கடுகத் தெளிவு பிறவாமைக்கு ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன் இவர்களுடைய பூர்வ அபராதத்தாலே இட்ட நினைப்பு ஈடு மாறுகைக்கு ப்ரதான காரணம் மூன்று உண்டு

என அருளியுள்ளார்.

அதாவது,

முமுக்ஷுவாக இருந்தாலும், பிராட்டியோடு கூடிய எம்பெருமானே ஸித்தோபாயம் என்றும் அவன் விதித்த ஸாத்யோபாயமே மோக்ஷ காரணம் எனபதில் தெளிவு உண்டாகாமல் இருப்பதற்கு மூன்று காரணங்கள், உண்டென விளக்கப்படுகின்றன; அவைகளாவது :

 # திருமுகப் பாசுரம் இல்லாமை - சரணாகதி அநுஷ்டானம் ஸித்திக்க பிராட்டி அநுக்ரஹம் இல்லாமை.

 # ஸதாசார்ய அநுக்ரஹம் இல்லாமை - தத்வ தர்சினிகளான வேத மார்க்கமான பகவத் ராமானுஜ ஸித்தாந்த வழி வந்த ஆசார்ய அநுக்ரஹம் இல்லாமை.

 # ஸத் ஸம்ப்ரதாய ஸித்தி இல்லாமை - முமுக்ஷுவே ஆனாலும், பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்த விஷயங்களில் ஸ்ருதி வாக்ய அநுகுணமான ஸம்ப்ரதாய சம்பந்தம் அற்று இருக்கை.

2. சௌநக ஸம்ஹிதா வாக்ய வரிகளாவது:

வாசப்பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யே நியத: ஸ்ரியம்

மோக்ஷ பலனிற்காக சரணாகதி அநுஷ்டிப்பவன் நியமத்துடன் கூடியவனாய் பிராட்டியிடம் ப்ரபத்தி செய்ய வேண்டும்.

அதாவது, பெரிய பிராட்டியாரை குறிக்கும் **ஸ்ரீ** என்ற ஸம்ஸ்க்கருத சப்தத்திற்கு அகராதியில் ஆறு அர்த்தங்கள் உள்ளன, என ஸ்வாமி தேசிகன் விளக்குகிறார்:

 # ச்ரீயதே - அடையப்படுகின்றாள்; எம்பெருமானிடம் பரிந்துரைக்க வேண்டி ஜீவர்கள் அவளை அடைகிறார்கள்.

 # ச்ரயதே - அடைகின்றாள்; தன்னை அண்டிய ஜீவரகளுக்காக எம்பெருமானை அவர்கள் விஷயமாக, பரிந்துரை செய்ய, அடைகிறாள்.

 # ச்ருணோதி - கேட்கறாள்; தன்னை அண்டிய ஜீவர்களின் குறைகளைக் கேட்கிறாள்.

 # ச்ராவயதி - கேட்பிக்கிறாள்; ஜீவர்களிடம் கேட்டதை ஸர்வேஸ்வரனிடம் விண்ணப்பிக்கிறாள்.

 # ச்ருணாதி - ஒழிக்கிறாள்; மோக்ஷத்திற்கு தடையான ஜீவர்களின் பாபங்களை ஒழிக்கிறாள்

 # ச்ரீணாதி - ஜீவர்களுக்கு பரிபூரண ப்ருஹ்மானுபவமான பலனை அளிக்கிறாள்.

இதில், முதல் நான்கும் பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாருக்கு புருஷகாரமாக, அதாவது எம்பெருமானிடம் பரிந்துரைப்பவளாக, அமைகிறது. அடுத்த இரண்டும், உபாயமாக, அதாவது தானே பலனளிப்பதாகவும், அமைகிறது.

இதனால் பெரிய பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தி பண்ண வேண்டுவது, மோக்ஷ காரணமான சரணாகதிக்கு தேவையாகிறது. அந்த புருஷகார ப்ரபத்தியில் ஸித்திப்பது பிராட்டியின் அநுக்ரஹமான **திருமுக பாசுரம்**

இந்த **திருமுக பாசுரம்** மோக்ஷ உபாய விரோதியான பாபங்களைக் களைகிறது; அதன் பிறகு திவ்ய தம்பதிகளிடம் அநுஷ்டிக்கும் சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ பலனுக்கு விரோதியான பாபங்களை விலக்குகிறது, என்று தாத்பர்யம்.

இதுவே பகவத் ராமானுஜ ஸித்தாந்தம் ; ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்.

3. இதையே, சரணாகதி கத்யம் என்ற ஒரு உரையாடலாக ஸ்ரீ ராமானுஜரால் அருளப் பட்டது.

பாராமார்த்திக பகவத் சரணாரவிந்தயுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஞான பரம்பக்தி க்ருத பரிபூரண அநவரத நித்ய விஷததம அனன்யப்ரயோஜன அநவதிகாதிஷயப்ரிய பகவதனுபவ ஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரிதா அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதி ரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபேக்ஷயா பாரமார்திகி பகவத் சரணாரவிந்த சரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே

என பிராட்டியிடம், மோக்ஷ காரணமாக திவ்ய தம்பதிகளிடம் தனக்கு சரணாகதி அநுஷ்டானம் ஸித்திக்க வேண்டும், என புருஷகார ப்ரபத்தி செய்து போக,

அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே

என்று தாயாரால் அந்த சரணாகதி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. அதாவது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தடையான உபாய விரோதியான பாபங்கள் நீங்கப் பெறுவாய் என அநுக்ரஹித்தாயிற்று.

அவ்வரிகள் சரணாகதி கத்யத்தில் உள்ளன.

ஸ்வாமி தேசிகன், த்வயாதிகாரத்தில், பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யமே த்வய மந்திர விவரணம் என விளக்கியதே நினைவில் கொள்ளாமல் செய்து போவதாகும், எம்பெருமானிடம் செய்யப் படுவதாக கூறப்படும், உபாய விரோதி பாப நிவ்ருத்தி ப்ரார்த்தனை. ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் பெரிய பிராட்டியின் புருஷகாரத்தை மறுத்ததில்லை ; அவ்வழியிலே, பெருமாளே புருஷகாரமான அநுக்ரஹத்தையும் **அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே** என்பதால் செய்தருள்கிறார் எனும் வ்யாக்யானம் சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம்.

4. பெரிய பிராட்டியைக் குறித்து, நடாதூர் அம்மாள் அருளிச் செய்த ஸ்லோகம்:

ஆகாரத்ரய ஸம்பன்னாம் அரவிந்த நிவாஸிநீம் அசேஷ ஜகதீசித்ரீம் வந்தே வரத வல்லபாம்

அதாவது,

சேஷத்வ பாரதந்த்ர்ய போக்யதைகளில் அவனையன்றி அறியாதமை என்று சொல்லக்கூடிய முப்பெருமை பெற்றவளும் தாமரையில் வசிப்பவளுமான எல்லா உலகையும் நியமித்து நடத்துமவளுமான வரதனுடைய அன்புக்குரியவளை வணங்குகிறேன்.

பெரிய பிராட்டியின் மூன்று உயர்ந்த குணங்கள் சம்சாரி ஜீவர்களின் நலனுக்கு ஹேதுவாகின்றன, என அருளியுள்ளார் நடாதூர் அம்மாள். அதாவது, **புருஷகாரம், உபாயம், உபேயம்** என்று மூன்று குணங்களை பிராட்டியின் தன்மைகள் என்று சிறப்பாகச் சொல்வது வழக்கம்.

புருஷகாரமாவது - சம்சாரி ஜீவர்களின் பாபங்களைக் களைய செய்யும் பரிந்துரை. அதாவது, உபாய விரோதியான பாபங்களைக் களைவது. சரணாகதி அநுஷ்டிக்க தடையான பாபங்களைப் போக்குவது.

உபாயமாவது - சம்சாரி ஜீவர்களின் உபேய விரோதியான பாபங்களைக் களைவது. அதாவது, மோக்ஷ பலனாற்கு தடையான பாபங்களைப் போக்குவது.

உபேயமாவது ஜீவர்களின் கைங்கர்யத்தை ஸ்வீகரிப்பது.

5. மேலும் ஸ்வாமி தேசிகன் ஸித்தோபாய சோதன அதிகாரத்தில் ,

ஸத் ஸம்ப்ரதாய ஸித்தியாவது தான் ஸத்வோத்தரனாய் ஸம்யக் உபஸன்னனாய் ஸாவதானனாயிருக்கும் அவஸ்தையிலே க்யாதி லாப பூஜா நிரபேக்ஷனாய் காருண்ய பரதந்தரனான ஸதாசார்யன் ஸர்வருக்கும் ப்ரதமாசார்யனான ஸர்வேஸ்வரன் முதலாக உபதேச பரம்பரையாலே வந்த தத்வ ஹிதங்களை அநபேக்ஷித விஸ்தரமும் அபேக்ஷித ஸங்கோசமும் இல்லாத படி உபதேசிக்க பெறுகை

என அருளியுள்ளார்.

அதாவது,

 # ஸத் ஸம்ப்ரதாய ஸித்தியாவது - பகவத் ராமானுஜ ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாய வழியாவது

 # தான் ஸத்வோத்தரனாய் - ஸத்வ குணம் நிரம்ப ப் பெற்றவனாய்

 # ஸம்யக் உபஸன்னனாய் - ஆசார்யனிடம் மிகுந்த பணிவோடு

 # ஸாவதானனாயிருக்கும் அவஸ்தையிலே - பூர்வர்களின் வ்யாக்யானங்களை மாற்றி அமைக்காமல் மிகுந்த கவனத்தோடு

 # க்யாதி லாப பூஜா நிரபேக்ஷனாய் - உலகில் உண்டாகும் பணம், பிருது, புகழ் போன்றவற்றில் ஆசைகளைத் துறந்தவனாய்

 # காருண்ய பரதந்தரனான - கருணை உனும் குணத்திற்கு அடிமையானவனுமாய்

 # ஸதாசார்யன் - சிறந்த ஆசார்யனுமாய்

 # ஸர்வருக்கும் ப்ரதமாசார்யனான ஸர்வேஸ்வரன் - ஸகலருக்கும் முதல் ஆசார்யனான ஸ்ரீமந் நாராயணன்

 # முதலாக உபதேச பரம்பரையாலே - தொடக்கமாக ஆசார்ய பரம்பரையிலே, அதாவத் ஸ்ரீமந் நாதமுனி, ஸ்ரீ யாமுன முனி, ஸ்ரீ ராமானுஜ முனி பரம்பரையாக

 # வந்த தத்வ ஹிதங்களைக - வந்த தத்வ, ஹித உபதேசங்களை

 # அநபேக்ஷித விஸ்தரமும் - வேண்டாத விளக்கமும்

 # அபேக்ஷித ஸங்கோசமும் - தெளிய வேண்டிய இடத்தில் சுருக்கமும்

 # இல்லாத படி உபதேசிக்க பெறுகை - இல்லாத படி சாஸ்த்திர விஷயங்களை க்ரஹிக்க பெறுகை

பிராட்டி அநுக்ரஹத்தோடு, ஸத் ஸம்ப்ரதாய வழியான சாஸ்த்திர விஷயங்களை க்ரஹிக்காதவர்கள் மற்றும் ஸ்வாமி தேசிகன் வழியை மறந்தவர்கள், ஸத் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர் ஆகக் கூடுமோ !

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

6. பரவசம் - துக்க விஷயமா ?

1. மநு ஸ்ம்ருதியில் கூறப் படுவதாவது :

ஸர்வம் பரவசம் துக்கம் ; ஸர்வ ஆத்ம வசம் ஸுகம் ; ஏதத் வித்யாத் ஸமாஸேன லக்ஷணம் ஸக துக்கயோ:

அதாவது,

பிறருக்கு வசப் பட்டிருப்பது துக்க காரணம் ; ஸ்வதந்தரமாக இருப்பது ஸுக காரணம்.

2. ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தின் கடைசி அதிகாரமான **நிகமனாதிகாரத்தில்** , இவ்வாறு அருளியுள்ளார்.

நிர்விஷ்டம் யதிஸார்வபௌம வசஸாம் ஆவ்ருத்திபிர் யௌவநம் நிர்தூத இதர பாரதந்த்ர்ய நிரயா: நிதா: ஸுகமா வாஸரா: அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திமஸதாம் கர்வ: அபி நிர்வாபித: சேஷ ஆயுஷி அபி சேஷி தம்பதி தயா தீஷாம் உதீஷாமஹே:

அதாவது,

 # நிர்விஷ்டம் யதிஸார்வபௌம வசஸாம் - யதிராஜரான ஸ்ரீராமானுஜர் அருளிய க்ரந்தங்களின்

 # ஆவ்ருத்திபிர் யௌவநம் - காலக்ஷுபாதிகளில் இளமை பருவம் கழிந்தது

 # நிர்தூத இதர பாரதந்த்ர்ய நிரயா: - ஏதோ ஒரு காரணத்தால் மற்றவருக்கு வசப்பட்டு செயல் புரிய வேண்டிய நரக துன்பமானது இல்லாமல்

 # நிதா: ஸுகமா வாஸரா: - காலங்கள் இன்பமாக கழிந்தன

 # அங்கீக்ருத்ய ஸதாம் ப்ரஸத்திம் - நடாதூர் அம்மாள், கிடாம்பி அப்புள்ளார் போன்ற ஸம்ப்ரதாய மஹநீயர்களின் அநுக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டு

 # அஸதாம் கர்வ: அபி நிர்வாபித: - தீயர்களான பிற ஸம்ப்ரதாயத்தவர்களின் செருக்கு ஒடுக்கப் பட்டது

 # சேஷ ஆயுஷி அபி - எஞ்சியுள்ள ஆயுட் காலத்திலும்

 # சேஷி தம்பதி தயா தீஷாம் உதீஷாமஹே: - திவ்ய தம்பதிகளின் ஸங்கல்பத்தை எதிர் நோக்கி காத்துக் கிடப்பாத, சொன்னபடி.

3. இதில், கவனிக்க வேண்டிய அம்சம் :

பகவத் ராமானுஜ க்ரந்த வழியிலேயே, ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாயம், எந்த மாற்றமும் இன்றி விளக்கப்பட்டதாக, ஸ்வாமி தேசிகனின் எண்ணம் அறிய முடிகிறது.

ஏதோ ஒரு காரணத்தால் மற்றவருக்கு வசப்பட்டு செயல் புரிய வேண்டிய நரக துன்பமானது இல்லாமல் இருந்ததால், ஸம்ப்ரதாய மர்யாதையை, களங்கம் அற மன அமைதியோடு ஸுகமாக

ப்ரவர்த்திப்பிக்க, ஸ்வாமி தேசிகனால், முடிந்தது, என்பதை உணர முடிகிறது. **ஸ்வாமி தேசிகனுக்கு, பர வசம் என்கிற நரகம் இல்லாமைக்கு முக்கிய காரணம், தனம், பதவி, பிருதுகளில் ஈர்ப்பு அற்று, முன்னோர் வழி மாறாத ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகத்தை, கர்தவ்யமாக கொண்டு செயல் பட்ட உன்னத நோக்கேயாகும்**

ஸத் ஸம்ப்ரதாய விரோத செயல்களை, சாஸ்த்ரீயமான பகவத் ராமானுஜர் மற்றும் பூர்வர்களின் க்ரந்தங்களைக் கொண்டு, ஸம்ப்ரதாய அபிமானிகளுக்கு, பர மத நிரஸன பூர்வகமாக, தெளிவாக உபதேசிக்க, ஸ்வாமி தேசிகனால், முடிந்தது, என்பதை உணர முடிகிறது.

இவ்விஷயம், ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்கள், நினைவில் கொண்டு செயல் பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் வண்ணம், ஸ்வாமி தேசிகனின் இந்த காரிகை அமைந்திருக்கிறது அன்றோ !

4. கர்ம அநுகுணமாக, மற்ற கர்ம வச்யருக்கு, வசமாய் செயல்படும் போது, இந்த லோகத்தில், மநு பகவான் அருளிய படி, **ஸர்வம் பரவசம் துக்கம்** என்றாகிறது. ஆனால், ஸஹஜ ஸுக்ருதான ஸர்வ சேஷியான, பரம காருணிகனான, ஸர்வேஸ்வரனிடத்தில் உள்ள நிரூபாதிக சேஷத்வம், இனிமையாகவே இருக்கும்.

ரிஷ்யமுக பர்வதத்தில், முதன்முதலில் ஹனுமனைச் சந்தித்த போது, லட்சுமணன்,

அஹம் அஸ்ய அவரோ ப்ராதா குணைர்தாஸ்யம் உபாகத:,

என அறிமுகப் படுத்திக் கொண்டான்.

அதாவது,

நான் ஸ்ரீராமனுக்குத் தம்பி ; ஆனால் என்னைப் பொறுத்த வரை, நான் அவருக்குத் தொண்டு செய்யும் தாசன், ஏனெனில் சக்ரவர்த்தி திருமகனின் குணத்தினால் ஈர்க்கப் பட்டிருக்கிறேன் - என்று தன்னைச் சொல்லிக் கொண்டான்.

ஸ்ரீராமாநுஜரும், சரணாகதி கத்யத்தில்,

சரணாகதோஸ்மி தவாஸ்மி தாஸ:

என அருளியுள்ளார்.

அதாவது,

நான் உன் திருவடிகளை சரணமாகப் பற்றுகிறேன் ; எப்போதும் உனக்குத் தொண்டன்! - என்று அரங்கனைப் பார்த்துச் சொல்கிறார்.

ஆக, எனவே ராமாநுஜன் (ஸ்ரீராமனுக்கு அநுஜனான லக்ஷ்மணன்) மற்றும் பகவத் ராமாநுஜர் இருவரும் தங்களை ஸர்வேஸ்வரனின் தாசர்கள் தொண்டர்கள் - என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொண்டார்கள்.

5. அதனால் பகவத் பக்தியால், பகவத் பாகவத ஆசார்ய **பரவசம்** ஸ்வரூப ப்ராப்தம் ; இன்ப மயமானது.

ஆனால், இந்த உலக பலனுக்காக, ஒரு கர்ம வச்யர் பக்கலிலே **பரவசம்** , எருது பரதேசம் போன கணக்கிலே, ஸ்வரூபத்திற்கு ஹானியை விளைவிக்கும்.

இதை கூரத்தாழ்வான் தன் திருக்கண்களை பரி கொடுத்து உறுதி செய்தார்.

சோழ மன்னன் **சிவாத் பரதரம் நாஸ்தி**

என எழுதி கையெழுத்திட நியமித்தான். ஆனால், வேத வேதாந்தங்களினால், சந்தேகமற அறுதியிட்டு கூறப்படுகிற பரம்பொருளாகிற ஸ்ரீமந் நாராயணனை, கூரத்தாழ்வானால், சோழ மன்னர் அவையில், நிர்வஹித்து விளக்கப் பட்டதை கேட்டு மிகுந்த கோபங்கொண்ட வீர சைவனான சோழ அரசன் தன் பணியாளர்களிடம் கூரத்தாழ்வான் கண்களை பிடுங்கி விடுமாறு ஆணையிட்டான்.

'சோழனே ! வீர சைவனான உன்னைக் கண்ட கண்கள் எனக்கு இனி தேவையில்லை'

எனக் கூறி,

தன் கண்களை தாமே தன் கைகளால் பறித்து அந்த ஸபையில் எறிந்துவிட்டார் கூரத்தாழ்வான்.

அரச பணியாளர்கள் பெரிய நம்பிகளின் கண்களை பறித்துவிட்டனர்.

குலசேகர ஆழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழியில்,

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல்; மாயத்தால் மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா நீ ஆளா உனது அருளே பார்ப்பன் அடியேனே!

அதாவது,

'நீ எனக்கு எவ்வளவு துன்பம் தந்தாலும், அந்த துன்பங்களை தருவதற்குக் காரணமான உன் அருளையே நான் உணர்வேன்; மருத்துவன் அறுவை சிகிச்சை செய்தாலும், அவன் மேல் மீளாத காதல் கொண்ட நோயாளன் போல, நீ எனக்கு துன்பங்களைத் தந்தாலும், அதற்கான உன் அருளையே நான் நினைப்பேன்'

என்கிறார்.

அதே போல், கூரத்தாழ்வானும் பெரிய நம்பிகளும் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை, எம்பெருமானின் திருவடிகளையே மனதில் நினைத்து, ஸஹித்தனர். ஒரு உலக பலனுக்காக, சோழ மன்னர் பக்கலிலே **பரவசம்** கொண்டு ஸம்ப்ரதாய பிடிப்பை இழக்கவில்லை.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

7. <u>ப்ருஹ்மத்திற்கு ஜகத் காரணத்வம் உபலக்ஷணமா விசேஷணமா?</u>

1. இந்த பதங்களின் அர்த்தத்தை முதலில் உணர வேண்டும்.

 # விசேஷணம் - அதற்கே உரிய தன்மை; ஒருவன் வீட்டை அடையாளம் காட்டும் போது, 'மஞ்சள் நிற வீடு' என்று சொன்னால், அந்த தன்மை பொதுவாக நிரந்தரமானது. அதாவது, இதில், சொல்லப் பட்ட தன்மையைக் (மஞ்சள் நிறத்தைக்) காட்டிலும் வேறொரு மாறு பட்ட தன்மை (மற்ற நிறம்) கிடையாது எனவும் ஸித்திக்கும்.

உதாரணமாக : ஒருவன் உயரமாக இருக்கிறான் என்றால், உயரமாய் இருப்பது அவனது விசேஷணம். அதனால், அதற்கு விருத்தமான குள்ளமாக இருக்கும் தன்மை அவனிடம் இருக்க இயலாது, என்கிற பொருள் கொண்டது.

மேலும், விசேஷணமானது அந்த விசேஷ்யத்தோடு ஸகல ப்ரகாரத்திலும் ஈடுபடும் ; அந்த உயரமானவனை அழைத்து வா எனும் போது, அவன் செய்யும் வருகிறதாகிற செயலில், அவனது விசேஷணமாகிய உயரத்தோடு பிரிவு இல்லாமல் சேர்ந்தே இருப்பான் அன்றோ !

 # உபலக்ஷணம் - மற்றவற்றோடு மாறுபட்ட தன்மை; ஒருவன் வீட்டை அடையாளம் காட்டும் போது, 'அந்த காகம் அமர்ந்திருக்கும் வீடு' என்று சொல்லும் போது, அந்த தன்மை மற்ற வீடுகளோடு வேறுபடுத்திக் காட்டுகிறது.

உதாரணமாக : ஒருவன் துணிக் கடை வ்யாபாரி என்றால், அவனது வ்யாபாரம் அவனுக்கு உபலக்ஷணம். அதனால், அந்த நபரை அடையாளம் காட்டவே உதவும்.

உபலக்ஷணமாவது அந்த விசேஷ்யத்தை நிர்தாரித்து காட்ட மட்டுமே உதவுகிறது ; அந்த துணிக் கடை வ்யாபாரியை அழைத்து வா எனும் போது, அவன் செய்யும் துணிக் கடை வ்யாபாரச் செயல், அவனது வருகையில் சம்பந்தப் படாது அன்றோ !

2. இப்போது ப்ருஹ்மத்திற்கு ஜகத் காரணத்வம் உபலக்ஷணமா விசேஷணமா என்பதைத் தெளிவோம் !

ப்ருஹ்மத்துக்கு ஜகத் காரணத்வம் விசேஷணம் என்பதாவது :

யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி (தைத்ரீய உபநிஷத்) -

என்பதால் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்தைக் கொண்ட ஜகத் காரணம் உடையவன் ப்ருஹ்மம் எனப் படுகிறது. அதாவது, ஸருஷ்டி லயங்கள் வெவ்வேறு காலங்களில் ஸம்பவிப்பதால், விருத்த தர்மங்கள் ஒரே தருமியிடம் இருக்க முடியாது என்பதை நிஷேதித்து விளக்கியபடி.

ஆக, ஜகத் காரணத்வத்தை (ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்தை) உடைய ப்ருஹ்மம், அந்த தன்மைக்கு எத்தாலும் விரோதமில்லாமல் நிரந்தரமாக உண்டு எனக் காட்டப் படுவதால், ப்ருஹ்மத்துக்கு ஜகத் காரணத்வம் விசேஷணம் என்கிறது ஸ்ரீபாஷ்ய ஜந்மாத்யதிகரணம்.

ப்ருஹ்மத்துக்கு ஜகத் காரணத்வம் உபலக்ஷணம் என்பதாவது :

ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ; ஏகமேவ அத்விதீயம் (சாந்தோக்ய உபநிஷத்) -

அதாவது ப்ரளய தசையில் ப்ருஹ்மம் ஒன்றே இருந்தது ; அதனால், ஜகத் காரணம் உடையவன் ப்ருஹ்மம் என்பதாகிறது. அதாவது, ஸ்ருஷ்டி காலத்தில் ஸதூல சேதன அசேதனங்களோடு கூடிய ப்ருஹ்மம், ப்ரளய காலத்தில் ஸூக்ஷ்ம சேதன அசேதனங்களோடு கூடியவனாகிறான், என்றபடி.

ஆக, ஜகத் காரணத்வத்தை உடையவன் தான் ப்ருஹ்மம் என அறிய வேண்டும் ; மற்ற ஸகல சேதன அசேனங்களோடும் வேறு படுத்திக் காட்டப் படுவதால், ப்ருஹ்மத்துக்கு ஜகத் காரணத்வம் உபலக்ஷணம் எனலாம் எனப்படுகிறது.

மேலும், ப்ருஹ்மம் ஸித்தோபேயமாக, நித்ய விபூதியில் கைங்கர்யங்களை ஸ்வீகரிக்க, அந்த செயலில் ப்ருஹ்மத்தின் ஜகத் காரணத்வம் சம்பந்தப் படாத போது, ஜகத் காரணத்வத்தை உபலக்ஷணம் எனக் கூறக் குறையில்லை.

4. வேதவ்யாஸரின் ப்ருஹ்ம ஸூத்ரம் 1ம் அத்யாயம் 1ம் பாதம் 2ம் அதிகரணம்

ஜன்மாத்யஸ்ய யத:

என்கிறது.

அதாவது, உலகம் எவனிடம் இருந்து உண்டாகிறதோ அவன் ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

ஆக, ஸ்ருஷ்டி ஸ்திதி முதலியவை, அதாவது ஜகத் காரணம், ப்ருஹ்மத்துக்கு விசேஷணங்களாகவும் உபலக்ஷணங்களாகவும் ஆகலாம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

8. <u>சரணாகதர்களின் புத்தி பூர்வக அபசாரம்</u>

1. உபநிஷத் (வேதாந்த) ஸாரமாகிய பரம் பொருளின் விவரத்தை வேதவ்யாஸர்,

லோகவத்து லீலா கைவல்யம்

என்று, தன் சந்தோஷத்துக்காகவே ஜகத் ஸ்ருஷ்டியை (லீலா விபூதியில் படைப்பை) ஸர்வேஸ்வரன் செய்கிறான், என அருளினார்.

ஆனால் இந்த விளையாட்டு, அசேதனத்துக்கு சமமாக பிரளய காலத்தில் கிடக்கும் சம்சாரி சேதனர்களைக் கண்டு மனம் இரங்கி, அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து நல்லதைச் செய்து நற்கதியை அடையட்டும், என்னும் எண்ணத்துடன், உடல் மற்றும் புலன்களைக் கொடுத்து ஸ்ருஷ்டிக்கிறான், ஸர்வேஸ்வரன்.

2. அக்கருத்துக்கு அடிப்படையாக அமைவதாக கொள்வது ஆழ்வார் பாசுரமாகிய

தன்னடியார் திறத்தகத்து தாமரையாள் ஆகிலும் சிதகுரைககுமேல் என்னடியார் அது செய்யார்; செய்தாறேல் நன்று செய்தார் என்பர் போலும் மன்னுடைய விபீடண ற்கா மதில் இலங்கை திசை நோக்கி மலர் கண் வாய்த்த என்னுடைய திருவரங்கற்கன்றியும், மற்றொருவருக்கு ஆள் ஆவாரே

என்ற பெரியாழ்வார் திருமொழி.

தன்னிடம் சரணாகதி அநுஷ்டித்தவர்களை, பெரிய பிராட்டியாரே குற்றம் கூறினாலும், அதை ஏற்று எம்பெருமான், தன் அடியார்களை கை விடமாட்டான் என்று விளக்குவதாக அமைந்த பாசுரம்.

இது விஷயமாக, இந்த பாசுரத்தில், பெரிய பிராட்டியாரும் எம்பெருமானுக்கும் நடக்கும் பேச்சாக அமைகிறது.

ஸ்ரீ ராம அவதாரம் முடிந்த பிறகு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனும் ஸ்ரீ மகாலட்சுமி பிராட்டியும், பரமபதத்தில் (ஸ்ரீ வைகுண்டம்) பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

பிராட்டி, நீங்கள் ஏன், ஸ்ரீரங்கத்தில் தெற்கு நோக்கி பள்ளிகொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்கிறாள்.

பெருமாளும், நம் விபீஷணன் அரசாண்டு வருகிற இலங்கையை கடாஷிக்கவே அப்படி சயனித்துள்ளேன் என்கிறார்.

முன்பு, விபீஷணன், இராவணனிடத்தில், சீதாபிராட்டியை ஸ்ரீராமனிடம் விட்டு விடும் படி கூற, அதற்கு இராவணன் மறுக்க, விபீஷணனும் இந்த சீதாபிராட்டி இலங்கை வந்ததில் இருந்து நாட்டிற்கு ஒரே அபசகுநங்களாகவே நிகழ்வதாகவும், அதனால் தான் சீதா பிராட்டியை கொண்டு விடும் படியும் சொல்லவதாக, விபீஷணன் சொன்னான்.

அதை பிராட்டி நினைவு படுத்தினாள்.

ஸர்வேஸ்வரன், பிராட்டியிடம், விபீஷணன் அப்படி சொல்லி இருக்க மாட்டான்; அப்படி சொல்லி இருந்தாலும், அது நன்மை செய்வதற்கே இருக்கும், என்றான்.

எம்பெருமானுக்கு தன் அடியார்கள் பக்கலிலே உள்ள நல் எண்ணத்தை வெளிக் காட்டவே, ஸகல ஜீவர்களிடம் அதிக அன்பு கொண்ட பெரிய பிராட்டி, இந்த சம்பவத்தை நடத்தி அருள்கிறாள்.

ஆக, தோற்றத்தில் தவறு போன்று இருந்தாலும், அதனுடைய உட்கருத்தை ஆராய்ந்து, அந்த தவற்றை சரணாகதின் பக்கலிலே நீக்குவான் எம்பெருமான் என்பதே தாத்பர்யம்

இதைக் கொண்டு தெரிந்து செய்யும் சரணாகதர்களின் பாபங்களையும் எம்பெருமான் தன்னுடைய கருணையால் மட்டும் பாபங்களாக கருதாது மன்னித்து அருள்வான் என கருதுவது பொருந்தாது ஏனெனில் அது ஸகல சாஸ்த்திரங்களோடும் முரண்படும்.

3. இதையே, ஆண்டாள்,

போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசுஆகும்

என அருளிச் செய்தாள்.

அதாவது, சரணாகதன் விஷயத்தில், முன்பு செய்த பாபங்களும் (ஸஞ்சிதம் மற்றும் அநப்யுபகத ப்ராரப்தம்) மற்றும் சரணாகதிக்கு பிறகு செய்கின்ற பாபங்களும், தீயில் இட்ட தூசு போல், நசிக்கப் படுகின்றன, என்கிறாள்.

ஆனால்,

ந புக்தம் க்ஷீயதே கர்ம

என்கிற சாஸ்த்திர விதிப்படி, பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது.

ஆகையால், சரணாகதனுக்கு விலக்கப் பட்ட பாப புண்ய கர்மாக்களை அவர்கள் மோக்ஷத்தை அடையும் சமயத்தில், ஸர்வேஸ்வரன் அவர்களது புண்ய கர்மாக்களை அவர்களது நண்பர்களிடமும் பாப கர்மாக்களை அவர்களது விரோதிகளிடமும் சேர்த்து விடுகிறான் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்கரிதம். விஸரிஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்கிறது மநு தர்ம சாஸ்த்திரம்.

அதாவது, மோக்ஷத்தை அடைபவன், அதன் பொருட்டு தன் தேகத்தை விடும் போது, புண்யங்களை தன் நண்பர்களிடமும் பாபத்தை தன் விரோதிகளிடமும் விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு எம்பெருமான் சரணாகதன் விஷயத்தில் ஸங்கல்பிக்கிறான்.

அதன் பிறகு அந்த சரணாகதன் பாப புண்ய கர்ம பந்தம் அற்று பரமபதத்தை அடைகிறான்.

4. இதனை ஸ்வாமி தேசிகன் ஒரு காரிகை கொண்டு, **அபராத பரிஹார அதிகாரத்தில்** விளக்கியுள்ளார் :

ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம் ப்ராமதிகம் ச உத்தரம். ந்யாஸேன கூபயன் அநப்யுகத ப்ராரப்த கண்டம் ச ந: தீபூர்வோத்தர பாப்மநாம் அஜநநாத் ஜாதே அபி தந்நிஷ்க்ருதே: கௌடில்யே ஸதி சிக்ஷியா அநகயன் க்ரோடி கரோதி ப்ரபு:

இதன் பொருளாவது :

 # ப்ராரப்தேதர பூர்வபாபமகிலம் - ப்ராரப்தத்தை விட வேறான ஸஞ்சித கர்மாக்கள் அனைத்தும்

 # ப்ராமதிகம் ச உத்தரம் - சரணாகதிக்கு பிறகு செய்கிற அபுத்தி பூர்வக அபசாரங்களான பாபங்கள்

 # அநப்யுகத ப்ராரப்த கண்டம் ச ந: - மற்றும் முன்பு செய்த அநப்யுபகத ப்ராரப்த கர்மாக்கள்

 # ந்யாஸேன க்ஷபயன் - சரணாகதி அநுஷ்டானத்தினாலே விலக்கப் படுகிறது

 # தீபூர்வோத்தர பாப்மநாம் அஜநநாத் - மேலும், ஸாத்வீகர்களான சரணாகதர்களுக்கு பாங்கள் செய்யும் எண்ணம் உதியாது

 # ஜாதே அபி தந்நிஷ்க்ருதே: - பூர்வ பாப வசத்தினால், அவ்வாறு ஏற்பட்டாலும், அதற்காக வருந்தி, ப்ராயஸ்சித்த ப்ரபத்தி மூலம், மன்னிப்பு கேட்டுவிடுவர்

 # கௌடில்யே ஸதி - குடிலனாக அந்த சரணாகதன் இருந்து, ப்ராயஸ்சித்த ப்ரபத்தி மூலம், மன்னிப்பு கேட்காத போது

 # சிக்ஷயா அநகயன் - இப்பிறவியிலேயே தண்டனையால் அப்பாத்தை களைந்து

 # க்ரோடி கரோதி ப்ரபு: - பரம காருணிகனான எம்பெருமான் தேஹ அவஸாந்த்தில் மோக்ஷமளிக்கிறான்.

5. இவ்வாறு சரணாகதர்கள் விஷயத்தில், சரணாகதிக்கு பிறகு உண்டாகும் அபசாரங்களை களைய எம்பெருமான் தன் கருணையாலே செய்து போகிறான்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

9. பக்தி யோகத்தில் அங்க ப்ரபத்தி

1. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதனாதிகாரத்தில்**, ஸாத்யோபாய அநுஷ்டான நோக்கை அருளியுள்ளார்;

பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத் வசீகார காரணம் தத் பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புத:

அதாவது,

ஸித்தோபாயனான எம்பெருமானை வசீகரிக்க பக்தி, ப்ரபத்தி காரணமாகிறது; அந்த ஸாத்யோபாயம் பலனை அபேக்ஷிப்பவர்களால் செய்ய வேண்டுவதாகிறது.

2. **ப்ரபத்தி** பற்றி தெளிவாக ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோகாதிகாரத்தில்** அருளியுள்ளார் :

சுதுஷ்கரேண ஷோசேத்யோ யேன யேன இஷ்ட ஹேதுநா ஸ ஸ தஸ்யாம் அஹம் ஏவ இதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:

அதாவது,

எவன் தனக்கான இஷ்ட பலனுக்கு ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிறானோ, அவனுக்கு அந்த சாதனம் நானே என்பதே சரமஸ்லோகத்தில் திரண்ட பொருள்.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன் சரமஸ்லோகமாக பகவத் கீதையில் (18-66) அருளிவதாவது,

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

அதாவது,

இஷ்ட பலனுக்காக, ஒரு விதிக்ப் பட்ட சாதன உபாயத்தை செய்ய முடியாமல் வருந்துகிற நீ, அந்த சாதன உபாயத்தை விட்டு என் ஒருவனையே சரணமாகப் பற்று; அந்த பலனுக்கு தடையான அனைத்து பாபங்களில் இருந்தும் உன்னை விடுவிக்கிறேன்.

என்பது சரமஸ்லோகத்திற்கான பதத்திற்கு பொருளாகிறது.

4. இந்த சரமஸ்லோகத்திற்கு, சாதன உபாயமான பக்தி யோகத்தை செய்ய முடியாமல், மோக்ஷத்திற்கு தடையான பாபங்களைக் கண்டு வருந்தினால், அதற்கான **சாதன உபாயத்தை விட்டு** என்பதால் **பக்தி யோகத்தை விட்டு**, சரணாகதி அநுஷ்டிக்க வேண்டுமென பொருள் கிடைக்கும். இந்த சரணாகதி ப்ராப்தி விரோதியான பாபங்களைக் களைந்து மோக்ஷம் அளிக்க வல்லது.

ஆனால், சரமஸ்லோகத்திற்கு, சாதன உபாயமான ப்ராயஸ்சித்த அநுஷ்டானங்களை செய்ய முடியாமல், பக்தி யோகம் அநுஷ்டிப்பதற்கு தடையான பாபங்களைக் கண்டு வருந்தினால், அதற்கான **சாதன உபாயத்தை விட்டு** என்பதால் **ப்ராயஸ்சித்தங்களை விட்டு**, சரணாகதி அநுஷ்டிக்க வேண்டுமென பொருள் கிடைக்கும். இந்த சரணாகதி உபாய விரோதியான பாபங்களைக் களைந்து தடையின்றி பக்தி யோகத்தை தொடர வழி அளிக்க வல்லது. இதுவே **பக்தி யோகத்தில் அங்க ப்ரபத்தி**

5. இந்த பக்தி யோகத்தில் அங்க ப்ரபத்தி கீதா பாஷ்யத்தில் ஸ்ரீ ராமானுஜரால் அருளப் பட்டிருக்கிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

10. ப்ரணவத்தில் ப்ராப்தி விரோதி

1. ப்ரணவ அர்த்த அநுஸந்தான க்ரமத்தை,

அ என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய எம்பெருமான் விளக்கப் படுவதாயும், **ம** என்பதால் தாஸனாக சொல்லப் படுகிற ஜீவனையும், **உ** என்பதால், சம்பந்தம் என்கிற அகராதியில் உள்ள அர்த்தம் கொண்டு பகவானோடு ஜீவனுக்கு உள்ள தாஸத்வம் சொல்லப் படுகிறது. சேஷனாக ஜீவனை **ம** காரம் கொண்டு சித்தரித்து, அவன் **அ** கார வாச்யனான எம்பெருமானுக்கே என்று **உ** காரம் கொண்டு சொல்லபடுவதால்,

இந்த சம்பந்தம் எத்தகையது என அறிய வேண்டுவதாகிறது. அதன் விளக்கம் நம: பதம் கொண்டு அறிய வேண்டுவதாகிறது.

அதாவது, ம காரத்திற்கும் அ காரத்திற்கும் சம்பந்தம்சேஷ-சேஷி சம்பந்தம் ஆகிறது.

சேஷனின் ஸ்வரூபமானது சேஷ வ்ருத்தியாகிறது; அதாவது, ஜீவனின் இயல்பு பரமனுக்கு கைங்கர்யம் செய்வது.

அதை சொல்லும் வகையில் அ காரத்தில் சதுர்த்தி வினைத் தொகை மறைந்திருப்பதாக கூறப் படுகிறது.

ஏனெனில் தாதர்த்யே சதுர்த்தி என்று சதுர்த்தி வினைத் தொகை தாதர்த்யத்தை குறிக்கும். அதாவது சேஷியைக் குறித்து சேஷன் செய்ய வேண்டிய அடிமைத் தொழிலைக் குறிக்கும்.

அதனால் அ கார வாச்யனான எம்பெருமானுக்கே ம கார வாச்யனான ஜீவன் சேஷ பூதன்; சேஷ வ்ருத்தியை இயல்பாகக் கொண்டவன், என்றாகிறது.

2. ப்ரணவ அர்த்தத்தில், **ம** கார வாச்யனான ஜீவன், **அ** கார வாச்யனான எம்பெருமானை மறந்து நிற்க **ப்ராப்தி விரோதி** காரணமாகிறது.

ப்ரணவத்தில் ப்ராப்தி விரோதி என்பது, **வ்யவச்சேத** சக்தியாலே உண்டாகிறது, என அறியலாம்.

உதாரணமாக,

பள்ளியிலிருந்து வீடு திரும்பும் மாணவனை **நேராக வீட்டுக்குப் போ** என பணித்தால், அந்த வரியில் உள்ள **வ்யவச்சேத** சக்தியாலே **வேறெங்கும் போகாதே** என்பது ஸித்திக்கிறது.

அது போல,

ப்ரணவம் கொண்டு பார்க்கும் போது, அ கார வாச்யனான எம்பெருமானுக்கே ம கார வாச்யனான ஜீவன் சேஷ பூதன், எனபதால்,

வ்யவச்சேத சக்தியாலே

ஜீவன் எம்பெருமானைத் தவிர தனக்கோ பிறருக்கோ சேஷனாக மாட்டான் என்பது ஸித்திக்கிறது.

அவ்வாறு, எண்ணுவதும் செயல் படுவதுவும் ஜீவனுக்கு, ப்ராப்தி விரோதி ஆகிறது; அது ப்ரணவத்தில் வ்யவச்சேத சக்தியாலே, ஸித்திக்கிறது.

3. இந்த, சம்சாரி விஷயத்தில் **ப்ராப்தி விரோதியான** பாபங்கள் 12 வகைகளில் செயல் படுகிறது:

சாஸ்த்திர விரோதமாக செயல்படும் அசுர குணம் உடையவனாக்குகிறது;

சரீரமே ஆத்மா என்கிற எண்ணத்தோடு சரீர சுகத்தைக் கருதியே வாழ்ந்து போவதாகிறது;

சாஸ்த்திர வச்யதை உள்ள மனித சரீரம் பெறாமல் விலங்குகள் மற்றும் பறவைகள் போன்ற த்ரியக் சரீரத்தில் புகுந்து சம்சார ஸுக துக்கங்களை அநுபவித்து போவதாகிறது;

வேத வேதாந்த சாஸ்த்திர நம்பிக்கை இல்லாத ஒரு கூட்டத்திலே சேர்த்தும் (**பாஹ்ய மதங்கள்**), வேத வேதாந்த சாஸ்த்திரங்களை தவறாக அர்த்தம் கற்பிக்கும் ஒரு கூட்டத்திலே சேர்த்தும் (**குத்ருஷ்டி மதங்கள்**) , இருந்து போவதாகிறது;

வேத வேதாந்த சாஸ்த்திர நம்பிக்கை இருந்த போதும், உலக விஷயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இருப்பதாகிறது;

வேத வேதாந்த சாஸ்த்திர நம்பிக்கை இருந்த போதும், சாஸ்த்திரத்தில் செய்யக் கூடாது என மறுக்கப் பட்ட விஷயங்களை மிருந்த உவகையோடு செய்து கொண்டு இருப்பதாகிறது;

சாஸ்த்திரத்தில் செய்யக் கூடாது என மறுக்கப் பட்ட விஷயங்களை மிருந்த உவகையோடு செய்து கொண்டு இருப்பது, அதனால் உண்டாகும் பாப சம்பந்தத்தினால், **மீண்டும் மீண்டும் பாப காரியமே** செய்திருப்பதாகிறது;

சாஸ்த்திரத்தில் அநுமதிக்கப் பட்ட, ஆனால் அதற்கு பலனாக அற்பமானவற்றையே அளித்திருப்தை உணராது, அதை கொடுக்க வல்லமை கொண்ட **தாழ்ந்த தேவதா ஈடுபாடு** கொண்டு இருந்து போவதாகிறது;

அற்பமான **ஸ்வர்காதி பலன்களையே** பெரிதாக நினைத்து, அதை அடைவதிலேயே காலத்தை செலவிடுவதாகிறது;

யோகங்களைச் செய்ய ஞான சக்தி உடையவர்களையும் ப்ராக்ருத பலனில் மனத்தை செலுத்தவிட்டு அழியக்கூடிய அல்ப ஆனந்தத்தில் திளைக்க செய்வதாகிறது; (**ஸௌபரி, ஜட பரதர் வ்ருத்தாந்தம்**)

யோகங்களைச் செய்ய ஞான சக்தி உடையவர்களும், உயர்ந்த பகவத் ப்ராப்தியை விடுத்து தன் ஆத்ம அநுபவத்தில் ஈடுபடுவதாகிறது;

யோகங்களைச் செய்ய ஞான சக்தி உடையவர்களும், முமுக்ஷுவானவனும், அவாந்தரமாக தன் ஆத்ம அநுபவத்தில் ஈடுபடுவது போன்ற ப்ருஹ்ம வித்யையை தேர்ந்தெடுத்து உபாஸிப்பதாகிறது (**பஞ்சாக்நி வித்யை** போன்றது).

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

11. பெரிய பிராட்டியும் ஈஸ்வர தத்வமே

1. ஸித்தாந்த ஏகதேசிகளும் மற்ற மதத்தவரும் பல ப்ரமாணங்களைக் கை விட்டு தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என ஸ்தாபிக்க முயல்கின்றனர். இது சாஸ்த்ரீயர்களுக்கு தூர பரிஹரணீயம்.

2. அந்த எம்பெருமான் பெரிய பிராட்டியை, ஒருக்காலும் பிரியாதவன்; இருவருமாகவே, ஒத்த கருத்தோடு ஸகல ஈஸ்வரத்வ க்ரியைகளையும் செய்கின்றனர்; ஆக, திவ்ய தம்பதிகளே ஈஸ்வர தத்வம்; அதாவது அடையப் பட வேண்டிய ப்ராப்யம்.

ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத்,

மாயா வா ஏஷா நாரஸிம்ஹி ஸர்வமிதம் ச்ருஜதி ஸர்வமிதம் ஸம்ஹரதி ஸர்வமிதம் ரக்ஷதி

என்று பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் உண்டு (ச்ருஜதி, ஸம்ஹரதி, ரக்ஷதி) எனக் கூறுகிறது.

பராசர மஹரிஷி, விஷ்ணு புராணத்தில் அருளும் போது,

நித்ய்யைஷா ஜகந் மாதா விஷ்ணோ: ஸ்ரீ: அனபாயினி யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம

அதாவது,

த்விஜோத்தமரே ! எம்பெருமான் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பது போல், பிராட்டியும் வ்யாபித்திருக்கிறாள், என்கிறார். அதாவது, பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் மற்றும் எம்பெருமானும் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பதால் அவர்களுக்கு அந்தர்யாமித்வம் உள்ளது; அதாவது அவர்களே பரமாத்மாவாக தெளிகிறது,

என அருளினார்.

ஸ்ரீராமானுஜர், தான் அருளிய ஸ்ரீபாஷ்ய மங்கள ஸ்லோகத்தில்,

அகில புவன ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே

என்பதால்,

பெருமாளும் பிராட்டியும் சேர்ந்தே எல்லாவற்றையும் ஒருமித்த ஸங்கல்பத்தாலேயே நிகழ்த்துகிறார்கள் என்றும் தெளிவாகிறது.

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

பண்டைநாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு, நின்கோயில் சீய்த்துப்பல்டிகால் குடிகுடி வழிவந்த நாட்செய்யும் தொண்டரொர்க்கருளிச்சோ திவாய் திறந்து உன் தாமரைக் கண்களால்நோக்காய் தொண்டிரைப்பொருநல் தண்பணை சூழ்ந்த திருப்புளிங்குடிக்கிடா தானே

என அருளினார்.

அதாவது,

தெளிந்த அலைகளையுடைத்தான தாமிரபர்ணியோடு சேர்ந்த அழகிய சீர்நிலங்களால் குழப்பட்ட திருப்புளிங்குடி யென்கிற திருப்பதியிலே சயனித்தருள்பவனே! உனது க்ருபையையும் பெரிய பிராட்டியாருடைய க்ருபையையும் நெடுநாளாகவே அடைந்து கொண்டு உன்னுடைய திவ்யதேசத்திலே உரிய கைங்கரியத்தைப் பண்ணி அநாதிகாயமாய்ப் போருகிற வம்ச பரம்பரையாக அடிமைசெய்து யோருகிற அடியோங்கள் விஷயத்திலே அருள் செய்து அழகிய திருப்பவளத்தைத் திறந்து உனது தாமரை போன்ற திருக்கண்களாலே நோக்கியருள வேணும்.

3. ஆக, சாஸ்த்திர ப்ரமாணமும் (உபநிஷத், ஸ்ம்ருதி, புராணங்கள் போன்றவைகளும்) , ஸம்ப்ரதாய ஸ்ரீஸுக்திகளும் (நம் பூர்வ ஆசார்யர்களான ஸ்வாமி நம்மாழ்வார், ஸ்ரீராமானுஜர் போன்றவர்களின் ஸ்ரீஸுக்திகளும்) பெரிய பிராட்டியாரோடு கூடியவனே ஈஸ்வரன், (ஸ்ரீமந் நாராயணனே ப்ராப்யம், அதாவது அடையப் படுபவனென), தெளிவிக்கிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

12. <u>பெரிய பிராட்டிக்கு ஈஸ்வரத்வத்தை இசையாததற்கு காரணம்</u>

பெரிய பிராட்டிக்கு ஈஸ்வரத்வத்தை ஸித்தாந்த ஏகதேசிகள் இசையாததற்கு காரணம்

1. முதலில் ஈஸ்வரனாய் இருக்க தேவையான தன்மைகளாவது;

விபு ஸ்வரூபம் - அதனால் அந்தார்யாமித்வம்; அதன் பொருட்டு ஆதாரத்வம், நியந்த்ருத்வம், சேஷித்வம்.

ஜகத் காரணத்வம் - ஸ்ருஷ்டி ஸ்திதி லயமாகிற விஷயங்களுக்கு காரணமாய் இருத்தல்.

உபாயத்வம் - அதனால் ஸாத்யோபாயத்தை ஏற்று மோக்ஷப்ரதத்வம்

2. அகலகில்லேன் என்று எம்பெருமானோடு எப்போதும் கூடியே இருக்க் கூடிய பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயார், ஈஸ்வர வர்கத்தில் சேர்ந்தவள் அன்று, என சில வைணவர்கள் கூறுவர்.

அவர்களது, இந்த நிலைப் பாடு எதனால் ஏற்படுகிறது?

3. ப்ராமாண வரிகளினால், ஸித்தாந்த ஏகதேசிகளின், பூர்வ பக்ஷம் :

சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது -

யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ஸர்வேஸ்வரன்.

இங்கு ஜகத் காரண பூதன் ஒருவனே என்பதால், பெரிய பிராட்டியை ஈஸ்வர வர்க்கத்தில், ஈஸ்வர த்வித்வம் சம்பவிக்கும்; அது ப்ரமாண விருத்தம் .

உபநிஷத்தில்,

ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஸாந நேமே ஜாவா ப்ருத்வி நக்ஷத்ராணி

என்கிறது. அதாவது, நாராயணன் ஒருவனே, மஹா ப்ரளய காலத்தில், இருந்தான்; பிரமனுமில்லை சிவனுமில்லை லோகங்கள் இல்லை நக்ஷத்திரங்கள் இல்லை என்று மஹாப்ரளய காலத்தில் பல இல்லாத வஸ்துக்களையும் உபநிஷத் கூறுவதினால், ஸ்ரீமந் நாராயணனே ஸர்வேஸ்வரன்.

மஹாப்ரளயத்தில் இல்லாத ஒருவன் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு காரணமாக முடியாதல்லவா?

இங்கு ஜகத் காரண பூதன் நாராயணனே என்கிறபடியால், பெரிய பிராட்டியை ஈஸ்வர வர்க்கத்தில் சேர்த்தால், அது ப்ரமாண விருத்தம்.

நாராயண ஸுக்தத்தில்

அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:

என்ற வரி காணப் படுகிறது. அதாவது, ஸர்வேஸ்வரனான நாராயணனே அனைத்துலகையும் வியாபிக்கும் அந்தர்யாமியாக இருக்கிறான் இங்கு அந்தர்யாமி நாராயணனே என்கிறபடியால், பெரிய பிராட்டியை ஈஸ்வர வர்க்கத்தில் சேர்த்தால், அது ப்ரமாண விருத்தம்.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில்,

மத்த: பரதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய! மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ

என்று 'தனஞ்ஜயா, என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவுமில்லை', என அருளினான். இங்கு பரம் பொருள் கண்ணனே என்கிறபடியால், பெரிய பிராட்டியை ஈஸ்வர வர்க்கத்தில் சேர்த்தால், அது ப்ரமாண விருத்தம்.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில்,

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

அதாவது, 'மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம். இங்கு உபாயத்தை ஏற்று பலனிப்பவன் கண்ணன் ஒருவனே என்கிறபடியால், பெரிய பிராட்டியை ஈஸ்வர வர்க்கத்தில் சேர்த்தால், அது ப்ரமாண விருத்தம்.

4. ப்ராமாண வரிகளினால், ஸ்ரீராமானுஜ / ஸ்ரீதேசிக ஸித்தாந்த சமாதானம் :

சாஸ்த்திரங்களை ஆராயாயும் போது, முன் பின் வரிகளுக்கு முரண்பாடு இல்லாமல் விளக்க வேண்டும். ஸ்ரீராமானுஜர், அவ்வழியலே, அத்வைத த்வைத மத நிரசனம் செய்துள்ளார், என்பதை நினைவில் கொள்ள வேண்டும். உபநிஷத் வரிகளுக்குள் ப்ராபல்ய தௌர்பல்யம் சொல்லக் கூடாது, என்பதே ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்.

விபு ஸ்வரூபம் - பிராட்டிக்கு விபுத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள் என கொள்ள வேண்டும்.

ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ என்கிற ஸ்ருதி வாக்யத்தை வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது, **அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி** எனக் கூறி, பிராட்டியின் ஸ்வரூபம் எம்பெருமானைப் போன்றதே என அருளுகிறார். இதனால், பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

யதா ஸர்வ கதோ விஷ்ணு: ததை வையம் த்விஜோத்தம

என்று பராசர மஹரிஷியும், எம்பெருமான் அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருப்பது போல், பிராட்டியும் வ்யாபித்திருக்கிறாள், என்கிறார். இதனால், பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

நாராயண பரப்ருஹ்ம சக்திர்நாராயணி ச ஸா. வ்யாபகாவதி ஸம்ஸ்லேஷாத் ஏக தத்வமிவோதிதௌ

என்கிற ஸம்ஹிதா வாக்கியத்தினால், பெருமாளும் பிராட்டியும் ஸகல வஸ்துக்களிலும் பிரிவற்று ஒன்றாக வ்யாபித்திருப்பவர்கள், என்பது தெளிவாகிறது. இதனால், பிராட்டிக்கும் விபு ஸ்வரூபம் உள்ளது என அறியலாம்.

ஜகத் காரணத்வம் - பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள் என கொள்ள வேண்டும்.

மாயா வா ஏஷா நாரஸிம்ஹி ஸர்வமிதம் ச்ருஜதி ஸர்வமிதம் ஸம்ஹரதி ஸர்வமிதம் ரக்ஷதி

என்று ந்ருஸிம்ஹ தாபநீய உபநிஷத் பிராட்டிக்கு ஜகத் காரணத்வம் உண்டு (ச்ருஜதி, ஸம்ஹரதி, ரக்ஷதி) என ஸ்பஷ்டமாகக் கூறுகிறது.

உபாயத்வம் - பிராட்டிக்கு ஸித்தோபாயத்வம் சொல்லும் ப்ரமாணங்கள் இருப்பதால், பிராட்டியோடு கூடிய நாராயணன் ஒருவனை பரம்பொருள் என கொள்ள வேண்டும்.

தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே

என்கிற ஸ்ருதி வாக்யத்தால், லக்ஷ்மி தேவியை சரணமடைந்து இல்லாமையைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே

என்கிற பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும், எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம். இதனாலும், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

யக்ஞ வித்யா மஹாவித்யா குஹ்ய வித்யா ச ஷோபனே. ஆத்ம வித்யா ச தேவி, த்வம் விமுக்தி பல தாயிநி

என்று பராசர மஹரிஷி, பெரிய பிராட்டியாருக்கு முக்தி அளிக்கும் தன்மை உடையவள் என்கிறார். இதனாலும், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

5. மேலும் தனிப்பட்ட ப்ரகாரத்தில், பிராட்டியை குறிப்பிடாத உபநிஷத் வரிகளுக்கு, ஸம்ப்ரதாய விளக்கங்கள், நம் பூர்வ ஆசார்யர்கள் அருளியுள்ளனர்:

தத் அந்தர்பாவாத்வாம் ந ப்ருகபிததே ஸ்ருதிரபி

என பட்டர் ஸ்ரீகுணரத்னகோஸத்தில் அருளினார். அதாவது, எம்பெருமானுடன் சேர்ந்தே இருப்பதினால், பிராட்டியை தனியாக ஸ்ருதிகள் கூறவில்லை. இதையே ஸ்வாமி தேசிகன், ஸந்நியோகஸிஷ்ட வ்யாகரண நியாயத்தாலே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் விவரித்தார். அதாவது,

ஸஹவா ப்ரவ்ருத்தி, ஸஹவா நிவ்ருத்தி

(சேர்ந்தே இருக்கும் அல்லது சேர்ந்தே போகும்) என்கிற அந்த நியாயம் என்னவென்றால், ஒரே இடத்தில் சேர்ந்தே இருக்கக் கூடியவைகளைக் கூறும் போது, ஒன்றை சொல்லும் போது மற்றொன்றும் கூறியதாகும். ஆக, எம்பெருமானை சொல்லும்மிடமெங்கும், அகலகில்லேன் என்று இருக்கும் பிராட்டியையும் சொல்லிற்றாம் என்பதாக விளக்கப் படுகிறது. ஆக, மஹாலக்ஷ்மி தாயார், விபுவான பெருமாளைப் போல் ஈஸ்வர தத்வமே என்பது ஸ்ரீராமானுஜ ஸ்ரீ தேசிக ஸித்தாந்தம் என அறியலாம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

13. ஜீவ ஸ்வரூபம் - சம்சய விளக்கம்

1. தத்வ த்ரய சிந்தனாதிகாரம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரம் வரி :

இப்படி விபுத்வே ஸதி சேதந்த்வமும் அநன்யாதீனத்வ நிரூபாதிக சேஷித்வாதிகளும் ஈஸ்வர லக்ஷணங்கள்

2. சம்சயம் - 1

சேஷிக்கு சேதனத்வம் தனியாக சொல்ல வேண்டுவதில்லையா?

சேஷி என்பவன் உகப்பை அடைபவன் ; சேதனனே உகப்பை அடைய முடியும்; அசேதனம் உகப்பை அடைய முடியாது.

எனவே, சேஷிக்கு சேதனத்வம் தனியாக சொல்ல வேண்டுவதில்லை. சேஷி என்கிற பதமே சேதனன் என்பதையே குறிக்கும்.

ஆனால், அசேதனத்திற்கு சேஷித்வம் உண்டாகும் போது, அது உகப்பை அடையாது; அதாவது, வீட்டை அலங்கரிக்கும் போது, வீடு சேஷி ஆகிறது; அலங்கரிப்பவன் சேஷனாகிறான்.

ஆதலால், விபுத்வே ஸதி சேதந்த்வமும் என்பதில் உள்ள சேதனத்வத்தை, அத்தோடு இணைந்து இருக்கும் சேஷித்வாதிகளும் என்பதில் கூட்டிக் கொண்டும், இங்கு கூறப் படும் சேஷிக்கு சேதனத்வம் உண்டென்று உணரலாம்.

3. சம்சயம் - 2

சேஷித்வாதிகளும் என்கிற ஈஸ்வர லக்ஷணத்திற்கு, ஆதி பதம் சேதனத்வத்தை சொல்லுமா? ஆதி பதம் வேறு எந்த லக்ஷணங்களைக் கொண்டது?

ஈஸ்வரனவன் விகாரமற்றவன்; பூரண ஞானமுடையவன், விபு ஸ்வரூபன், ஆனந்த ஸ்வரூபன், குறைகள் அற்றவன் - இவை ஸ்வரூப நிரூபக தர்மங்கள்.

ஆக, இங்குள்ள வரியில், (அதாவது அநன்யாதீனத்வ நிரூபாதிக சேஷித்வாதிகளும்) ஈஸ்வர லக்ஷணமான ஸத்யம், ஞானம், அனந்தம், ஆனந்தம், அமலம் அனைத்தும் ஆதி பதம் கொண்டு ஈஸ்வர லக்ஷணமாக அறியலாம். பூரண ஞானமுடையவன் என்கிற லக்ஷணம் சேதனத்வத்தைச் சொல்லும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

14. நாராயண சப்தார்த்தம் - மேலும் விளக்கம்

1. முன்பே நாராயண சப்தார்த்தம் என்கிற தலைப்பில் விளக்கம் அளிக்கப் பட்டிருக்கிறது.

இதைத் தொடர்ந்து வந்த கேள்வியின் விளக்கம், இப்போது அளிக்கப் படுகிறது.

2. ஸ்வாமி ஸ்ரீ தேசிகனின் ரஹஸ்யத்ரய சுளகம் :

கராணத்வ உபாயத்வாதிகளைச் சொல்லுகிற இத்திருநாமத்தில் உபய-விபூதி யோகமும், உபய லிங்கத்வமும், ஸர்வ வித பந்துத்வமும் அநுஸந்தேயம்

அதற்கு விளக்கம் இங்கே உள்ளது.

3. நாராயண சப்தார்த்தம் ஈஸ்வர ஸ்வரூபத்தையே சொல்ல வந்தது; அவன் திருமேனியை அல்ல.

4. நாராயண சப்தத்தில் காரணத்வம் -

நர சப்தத்தால் அவனைக் கூறி, அவனிடமிருந்து உண்டானவைகள் நாரங்கள் என்பதால் ப்ரபஞ்சத்தின் உத்பத்தி சொல்லுவதாயிற்று; ஆக, அவனுக்கு காரணத்வம் ஸித்திக்கிறது.

5. நாராயண சப்தத்தில் உபாயத்வம் -

அயன சப்தத்தை கரண வித்பத்தியைக் கொண்டு பார்க்கும் போது ஈயதே அனேன இதி அயனம் என்பதாலே பலனைக்கு காரணமான உபாயத்தை சொல்லுவதாயிற்று.

6. நாராயண சப்தத்தில் உபய விபூதி -

நரனைச் சேர்ந்தவை நாரங்கள் என்னும் போது மோக்ஷம் என்னும் நித்ய விபூதி மற்றும் ப்ரபஞ்சம் என்னும் லீலா விபூதி அவனைச் சேர்ந்தவையாகிறது; அதனால், அவனுக்கு இரண்டு விபூதியையும் ஆளிம் தன்மை ஸித்திக்கிறது.

7. நாராயண சப்தத்தில் உபய லிங்கமும் -

அதாவது, அவன் இழி குணங்கள் அற்றவனும் கல்யாண குணங்களே கொண்டவனும் அவனுடைய உபய லிங்கமாகிறது.

நர சப்தம் கொண்டு மாறுபாடு அற்றவன் என்பதால், இழி குணங்கள் அற்றவன் (அதன் ஸ்வபாவமான மாறுபாடுகள் அற்றமையால்) என்பது ஸித்திக்கிறது.

அவனைச் சேர்ந்தவை நாரங்கள் என்பதால் அவன் கல்யாண குணங்களே உள்ளவனாகிறான் (சம்சாரி ஜீவர்களுக்கும் ஒரு வகையில் மோக்ஷ பலனளித்து) அவன் கல்யாண குணங்களே உள்ளவனாகிறான்.

8. நாராயண சப்தத்தில் ஸர்வ வித பந்துத்வமும் -

அயன சப்தத்தை கர்ம வித்பத்தியைக் கொண்டு பார்க்கும் போது **ஈயத் இதி அயனம்** என்பதாலே அடையும் பலனைச் சொல்லுவதாயிற்று. அவனைச் சேர்ந்த நாரங்களுக்கு ஸர்வ பலனையும் அளிப்பவனாகையால், அவன் ஸர்வ வித பந்துவும் ஆகிறான்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

15. <u>பூமி நீளா பிராட்டிகளும் ஈஸ்வர வர்க்கமா?</u>

1. '**அகலகில்லேன்**' என்று எம்பெருமானோடு எப்போதும் கூடியே இருக்க் கூடிய பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரை ஈஸ்வர கோடியில் சேர்க்க மறுக்கிற ஸித்தாந்த ஏகதேசிகள் இருக்க, நம் ஸ்ரீ தேசிக ஸித்தாந்தத்தில் சிலர், பூமி நீளா பிராட்டியும் ஈஸ்வர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே என நினைக்கிறார்கள்.

அதற்கு ஆதாரமாக அவர்கள் முன் வைப்பதாவது,

சரணாகதி கத்யத்தில், பகவத் ராமானுஜர்,

....அஸங்கேய கல்யாண குண கண ஸ்ரீ வல்லபா ! ஏவம் பூத பூமி நீளா நாயிகா!

என பெரிய பிராட்டியோடு சேர பூமி நீளா பிராட்டிகளையும் அநுஸந்தித்திருக்கிறார்.

அதனால், நம்மில் சிலர், பூமி நீளா பிராட்டியும் ஈஸ்வர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே என நினைக்கிறார்கள்.

ஸ்வாமி தேசிகன் அருளிய கோதா ஸ்துதியில் (முதலாவது ஸ்லோகம்)

ஸ்ரீ விஷ்ணுசித்த குல நந்தன .....கோதாம் அனந்ய சரண: சரணம் ப்ரபத்யே

என்று கோதா (பூமிப்) பிராட்டியிடம், வேறு புகல் அற்று, சரணமடைவதாக ஸ்லோகம். அவளுக்கு உபாயத்வம் உண்டென்றால் ஈஸ்வர கோடியைச் சேர்ந்தவள் தானே !

இம்மாதிரியான பல பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸுக்திகளினால், சிலர், பூமி நீளா பிராட்டிகளும் ஈஸ்வர வர்க்கத்தைச் சார்ந்தவர்களே என நினைக்கிறார்கள்.

2. இவ்வாறு அர்த்தம் கொண்டால் பல வித உபநிஷத் வரிகளோடும், ஸ்ரீராமானுஜர், ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளிய வேதாந்த க்ரந்தங்களோடும் விரோதிக்கும்.

பூமி நீளா பிராட்டியும் எம்பெருமானுக்கு மஹிஷிகளாக இருந்த போதிலும், ஸர்வேஸ்வரனுக்கு ஸ்வரூப நிரூபக தர்மமாய் நிற்பது பெரிய பிராட்டியார் மட்டுமே !

ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ

என்கிற ஸ்ருதி வாக்யத்தாலும் (புருஷ ஸூக்தம்),

ஹிரண்யவர்ணாகும் ஹரிணி

என்கிற ஸ்ருதி வாக்யத்தாலும் (ஸ்ரீஸூக்தம்),

ஹரியும் லக்ஷ்மியும் பதி பத்நியாக ஒருவருக்கொருவர் நிரூபகமாகிறார்கள்.

இதையே வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

‘**அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி**’ எனக் கூறி,

பெரிய பிராட்டியின் ஸ்வரூபம் எம்பெருமானைப் போன்றதே என அருளுகிறார்.

இதனால், ஒன்றை சொல்லும் போது மற்றொன்றும் கூறியதாகும் என்கிற ஸந்நியோகஸிஷ்ட வ்யாகரண நியாயத்தாலே ஜகத் காரணத்வம், உபாயத்வம், மோக்ஷ ப்ரதத்வம் ஆகிய ஈஸ்வர லக்ஷணம், பெரிய பிராட்டிக்கும் ஸர்வேஸ்வரனுக்கும் உண்டென அருளியதை, அதாவது ஸ்ரீமந் நாராயணனே ஸித்தோபாயம் என அருளியதை, ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம் கொண்டு, அறியலாம்.

அதனால், பெரிய பிராட்டிக்கு உள்ள ஈஸ்வரத்வம் மற்ற மஹிஷிகளுக்கு கிடையாது; ஆனால், பூமி நீளா பிராட்டிமார்கள், ஜீவர்களுக்கு தாயாக இருப்பதால், சம்சாரி ஜீவர்கள் உஜ்ஜீவிக்க அவர்களும் காரணமாகின்றனர்; அதனால் அவளிடம் சரணம் புகுவது சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்வரூப ப்ராப்தமே !

3. மேலும் சரணம் என்கிற சொல்லினால், ஸித்தோபாயத்வம் தேறும் என அர்த்தம் கொள்ளலாகாது; ஆனால் ஸித்தோபாயமாக இருக்கும் ஸ்ரீமந் நாராயணனே சரண்யன் என்பது சாஸ்த்திர விளக்கம். அவனிடம் பலனிற்காக சரணம் அடைய வேண்டும்.

‘**நம:**’

என்னும் பதம் ஆத்ம சமர்ப்பணத்தைக் குறிக்கிறது என்னும் கருத்தை மந்த்ரராஜபத ஸ்தோத்திரம் -

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயா ஆத்ம நிவேதனம்

என்பதைக் கொண்டு அறியலாம்.

அதனால்,

அஸ்மத் குருப்யோ நம:

என்று ஆசார்ய வந்தனம் செய்வதைக் கொண்டு போவதால், ஆத்ம சமர்ப்பணம் ஆசார்யனிடமே பண்ண வேண்டுவது என்றும், ஸ்ரீமந் நாராயணனிடம் பண்ண தேவையில்லை எனவும் கொள்ளலாமோ என்றால் அது ப்ரமாண விருத்தம். அது போலத்தான், பூமி நீளா பிராட்டியிடம் செய்கிற சரண சப்த ப்ரயோகம்.

இங்கே, சாஸ்த்திர விதிப் படி, ஆசார்ய சம்பந்தம் அன்றிக்கே மோக்ஷம் பெற இயலாது என்பதால், ஆசார்யனை சரணமாகப் பற்றுகிறோம் அல்லவா?

‘**பாபிஷ்ட: க்ஷத்ர பந்துஸ்ச புண்டரீக்ஷ புண்யக்ருதா ஆசார்ய வத்தயா முக்தெள தஸ்மாத் ஆசார்யவான் பவேத்**’

அதாவது,

மிகுந்த பாபத்தைச் செய்து போன க்ஷத்ரபந்துவும், மிகுந்த புண்யங்களையே செய்து வந்த புண்டரீகனும், ஆசார்ய சம்பந்தம் பெற்றதானாலேயே மோக்ஷத்தை அடைந்தார்கள், என சரித்திரம். ஆக, ஒருவனுக்கு மோக்ஷ பலன் கிடைக்க, சாஸ்த்ர ஞானத்தை தெளிவு படக் கொடுத்து, ‘சரணாகதி’ அநுஷ்டானத்தை செய்வித்து, ஆசார்யர்கள் பெரும் உதவி செய்கிறார்ன,

என்பதை உணரலாம்.

3. பராசர மஹரிஷி அருளிய விஷ்ணு புராணத்தில்,

தேவ த்ரியக் மநுஷ்யாணாம் புன்னாமா பகவான் ஹரி: ஸ்த்ரி நாம்நி லக்ஷ்மிர்மைத்ரேய நாந்யோர் வித்யதே பரம்

என்று கூறியதால், பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் மற்றும் ஹரியைத் தவிர வேறு யாரும், ஸர்வ சேஷியாக, அதாவது ஈஸ்வர தத்வமாக, ஆக மாட்டார்கள்.

ஆக, ஸ்தோத்திரங்களிலும் பூர்வாசார்யர்களின் அநுஷ்டானங்களையும் கொண்டு, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில், அர்த்த நிர்ணயம் பண்ணலாகாகது; அவர்களுடைய க்ரந்தங்களே நமக்கு உபாதேயம்.

இக்கருத்தையே,

தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது,

என அருளினார், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில், ஸ்வாமி தேசிகன்.

அதாவது, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில், வாதத் திறமையை மட்டுமே கை கொண்டு சாஸத்திரத்திற்கு விரோதமான கருத்துக்களை கூறாமல், சாஸ்த்திரத்தை ஆதாரமாய் கொண்டு விளக்குவதே ஆஸ்திகர்களின் தர்மமாகிறது, என்கிறார்.

நாம் சாஸ்த்திரமாகக் கைக் கொள்ள வேண்டியது ஸ்ரீ ராமானுஜ க்ரந்தங்களும் அதற்கு அநுகுணமான ஆழ்வார் பாசுர விளக்கங்களும், ஸ்வாமி ஸ்ரீ தேசிக க்ரந்தங்களுமே !

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

16. ஞானமும் ஞான யோகமும்

பகவத் கீதை - அத்யாயம் 4 ஸ்லோகம் 24

ப்ரஹ்மார்பணம் ப்ரஹ்ம ஹவி: ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்மணா ஹுதம் ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்ம கர்ம ஸமாதிநா

என்கிறான் கண்ணன்.

அதன் பொருளாவது,

ப்ருஹ்மத்துக்கு அர்ப்பணமாக ப்ருஹ்ம ஹவிஸை ப்ருஹ்மத் தீயில் ப்ருஹ்மத்தால் ஹோமம் பண்ணுவோன், அவ்வாறு ப்ருஹ்மத்தின் செய்கையை அநுஸந்திப்பவன், அவன் ப்ருஹ்மத்தை அடைவான்.

இதன் விவரணம்:

1. இது கர்ம யோக ப்ரகரணம்.

2. கர்ம யோகத்தில் ஞானாம்சம் மிக முக்கியம் என கண்ணன் அறுதியிட்டு கூறுகிறான். அதாவது சேதன அசேதன ஈஸ்வர ஞானத்தில் தெளிவு வேண்டும்.

3. ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற்றவனே பக்தி யோகம் செய்ய தகுதி உடையவனாகிறான்.

அதாவது, கரம் யோகத்தினால் புலன் அடக்கம் பெற்று, பிறகு ஞான யோகத்தை செய்து ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற்று, அதன் பிறகு பக்தி யோகத்தினால் பகவத் சாக்ஷாத்காரம், பெற வேண்டுவதாகிறது.

4. இப்படி இருக்க, கண்ணன் கர்ம யோகத்தினாலேயே, புலன் அடக்கம் பெற்ற பிறகு, ஞான யோகம் அன்றிக்கே ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற இயலும் என்பதை இங்கு விளக்குகிறான்.

எப்போதும் ஒரு செயலிலே ஈடுபட்டிருக்கிற ஜீவனுக்கு, கர்ம யோகம் செய்வது, ஞான யோகம் செய்வதைக் காட்டிலும் எளிது; அதனால், புலன் அடக்கம் பெற்ற பிறகு, கர்ம யோகத்தை தொடர்ந்தே ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற இயலும் என்பதை கண்ணன் விளக்குகிறான்.

5. இந்த கர்ம யோகத்தில் ஞானாம்சம் மிக முக்கியம். ஞானம் அற்ற கர்ம யோகம் பலன் அளிக்காது.

அதாவது, ப்ருஹ்மம் என்கிற பதம் ஸ்ரீமந் நாராயணனைக் குறிக்கும் என்பது ஸ்ரீபாஷ்யாதிகளில் ஸித்தம்.

ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஸகல சேதன அசேதன வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியாக இருந்து, அனைத்துக்கும் ஆதாரமாயும், நியமிப்பவனாயும் இருப்பதால், அவன் பரமாத்மாவாகிறான்.

சரீரத்தைச் சொல்லும் வாசகங்கள் ஆத்மா பர்யந்தம் போய் சேரும் என்பதாலே, அனைத்து வஸ்துக்களையும் அதன் செயல்களையும், பரமாத்மாவான ப்ருஹ்மம் என இந்த ஸ்லோகத்தில் வ்யவஹரிக்கப் படுகிறது.

(சரீரத்தைக் காட்டி நான் சந்தோஷப்படுகிறேன் என்ற சொல்லைப் பயன் படுத்தும் போது, அது அந்த சரீரத்திலுள்ள ஆத்மாவையே குறிக்கும். அசேதனமான சரீரம் சந்தோஷப்பட முடியாது)

அதனால், ஸர்வமும் ப்ருஹ்மாத்மகம் (அனைத்துக்கும் அந்தர்யாமி ப்ருஹ்மம்) என்கிற ஞானாம்சத்தில் தெளிவுடன் கர்ம யோகம் செய்பவன் அச் செயலைத் தொடர்ந்தால், அவன் ஞான யோகம் அன்றிக்கே ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற இயலும் என்பதை விளக்குகிறான், கண்ணன்.

ஆத்ம சாக்ஷாத்காரத்தை பெற்ற பிறகு, அந்த ஞானாம்சத்தோடு பக்தி யோகத்தை தெடர்ந்து செய்து, பகவத் சாக்ஷாத்காரத்தை பெறுகிறான்.

6. ஆக, இந்த ஸ்லோகம் ஞான யோகத்தைப் பற்றியது அல்ல; **கர்ம யோகத்தில் தேவையான ஞானாம்சம்.**

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

17. <u>வடகலை தென்கலை ஒற்றுமை</u>

1. ஸ்ரீராமானுஜர் காலத்திற்கு பிறகு வந்த ஸ்ரீராமானுஜ பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இரு வகைகளாகப் பிரிந்தனர்.

அதாவது,

பிள்ளைலோகாச்சார்யர் வழி வந்தவர்களும் தென்கலை ஸம்ப்ரதாயத்தவர்களும்

நடாதூர் அம்மாள் வழி வந்த ஸ்ரீ வேதாந்த தேசிகர் வழி வந்தவர்களும் வடகலை ஸம்ப்ரதாயத்தவர்களும்

என இரு பிரிவுகள் ஆயின.

2. ஏன் இந்த வித்யாஸம் ?

ஸித்தாந்த அளவில் ஸ்ரீராமானுஜர் வழியைத் தானே இரு கலையாரும் பின்பற்றுவதாக பறை சாற்றுகின்றனர். அதைப் பற்றி சில உண்மைகளை அறிவோம் !

 # ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் :

பர தத்வம் (ஸ்ரீமந் நாராயணனே) - வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது, **அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி** எனக் கூறி, பிராட்டியின் தன்மை எம்பெருமானைப் போன்றதே என்கிறார்.

பரம ஹிதம் (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம்) - உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரங்கள் **நாநா சப்தாதி பேதாத் ; விகல்ப: அவிஸிஷ்ட பலத்வாத்** என்கின்றன; அதாவது பலவாறாக உள்ள ஸகல ப்ருஹ்ம வித்யைகளுக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

பரம புருஷார்த்தம் (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) - ஸ்ரீராமானுஜரின் கீதா பாஷ்ய விளக்கமானது, **ப்ரக்ருதி பந்தாத் விமுக்த: தேவ மனுஷ்யாதி சப்த அபிலாப அநர்ஹம் ஞானானந்தைகதானாம் ஆத்மாநம் ப்ராப்நோதி** என்கிறது ; அதாவது, கைவல்ய பலனாவது, தேவ மனுஷ்யாதி சரீரங்களான மாறுதலை அடைகிற ப்ரக்ருதியின் பரிணாமமான விஷயானுபவங்களிலிருந்து விலகுகிறான் ; ஆக, கைவல்யார்த்தி, பலதசையில், பரமபதத்தை அடைவதில்லை.

 # ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஏகதேசிகள் பக்ஷம் : (தென்கலை)

பர தத்வம் (ஸ்ரீமந் நாராயணனே) - முமுக்ஷுபடி க்ரந்தத்தில், **இதில் முற்கூற்றால் பெரிய பிராட்டியாரை முன்னிட்டு ஈஸ்வரன் திருவடிகளை உபாயமாக் பற்றுகிறது ; பிற்கூற்றால் அச்சேர்த்தியிலே அடிமையையிரக்கிறது** (எண் - 122) எனப் படுகிறது ; த்வய மந்திரத்தில் முன் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டிக்கு ஸித்தோபாயம் கிடையாது என உரைத்து, பின் வரியில் உள்ள ஸ்ரீமத் சப்தத்தில், பிராட்டியோடு சேர்ந்த ஈஸ்வரனுக்கு ஸித்தோபேயம் உள்ளதாகக் கூறி, பிராட்டியின் ஈஸ்வரத்வத்தை நிஷேதிக்கின்றனர்.

பரம ஹிதம் (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம்) - வசன பூஷண க்ரந்தத்தில் **ஸ்வ யத்ன நிவ்ருத்தி பாரதந்த்ரிய பலம்; ஸ்வ ப்ரயோஜன நிவ்ருத்தி சேஷத்வ பலம்** (எண் - 71) - ஆக, ஸாத்யோபாய அநுஷ்டானமன்றிக்கே ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம், எனப்படுகிறது.

பரம புருஷார்த்தம் (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) - கைவல்யம் என்கிற ஆத்மானுபவம் நித்யமென்றும் ஸர்வ கர்மங்களிலிருந்தும் விடுபட்டு பரமபதத்தை அடைந்து அங்கு தன்னை மட்டும் அநுபவிக்கிறதாகிற ஆத்மானுபவத்தை பெறுகிறான் என்று பூர்வபக்ஷிகள் சொல்லியிருக்கறார்கள் - ஸ்வாமி நம்மாழ்வார்,ஆத்மானுபவத்தை அருளியதாவது : **குறுகா நீளா இறுதி கூடா எனையூழி, சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகா லின்றி மாயோ னுனக்கே யாளாகும், சிறுகா லத்தை யுறுமோ அந்தோ தெரியிலே?** அதில், **இறுதி கூடா** என்று அருளியுள்ளார். ஆகையால், அதன் தாத்பர்யமான நிண்ட கால அநுபவம் என்பதனை உணராது, கைவல்ய ஆத்ம அநுபவ புருஷார்த்தமாவது, பரம பதத்தில், நித்யமானது என்பர்.

 # ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஸ்ரீதேசிக பக்ஷம் : (வடகலை)

பர தத்வம் (ஸ்ரீமந் நாராயணனே) - ஸ்வாமி தேசிகனின் **ஸித்தோபாய சோதனாதிகார** வரிகளாவது :
எம்பெருமானைச் சொன்னவிடத்தில் பிராட்டியையும் சொல்லிற்றாம் - என்று தொடங்கி உடையவர் அருளிச் செய்த வார்த்தையை ஆச்சான் பக்கலிலே கேட்டு நஞ்சீயர் ஸங்க்ரஹித்தார்

பரம ஹிதம் (அகிஞ்சனர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம்) - ஸ்வாமி தேசிகனின் **அதிகாரி விபாகதிகாரம்** வரிகள் ; **ப்ரபன்னாத் அந்யேஷாம் ந திஷதி முகுந்தோ நிஜபதம் - ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேஸ்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்க இரங்கான்** ; அதாவது, ஸாத்யோபாயம் அநுஷ்டேயம்.

பரம புருஷார்த்தம் (பிறவிப் பிணி நீங்க மோக்ஷ பலன்) - ஸ்வாமி தேசிகனின் விளக்கமானது - ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப் படுகிறது ; **யோகிநாம் அம்ருதம் ஸ்தானம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம்** ஸநகாதி யோகிகள் தங்கியிருக்கும் இடமே ஆத்மானுபவம் செய்கிறவர்களுக்கு இடமாகும் என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப் படுகிறது ; அது ப்ராக்ருத லோகமானபடியால் கைவல்ய அநுபவமும் அநித்யம்.

ஆக, ஸ்ரீராமானுஜ ஸ்வாமி தேசிக க்ரந்தங்களோடு, ஸித்தாந்த ஏகதேசிகள் பக்ஷம் மாறுபட்டிருப்பால், அந்த பக்ஷத்தை பூர்வபக்ஷம் என்றனர் முன்னோர்கள்.

4. இப்படி இருக்க, மனித தன்மையின் அடிப்படையில் எந்த விரோதமும் இல்லை எனலாம்; அவ்வாறே விரோத பாவம் அற்று பல மஹநீயர்கள் நடந்து வருகின்றனர்; ஆனால், பிறரால், ஸ்ரீதேசிக க்ரந்தங்களை மாற்றி அமைக்க முனையும் போது, சர்ச்சை ஏற்படுகிறது.

ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய கொள்கைகளைப்பற்றி தெளிவு இல்லாத போது, ஏன் இந்த விரோதம்? என்கிற கேள்விக்கு வழி உண்டு.

ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாய கொள்கை பிடிப்பு இருந்தால், இந்த கேள்விக்கு வழி கிடையாது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

18. <u>த்வய அர்த்த அநுஸந்தானத்தில் சரண பதம்</u>

1. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில்,

உபாயே க்ருஹரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம் வர்த்ததே ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தக வாசக:

எனக் கூறப் படுகிறது.

அதாவது,

சரணம் (शरण) என்கிற பதம் மூன்று அர்த்தங்களை உடையது

முதலாவதாக **வீடு** என்கிற பொருள் உடையது; உதாரணமாக, **பறவைகள் சரணாலயம்** என்பதுண்டு.

இரண்டாவதாக **ரக்ஷகன்** என்கிற பொருளுண்டு; அதாவது, **சரணாமாகும் தனதாள் அடைந்தார்க்கு எல்லாம்** என்பதில் ஸகலவித ரக்ஷகனுமாய் கருதி தனது திருவடிகளை அடைந்தவர்களுக்கு என்கிற பொருள் கிடைக்கும்.

மூன்றாவதாக **உபாயம்** என்கிற பொருளும் உண்டு; அது தான் த்வய மந்திரத்தில் உள்ள அர்த்தம்.

அது சரணாகதனால் எப்போதும் அநுஸந்திக்க வேண்டியது. அதாவது, திவ்ய தம்பதிகள் ஸித்தோபாயமாக இருந்து நம்மை ஒரு ஸாத்யோபாயத்தில் மூட்டி அநுக்ரஹிக்கிறான், என்பதாகும்.

2. த்வய மந்திரத்தில், அவன் திருவடியைச் சொல்லும் பதம் சரணௌ (चरणौ) -

அதாவது,

பெரிய பிராட்டியாரோடு சேர்ந்தே இருக்கிற நாராயணனின் இரு பாதங்களே பற்ற வேண்டுவதாகிறது

இங்கு சரணாகதனுக்கு த்வய அர்த்த அநுஸந்தானம் பண்ணும் போது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளே உபாதேயம்; எந்த அர்ச்சாவதார மூர்த்தி முன்பு சரணாகதி அநுஷ்டித்திருந்தாலும், மற்ற திவ்ய தேச எம்பெருமானின் திருவடிகளும் த்வய அர்த்த அநுஸந்தானத்தில் ஏற்கக் கூடியதே; அது எம்பெருமானின் மற்ற நிலைகளில் (பரம், விபவம் போன்றவைகள்) உள்ள திருவடிகளுக்கும் உபலக்ஷணம்.

3. மோக்ஷ உபாயத்தில், பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தியை செய்து, திவ்ய தம்பதிகளிடம், சரணாகதி அநுஷ்டானத்தை ஸாத்வீக த்யாகத்தோடு செய்து போவதே சாஸ்த்திர நியதி.

இதையே ஸ்ரீராமானுஜர், ஒரு பங்குனி உத்தர திருநாளில் பிராட்டியோடு சேர்த்தியில் இருந்த எம்பெருமானிடம், பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தியை முதலில் செய்து, பிறகு திவ்ய தம்பதிகளிடம், சரணாகதி அநுஷ்டானத்தை செய்து போனதை சரணாகதி கத்யம் உணர்த்துகிறது. இதில் ஸம்ப்ரதாய ப்ரமாணம் தெரிகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

19. கபில புத்தாவதாரம்

1. ஈஸ்வர தத்வத்தை ஏற்காத சாங்க்ய மதத்தை பல வகையில் பகவத் ராமானுஜர் ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் கண்டித்துள்ளார்;

இதனை ஸித்தாந்தமாக ஸாங்க்யர்கள் கொண்டுள்ளனர் ; அதனால், ஸாங்க்ய மத ப்ரவர்த்தகரை

ருஷிம் ப்ரஸூதம் கபிலம் மஹாந்தம்

என கபில மஹரிஷி, சுவேதாசுதர உபநிஷத்தில் கொண்டாடப் படுவதால், ஸர்வ நியந்தாவான ஈஸ்வரனை ஏற்காத, அதனால் ஸ்ருதி விரோதமான, கபில ஸ்ம்ருதியும் ஆதரணீயம் என்பது அநுபபன்னம்.

ஆக, அந்த மத கொள்கை ஏற்புடையது அல்ல. கபிலரும் நம் ஆராத்ய தெய்வம் அன்று.

2. அது போல, புத்த மதமாவது, கண்ணால் காண்பது எல்லாம் பொய். இந்த உலகம் பர லோகம் எல்லாம் பொய். மோக்ஷம் கிடையாது. எந்த ஒரு ப்ரயத்னமும் தேவை இல்லை. அர்த்தமற்றது; வேதங்கள் ஏற்புடையது அல்ல; இந்த மதத்தையும் பல வகையில் பகவத் ராமானுஜர் ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில் கண்டித்துள்ளார்;

புத்த (மாதியாத்மிக) கொள்கைகளின் விபரீத நிலைப்பட்டை ஸ்வாமி தேசிகனின் **பரமத பங்கம்** என்னும் நூலில் விமர்சிக்கிறார் :

மானம் இலை மேயம் இலை என்றும் மற்று ஓர் வாத நெறி இலை என்றும் வாது பூண்ட தானும் இலை தன் உரையும் பொருளும் இல்லை தத்துவத்தின் உணர்த்தி சயம் இல்லை என்றும் வானவரும் மானவரும் மனமும் வெள்க வளம்பேசும் மதிகேடன் மத்திமத்தான் தேன நெறி கொண்டு அனைத்தும் திருடாவண்ணம் செழுமதிபோல் எழும் மதியால் சேமித்தோமே

அவன் கொள்கையானது **எல்லாம் சூன்யம்** ; வஸ்துக்களை அறிய ப்ரமாணம் இல்லை ; ப்ரமாணம் இருந்தாலும் அறிவிக்க சக்தி கிடையாது ; வாதம் செய்ய நெறி இல்லை ; வாதம் புரிபவன் இல்லை ; வாத வாக்யங்களும் பொருளும் இல்லை ; ஆக, தத்வ ஞானம் என்பது ஸித்தியாது ; வாதத்தில் வெற்றி என்பதுவும் இல்லை ; இந்த விசித்திர கொள்கையை, தேவர்களும் மனிதர்களும் பரிஹஸிக்க, அந்த மாத்யாத்மிகனுடைய மனமே பரிஹஸிக்கும் ; அவன், ஸகல சேதன அசேன தத்வங்களை, ஈஸ்வரன் உள்பட, அனைவரையும் இல்லை ஆக்கி, தத்வ விஷயங்களை கொள்ளை போக விடாமல் காத்தோம், என்றபடி.

தானும் இலை தன் உரையும் பொருளும் இல்லை என்னும்படி தன் இருப்பையும், தன் செயலையும் பொய் ஆக்கி நிஷேதிக்கும் போது, பொய்யான தன்னை காத்துக் கொள்ள, ஒரு அறிவை சம்பாதிப்பது விநோதம்.

ஆக, அந்த மத கொள்கையும் ஏற்புடையது அல்ல. அதனால், புத்தரும் நம் ஆராத்ய தெய்வம் அன்று.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்திர விரோதமாக செயல்படும் அசுர குணம் உடையவனுக்கு ஏற்படும் கதி என்ன என்று பகவத் கீதையில் (16-19) உறுதி படுத்துகிறான்.

தானஹம் த்விஷத: க்ரூரான் சம்சாரேஷு நராதமான். க்ஷிபாம்யஜஸ்ரம் அசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு

அதாவது,

‘என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள், என்னை பற்றி சிந்திக்காமல் சம்சார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், அசுர யோனியில் பிறக்க செய்கிறேன்,’

என்கிறான்.

அசுர குல இலக்கணமாவது, ஸர்வேஸ்வரனால் விதிக்கப் பட்ட சாஸ்த்திரத்தில் நம்பிக்கை அற்ற தன்மையும், சாஸ்த்திர விதிகளை பெரும்பாலும் மீறியே செயல்படுவதும், தன்னை சுதந்திரன் என்கிற இறுமாப்புடன் பகவத் அதீனத்தை மறந்து இருப்பதும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை ஸாமான்யமாக எண்ணுவதும், ஆகும்.

இதையே ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத ப்ருதக் லஷணம் சாஸ்திர சித்தஸ்ய த்ரிதா சப்தத சோதிதம்

என ஆளவந்தார் அருளிச் செய்தார்.

அதாவது, சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும் என்றார்.

4. மேலும், பாபாத்மாக்களை தண்டிக்க,, வராஹ புராணத்தில், ஸர்வேஸ்வரன் ருத்ரனிடம் கூறுவதாவது,

த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்ஷயித்வா அல்பம் ஆயாஸாம் பலம் சீக்ரம் ப்ரதர்சய

ருத்ரனே ! நீ ஜனங்களுக்கு மோஹம் உண்டாகும் படியான (உண்மையான ஸர்வவேஸ்வரனை உணர முடியாதவாறு) சாஸ்த்திரங்களைச் செய்; அல்பமான செயல்களுக்கு உலக பலன்களை கிடைப்பதற்கு வழி காட்டு.

இவ்வாறு, பாபாத்மாக்களை தண்டிக்கும் பொருட்டு, மோஹன சாஸ்த்திரங்கள் வெளியாகின்றன.

இவ்வழியிலே தோன்றியது, கபில புத்தாவதாரம் ; கொள்கைகள் வேத சாஸ்த்திர விரோதம் ; அதனால் அநாதரணீயம்.

5. ஆக, பகவத் அவதாரங்களே உபதேசங்களுக்கு காரணமாயிருந்தாலும், அக்காரணத்தினால் அவைகள் ஏற்கப் படுவதாகாது; அந்த உபதேசத்தை சாஸ்த்திரம் அறிந்த வித்வான்கள் ஏற்ற பிறகே அதற்கு ப்ராமாணிகத்வம் ஏற்படும்.

பாண்டவ கௌரவ குருக்ஷேத்ர யுத்தத்தின் போது, 11வது நாள் இரவு கண்ணனுடன் சேர்ந்து பாண்டவர்கள் பீஷ்மரை சந்திக்கச் சென்றனர்.

அப்போது, யுதிஷ்டிரர் (தர்ம புத்திரர்) ஆறு கேள்விகளை, பீஷ்மரிடம் வினவினார்.

அந்த ஆறு கேள்விகளாவது: (யுதிஷ்ட்ரௌ உவாச)

 # கிமேகம் தைவதம் லோகே?, - இறைவனைப் பற்றி விளக்கும் எல்லா உபநிஷத்துக்களிலும் கூறப்பட்டுள்ள சிறந்த ஒரே தெய்வம் எது?

 # கிம்வாப்யேகம் பராயணம்? - ஒரே ஒப்புயர்வற்ற இலக்கானவர் யார்? அதாவது இந்த உலகத்தின் (உலக மக்களின்) ஒரே இலக்கு – அடையப்படக்கூடிய இடம் / இலக்கு யார்?

 # ஸதுவம்தக்கம்? - எந்த ஒரு தெய்வத்தை அவரது குணச்சிறப்புகளைப் புகழ்ந்து பாடி சம்சாரி ஜீவர்கள் நலம் எய்துவார்கள்?

 # கமர்சந்தம் ப்ராப்னியுர் மானவாஸ்சுபம்? - எந்த ஒரு தெய்வத்தை செயலினாலேயோ அல்லது மனத்தினாலேயோ வழிபட்டு நலமடைய வேண்டும்?

 # கோ தர்ம ஸர்வ தர்மாணாம் பவத: பரமோ மத:? - எல்லா உபாயங்களிலும், ஏற்றம் வாய்ந்த, ஒப்புர்வற்ற பலனை அளிக்க வல்ல, உபாயம் எது?

 # கிம் ஜபம் முச்சயதே ஜந்துர் ஜன்ம சம்சார பந்தனாத்? - எதனை ஜபித்து மனிதன் பிறவிப் பிணியிலிருந்து முற்றிலுமாக விடுபடுகிறான்?

அதற்கு பதிலாக அமைந்தது, பீஷ்மரின்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்

என்கிற நூல்.

அது, கண்ணனால் அருளப் பட்ட பகவத் கீதை யின் சாரம். பகவத் கீதையாவது, பாண்டவ கௌரவ குருக்ஷேத்ர யுத்தத்தின் போது, ஆரம்ப தினத்தன்று, கலக்கம் கொண்ட அர்ஜுனனுக்கு தெளிவு பட ஜீவ ஈஸ்வர தத்வத்தையும், உயர்ந்த பலனையும் அதனை அடையும் வழியையும், கண்ணனால் விளக்கப் பெற்ற ஒரு நூல்.

கண்ணின் பகவத் கீதைக்கு ப்ராமாண்யம் ஸித்தது, பீஷ்மர் அருளிய ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் கொண்டு தான்.

ஏனெனில், பகவத் உபதேசம் முற்றிலுமாக அவன் அடியார்களை ரக்ஷிப்பதற்காக மட்டுமல்லாமல், பாபத்மாக்களை தண்டிப்பதற்காகவும் உள்ளபடியால்.

6. இதனால் அறிய வேண்டுவது என்னவென்றால், சாஸ்த்திரத்தில் விதித்த மோக்ஷ காரணமான சரணாகதியையே அநுஷ்டிக்க வேண்டுமானாலும், நம் பெரியோர்களால் அர்ச்சாவதார எம்பெருமானாக கருதப்படும், அதாவது அடியவர்க்கு மெய்யனாக இருக்கும், அர்ச்சா ரூபங்களே

சரண்யனாகக்க் கொள்ள வேண்டுவதாகுமே அன்றி மற்றபடி கபிலர், புத்தர் போன்ற மோஹன அவதாரங்கள் அன்று.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

19. ஆசார்ய லக்ஷணம் - தெளிவது அவசியமா?

1. ஆசார்யன் மூலமாகவே சாஸத்திர அர்த்தங்களை க்ரஹிக்க வேண்டும் என்பது சாஸ்த்திர நியதி.

சுவேதாசுதர உபநிஷத்,

யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாஷந்தே மஹாத்மந:

என்கிறது.

அதாவது,

எவனுக்கு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாரயணனிடத்தில் உள்ள பக்தி போல் குருவினிடத்திலும் பக்தி உள்ளதோ, அவனுக்கு குருவின் அநுக்ரஹத்தால் ஸகல ஆத்ம விஷயாமான சாஸ்த்ரீயமான அர்த்தங்களும், தெளிவாகும்.

ஆக, நல்ல குரு பரம்பரையில் உதித்த ஸதாசார்யன் மூலமாகவே சாஸ்த்திர விஷயங்களை கற்க வேண்டும்.

2. ஆத்ம ஞானம் பெற வேண்டிய ஆசார்யன் அல்லது குரு என்கிற பதங்களின் அர்த்தத்தை முதலில் காண்போம் !

குரு என்கிற சொல்,

கு சப்தஸ்து அந்தகாரஹ ஸ்யாத். ரு சப்தஹ தன்னிரோதகஹ. அந்தகாரஹ நிரோதித்வாத் குரு ரித்யபிதீயதே

அதாவது, கு என்ற சப்தம் அறியாமையையும்

ரு என்ற சப்தம் அதை போக்குவதையும் குறிக்கும்.

அதனால் அறியாமையை போக்குபவனே குரு ஆகிறான்.

ஆசார்யன் என்கிற சொல்,

ஆசிணோதிஹி ஷாஸ்த்ராத்தான் ஆசரே ஸ்தாபயத்யபி. ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே

அதாவது,

செய்ய வேண்டுவதாக விதிக்கிற மற்றும் செய்யக் கூடாததாக நிஷேதிக்கிற சாஸ்த்ரங்களை பிழை இல்லாமல் கற்று கற்றுவித்து அதன்படி நட்ப்பவனே ஆசார்யன் ஆகிறான்.

3. பொதுவாக, நாம் வித விதமாக கேட்டிருப்பது சிஷ்யர்களுக்கு தேவையான லக்ஷணங்கள்; அவைகள் ந்நிச்சயமாக தேவையே !

ஆனால், ஆசார்ய லக்ஷணம் அறிவது தேவையா? அதற்கு ப்ரமாணம் உண்டா என்றால், ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில், பல அதிகாரங்களில் உதை விளக்கி உள்ளார்.

நல்ல பிழை அற்ற ஞானம் பெற ,ஒரு சிஷ்யன் தகுதியான ஆசார்யனை வரிக்க வேண்டும். அந்த பிழை இல்லாத ஞானமே ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு காரணமாகிறது.

ஆக, இவ்வாறு உள்ள ஆசார்யன் ஸத் ஸம்ப்ரதாயத்தை சேர்ந்தவன் ஆகிறான்; அதாவது, **மறை உரைக்கும் பொருள் எல்லாம் மெய்** எனக் கொள்பவர்கள்; அதாவது, வேத வேதாந்த வரிகளுக்குள் ப்ராபல்ய தௌர்பல்ய விளக்கம் கொள்ளாமல், அனைத்து வேத வேதாந்த வரிகளும் சம வலிமை கொண்டது, என தெளிவது ஸத் ஸம்ப்ரதாய இலக்கணம்; அவ்வழியாலே ஸ்ரீ ராமானுஜர், தனது ஸ்ரீபாஷ்ய க்ரந்தத்தில், **இதி ஸர்வம் ஸமஞ்சஸம்** (ஆக, வேத வரிகளில் முரண் கிடையாது) என க்ரந்தத்தை நிறைவு செய்கிறார்.

இதனால், ஸ்ரீ ராமானுஜ க்ரந்தங்களே ஸத் ஸம்ப்ரதாய ஸித்தாந்தத்திற்கு ஏற்றவை, ஆகிறது.

இந்த வேத மார்க்கமான ஸத் ஸம்ப்ரதாயம் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தமாகக் கொண்டு, பகவத் ராமானுஜ க்ரந்தங்களோடு சிறிதும் முரண் இல்லாமல், ஸ்வாமி தேசிகன் தனது க்ரந்தங்களில் சாஸ்த்திர விஷயங்களை விவரித்தார்.

அவர் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம் - **ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில்** ,

இப்படி ரஹஸ்யத்ரயத்தைப் பற்றின கீழும் மேலும் உள்ள பாசுரங்களை எல்லாம் வேதாந்த உதயன ஸம்பரதாயமான மடைப் பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாம் கேட்டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் தன்னை கிளியைப் பழக்கி வைக்குமாப் பொலே பழக்கி வைக்க அவர் திருவுள்ளத்திலே இரக்கமடியாக பெருமாள் தெளிய ப்ராகாசிப்பித்து மறவாமற் காத்து பிழையற பேசுவித்த பாசுரங்கள்

என்று ஸ்ரீராமானுஜ ஸ்ரீஸுக்திகளை ப்ரமாணங்களாகக் கொண்டு, தனது க்ரந்தங்கள் இருப்பதாக அருளியுள்ளார்.

4. இந்த ஸத் ஸம்ப்ரதாய வழி வந்த ஸ்வாமி தேசிகன், அவ்வழியிலே அவர்கள் பரம்பரையில் வரும் பிற்காலத்து ஆசார்யர்கள், சிஷ்யர்களுக்கு விஷய தானம் செய்யும் போது, ஆசார்யர்களின், இயல்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை, ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில், ஸ்வாமி தேசின், அருளியுள்ளார்.

 # குரு பரம்பரா சாரத்தில் நம் ஆசார்யர்களின் ஏற்றத்தை அருளும் போது, மூன்று தீய குணங்கள் இல்லாது இருப்பதை, நம் ஸத் ஸம்ப்ரதாய ஆசார்யர்களுக்கு விசேஷித்து அருளியுள்ளார்:

ஏதே மஹ்ய மபோட மன்மத க்ஷரா உன்மாதயா நாதாதய்ஹ த்ரயந்த ப்ரதிநந்தனீய விவித உதந்தாஹா ஸ்வதந்தாமிஹ ஷ்ரத்தா தவ்ய ஷரண்ய தம்பதிதயா திவ்யாபகா வ்யாபகாஹா ஸ்ப்ரத்தா விப்லவ விப்ரலம்ப பதவீ வைதேசிகா தேசிகாஹா

மூன்று குணங்கள் இல்லாது இருக்க வேண்டிய ஆசார்ய தன்மைகளாவது:

ஸ்ப்ரத்தா - நாம் படித்தவர்கள் என்பதால் மற்றவர்களை அவமானப் படுத்துவதில் விருப்பம்

விப்லவ - பூர்வாசார்யர்கள் அளித்த விளக்கங்களை மாற்றி அமைத்து ஸத் ஸம்ப்ரதாயத்தை அழிப்பது

விப்ரலம்ப பதவி - தன் சிஷ்யர்களை ஏமாற்றும் எண்ணத்தோடு தன் பாண்டித்யத்தினால் சாஸ்த்திர விஷயங்களில் திசை திருப்புவது

ஆக, பண்டிதர்கள் தங்கள் ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் அருளிய விஷயங்களை மாற்றி அமைத்து விளக்கும் போது, அது நிராகரிக்கப் பட வேண்டியதே, என்பது ஸ்வாமி தேசிக க்ரந்தங்களிலிருந்து ஸ்பஷ்டம்.

 # ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில் சிஷ்யர்கள் கவனமாக இருக்க வேண்டியதை அருள்கிறார்:

ந விச்வாச: க்வசித் கார்யோ விசேஷாத்து கலௌ யுகே; பாபிஷ்டா வாத வர்ஷேண மோஹயந்தி விசக்ஷணான்

அதாவது

கலி யுகத்தில், பாபிஷ்டர்கள், தனது துர் வாதங்களைக் கொண்டு சாமான்ய ஞானம் உடையவர்களை மதி மயக்கம் அடையச் செய்வார்கள்.

இந்த வரி, தத்வ ஹித புருஷார்த்தங்களை விளக்கிய பின்னர், நம் ஸத் ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் கடமைகளை விளக்கும் அதிகாரம்; ஆதலால், இந்த சந்தர்பத்தில் துர் வாதங்களாக கூறப்படுவது, ஸத் ஸம்ப்ரதாயத்தை சேர்ந்தவர்களைப் பற்றியே, எனபது அறிய வேண்டுவது.

 # ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில் சிஷ்யர்கள் கவனமாக இருக்க வேண்டியதை அருள்கிறார்:

ஏகஸ்த்வ அபவர்கார்த்தம் அநுஷ்டானாது கௌஷலம்; லோகானுஸாரஸ்த்வேகத்ர குரு: பஸ்சாதுதீரித:

அதாவது

ஒரு பக்கத்தில் மோக்ஷ அநுஷ்டானத்தை செய்வதாய் சாமர்த்யமாகக் காட்டி, மற்றொரு பக்கத்தில் உலக போக்கை அநுஸரித்து நடக்கும் குரு இழிவானவன், எனக் கூறப் படுகின்றான்.

ஆக, நம் ஸம்ப்ரதாய பூர்வர்கள் வழி எவ்வழியோ அவ்வழியிலேயே செல்ல வேண்டுமென தெளிகிறது; அதை மீறுபவர்கள் வித்வான்களாக இருந்தாலும் அவர்கள் இழிவானவர்கள்; அவர்கள் சொல்வது ஏற்க தகாதது, என இவ்வரி தெளிவிக்கிறது.

 # சிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் சிஷ்யர்கள் மேலும் கவனமாக இருக்க வேண்டியதை அருள்கிறார்:

பண்டிதை: அர்த்த கார்பண்யாத் பண்ய ஸ்த்ரீபிரவ ஸ்வயம்; ஆத்மா ஸம்ஸ்க்ருத்ய ஸம்ஸ்க்ருத்ய பரோபகாரணீக்ருத:

அதாவது,

விலை மாதர்கள் தங்கள் அழகை பெருக்கிக் கொண்டு பிறருக்கு பயன்பட்டு லாபத்தை அடைவது போல், சில பண்டிதர்கள் தன் ஞானத்தை வ்யாபாரமாக்க முற்படுவர்.

இதுவும், தன் பாண்டித்யத்தை விலை பேசி, உலக போக்கை அநுசரித்து விளக்கம் அளிப்பதாகிய குற்றம் இல்லாதவர்களாக, ஆசார்யர்கள் தங்களை காத்துக் கொள்ள வேண்டுவதாகிறது.

 # சிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் சிஷ்யர்கள் மேலும் கவனமாக இருக்க வேண்டியதை அருள்கிறார்:

குருவை ப்ரகாசிப்பிக்கா நிற்க செய்தே அவன் பண்ணின சாஸ்த்ரீய உபதேசத்திற்கு விருத்தம் சொல்லுமாகில் விப்ரலம்பகம் பேருமாய்...என்கிறபடியே பாபிஷ்டனாம்

அதாவது,

ஒரு பண்டிதன், சாஸ்த்திர விஷயங்களை கூறும் போது தன் ஆசாரயன் பெயரைச் சொல்லியும் அந்த ஆசார்யன் நிர்வஹித்த வகையிலேயே அர்த்தங்களை விளக்கியும் சொல்லாமல் மாறு பட்ட அர்த்தங்களை உரைக்குமாகில், அந்த பண்டிதன் வஞ்சகன் ஆகிறான்; பாபிஷ்டனாகிறான்.

ஆக, பாகவதர்கள் மற்றும் பண்டிதர்கள் என கொள்ளும் போது கவனம் தேவை; நம் பூர்வர்கள் வழியை மீறி உபதேசிப்பதால் அந்த பண்டிதனுக்கு அநர்த்தம் என்பது ப்ரமாண ஸித்தம்; அச்சிஷ்யனும் தவறாக புரிந்து போவதற்கு அது ஹேதுவாகும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

20. <u>தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாதா?</u>

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

மோக்ஷத்திற்கான சரணாகதி அநுஷ்டானம், மோக்ஷ பலனை அளித்தே தீரும் என்பதால், முறையோடு சரணாகதி அநுடித்திருந்தால் அதன் பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

1. பெரியாழ்வார் திருமொழியில்,

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும் மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்கண் வைத்த என்னுடைய திருவரங்கற் கன்றியும் மற்றொருவர்க்கு ஆளா வாரே

என அருளியிருக்கிறார்.

அதாவது, பெரிய பிராட்டியரே எம்பெருமனிடத்தில், சரணாகதன் செய்த குற்றங்களை எடுத்துரைத்தாலும், தன் அடியார்கள் அவ்வாறு குற்றங்களை செய்ய மாட்டார்கள் என எம்பெருமான் வாதிடுவதாக இருப்பதால், முறையோடு சரணாகதி அநுஷ்டித்திருந்தால் அதன் பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது என பூர்வ பக்ஷிகள் கருத்து கூறுவர்.

ஆண்டாள், தருப்பாவையில்,

போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்

என, (அதாவது உபாய அநுஷ்டானத்திற்கு முன்பு செய்த பாபங்களும் பின்பு செய்ய இருக்கிற பாபங்களும் தீயிலிட்ட தூசு போன்று களையப் படும்),

என அருளினாள்.

இவை அனைத்தும், சாஸ்த்திர விளக்கங்களை மீறாமல், பாபங்களின் அழிவை விளக்கி, சரணாகதனின் ஏற்றத்தை விளக்கியுள்ளதாக கருதப் பட வேண்டியது..

ஆனால், இதை ஆதாரமாகக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, எனப் பூர்வபக்ஷிகள் கூறுவர்.

இது, ஸத்வ குணம் ஓங்கி இருக்கிற சரணாகதனை ப்ரஷம்ஸை பண்ணுவதற்காகவும், அப்படிப் பட்ட சரணாகதனிடம் எம்பெருமானின் திருவுள்ள உகப்பும், பாபங்கள் களையப்படும் ப்ரகாரங்களை, ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என கண்ணன் அருளிய படி, சுருக்கமாகவும் சொல்லப் படுகிறது; மற்றபடி விளக்குவது பல வித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. இதில், ஆழ்வாரின் திரு உள்ளத்தை பாசுர வரிகளைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும்

என்ற வரிகளில் உள்ள போலும் என்கிற பதம்,

‘என்னடியார்கள் தெரிந்து தவறு செய்யாதவர்கள்' என்று உரைக்கவில்லை; ஆனால் அவ்வாறு இருப்பதாக ஒரு தோற்றமுண்டு என்பதாகிறது.

ஆக, இந்த பாசுரம், சரணாகதன் பாபம் செய்ய மாட்டான் என மிகைப் படுத்தி அவன் ஏற்றத்தை கூறுதாகிறது.

அதன் தாத்பர்யமாவது, எம்பெருமானின் கருணையால், சரணாகதன் செய்யும் புத்தி பூர்வக அபராதங்களை அவன் பொருட்டாக மதிப்பதில்லை; அதனால், உயர்ந்த மோக்ஷ பலனுக்கு அதை தடையாக கொள்வதில்லை என்பதாகும். இது ஸகல சாஸ்த்திரங்களோடு ஒத்த விளக்கமாகிறது.

ஆக, இதனால் முறையோடு சரணாகதி அநுடித்திருந்தால் அதன் பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, என்பது ஆழ்வாரின் கருத்தில்லை, எனத் தெளியலாம்.

3. அதே போல், சாஸ்த்திரங்கள்,

வித்யதே ப்ராஹ்மணே தம:

எனக் கூறுகிறது.

அதாவது, ப்ராஹ்மணர்கள் புலன் அடக்கம் கொண்டவர்கள்.

ஆனால், புராண இதிஹாஸ காலங்களிலும் கூட, புலனடக்கம் நீங்கி பிறகு புலனடக்கம் பெற்றவர்களின் வரலாற்றை காண்கிறோமே!

உதாரணமாக,

ஸௌபரி என்கிற ஒரு மாமுனிவன் நீர்நிலையிலிருந்து கொண்டு தவம் புரிந்து வந்தார்.

அங்கு மீன்களெல்லாம் கூடிக்களித்து விளையாடா நின்றமையைக் கண்ணுற்று

‘நாமும் இப்படி குடும்ப வாழ்க்கையிற் கூடி நின்று சிற்றின்பம் நுகர்ந்து களிக்கவேணும்’

என்று ஆவல் கொண்டார். அதனால், புலனடக்கம் நீங்கப் பெற்றது அல்லவா?

மாந்தாதா என்னும் அரசனுக்குப் பல மகள்கள் இருப்பதாக உணர்ந்து அவனிடம் சென்று தனக்குக் கன்னிகாதானம் செய்யுமாறு வேண்டினார்.

அரசன் இவருடைய கிழத்தனத்தையும் ரூபத்தையும் கண்டு இசைய மனமில்லமால், பெண் கொடுக்க முடியாதென்று நம் வாயாற் சொன்னால், முனிவர் தன்னை சபித்துவிடக்கூடும் என எண்ணினார்.

‘பெண்களிருக்கும் இடத்தற்கு இவரை அநுப்புவோம்; இவரைக் கண்டு பெண்கள் காமமுற்றார்களாகில் விவாஹம் செய்து கொள்ளட்டும்; இல்லையாகில் அவர்களே மறுத்துவிடட்டும்; நம்தலையில் பழி வேண்டாம்’

என்று எண்ணி முனிவரைப் பெண்களிருக்கும் இடத்திற்கு அநுப்பினார்.

முனிவர் அங்குச் செல்லுமபோதே தமது தவ வலிமையால் திவ்ய ஸுந்தரமான ரூபத்தை கொண்டு போய் அவர்கள் முன்னே நின்றார்.

அங்கிருந்த ஐம்பது பெண்களும்

'நானே இவரை மணந்துகொள்வேன்'

என்று போட்டி போட்டுக்கொண்டு மேல் விழுந்தனர்.

முனிவர் அத்தனை பெண்களையம மணந்துகொள்ள் விரும்பிச் தமது தவவலிமையால் ஐம்பது வடிவம் எடுத்து அப்பெண்கள் அனைவரையும் விவாஹம் செய்து கொண்டு மகிழ்ந்திருந்தார் என்று புராணங்களில் உள்ளன.

சில காலத்திற்கு பிறகு தனது தவ வலிமையை இழந்து தன்னுடைய ஞானத்திற்கும் அநுஷ்டானத்திற்கும் ஏற்ற செயல்களை செய்யாமல் இருந்ததற்கு மனம் வருந்தினார். பிறகு, தன் தவத்தை தொடர்ந்தார்.

இது புராணக் கதை.

ஆக, தவ வலிமை மிக்கவர்களையும் (ஞான அநுஷ்டான சீலர்களான உபாஸகர்களையும்) முக்குணங்களான ப்ரக்ருதியானது தன் வழியில் இழுத்து செல்லும் போது, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, என்பது சரியான வாதம் அன்று.

4. உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, ப்ருஹ்ம ஸுத்ரம் (4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸுத்ரம்)

ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷௌ தத் வ்யபதேஷாத்

என்கிறது.

அதாவது, இங்கு மோக்ஷத்தை விரும்பி பக்தி யோகமோ அல்லது சரணாகதி அநுஷ்டானமோ செய்பவர்களின் முன்பு செய்த பாபங்களும் பின்பு ஏற்படும் பாபங்களும் நீங்குவதை இரு வகையாக பிரித்து கூறப் படுகின்றன.

அதனாலும் சரணாகதிக்கு பின்பு பாபம் ஏற்பட வாய்ப்புண்டு என அறியலாம்.

பாபங்கள் நீங்கும் முறை:

அஸ்லேஷம் - அதாவது, செய்யும் பாபச் செயல்கள் பாபமாகவே கருதப்படாதது.

விநாசம் - அதாவது, செய்யும் பாபச் செயல்களைக் களைவது.

இதில், சரணாகதனுக்கு பாப அஸ்லேஷத்திற்கு விஷயமாவது,

சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு,

தூங்குகிற காலத்திலோ அல்லது அறியாமலோ ஏற்படும் பாபங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன.

கவனக் குறைவினால் ஏற்படும் பாபங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன.

காலம், தேசம், அவஸ்தை போன்ற நிலையில் தன்னை மீறிய காரணங்களினால் ஏற்படும் பாபங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன.

மேலும், சரணாகதனுக்கு பாப விநாசத்திற்கு விஷயமாவது,

சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு,

சரணாகதி அநுஷ்டிப்பவனின் சரீர யாத்திரைக்கு தேவையான கர்மாக்களைத் தவிர மற்ற பழைய கர்மாக்கள் அனைத்தும் விநாசத்திற்கு விஷயமாகின்றன.

மேலும், சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களை விநாசத்திற்கு விஷயமாக்க, இரு வழிகள் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன:

செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு ப்ராயச்சித்தமான சரணாகதியை அவனிடத்தில் அநுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், அந்த பாபங்களைக் காரணமாகக் கொண்டு துன்பத்தைக் கொடுக்காமல், மன்னித்து விடுகிறான்.

செய்த பாபத்திற்காக மனதினால் வருத்தம் கொள்ளாமலும், அதற்காக ப்ராயச்சித்தமான சரணாகதியை அநுஷ்டிக்காமலும் இருந்தால், இங்குற்ற காலம் அதற்கான தண்டனைகளைக் கொடுத்து இந்த பாபத்திலிருந்து விடுவிக்கிறான்; முடிவில் மோக்ஷத்தையும் அளிக்கிறான்.

ஆக, சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு ஏற்படும் பாபங்களை போக்குவதற்கான விளக்கங்கள் இந்த ஸுத்ரத்தில் உள்ள படியால், தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, என்பது சரியான வாதம் அன்று.

ஸ்வாமி தேசிகன், **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில்**, மிகத் தெளிவாக இதனை,

தீபூர்வோத்தர பாப்மநாம் அஜநநாத் ஜாதே அபி தந்நிஷ்க்ருதே: கௌடில்யே ஸதி சிக்ஷியா அநகயன் க்ரோடி கரோதி ப்ரபு:

என அருளியுள்ளார்;

அதாவது, ஸத்வ குணம் நிறைந்த சரணாகதனுக்கு பொதுவாக புத்தி பூர்வக அபசாரங்கள் செய்வதில் ஈடுபாடு உண்டாகாது; ஆனால் ப்ரக்ருதி சம்பந்தத்தினால் அம்மாதிரி பாபங்கள் சம்பவிக்கலாம்; அப்போது ஒரு ப்ராயஸ்சித்த ப்ரபத்தியாலோ அல்லது, அதை ஆனுஷ்டியாத போது, ஒரு தண்டனையாலோ அப்பாபங்களை களைந்து, கருணை உள்ளம் கொண்ட எம்பெருமான் சரீர முடிவில் சரணாகதனுக்கு மோக்ஷமளிக்கிறான், என அருளியுள்ளார்.

5. ஆக, முறையோடு சரணாகதி அநுடித்திருந்தால் அதன் பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

21. <u>ஸித்தோபாயமான பெரிய பிராட்டி, புருஷகாரமாய் இருப்பது எப்படி?</u>

1. இந்த கேள்வியை மூன்று பாகமாக பிரித்து அறிய வேண்டும் !

புருஷகாரமாய் இருப்பதன், விளக்கம் ?

பெரிய பிராட்டியின் புருஷகார ஆகாரம் எத்தகையது?

பெரிய பிராட்டி தானே ஈஸ்வர தத்வமாய் இருக்க, அதாவது பாபத்தை விலக்க வல்லவளாய் இருக்க, அவளுக்கு புருஷகாரத்வம் பொருந்துமோ?

2. பிராட்டியுடன் கூடிய எம்பெருமானே ஈஸ்வரன் என்பது ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி தேசிக பக்ஷம்; இதில் ஸ்த்ரீ ப்ரயுக்தமான புருஷகாரத்தை தனக்கு குணமாகக் கொண்டவள் பிராட்டி என்றும், புருஷ குணமான தண்டதரத்வத்தை எம்பெருமான் கொண்டுள்ளதாகவும் சாஸ்த்திரங்கள் கூறுகின்றன; மற்ற அனைத்து கல்யாண குணங்களும் இருவருக்கும் பொதுவே !

இதில், இருவருக்கும் பொதுவான குணங்களில், ரக்ஷண விஷயத்தில், மேலோங்கி இருப்பது கருணை ; அதன் காரணமாக, மஹா பாபிகளான ஜீவர்களின் பிறவிப் பிணி நீங்க, லகு உபாயத்தை சாஸ்த்திரங்கள் கொண்டு ஸர்வேஸ்வரன் அருளியுள்ளான்.

இதை, நன்கு தெளிவிக்க, பெரியாழ்வார் திருமொழி பாசுரமானது, தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்

என பதப் ப்ரயோகம் செய்துள்ளார். அநுபவ ரஸம். மிகைப் படுத்திய வாதம் பகவத் கருணையை விளக்க வந்தது. இதற்கு, சாஸ்த்திர விரோதமாக அர்த்தம் கொள்ளலாகாது.

விஷ்ணு தர்மத்தில் கூறுவதாவது :

ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி,

‘வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன்’ – என்கிறான் ஸர்வேஸ்வரன் .

ஆக, ஆழ்வார் பாசுரத்தின் நோக்கம் அறிய வேண்டும். பகவத் கருணை, அவன் அருளிய சாஸ்த்திர நியதிக்கு உட்பட்டு, மேலோங்கி இருக்கிறது என பொருள்.

இதன் அடிப்படையில், ஸ்வாமி தேசிகன், ரஹஸ்ய ரத்னாவளி வரிகளைக் கொண்டு, பெரிய பிராட்டியின் புருஷகார ப்ரயோஜனத்தைத் தெளியலாம்:

இவளை புருஷகாரமாக்க வேண்டுகிறது ஈஸ்வரன் தண்டதரன் ஆகையாலே. இத் தண்ட காரணம் அநாதியான ஆக்ஞா அதிலங்கனம்

ஆக, அபராதியாய்ப் போந்த சம்சாரி ஜீவன், எம்பெருமானின் சீற்றத்தை சமிக்க, ஸர்வருக்கும் தாயான பெரிய பிராட்டியார் புருஷகாரமாகி, மோக்ஷ உபாயத்தை, ஏற்கப் பண்ணுகிளாள். அதாவது, ப்ரக்ருதி ஸம்பத்தத்தினால் பாபம் செய்து விட்டதாகவும் இப்போது மன்னிப்பு கோரும் ஜீவர்களை மன்னிக்க வேண்டுவதாவும் பரிந்துரைக்கிளாள்.

இதை ஸீதா பிராட்டி, ராக்ஷஸிகளுக்கு பரிந்து பேசும், வரி கொண்டு தெளியலாம்:

பாபானாம் வா க்ஷுபானாம் வா வதார்ஹாணாம் ப்ளங்கம கார்யம் கருணம் ஆர்யேண ந கஸ்சித் நாபராத்யதி

பாபம் பண்ணவாளோ, நல்லவாளோ, வதம் பண்ணக் கூடிய அளவுக்குத் தப்பு பண்ணவாளோ, யாரா இருந்தாலும் மன்னிக்க வேண்டும். உலகில் ஒரு தப்புக் கூடப் பண்ணாதவன்னு யாருமே கிடையாது, அபராதமே செய்யாதவன்னு, ஒருத்தனுமே கிடையாது.

என்பது புருஷகார பரிந்துரை. இதையே சரணாகதி அநுஷ்டான வேளையில், முமுக்ஷுவானவன் பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தி பண்ணி, பிறகு திவ்ய தம்பதிகளிடம் மோக்ஷார்த்த ப்ரபத்தி பண்ண வேண்டுவதாக சாஸ்த்திரம் விதிக்கிறது.

மோக்ஷ பலனை, சரணாகதி அநுஷ்டித்த முமுக்ஷுவானவன், பெற, புருஷகாரத்தினால் பிராட்டி வகை செய்கிறாள். இது ப்ரமாண ஸித்தம்.

அதாவது, **அஸ்து மே** என்று அபேக்ஷித்தால் **அஸ்துதே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே** என்கிற திருமுக பாசுரமாவது, பகவத் ராமானுஜர் **சரணாகதி கத்யத்தில்** காட்டிய **புருஷகார ப்ரபத்தியின்** ப்ரகாரம்.

ப்ராப்தி விரோதி பாபங்களைக் களைய ஐந்து அங்கங்களோடு கூடிய மோக்ஷார்த்த ப்ரபத்தியை, திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் அநுஷ்டிக்கும் முன்பு,

உபாய விரோதி பாபங்களைக் களைய ஐந்து அங்கங்களோடு கூடிய புருஷகார ப்ரபத்தியை பெரிய பிராட்டி திருவடிகளில் அநுஷ்டிக்க வேண்டும்,

என்பது ப்ரமாண ஸித்தம்.

3. முமுக்ஷுவின், மோக்ஷ விஷயத்தில், பெரிய பிராட்டிக்கு இரு ஆகாரங்கள்:

புருஷகாரத்வம்

மோக்ஷ ப்ரதத்வம்

பெரிய பிராட்டியாரை குறிக்கும் 'ஸ்ரீ' என்ற ஸம்ஸ்க்கருத சப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் உள்ளன, என ஸ்வாமி தேசிகன் விளக்குகிறார்:

ச்ரீயதே - அடையப்படுகின்றாள்; எம்பெருமானிடம் பரிந்துரைக்க வேண்டி ஜீவர்கள் அவளை அடைகிறார்கள்.

ச்ரயதே - அடைகின்றாள்; தன்னை அண்டிய ஜீவரகளுக்காக எம்பெருமானை அவர்கள் விஷயமாக, பரிந்துரை செய்ய, அடைகிறாள்.

ச்ருணோதி - கேட்கறாள்; தன்னை அண்டிய ஜீவர்களின் குறைகளைக் கேட்கிறாள்.

ச்ராவயதி - கேட்பிக்கிறாள்; ஜீவர்களிடம் கேட்டதை ஸர்வேஸ்வரனிடம் விண்ணப்பிக்கிறாள்.

ச்ருணாதி - ஒழிக்கிறாள்; மோக்ஷத்திற்கு தடையான ஜீவர்களின் பாபங்களை ஒழிக்கிறாள்

ச்ரீணாதி - ஜீவர்களுக்கு பரிபூரண ப்ருஹ்மானுபவமான பலனை அளிக்கிறாள்.

ஆக, முதல் நான்கும் பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாருக்கு புருஷகாரமாக, அதாவது எம்பெருமானிடம் பரிந்துரைப்பவளாக, அமைகிறது. அடுத்த இரண்டும், உபாயமாக, அதாவது தானே பலனளிப்பதாகவும், அமைகிறது.

4. சாஸ்த்திரத்தாலே தெளியப் பெற்ற, முமுக்ஷுவின், மோக்ஷ விஷயத்தில், பெரிய பிராட்டிக்கு இரு ஆகாரங்கள், தேவையோ, அதாவது அவளே பாபங்களை விலக்க வல்லவளாக இருக்கும் போது புருஷகாரம் ஏன் தேவையாகிறது?

இதற்கு இரு வகை, விளக்கங்கள் ஸாத்யம்.

யாக்ஞ்யவல்க்யர் ஸ்ம்ருதியால்,

டம்பி ஹைதுக பாஷண்டி பகவத் வ்ருத்தீச்ச வர்ஹயேத்

என்கிறது.

அதாவது, மற்றவர்கள் கொண்டாட வேண்டி தர்ம காரியங்களைச் செய்பவனும், சாஸ்த்திர ஆதாரத்தை ஒத்துக் கொள்ளாமல் தன் அறிவைக் கொண்டு புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை வாதிடுபவனும் (ஹைதுகர்), ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை, பரதேவதை என அறியாதவனும் (பாஷாண்டி), வஞ்சனையில் தான் நினைத்தவற்றை அடைய விரும்புபவனையும் கொடியவர்களாக சாஸ்த்திரம் வர்ணிக்கிறது.

இதனால், இம்மாதிரி பெரிய பிராட்டிக்கு இரு ஆகாரங்கள், உபபன்னமோ என்னும் வாதம் அசாஸ்த்ரீயம்; ஹைதுகர்களின் செயல்; அதனால் நிராஹரிக்கப் பட வேண்டியது.

உலக உதாரணத்தைக் கொண்டும், ஒருவருக்கே இரு ஆகாரங்கள் உண்டென தெளியலாம் :

எந்த ஒரு வணிக நிறுவனமும், அவர்களின் இயக்குனர் குழு (Board of Directors) ஒப்புதல் கொண்டு ஸகல நிர்வாக முடிவுகளையும் எடுக்க, இந்திய நிறுவன சட்டத்தின் கீழ் அநுமதி அளிக்கப் பட்டிருக்கிறது.

ஒரு நிறுவனத்தில் பணியாற்றும், இயக்குனர் (உற்பத்தி துறை) , பல கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு உற்பத்தி இயந்திரம் வாங்க ஒரு திட்டத்தை இயக்குனர் குழுவின் அங்கீகாரத்திற்காக முன் வைக்கும் போது, அந்த இயக்குனர் (உற்பத்தி துறை) பரிந்துரைப்பவராக முதலில் செயல் படுகிறார்.

பிறகு, அந்த இயக்குனர் குழு ஒப்புதல் அளிக்குப் போது, அந்த குழுவில் அங்கத்தினரான இயக்குனர் (உற்பத்தி துறை) , தானே குழுவின் அங்கத்தினராக ஒப்புதலும் அளிக்கிறார்.

ஆக, ஒருவரே, பரிந்துரைப்பாளராகவும், ஒப்புதல் அளிப்பவராகவும் இருக்க, லோக வழக்கத்திலும் காண்கிறோம்.

ஆக, பெரிய பிராட்டியானவள், புருஷகாரமாய் இருந்து மோக்ஷ பலனை சரணாகதன் பெறுவதற்கு, புருஷகார ப்ரபத்தியை ஏற்று, எம்பெருமானிடம் பரிந்துரைக்கிறாள்; மேலும், தானே ஸித்தோபாயமாய் இருந்து எம்பெருமானோடு சேர்ந்து, பாபங்களை களைகிறாள் எனக் கூறக் குறையில்லை.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

22. <u>விதிகளை மீறும் பாபங்கள் சரணாகதனுக்கு தீங்கை விளைவிக்காது?</u>

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

மோக்ஷத்திற்கான சரணாகதி அநுஷ்டானம், மோக்ஷ பலனை அளித்தே தீரும் என்பதால், முறையோடு சரணாகதி அநுடித்திருந்தால் அதன் பிறகு, சாஸ்த்திர விதிகளை மீறுவதான பாபங்கள் சரணாகதனுக்கு ஒரு தீங்கையும் விளைவிக்காது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

இது, பல வித சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரபாணங்களோடும் விரோதிக்கும்.

1. இந்த வாதத்திற்காக, பூர்வபக்ஷிகள் வெளியிடும் ப்ரமாண வரிகளாவது:

ஸ்ரீஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில்,

நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந

பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே

அருளியுள்ளார்.

இதில்,

ந தர்மநிஷ்டோஸ்மி

என்கிற பதங்களைக் கொண்டு,

சாஸ்த்திர விதிகளை மீறுவதான பாபங்கள் ஏற்பட்டாலும், அது ஒரு தீங்கையும் விளைவிக்காது, என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

திருமாலையில், தொண்டரடிப் பொடி ஆழ்வார்,

குளித்து மூன்றனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை, ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன் களிப்பதென் கொண்டு நம்பி! கடல்வண்ணா! கதறுகின்றேன் அளித்தெனக்கு அருள்செய் கண்டாய் அரங்கமா நகர் உளானே!

என அருளினார்.

இதில்,

குளித்து மூன்றனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை, ஒளித்திட்டேன்

என்கிற பதங்களைக் கொண்டு,

ஸ்நாநம் செய்து அக்நி வளர்த்து கர்மாக்களை செய்வதாகிய அந்தணத் தன்மையை இழந்து விட்டேன், என்கிற அர்த்தத்தினால், சாஸ்த்திர விதிகளை மீறுவதான பாபங்கள் ஏற்பட்டாலும், அது ஒரு தீங்கையும் விளைவிக்காது, என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

2. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் கட்டுப்பாட்டில் உள்ள, தன் ஸ்வரூப (இருப்பு), ஸ்திதி (இருப்பின் நீடிப்பு) மற்றும் ப்ரவ்ருத்தியிலே (செயல்களாலே) கூடின ஆகிஞ்சன்ய மற்றும் அநந்ய கதி ஆகிற கார்ப்பண்ய அநுஸந்தானம் (நினைவில் கொள்ளுதல்) ஸதா செய்து போக வேண்டும்.

இதுவும் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம் என ஸ்வாமி தேசிகன் உத்தரக்ருத்யாதிகாரத்தில் விளக்குகிறார்.

....என்கிற பாட்டுக்களிலும் 'ந தர்ம நிஷ்டோஸ்மி' என்கிள ஸ்லோகத்திலும் இவர்கள் அருளிச் செய்த கார்ப்பண்யத்தின் சுவடுகளை எல்லாம் அவலம்பித்துக் கொண்டு போரவும்

ஆக, கார்ப்பண்யம் குலையாமல் இருக்க, ஆழ்வாரும் ஆசார்யர்களும் நமக்கு அளித்த அறிவுரையாவது, நமது தோஷங்களை சிந்திப்பது.

இதில், பராதீன ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளை (பகவத் அதீனமான இருப்பு, வாழ்வு செயல்களை உடைய) தங்களிடம் இல்லாத குறைகளை தங்களிடம் உள்ளதாகக் கொண்டு, அதனால் தன் தோஷங்களை சிந்திப்பதாகக் காட்டி, நமக்கு தோஷ சிந்தனத்தை, தெளிவு படுத்துகின்றனர் ஆழ்வாரும் ஆசார்யர்களும்.

இது, அஹங்காரம் மற்றும் மமகாரம் நீங்கி இருக்க செய்ய வேண்டிய செயலாகக் கருதப் படுகிறது.

3. ஸ்ரீஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹத்தில்

நிஜ கர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித உபாயதாம் பரித்யஜ்ய ந்யச்யே தேவ து தாம்பீ

என அருளிச் செய்தார்.

அதாவது,

‘அவரவர்களின் வர்ணத்திற்கு ஏற்றவற்றை எம்பெருமானின் மீது அன்பின் அடிப்படையில் செய்ய வேண்டும்; அவைகளை விதிக்கப் பட்டது என்று மட்டும் கொள்ளாமலும், மற்ற தேவதைகளைக் கண்டு அஞ்சாமலும், எம்பெருமானை உகப்பிப்பதற்காக என்ற எண்ணம் வேண்டும்’,

என அருளிச் செய்கிறார்.

ஆக, எம்பெருமான் மீது ஒருவன் கொண்ட அன்பானது அவனால் சாஸ்த்ரங்கள் விதிக்கப் பட்டுள்ள கைங்கர்யங்களில் ஈடுபடுத்த வல்ல வலிமை கொண்டதாகும் என அர்த்தமாகிறது.

இதனால், ஸ்ரீஆளவந்தார், சாஸ்த்திர விதிகளை மீறுவதான பாபங்கள் ஏற்பட்டாலும், அது ஒரு தீங்கையும் விளைவிக்காது, என உரைக்கவில்லை என உணர வேண்டும்.

4. தொண்டரடிப்பொடியாழ்வார் தன் திருமாலை என்கிற ப்ரபந்தத்தில்,

தெளிவிலா கலங்கல் நீர் சூழ் திருவரங்கத்துள் ஓங்கும் ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயும் ஆவார் எளியது ஓர் அருளும் அன்றே என் திறத்து எம்பிரானார் அளியன் நம் பையல் என்னார் அம்மவோ கொடியவாறே

எனக் கூறி வருந்துகிறார்.

அதாவது, தான் அரங்கனுக்கே அடிமைப் பட்டிருப்பதையும், அதை அவன் கண்டும் காணாமல் இருக்கும் தோற்றத்தையும் கருத்தில் கொண்டு, எம்பெருமான் தன்னை ‘அவனைச் சேர்ந்தவன் அல்ல’ என்ற எண்ணம் கொண்டிருக்கிறானோ எனக் கூறி கலங்குகிறார்.

இவை அனைத்தும் சரணாகதனுக்கே இயல்பாக இருக்க வேண்டிய தன் தாழ்மையின் அநுஸந்தாம்.

அதாவது, முக்குணங்களாலான இந்த ப்ராக்ருத லோகத்தில், தான் இருக்கும் போது புலன்களால் ஏற்படக்கூடிய பாதகங்களை விலக்க முடியாத இயலாமையை விளக்க வந்தவை.

ஆக, ஆழ்வார், சாஸ்த்திர விதிகளை மீறுவதான பாபங்கள் ஏற்பட்டாலும், அது ஒரு தீங்கையும் விளைவிக்காது, என உரைக்கவில்லை என உணர வேண்டும்.

5. புராண கதைகளிலிருந்தும், பல தரப் பட்ட கஷ்ட நிலைகளிலும், சாஸ்த்திரத்தை அநுஸரித்து நடப்பது தேவையே, இதை அறியலாம்.

சாந்தீபனி முனிவரின் ஆசிரமத்தில் கண்ணனும் குசேலரும் குருகுலக் கல்வி பயின்றவர்கள்.

குசேலர் உலக இன்பங்களில் பற்று அற்றவர். புலனடக்கம் மிகுந்தவர். குருகுலக் கல்வி முடிந்தவுடன் இருவரும் பிரிந்து தத்தமது இருப்பிடங்களுக்கு சென்றனர்.

குசேலர் பரம ஏழை. தனது மனைவி மக்களுடன் பல நாட்கள் அன்னமின்றி பட்டினியாக வாழ்க்கை நடத்தினர். வீட்டின் பரிதாபமான நிலையை கணவருக்கு எடுத்துச் சொல்லி, துவாரகை நகரில் இருக்கும் கண்ணனைப் பார்த்து வாருங்கள் என்று வேண்டிக் கொண்டாள் அந்த பத்தினி.

குசேலர் துவாரகை நகருக்கு நடைபயணமாக சென்றார். ஆனால், அவர் கண்ணனிடம் எதையும் ப்ரார்த்திக்கவில்லை.

அப்போது எல்லோருடைய உள்ளங்களில் உள்ள விஷயங்களை அறியும் கண்ணன், குசேலர் தம்மிடம் வந்த காரணத்தைத் அறிந்து கொண்டார்.

‘குசேலர் பலனை எதிர்பாராமல் பக்தி செய்பவர். செல்வம் வேண்டி ஒரு நாளும் வழிபட்டவர் அல்ல. தன்னுடைய மனைவியின் தூண்டுதலின் பேரில் என்னிடம் வந்திருக்கிறார். ஆகவே, இவருக்கு அனைத்து செல்வங்களையும் தருவேன். முக்தியும் அளிப்பேன்’

என்று எண்ணினான் கண்ணன்.

குசேலரது குடிசை வீடு தங்க மாளிகையாக மாறியது. செல்வம், ஒரு மனிதனுக்கு கர்வத்தை கொடுத்து வீழ்ச்சி அடையச் செய்யும் என்று உணர்ந்த குசேலர் பற்று அற்ற மனப்பாங்குடன், சாஸ்த்திர விதிப்படி, கண்ணனை வழிபடுவதிலே தம் காலம் முழுவதும் கழித்தார்.

ஆக, ஒரு சரணாகதன் பரமேகாந்தியாக, உலக அநுபவத்தில் ஈடுபாடு அற்று, தனக்கு சாஸ்த்திரத்தில் விதித்தவற்றை சரிவர செய்து கொண்டு, இங்குள்ள காலத்தை, கழித்துக் கொண்டிருந்தால் கருணை உள்ளம் கொண்ட எம்பெருமான் சரணாகதனுக்கு ஏற்றதை இங்கும் அங்கும் செய்து போவான்.

6. ஸர்வேஸ்வரனான கண்ணன், உபநிஷத் ஸாரமான பகவத் கீதையில், தன் திருவாக்கினால் அருளியதாவது:

ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ஸ்வ கர்ம நிரத: ஸித்திம் யதா விந்த்தி தச்ருணு

அதாவது,

‘தன் தன் வர்ணத்துக்கான செயல்களில் ஈடுபட்டவன் பரம பலனை அடைகிறான்’. ஆக, இந்த கண்ணனின் வாக்கிலிருந்தும், அவரவர்களுக்கு உண்டான வர்ண தர்மங்களை சாஸ்த்ர விதிப்படி கண்டிப்பாக அநுஷ்டிக்க வேண்டும் என்பது தெரிகிறது.

இவ்வாறு, தன் தன் வர்ணத்துக்கான செயல்களில் ஈடுபட்டவன் பரம பலனை அடைகிறான் என்றே விளக்குகிறான் கண்ணன்.

அதனால், அதை செய்யாதிருப்பது, சரணாகதனானாலும், சாஸ்த்திர மீறலாகும்; ப்ரத்யவாயமும் உண்டென்று அறியலாம்.

7. ஆக, முறையோடு சரணாகதி அநுடித்திருந்தால் அதன் பிறகு, சாஸ்த்திர விதிகளை மீறுவதான பாபங்கள் சரணாகதனுக்கு ஒரு தீங்கையும் விளைவிக்காது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

23. அப்யுபகத ப்ராரப்தத்தில் பாப விநாசம் ஸாத்யமா?

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

சரணாகதி என்கிற அநுஷ்டானம் ஸர்வ பல சாதனமாய் இருக்க, மோக்ஷத்திற்காக அநுஷ்டிக்கும் சரணாகதியில், சரீர யாத்திரை முடியும் வரை இங்குள்ள காலம் புண்ய பலன்களைக் கொண்டு பாபங்களைப் போக்கிக் கொள்ள சரணாகதி அநுஷ்டிக்கலாமோ, என சிலர் எண்ணுவர்.

அதனால், சரணாகதி அநுஷ்டானத்தைக் கொண்டு, இங்குள்ள காலம் துக்க கலப்பு அற்ற ஸுக ரூபமான வாழ்க்கை அமைய வேண்டுவதாய் எண்ணுவர் சிலர்.

1. ஸ்ரீ பராசர மஹரிஷி, தான் அருளிய ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்,

தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததாஸ் ஸுகம், யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்

என விளக்குகிறார்.

அதாவது,

எது வரையில் ஒருவன் ஸர்வேஸ்வரனிடத்தில் சரணாகதி அநுஷ்டிக்கவில்லையோ அது வரையில் அவன் அபேக்ஷிக்கிற பலனுக்கு, அவனுடைய பாபத்தினால் தடை உண்டாகும், என்பதால் சரணாகதி ஸர்வ பல சாதனம் ஆகிறது.

சரணாகதி ஸர்வ பல சாதனமாய் இருந்தும் அது சாஸ்த்திர விதி முறைக்கு உட்பட்டது, என்பதை தெளிய வேண்டும்.

அதாவது,

நம்மால், செயல் படக்கூடிய விஷயங்களில், சரணாகதி பலனளிக்காது.

உதாரணமாக, சாப்பிடாமலேயே பசி போய் விட நினைத்து சரணாகதி அநுஷ்டானம் செய்தால், அது பலனளிக்காது.

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, 'ப்ருஹ்ம ஸூத்ரம் (3ம் அத்யாயம் 4ம் பாதம் 7வது அதிகரணம் 28ம் ஸூத்ரம்)

ஸர்வான் ந அநுமிதிஸ்ச ப்ராணாத்யயே தத் தர்ஷனாத்

அதாவது,

'பட்டினியில் உயிர் போகும் நிலையில் மட்டுமே எந்த ஆகாரத்தையும் உண்ணலாம்'

என்று உரைக்கிறது.

இதனால், பசி போக உண்பதை, சலுகைகளை அளித்தும், நமது முயற்சிக்கு உட்பட்டதாக வைக்கிறது சாஸ்த்திரங்கள், என அறியலாம். அதனால், பசி போக சரணாகதி பலனளிக்காது.

சாஸ்த்திரத்தில் செய்யக் கூடாததாக சொல்லப் பட்ட, கொலை கொள்ளை போன்ற செயல்களின் பலனுக்காக சரணாகதி அநுஷ்டானம் செய்தால், அது பலனளிக்காது.

கண்ணனே சாஸத்திரம் தான் நம்பத் தகுந்த ஆதாரம் என கீதையில் (16-24ல் **தஸ்மாத் சாஸ்த்திரம் ப்ரமாணம் தே...**) அருளியுள்ளானே! இதை கவனத்தில் கொள்ள வேண்டாமா?

இதனால், கொலை கொள்ளை போன்றவைகள் நம்மால் செய்யத் தகாதது என்பதால், இதற்கு சரணாகதி பலனளிக்காது.

ஆக, சரணாகதி அநுஷ்டானம், சாஸ்த்திர நியமங்களுக்கு உட்பட்டே பலனளிக்க வல்லது.

2. ஸர்வேஸ்வரனின் மேன்மையையும், ஆத்ம ஸ்வரூபத்தின் இயற்கை நிலையையும் அறிந்த ஒரு சரணாகதன், இங்குள்ள காலம், உபய பாவனர்களாக , (அதாவது மோக்ஷ ருசியோடு உலக வாழ்க்கையில் ருசியும் கூடியே), இருக்கக் கூடும்.

அந்த சரணாகதனிடம் நல் எண்ணம் கொண்ட ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், உலக ஸுகத்திற்காக, சரணாகதன், பகவானை ப்ராத்தித்தாலும்,

யாசிதோபி ஸதா பக்தை: ந ஹிதம் காரயேத்தரி: பாலமக்னௌ பதந்தம் து மாதா கிம் ந நிவாரயேத்

என்கிற ப்ரமாணத்தின் படி, மோக்ஷ ருசியை குலைக்கக் கூடிய உலக ஸுகங்களான பலனை சரணாகதன் யாசித்தாலும் அளிக்க மாட்டான், என தெளிவிக்கிறது.

சரீர யாத்திரை முடியும் வரை இங்குள்ள காலம் புண்ய பலன்களைக் கொண்டு பாபங்களைப் போக்கிக் கொள்ள சரணாகதி அநுஷ்டித்தால் அது பலனளிக்காது ஏனெனில் அது புருஷார்த்த ருசியைக் குலைத்துவிடும் என்பதால், என்பது பூர்வாசார்யர்களின் சாஸ்த்திர அர்த்த நிர்ணயம்.

ஸ்வாமி தேசிகன், உத்தரக்ருத்ய ஆதிகாரத்தில் தெளிவு பட உரைத்திருக்கிறார்:

பரம புருஷார்த்தத்தில் ருசி குலையாமைக்காக மறக்க வேண்டுமவற்றில் ப்ரதானம் விஷய ஆஸ்வாதம்

இங்குள்ள காலம், பகவத் கைங்கர்ய பலனில் ஆசை குறையாமல் இருக்க மறக்க வேண்டுவனவற்றில் முக்கியமானது உலக விஷய இன்பங்கள் என்பதால், புண்ய பலன்களை அநுபவிக்க இசைந்து பாபத்தை மட்டும் களைய சரணாகதி பலனளிக்காது, என்றபடி.

உதாரணமாக, ஒரு தாயானவள், அவளுடைய சிறு குழந்தை நெருப்பை தொட ஆசை கொண்டாலும் எப்படி தடுத்து விடுவாளோ, அதைப் போல் சரணாகதன் நலம் கருதி, உலக பலன்களை ஸர்வேஸ்வரன் அளிப்பதில்லை.

அதனால், மோக்ஷ பலனை விரும்பும் சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பாபங்களை மட்டும் போக்கிக் கொள்வதான சரணாகதி, சாஸ்த்திர விரோதம் ஏனெனில் அது உலக ஈடுபாட்டை வளர்க்கும். பகவத் கைங்கர்ய ருசியை குறைக்கும். ஆக, அவ்வாறு கோரப்படும் சரணாகதி பலனளிக்காது.

3. மேலும், ஸ்ரீமத் பாகவத ஸ்லோகத்தில்,

யஸ்ய அநுக்ரஹமிச்சாமி தனம் தஸ்ய ஹராம்யஹம். பாந்தவைஸ்ச வியோகேன ப்ருஷம் பவதி துக்கித: தேன துக்கேன ஸாந்தப்தோ யதி மாம் ந பரித்யஜேத். தம் ப்ரஸாதம் கரிஷ்யாமி யஸ்ஸுரைரபி துர்லப:

எனப்படுகிறது.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், எவனுக்கு அநுக்ரஹம் பண்ண எண்ணம் கொண்டுள்ளானோ, அவர்களின் செல்வத்தை முதலில் அழித்து விடுகிறான். பிறகு, அவர்களுடைய உறவினர்களை மரணம் அடையச் செய்கிறான். அந்த நிலையிலும், அவர்கள் ஸர்வேஸ்வரனை துதித்துக் கொண்டு இருந்தார்களேயானல், தேவர்களும் பெற முடியாத அநுக்ரஹத்தை செய்கிறான் ஸர்வேஸ்வரன், எனப்படுகிறது. ஆக, பாப பலனை, ஸர்வேஸ்வரன் தன் அடியார்களுக்கு உலக விஷயத்தில் வைராக்யம் வளர கருவியாக்கி, கருணை புரிகிறான்.

அதனாலும், மோக்ஷ பலனை விரும்பும் சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பாபங்களை மட்டும் போக்கிக் கொள்வதான சரணாகதி, சாஸ்த்திர விரோதம் ஏனெனில் அது உலக ஈடுபாட்டை

வளர்க்கும். பகவத் கைங்கர்ய ருசியை குறைக்கும். ஆக, அவ்வாறு கோரப்படும் சரணாகதி பலனளிக்காது.

4. ஒரு சரணாகதன் உலக பலனை விரும்பும் விஷயத்தில், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், ஒரு சிலருக்கு உலக பலன்களை கொடுக்காமல் இருந்து அவர்களுக்கு அதில் வெறுப்பை விளைவித்தும், ஒரு சிலருக்கு உலக பலன்களை அதிக அளவிலே கொடுத்தும் அதனாலே அதில் வெறுப்பை உண்டாக்கியும், எம்பெருமான் மரணத்திற்கு முன்பு, அந்த சரணாகதனின் உலக விருப்பத்தை போக்கி விடுகிறான், என்கிறது சாஸ்த்திரம்.

ஸ்வாமி தேசிகனின், நிர்யாண அதிகார வரிகள் இதனை தெளிவு படுத்தும்.

...சில ப்ரயோஜநான்தரங்களை கொடாதே கண்ணழித்தும் சிலவற்றிலே அல்ப அஸ்திரத்வ துக்க மிஸ்ரத்வாதி விவேகத்தாலே இவன் தனக்கு அருசியை விளைவித்தும்.....சில போகங்களை கொடுத்துத் தானே அலமந்துவிடப் பண்ணியும் விடுகையாலே மோக்ஷ காலம் குறித்து ப்ரபத்தி பண்ணினவனுக்கு அக்காலத்துக்குள்ளே ப்ரயோஜநான்தர வைமுக்யம் பிறந்து விடும்

அதனாலும், மோக்ஷ பலனை விரும்பும் சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பாபங்களை மட்டும் போக்கிக் கொள்வதான சரணாகதி, சாஸ்த்திர விரோதம் ஏனெனில் அது உலக ஈடுபாட்டை வளர்க்கும். பகவத் கைங்கர்ய ருசியை குறைக்கும். ஆக, அவ்வாறு கோரப்படும் சரணாகதி

ப்ரயோஜநான்தர வைமுக்யம் பெற தடையாகும்.

5. மோக்ஷத்திற்கு காலம் குறிக்காதே (அதாவது, தேக காலம் முடிவில் மோக்ஷத்தை கோராமல் செய்யும் சரணாகதி) அநுஷ்டித்தவர்களுக்கு, உலக விஷயங்களில் விரக்தி வரும் வரை, மோக்ஷ பலன் பெற கால தாமதம் ஏற்படும் என்பது உணர தக்கது.

அதோபாய ப்ரஸக்தோபி புக்த்வா போகனநாமயான் அந்தே விரக்திமாஸாத்ய விஷதே வைஷ்ணவம் பதம்

என்கிற ப்ரமாணப்படி

‘உலக அநுபவத்தில் ருசி கொண்டு அதற்கான செயல்களில் ஈடுபட்டிருக்கிற ஒரு சரணாகதன், அதிலுள்ள ஆசைகள் நீங்கி விரக்தி உண்டாகும் வரை, மோக்ஷ பலனுக்கு கால தாமதம் ஏற்படும்’.

அதனாலும், மோக்ஷ பலனை விரும்பும் சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பாபங்களை மட்டும் போக்கிக் கொள்வதான சரணாகதி, பலனளிக்காது.

6. ஒரு சிறந்த பெற்றோர், தனது மகனை உயர்ந்த கல்வி பெற வேண்டுமென விரும்புகின்றனர்.

அந்த மகன் படிப்பில் ஆர்வரமுள்ளவனாக இருந்தால், அவனுக்கு அந்த படிப்பு சம்பந்தமான பல புத்தகங்களை வாங்கிக் கொடுத்தும், மேலும் சில உயர்ந்த கல்வி வல்லுனர்களைக் கொண்டு பாடப் பயிற்சி அளிக்க வசதிகள் செய்து கொடுத்தும், அந்த மகனுக்கு தேர்வில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற உதவுகின்றனர்.

ஆனால், அந்த மகன் படிப்பில் ஆர்வமற்றவனாக இருந்தால், அந்த சிறந்த பெற்றோர், தன் மகனுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கியும், அவனுடைய ஆசைகளை நிறைவேற்ற மறுத்தும், அந்த மகனை தேர்வில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற உதவுகின்றனர்.

இரண்டும் பெற்றோரின் கருணையின் காரியமே.

அது போலவே, ஒரு சரணாகதன் சாஸ்த்திரத்தல் கூறியவற்றை உணர்ந்து உத்தக்ருத்யமாக செய்யும் போது, அந்த எண்ணங்களையும் செயல்களையும் மேன் மேலும் வளர்க்க ஸர்வேஸ்வரன் அருளுகிறான்.

ஆனால், அந்த சரணாகதன் உலக அநுபவத்திலேயே ஈடுபாடு கொண்டிருந்தால், அவன் அவர்களின் உலக இன்ப தேவைகளை நிறைவேற்றாமலும், மோக்ஷ ருசியை வளர்ப்பதற்கு காரணமாகிறான்.

ஆக, இரண்டும் ஸர்வேஸ்வரனின் கருணையின் காரியமே.

இதனால், ஸர்வேஸ்வரனால், துக்க கலப்பற்ற உலக ஸுகங்களை மட்டும் சரணாகதனுக்கு கொடுப்பது, உசிதமாகாது. சாஸ்த்திர விரோதமானது.

7. ஆக, மோக்ஷத்திற்காக அநுஷ்டிக்கும் சரணாகதியில், சரீர யாத்திரை முடியும் வரை இங்குள்ள காலம் புண்ய பலன்களைக் கொண்டு பாபங்களைப் போக்கிக் கொள்ள சரணாகதி அநுஷ்டிக்கலாம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

24. <u>ப்ரபத்திக்கு சம்சார பந்த ஹேதுவான ஸகல பாப நாசகத்வம் கூடுமோ?</u>

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

சரணாகதி என்கிற அநுஷ்டானம் ஒரு நொடியில் செய்வதாய் இருக்க, பல கோடி பிறவிகளுக்கு காரணமான பாபங்களைக் கொண்ட அந்த சரணாகதனின் பாபங்கள், அந்த அநுஷ்டானத்தாலே அழியுமோ, என்கிற சந்தேகம் கொண்டு சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ சாதனம் அன்று என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் சந்தேகிப்பர்.

1. சாஸ்த்திரம்,

ந புக்தம் க்ஷீயதே கர்ம

என்று, பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் விலகாது என்று கூறப்படுவதால், பல கோடி பிறவிகளுக்கு காரணமான பாபங்களைக் கொண்ட அந்த சரணாகதனின் பாபங்கள், அகல்கிறது என்பது பொருந்தாது என ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் கூறுவர்.

ஆக, **நடுவே வந்து உய்யக் கொள்கிற நாதனாகிய** ஸர்வ ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன், தன்னுடைய ஸர்வ சக்திமத்வம், கருணை ஆகிய குணங்களினால், தன் இச்சை அடியாக, இந்த சம்சாரி ஜீவர்களை கரை சேர்ப்பதே பொருந்தும் என, பூர்வபக்ஷிகள் கூறுவர். அதனால், சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ காரணமாகது என்பர் பூர்வபக்ஷிகள்.

இந்த கூற்று யுக்தி வாதம்; சாஸ்த்திர விரோதம். புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களில், அதாவது ஈஸ்வர இச்சை, மோக்ஷ உபாயம் போன்றவற்றில் சாஸ்த்திரமே கை விளக்கு; யுக்தி வாதம் முறை அன்று.

2. சரணாகதி

என்ற ஒரு செயல், தானே பலன் அளிக்க வல்லது அல்ல.

அந்த அநுஷ்டானத்தில், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், மனம் இரங்கி மோக்ஷத்திற்கு தடையான பாப புண்ய கர்மாக்களை விலக்குகிறான் என்பதே தாத்பர்யம்.

இதையே ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ பாஷ்ய ஆனுமானாதிகரணத்தில்,

தஸ்ய ச வசீகரணம் தத் சரணாகதிரேவ

என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை வசீகரிக்கும் விதமாக

மோக்ஷத்திற்கான வழியை விளக்குகிறார்.

இதையை, ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-14) கூறும் போது,

தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே

அதாவது,

‘என்னுடைய முக்குணங்களாலான ப்ரக்ருதி என்கிற மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்’

அதனால், பிறவிப் பிணி நீங்க எம்பெருமானின் திருவடிகளில் சரணம் அடைவதே உபாயம் என்பதாகிறது.

2. புண்யம் மற்றும் பாபம் என்ற சொற்களின் ஸாமான்ய விளக்கம்:

புண்யமாவது இந்த சம்சாரி ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்.

பாபமாவது இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்.

3. பாப புண்ய கர்மாக்களின் வகைகள்:

ஸஞ்சித கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை - இந்த கர்மாக்களின் பலன்கள் அநுபவித்து முடிய எத்தனை பிறவிகள் ஆகலாம் என கணிக்க முடியாத அளவிற்கு அதிகமானவை.

ப்ராரப்த கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பித்தவை - இந்த கர்மாக்களின் பலன்கள் முடிய ஒன்றோ அல்லது ஒரு சில பிறவிகளோ ஆகலாம்.

4. ஆக, எவ்விதமான பாபங்கள் உள்ளவர்களாக இருந்திலும், அதாவது எத்தகைய சீற்றம் சம்சாரி ஜீவர்களிடம் எம்பெருமானுக்கு இருந்தாலும், தன்னிடம் சரணம் என்று வந்தவர்களை அவன் கை விடுவதில்லை, என சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. அதையே,

கண்ணன் கீதையில், (18-66)

அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஷுச:

என்கிறான்.

அதாவது, நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

ஸ்ரீராமான், ஸ்ரீமத் ராமாயணத்தில்,

தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள

என்கிறான்.

அதாவது, 'விபீஷணன் தோஷமுள்ளவனாயினும், அவனது சரணாகதியை நான் ஏற்பேன்' - என்கிறான் சக்கரவர்த்தி திருமகன் சுக்ரீவனிடம்.

ஆக, சரணாகதி என்கிற அநுஷ்டானம் ஒரு நொடியில் செய்வதாய் இருக்க, பல கோடி பிறவிகளுக்கு காரணமான புண்ய பாங்களைக் கொண்ட அந்த சரணாகதனின் புண்ய பாபங்கள், அந்த அநுஷ்டானத்தாலே அழிகிறது, என ஸர்வேஸ்வரனின் திருவாக்கால், தெளியலாம்.

5. விஷ்ணு தர்மத்தில் சௌநக மகரிஷி,

துக்க சம்சார காந்தாரம் அபாரமிபிதாவதாம் ஏக: க்ருஷ்ண நமஸ்கரோ முக்தீரஸ்ய தேசிக:

என்கிறார்.

அதாவது, சம்சாரம் என்பதான எல்லை காண இயலாத கானகத்தில் ஓடியபடி உள்ளவர்களுக்கு, க்ருஷ்ணனை குறித்து செய்வதான நமஸ்காரம் என்பது, மோக்ஷம் என்பதான எல்லையை காணச் செய்யும்.

ஸம்ஹிதையில்,

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயா ஆத்ம நிவேதனம்

எனப் படுகிறது.

அதாவது, நமஸ்காரம் என்பதான ஆத்மசமபர்ப்பணத்தை யாரிடம் செய்து, தன்னுடைய துக்கம் அனைத்தும் நீங்கப் பெற்று, அடையவேட்டிய அனைத்தையும் அடைகின்றானோ அந்த ஸர்வேஸ்வரனை வணங்குகிறேன் – என்பதில் காணலாம்.

ஆக, சரணாகதி என்கிற அநுஷ்டானம் ஒரு நொடியில் செய்வதாய் இருக்க, பல பிறவிகளுக்கு காரணமான பாங்களைக் கொண்ட அந்த சரணாகதனின் பாபங்கள், அந்த அநுஷ்டானத்தாலே அழிகிறது, என சாஸ்த்திரம் கொண்டு, தெளியலாம்.

6. ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

குயோநிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா

என்கிறது.

அதாவது,

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவனாயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன்,

அவனை சம்சார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமளிக்கிறான்.

ஆக, சரணாகதி என்கிற அநுஷ்டானம் ஒரு நொடியில் செய்வதாய் இருக்க, பல பிறவிகளுக்கு காரணமான பாங்களைக் கொண்ட அந்த சரணாகதனின் பாபங்கள், அந்த அநுஷ்டானத்தாலே அழிகிறது, என தெளியலாம்.

7. ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில், சரணாகதன் விஷயத்தில், புண்ய பாபங்கள் நீங்கும் விதத்தை வர்ணிக்கிறார்.

ந புக்தம் ஷீயதே கர்ம என்கிற சாஸ்த்திர விதிப்படி, பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது.

ஆகையால், சரணாகதனுக்கு விலக்கப் பட்ட பாப புண்ய கர்மாக்களை அவர்கள் மோக்ஷத்தை அடையும் சமயத்தில், ஸர்வேஸ்வரன் அவர்களது புண்ய கர்மாக்களை அவர்களது

நண்பர்களிடமும் பாப கர்மாக்களை அவர்களது விரோதிகளிடமும் சேர்த்து விடுகிறான் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்கரிதம். விஸரிஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்கிறது மநு தர்ம சாஸ்த்திரம்.

அதாவது, மோக்ஷத்தை அடைபவன், அதன் பொருட்டு தன் தேகத்தை விடும் போது, புண்யங்களை தன் நண்பர்களிடமும் பாபத்தை தன் விரோதிகளிடமும் விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு எம்பெருமான் சரணாகதன் விஷயத்தில் ஸங்கல்பிக்கிறான்.

அதன் பிறகு அந்த சரணாகதன் பாப புண்ய கர்ம பந்தம் அற்று பரமபதத்தை அடைகிறான், என்கிறது சாஸ்த்திரம்.

8. ஆக, பல பிறவிகளுக்கு காரணமான பாபங்களைக் கொண்ட அந்த சரணாகதனின் பாபங்கள், அந்த அநுஷ்டானத்தாலே அழியுமோ, என்கிற சந்தேகம் கொண்டு சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ சாதனம் அன்று என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

25. <u>நியத் ஆய்ஸ் மற்றும் அநியத் ஆய்ஸ் - மேலும் கேள்வி</u>

நியத் ஆய்ஸ் மற்றும் அநியத் ஆய்ஸ் பற்றி சில கேள்விகள் மேலும் வந்தன:

அநியத் ஆய்ஸ் பற்றிய சம்சயம்.

சரணாகதனுக்கு அநியத் ஆய்ஸ் மோக்ஷமடைய தாமதத்தை உண்டு பண்ணுமா?

#. சரணாகதனுக்கு அநியத் ஆய்ஸ் மேலும் ஒரு கர்மக்ருதமான பிறவிக்கு காரணமாகுமா?

சரணாகதி அநுஷ்டிக்காதவன் விஷயத்தில், அவன் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை சரிவர அநுஷ்டித்து வந்திருந்தால், இந்த நியத் ஆய்ஸ் மற்றும் அநியத் ஆய்ஸ் எந்த விதத்தில் பாதிக்கும்?

1. முதலில், தேஹ அவஸானத்தில் மோக்ஷம் விரும்பி, த்ருப்த ப்ரபன்னனான ஒருவனின் நிலையில் தெளிவு வேண்டும்.

அதாவது,

நியத் ஆய்ஸ் மற்றும் அநியத் ஆய்ஸ் பற்றி சம்சயம் இல்லாமல் தெளிய வேண்டும்.

தேஹ அவஸானத்தில் மோக்ஷம் என்பதன் விளக்கத்தை உணர வேண்டும்.

சரணாகதனுக்கு, ப்ராயஸ்சித்த ப்ரபத்தி பண்ணப் படாத புத்தி பூர்வக அபசாரத்தினால், மோக்ஷமடைய கால தாமதம் என்பதன் பொருளை சாஸ்த்ரீயமாக உணர வேண்டும்.

2. ஸர்வேஸ்வரன், ஒவ்வொரு சம்சாரி ஜீவனுக்கும், சரீர சம்பந்தம் பெறும் காலத்தில் (பிறக்கும் போது), மரண கால விஷயத்தில், நியத் ஆய்ஸ் என்றோ அல்லது அநியத் ஆய்ஸ் என்றோ நிச்சயிக்கப் படுத்துகிறான். யார் நியத் ஆய்ஸ் உள்ளவர்கள் என்றும் அல்லது அநியத் ஆய்ஸ் உள்ளவர்கள் என்றும் இங்குள்ளவர்கள் அதை அறிய முடியாது.

நியத் ஆய்ஸ் என்பது சம்சாரி ஜீவனின் மரண காலம் நிச்சயிக்கப்பட்ட ஜீவித காலம். அந்த ஜீவித காலம் 30 வயதாகவும் இருக்கலாம்; 80 வயதாகவும் இருக்கலாம்; 90 வயதாகவும் இருக்கலாம்; அதற்கு பின் மரணம்; இங்குள்ளவர்கள் அதை அறிய முடியாது.

நியத் ஆய்ஸ் உள்ளவர்கள், ஸர்வேஸ்வரன் ஸங்கல்பப்படி, அவர்களது ப்ராரப்த கர்மாவில் உள்ள ஏகதேச பாப புண்யங்களை மரண காலம் நிச்சயிக்கப்பட்ட ஜீவித காலம் வரை அநுபவிப்பர்.

இது, சரணாகதன் மற்றும் சரணாகதன் அல்லாதவர் அனைவருக்கும் பொது.

சரணாகதர்கள் சரீர கால முடிவு வந்த உடன், மரணம் அடைந்தவாறே, பரமபதத்தை அடைவர். நியத் ஆய்ஸ் உடைய சரணாகதியை அநுஷ்டிக்காதவர், சரீர கால முடிவு வந்த உடன், தன் கர்மாவிற்கு ஏற்ப, வேறொரு பிறவியை அடைவர்.

3. அநியத் ஆய்ஸ் என்பது சம்சாரி ஜீவனின் மரண காலம் நிச்சயிக்கப்படாத ஜீவித காலம். இது பிறக்கும் போதே ஸர்வேஸ்வரனால் ஸங்கல்பிக்கப் படுகிறது. இங்குள்ளவர்கள் அதை அறிய முடியாது.

அநியத் ஆய்ஸ் உள்ளவர்களுக்கு ப்ராரப்த கர்மாவில் உள்ள, ஸர்வேஸ்வரனால் நிச்சயிக்கப் பட்ட, குறிப்பிட்ட பாப புண்யங்களை அநுபவிக்கும் வரை ஜீவித காலம் நீடித்திருக்கும். அதாவது, அந்த ஜீவித காலம் 30 வயதாகவும் இருக்கலாம்; 80 வயதாகவும் இருக்கலாம்; 90 வயதாகவும் இருக்கலாம்; அதற்கு பின் மரணம்; இங்குள்ளவர்கள் அதை அறிய முடியாது.

அவர்களுக்கு, பிறக்கும் போது மரண காலம் நிச்சயிக்கப்படாத போதிலும் குறிப்பிட்ட பாப புண்யங்களை அநுபவித்த பிறகே, ஜீவித காலம் முடியும் காலம், என்பது, ஸர்வேஸ்வரன் ஸங்கல்பத்தினால், உறுதி ஆகிறது. அதாவது, அந்த ஜீவித காலம் 30 வயதாகவும் இருக்கலாம்; 80 வயதாகவும் இருக்கலாம்; 90 வயதாகவும் இருக்கலாம்; அதற்கு பின் மரணம்; இங்குள்ளவர்கள், அந்த கால கணக்கை அறிய முடியாது.

இது, சரணாகதன் மற்றும் சரணாகதன் அல்லாதவர் அனைவருக்கும் பொது.

அநியத் ஆய்ஸ் உள்ள மோக்ஷத்திற்காக சரணாகதி அநுஷ்டித்தவர், குறிப்பிட்ட பாப புண்யங்களை அநுபவித்து இந்த சரீர கால முடிவு வந்த உடன் பரமபதத்தை அடைவர். அநியத்

ஆய்ஸ் உடைய சரணாகதியை அநுஷ்டிக்காதவர், மரணத்திற்கு பிறகு, தன் கர்மாவிற்கு ஏற்ப, வேறொரு பிறவியை அடைவர்.

4. சரணாகதன் தேஹ அவஸாநே மோக்ஷம் என ப்ரார்த்தித்து உள்ளான். அதாவது, தற்போது உள்ள சரீரத்திலிருந்து ஜீவன் வெளியேறும் போது, அதாவது மரணம் ஸம்பவித்தவுடன், மோக்ஷ பலனை விரும்பி சரணாகதி அநுஷ்டித்து இருக்கிறான்.

தேஹ அவஸாநம் (சரீர கால முடிவு) என்பது தற்போது இருக்கிற சரீரத்தை விட்டு ஜீவன் பிரியும் காலம். அதாவது மரண காலம். இது அநியத் ஆய்ஸ் மற்றும் நியத் ஆய்ஸ் உள்ளவர்களுக்கு பொது. அதாவது, இருவருக்கும் ஏதோ ஒரு வயதில், ஒரு காலத்தில், மரணம் சம்பவிக்கும் அன்றோ! இது ப்ரத்யக்ஷ ஸித்தம். அதுவே தேஹ அவஸானம் ; அந்த காலம் எது என்று இங்குள்ளவர்கள் அதை அறிய முடியாது.

அவ்வாறு, தேஹ அவஸாநம் (சரீர கால முடிவு), அதாவது மரணம் ஸம்பவித்தவுடன்,

அநியத் ஆய்ஸ் மற்றும் நியத் ஆய்ஸ் என்கிற பாகுபாடின்றி, இரு தரப்பட்ட சரணாகதர்களும் மோக்ஷத்தை அடைவர்; அவர்களுக்கு, கர்ம அநுகுணமான மறுபிறவி கிடையாது.

5. **அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்**

என்கிறது சாஸ்த்ரம்.

அதாவது, மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான ப்ராயசிதத்தை (பரிஹாரத்தை) உடனடியாக செய்ய வேண்டும். அப்படி பரிஹாரமாக செய்ய வேண்டிய செயல் என்ன என்றால் எம்பெருமானிடம் மன்னிப்பு கோருவதாகிய ப்ராயச்சித்த சரணாகதி ஆகும்.

ப்ராயச்சித்த சரணாகதி செய்யாத போது, இங்குள்ள காலத்தில் தண்டனை அநுபவிக்க நேரிடும், என்பது ப்ரமாணம்.

ஒரு சரணாகதனுக்கு, சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, ஒரு புத்தி பூர்வக அபசாரம் நேர்ந்து அதற்காக ப்ராயஸ்சித்த ப்ரபத்தி பண்ணவில்லை என்றால், அநுபவிக்க வேண்டிய தண்டனை காரணமாக, தேஹ அவஸாநம் (சரீர முடிவு காலம்), அதாவது மரண காலம், வளர்ந்து மோக்ஷமடைய கால தாமதம் உண்டோ என்பதற்கு பதிலாவது,

நியத் ஆய்ஸ் உள்ளவர்களுக்கு தேஹ அவஸாநம் (சரீர முடிவு காலம்) வளர்ந்து மோக்ஷமடைய கால தாமதம் கிடையாது; அந்த ப்ராயஸ்சித்தம் பண்ணப்படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனையை நிச்சயிக்கப் பட்ட மரண காலத்திற்குள் அநுபவிக்க நேரிடும்.

அநியத் ஆய்ஸ் உள்ளவர்களுக்கு தேஹ அவஸாநம் (சரீர முடிவு காலம்), ப்ராயஸ்சித்தம் பண்ணப்படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனையை அநுபவிப்பதற்காக, வளர்ந்து மோக்ஷமடைய கால தாமதம் ஏற்படலாம் (மரணமடைய காலம் நீடிக்கலாம்) அல்லது ஏற்படாமலும் போகலாம். ஆனால் அவர்களுக்கும் மரணம் ஸம்பவித்தவுடன் (தேஹ அவஸானத்தில்) மோக்ஷம் நிச்சயம் உண்டு என்பது ப்ரமாண ஸித்தம்.

6. இப்போது கேள்விகளுக்கான பதில்களைக் காண்போம்.

அநியத் ஆய்ஸ் பற்றிய சம்சயம் - விளக்கப் பட்டிருக்கிறது

சரணாகதனுக்கு அநியத் ஆய்ஸ் மோக்ஷமடைய தாமதத்தை உண்டு பண்ணுமா? - ப்ராயஸ்சித்தம் பண்ணப்படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனையை அநுபவிப்பதற்காக, மரணமடைய கால தாமதம் உண்டு பண்ணலாம்; ஆனால் அது நியமம் இல்லை

#. சரணாகதனுக்கு அநியத் ஆய்ஸ் மேலும் ஒரு கர்மக்ருதமான பிறவிக்கு காரணமாகுமா? - வேறொரு கர்ம க்ருதமான பிறவி, எக்காரணத்தினாலும், சரணாகதனுக்கு கிடையாது

சரணாகதி அநுஷ்டிக்காதவன் விஷயத்தில், அவன் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை சரிவர அநுஷ்டித்து வந்திருந்தால், இந்த நியத் ஆய்ஸ் மற்றும் அநியத் ஆய்ஸ் எந்த விதத்தில் அவனை பாதிக்கும்? - கர்ம அநுகுணமாக சரீர முடிவில் வேறொரு பிறவி உண்டாகும்; ஒரு விசேஷ ஸுக்ருதம் பலன் அளிக்கும் காலம் வரும்போது அவனுக்கு ஸதாசார்ய சம்பந்தமும் மோக்ஷ உபாய அநுஷ்டானமும் ஸித்திக்கும்

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

26. <u>பரதேவதா தெளிவுடைய ப்ரபன்னன் கர்ம ப்ரஷ்டனானாலும் பாகவதனே</u>

ஸ்ரீமந் நாராயணனே பரப்பொருள் என உணர்ந்து, அவனை அடைவதே பரம புருஷார்த்தம் என தெளிந்து, அதற்காக அவன் விதித்த சாஸ்த்திரப்படி மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்த சரணாகதர்கள், சாஸ்த்திரம் விதித்தவற்றை மற்ற அநுஷ்டானங்களை செய்யாமல் இருந்தாலும், அவர்களும் பாகவதர்களே, பெருமை உடையவர்களே

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

சரணாகதர்கள், சாஸ்த்திரம் விதித்தவற்றை செய்யாமல் சிறிது காலம் விலகி இருந்தாலும், அவர்களும் பாகவதர்களே, பெருமை உடையவர்களே, என நினைவில் கொள்ள வேண்டும்.

1. மோக்ஷத்திற்கான சரணாகதி அநுஷ்டானத்தை செய்து முடித்தவர்கள், இங்குள்ள காலம், சாஸ்த்திர விதிகளை மீறி, ஆகாரம் உட்கொள்வதிலோ, உலக வவிஷயங்களில் அதிக ஈடுபாடு உள்ளதாலோ அல்லது வேறு சில பழக்க வழக்கங்களினாலோ, சாஸ்த்திரம் விதித்தவற்றை மீறி சிறிது காலம் விலகி இருந்தாலும், அவர்களும் சரீர காலத்திற்கு பிறகு மோக்ஷத்தையே அடைவார்கள். ஆக, அவர்களை நிந்திக்கலாகாது, என ஸ்ரீமந் நாராயணனால் அருளப்பட்ட பாஞ்சராத்திதில் உரைக்கப் பட்டிருகிறது..

2. தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமாலையில்,

மொய்த்தவல் வினையுள் நின்று மூன்றெழுத் துடைய பேரால், கத்திர பந்து மன்றே பராங்கதி கண்டு கொண்டான், இத்தனை யடிய ரானார்க் கிரங்கும்நம் மரங்க னாய பித்தனைப் பெற்று மந்தோ. பிறவியுள் பிணங்கு மாறே

அதாவது, ஸர்வேஸ்வரனான் எம்பெருமான், சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில், ஒரு ஸதாசார்ய சம்பந்தத்தோடு எம்பெருமானின் திருவடிகளை பற்றி நிற்பவனுக்கு, மனம் இரங்கி மோக்ஷத்தை அளிக்கிறான்,

என அருளினார்.

இவ்வாறு ஆழ்வார்கள், பகவானின் மேன்மையால், சரணாகதர்களின் உயர்த்தியை உரைக்கும் போது, சரணாகதர்கள், சாஸ்த்திரம் விதித்தவற்றை செய்யாமல் சிறிது காலம் விலகி இருந்தாலும், அவர்களை நிந்திக்கலாகாது.

3. மேலும், தீய வழிகளை மேற்கொள்பவர்களை சாஸ்த்திரம் கண்டிப்பதை சரணாகதன் விஷயத்தில் கூறலாகாது:

யாக்ஞ்யவல்க்யர் ஸ்ம்ருதியால்,

டம்பி ஹைதுக பாஷண்டி பகவத் வ்ருத்தீச்ச வர்ஹயேத்

என்கிறது.

அதாவது, மற்றவர்கள் கொண்டாட வேண்டி தர்ம காரியங்களைச் செய்பவனும், வேத ஆதாரத்தை ஒத்துக் கொள்ளாமல் தன் அறிவைக் கொண்டு புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை வாதிடுபவனும் (ஹைதுகர்), ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை, மற்ற ப்ருஹ்மா, ருத்ரன், பிள்ளையார், முருகன் போன்ற தாழ்ந்த தேவதைளுக்கு சமமாக நினைப்பவனும் (பாஷாண்டி), வஞ்சனையில் தான் நினைத்தவற்றை அடைய விரும்புபவனையும் கொடியவர்களாக சாஸ்த்திரம் வர்ணிக்கிறது.

இவர்களைப் போல, மோக்ஷத்தை விரும்பி இருக்கும் சரணாகதர்களை, சாஸ்த்திரம் விதித்தவற்றை செய்யாமல் சிறிது காலம் விலகி இருந்தாலும், நிந்திக்கலாகாது.

ஸ்ரீ பராசர மஹரிஷி விஷ்ணு புராணத்தில்,

பும்ஸாம் ஜடாபரண மௌண்டடயவதாம் வ்ருதைவ

என அருளியருக்கிறார்.

அதாவது, ஜடை முடியோடு அல்லது மொட்டைத் தலையோடு இருக்கிறவனும், திருவாராதனம் செய்யாது உண்பவனும், பேசத் தகுந்தவர்கள் அல்ல, என்கிறார் பராசரர்.

இவர்களைப் போல, மோக்ஷத்தை விரும்பி இருக்கும் சரணாகதர்களை, சாஸ்த்திரம் விதித்தவற்றை செய்யாமல் சிறிது காலம் விலகி இருந்தாலும், நிந்திக்கலாகாது.

4. ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே பரம் பொருள் என்கிற தெளிவான ஞானமும், அவனை அடைவதற்கு உண்டான வழிகளில் தெளிந்த நிஷ்டையும் உடையவன், நெற்றியில் திருமண் இடாமல் இருப்பதும், பகவந் நாமத்தை தன் பெயராக கொள்ளததும், உபதேச மந்த்திரங்களை ஜபிக்காததும், இவனை நிந்திக்க காரணமாகாது ஏனெனில், இறுதியல் ஏதேனும் ஒரு உபாயத்தில் ஸர்வேஸ்வரன் அவனை மூட்டி அவனுக்கு மோக்ஷத்தை அளித்து விடுகிறான் அந்த எம்பெருமான்.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (2-40)

நேஹாபி க்ரம நாஸ்தோதி ப்ரத்யவாயோ ந வித்யதே, ஸ்வல்ப்பம் அப்யஸ்ய தர்மஸ்ய த்ராயதே மஹதோ பயாத்

என்று மோக்ஷத்திற்காக அநுஷ்டிக்கப் படும் பக்தி யோகத்திற்கு அங்கமான கர்ம யோகத்தை பாதியில் விடுபவனுக்கு, எந்த ஒரு கெடுதலும் விளையாது; மேலும் ஒரு காலத்தில், மோக்ஷ சாதனமான யோகத்தின் தொடர்ச்சி கை கூடும், என கண்ணன் அருளிகிறான்.

ஆனால், மற்ற வைதீக கர்மாக்களை பாதியில் விடுவதற்கு சாஸ்த்திரங்கள் பலவாறான தண்டனைகளை விதிக்கிறது.

ஆக, மோக்ஷத்திற்காக செய்யும் அநுஷ்டானம், (பக்தி யோகமோ அல்லது சரணாகதி அநுஷ்டானமோ), உயர்ந்தது, என அறிய வேண்டும்

மேலும், பகவத் கீதையில் (9-30) கண்ணன்,

அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்ய பாக். ஸாதுரேவ ஸ மந்தவ்ய:ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:

அதாவது,

‘ஆசாரக்கேடு உடையவனாயினும் என்னையை ஸர்வமும் என்று என்னை பஜித்தானேயானால், அவன் சிறந்த ஸ்ரீவைஷ்ணவன். அனைவராலும் கௌரவிக்க தக்கவன்’ என கண்ணன் அருளிகிறான்.

மோக்ஷத்தை விரும்பி அநுஷ்டானங்களை செய்பவர்கள், சாஸ்த்திரம் விதித்தவற்றை செய்யாமல் சிறிது காலம் விலகி இருந்தாலும், அவர்களை நிந்திக்கலாகாது, எனத் தெரிகிறது.

மஹாபாரதத்தில், வேதவ்யாஸர் அருளும் போது,

அபி பாபேஷ்வபிரதா மத்பக்தா: பாண்டு நந்தன முச்யந்தே பாதகை: ஸர்வை: பத்மபத்ரமிவாம்பஸா

என்கிறார்.

அதாவது, பாண்டு புத்திரனே! என்னையே சரணமாக பற்றினவர்களுக்கு தாமரை இலை தண்ணீர் போல் பாபங்கள் ஒட்டுவதில்லை, என்கிறான் பகவான்.

5. பகவத் ராமானுஜர், தன் சீடர்களுக்கு காலக்ஷேபம் அருளிக் கொண்டிருக்கும் போது, ஒரு பண்டிதர், (ஸகல சாஸ்த்திரங்களையும் கற்றவர்), தன் உணவின் பொருட்டு பிக்ஷைக்காக அங்கு தினந்தோரும் வந்து நிற்பார். அவருக்கு தன் சீடர்களைக் கொண்டு பிக்ஷை அளித்து வந்தார் ஸ்ரீ ராமானுஜர்.

அதே போல், அதிக சாஸ்த்திர அறிவு இல்லாத ஒரு அந்தணன், பிக்ஷைக்காக அவர் வாயிலில் தினந்தோரும் வந்து நிற்பார். அவருக்கு ஸ்ரீ ராமானுஜர் தானே சென்று பிக்ஷை அளித்து நமஸ்கரிப்பது, அவருக்கு வழக்கமாக இருந்தது.

அவரது சீடர்களுக்கு ஆச்சர்யம்.

கற்றறிந்த பண்டிதர் விஷயத்தில் ஸ்ரீ ராமானுஜர், பெரிதாக கௌரவ புத்தியைக் காட்டாமல் இருக்க, அதிக சாஸ்த்திர அறிவு இல்லாத ஒரு அந்தணன் விஷயத்தில் அதிகமான கௌரவ புத்தியைக் காட்ட காரணம் தெரியாது திகைத்தனர்.

ஸ்ரீராமானுஜரை அந்த சீடர்கள் வினவினர். அதற்கு ஸ்ரீ ராமானுஜர் பதில் உரைக்கவில்லை.

மறு தினம், அந்த பண்டிதர், பிக்ஷைக்காக வரும் போது, அவரை தனது இருப்பிடத்துற்கு அழைத்து வரச் சொல்லி, அவருக்கு ஆசனம் கொடுத்து, ஒரு கேள்வியைக் கேட்டார்.

‘மனிதரால் ஆராதிக்கப் படும் தெய்வங்களுக்குள் உயர்ந்த தெய்வம் எது?

எந்த தெய்வத்தை ஆராதிக்க

காரணம் து த்யேய: (உலகிற்கு காரணம் யாரோ அவனையே த்யானிக்க வேண்டும்)

என உபநிஷத் உத்தரவிடுகிறது?

என வினவினார் ஸ்ரீ ராமானுஜர்.

அந்த பண்டிதரின் பதிலைக் கண்டு சீடர்கள் அதிர்ந்து நின்றனர்.

‘பல சாஸ்த்திரங்கள், உயர்ந்த தெய்வம் எது என்பதை பலவாறாக கூறுவதால், அதை அறுதியிட்டு கூறலாகாது’ என அந்த பண்டிதர் பதில் அளித்தார்.

சிறிது காலம் கழித்து, அதிக சாஸ்த்திர அறிவு இல்லாத பிக்ஷை வாங்க வந்த அந்த அந்தணனிடம்,

‘மனிதரால் ஆராதிக்கப் படும் தெய்வங்களுக்குள் உயர்ந்த தெய்வம் எது?

என வினவினார் ஸ்ரீ ராமானுஜர்.

இப்போது, அந்த அந்தணர் அதிர்ந்து நின்றார்.

கையில் வாங்கிய பிக்ஷையை கீழே போட்டார்.

பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணனை அறியாத ஒருவரிடம், தான் இது காலம் பிக்ஷை வாங்கி உண்டு சரீரத்தை வளர்த்ததைக் கூறி கலங்கினார்.

சீடர்களுக்கு விவரம் புரிய வந்தது.

பரம்பொருளை அறியாத சாஸ்த்திர ஞானம் உபயோகமற்றது.

அவ்வாறு இருப்பவரிடம் உள்ளவர்களின் சம்பந்தம் வெறுக்கத் தக்கது, என உணர்ந்தனர் அந்த சீடர்கள்.

6. இவ்வர்த்தத்தையே, பெரிய திருமொழியில், ஸர்வேஸ்வரனானா ஸ்ரீமந் நாராயணனிடத்தில் ஸர்வ சாஸ்த்ர அர்த்தத்தையும் கேட்டு அறிந்த, திருமங்கையாழ்வார்,

மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு உற்றிலேன் உற்றதும் உன் அடியார்க்கு அடிமை மற்றெல்லாம் பேசிலும் நின் திரு வெட்டெழுத்தும் கற்று நான் கண்ண புரத் துறை யம்மானே

என்கிறார்.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை விடுத்து மற்ற தெய்வம் உண்டு என கூறுபவர்களின் சம்பந்தமே எனக்கு தேவையில்லை, ஆனால் பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணனை நன்கு உணர்ந்த அடியார்களே எனக்கு ஸ்வாமியாக கருத தக்கவர்கள், என அருளுகிறார்.

இவ்வாறு ஆழ்வார்,

‘ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் மட்டுமே தனக்கு ஸ்வாமி’

என்கிற உணர்வோடு இருக்கும் சரணாகதர்களின் உயர்த்தியை உரைக்கும் போது, சரணாகதர்கள், சாஸ்த்திரம் விதித்தவற்றை செய்யாமல் சிறிது காலம் விலகி இருந்தாலும், அவர்களை நிந்திக்கலாகாது, என்பதை தெளிய வேண்டும், என்பதாகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

27. <u>பகவத் அபசாரத்தில் பாகவத அபசாரம் அந்தர்கதமா?</u>

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

சரணாகதர்கள், செய்யக் கூடாதவற்றில் முக்கியமாக பாகவத அபசாரம் என கூறப்படுகிறு; ஆனால் செய்யக் கூடாதவற்றில் பகவத் அபசாரம் என உரைத்தாலே, அதில் பாகவத அபசாரமும் சேர்ந்ததே, என சிலர் எண்ணலாம்.

1. பகவத் அபசாரம் என்கிற சொற்களினால் அறியப் படுவதாவது:

எம்பெருமானை தேவதாந்தரங்களோடு சமமாக நினைப்பது – பிரமன், சிவன், இந்த்ரன், வருணன், சூர்யன், அக்நி, பிள்ளையார், முருகன் போன்றவர்களை எம்பெருமானுக்கு சமமானவனாக நினைப்பது

ஸ்ரீ ராம க்ருஷ்ணா அவதாரங்களை மானிடப் பிறவி என்றோ அல்லது உயர் மானிடர் என்றோ எண்ணுவது

வர்ண ஆச்ரமக் கட்டுகளை அவமதித்தல்

எம்பெருமானின் அர்ச்சா ரூபத்தை உலோகத்தால் ஆனதாக கருதி அவமதிப்பது

பகவத் த்ரவ்யத்தை அபஹரித்தல்

இதுபோல் சாஸ்த்ரம் மறுத்த பல செயல்கள்.

ஆக, எம்பெருமானின் திரு உள்ளத்திற்கு சீற்றம் உண்டாக்கும் செயல்கள் அனைத்தும் ‘பகவத் அபசாரம்’ என தெளியலாம்.

2. ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (7-17)

தேஷாம் க்ஞானி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞானிநோர்த்யர்தமஹம் ஸ ச மம ப்ரிய:

அதாவது,

‘என்னை பஜிப்பவர்களுக்குள் ஞானி என்பவன் எனக்கு பிரியமானவன். ஏனெனில் அவன் என்னுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்’ என சொல்லப் பட்டிருக்கிறது.

இப்படி இருக்க, எம்பெருமான் திருவடியையே அனைத்துமாக கருதும் ஞானியான பாகவதர்களிடம் கொள்ளும் அபசாரமும், எம்பெருமானின் திரு உள்ளத்திற்கு சீற்றம் உண்டாக்கும் என்பதால், பகவத் அபசாரம் என்று சொல்லுமிடத்தில் பாகவத அபசாரமும் சேர்ந்ததே, அதை தனித்து கூறவும் வேண்டுமோ, என்பர் சில வைணவர்.

3. ஸ்ரீ ராமானுஜர், தான் அருளிய சரணாகதி கத்யத்தில்,

பகவத் அபசார பாகவத அபசார அஸஹ்யா அபசார ரூப நாநா வித அபசாரான்

அதாவது, செய்யக் கூடாத அபசாரங்களை வகைப் படுத்தி, பகவத் அபசாரம் என்றும் பாகவத அபசாரம் என்றும் பிரித்து அருளி இருக்கிறார்.

இதனால், பாகவத அபசாரம் செய்யக் கூடாதவையில் மிக முக்கியமானது என விளக்க வந்ததாக கருத்தில் கொள்ள வேண்டும்.

இதற்கு கோபலி வர்த்தன ந்யாயம் எனப் பெயர்.

கோ என்கிற பதம் பசு மற்றும் காளை ஆகிய இரண்டையுமே குறிக்கும் பொதுவான மாட்டைக் குறிக்கும் பதமாகும்.

ஆனால் பலிவர்தனம் என்பது காளையைக் குறிக்கும்.

மாட்டுக்களை ஓட்டிவா! காளையைக் கூட்டி வா! என பணித்தால் கோ என்கிற பொதுவான பதத்தை கூறிய பிறகு, பலிவர்தனம் என காளையைத் தனியாக கூறுவதற்கு காரணம், அந்த சந்தர்பத்தில், காளை முக்கியமாகிறது எனக் காட்டவே.

அது போல பகவத் அபசாரத்தில், பாகவத அபசாரமும் சேர்ந்திருந்தாலும், பாகவத அபசாரம் கொடியது எனக் காட்டவே, அதை பிரித்து அருளுகிறார், என அறிய தக்கது.

4. பாகவத அபசாரம் கொடுமையானது என்பதை , வேத வ்யாஸரால் உபதேசிக்கப் பட்ட, உபநிஷத் விளக்கமான, ப்ருஹ்ம ஸூத்ரத்தில் ,

ஏவம் முக்தி பலா அநியம: தத வஸ்தா அவத்ருதே தத வஸ்தா அவத்ருதே (3ம் அத்யாயம் 4ம் பாதம் 15வது அதிகரணம் 51ம் ஸூத்ரம்)

அதாவது, பாகவத அபசாரம் இருக்குமேயானால், அது தீரும் வரை பக்தி யோகம் தடை பட்டிருக்கும் என்று உபாஸகனுக்கு கூறப்படுகிறது.

அவ்வளவு கொடியது பாகவத அபசாரம், என்பது உணரத் தக்கது.

5. பாகவத அபசாரம் அதாவது ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளில் மோக்ஷார்த்தமாக சரணம் புகுந்து, திவ்ய தம்பதிகளின் திருவடிகளையே அனைத்துமாக கருதும் பாகவதர்களின் திரு உள்ளம் வருந்தும் படி உள்ள செயல், என்பது ராஜ தார அபசாரம் போன்றது என ஸ்வாமி தேசிகன் அருளியிருக்கிறார்.

அரசனிடம் ஏற்படும் அபசாரத்தை விட கொடியதல்லவா, அவன் பத்நியான அரசியடம் படும் அதசாரம்?

ஆக, மற்ற பகவத் அபசாரத்தை விட கொடியது பாகவத அபசாரம். அதனாலேயே பாகவத அபசாரத்தை பகவத் அபசாரத்திலிருந்து பிரித்து உரைக்கப் படுகிறது.

6. பாகவதர் என்பதற்கு இலக்கணத்தை சரிவர உணர வேண்டும்:

பெரிய பிராட்டியோடு கூடிய ஸ்ரீமந் நாராயணனை பரம் பொருளாகக் கொண்டவர்கள்; தவிர வேறு தேவதைகளை உயர்வாக மனதால் எண்ணுவதைக் கூட தகாதது, என்கிற தெளிவான ஞானம் உடையவர்கள். ஆக, தேவதாந்திர சம்பந்தம் அடியோடு இல்லாமல் இருப்பவர்கள்.

சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட மோக்ஷ உபாயமான சரணாகதி அநுஷ்டானத்தை சரிவர அறிந்து, அதன் அங்கங்களோடு ஒரு ஸதாசார்யனை முன்னிட்டு அநுஷ்டித்தவர்கள்.

வேத மார்க்கமான நம் பூர்வாசார்யர்களின் வழிகளையே பின்பற்றி நடப்பவர்கள்; அதை மாற்றி அமைக்க முயலாதவர்கள்.

7. அவ்வாறு உள்ள பாகவதர்களின், பிறப்பை குறித்தோ அல்லது அவர் வசிக்கும் இடத்தை குறித்தோ அல்லது அவரது உருவத்தை குறித்தோ சொல்லும் சொற்கள், வ்யக்தி தூஷணம் ஆனபடியால் அவை அனைத்தும் பாகவத அபசாரத்திற்கு காரணமாகின்றன.

தன்னைப் பிற பாகவதர்களை விட தாழ்வாக நினைப்பதே நன்னெறி, அதையே கார்ப்பண்ய அநுஸந்தானமாக வேண்டுமென ஸ்வாமி தேசிகன் அருளியிருக்கிறார்.

பாகவத அபசாரத்திற்கு உள்ள தனித் தன்மையை விளக்க வந்த சிலவற்றை பார்ப்போம்.

சாண்டிலீ என்றவள் மிகுந்த ஞானமும் அநுஷ்டானமும் உடைய பாகவதோத்தமை. அவள் கடல் நடுவே ஒரு தீவில் வசித்து வந்தாள்.

ஒரு சமயம், காவலர் என்பவரும் , அவருடைய மருமானான கருடனும், வருண லோகம் செல்லும் வழியில், இவளது ஆஸ்ரமத்தில் ஓர் இரவு தங்கினர் . இவளது உபசரிப்பை கண்ட கருடன் தன் மனதில் , “இவள் இங்கிருப்பது அவளுக்கு தகுந்த இடமாக ஆகாது. இவளை நாம் யக்ஞ யாகாதிகள் நடக்கும் பவித்ரமான இடத்தில் கொண்டு விட்டு விடுவோம்’ என எண்ணினார்.

மறு நாள் தன் சிறகுகள் அனைத்தும் உதிர்ந்து நிற்பதை கண்டு, தான் எண்ணியதன் விளைவாகவே இது ஏற்பட்டதாக உணர்ந்து அவளிடம் மன்னிப்பு கோரினார் கருத்மான்.

ஆகவே, நித்யஸூரிகளாக உள்ளோருக்கும், இங்கு அவதார காலத்தில், இம்மாதிரி அஹங்காரம் (ஸாத்வீகமாக இருந்தாலும்) ஏற்படுமேயானால், அதற்கு மன்னிப்பு, தண்டனை போன்றவைகள் தவிர்க் முடியாது என அபிநயித்து காட்டினார் நித்ய ஸூரியான கருத்மான்.

ஆக, பரமனைப் பற்றிய தெளிவான ஞானமும், அதற்கேற்ற அநுஷ்டானமும் உடையவர்களை பாகவதர்கள் என்று போற்றியும், அவர்கள் இருப்பைக் கொண்டு, தாழ்வாக நினைக்கலாகாது, என்பது அறியத் தக்கது.

தொண்டரடிப்பொடி ஆழ்வார், திருமாலையில்,

அமரவோ ரங்க மாறும் வேதமோர் நான்கு மோதி, தமர்களில் தலைவ ராய சாதியந் தணர்க ளேலும், நுமர்களைப் பழிப்ப ராகில் நொடிப்பதோ ரளவில், ஆங்கே அவர்கள்தாம் புலையர் போலும் அரங்கமா நகரு ளானே

என அருளினார்.

அதாவது, பாகவதர்களை தூஷிப்பதால் வேதம் கற்ற்றிந்த அந்தணனும் சண்டாளனாகிறான், என்று பாகவதர்களின் மேன்மையை விளக்குகிறார்.

ஆக, சரணாகதனை, உகந்து பணி கொள்ளும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திருவுள்ளம் சீற்றம் கொள்ளாமல் இருக்க, புலன்களால் செய்யக் கூடாதவற்றில் மிக முக்கியமானது பாகவத அபசாரம் என ஸ்வாமி தேசிகன் அருளியிருக்கிறார்.

ஒரு முறை நிறைய முனிவர்கள் சேர்ந்து கங்கைக் கரையில் ஒரு யாகம் நடத்தினர்.

அங்கு வந்த நாரதர் அந்த யாகம் எந்த தேவதைக்காக நடத்தப்படுகிறது என்ற கேள்வியை எழுப்பினார்.

அதுவரை அதைப் பற்றி யோசிக்காத முனிவர்கள் அந்த உயர்ந்த தேவதை யார் என்று முடிவு செய்யும் பொறுப்பை ப்ருகு முனிவரிடம் ஒப்படைத்தனர்.

அவரும் ஸகல லோகத்திற்கும் சென்று விடை கிடைக்காமல், திருமாலிடம் சென்றார்.

திருமால் திருமகளுடன் ஆனந்தமாக இருந்தார்.

ப்ருகு முனிவர் வரவை கவனியாமல் இருந்தார். கோபம் வந்த ப்ருகு முனிவர் திருமாலின் மார்பில் காலால் எட்டி உதைத்தார்.

உடனே எழுந்த மாஹா விஷ்ணு, ப்ருகு முனியின் பாதங்களைப் பற்றி என்னை உதைத்ததில் உங்கள் கால் வலித்திருக்குமே என்று பிடித்து விட்டார்.

அதனால் முனிவர் திரும்பி சென்று யாகத்தின் பிராசதத்தை, ஸாத்வீக தேவதையான, விஷ்ணுவிற்கே அளிக்கவேனண்டும் என்று எடுத்துரைத்தார்.

க்நந்தம் சபந்தம் புருஷம் வதந்தம் யோ ப்ராம்மணம் ந ப்ரணமேத்யதா அஹம் ஸ பாபக்ருத் ப்ரும்மதவாக்நிதத்தோ வக்யஸ்ச தண்டயஸ்ச ந சாஸ்மதீய:

என்கிறது இதிஹாஸ ஸமுச்சயம்.

அதாவது, ‘ஓர் பாகவதன், காரணமின்றி அடித்தாலும், தகாத சொற்களை கூறினாலும், அந்த பாகவதனை சரணாகதன் நான் ப்ருகு முனிவைரை வணங்கியது போல் வணங்க வேண்டும்’

எனகிறான் எம்பெருமான்.

8. சரணாகதர்கள் செய்யக் கூடாதவற்றில் ‘பகவத் அபசாரம்’ என உரைத்தாலே, அதில் பாகவத அபசாரமும் சேர்ந்ததே என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

28. பாகவத அபசாரம் - 12 வகை

1. ஆசார்ய வைபவம் என்கிற நூலில் புரிசை ஸ்ரீ. உ. வே. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி, 221ம் பக்கத்தில், எது பாகவத அபசாரம் என்பதனை அருளியுள்ளார்; அந்த வரிகளாவது:

நம்பிள்ளை காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு எழுந்தருளியிருந்த போது பாகவத அபசாரம் பற்றிய ப்ரஸ்தாவம் வந்தது. அப்பொழுது பிள்ளை அதைப்பற்றி பரக்க உபந்யஸித்தார். பாகவத அபசாரம் பன்னிரெண்டு வகைப்படும்

அதன் விளக்கமாவது:

ஜன்மத்தைப் பற்றி பேசுவது - பாகவதர்களின் பிறவியை விமர்சிப்பது; அதாவது, குலம், கோத்திரம் போன்றவற்றை விமர்சிப்பது.

சரீரத்தைப் பற்றி பேசுவது - பாகவதர்களின் சரீர அமைப்பை விமர்சிப்பது; அதாவது, உயரம், நிறம் போன்றவற்றை விமர்சிப்பது.

பாக நிரூபணம் - பாகவதர்களின் தன்மைகளை விமர்சிப்பது; அதாவது, வாக்கு, செயலாற்றும் தன்மைகள் போன்றவற்றை விமர்சிப்பது.

ஆஸ்ரமத்தைச் சொல்லுவது - பாகவதர்களின் வர்ணாஸ்ரம நிலையை விமர்சிப்பது; அதாவது, அவர்களது வர்ண ஆஸ்ரமங்களுக்கு ஏற்ற அநுஷ்டானம் அவர்களிடம் இல்லை என்பது போல விமர்சிப்பது.

அவயவத்தைப் பற்றி பேசுவது - பாகவதர்களின் அங்க குறைபாடுகளை விமர்சிப்பது; அதாவது, அவர்களை நொண்டி, செவிடு, குருடு போன்ற புலன் விஷயத்தில் உள்ள குறைகளானவற்றை விமர்சிப்பது.

ஆலஸ்யத்தைப் பேசுவது - பாகவதர்களின் உடல் சோர்வை விமர்சிப்பது;

இருப்பிடத்தைப் பற்றிச் சொல்லுவது - பாகவதர்களின் ஜாகையை விமர்சிப்பது; அதாவது, அவரது இருப்பிடத்தின் சுற்றம் சூழல் போன்றவற்றை விமர்சிப்பது.

பந்துக்களைப் பற்றி பேசுவது - பாகவதர்களின் உறவினர்களை விமர்சிப்பது.

ப்ரகாச நிரூபணம் - பாகவதர்களின் ஞானத் தெளிவை விமர்சிப்பது; அதாவது, சிஷ்யர்களுக்கு அவர்களது வித்யா தானம் பண்ணும் முறை போன்றவற்றை விமர்சிப்பது.

ப்ரகார நிரூபணம் - பாகவதர்களின் ஞான சம்பாத்யத்தை விமர்சிப்பது; அதாவது, அவர்கள் ஞானத்தை க்ரஹித்த விஷயத்தில் குறை கூறுவது.

வர்த்தன நிரூபணம் - பாகவதர்களின் இருப்பை விமர்சிப்பது; அதாவது, அவர்கள் நடை உடை பாவனைகளை விமர்சிப்பது.

தோஷ நிரூபணம் - பாகவதர்களின் சாம்சாரிக குற்றங்களை விமர்சிப்பது; அதாவது, அவர்களது கோபம் மற்றும் அதனால் உபயோகப் படுத்தும் கடுஞ் சொற்கள் போன்றவற்றை விமர்சிப்பது.

2. பாகவத லக்ஷணத்தை ஸ்வாமி தேசிகன், **ப்ரபாவரக்ஷா அதிகாரத்தில்** மூன்று லக்ஷணங்களைக் கொண்டு, தெளிவு படுத்தியுள்ளார்:

நம் தர்சனத்திலே நிலை உடையவராய், முமுக்ஷுக்களாய், கர்ம-ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே பகவத் ப்ரவணர்க்கு...

அதாவது,

நம் தர்சனத்திலே நிலை உடையவராய் - ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி தேசிக க்ரந்த வழியிலே, தத்வ-ஹித-புருஷார்த்த விஷயங்களை க்ரஹித்து, அதில் சிறிதளவும் மாற்றமின்றி விஷய தானம் செய்வதும் முதல் லக்ஷணம்; இதை மீறுபவர்களுக்கு பாகவத லக்ஷணமே ஸித்திக்காது என்பது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம், என அறியலாம்.

இக்காரணத்தினால், சோழ மன்னன் முன்பு தன் கண்களையே பரி கொடுத்து, நம் தர்சனத்திலே நிலை உடையவராய் இருந்து, வழி காட்டியவர் கூரத்தாழ்வான் என்பது மனதில் பதிய வேண்டும்.

முமுக்ஷுக்களாய் - மோக்ஷ இச்சை உடையவர்களாய் இருப்பது இரண்டாவது பாகவத லக்ஷணம்.

கர்ம-ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே - மோக்ஷ உபாயமான சரணாகதி அநுஷ்டித்திருத்தல், மூன்றாவது பாகவத லக்ஷணம். மோக்ஷ உபாயமாக சரணாகதி அநுஷ்டிக்காதவர்களுக்கு பாகவத லக்ஷணமே ஸித்திக்காது என்பது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம், என அறியலாம்.

3. இந்த ஸம்ப்ரதாய ப்ரமாணங்களை மீறி, அவரவர்கள் ஸௌகர்யத்திற்கு, பாகவத அபசாரம் என ஸம்ப்ரதாய பாமரர்களுக்கு பயம் ஏற்படுத்துவது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

29. ஜீவர்களின் செயல்களில் அந்தர்யாமியான எம்பெருமானின் பங்கு

1. செய்ய வேண்டிய செயல்கள் அனைத்தும் ஐவரால் செய்யப் படுகின்றன என்று விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதை (18-14) ஸ்லோகத்தில்.

அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம். விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்

அதாவது,

‘ஸகல செயல்களுக்கும் காரணங்கள் ஐந்து :

 # ஆத்மா

 # உடல்

 # இந்த்ரியங்கள் (மனம் உள்பட)

 # ப்ராணன்

 # பரமாத்மா

- என்கிறான் கண்ணன்.

2. அனைத்து ஜீவர்களும் சாஸ்த்ரத்திற்கு உட்பட்டே செயல் பட ஸ்வதந்தரம் உள்ளவர்கள். அதனால், சாஸ்த்ரத்தில் விதித்த படி நித்ய நைமித்திக வைதீக கர்மாக்களை செய்ய வேண்டும்; மோக்ஷத்தையே விரும்புகிறவன், உபாயத்தை, ஸாத்வீக த்யாகத்துடன் செய்ய வேண்டும் என்பதை கண்ணன் பலவாறாக விவரித்துள்ளான்.

3. சாஸ்த்ரங்களில், ஜீவர்களுக்கு செயல் புரிய தன்மை உண்டு என்று சில இடங்களிலும், செயல் புரிய தன்மை இல்லை என்றும் சில இடங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. இது முரண்பாடு அல்ல; இது வரையறையை காட்டுகிறது என்பதை கண்ணன் விளக்கி வருகிறான்.

ஜீவர்களுக்கு பூரண ஸ்வதந்தரம் இல்லாமல் ஸர்வேஸ்வரனான கண்ணனால் கொடுக்கப் பட்ட ஸ்வதந்தரம் ஜீவர்களுக்கு இருப்பதினால், சாஸ்தரங்கள் ஜீவர்களை செயல் புரியும் தன்மை அற்றவன் (அதாவது பூரண ஸ்வதந்தரத்தினால் செயல் புரியும் தன்மை அற்றவன்) என்று கூறுகிறது.

அதாவது, அவரவர்களின் பாப புண்ய கர்மாக்களின் அடிப்படையில், ஸர்வேஸ்வரனான கண்ணனால் கொடுக்கப் பட்ட சரீரம், ஸத்வம் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய குணங்களால் ஆனவை; அவைகளைக் கொண்டு செயல்களை செய்கிற படியால், ஜீவர்களை பூரண ஸ்வதந்தரத்தினால் செயல் புரியும் தன்மை அற்றவன் என்கிறது சாஸ்த்ரம்.

ஜீவர்களுக்கு, அவரவர்களின் கர்மாவின் அடிப்படையில், ஸர்வேஸ்வரனான கண்ணனால் கொடுக்கப் பட்ட ஞானத்தைக் கொண்டு, ஆசை, முடிவெடுக்கும் தன்மை, முயற்சி போன்றவைகள் அவர்களிடம் இருப்பதால், ஜீவர்களுக்கு செயல் புரிய தன்மை உண்டு என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ஆக, இந்த இரண்டு கருத்துக்களும் ஜீவர்களின் செயல் புரியும் நிலையை வரையறுத்து வெளிப் படுத்துகின்றன.

இந்த விஷயத்தில் உள்ள தெளிவான ஞானத்தினால் மட்டுமே, கண்ணன் கூறியது போல் (16-24...**தஸ்மாத் சாஸ்த்திரம் ப்ரமாணம் தே...**), தர்ம சாஸத்ரத்தில் விதித்தபடி 'எது செய்ய தக்கது' மற்றும் 'எது செய்யத் தகாதது' என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் பட முடியும்.

4. ஸுக துக்க அநுபவங்கள், சம்சாரி ஜீவர்களுக்கு, அவர்களால் செய்யப் படுகிற பாப புண்ய கர்மாவினால் ஏற்படுகின்றன.

அந்த ஜீவர்களை நல் வழி படுத்த எம்பெருமான், தன் நிர்ஹேதுக க்ருபையாலே, சாஸ்த்திரத்தைக் கொடுத்து, அதை உபதேசிக்க ஆசார்யனைக் கொடுத்து, தானே விபவ அவதாரம் செய்து விளக்கி அதன் பிறகு ஒரு ஸஹேதுக க்ருபையால், பிறவிப் பிணியிலிருந்து விலகி முக்தி பெற வழியைக் காட்டுகிறான்.

இவ்விஷயத்தில் சரண்ய க்ருத்யத்தை அவன் செய்ய, ஜீவ க்ருத்யத்தை ஜீவர்கள் செய்ய அவன் எதிர் பார்க்கிறான்.

அப்போது தான் பாப புண்ய பலனுக்கு ஜீவன் காரணமாக முடியும்.

இது ஒரு உலக உதாரணம் கொண்டு தெளியலாம்.

பள்ளியில் ஒரு நல்ல ஆசிரியர் மாணவனுக்கு பாடங்களைத் தெளிவாகச் சொல்லிக் கொடுத்து, அதன் பிறகு அவனுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து, பல வகையில் உதவி பண்ண, அதாவது தன் க்ருத்யத்தை அந்த ஆசிரியர் சரிவர செய்து போக, அந்த மாணவன், அதனை மனனம் செய்து, பரீக்ஷையில் நன்கு பதில் எழுதி மதிப்பெண்கள் பெற, அதாவது மாணவனது க்ருத்யத்தை அவன் செய்ய, ஆசிரியர் விரும்புகிறார்.

இப்படி செய்வதற்கு பதில், ஆசிரியர் தன் கருணையால் மாணவருக்கு பரீக்ஷை எழுதாமலே நல்ல மதிப்பெண்களை அளித்து விடலாமே என்றால், அது முறையாகாது அன்றோ!

அது போல தான், சரண்ய க்ருத்யத்தை அவன் செய்ய ஜீவ க்ருத்யத்தை நாம் செய்ய வேண்டும் என்பதை சாஸ்த்திரத்திலே விதிக்கிறான்.

5. இந்த ஸ்லோகத்தில், நாம் செய்யும் செயலைத் தொடங்குவதற்கே ஐந்து காரணங்கள் உள்ளனவாக, கண்ணன் கூறுயிருக்கிறான்.

இது சாஸ்தரங்கள் அநுமதித்த செயல்களானுலும் சரி, சாஸ்த்ரத்தினால் அநுமதி மறுக்கப்பட்டவைகளானாலும் சரி, இந்த காரணங்கள் இருந்தே தீரும்.

அந்த காரணங்களாவது,

ஆத்மா - ஜீவாத்மா

சரீரம் - ஜீவாத்மாவின், கர்மாவின் அடிப்படையில் வந்த, சரீரம் (தன்னுடைய ஸத்வம் ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய குணங்களினால் ஆத்மாவின் செயல்களைக் கட்டுப் படுத்தக் கூடியவை)

புலன்கள் , (மனம் உள்பட) - விஷயங்களை அறிவது, அதில் ஆசை கொள்வது, செயல்களுக்கான முடிவை எடுப்பது, முயற்சியில் ஈடுபடுவது போன்றவைகள்

ப்ராணன் (உடலுக்கு உள்ளும் வெளியும் செல்லும் காற்று) - சரீரத்தையும் புலன்களையும் இயங்க செய்வது

ஸர்வேஸ்வரனான கண்ணன் -

6. சம்சாரி ஜீவர்களின் ஒவ்வொரு செயலிலும், அந்தர்யாமியான கண்ணனின் செயல்களாவது:

செய்விப்பவன் - சரீரம், புலன்கள் போன்றவைகளை, அவரவர்களின் பாப புண்ய கர்மாக்களின் அடிப்படையில், இயங்கச் செய்விப்பவன்.

செய்பவன் - ஜீவாத்மாக்களுக்கு சரீர சம்பந்தத்தைக் கொடுத்து, அவர்களது செயல்களுக்கேற்ற பலனை அளித்து, செயல்களைச் செய்பவன்.

புறக்கணிப்பவன் - ஜீவாத்மாக்களின் முயற்சிகளை (நல்லது அல்லது கெட்டது என்று) விலக்காதவன்.

அநுமதிப்பவன் - ஜீவாத்மாக்களின் செயல்களை ஸ்வதந்தரமாக தொடங்க அநுமதிப்பவன். அதனால் தான் பாப புண்யங்களை அடைய ஜீவனுக்கு தகுதி உண்டாகிறது.

உதவி புரிபவன் - செயல்களில் ஜீவாத்மாக்கள் ஈடுபடும் போது, தான் பெரும் பகுதியை ஏற்று அந்த செயல்களுக்கு முன்னேற்றம் கொடுப்பவன்.

7. இவ்வாறு அந்தர்யாமியான ஸர்வேஸ்வரன் செயல்படுகிறான், என்பது ப்ரமாண ஸித்தம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

30. தன் எண்ணங்களுக்கு ஏற்றபடி பகவத் கைங்கர்யம் செய்யலாமா?

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

மோக்ஷத்தில் ஆசை கொண்ட சரணாகதர்கள், தன் பொறுப்புகளை பூரணமாக எம்பெருமானிடம் சமர்ப்பித்த பின்னர், தன் எண்ணங்களுக்கு ஏற்றபடி பகவத் கைங்கர்யம் செய்யலாமோ, என ஸித்தாந்த ஏகதேசிகள் கருத்து தெரிவிப்பர்.

இது ப்ரமாண விரோதம்; யுக்தி வாதம்.

1. ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிற மஹாபாரதத்தில்,

மம மத்பக்தபக்தேஷு ப்ரீதி: அப்யதிகா பவேத். தஸ்மாத் மத் பக்தபக்தாஸ்ச பூஜநீயா விசேஷத:

என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் கூறுகையில்,

'என் அடியார்களிடம் பக்தி உள்ளவர்கள் மீது எனக்கு மிக அதிகமான அன்பு உளது. ஆதலினால் என் அடியார்களை நன்கு பூஜிக்க வேண்டும்' என்கிறான்.

இம்மாதிரியான பாகவதர்களின் ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு, பாகவதர்கள் தங்கள் மனம் உவந்த வழியில் பகவத் கைங்கர்யம் செய்யலாம் என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

மோக்ஷத்திற்காக செய்யும் சரணாகதிக்கு முன்னால் அர்த்த பஞ்சக ஞானம் தேவையாகிறது.

அதாவது,

ஜீவர்கள், துக்கமயமான சம்சாரத்தில் இருந்து விலகி மோக்ஷத்தை அடைய அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஐந்து.

அவை,

ப்ராப்யஸ்ச ப்ருஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யுகாத்மநஹா. ப்ராப்தி உபாயம் ஃபலம் சைவ ததா ப்ராப்தி விரோதி ச. வதந்தி ஸகலா வேதாஹா இதிஹாஸ புராணகாஹா

என்கிற ஹாரீத ஸம்ஹிதை வரிகள் கொடுக்கும் அர்த்த பஞ்சகம். அதன் விளக்கமாவது:

 # ப்ருஹ்மம் - சம்சார பிணியிலிருந்து விலக்கி மோக்ஷத்தை கொடுக்கும் பரம்பொருளைப் பற்றிய விளக்கம். அவனே ஸ்ரீமந் நாராயணன்.

 # சம்சாரி ஜீவர்கள் - சம்சார பிணியில் உழன்றுக் கொண்டிருக்கும் ஜீவர்களின் விளக்கம். அவர்களுக்கு இங்கு மிதமான ஸுகமும் மற்றும் துக்கமும் கலந்தே இருந்து தீரும்.

 # பலனுக்கு உபாயம் - சம்சார பிணியிலிருந்து விலகி ஜீவர்கள் ஸுக ரூபமான மோக்ஷத்தை, பரமபத்தை, அடைய வழி. ஞான சக்தி அற்ற ஜீவர்கள் அடைய சரணாகதி அநுஷ்டானம் சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்டிருக்கிறது.

 # பலன் - மோக்ஷத்தை, பரமபதத்தை, அடைவதனால் ஏற்படும் பலன். மனத்திற்கும் வாக்கிற்கும் எட்ட முடியாத அளவிற்கு ஸுக ரூபமானது. அனைவருக்கும் சேஷியும் ஸர்வேஸ்வரனுமான ஸ்ரீமந் நாராயணனின் திரு உள்ளத்தை நேரில் அறிந்து, அவனை மகிழ்விப்பது.

 # பலனுக்கு விரோதி - இதுகாலம் மோக்ஷத்தை, பரமபதத்தை, அடைய விடாமல் இருந்த தடைக்கு காரணம். அநாதி காலமாக செய்து வந்த சாஸ்த்திரத்தை மீறிய செயலால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் சீற்றம் கொண்டு, சம்சாரி ஜீவர்களுக்கு பிறவியை கொடுக்கிறான்.

பரம புருஷார்த்தமான மோக்ஷ பலனை அநுபவிக்கும் போதும், எம்பெருமானின் திருவுள்ளம் அறிந்து கைங்கர்யம் செய்யப்படுவதாகிறது.

2. ஆக, சரணாகதியை அநுஷ்டித்து முக்தனானவன், பரமபதத்தில், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திரு உள்ளத்தை நேரில் அறிந்து, அவனை மகிழ்விக்கிறான்.

இதனால் அறியப் படுவது என்னவென்றால், கைங்கர்யமாவது, அவன் உகக்கும் படி செயல் புரிந்து, ஸர்வேஸ்வரனை மகிழ்விக்க வேண்டுவதாகிறது.

இங்குள்ள காலம் அவனை மகிழ்விக்க, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திரு உள்ளத்தை நேரில் அறிய முடியாத போது, சாஸ்த்திரத்தினால் அவன் திரு உள்ளத்தை அறிந்தே, செயல் பட வேண்டுவதாகிறது.

ஆகையால், மோக்ஷத்தில் ஆசை கொண்ட சரணாகதர்கள், தன் பொறுப்புகளை பூரணமாக எம்பெருமானிடம் சமர்ப்பித்த பின்னர், தன் எண்ணங்களுக்கு ஏற்றபடி பகவத் கைங்கர்யம் செய்வது பொருந்தாது. சாஸ்த்திர விதியை பின் பற்ற வேண்டும்.

3. ப்ரமாணங்களைக் கொண்டு,

அறிய வேண்டுவதாவது:

ஆக்ஞா அநுக்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய புத்தி: நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத் தத் பல ஆப்தயே

அதாவது, சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கைங்கர்ய விதிமுறைகள் ஆக்ஞை (செய்தே தீர வேண்டும் - ஸந்த்யாவந்தனம் போன்றவை) மற்றும் அநுக்ஞை (செய்தால் பலன் விளையும் - கோவில் செல்வது போன்றவை) என்று இரு வகைப்படும்.

ஆக்ஞை என்பது எம்பெருமானின் தண்டனையிலிருந்து தப்புவதற்கும், அநுக்ஞை என்பது அந்தந்த பலனை பெறுவதர்க்கும் வழி வகுக்கும்.

சரணாகதன் செய்யும் அநுக்ஞா கைங்கர்யத்தின் பலன் ஸர்வேஸ்வரனின் உகப்பே ஆகும்.

மேலும், ப்ரமாணங்களைக் கொண்டு, அறிய வேண்டுவதாவது:

அநுக்ஞயா ப்ரவ்ருத்தே அபி கர்ம கோப ஆதி ஸம்பவே ஆக்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய:

அதாவது, அநுக்ஞை விதியால் தொடங்கப்பட்ட கைங்கர்யம் என்ற போதும், அதில் ஏதேனும் முறை தவறுதல் போன்ற குற்றங்கள் உண்டானால், ஆக்ஞையை மீறினால் எந்த விதமான தோஷங்கள் உண்டாகுமோ, அதுவே உண்டாகும் .

ஆகவே சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கட்டுப்பாட்டுகளை மீற இயலாதவை ஆகும் .

உதாரணமாக, பெருமாளுக்கு துளஸி ஸமர்ப்பிப்பது ஒரு உன்னதமான அநுக்ஞா கைங்கர்யம், ஆனால், துளஸி க்ரஹிப்பதற்கு (பரிப்பதற்கு) சாஸ்த்ர விதிமுறைகள் உண்டு. ஸ்நாநம் செய்து மந்த்ர உபதேசம் பெற்ற மந்த்ரத்தை உச்சரித்து, உரிய தினங்களில் (வெள்ளி, செவ்வாய், ஞாயிறு, பித்ரு தினங்கள், வ்ரத தினங்களை தவிர்த்து) துளஸியைய, நான்கு இதழ்கள் கொண்தாக, க்ரஹிக்க வேண்டும். கடைகளில் துளஸி வாங்கி பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க

கூடாது ஏன் எனில் துளஸி க்ரஹித்த முறையை உறுதி செய்து கொள்ள முடியாதபடியால். புஷ்பங்களை ஸமர்ப்பிக்க இந்த விதிமுறைகள் கிடையாது.

ஆகையால், மோக்ஷத்தில் ஆசை கொண்ட சரணாகதர்கள், தன் பொறுப்புகளை பூரணமாக எம்பெருமானிடம் சமர்ப்பித்த பின்னர், தன் எண்ணங்களுக்கு ஏற்றபடி பகவத் கைங்கர்யம் செய்வது பொருந்தாது. சாஸ்த்திர விதியை பின் பற்ற வேண்டும்.

4. இளைய பெருமாள் ஸ்ரீ ராமனிடம், வன வாஸத்தின் போது, நடத்திக் காட்டியது ஆரண்ய காண்டத்தில் உள்ளது:

அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ருத: ஸ்வபதஸ்சதே. பரவானஸ்மி காகுஸ்த த்வயி வர்ஷ சதம் ஸ்திதே. ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாம் இதி மாம் வத

அதாவது,

'ஸ்ரீ ராமா! நீ நூற்றுக் கணக்கான வருடங்கள் இருந்தாலும், நான் உனக்கு ஸகல வித கைங்கர்யத்தையும் செய்வேன். தேவரீர் உகந்த இடத்தில் பரணசாலையை அமைக்குமாறு அடியேனுக்கு கட்டளை இட வேண்டும்'

என்று லக்ஷ்மணன் விண்ணப்பித்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கைங்கர்யமாவது, **ஸ்வாமி உகந்த ஏவல் தொழில்**

லக்ஷ்மணன் ஸ்ரீராமனை கேட்டு அறிந்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆகையால், ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் செய்யும் பகவத் கைங்கர்யம், ஸர்வேஸ்வரனை நேரிலே கேட்டு அறிந்து செய்ய இயலாததாகையால், சாஸ்த்ரத்தைக் கொண்டே எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது திருவுள்ளத்தை அறிய வேண்டும்.

இந்த சரணாகதன் செய்யும் அனைத்து பகவத் கைங்கர்ய முறைகளும் சாஸ்த்ரத்தின் அநுமதி உள்ளதாகவே இருக்க வேண்டும்.

தன் மனதில் தோன்றியவாறு செய்யும் கைங்கர்யம் குற்றம் உள்ளதே.

அது கைங்கர்யம் ஆகாது.

5. சரணாகதர்கள், தன் பொறுப்புகளை பூரணமாக எம்பெருமானிடம் சமர்ப்பித்த பின்னர், தன் எண்ணங்களுக்கு ஏற்றபடி பகவத் கைங்கர்யம் செய்யலாம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

31. <u>லௌகீக ஞானவான்களும் முமுக்ஷுக்களாகாதது ஏன்?</u>

சாஸ்த்திரங்கள், மிகத் தெளிவாக சம்சாரி ஜீவர்களுக்கு ஸுக ரூபமான மோக்ஷத்திற்கு வழியை உரைத்த போதிலும், இவ்வுலகத்தில், உயர்ந்த அறிவு உள்ளவர்களாக நம்மால் கருதப் படும் பலர், துக்கம் கலந்த சம்சாரத்திலேயே உழன்றுக் கொண்டு மோக்ஷ பலனை அடைய முயற்சிக்காதது ஏன், என சாஸ்த்திரங்கள் தெளிவாக்குகின்றன.

1. பாபங்களுக்கு, பகவான் வழங்கும் பெரிய தண்டனை, ஞானத்தில் குறைபாடுகளை உண்டு பண்ணுவது; அந்த குறைபாடானது, அந்த குறைப்பாட்டின் இருப்பைக் கூட அறியா வண்ணம் இருந்து போவது.

ஆதலால், கர்ம அநுகுணமாக வரும் சரீரங்களைக் கொண்டு, ஞானத்தில் குறைபாடுகளை, எளிதில் நாம் தெளியலாம் :

தேவருக்கும் மனிதருக்கும் உள்ள ஞான வித்யாஸம்,

மனிதருக்கும் மிருகங்குக்கும் உள்ள ஞான வித்யாஸம்,

மனிதர்களுக்குள் உள்ள ஞான வித்யாஸம்; அதனால் தான் அறிவாளி, முட்டாள் என்கிற சப்த ப்ரயோகம்,

மனிதர்களுக்குள் - குழந்தை குமாரன், வயோதிகன் - உள்ள ஞான வித்யாஸம்

இக்குறைபாடுகள் இருந்தாலும், இவ்விஷயத்தை ஒரு குறையாகவே சம்சாரி ஜீவர்கள் கருதுவதில்லை;

அதனாலேயே, உயர்ந்த உலக ஞானம் இருந்தும், பிறவிக்குக் காரணமான ஞான குறைப்பாட்டை உணராத போது, ஸ்வரூப ப்ராப்தமான, ஸுக ரூபமான மோக்ஷ பலனை அறிவதும் இல்லை; அதை அடைய முயற்சிப்பதும் இல்லை.

அந்த ப்ராப்தி விரோதி எனப்படும் மோக்ஷ பலனுக்கு விரோதி வர்கத்தில் முதலாவதானது, உண்மையான ஞானத்தில் குறைபாடு, என்பதாகிறது சாஸ்த்திரம்.

உலகில், தன்னிடம் உள்ள தாரித்ரியம் நீங்க பலர் விரும்புவார்கள்:

வீடு இல்லாதவன், வீடு வேண்டுமென்கிற ஆசை கொள்வான்;

சொந்த வாகனம் இல்லாதவன், சொந்த வாகனம் வேண்டுமென்கிற ஆசை கொள்வான்;

உடல் ஆரோக்யம் இல்லாதவன், உடல் ஆரோக்யம் வேண்டுமென்கிற ஆசை கொள்வான்;

வாரிசு இல்லாதவன், வாரிசு வேண்டுமென்கிற ஆசை கொள்வான்;

சொத்து இல்லாதவன், சொத்து வேண்டுமென்கிற ஆசை கொள்வான்;

இப்படிப் பல.

ஆனால், அறிவு (ஞானம்) குறைபாடு உள்ளவன், தனக்கு அறிவு இல்லாததை ஒரு குறையாகவே கருத மாட்டான் அல்லவா? அவனும் தன்னை அறிவாளியாகவே கருதுவான் அல்லவா?

ஸ்வாமி நம்மாழ்வார், இவ்விஷயத்தை, திருவாய் மொழியில், விளக்குகிறார் :

முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன்
வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப் பாய்ந்து எந்நாள் யானுன்னை இனி வந்து கூடுவனே

அதாவது,

இந்த சம்சாரி ஜீவர்கள், தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற அறிவை இழந்து, அந்த இழப்பையும் அறியாது, திரியும் போது, அவர்களது நிலையை ஆழ்வார் விவரிக்கிறார்.

எம்பெருமானே!

ஸ்ருஷ்டி ஸமயத்தில் நீ கொடுத்தருளின, அழியக்கூடிய சரீரத்தினுடைய வழியிலேயே நடந்து கெட்டுத் திரிகின்றேன்.

அதாவது, புலன்களுக்கு விஷயமான உலக இன்பத்திலே, அது நிரந்தரமற்றது என்கிற எண்ணமில்லாமல், திளைத்திருக்கிறேன்.

இவ்வரிகளால், ஸ்வாமி அருளுவது, ப்ராப்தி விரோதி எனப்படும் மோக்ஷ பலனுக்கு விரோதி உண்மையான ஞானத்தில் குறைபாடு, என்பதாகிறது; அழியக் கூடிய விஷயங்களில் பற்று கூடி, அந்த ஸர்வேஸ்வரனின் உண்மை நிலையை சாஸ்த்திரம் கொண்டு அறியாதிருப்பது; அவன் சம்சாரி ஜீவர்களுக்கு அருள இருக்கும் உயர்ந்த பலனை உணராதிருப்பது; அறிய அவாவும் அற்றிருப்பது.

2. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அளிக்கும் பரமபதமானது நித்யமானது; அதாவது அழிவு இல்லாதது; ஆனந்த மயமானது; மஹா ப்ரளயம் வரும் போதும் மோக்ஷ பலனாகிற பரமபதம் அழியாதது.

இதையே கண்ணன் பகவத் கீதையில் (8-16)

மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே

என்று பரமபதம், மறுபிறவி அற்ற லோகம், என்று விரிவாக அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

மற்ற லோகங்களாவது, ப்ராக்ருத லோகம்.

ப்ராக்ருத லோகம் எண்ணிக்கையற்ற பல அண்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு அண்டத்திலும் 14 லோகங்கள் இருக்கின்றன என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

இந்த உலகத்தை சேர்த்து, மேல் லோகங்கள் ஏழு (பூலோகம், புவர் லோகம், ஸ்வர்க லோகம், மக லோகம், ஜன லோகம், தப லோகம் மற்றும் சத்ய லோகம்);

கீழ் லோகங்கள் ஏழு (அதல லோகம், விதல லோகம், சுதல லோகம், தலாதல லோகம், மகாதல லோகம், ரசாதல லோகம் மற்றும் பாதாள லோகம்).

அங்கு ப்ராக்ருத தேவதைகளும் இருகின்றனர்; ஸத்ய லோகத்தில் ப்ருஹ்மா, ஸ்வர்கத்தில் இந்திரன் போன்றவர்கள்.

ஒவ்வொரு ப்ருஹ்மாவின் ஆயுட்காலம் முடியும் போது, அந்த 14 லோகங்களும் கடும் மழையினால் சூழப்பட்டு, அழிந்து விடும். இதை ஸர்வேஸ்வரன் தானே செய்து முடிக்கிறான்.

ஆகையால், அழியக்கூடிய உலகங்களில் உள்ள அநுபவங்களும் அழியகூடியவையே, அங்கு உள்ள தேவதைகளும் அழியகூடியவர்களே என்று கண்ணன் அர்ஜுனனுக்கு (பகவத் கீதை 9-33)

அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்

என்று விளக்கியிருந்தான்.

அவனை அடைவதை அன்றி (மோக்ஷத்தை தவிர்த்து) மற்ற அனைத்து பலன்களிலும் ஏழு விதமான குற்றங்கள் இருப்பதாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதாவது,

i) அல்பத்வம் - ஸுகத்தின் அளவில் குறைவு

ii) அஸ்திரத்வம் - நிரந்தரம் அற்ற தன்மை கொண்ட ஸுகம்

iii) துக்க மூலத்வம் - அந்த ஸுகத்தை அடையும் முயற்சியில் உள்ள துக்கம்

iv) துக்க மிஸ்ரத்வம் - அநுபவிக்கும் போது துக்கம் கலந்த ஸுக ரூபமான பலன்

v) துக்கோதர்கத்வம் - ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்

vi) விபரீத அபிமான மூலத்வம் - தன்னைப் பற்றிய உண்மையற்ற எண்ணங்கள்

vii) ஸ்வாபிக ஆனந்த விருத்வத்வம் - துக்கம் கலசாத இயல்பான சந்தோஷத்திற்கு மாறானது

3. இதிஹாஸ சமுச்சயத்தில், சம்சாரி ஜீவர்களில், மோக்ஷம் பெற தகுதி அற்றவர்களை விளக்குகிறது.

ந சப்தசாஸ்த்ராபிரதஸ்ய மோக்ஷோ ந போஜநாச்சாதந தத்பரஸ்ய ந சைவ ரம்யாவஸத ப்ரியஸ்ய ந லோகே சித்தக்ரஹணே ரதஸ்ய

அதாவது,

சாஸ்த்திர வரிகளுக்கு இலக்கணங்களைக் கொண்டு வெவ்வேறு அர்த்தங்களை கற்பிப்பவனும்,

உடை மற்றும் உணவில் அதிக ஈடுபாடு உடையவனும்,

தான் வசிக்கும் க்ருஹத்தை அலங்கரிப்பதிலேயே ஆர்வம் காட்டுபவனும் மற்றும்

உலகத்தாரின் மனத்தை ஈர்ப்பதில் அதிக ஆர்வம் உள்ளவனுக்கும்

மோக்ஷம் கிடைப்பது அரிது.

இதன் தாத்பர்யமாவது, இவ்வாறு உலக ஆர்வம் மிக்கவர்களுக்கு, துக்கம் கலந்த சம்சார வாழ்க்கையே போக்யமாக இருக்கும். மோக்ஷத்தில் ஈடுபாடு வராது.

3. ஐந்தாவது வேதமாக கருதப்படும் மஹாபாரதத்தில்,

சிச்நோதரே யே அபிரதா: ஸ்தேயாந்ருதா வாக் பருஷாச்ச நித்யம் வ்யபத தர்மா இதி தாந் விதித்வா தூராத்தேவா: ஸம்பரி வர்ஜயந்தி

கூறப்படுகிறது.

அதாவது,

எப்போதும் உலக இன்பத்தையே தேடி இருப்பவரும்,

உணவில் அதிக ஈடுபாடு உடையவரும்,

ஏமாற்றி த்ரவ்யம் சேகரிப்பவரும்,

கடும் சொற்களை இயல்பாக பேசுபவர்களும்

சாஸ்த்திரத்தை மீறியவர்கள்; அவர்களுக்கு, மோக்ஷத்தில் ஈடுபாடு வராது.

4. ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில் சௌநக மஹரிஷி அருளும் போது,

பராங்முகாநாம் கோவிந்தே விஷயாஸக்த சேதஸாம் தேஷாம் தத்பரமம் ப்ரஹ்ம தூராத் தூரதேரே ஸ்திதம்

என்கிறார்.

அதாவது, ஸர்வேஸ்வரனான கோவிந்தனை மறந்து எப்போதும் உலக இன்பங்களிலேயே மனத்தை செலுத்துபவர்களிடமிருந்து, அந்த ஸர்வேஸ்வரன் அகன்று விடுகிறான். அதனால், அவர்களுக்கு, மோக்ஷத்தில் ஈடுபாடு வராது.

5. ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (7-19)

பஹூநாம் ஜன்மநாமந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே. வாஸுதேவ ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

அதாவது,

‘வாஸுதேவனே ஸர்வமும் என்ற எண்ணம் பல புண்ய ஜன்மாக்களுக்கு பிறகு வருகிறது. அந்த ஞானியான மஹாத்மா கிடைப்பது அரிது.’

6. ஆக, இவ்வுலகத்தில், உயர்ந்த அறிவு உள்ளவர்களாக நாம் கருதப் படும் பலர், துக்கம் கலந்த சம்சாரத்திலேயே உழன்றுக் கொண்டு மோக்ஷ பலனை அடைய முயற்சிக்காததற்கு அவரவர்களின் பாப புண்ய ப்ராரப்த கர்மாவே காரணமாகிறது, என்பது ப்ரமாண ஸித்தம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

32. <u>சரணாகதனுக்கு பாகவத சம்பந்தம் எத்தகையது?</u>

சரணாகதர்கள், செய்யக் கூடாதவற்றில் முக்கியமாக பாகவத அபசாரம் என கூறப்படுகிறு; சரணாகதர்கள், இங்குள்ள காலம் வசிக்க உகந்த இடமாக பாகவதர்கள் நிரம்பிய ஸ்தானங்களே எனப் படுகிறது; ஆக, பாகவதர்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய முறை எத்தகையது, என அறிய வேண்டுவதாகிறது

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே பரம் பொருள், ஸர்வ நியந்தா, ஆராதிக்கத் தகுந்தவன் என உணர்ந்து அவன் சாஸ்த்திர முகேன விதித்த சரணாகதி அநுஷ்டானத்தை மோக்ஷத்திற்காக செய்து போந்த ஒரு சரணாகதன், ஸர்வேஸ்வரன் திருவுள்ளம் உகக்க, பாகவதத்வம் உடைய மற்ற சரணாகதர்களிடம், எவ்வாறு வ்யவஹரிக்க வேண்டும் என சாஸ்த்திரம் கொண்டு தெளிய வேண்டும்.

1. முதலில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் ஆணையின் படியே அனைத்தும் இயங்குகிறது என்கிற தெளிந்த ஞானம் சரணாகதனுக்கு அவசியமாகிறது:

மஹாபாரதத்தில், வ்யாசர் அருளும் போது,

ஏக சாஸ்தா ந த்விதீய: அஸ்தி சாஸ்தா

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் மட்டுமே ஸர்வ நியந்தா வேறொருவர் கிடையாது

என்கிறார்.

மநு பகவான், தனது ஸ்ம்ருதியில் அருளும் போது,

ப்ராசிஸிதராம் ஸர்வேஷாம்

அதாவது, அனைத்தையும் நியமிப்பவனாக ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை அறிய வேண்டும்,

என்கிறார்.

பராசர மஹரிஷி, விஷ்ணு புரணாத்தில்,

சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய

அதாவது, அனைவரின் ஹ்ருதயத்திலும் இருக்கும் விஷ்ணுவே அனைத்தையும் நியமிப்பவனாக இருக்கிறான்,

என்கிறார்.

2. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறொரு தெய்வத்தை தொழாதவர்களான, நம் ஸத் ஸம்ப்ரதாயத்தில் நிலை நிற்பவர்களான, மோக்ஷத்திற்காக எம்பெருமானின் திருவடியை முறைப்படி பற்றியவர்கள் பரம பாகவதர்கள்.

அந்த பாகவதர்கள் விஷயத்தில், சரணாகதர்கள் மிகுந்த கவனத்துடன், அவர்களிடம் மிகுந்த கௌரவ புத்தியோடும், எந்த ஒரு அவமரியாதையும் ஏற்படாமல் இருக்க வேண்டும்:

ப்ராமாணம் கூறும் போது,

சம்சார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர்வா ஸமாகம:

அதாவது,

சம்சாரம் என்கிற விஷ மரத்தில், அம்ருதம் போன்ற இரண்டு கனிகள் உண்டு; ஒன்று ஸர்வேஸ்வரனிடம் பக்தி; மற்றொன்று அவன் அடியார்களாகிய பாகவதர்களிடம் சேர்க்கை.,

எனப் படுகிறது.

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

உறுமோ பாவி யேனுக்கிவ் வுலகம் மூன்றும் உடன்நிறைய, சிறுமா மேனி நிமிர்த்தவென் செந்தா மரைக்கண் திருக்குறளன் நறுமா விரைநாண் மலரடிக்கீழ்ப் புகுதல் அன்றி அவனடியார், சிறுமா மனிச ராயென்னை ஆண்டா ரிங்கே திரியவே

அதாவது, த்ரிவிக்ரமனான எம்பெருமானின் திருவடிக்கு உகந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் (பாகவத லக்ஷணம் பொருந்திய உருவத்தில் சிறியவரான சிறுமாமனிசர்கள்) இங்கேயிருந்து என்னை அடிமை கொண்டால் உலகமளந்தவன் திருவடிவாரத்திலே அடிமை செய்வதும் அதற்கு இணையாகாது என்கிறார்.

ஆக, பாகவதர்களின் உயர்த்தி தெளிவாகிறது.

ஸ்வாமி பெரியாழ்வார், தனது பாசுரத்தில்,

கருந்தட முகில் வண்ணனைக் கடைக் கொண்டு கை தொழும் பத்தர்கள் இருந்த ஊரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார் கொலோ

என அருளினார்.

அதாவது, எம்பெருமானையே ரக்ஷகனாக எண்ணி அவனையே வழிபடும் பாகவதர்கள் இருந்து போகும் ஊரில் இருப்பவர்கள் எத்தகைய தவம் (புண்ணியம்) செய்திருக்கிறார்களோ? என்றார்.

ஆக, பாகவதர்களின் உயர்த்தி தெளிவாகிறது.

3. உண்மையை மட்டும் உரைப்பதான உபநிஷத்துக்களால் போற்றப்படும் புருஷோத்தமனான ஸ்ரீமந் நாராயணன் பெருமையை அளவிட முடியாது.

அப்படிப்பட்ட ஸர்வேஸ்வரனின் திருவடி தாமரையை பணிந்து நிற்கும் பாகவதர்களிடம் குறைகள் இருப்பினும், அவர்களுடைய பெருமையையும் அளவிட முடியாது, என்பதை ஆசார்யர்கள் பாரபக்ஷமின்றி உபதேசித்தருளினர்.

ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறொரு தெய்வத்தை தொழாதவர்களான, மோக்ஷத்திற்காக எம்பெருமானின் திருவடியை முறைப்படி பற்றிய பரம பாகவதர்களை, எந்த காரணத்தினாலும் அவமதிக்கலாகாது, என தெளிவு பட வேண்டும்.

4. அம்பரீஷன் என்ற ஒரு மஹாராஜா, புராண காலத்தில், பூ மண்டலம் முழுக்க ஆண்டு வந்தார்.

அவர் ஒரு பரமேகாந்தி. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடத்திலும், பாகவதர்களிடத்திலும் பக்தி கொண்டவர்.

தன் வசமிருந்த ஐஸ்வர்யத்தை துச்சமாக கருதியவர். சாஸ்த்திரத்தில் விதித்த வற்றிலேயே தன் புலன்களால் கவனம் செலுத்தியவர்.

சாஸ்த்திரத்தில் விதித்த கர்மாக்களை தவறாது செய்து வந்தவர். பல யாகங்களை செய்தவர். இவரது பக்தியை மெச்சி ஹரி அவருக்கு ஸுதர்ஸன சக்கரத்தை பாதுகாப்பிற்காக அளித்தார்.

ஒரு சமயம், அவர் ஏகாதசி வ்ரதத்தை முடித்து த்வாதசி பாரணைக்கு செல்லும் போது துர்வாஸ முனிவர் வந்தார்.

அவரை பாரணைக்கு அழைத்த அம்பரீஷனிடம், துர்வாஸர், பாரணைக்கு முன்பு தான் நீராடி வருவதாக கூறினார்.

பாரணை காலம் முடிகிற தருவாயை அடைந்ததால், அம்பரீஷன் அங்கிருந்த ப்ராம்மண ஸ்ரேஷ்டர்களின் அநுமதி பெற்று, காலம் தவறாமல் இருக்க, தீர்த்தத்தை கொண்டு பாரணையை செய்து முடித்தார்.

நீராடி வந்த துர்வாஸர் அம்பரீஷன் தீர்த்த பாரணை செய்ததை அறிந்து, கடும் சினம் கொண்டார்.

தன்னை அவமதித்ததாக எண்ணம் கொண்டார். தன் தபோ வலிமையால் ஒரு பேயை ஸ்ருஷ்டித்து, அம்பரீஷனை துன்புறுத்த ஏவினார்.

ஆனால், அம்பரீஷனை காத்து வந்த ஸுதர்ஸன சக்கரம் அந்த பேயையும் துர்வாஸரையும் விரட்டியது. ப்ருஹ்மா ருத்ரன் போன்ற அனைத்து லோகத்து தேவதைகளையும் ப்ரார்த்திதார் துர்வாஸர்.

விஷ்ணு மாயைக்கு தாங்களும் வசப் பட்டவர்களே என்று கூறி அனைத்து தேவதைகளும் விலகிக் கொண்டனர்.

ஸுதர்ஸன சக்கரத்திடமிருந்து விடுபட முடியாத துர்வாஸர் விஷ்ணுவிடம் வந்து ப்ராத்தித்தனர்.

‘தன் சரணாகதன் விஷயத்தில் தான் வசப்பட்டவன்’

என்று கூறி,

துர்வாஸரை அம்பரீஷனிடம் மன்னிப்பு கேட்க பணித்தார்.

அம்பரீஷனை அணுகி ஸுதர்ஸன சக்கரத்திடமிருந்து விடுதலைப் பெற்றார் துர்வாஸர்.

ஆக, ஒரு பாகவதன் விஷயத்தில் எம்பெருமானின் நோக்கு எத்தகையது என்பது உணரத்தக்கது.

5. ப்ரமாணங்களும் பாகவத ஆராதனத்தை உயர்த்தியாகக் கூறுகிறது.

ஆராதனானாம் ஸர்வேஷாம் விஷ்ணோர் ஆராதனம் பரம். தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீய ஆராதனம் பரம்

என்று மற்ற தேவதைகளை ஆராதிப்பதைக் காட்டிலும் விஷ்ணுவினுடைய ஆராதனம் மிகவும் உயர்ந்தது. அவ்விஷ்ணுவை ஆராதிப்பதைக் காட்டிலும் அந்த எம்பெருமானின் அடியார்களை ஆராதிப்பது உயர்ந்ததாக சாஸ்த்ரங்கள் கருதுகின்றன.

மம மத்பக்தபக்தேஷு ப்ரீதி: அப்யதிகா பவேத். தஸ்மாத் மத் பக்தபக்தாஸ்ச பூஜநீயா விசேஷத:

என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிற மஹாபாரதத்தில் கூறுகையில்,

‘என் அடியார்களிடம் பக்தி உள்ளவர்கள் மீது எனக்கு மிக அதிகமான அன்பு உளது. ஆதலினால் என் அடியார்களை நன்கு பூஜிக்க வேண்டும்’ என்கிறான்.

6. ஆக, சரணாகதனுக்கு பாகவத சம்பந்தம் என்பது

எம்பெருமானை ஆராதிப்பதைக் காட்டிலும் அவன் அடியார்களை ஆராதிப்பது உயர்ந்தது, என தெளிந்து,

பரமேகாந்திகளான பாகவதர்கள் வசிக்கும் இடத்தில் உகந்து வர்த்தித்து, பாகவத கைங்கர்யம் செய்வது பகவத் ப்ரீதிக்கு காரணமாகும், என உணர்ந்து செயல்பட்டு,

உகந்து பணி கொள்ளும் எம்பெருமான் திருவுள்ளம் சீற்றம் கொள்ளாமல் இருக்க, பாகவத அபசாரத்திலிருந்து முற்றிலுமாக விலகி வர்த்தித்து, இருப்பதேயாகும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

33. **பர தத்வ - பரம ஹித - பரம புருஷார்த்தம் - ஸத் ஸம்ப்ரதாய விளக்கம்**

பெரிய பிராட்டி ஈஸ்வர தத்வம் இல்லை என்பதும், சரணாகதி அநுஷ்டானம் பாபச் செயல் என்பதும், கைவல்ய புருஷார்த்த அநுபவம் ஸ்ரீவைகுண்டத்தில் ஏற்படுவது என்பதும் ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

பெரிய பிராட்டி ஈஸ்வர தத்வம் இல்லை என்பதும், ஸாத்யோபாய அநுஷ்டானம் அநுபாயம் என்பதும், கைவல்ய புருஷார்த்த அநுபவம் ஸ்ரீவைகுண்டத்தில் ஏற்படுவது என்றும் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த வழி வந்த விதத்தைக் காண்போம்! இது விஷயாமக ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் பணியையும் காண்போம்!

1. ஸ்ரீ வேதவ்யாஸர் உபநிஷத்துக்கு வ்யாக்யானமாக ப்ரஹ்ம ஸூத்ரத்தை அருளிச் செய்தார்.

ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு வ்யாக்யானமாக ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்தார்.

ஆக, ஸ்ரீபாஷ்யம் ஸூத்ரத்திற்கு வ்யாக்யானமாக அமைவதன் மூலம் உபநிஷத்துக்கு வ்யாக்யானமாயிற்று.

2. ஸ்ரீபாஷ்யத்தை தொடங்கும் போது

பகவத் போதாயன க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யா: ஸஞ்சிக்ஷிபு: தன் மத அநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே

என பகவத் ராமானுஜர் அருளினார்.

'பகவத் போதாயனர் செய்தருளிய மிகவும் விஸ்தாரமான ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்தியை பூர்வாசார்யர்கள் சுருக்கமாக அருளிச் செய்துள்ளார்கள். அவர்களுடைய மதத்தை அநுஸரித்து ஸூத்ரத்தில் உள்ள அக்ஷரங்களுக்கு வ்யாக்யானம் பண்ணுகிறோம்'

என்று அருளிச் செய்துள்ளார்.

ஆக, ஸ்ரீபாஷ்ய க்ரந்தம், வேதாந்த மார்க்கத்திலே தோன்றின வ்யாஸ ஸித்தாந்தமான ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திற்கு அடித்தளமாகிறது.

அவ்விவரங்களை மீறிய விளக்கங்கள் பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது, என்பதில் தெளிவு வேண்டும்.

ஆழ்வார் பாசுரங்களுக்கும், இவ்வழியிலே விளக்கம் அளிப்பது தான், அவைகளைத் தமிழ் மறை எனக் கூறுவதற்கு ஏற்றதாகும்.

3. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீபாஷ்யத்தை தழுவியே அனைத்து க்ரந்தங்களையும் அருளிச் செய்தார்.

ஆனால், ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திற்கு அடித்தளமான விவரணங்கள் அனைத்திலும், ஸ்ரீபாஷ்யத்திற்கு விரோதமான கருத்துக்களை, அதன் பின் தோன்றிய ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், தங்களது க்ரந்தங்களில், ஆழ்வார் பாசுரங்களுக்கு விபரீத அர்த்தங்களைக் கற்பித்து, கூறயிருக்கின்றனர்.

அந்த பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதமான கருத்துக்களை உடைய விஷயங்கள்:

பரதத்வம் (பரம் பொருள் அல்லது ஸர்வேஸ்வரன்)

பரமஹிதம் (மோக்ஷம் அடைவதற்கான வழி - உபாயம்),

பரம புருஷார்த்தம் (பரமபத ப்ராப்தி)

முதலில், தத்வம், ஹிதம், புருஷார்த்தத்தை பற்றி ஸ்ரீபாஷ்ய விஷயங்களை காண்போம்:

தத்வம் :

ஸ்ரீபாஷ்ய மங்கள ஸ்லோகத்திலேயே

ஸ்ருதி சிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே

ஸ்ருதி சிரஸ் எனப்படும் வேதாந்தத்தில் விசேஷித்து ப்ரகாசிப்பவனுமான ப்ருஹ்மம் எனப்படும் ஸ்ரீநிவாஸன் என்று ஸ்ரீ விஸிஷ்டனான எம்பெருமானை பரதத்வமாக அருளிச் செய்தார் ஸ்ரீராமானுஜர்.

மேலும்,

ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ

என்கிற ஸ்ருதி வாக்யத்தை (ஸ்ரீஸூக்தம்)

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி

எனக் கூறி, பிராட்டியின் தன்மைகள் எம்பெருமானைப் போன்றதே என அருளுகிறார்.

இதனால், பிராட்டிக்கும் ஈஸ்வர தன்மைகள் உள்ளன என பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தை அறியலாம்.

இது ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தில் ஏற்றுக் கொண்ட விஷயம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில், அர்த்த பஞ்சகாராதிகரத்தில் , இந்த மங்கள ஸ்லோகத்தையும் ப்ரமாணமாக்கி, ஸ்வாமி தேசிகன் அருளியுள்ளார்.

ஆனால், பூர்வபக்ஷிகள், பரதத்வத்தை ஸ்ரீவிஸிஷ்டனான நாராயணன் என்று ஒப்புக் கொள்ளவில்லை.

மஹாலக்ஷ்மி பிராட்டியை நம்மைப் போன்ற ஜீவகோடியில் உள்ளதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

ஹிதம் :

ஸ்ரீபாஷ்யத்தில் மூன்றாம் அத்யாயமான ஸாதனாத்யாயத்தில்

மோக்ஷத்திற்கான உபாயத்தை பகவத் ராமானுஜர் விளக்கி அருள்கிறார்

மூன்றாம் அத்யாயத்தில் இரண்டாம் பாதத்தில் கடைசி அதிகரணமான பலாதிகரணத்தில்

பலம் அத: உப பத்தே:

என்கிற ஸூத்ரத்திற்கு வ்யாக்யானம் செய்யுமிடத்தில்

ஸ ஏவஹி ஸர்வக்ஞ: ஸர்வ சக்திஹி மஹோதார: யாக தான ஹோமாதிபி: உபாஸநேன ச ஆராதித: ஐஹிக ஆமுஷ்மிக போகஜாதம், ஸ்வஸ்வரூப அவாப்தி ரூபம் அபவர்கம் ச தாதுமீஷ்டே

எம்பெருமானே அனைத்தையும் அறிபவன், ஸர்வ வல்லமை பொருந்தியவன், கருணை குணமுடையவன். அவன் தான், யாக தான ஹோமாதிகளாலும் உபாஸநத்தினாலும் ஆராதிக்கப் பட்டவனாய் காண்பதற்கு ஏற்றதாகவும், புலன்களால் அறியப் பட முடியாத ஸ்வர்க்காதி ப்ராக்ருத போகங்களையும், மோக்ஷத்தையும் கொடுப்பதற்கு ஸமர்த்தனாகிறான் என்று அருளிச் செய்கிறார்.

இதனால் ஸாத்யோபாய அநுஷ்டானத்தை (பலன் பெறுபவனின் உபாய அநுஷ்டானத்தை செய்வதை) முன்னிட்டே எம்பெருமானுக்கு ஸித்தோபயத்வமே (பலன் தருபவன்) என்பதை அறிந்து கொள்வதாகிறது.

மேலும் ஸ்ரீராமானுஜர் ஒரு பங்குனி உத்திர நன்னாளில் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் தாயார் சேர்த்தியில் சரணாகதியை அநுஷ்டித்துள்ளார் என்பது இன்று வரை ஸ்ரீ வைணவ திருக்கோவில்களில் நடந்து வருகிற உத்ஸவத்தினாலேயே ப்ரஸித்தம்.

இது ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தில் ஏற்றுக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷத்திற்காக தேவை, என்பது தெளிவான விஷயம்.

சரணாகதி அநுஷ்டானத்தை அங்கங்களோடுஅநுஷ்டிக்க வேண்டியதே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில், ஸாத்யோபாய சோதனாதிகாரத்திலும் மற்றும் பரிகர விபாகாதிகாரம், ஸாங்கப்ரபதனாதிகாரம் போன்றவற்றிலும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளியுள்ளார்.

அதாவது, சரணாகதி என்கிற உபாய அநுஷ்டானத்தை மோக்ஷ பலனுக்காக செய்ய வேண்டும் என்பதாகும்.

ஆனால், பூர்வபக்ஷிகள், சரணாகதியை அநுஷ்டானமாக ஏற்க வில்லை. அவ்வாறு செய்வதை பாபச் செயல் என்கின்றனர். சரணாகதி என்பது, சாஸ்த்திர விரோதமாக, மனோ வ்யாபாரமாகக் கொள்கின்றனர் பூர்வபக்ஷிகள்; இந்த புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயத்தை, சாஸ்த்திரம் மட்டுமே கொண்டு தெளிய வேண்டியவற்றை, உலக உதாரணம் காட்டி விளக்குகின்றனர் பூர்வபக்ஷிகள்.

இப்படி ஸ்ரீராமானுஜரரால் அநுஷ்டிக்கப் பட்ட சாஸ்த்ர விஹிதமான சரணாகதி அநுஷ்டானமாவது செய்யத் தகாதது என்றும், அது அபராத கோடியிலே சேர்ந்த்தாக பூர்வபக்ஷிகளால் கூறப் படுகிறது.

புருஷார்த்தம் : ஸ்ரீபாஷ்யத்தில் நான்காம் அத்யாயத்தில் மூன்றாம் பாதத்தில் கார்யாதிகரணத்தில்

விசேஷம் ச தர்சயதி

என்கிற ஸூத்ர வ்யாக்யானத்தில்,

கைவல்யத்தை (ஆத்மானுபவத்தை மட்டுமே) பலனாக கொண்டவர்களும் அர்ச்சிராதி மார்கத்தில் செல்லாமலேயே இந்த ப்ரக்ருதி மண்டலத்திலேயே பரிமிதமான பலத்தை அநுபவிக்கிறார்கள் என்று அருளிச் செய்கிறார்.

இது ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தில் ஏற்றுக் கொண்ட விஷயம்.

பூர்வபக்ஷிகள், அநித்யமான கைவல்ய அநுபவம் நித்ய அநுபவம் மட்டுமே கொண்ட பரமபதத்தில் எற்படுவதாக கூறுகின்றனர்.

4. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீபாஷ்யத்தை தழுவியே அனைத்து க்ரந்தங்களையும் அருளிச் செய்ததாலேயே, ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம் என்கிற பெயர் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திற்கு ஏற்றதாகிறது.

5. ஆக, வேத மார்க்கமான ஸ்ரீ ராமானுஜர் அருளிய க்ரந்தங்களைக் கொண்டே, நம் ஸம்ப்ரதாய நூல்களயும், மற்றும் வ்யாக்யனங்களையும் ஆராய்ந்து பார்த்து, அநுஷ்டிக்க வேண்டுவதாகிறது.

வேத மார்க்கமான ஸித்தாந்தம் வளர, ஸ்ரீ ராமானுஜர், தான் அருளிய நூல்களைக் கொண்டு, அதை ப்ரவர்த்திப்பிக்க 74 ஸிம்ஹாஸந அதிபதிகளை தயார் செய்து, அவர்கள் மூலமாக ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தத்தை ப்ரவர்த்தகம் செய்ய நியமித்தார்.

ஆனால், பூர்வ ஆசார்யர்களின் ஸ்ரீஸுக்திகளிலும், ஆழ்வார் பாசுரங்களிலும் மற்றும் அவைகளை அநுஸரித்த பகவத் ராமானுஜர் அருளிச் செய்த க்ரந்தங்களிலும் தெளிவான ஞானம் இல்லாமையே, உபநிஷத்துக்கு விரோதமாக, பல விபரீத யுக்திகளால், சாஸ்த்திர விஷயங்களை மாற்றி புரிந்து கொள்வதற்கும், எழுதுவதற்கும், உபந்யஸிப்பதற்கும் காரணமாகின்றன. அவர்களும், ஸ்ரீ ராமானுஜ வழி வந்தவர்களாகக் கூறுவது, ஸித்தாந்த விரோதம்.

6. ஆக, பெரிய பிராட்டி ஈஸ்வர தத்வம் இல்லை என்பதும், சரணாகதி அநுஷ்டானம் பாபச் செயல் என்பதும், கைவல்ய புருஷார்த்த அநுபவம் ஸ்ரீவைகுண்டத்தில் ஏற்படுவது என்பதும் ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

34. கீதையில் சரமஸ்லோகத்திற்கு விளக்கம் ஸ்வதந்திர ப்ரபத்தி ஆகுமோ?

1. பகவத் ராமானுஜர், தனது கீதா பாஷ்யத்தில், சரமஸ்லோக விவரணம் அளிக்கும் போது, ஸ்வதந்திர ப்ரபத்தி பரமாக விளக்கங்களை அருளவில்லை.

ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ கீதா பாஷ்யத்தில் சரமஸ்லோகத்திற்கு இரண்டு விதமாக பொருள் அருளியுள்ளார்.

முதல் யோஜனையில், **ஸாத்வீக த்யாக பரமாக** பொருள் அருளியுள்ளார்.

அதாவது, கர்ம யோக ஞான யோக பக்தி யோகங்களை, கர்த்ருத்வ த்யாக மமதா த்யாக பல த்யாகங்களோடு செய்ய வேண்டுமென்று பொருள் அருளியுள்ளார்.

அங்க ப்ரபத்தி பரமாக இரண்டாவது யோஜனையில் பொருள் அருளியுள்ளார்.

அதாவது, அங்க ப்ரபத்தி, பக்தி யோகத்திற்கு அங்கமாய் நின்று பக்தி யோக விரோதி பாபங்களை போக்கும் ப்ரகாரத்தை அருளிச் செய்துள்ளார்.

ஆக, பக்தி யோக நிஷ்டன், அவனுடைய யோகம் தடை படாமல் இருக்க, அதாவது பக்தி யோகத்திற்கு தடையான பாபங்கள் விலக, பக்தி யோகத்திற்கு அங்கமாக ஒரு சரணாகதி அநுஷ்டானத்தை மேற்கொள்ள வேண்டுவதாகிறது. அதையே அங்க ப்ரபத்தி என்பர்.

இதைக் கொண்டு, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில் சரமஸ்லோகத்திற்கு விளக்கம் ஸ்வதந்திர ப்ரபத்தி, அதாவது மோக்ஷ பலனைப் பெற சரணாகதி அநுஷ்டானம், உபாயமாகாது, என ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் கூறுவர்.

பகவான் ஸர்வ ரக்ஷகன் என நினைந்து, மோக்ஷ பலனுக்காக தான் ஒன்றும் செய்யாதிருப்பதே ஜீவ லக்ஷணம், அதுவே சரணாகதி, என்பர் பூர்வபக்ஷிகள்.

இது பஹுவித ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

2. மேலும், ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள், ஸாத்யோபாயமான **பக்தி யோகம்** மற்றும் **சரணாகதி அநுஷ்டானம்** இரண்டுமே ஜீவர்களின் ஸ்வரூப விருத்தம் என்கிற கொள்கையைக் கொண்டவர்.

பகவத் கீதையில், அஹங்கார கர்பமான பக்தி யோகத்தை, அர்ஜுனனுக்கு கண்ணன் உபதேசித்து மதி மயக்கத்தை உண்டு பண்ணினான், என்பர் பூர்வபக்ஷிகள்.

அர்ஜுனனுக்கு ஏற்பட்ட செருக்கை அடக்க, இந்த உபாயமல்லாத பக்தி யோக விளக்கங்களால் மதி மயக்கத்தை உண்டு பண்ணி, பிறகு அவனுக்கு கர்ம, ஞான மற்றும் பக்தி யோகங்களின் செயல்களை செய்யத் தகாதது என கூறுகிறான் கண்ணன் என்கிற பூர்வ பக்ஷிகளின் வாதம் பொருந்தாது; காரணம்,

பகவத் கீதை - 2ம் அத்யாயம் 7 வது ஸ்லோகம் -

தன் கவலைகளை பல ஸ்லோகங்களில் வெளியிட் பிறகு, அர்ஜுனன் தனது முதல் கேள்வியை கண்ணனிடம் கேட்கிறான் ;

கார்பண்ய தோஷோ உபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸம்மூடசேதா:யத் ஸ்ரேய: ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந் மே சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்

அதாவது,

நான் தர்ம விஷயத்தில் குழம்பியவனாக உள்ளேன். (மதிப்பிற்குறிய உறவினர்களை கொல்வது தர்மமா ?) ஸ்ரேயோ மார்க்த்தை (பரம புருஷார்த்த்தை) தெளிய விரும்புகிறேன். எனக்கு எது நன்மையானதென்று உன்னால் நிச்சயிக்க பட்டதோ, அதை உன் சிஷ்யனாய் உன்னை சரணமடைந்த எனக்கு, கூறி கட்டளையிட வேண்டும், என்பதாகிறது.

ஆக, அர்ஜுனனின் செருக்குக்கு இடமில்லை.

ஸர்வேஸ்வரனான கண்ணன், அர்ஜுனன் தெய்வ குணம் உடையவன் என்று இந்த ஸ்லோகத்தில் உறுதி படுத்துகிறான்.

16ம் அத்யாயம் 5 வது ஸ்லோகம் -

தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா. மா ஷுச: ஸம்பதம் தைவீம்பிஜாதோஸி பாண்டவ

அதாவது,

தைவ ஸம்பத் மோக்ஷ சாதனம். அஸுரரை சார்ந்த ஸம்பத் சம்சார பந்தத்திற்கு ஹேதுவாகும். அர்ஜுனா நீ தைவ ஸம்பத் உடையவன். கவலைப் படாதே, என்பதாகிறது.

ஆக, அர்ஜுனனின் செருக்குக்கு இடமில்லை.

மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை பூரணமாக விளக்கிவிட்டான் ஸர்வேஸ்வரனான கண்ணன்; இனி அர்ஜுனனை தனக்கு மிகவும் பிடித்தவன் என்று கூறி, பக்தி யோகத்தின் சுருக்கத்தை வரும் இரண்டொரு ஸ்லோகங்களில் விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 64 வது ஸ்லோகம் -

ஸர்வ குஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரம் வச: இஷ்டோஸிமே த்ருடமிதி ததோ வஷ்யாமி தே ஹிதம்

அதாவது,

'எனக்கு நீ மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறபடியால் பரம ரஹஸ்யமான பக்தி யோகத்தை மீண்டும் உபதேசிக்கிறேன். கேள்.' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம

ஆக, அர்ஜுனனுக்கு ஏற்பட்ட செருக்கை அடக்க பக்தி யோகத்தைக் கூறியதாக ஏற்க இயலாது.

மேலும், இவ்வாறு அர்த்தம் கொண்டால், பக்தி யோகத்தை செய்யச் சொல்லுகிற வேத வேதாந்த வாக்யங்களுக்கும், ப்ருஹ்ம ஸுத்ரத்திற்கும், பகவத் ராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீகீதா பாஷ்யம் போன்றவைகளையும் விரோதிக்கும்.

3. ப்ரமாணங்கள் அனைத்தும் **சரணாகதி அநுஷ்டானம்** மோக்ஷ ஸாதனம் என உரைக்கின்றன:

ச்வேதாசுதர உபநிஷத்தில்,

யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை, தகும் ஹ தேவம் ஆத்ம்புத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே

என்கிறது.

அதாவது

எவனுடைய நாபியிலிருந்து ப்ருஹ்மா உதித்தானோ, எவன் ப்ருஹ்மாவுக்கு வேதத்தை உபதேசித்தானோ, எவன் ஸர்வருக்கும் தத்வ ஞானத்தை தெளிவாக ப்ரகாசிக்க செய்ய வல்லவனோ அவனை மோக்ஷத்தை விரும்புவர்கள் சரணமாக அடைய வேண்டும்.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனையே சரணமாகப் பற்ற வேண்டுவதாகிறது.

அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில்,

பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே I ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி:

என்று ஸ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளபடி பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் பக்தி யோகத்தை செய்தாவது அல்லது சரணாகதியை செய்தாவது என்னை அடைய வேண்டும். இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது.

மேலும், இதையே

நாந்யப்பந்தா அயனாய வித்யதே

என்கிற தைத்ரீய உபநிஷத், இதைத் தவிர மோக்ஷத்திற்கு வேறு ஒரு வழி கிடையாது என்கிறது.

இந்த இரண்டு உபாயங்களில், பக்தி யோகத்தைப் பற்றி விரிவாக **ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதனாத்யாயத்தில்** பகவத் ராமானுஜர் அருளிச் செய்தார்.

சரணாகதியைப் பற்றி **சரணாகதி கத்யத்தில்** அருளிச் செய்து

அநந்ய சரண: த்வத் பாதார விந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே

என்று பெருமாள் தாயார் சேர்த்தியில், ஒரு பங்குனி உத்தர நிருநாளிலே, சரணாகதியை அநுஷ்டித்தார் பகவத் ராமானுஜர்.

4. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், சரமஸ்லோக அர்த்தத்தை பொதுவாக விவரிக்கும் போது, ஸ்ரீராமானுஜர் அருளியதை அநுசரித்து,

ஸுதுஷ்கரேண சோசேத்ய: யேந யேந இஷ்ட ஹேதுந்நா ஸ ஸ தஸ்ய அஹமே வேதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:

என அருளினார்.

அதாவது, 'யார் ஒருவன் தான் விரும்புகிற பலனை தரக் கூடிய உபாயத்தை அநுஷ்டிக்க முடியாமல் வருந்தி என்னை சரணமாக பற்றுகிறானோ, அவனுக்கு நானே உபாயமாக இருந்து பலனளிக்கிறேன்' என்பதை சரமஸ்லோகத்திற்கு அர்த்தமாக விளக்கினார்.

இது, ஸ்ரீராமானுஜர் அருளிய கீதா பாஷ்யத்தோடும், சரணாகதி கத்யத்தோடும் முற்றிலுமாக பொருந்தும்.

மேலும் **சரம ஸ்லோக அதிகாரத்தில்**, ஸ்வாமி தேசிகனின் வரிகள்:

ஸ்ருதி ஸித்தமான இவ்வர்த்தத்தை சரண்யனான ஸர்வேஸ்வரன் தானே உபதேசிக்க இது தானே "ஸந்த்யஜ்ய விதினா நித்யம் சட்விதா சரணாகதிம் ஆசார்ய அநுக்ஞயா குர்யாத் சாஸ்த்திர த்ருஷ்டேன வர்தமனா" என்று ஸ்ரீ விஷ்ணுத்வாதிகளிற் சொன்ன ஆசார்ய அநுக்ஞையுமாயிற்று

அதாவது,

விஷ்ணு தர்மத்தில் சௌனக மஹரிஷி,

கர்ம ஞான பக்தி யோகங்களை அநுஷ்டிக்க இயலாத போது, ஐந்து அங்கங்களையும் ஒரு அங்கியும் உடைத்தான சரணாகதி அநுஷ்டானத்தை, ஸாத்வீக த்யாகத்தோடு, ஆசார்ய அனாக்ரஹம் பெற்று சாஸ்த்திர விதிப்படி செய்ய வேண்டுவதாகிறது, என அருளினார்.

5. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில் சரமஸ்லோகத்திற்கு விளக்கம் ஸ்வதந்திர ப்ரபத்தி ஆகாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

35. ஸர்வ தர்மாந் - என்பது வர்ண ஆஸ்ரம தர்ம நிஷேதமா?

1. சரமஸ்லோகத்தில் முதல் இரண்டு பதங்களாவன - **ஸர்வ** என்றும் **தர்மாந்** என்றும் உள்ளன.

ஸர்வ என்கிற பதத்தினால் **அனைத்து** என்கிற ஸாமான்ய அர்த்தமும், **தர்மாந்** என்கிற பஹுவசன (பன்மை) பதத்தினால், **தர்மங்களையும்** என்கிற ஸாமான்ய அர்த்தமும் ஸித்திக்கும்.

ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய சரமஸ்லோக ப்ரகரணத்தில், இந்த **ஸாமான்ய அர்த்தம்** அத்யந்த அநுபபன்னம். ஏனெனில் இந்த ஸாமான்ய அர்த்தத்தினால் ஸித்திக்கும் சரமஸ்லோக பொருள் பல சாஸ்த்திர ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

உலக வழக்கிலும், சப்தங்களுக்கு அகராதி வழி பொருள் இருக்க, அந்தந்த ஸந்தர்பங்களில் அர்த்த நிர்ணயம் நிபுணர்கள் செய்வர்.

உடல் நலம் அற்றவன் மருத்துவரை அணுகுகிறான்; பல வகை மருந்துகள் அவ்வப் போது பரிந்துரைக்கப்படுகின்றன; அவற்றை பல காலம் உட்கொள்ளும் நோயாளி, ஒரு சமயம், அந்த மருத்துவரிடம் இந்த மருந்துக்கள் தரும் பக்க விளைவுகளான, வயிற்றுப் போக்கு பசியின்மை போன்றவற்ற தெரிவிக்க, அந்த மருத்துவர் அனைத்தையும் விட்டுவிடு ; ஆகாரத்தில் மட்டுமே நியமங்களோடு பின்பற்றச் சொன்னால், அந்த அனைத்தையும் என்பதற்கு என்ன பொருள் கொள்ள முடியும்.

அனைத்தையும் விட்டுவிடு என்கிற பதத்திற்கு அகராதியில் உள்ளபடி அர்த்தம் கொண்டால், தன் வீடு, சொத்து, உறவினர் போன்றவற்றையும் விட்டுவிட ப்ரஸங்கிக்கும் அன்றோ! இந்த ஸாமான்ய அர்த்தம் அத்யந்த அநுபபன்னம் என உணர்ந்து, அந்த ப்ரகரணத்திற்கு பொருந்திய அர்த்தத்தையே ஸ்வீகரிக்கிறோம் அல்லவா?

2. **தர்ம** சப்தமானது அலௌகிக புருஷார்த்த ஸ்ரேயஸ் ஸாதனம், எனப்படுகிறது. அதாவது, ப்ரத்யக்ஷத்தில் அறிய முடியாத, சாஸ்த்திரம் கொண்டே அறிய வேண்டுகிற உயர்ந்த பலனுக்கான செயல்.

அதாவது, சாஸ்த்திரம் **ஸவர்க்க காமோ யஜேத** என்கிறது; அதாவது ஸ்வர்க்க பலனில் இச்சை கொண்டவன் யாகம் செய்ய வேண்டும் என்பதாகிறது; ஆக யாகம் என்பது **தர்மம்** என்கிற பதத்திற்கு விஷயம்.

நன்றாக மாணவன் படித்தால் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெறலாம்; இது சாஸ்த்திரம் தேவையின்றி ப்ரத்யக்ஷத்திற்கு விஷயம்; அதனால், நன்றாக படிப்பது என்பது தர்மம் என்கிற பதத்திற்கு விஷயமாகாது.

3. ஆக, **ஸர்வ** என்பதற்கான பொருளை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் அருளியுள்ளார்.

ஸர்வ சப்தத்தாலே சபரிகரமான நிலையை விவக்ஷிக்கிறது

பக்தி யோகத்திற்கு அங்கமாக கர்ம யோகம் மற்றும் ‘ஞான யோகம் விதிக்க பட்டிருக்கிறது.

இது பக்தி யோக ப்ரகரணம்.

கர்ம யோகமாவது தபஸ், யக்ஞம், தானம், தேவார்ச்சனை, தீர்த்த யாத்திரை, வேத அத்ய்யனம் முதலானவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து பலனை பெறுமளவும் விடாமல் அநுஷ்டிப்பதாகும். கர்ம யோகத்தினால் புலன் அடக்கம் ஏற்படுகிறது.

அதன் பிறகு செய்யப்படும் ஞான யோகத்தினால் (உலக விஷயங்களிலிருந்து மனதை முற்றிலுமாக அகற்றி, ஆசார்யன் மூலமாக கற்ற ஆத்ம விவரங்களை கொண்டு, தன்னுடைய ஆத்ம சிந்தனத்தில் ஈடுபடுவதால்) தன்னுடைய ஆத்மாவை காண முடிகிறது, அதாவது, ஆத்ம ஸாக்ஷாத்காரம் (தன் ஆத்மாவை தரிசிக்க முடிகிற நிலை) பெற முடிகிறது;

ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவன் தான் பகவத் ஸாக்ஷாத்காரத்தை பெற பக்தி யோகம் செய்ய முடியும்.

பகவத் ஸாக்ஷாத்காரம் பெறுவதற்கு, பக்தி யோகத்தினால் (ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை இடைவிடாது த்யானிப்பதினால்) பகவானை அடைய முடிகிறது; பகவத் ஸாக்ஷாத்காரம் பெற முடிகிறது;

அதாவது, கர்ம சம்பந்தம் அற்ற துக்கம் கலசாத இன்ப நிலையாகிற பரமபதத்தை அடைதல்.

தைல தாரையைப் போல் (அதாவது, எண்ணெயை பெருக விட்டால் இடைவெளி இல்லாமல் சீராக விழுவது போல்), எப்பொழுதும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனைப் பற்றியே, நினைவில் இடைவெளி அற்று, இந்த பக்தி யோகம் செய்பவனுக்கு இருக்க வேண்டும்.

இந்த பக்தி யோகம் தேவர்களுக்கு மோக்ஷ காரணமாக விதிக்கப் பட்டிருக்கிறது; முந்தய யுகங்களில், இந்த ப்ராக்ருத லோகத்தில் இருந்த, பீஷ்மர், ஜனகர், வ்யாஸர் போன்றவர்கள் பக்தி யோகம் செய்தவர்கள்.

இங்கு **ஸர்வ** என்கிற வசனம் பக்தி யோகத்திற்கு அங்கங்களான கர்ம யோகம் மற்றும் ஞான யோகம் என்கிற பக்தி யோக பரிகரங்களையே விவக்ஷிக்கிறது என்றபடி.

4. மேலும், **தர்மாந்** என்பதற்கான பொருளை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் அருளியுள்ளார்.

தர்மான் என்கிற பஹுவசனத்தாலே அபிமத ஸாதநமாக சாஸ்த்திர சோதிதங்களான தர்மங்களுடைய பாஹுல்யத்தைச் சொல்லுகிறது

அதாவது,

இந்த பக்தி யோக ப்ரகரணத்திலே, மோக்ஷ உபாயமான உபாஸநத்தை பல ப்ரகாரமாக, சாஸ்த்திரங்கள் விளக்குகின்றன.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்** (3-3-24-56) மற்றும் அதற்கு வ்யாக்யானமான **ஸ்ரீ ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யம்** விவரிக்கும் போது,

நாநா சப்தாதி பேதாத்

அதாவது,

பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைகிற வழியாகிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை,

என விளக்கப் படுகிறது.

பொதுவாக **உபாஸனம்** (பக்தி யோகம்) மோக்ஷ ஸாதனம் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

அதனால், பகவத் அநுபவத்தையே பலனாக விரும்புவர்களுக்கான மோக்ஷம் பெறும் வித்யைகள் 32 வகைகள் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதாவது, ஸத் வித்யை, தஹர வித்யை, பூம விதியை, மது வித்யை போன்றவைகள். இவைகள் அனைத்திலும், த்யானிக்கப் படுபவன் ஸ்ரீமந் நாராயணன். ஆனால், இந்த வித்யைகளை அநுஷ்டிக்கும் முறைகளில் வித்யாஸங்கள் உள்ளன.

மேலும் இவ்விஷயத்தை, உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்** (3-3-25-57) மற்றும் அதற்கு வ்யாக்யானமான **ஸ்ரீ ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யம்** விவரிக்கும் போது,

விகல்போ அவிஸிஷ்டபலத்வாத்

அதாவது,

அனைத்து ப்ருஹ்ம வித்யைகளும் ஒரே மோக்ஷ பலனையே கொடுக்கும்,

என விளக்கப் படுகிறது.

இங்கு தர்மாந் என்கிற பஹுவசனம் (பன்மை) பல விதங்களான உபாஸனத்தையே விவக்ஷிக்கிறது என்றபடி.

5. ஸ்வாமி தேசிகன், இவ்விளக்கங்களுக்கான காரணத்தையும் ஸங்க்ரஹிக்கிறார்.

இங்கு ப்ரகரணவசத்தாலே மோக்ஷார்த்தமாக சாஸ்த்திர விஹிதங்களாய் சபரிகரங்களாய் நாநா ப்ரகாரங்களான உபாஸநங்களையெல்லாம் சொல்லுகையிலே தாத்பர்யம்

அதாவது, பகவத் கீதையில் ப்ரதானமாக உபாஸந (பக்தி யோக) விளக்கங்களே பல அதிகாரங்களில் ஸம்பவித்திருப்பதால், மோக்ஷ பலனுக்கான உபாயமாக உபாஸநம் விளக்கப்படுவதால், அதனுடைய விகல்பங்களையும் அங்கங்களையுமே இப்பதங்கள், அதாவது ஸர்வ தர்மாந் என்கிற பதங்கள், அர்த்த நோக்கு கொண்டதாக தெளிய வேண்டும்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு "ஸர்வ தர்மாந்" என்கிற பதங்களின் விளக்கம், சாஸ்த்திரம் விதித்த நித்ய நைமித்திக கர்மாக்கள் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

36. ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய - பக்தி யோகத்தின் நிஷேதமா?

1. ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய என்கிற பதங்களின் விளக்கம், சாஸ்த்திரம் விதித்த "பக்தி யோகம்" செய்யத் தகாதது என்கிற விதி என்று ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் அர்த்தம் கற்பிப்பர்.

ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் க்ரந்தமான வசன பூஷணம் எண். 115, 116, 117 & 118 - இந்த 4 எண்களின் கீழ் **பக்தி யோகம்** ஸ்வரூப ஞானம் பெற்றவர்கள் கண்டிப்பாக செய்யக்கூடாது என நிர்தேசித்து கடைசியில் (118) கீழுள்ள வரிகளால் முடிக்கப் படுகிறது.

.... ஸ்வரூபத்தை உள்ளபடி உணர்ந்த ஞானிகளுக்கு இவை அபாயமாவானேன் என்னில் அத்யந்த பரதந்தந்த்ரியமாகிற ஸ்வரூபத்துக்கு தன் முயற்சி ரூபமான உபாயாந்தரம் (பக்தி யோகம்) கெடுதலை விளைவிக்கும் ஆகையாலே அபாயமென்னக் குறையில்லை..

இது, வேத வ்யாஸர் அருளிய உபநிஷத் ஸாரமான ப்ருஹ்ம ஸூத்ர வரிகளோடும் அதற்கு வ்யாக்யனமான பகவத் ராமானுஜர் அநுக்யஹித்த ஸ்ரீ பாஷ்ய க்ரந்த ஸாதன அத்யாயத்தோடும் விரோதிக்கும்.

2. ஒரு வரியில் காரண-காரிய விஷயங்கள் ஸம்பவிக்கும் போது, அதை இரு விதமாக அர்த்தம் செய்யலாம்.

அநுவாத பக்ஷம் - இருக்கும் நிலையை தெளிவிப்பது.

விதி பக்ஷம் - நிபந்தனையோடு கூடிய செயலை தெளிவிப்பது.

உதாரணமாக,

சாஸ்த்திரமானது, அபோஜ்யம் புக்த்வா சாந்த்ராயனம் சரேத் என்கிறது.

அதாவது, சாப்பிடக் கூடாத ஆகாரத்தை உண்டு சாந்த்ராயன வ்ரதத்தை அநுஷ்டக்க வேண்டுவது, எனப் பொருளாகிறது.

இது அநுவாத பக்ஷம் ; ஏனெனில், சாப்பிடக் கூடாத ஆகாரத்தை உண்டிருந்தால் (இருக்கும் நிலை), சாந்த்ராயன வ்ரதத்தை அநுஷ்டக்க வேண்டும், என்பதாகிறது.

சாப்பிடக் கூடாத ஆகாரத்தை உண்டு விட்டு (நிபந்தனையோடு கூடிய செயலாக), சாந்த்ராயன வ்ரதத்தை அநுஷ்டக்க வேண்டுவது, என்பது பொருந்தாது.

நித்ய நைமித்திக கர்மாக்களை சாஸ்த்திரங்கள் விதிக்கிறது. (நிபந்தனையோடு கூடிய செயலை தெளிவிப்பது); செய்மாமல் போனால் பாபம் சம்பவிக்கும்.

பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு, ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய என்கிற பதங்களுக்கு, விதிபரமாக அர்த்தமாக, பக்தி யோகம் செய்யக்கூடாததாக விதி உள்ளது என்பர் பூர்வபக்ஷிகள்.

இந்த அர்த்தம் ப்ரமாண விரோதம்.

3. இந்த **ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய** என்பதற்கு ஆறு வித அர்த்தங்களை ஸ்வாமி தேசிகன் விளக்குகிறார்.

பக்தி யோகத்தைச் செய்ய சக்தி அற்ற தன்மையினால் பக்தி யோகத்தை கை விட வேண்டியது

ஆகிஞ்சன்ய காரணமாக பக்தி யோகத்தை கை விட வேண்டியது

ஐந்து அங்கங்களை அன்றி மற்ற எந்த ஒரு செயலையும் எதிர்பாராமல் இருக்கும் ப்ரபத்தையைக் கை கொள்வது

தன்னால் முடியாதவற்றை முயற்சி செய்வதை, பக்தி யோகத்தை, முற்றிலுமாக கை விட வேண்டியது

தன்னால் முடியாதவற்றில், பக்தி யோக அநுஷ்டானத்தில், ஆசையைக் கைவிடுதல்

ப்ருஹ்மாஸ்த்ர ந்யாயத்தை ஸுசிப்பித்தல் - அதாவது, ப்ரபத்தி அநுஷ்டானமானது வேறொரு உபாயத்தை ஸஹியாது.

4. சாஸ்த்ரத்தை ப்ரமாணம், அதாவது நம்பத் தகுந்த அத்தாட்சி, என்று கண்ணன் கீதையில் (16-24 **தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே..**) கூறினான். வைதீக மதங்களால், வேதம் மற்றும் வேதாந்தம் (உபநிஷத்) என்ற சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கருதப் படுகிறது. அவைகளே ஸத் ஸம்ப்ரதாயத்திற்கு ஆதாரமாக இருக்கிறது. அவைகளைக் கொண்டே பகவத் ராமானுஜரும், ஸ்வாமி தேசிகனும் மற்றும் பல ஆசார்ய சீலர்களும் க்ரந்தங்கள அருளிச் செய்துள்ளனர். ஆழ்வார் பாசுரங்களும் உப ப்ருஹ்மணங்களும் (ஸ்மருதி, இதிஹாஸம், புராணம் போன்றவைகள்)

வேத வேதாந்தங்களை விளக்க வந்தமையாகையால், அதன் பொருட்கள் வேத வேதாந்தங்களுக்கு மாறாக இருக்க வாய்ப்பில்லை. நாம், ஆழ்வார் பாசுரங்களுக்கும் உப ப்ருஹ்மணங்களுக்கும், தவறாக அர்த்தம் கற்பித்து, அவ்வழியால் ஆழ்வார் பாசுரங்களையும் உப ப்ருஹ்மணங்களையும் சாஸ்த்ரங்களுக்கு மாறான ஒரு நம்பகமான அத்தாட்சியாகக் கொள்ளலாகாது என்பதை உணர்ந்து இந்த வரியை நோக்க வேண்டும்.

அவ்வழியிலே, இந்த ஸ்லோகத்தில் கூறியதன் பொருள்: கடினமான பக்தி யோகத்தை செய்ய ஞான சக்தி போன்றவைகளை அற்றவன், அதனால் பக்தி யோகத்தை செய்ய முடியாமல் சோகப் படுகிறவன், பக்தி யோகத்தை விட்டு சுலபமாக, மோக்ஷத்தைப் பெற ஸர்வேஸ்வரனான கண்ணனின் திருவடிகளை பற்றி, 'சரணாகதி'யை அநுஷ்டிக்கலாம் என்றே தாத்பர்யம்.

இதுவே, பக்தி யோகத்தை விதிக்கிற உபநிஷத் வாக்யங்களுக்கும், ப்ருஹ்ம ஸூத்ரத்தில் கூறியதற்கும் மேலும் பகவத் ராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீகீதா பாஷ்யம், சரணாகதி கத்யம் போன்றவைகளில் காட்டிய அர்த்தம் ஆகும்.

அதாவது, பக்தி யோகம் செய்ய வ்யாஸர், ஜனகர், பீஷ்மர் போன்ற மஹாத்மாக்களுக்கு ஞானம், சக்தி போன்ற தகுதிகள் உள்ளன; அவர்களுக்கு பக்தி யோகமே மோக்ஷத்திற்கான வழி. அதற்கு தகுதி அற்றவர்கள் அனைவரும், சரணாகதியை அநுஷ்டிக்கலாம். ஆதலால், இந்த பொருளையே வேத வேதாந்தங்களை நம்ப தகுந்த அத்தாட்சியாக (ப்ரமாணமாக) கொண்டு நம் ஸதாசார்யர்கள் அருளியுள்ளனர்.

பக்தி யோகத்தை செய்யத் தகாதது என்பதும் அனைவரும் கண்டிப்பாக கை விட வேண்டும் என்பதும் சாஸ்த்ரத்திற்கு (வேத வேதாந்தங்களுக்கு) முரணான கூற்று. கண்ணன் சாஸ்த்ரத்தையே ப்ரமாணமாக (நம்பத் தகுந்த அத்தாட்சியாக) கொள்ள வேண்டும் என்று கீதையில் வலியுருத்தியிருக்கிறான் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

5. இந்த **ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய** என்பதற்கு விதி பக்ஷமாக அர்த்தம் கூற வேண்டுமானால், ப்ரபத்தி அநுஷ்டானமானது அதற்கு அங்கமான கார்ப்பண்யத்தை விதிக்கிறது எனக் கூறக் குறையில்லை.

இதில் அர்த்த விரோதம் கிடையாது.

இது சம்பந்தமான ஸ்வாமி தேசிகனின் சரமஸ்லோக அதிகாரத்தில் வரிகள்:

பரிதாயைஜ்ய என்பது விதியானபோது ப்ரபத்யாதிகளில் விதிக்கிற படியே ஆகிஞ்சன்ய ப்ரதிஸம்பந்தானாதிரூபமான கார்ப்பண்யமாகிற ப்ரபத்தி அங்கத்தை விதிக்கிறதென்றால் அர்த்தத்தில் விரோதமில்லை

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு "**பரித்யைஜ்ய**" என்கிற பத விளக்கம், சாஸ்த்திரம் விதித்த "பக்தி யோகம்" செய்யத் தகாதது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

37. <u>பரித்யைஜ்ய - கர்ம ஞான பக்தி யோகத்தின் ஸ்வரூப த்யாகமா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களின் விளக்கம், கர்ம ஞான பக்தி யோகத்தின் ஸ்வரூப த்யாகம், என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. சாஸ்த்திரங்களில் விதிக்கப் பட்ட உபாஸநம் என்கிற பக்தி யோகம், அதிகாரி பேதமின்றி, ஸ்வரூபேண நிஷித்தம் என ஸித்தாந்த ஏகதேசிகள் வாதிடுவர். அதாவது, பக்தி யோகமாவது, எந்த ஒரு சம்சாரி ஜீவருக்கும் செயக்கூடியது அல்ல, என கூறுவர்.

இது பஹுவித ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

2. உபநிஷத்தில், ஸர்வ சுதந்திரனான பகவானுடைய செயலை, வர்ணிக்கிறது. அதாவது,

நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்

என்கிறது கடோபநிஷத்.

அதாவது, இந்தப் பரம்பொருளை வேதங்களின் மூலமோ, பக்தி யோகம் மூலமோ, அவனைப் பற்றியே கேட்டுக் கொண்டிருப்பதன் மூலமோ அடைய இயலாது; அந்தப் பரம்பொருள் எந்த ஒருவன் தன்னை அடையத்தக்கவன் என்று தேர்ந்தெடுக்கிறானோ அந்த ஒருவனுக்கு மட்டுமே தன்னை உணர்த்துகிறான் என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

இதை ப்ரமாணமாகக் கொண்டு, பூர்வபக்ஷிகள் கர்ம யோக ஞான யோக பக்தி யோகத்தை ஸ்வரூபேண த்யாஜ்யம் என்பர்.

ஆனால், **ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:**

என்கிறது பிரகதாரண்யக உபநிஷத்.

அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ஆக, இரண்டு உபநிஷத் வரிகளுக்குள் முரண்பாடு இருப்பதாக ஒரு தோற்றம் உண்டாகிறது. உபநிஷத் வரிகளில், ஒன்றை ஏற்று ஒன்றை விடுவது முறையாகாது. அது சாஸ்த்திரத்தை மீறிய செயலாகும்.

அதற்கு ஸ்ரீராமானுஜர் அருளிய விளக்கத்தை கவனித்தால், சாஸ்த்திர விரோதம் இல்லாமல், முரண்பாடு கூடியதாக தோற்றமுள்ள வரிகளை எவ்வாறு விளக்கமளிக்க வேண்டுமென புலப்படும்.

ஸ்ரீ பாஷ்யத்தில் இவ்விரண்டு உபநிஷத் வாக்யங்களும் முரண் படாதபடி, உபநிஷத் விஷயங்களை ஆராய்ந்து, கீழ் உள்ளவாறு, அருளிச் செய்தார் ஸ்ரீ ராமானுஜர்:

ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி

அதாவது,

தன் பக்கல் அன்புடன் பக்தி யோகம் செய்பவர்கள் இந்தப் பரம்பொருளை அடைய முடியும் என்று பிரகதாரண்யக உபநிஷத் விஷயத்தையும்,

தன் பக்கல் அன்பு இல்லாதவர்கள் இந்தப் பரம்பொருளை பக்தி யோகத்தால் அடைய முடியாது என்று கட உபநிஷத் விஷயத்தையும்,

ஒன்று படுத்தி கூறி அருளினார் ஸ்ரீ ராமானுஜர்.

ஆக, பக்தி யோகம் செய்யத் தகாதது என்கிற பக்ஷம், ஸ்ரீ ராமானுஜ க்ரந்தங்களோடு விரோதிக்கும்.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில், பக்தி யோகத்தின் ப்ராமாண்யத்தை தன் திருவாக்கானாலே தெளிவித்திருக்கிறான்.

மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை, 18 அத்யாயங்களில் பூரணமாக விளக்கி, ஸர்வேஸ்வரனான கண்ணன், இனி அர்ஜுனன் கீதோபதேசத்தை ஆராய்ந்து செயல் படட்டும் என்றான் இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 63 வது ஸ்லோகம்

இதிதே க்ஞானமாக்யதாம் குஹ்யாதகுஹ்யதரம் மயா. விம்ருச்யை ததசேஷேண யதேச்சஸி ததா குரு

அதாவது,

‘மோக்ஷம் பெறுவதற்கான ரஹஸ்யங்களுக்குள் மிக ரஹஸ்யமான கர்ம, ஞான, பக்தி யோகம் உனக்கு நன்கு விளக்க பட்டது. நீ பராமர்சித்து உன் விருப்பம் போல் செய்.’ - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

மேலும், பக்தி யோகத்தின் சுருக்கத்தை விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 64 வது ஸ்லோகம்

ஸர்வ குஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரம் வச: இஷ்டோஸிமே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்

அதாவது,

‘எனக்கு நீ மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறபடியால் பரம ரஹஸ்யமான பக்தி யோகத்தை மீண்டும் உபதேசிக்கிறேன். கேள்.’ - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

இவ்வாறு பக்தி யோகத்தை அறுதியிட்டு கண்ணன் விளக்கியதை, ஸ்வரூப விருத்தம் என்றும் செய்யத் தகாதது என்றும் பூர்வபக்ஷிகள் ஸித்தாந்தம் செய்கின்றனர். அது, உபநிஷத், ப்ருஹ்ம ஸூத்ய, ஸ்ரீ பாஷ்ய க்ரந்த விரோதம்.

4. செய்யக் கூடாத செயலை எந்த ஒரு நியமும் விவரிக்காது என்பது உலக வழக்கங்களிலும் ப்ரஸித்தம்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்றவை, குற்றவியல் சட்டப்படி, எந்த ஒரு குடிமகனும் செய்யலாகாது, என்பது அனைவரும் அறிந்ததே!

இந்த மாதிரி சட்டங்களில், இக்குற்றங்களை புரிய பல் வேறு வழிகளை, அதாவது தங்கு தடையின்றி செவ்வனே குற்றம் புரிய வழிகளை விளக்கி, அதன் பிறகு இந்த குற்றங்கள் செய்யலாகாது என சட்டங்கள் உரைக்குமா?

ஆக, சாஸ்த்திரங்கள் அனைத்தும், உபாஸந முறைகளை செவ்வனே செய்ய ஆஸநம், த்யானம் போன்றவற்றை விரிவாக விளக்கி, அதன் பிறகு, அது செய்யலாகாது என உரைக்குமோ!

உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்தில் வ்யாஸ மஹரிஷி, உபாஸநத்தை மோக்ஷ ஸாதநமாக விளக்கியுள்ளார்; இதன் விளக்க உரையான ஸ்ரீபாஷ்யத்தில் பகவத் ராமானுஜர் ஸாதநாத்யாயத்தில் இதையே தெளிவித்திருக்கிறார்.

ஆக, பக்தி யோகமான உபாஸநம் செயத் தகாதது என்கிற பூர்வபக்ஷிகளின் வாதம் ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமாகாது.

5. மேலும், மோக்ஷ ஸாதநமான சரணாகதி அநுஷ்டானத்திற்கு, ஆகிஞ்சன்யனத்தை (பக்தி யோகம் செய்ய ஞான சக்தி அற்ற தன்மைமை) அங்கமாகவும் அதிகாரமாகவும் விதிக்கும் ப்ரமாணங்கள் அர்த்தமற்றதாகிவிடும்.

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழி :

அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறை மார்பா நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் என்னை ஆள்வானே நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே புகல் ஒன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

அதாவது, திருவேங்கடவனே! வேறொரு உபாயம் அடியேனுக்கு இல்லாததால், மோக்ஷ உபாயமாக உன் திருவடிகளில் சரண் அடைகிறேன்

ஸம்ஹிதா வரி:

அஹமஸ்மி அபராதானாமாலயோ அகிஞ்சனோ அகதி: த்வமேவ உபாய பூதோ மே பவதி ப்ரார்தனாமதி:

அதாவது, பாபங்களைப் போக்க பக்தி யோகம் செய்ய தகுதி அற்றவன்; எனவே உன் திருவடியை சரணமாக அடைந்தேன்.

திருமழிசை ஆழ்வார் திருச்சந்தவ்ருத்தம் :

குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன், நலங்களாய நற்கலைகள் நாவிலும் நவின்றிலேன், புலன்கள் ஐந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனித, நின்- இலங்கு பாதம் அன்றி மற்றோர் பற்றிலேன் எம் ஈசனே!

அதாவது உயர் ஜாதி என்னிடமில்லை, ஞானம் பூரணமாக இல்லை, புலனடக்கம் இல்லை, ஆகையால், பக்தி யோகம் செய்ய முடியாத அகிஞ்சனான நான் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டிக்கிறேன், என்பதாகிறது.

ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் :

நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே

அதாவது, அடியேன் கர்ம ஞான பக்தி யோகம் செய்ய முடியாமல் தேவரீர் திருவடிகளை சரணமாக பற்றியுள்ளேன்.

திருமாலையில், தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளியது :

குளித்து மூன்றனலை ஓம்பும் குறிகொள் அந்தணமை தன்னை, ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன் களிப்பதென் கொண்டு நம்பி! கடல்வண்ணா! கதறுகின்றேன் அளித்தெனக்கு அருள்செய் கண்டாய் அரங்கமா நகர் உளானே!

அதாவது,

பக்தி யோகத்திற்கான கர்மாக்களை செய்வதாகிய தன்மையை இழந்து விட்டேன், அதனால், நற்கதிக்காக உன் திருவடியைப் பற்றி நிற்கிறேன் என்றபடி.

ஆக, ஸ்வாமி தேசிகன் **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில்** பக்தி யோகம் ஸ்வரூப விரோதம் என்கிற பக்ஷத்தை நிரஸிக்கிறார். அந்த வரி:

இது பஹு ப்ரமாண ஸித்தமான கார்ப்பண்யமாகிற அங்கத்துக்கும், "புகலொன்றில்லா அடியேன்" , "குலங்களாய" , "குளித்து மூன்று" , "ந தர்ம நிஷ்டோஸ்மி இத்யாதிகளிலே ப்ரஸித்தமான ஆகிஞ்சன்ய அதிகாரமென்கிற ஸம்ப்ரதாயத்துக்கும் விருத்தமாம்

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரமஸ்லோகத்திற்கு "ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய" என்கிற பதங்களின் விளக்கம், கர்ம ஞான பக்தி யோகத்தின் ஸ்வரூப த்யாகம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

38. <u>பரித்யைஜ்ய - பக்தி யோகத்தை நிஷேதிக்கும் பகவத் கட்ளையா?</u>

1. பகவத் கீதை சரமஸ்லோக **ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய** என்கிற பதங்களாவது, சாஸ்த்திரங்களில் விளக்கப் பட்ட உபாஸநம் என்கிற பக்தி யோகம், செய்யலாகாது என ஸகல சம்சாரி ஜீவர்களுக்கும் கட்டளையிடுவதாக ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர். அதாவது, பக்தி யோகமாவது, எந்த ஒரு பரதந்தர சம்சாரி ஜீவரும் செய்யலாகாது, என கூறுவர்.

இது பஹுவித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. அத்யந்த பரதந்திர ஸ்வரூபத்தை உடைய ஜீவர்கள், மோக்ஷ காரணமாக எந்த ஒரு செயலையும் செய்வது தகாது, என்கின்றனர் பூர்பக்ஷிகள். ஸர்வ ஸ்வதந்தரனான எம்பெருமான், சம்சாரி ஜீவர்கள், ஒன்றும் செய்யாதிருக்க, ஸர்வேஸ்வரன் தானே, தன் இச்சை அடியாக, சம்சாரி ஜீவர்களை கரை சேர்ப்பான் என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்.

இந்த வாதமானது,

பஜஸ்வ மாம் என்கிற பகவத் கீதை விதிகளோடும்,

ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய: என்கிற உபநிஷத் வரிகளோடும்,

சரணம் வ்ரஜ என்கிற கண்ணன் திருவாக்கோடும்,

அவைகளுக்கு விளக்கங்களான பகவத் ராமானுஜரின் க்ரந்தங்களான, **ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்ய வேதார்த்த ஸங்க்ரஹம்** போன்ற ஸம்ப்ரதாய ப்ரமாணங்களோடும்,

விரோதிக்கும்.

இந்த பூர்வபக்ஷிகளின் இவ்வாதம் கொண்டு சரமஸ்லோகத்தை நோக்கானால், **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்பதும், அதாவது சம்சாரி ஜீவர்கள் ஸர்வேஸ்வரனை சரணமாகப் பற்றுவதும் ஏற்க தகுந்ததாகாது, என்பதே விளையும்.

ஏனெனில்,

அத்யந்த பரதந்திரனான ஜீவர்களுக்கு,

மோக்ஷ காரணமாக எந்த ஒரு செயல் செய்யவும் யோக்யதை அற்ற தன்மையை விளக்கிய பிறகு,

ஒரே வாக்யத்தில், அதாவது சரமஸ்லோகத்தில்,

மோக்ஷ காரணமாக,

ஒரு செயலைச் **செய்யச் விதிப்பதும்**, அதாவது சேஷ-சேஷி சம்பந்த ஞானத்தை பெறுவதுவும் அதன் வாயிலாக சரணாகதியை விதிப்பதும்,

மற்றொரு செயலான, பக்தி யோகத்தைச் **செய்ய நிஷேதிப்பதும்**

பரஸ்பர முரண்பாடுடைய கருத்துக்கள்.

அதாவது, செயல் செய்ய தகுதி அற்று, அசித் துல்யமான பரதந்தர ஜீவர்களுக்கு, ஒரு விதத்தில் செயல் தேவை என்றும் மற்றொரு வகையில் செயல் கூடாது எனவும், சரமஸ்லோகத்தால் நியமமாக்க பூர்வபக்ஷிகள் வாதிடுவதாகிறது; ஆக, அது, சரமஸ்லோக வரியின் நோக்கில் இரண்டு விரோத விளக்கங்களைக் கொண்டதாகிறது.

இதனால் பூர்வபக்ஷிகளிடம் ஸ்வ-வசன விரோதம் உண்டாகிறது

இது, ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் அன்று.

3. இது இப்படி இருக்க, பீஷ்மர், ஜனகர் போன்ற மஹநீயர்கள் பக்தி யோகம் செய்ததாக சாஸ்த்திரங்கள் கூறுகிறது.

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, ப்ருஹ்ம ஸூத்ரம்

4ம் அத்யாயம் 2ம் பாதம் 11வது அதிகரணம் 19ம் ஸூத்ரம்

அதஸ்ச் சாயேனபி தக்ஷிணே

அதாவது,

மோக்ஷோபாயத்தை அநுஷ்டித்தவனுக்கு தக்ஷிணாயனத்த்தில் மரணமும் பலனை தடுக்காது.

இந்த ஸூத்ர விளக்கத்தில், ஸ்ரீ பாஷ்ய விவரணம்:

பக்தி யோகத்தை அநுஷ்டித்த பீஷ்மர் குருக்ஷேத்ர யுத்தத்தில், அம்பினால் வீழ்த்தப் பட்டும், ‘உத்தராயன’ காலத்திற்காக தன் மரணத்தை தாமதித்துக் கொண்டிருந்தார் என்கிறது இதிஹாஸம்.

ஆக, இந்த சரித்திரத்தினால், மோக்ஷம் பெற ‘உத்தராயன’ காலத்தில் தான் மரணம் சம்பவிக்க வேண்டுமோ என்ற ஐயம் எழ வாய்ப்பு உள்ளது.

பீஷ்மர் மகாபாரதத்தின் தலையாய கதை மாந்தர்களில் ஒருவர் ஆவர். ‘தேவ வ்ரதன்’ என்ற பீஷ்மர், சாந்தனுவிற்கும் கங்கைக்கும் பிறந்தவர். பீஷ்மர் அரசியலை தேவர்களின் குருவான பிரகஸ்பதியிடம் இருந்தும், வேதங்களை வசிஷ்ட முனிவரிடமிருந்தும், வில்வித்தையை பரசுராமரிடம் இருந்தும் கற்றுக்கொண்டவர். தன் தந்தை சாந்தனு, சத்தியவதி பால் கொண்ட

விருப்பத்தை நனவாக்க, தனக்கு தகுதி இருந்தும், அரசாட்சியை துறந்தது மட்டுமன்றி, மணவாழ்க்கையையும் துறந்தார்.

இதனால் தன் தந்தையிடமிருந்து இவர் பெற்றதே இச்சா மரணம் - அதாவது, 'தான் விரும்பும் நாளில், விரும்பும் நேரத்தில் மட்டும் மரணம்' என்ற வரமாகும்.

ஆக, மோக்ஷோபாயத்தை (பக்தி யோகமோ அல்லது சரணாகதியோ) அநுஷ்டித்தவர்களுக்கு, பொதுவாக இல்லாத ஒரு தகுதி பீஷ்மரிடம் இருந்தபடியால், உத்தராயன காலத்தின் மேன்மையை நிலைநாட்ட, பீஷ்மர் உத்தராயன காலத்திற்காக தன் மரணத்தை தாமதித்துக் கொண்டிருந்தாரே அன்றிக்கு மோக்ஷ பலனை அடைவதற்கு காரணமாக உத்தராயன காலத்திற்காக பீஷ்மர் காத்திருக்கவில்லை.

பீஷ்மரின் சரித்திரம் காரணமாக வரக்கூடிய கலக்கத்தைப் போக்குவதற்கு, மோக்ஷோபாயத்தை அநுஷ்டித்தவர்களுக்கு தக்ஷிணாயனத்த்தில் மரணமும் மோக்ஷ பலனை தடுக்காது என தனிப் பட்ட முறையில் இந்த ஸுத்ரத்தில் தெளிவு படக் கூறப் பட்டிருக்கிறது.

ஆக பீஷ்மர் பக்தி யோக நிஷ்டர் என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-20)

கர்மணைவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய: லோகஸங்க்ரஹம் ஏவாபி ஸம்பஸ்யந் கர்துமர்ஹஸி

என அருளினான்.

அதாவது,

ஜனகர் போன்றவர்கள் ஞான யோகம் செய்ய தகுதி உள்ளவர்கள்; ஆனால் ஜனகர் கர்ம யோகத்தை மேற்கொண்டே ஆத்ம ஸித்தியை அடைந்தார்; இந்த செயல் உலக மக்களுக்காக அவர் செய்ததாக, என கண்ணன் விளக்குகிறான்.

ஆக, கர்ம யோகத்தைத் தொடங்கிய ஜனகர் பக்தி யோக நிஷ்டர் என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், பக்தி யோகத்தை அஹங்கார கர்ப்பம் எனவும் அநுபாயம் எனவும் வ்யவஹரிக்கின்றனர்.

பக்தி யோகம் - ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் விளக்கம் :

வசன பூஷணம் எண். 132 - அது தோல்புரையே போம் இது மர்ம ஸ்பர்சி, அதாவது அஹங்கார கர்பமான இந்த உபாஸனம் ஆத்ம ஞானம் பிறந்தவனுடைய செயலாய் எம்பெருமானுக்கு அதிசியத்தை விளைவிக்கயாகிற சேஷத்வ ரூபமான நிஷ்க்ருஷ்ட வேஷத்துக்கு விரோதியாய் எம்பெருமான் ஒருவனுக்கே பரதந்த்ரமாய் இருக்கையாகிற ஸ்வரூபத்துக்கு நாசகமாய் இருக்கும். ஆகையால் தோல்புரையே போமதான அபிசாரத்தைக் காட்டிலும் மர்ம ஸ்பர்சியான உபாயமே கொடியது என கொள்க

ஆக, உபாஸனம் (பக்தி யோகம்) என்பது அபிசாரத்தை விடக் கொடியதாக கருதப் படுவதாலும், உபாயாந்தரம் (பக்தி யோகம்) கெடுதலை விளைவிக்கும் என்பதாலும் பக்தி யோகம் (உபாஸனம்) மோக்ஷ பலனுக்கு வழி ஆகாது என்பதே பூர்வபக்ஷிகளின் கூற்று.

இதனால் பூர்வபக்ஷிகளிடம் சாஸ்த்திர விரோதம் உண்டாகிறது

இது, ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் அன்று.

4. மோக்ஷ பலனுக்காக, குரு (கடின) உபாயம் (பக்தி யோகம்) மற்றும் லகு (எளிய) உபாயம் (சரணாகதி அநுஷ்டானம்) சாஸ்த்திரம் விவரிக்கிறது.

பீஷ்மர் ஜனகர் போன்றவர்கள் குரு (கடின) உபாயத்தை (பக்தி யோகத்தை)

அநுஷ்டித்தனர்.

பகவத் ராமானுஜர் போன்றவர்கள் லகு (எளிய) உபாயத்தை (சரணாகதி அநுஷ்டானத்தை) அநுஷ்டித்தனர்.

ஆக, இவ்விஷயமாக அதிகாரி பேதம் சாஸ்த்திரம் கூறுகிறது.

அதாவது, ஞான சக்தி, உபாஸகனுக்கு அதிகாரம்; ஆகிஞ்சன்யம், சரணாகதனுக்கு அதிகாரம்.

அகிஞ்சனன், சாஸ்த்திர விஹித சரணாகதி அநுஷ்டானத்தை செய்து போக வேண்டும்.

அப்ரார்திதோ ந கோபாயேத் இதி தத் ப்ரார்த்தனா மதி: கோபாயிதா பவேத் ஏவம் கோப்த்ருத்வ வரணம் ஸ்ம்ருதம்

என்கிற

ப்ரமாண வாக்கியத்தினால், ரக்ஷிக்க வேண்டும் என ப்ரார்தித்து, ஆத்ம ஸமர்ப்பணமாகிற சரணாகதியை செய்து போகாவிட்டில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஒரு போதும் மோக்ஷ பலனை அளிக்க மாட்டான் என தெளிவாகிறது.

மோக்ஷ காரணமாக பக்தி யோகம் அல்லது சரணாகதி அநுஷ்டானத்தை மறுத்தால், ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் மோஹந சாஸ்த்திரம் எனக் கூற நேரிடும்.

வராஹ புராணத்தில், ஸர்வேஸ்வரன் ருத்ரனிடம் கூறுவதாவது,

த்வம் ஹி ருத்ர மஹாபாஹோ மோஹ சாஸ்த்ராணி காரய தர்ஷயித்வா அல்பமாயாஸாம் பலம் சீக்ரம் ப்ரதர்சய

ருத்ரனே ! நீ ஜனங்களுக்கு மோஹம் உண்டாகும் படியான சாஸ்த்திரங்களைச் செய்; உலக பலனுக்கான உபாயத்தை செய்ய ஊக்கம் அளி.

அதாவது பாபாத்மாவை தண்டிக்கும் பொருட்டு, மோஹன சாஸ்த்திரங்கள் வெளியாகின்றன.

ஆக, மோக்ஷ காரணமாக அதிகாரி மற்றும் உபாய விபாகத்தை இசைய மறுத்தால், அது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் ஆகாது.

பூர்வபக்ஷிகளின் ஸித்தோபாய ப்ரதிபத்தி, ஒரு ப்ரவ்ருத்தி ஆயினும், ஸித்தோபாய ப்ரதிபத்தி மட்டுமே மோக்ஷ காரணமாகாது.

இதனால் பூர்வபக்ஷிகளிடம் ஸ்வ-ப்ரவ்ருத்தி விரோதம் உண்டாகிறது

5. அத்யந்த பரதந்தர ஸ்வரூபத்தாலே பக்தி யோகம் சம்சாரி ஜீவர்களுக்கு செய்யத் தகாதது என பூர்பக்ஷிகளின் வாதத்தை நிரசிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஈஸ்வரனைப் பற்ற அத்யந்த பரதந்த்ரையாலே உபாயாந்தரங்களுக்கு க்ஷேத்ரக்ஞன் நித்ய அசக்தன் என்று கட்டி இவனுக்கு அவற்றினுடைய த்யாகத்தை விதிக்கிறதென்னுமது ஸர்வ சாஸ்த்திர-ஸ்வ வசன-ஸ்வ ப்ரவ்ருத்தியாதி விரோதத்தாலே அத்யந்த பரிஹாஸ்யம்

என விமர்சிக்கிறார்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்கள், "பக்தி யோகத்தை ஜீவர்கள் செய்யலாகாது என ஸகல சம்சாரி ஜீவர்களுக்கும் கட்டளையாகிறது", என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

39. <u>கண்ணன் கீதையில் விதிப்பது உபாஸநமா அல்லது ப்ரபத்தியா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில்,அர்ஜுனனிடம், பக்தி யோகத்தைச் செய்ய சொல்கிறானா அல்லது தன் திருவடிகளில் சரணாகதி அநுஷ்டிக்கச் சொல்கிறானா?

1. ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் 18வது அத்யாயத்தில், பக்தி யோகத்தை விளக்கி வருகிறான்.

அதாவது, ஞான யோகத்தினால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவன் பக்தி யோகம் **யாவத் ஆயுஷம்** (ப்ராரப்த கர்மாவினால் ஆன சரீரம் உள்ள வரை) செய்ய வேண்டிய ப்ரகாரத்தையும், முக்குணங்களால் ஆன சரீர ஸம்பந்தத்தினால், அந்த யோகத்திற்கு ஏற்படும் தடைகளையும், ஸாத்வீக தாயாகத்தின் தேவையையும் விளக்கி அருள்கிறான்.

2. ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 62 வது ஸ்லோகம் -

தமேவ ஷரணம் கச்ச ஸர்வ பாவேன பாரத. தத் ப்ராஸாதாத் பராம் ஷான்திம் ஸிதானம் ப்ராப்யஸி சாஸ்வதம்

அதாவது,

‘ஸர்வ அந்தர்யாமியான வாஸுதேவனை சரணமாகப் பற்று. அவன் அநுக்ரக்ஹத்தால் கர்ம பந்தத்திலிருது விடு பட்டு பரமபதத்தை அடைவாய்’ - என்கிறான் கண்ணன்.

இங்கு, பக்தி யோக நிஷ்டன் செய்ய வேண்டிய உபாய விரோதியான பாபங்கள் விலக அங்க ப்ரபத்தியைச் செய்ய கண்ணன் விதிக்கிறான். அதன் பலனாக மோக்ஷ உபாயமான பக்தி யோகம் தடையின்றி அநுஷ்டிக்கப் பெற்று, மோக்ஷம் பெறுவாய் என கண்ணன் விளக்குகிறான்.

3. மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை பூரணமாக விளக்கிவிட்டான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இனி அர்ஜுனன் கீதோபதேசத்தை ஆராய்ந்து செயல் படட்டும் என்றான் கண்ணன் இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 63 வது ஸ்லோகம் -

இதிதே க்ஞானமாக்யதாம் குஹ்யாதகுஹ்யதரம் மயா. விம்ருச்யை ததசேஷேண யதேச்சஸி ததா குரு

அதாவது,

‘மோக்ஷம் பெறுவதற்கான ரஹஸ்யங்களுக்குள் மிக ரஹஸ்யமான கர்ம, ஞான, பக்தி யோகம் உனக்கு நன்கு விளக்க பட்டது. நீ பராமர்சித்து உன் விருப்பம் போல் செய்.’ - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

இதன் தாத்பர்யமாவது,

இவ்வாறு மோக்ஷத்தில் (மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத, துக்க கலப்பு அற்ற பரிபூரண அனந்தமாகிற பரமபதத்தில்) ஆசை உள்ளவர்கள் செய்ய வேண்டிய கர்ம, ஞான, பக்தி யோகம் பற்றிய அனைத்து விவரங்களையும், இனி கூற வேண்டியது ஒன்றும் இல்லாதபடி, சிஷ்ய குண பூர்த்தியுடன் சரணம் புகுந்து வேண்டின அர்ஜுனனுக்கு கண்ணன் கூறி முடித்தான்.

இதற்கு மேல், தான் ஒன்றும் விளக்க வேண்டாதபடி, இந்த மோக்ஷ உபாயத்தைச் செயல் படுத்த வேண்டியது, அர்ஜுனனின் எண்ணம் போல் அமையும் என்பதை தெளிவிக்கிறான் கண்ணன்.

4. மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை பூரணமாக விளக்கிவிட்டான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இனி அர்ஜுனனை தனக்கு மிகவும் பிடித்தவன் என்று கூறி, பக்தி யோகத்தின் முக்கிய அம்சத்தை விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 64 வது ஸ்லோகம் -

ஸர்வ குஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரம் வச: இஷ்டோஸிமே த்ருடமிதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்

அதாவது,

'எனக்கு நீ மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறபடியால் பரம ரஹஸ்யமான பக்தி யோகத்தின் முக்கிய அம்சத்தை மீண்டும் தெளிவிக்கிறேன். கேள்.' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

5. மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதாகிய பக்தி யோகத்தின் முக்கிய அம்சத்தை இந்த ஸ்லோகத்தில் விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 65 வது ஸ்லோகம் -

மன் மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ் குரு. மாமே வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதி ஜானே ப்ரியோஸிமே

அதாவது,

'பக்தியோடு என்னை நீ ஆராதித்தாயேயானால் நீ என்னையே அடைவாய். இது என் ப்ரதிக்ஞை.' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

பக்தி யோகம் மேன்மேலும் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் அதற்கு ஏற்றவாறு செயல்களை புரிய வேண்டும் என்பதை புரிய வைத்து, மிக மிக ரஹஸ்யமான பக்தி யோகத்தின் முக்கியமான பாகங்களை மீண்டும் உபதேசிக்கிறான் கண்ணன்

அதாவது,

தைல தாரையைப் போல் (அதாவது, எண்ணெயை பெருக விட்டால் இடைவெளி இல்லாமல் சீராக விழுவது போல்), எப்பொழுதும் ஸர்வேஸ்வரனான கண்ணனைப் பற்றியே, நினைவில் இடைவெளி அற்று, இந்த பக்தி யோகம் செய்பவனுக்கு இருக்க வேண்டும் என்றான் கண்ணன்.

அப்படிப் பட்ட நினைவு, பயத்தாலோ அல்லது பக்தி யோகத்தின் நிபந்தனையாலோ இல்லாமல், ஸர்வேஸ்வரனான கண்ணனைப் பற்றிய, அதாவது அவனது தோஷம் இல்லாமையும் மற்றும் அவனது உயர்ந்த குணங்களின் இருப்பையும் கொண்டு, நினைவில் நிலைத்து இருக்க வேண்டும் என்றான் கண்ணன். அன்புடன் செய்யும் த்யானமே பக்தியாகும்.

6. இம்மாதிரியான பக்தி யோகத்தின் நியமத்தை உணர்ந்த அர்ஜுனன், தன்னால் இது ஸாத்யமோ என கலக்கம் கொண்டவனாக தோற்றமளிக்க, மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனையே சரண் புகுந்து அதனால் செய்ய வேண்டிய சரணாகதி அநுஷ்டானத்தை இந்த ஸ்லோகத்தில் விளக்கி அர்ஜுனனின் கலக்கத்தைப் போக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 66 வது ஸ்லோகம் -

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

அதாவது,

'மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

ஸகிஞ்ஞனர்களுக்கு பக்தி யோகமும், அகிஞ்சனர்களுக்கு சரணாகதியும் கண்ணனால் விதிக்கப் பட்டது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

40. <u>மோக்ஷ உபாயமாக கீதையில் பார்த்தனுக்கு பரிந்துரைப்பது என்ன?</u>

1. ஜீவர்களுக்கு ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ரியம் உண்டு; அதனால் சாஸ்த்திர விதிகளை உபதேசித்து செயல் படுத்தும் முடிவை அர்ஜுனனிடம் விட்டுவிட்டான், கண்ணன்.

ஜீவர்களின் செயல்கள் பகவத் அதீனமென்றால், விதி நிஷேத சாஸ்த்திரங்கள் பயன்ற்று போகுமே என்னில்,

க்ருத ப்ரயத்ந அபேக்ஷ: து விஹித ப்ரதிக்ஷித்தா வையர்ய்யாதிப்ய:

என்கிற **ப்ருஹ்ம ஸுத்ரமாவது** (பராயத்தாதிகரணம்), விதி நிஷேத சாஸ்த்திரங்கள் வீணாகக் கூடாது என்பதால், ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஸ்வாதந்த்ரியம் உண்டு என்பதாகிறது.

2. சோகப் படும் அர்ஜுனனிடம், நீ அகிஞ்சனனாக இருப்பாயேயானால் சரணாகதி அநுஷ்டிக்கலாம் என்கிறான் கண்ணன்.

அதாவது, இந்த உபதேசத்திற்கு பிறகு, அர்ஜுனன் தன்னை அகிஞ்சனனாக நினைக்கலாம்; ஸகிஞ்சனனாக நினைக்கலாம்; அதற்கேற்ற உபாயத்தை, அவன் முமுக்ஷுவாக இருந்தால் செய்யலாம்.

3. கண்ணன் பாரத போரின் முடிவையும் முன் கூட்டியே அறிவான்; அவன் பகவத் கீதையையே அருளாமல் போரில் பாண்டவர்களே வெற்றி பெருவார்கள் என அர்ஜுனனுக்கு உணர்த்தியிருக்கலாமே!

வெற்றி பெற்றால் ராஜ்யம் கிடைக்கும்; வீர மரணம் எய்தினால் ஸ்வர்க்கம் கிடைக்கும் என ஏன் உபதேசிக்க வேண்டும்?

அர்ஜுனன் மோக்ஷ உபாயத்தை செய்யப் போவதில்லை என்பதை முன் கூட்டியே கண்ணன் அறிவான். பகவத் கீதையே தேவையில்லையே அர்ஜுனனுக்கு.

ஆக, விபவ அவதாரத்தின் நோக்கை நாம் உணர வேண்டும். சம்சாரி ஜீவர்களின் நன்மைக்காக பகவத் கீதை அவதரித்தது. அர்ஜுனன் வ்யாஜ மாத்திரமே ! அவன் நிலைக்கு மட்டுமே பதில் உத்தேச்யமல்ல.

தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே

ஸ்ரீ ஆளவந்தார் அருளியது :

ஸர்வ உபநிஷதோ காவோ தோக்தா கோபால நந்தன: பார்த்தோ வத்ஸ: ஸுதீர்போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்

உபநிஷத்துக்களே பசுக்களாக இருக்க கோபால நந்தனன் கறப்போனாக , அர்ஜுனனே கன்றாக, உலகில் உள்ள நல்லோர் பருகுவதற்காக கீதை என்கிற அம்ருதம் கறக்கப்பட்டது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

41. ஸாங்க்ய மத கபில ஸ்ம்ருதி அநாதரணீயம்

1. ஸாங்க்ய மத- கபில ஸ்ம்ருதி அநாதரணீயம்

இதன் விவரணம் :

ஆதார நூல் : கபில ஸ்ம்ருதி

வேத்ததை ஒத்துக் கொண்டிருக்கிற மதம்.

ப்ரக்ருதி ஜகத் காரணம்.

தத்வங்கள் 25; அதாவது 24 அசேதன தத்வங்கள்; 1 ஜீவ தத்வம்

ஈஸ்வர தத்வம் என ஒன்று கிடையாது.

ப்ரக்ருதி என்ற அறிவற்ற பொருள் ஜீவாத்மாவிற்கு சரீரம் ஆகும் போது ஞானம் அந்த சரீரத்தோடு கூடிய ஆத்மாவிற்கு ஏற்படுகிறது. இந்த சரீரத்தோடு கூடிய ஜீவாத்மா ப்ரக்ருதியை த்யானம் செய்து ஞான இழப்பாகிய மோக்ஷத்திப் பெறுகிறான்.

2. ஸாங்க்ய மத- கபில ஸ்ம்ருதி ஆட்சேபம்

விஷ்ணு தர்மத்தில் சௌநக மஹரிஷி கூறுவதாவது :

ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி,

'வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன்' – என்கிறான் ஸர்வேஸ்வரன் .

ஆக, கபில ஸ்ம்ருதி அநாதரணீயம் என்பது பொருந்தாது; அதாவது வேதங்கள் கூறும் தாத்பர்யத்தை கபில ஸ்ம்ருதியோடு பொருந்த விட வேண்டும்.

3. ஸாங்க்ய மத- கபில ஸ்ம்ருதி சமாதானம்

ஸ்ருதி (வேதங்கள் மூல ப்ரமாணம்) ; அந்த ஸ்ருதிகளுக்கு விளக்க உரையாக மஹரிஷிகளால் அருளப் பட்டவை ஸ்ம்ருதிகள்.

ஆக, ஸ்ம்ருதியானது ஸ்ருதியை அபேக்ஷிக்கிறபடியால், பூர்வ மீமாம்ஸையில்,

விரோதே து அநபேக்ஷ்யம் ஸ்யாத்

என ஜைமிநி மஹரிஷி அருளியுள்ளார். அதாவது, ஸ்ருதியோடு முரண்படுகின்ற ஸ்ம்ருதி ஆதரிக்கத் தகுந்ததன்று, என்பது ஜைமினியின் அபிப்ராயம்.

உபநிஷத் சாரமான, வ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரம் (2ம் அத்யாயம்; 1ம் பாதம்; 36ம் அதிகரணம்; 1ம் ஸூத்ரம் - ஸ்ம்ருத்யாதிகரணம்)

ஸ்ம்ருதி அநவகாச தோக்ஷ ப்ரஸங்க: இதி சேத், நாந்ய ஸ்ம்ருதி அநவகாச தோக்ஷ ப்ரஸங்காத்

ஸாங்க்ய ஸ்ம்ருதி, மந்வாதி ஸ்ம்ருதிகளோடும் விரோதிப்பதால், அது அநாதரணீயம்.

மநு பகவான்,

ஆஸீதம் தமோ பூதம்

எனத் தொடங்கி,

(அதாவது இந்த ப்ரபஞ்சம் ப்ரளய காலத்தில் தமஸ் எனப்படும் ப்ரக்ருதியில் ஸூக்ஷ்மமாக இருந்து எனத் தொடங்கி)

ஸோऽபித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷிர் விவாதா: ப்ரஜா: அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமபாஸ்ருஜத்

என அருளினார்.

(அதாவது, பகவான் தன் சரீரமாகிய ப்ரக்ருதியைக் கொண்டு ஸ்ருஷ்டிக்க விரும்புவராய் தொடங்கினார்)

கண்ணன் கீதையில் (7-6)

அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரலயஸ்ததா

என ஸ்ருஷ்டி ப்ரளயம் இவைகளுக்கு நானே காரணம் என்றான்.

ஆபஸ்தம்பர் , வ்யாஸர் மற்றும் பல மஹரிஷிகள், ப்ரக்ருதி ஜகத் காரணம் அன்று என விளக்கி உள்ளனர். ஸர்வேஸ்வரனான நாராயணனே ஜகத் காரணம் என்கின்றனர்.

மேலும் மநு முதலியவர்கள், கர்மாக்களைக் கூறும் போது பரமபுருஷனின் ஆராதனா ரூபங்கள் கர்மாக்கள் என்றே கூறுகிறபடியால், பரம புருஷனைக் கூறுவதிலும் அவர்களுக்கு தாத்பர்யமுண்டு.

ரிஷிம் ப்ரஸூதம் கபிலம் மஹாந்தம் என கபில மஹரிஷி, கொண்டாடப் படுவதால், ஸ்ருதி விரோதமான, கபில ஸ்ம்ருதியும் ஆதரணீயம் என்பது அநுபபன்னம். ஏனெனில், இந்த வாதத்தினால், அதிக அறிவு உள்ளவராக ப்ருஹஸ்பதியை ஸ்ருதி ஸ்ம்ருதி கூறுவதால் சார்வாக மதமும் ஆதரீணயம் என ஏற்படும்.

ஆக, ஸ்ருத்யர்த்தத்தை மந்வாதி ஸ்ம்ருதிகளைக் கொண்டே அர்த்த நிர்ணயம் செய்ய வேண்டும் என்பது ஸ்ரீ பாஷ்ய நிர்ணயம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

42. <u>லோக ஸங்க்ரஹார்த்தம் வ்யாஸதிகள் உபாஸந்த்தை அநுஷ்டித்தனரா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகத்தை மோக்ஷ காரணமாக ஜீவர்கள் செய்யலாகாது என்றும் பீஷ்ம-ஜனக-வ்யாஸாதிகள் சரணாகதி அநுஷ்டித்து பிறகு பக்தி யோகம் அநுஷ்டிக்க அது லோக ஸங்க்ரஹார்த்தம், என்பதுவும் சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகத்தை மோக்ஷ காரணமாக ஜீவர்கள் செய்யலாகாது என்பதால், பீஷ்ம-ஜனக-வ்யாஸாதிகள்

சரணாகதி அநுஷ்டித்து பிறகு பக்தி யோகம் அநுஷ்டித்தனர், அது லோக ஸங்க்ரஹார்த்தம் காரணமாக, என பூர்வபக்ஷிகள் பகவத் ராமானுஜ க்ரந்த நோக்கை மீறி விளக்கம் அளிப்பர்.

இது பஹுவித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. **லோக ஸக்க்ரஹார்த்தம்** எனும் பத விளக்கத்தைக் காண்போம்.

சாஸ்த்திர விஷயங்களில், விகல்பங்களை மக்கள் கலக்கமற அறிய, ப்ரகாசப் படுத்துவதற்காக, சில ஞான அநுஷ்டான சீலர்கள், ப்ரஸித்தி அற்ற, ஆனால் சாஸ்த்திரத்தினால் அநுமதிக்கப் பட்ட, சில செயல்களை அநுஷ்டித்துக் காண்பிப்பர். அது லோக ஸக்க்ரஹார்த்தம் என்பதற்கு விஷயமாய் இருக்கும்.

சாஸ்த்திரத்தினால் விதிக்கப் பட்ட சம வலிமை உடைய இரண்டினுள் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து அநுஷ்டிப்பது விகல்பம் எனப் படும்.

இது விஷயமாக, ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (3-20)

கர்மணைவ ஹி ஸம்ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய: லோகஸங்க்ரஹம் ஏவாபி ஸம்பஸ்யந் கர்துமர்ஹஸி

என அருளினான்.

அதாவது,

ஜனகர் போன்றவர்கள் ஞான யோகம் செய்ய தகுதி உள்ளவர்கள்; ஆனால் ஜனகர், கர்ம யோகத்தை மேற்கொண்டே ஆத்ம ஸித்தியை அடைந்தார்; இந்த செயல் உலக மக்களுக்காக அவர் செய்ததாக, என கண்ணன் விளக்குகிறான்.

பக்தி யோகத்திற்கு அங்கங்கள் கர்ம யோகமும், ஞான யோகமும்.

தெளிவான சாஸ்த்திர ஞானமும், சாஸ்த்திர விதிப்படி அநுஷ்டான சக்தியும் கொண்டவன் கர்ம யோகத்திற்கு அதிகாரி; கர்ம யோகத்தின் பலன் புலன் அடக்கம்.

புலன் அடக்கம் கொண்டவன் ஞான யோகத்திற்கு அதிகாரி; ஞான யோகத்தின் பலன் ஆத்ம சாக்ஷாத்காரம்.

ஆத்ம சாக்ஷாத்காரம் பெற்றவன் பக்தி யோகத்திற்கு அதிகாரி; பக்தி யோகத்தின் பலன் பகவத் சாக்ஷாத்காரம் (மோக்ஷம்).

ஆக, கர்ம யோகத்தின் பலனான புலனடக்கம் கிடைக்க பெற்ற பிறகும், கர்ம யோகத்தை செய்து கொண்டே இருந்து ஞான யோகத்தின் பலனான ஆத்ம சாக்ஷாத்காரத்தைப் பெற்றார் ஜனகர், என்பதாயிற்று.

இது, லோக ஸங்க்ரஹார்த்தம் ஜனகர் செய்து காட்டிய பக்தி யோகத்தின் அங்க அநுஷ்டானம், என கண்ணன் விளக்குகிறான்.

அவ்வழியிலே, பீஷ்ம ஜனக வ்யாஸாதிகள், சரணாகதனாக இருந்து, லோக ஸங்க்ரஹார்த்தம் பக்தி யோகம் செய்து காண்பித்தனர் என்று பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

இது முறையான வாதமாகாது. ப்ரமாண விரோதம்.

3. இதில் கவனிக்க வேண்டிய அம்சமாவது, லோக ஸங்க்ரஹார்த்தமே ஆனாலம் சாஸ்த்திர விதியை மீறலாகாது. இது, சாஸ்த்திர விதிப்படி, அவரவர்களின் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

உதாரணமாக, ஸந்யாஸ ஆஸ்ரமத்தை அநுஷ்டிக்கும் ஞான அநுஷ்டான சீலரான ஒரு ஆசார்யன் க்ருஹஸ்தாஸ்ரமத்தை லோக ஸங்க்ரஹார்த்தமே ஆனாலம் அநுஷ்டிக்கலாகாது, ஏனெனில் ஸந்யாஸி, க்ரஹஸ்தாஸ்ரமத்தை அநுஷ்டிப்பது, சாஸ்த்திர வரம்பை மீறிய செயலாகும். தன் அதிகாரத்தை மீறிய செயலாகும்.

ஆகையால், தன் அதிகாரத்திற்கு உட்பட்ட செயல்களில், விகல்பங்கள் உண்டெனில், அவைகளை லோக ஸங்க்ரஹார்த்தம் செயல் படுத்தலாம்.

உதாரணமாக,

கர்ம யோகத்தில் 14 வகை விகல்பங்கள் சாஸ்த்திரத்தால் அநுமதிக்கப் படுகிறது.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (4-25)

தைவம் ஏவ அபரே யஜ்ஞம் யோகின: பர்யுபாஸதே ப்ருஹ்மாக்நௌ அபரே யஜ்ஞம் யஜ்ஞேந ஏவ உபஜுஹ்வதி

என்கிறான்.

சில 'கர்ம யோகிகள்' தேவார்ச்சனை போன்ற யோகத்தை செய்து வருகின்றனர்.

மற்றும் சிலர் ஹோமம் செய்கின்றனர்.

கர்ம யோகமாவது, தபஸ், யக்ஞம், தானம், தேவார்ச்சனை, தீர்த்த யாத்திரை, வேத அத்ய்யனம் முதலான 14 வகைகளில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து பலனை பெறுமளவும் விடாமல் அநுஷ்டிப்பதாகும்.

இந்த கர்ம யோகத்தைச் செய்யும் அதிகாரி, லோக ஸங்க்ரஹார்த்தம் ஏதேனும் ஒன்றை குறைவற செய்ய ப்ரமாண அநுமதி உண்டு.

அதாவது, பக்தி யோகமோ அல்லது அதன் அங்கங்களான கர்ம யோக ஞான யோகமோ அநுஷ்டிக்க அதிகாரம் உடையவர்கள், கர்ம யோக அநுஷ்டானமாக லோக ஸங்க்ரஹார்த்தம் ஏதேனும் ஒன்றை குறைவற செய்ய ப்ரமாண அநுமதி உண்டு.

4. சரணாகதி அநுஷ்டானத்திலும் பக்தி யோக அநுஷ்டானத்திலும் அதிகாரி பேதம் உண்டு.

அதிகாரமாவது, பலனில் இச்சையும், அதைப் பெற, சாஸ்த்திர விதியான உபாய அநுஷ்டானத்தில் ஸாமர்த்யமும் இருக்கை.

முமுக்ஷுவானவன், பரிபூரண ஞானமும் நிரபராத அநுஷ்டானமும் செய்ய ஸாமர்த்யம் உடையவனானால், அவன் பக்தி யோகத்திற்கு அதிகாரி ஆகிறான்.

அவ்வதிகாரி, சரணாகதி அநுஷ்டானத்திற்கு அநர்ஹன் ஏனெனில் ஆகிஞ்சன்யம் இல்லாமையால்.

ஆகையால், பீஷ்ம ஜனக வ்யாசாதிகள், சரணாகதர்களாயினும் லோக ஸங்க்ரஹார்த்தம் பக்தி யோகம் அநுஷ்டித்தனர், என்பது அதிகாரி பேதத்தினால், அத்யந்த அநுபபன்னம்; சாஸ்த்திர விரோதம்.

இதற்கான ப்ரமாணங்களும் கிடையாது.

சரணாகதன் பகவத் கைங்கர்ய ரூபமாக, உத்தர க்ருத்யமாக, பகவத் பக்தி செய்வது, ஸ்வரூப ப்ராப்தம். அது மோக்ஷார்த்த பக்தி யோகம் ஆகாது.

ஒரு பக்தி யோக நிஷ்டன், தன் அநுஷ்டானத்திற்கு தடையான பாபங்களைக் களைய சரணாகதி அநுஷ்டிப்பது ஸ்வரூப ப்ராப்தம்; அது மோக்ஷார்த்த ப்ரபத்தி ஆகாது; அது அங்க ப்ரபத்தியாகும்.

சரணாகதன் மோக்ஷ காரணமாக பக்தி யோகம் செய்தால் அது பாப கோடியில் சேரும் என்பது ப்ரமாண ஸித்தம்.

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத் உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேத தேவ ஹி

என்கிறது பாஞ்சராத்ர சாஸ்த்ரம்.

அதாவது, மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான ப்ராயசித்தத்தை (பரிஹாரத்தை) உடனடியாக செய்ய வேண்டும். அப்படி பரிஹாரமாக செய்ய வேண்டிய செயல் என்ன என்றால் எம்பெருமானிடம் மன்னிப்பு கோருவதாகிய 'ப்ராயச்சித்த சரணாகதி' ஆகும்.

மோக்ஷ பலனுக்காக சரணாகதியை அநுஷ்டித்த பின்னர் மோக்ஷத்திற்கு வழியாக எண்ணி வேறு எதைச் செய்தாலும் அதுவும் பாபமே.

சரணாகதன் செய்யும் அனைத்து பகவத், பாகவத, ஆசார்ய கைங்கர்யங்களும் எம்பெருமானின் உகப்பிற்காகவே அன்றி மோக்ஷ காரணமாக அல்ல, என்ற தெளிவு வேண்டும்.

5. பீஷ்ம ஜனக வ்யாசாதிகள் லோக ஸங்க்ரஹார்த்தம் பக்தி யோகம் அநுஷ்டித்தனர் என்கிற பூர்பக்ஷிகளின் வாதத்தை நிரசிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

ப்ரபந்நராய் வைத்து லோக ஸங்க்ரஹார்த்தம் உபாஸநாதிகளை அநுஷ்டித்தார்களென்கைக்கும் அவ்வோ ப்ரபந்தங்களில் ஒரு வசனமில்லை. அப்படி கல்பிக்கப் புக்காலும் தன் அதிகாரத்திற்கு

நிஷித்தமானவற்றை லோக ஸங்க்ரஹார்த்தமாக அநுஷ்டிக்கப் புக்கால் அவை இவன் தனக்கும் பாபமாய் அதிகாரத்துக்கு விருத்த அநுஷ்டானம் பண்ணுகையாலே தன் அநுஷ்டானத்தையிட்டு லோக ஸங்க்ரஹம் பண்ணவும் கடப்படாதொழியும்

என விமர்சிக்கிறார்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய" என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகத்தை மோக்ஷ காரணமாக ஜீவர்கள் செய்யலாகாது என்றும் பீஷ்ம-ஜனக-வ்யாஸாதிகள் சரணாகதி அநுஷ்டித்து பிறகு பக்தி யோகம் அநுஷ்டிக்க அது லோக ஸங்க்ரஹார்த்தம், என்பதுவும் ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

43. <u>பாகவத நிஷ்டை</u>

1. சரணாகதி அநுஷ்டானத்திற்கு, நடாதூர் அம்மாள் அருளிய, ஐந்து அங்கங்களோடு கூடிய அங்கியின் சுருக்கு, கவனிக்கத் தக்கது:

அநாதி காலம் தேவரீருக்கு அநிஷ்டாசரணம் பண்ணுகையாலே ஸம்ஸரித்து போந்தேன்; இன்று முதல் அநுகூலனாய் வர்திக்கக்கடவேன்; ப்ரதிகூலாசரணம் செய்யக் கடவேனல்லேன்; தேவரீரைப் பெறுகைக்கு என் கையில் ஒரு கைமுலில்லை; தேவரீரயே உபாயமாக அறுதுயிட்டேன்; தேவரீரே உபாயமாக வேணும்; அநிஷ்ட நிவ்ருத்தி இலாதல், இஷ்ட ப்ராப்தி இலாதல் எனக்கினி பரமுண்டோ

2. இம்மாதிரியான, மோக்ஷத்திற்காக சரணாகதி அநுஷ்டானம் செய்ய, சாஸ்த்திரங்கள் விதிக்கும் ப்ரகாரங்கள் பலவாறாக உள்ளன:

'ஸ்வ நிஷ்டை - ஞான அநுஷ்டான சீலர்களான முமுக்ஷுக்கள், ஒரு அர்ச்சாவதார எம்பெருமான் முன்பு, சாஸ்த்திர விதிப் படி தானே சரணாகதி அநுஷ்டித்து போகலாம். தற்சமயத்தில் ஸ்வ நிஷ்டைக்கு அதிகாரிகள் கிடையாது. ஆக, இது அநுஷ்டானத்தில் இல்லை.

உத்கி நிஷ்டை - உபயுக்தமான தத்வ-ஹித-புருஷார்த்த ஞானம் பெற்ற முமுக்ஷுக்கள், ஒரு அர்ச்சாவதார எம்பெருமான் முன்பு, சாஸ்த்திர விதிப் படி, ஒரு ஆசார்யனை முன்னிட்டு, மோக்ஷத்திற்கான சரணாகதியை செய்து போகலாம்.

ஆசார்ய நிஷ்டை - முமுக்ஷுவானவர்கள் அனைவருமே, ஒரு அர்ச்சாவதார எம்பெருமான் முன்பு, சாஸ்த்திர விதிப் படி, ஒரு ஆசார்யனே சரணாகதி அநுஷ்டிக்க, தான் எம்பெருமானை வணங்கி இருந்து போகலாம். ஆசார்யனை அணுக முடியாத போது, ஆபத் பரந்யாஸம் ஆசார்ய நிஷ்டையாகவே அநுஷ்டிக்கப் படுகிறது.

பாகவத நிஷ்டை - முமுக்ஷுவானவர்களுக்கு, ஒரு அர்ச்சாவதார எம்பெருமான் முன்பு, சாஸ்த்திர விதிப் படி, ஞான அநுஷ்டான சீலரான ஒரு பாகவதரே, அந்த முமுக்ஷுவிற்காக, சரணாகதி அநுஷ்டித்து வைக்கலாம். இது உக்தி நிஷ்டையாகவோ அல்லது ஆசார்ய நிஷ்டையாகவோ, அவரவர்கள் அதிகாரத்திற்கு ஏற்ப, அமையலாம். தற்சமயம் இது அநுஷ்டானத்தில் இல்லை, என்றே தெரிகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

44. <u>ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய - ஸகல வைதீக கர்மங்களின் த்யாகமா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய" என்கிற பதங்களைக் கொண்டு, தர்மங்களின் த்யாகமாவது அதனுடைய ஸ்வரூப த்யாகம், என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில், **ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய** என்கிற பதங்களைக் கொண்டு, தர்மங்களின் த்யாகமாவது அதனுடைய ஸ்வரூப த்யாகம், என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், வேத மார்க்கமான பகவத் ராமானுஜ க்ரந்த நோக்கை மீறி விளக்கம் அளிப்பர்.

இது பஹுவித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. செயல்களின் **த்யாகம்** என்கிற **விடுகை** இரண்டு விதமான அர்த்தங்களை அளிக்க வல்லது.

 # ஸ்வரூப த்யாகம் - செயல் செய்வதையே நிஷேதிப்பது; அதாவது, அந்த செயலாவது யாராலும் ஒரு பொழுதும் செய்யலாகாது என்பதைக் குறிக்கும்;

உதாரணமாக : திருட்டு எனும் செயல் **ஸ்வரூப த்யாகம்** எனும் நிலை கொண்டது. அது, யாராலும் ஒரு பொழுதும் செய்யலாகாது.

ஆனால் ஒரு சில தர்மமாகிற செயல் அதிகாரி பேதம் கொண்டது; அங்கு ஸ்வரூப த்யாகம் ஸித்திக்காது.

உதாரணம் : பிதாவை இழந்தவன் தர்ப்பணம் என்கிற செயலை செய்ய வேண்டுவது சாஸ்த்திர நியமம்; அதாவது, பிதா உள்ளவன் இந்த செயலை செய்யலாகாது, என்றாகிறது;

இது ஸ்வரூப த்யாகம் ஆகாது; இது அதிகாரி பேதம்.

அதாவது, பிதா உள்ளவன் என்றும் பிதாவை இழந்தவன் என்றும் அதிகாரிகள்; அவர்கள், தர்ப்பணம் எனும் செயலைச் செய்யவும் செய்யாதிருக்கவும் அதிகாரிகள் ஆகின்றனர்.

 # ஸாத்வீக த்யாகம் - இது மூன்று பாகங்களாக இருக்கிறது.

அதாவது, ஸாத்வீக த்யாகம் என்பது

கத்ருத்வ த்யாகம் (நான் செய்கிறேன் என்கிற எண்ணத்தின் த்யாகம்)

மமதா த்யாகம் (இந்த செயல் என் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்கிற எண்ணத்தின் த்யாகம்)

பலத் த்யாகம் (இந்த செயலினால் வரும் பலன் எனக்காகவே என்கிற எண்ணத்தின் த்யாகம்) ’

என்பதாகும்.

பர தத்வம் மற்றும் அவர தத்வங்களின் இயற்கை நிலையை சாஸ்த்திரம் கொண்டு தெளிந்தவர்கள், ஸகல சாஸ்த்திர விஹித க்ரியைகளையும், ஸாத்வீக த்யாகம் கொண்டே அநுஷ்டிப்பர்.

பகவத் கீதை 18ம் அத்யாயம் 9 வது ஸ்லோகம் -

கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதே அர்ஜுன. ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக ஸாத்விகோ மத:

அதாவது,

‘கர்மங்களை செய்துவிட்டு ‘இந்த கார்மாவினால் வரும் பலன் எனதல்ல’ என்று த்யாகம் செய்வது ஸாத்விக த்யாகமாகும்.’ - என்கிறான் கண்ணன்.

3. பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில்,

இதம் சரணம் அக்ஞானம் இதமேவ விஜாநதம். இதம் திதீர்ஷதாம் பாரம் இதம் ஆனந்த்யம் இச்சதாம்

எனப் படுகிறது.

அதாவது,

அக்ஞர்களுக்கு இதுவே (சரணாகதி அநுஷ்டானமே) தகுந்த உபாயம். சம்சார ஸாகரத்தை விரைவில் தாண்டி பரமபதத்தில் நித்ய ஆனந்தத்தை அநுபவிக்க துடிப்பவர்களுக்கு

இதுவே (சரணாகதி அநுஷ்டானமே) தகுந்த உபாயம்.

இங்கு அக்ஞர்கள் என்பது தத்வ ஞானத்திலும், பக்தி யோக அநுஷ்டானத்திலும் விசேஷ அறிவு அற்றவர்களுக்கு என்பது பூர்வாசார்யர்களின் விளக்கம். அதாவது, சரணாகதி அநுஷ்டானத்திற்கு தேவையான உபயுக்தமான ஞானம் கொண்டவர்கள், என்பதாகும்.

இவ்வரியால் தெளிய வேண்டுவதாவது, பரிபூரண ஞானமும் அநுஷ்டான சக்தியும் கொண்ட முமுக்ஷுக்கள் பக்தி யோகத்திற்கு அதிகாரியாம்;

தேவையான உபயுக்தமான ஞானம் கொண்ட முமுக்ஷுக்கள் ப்ரபத்திக்கு அதிகாரியாம்; இது அதிகாரி பேதம்.

அக்ஞர்களுக்கு விளக்கமாக, உபாய அநுஷ்டானத்திற்கு ஸ்வரூப த்யாகத்தை அர்த்தமாக்கினால், உபநிஷத் ப்ரமாணங்களாகிய

த்யாயீத உபாஸீத என்கிற பக்தி யோக விதி வாக்யங்களோடும்

முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே என்கிற சரணாகநி அநுஷ்டான விதி வாக்யங்களோடும்

முரண்படும்; மேலும், ப்ருஹ்ம ஸூத்ரத்தோடு விரோதிக்கும்; ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்ய கத்யாதிகளோடும் விரோதிக்கும்.

ஆக, ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகத்திற்கு ஸ்வரூப த்யாகம் கூறலாகாது.

4. ஸ்ரீமத் ராமாயணத்தில், அசோகவநத்தில் சிறை பிடிக்கப் பட்ட ஸீதா பிராட்டி பயமற்று, ஸ்ரீ ராம தூதனாக வந்த ஹனுமானிடம், உரைக்கிறாள்.

ஷரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்கா பரபலார்தன: மா நயேத்யதி காகுஸ்த தத் தஸ்ய ஸத்ருஷம் பவேத்

அதாவது,

சத்ருக்களை அழித்து தன்னை மீட்டு செல்வதனாலேயே ஸ்ரீராமனுக்கு பெருமை ஏற்படும் ...

என்று ஸீதாப் பிராட்டி உரைக்கிறாள்.

இதை ப்ரமாணமாக்கி, உபாய அநுஷ்டானம் பரதந்தர சம்சாரி ஜீவர்களுக்கு உகந்தது அல்ல; எம்பெருமான் தன்னைக் காப்பாற்றுவான் என வெறுமனே இருப்பதே ஜீவ க்ருத்யம் என்றும் உபாயத்தின் ஸ்வரூப த்யாகம் இங்கே தெளிய வேண்டுவதாக பூர்வ பக்ஷிகள் உரைப்பர்.

ஸ்வாமி தேசிகன், உபநிஷத் வரிகளோடும், பகவத் ராமானுஜ க்ரந்த வரிகள் இசைந்த அளவில் பிராட்டியின் வசனத்தை விளக்குகிறார்.

அதாவது, ஸ்ரீராமனை மணாளனாக கை பிடித்த பின்னர், ஸீதா பிராட்டி ஸ்வ யத்நம் அற்று இஷ்ட ப்ராப்தியும் அநிஷ்ட நிவ்ருத்தியும் அவன் அருளே எனக் காத்திருந்ததாக தாத்பர்யத்தை விளக்கினார்.

இந்த உபமானம் உபமேயத்தில் பொருந்த விட வேண்டும்.

அதாவது, எம்பெருமானின் திருவடியை உபாயமாகப் பற்றிய பின்னர் சரணாகதன், எந்த ஒரு சந்தர்பத்திலும் ஸ்வ யத்நம் அற்று இஷ்ட ப்ராப்தியும் அநிஷ்ட நிவ்ருத்தியும் அவன் அருளே எனக் காத்திருக்க வேண்டும, என்பதாகிறது.

ஆக, இந்த ப்ரமாணம் உபாய அநுஷ்டானத்தின் ஸ்வரூப த்யாகம் ஆகாது என தெளிவிக்கிறது.

ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாயத்தில், சாஸ்த்திரத்தால் விதிக்கப் பட்ட, நித்ய-நைமித்திக-காம்ய-மோக்ஷார்த்த க்ரியைகள் அனைத்துக்கும்

ஸ்வரூப த்யாகம் பொருந்தாது என தெளிவிக்கப் பட்டிருக்கிறது; ஆனால் அவைகளுக்கு அதிகாரி பேதங்கள் உண்டு; இது ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

பூர்வாசார்யர்களும் இவ்விடத்தில் ஸர்வ தர்ம ஸ்வரூப த்யாகம் ப்ரபத்தி அங்கம் என்றும் இப்படி அன்று என்றும் விவாதங்கள் பண்ணினார்கள் அல்லர். ப்ரபத்திக்கு அதிகாரமான ஆகிஞ்சன்யமும் ப்ரபத்தியினுடைய நைரபேக்ஷ்யமும் இச்சரமஸ்லோகத்தில் எந்த பதங்களிலே விவக்ஷிக்கை உசிதம் என்று விமர்சித்தார்கள் அத்தனை.

என அருளியுள்ளார்.

ப்ரபத்தியின் நைரபேக்ஷியமாவது சரணாகதி அநுஷ்டானம் தனக்கு விதிக்கப் பட்ட ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எந்த ஒரு செயலையும் தனக்கு அங்க அநுஷ்டானமாகக் கொள்ளாது, என்பதாகும்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களைக் கொண்டு, தர்மங்களின் த்யாகமாவது அதனுடைய ஸ்வரூப த்யாகம், என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

45. <u>வாஸுதேவ ஸர்வம் என்கிற கண்ணன் வாக்கு</u>

1. ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-19)

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞானவாந்மாம் ப்ரபத்யதே வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

என அருளினான்.

அதாவது,

பல புண்ய பிறவிகளின் இறுதியில் ஞானவான், 'எல்லாம் வாசுதேவனே' என்று கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான். அவ்வித மகாத்மா கிடைத்தற்கு அரியவன்.

2. ப்ரமாண வரிகளாவது,

பாபிஷ்ட: க்ஷத்ர பந்துஸ்ச புண்டரீக்ஷ புண்யக்ருதா ஆசார்ய வத்தயா முக்தெள தஸ்மாத் ஆசார்யவான் பவேத்

என்கிறது.

அதாவது,

மிகுந்த பாபத்தைச் செய்து போன க்ஷத்ரபந்துவும், மிகுந்த புண்யங்களையே செய்து வந்த புண்டரீகனும், ஆசார்ய சம்பந்தம் பெற்றதானாலேயே மோக்ஷத்தை அடைந்தார்கள், என சரித்திரம்.

3. ப்ரமாணங்களை ஆராயும் போது,

ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருசயா ஸுஹ்ருதம் ததா. விஷ்ணோஹோ கடக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகைஹ ஸம்பாஷணேம் ஷடேதானி ஆசார்ய ப்ராப்தி ஹேதவஹ

அதாவது,

தெளிந்த தத்வ ஞானியாக, சாஸ்த்திரங்களை நன்கு அறிந்த, உயர்ந்த ஆசார்யன் ஒருவனை, இந்த சம்சாரி ஜீவன் அடைய, ஆறு காரணங்கள் சாஸ்த்திரத்தினால் கூறப் படுகின்றன; அவை ஆவன :

எம்பெருமானின், ஸகல ஜீவர்களிடம் கொண்டுள்ள பொதுவான நல்லெண்ணம்,

சம்சாரி ஜீவனனுடைய பூர்வ ஜன்ம யாத்ருச்சிக ஸுஹ்ருதம்,

சம்சாரி ஜீவனனுக்கு உண்டான ஸர்வேஸ்வரனின் கடாக்ஷம்,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் உண்டான இச்சை,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் த்வேஷம் இல்லாமை, மற்றும்

சம்சாரி ஜீவனனுக்கு உள்ள ஸாத்வீகர்களின் ஈடுபாடு

என்கிறது சாஸ்த்திரம்.

இதனால் யாத்ருச்சிக ஸுக்ருதம் பலன் அளிக்க வரும் போது, அப்பிறவியில் ஸதாசார்ய சம்பந்தம் ஏற்பட்டு, அதனால் மோக்ஷ உபாயமான சரணாகதி அநுஷ்டானம் ஸித்தித்து மோக்ஷ பலனை அடைகிறான் என்பது ப்ரமாண ஸித்தம்

4. சில ஆசார்ய ஸ்ரேஷ்டர்கள் சிஷ்யர்களுக்கு சரணாகதி அநுஷ்டானத்தை செய்விக்கிற போது உபயுக்தமான ஞானத்தை அந்த சிஷ்யர்களுக்கு அளித்தே மோக்ஷோபாயத்தை செய்விக்கின்றனர். அது சாஸ்த்திர விஹிதமே.

விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில் ஸ்ரீராமனின் திருவாக்கு:

 # மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'.

 # ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி யேதத் வ்ரதம் மம

அதாவது, 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது எனது வ்ரதம்'.

ஆக, ஸதாசார்யன் செய்விக்கிற சரணாகதி மோக்ஷம் அளித்தே தீரும்.

அந்த சிஷ்யனுக்கு உபயுக்தமான தத்வ-ஹித-புருஷார்த்தத்தை அந்த சந்தர்ப்பத்தில் உபதேசித்தே, ஸதாசார்யர்கள் சரணாகதியை அநுஷ்டித்து வைப்பர் என்பதில் ஐயமில்லை.

5. சாஸ்த்திர வச்யதை அற்ற த்ரியக்குகளுக்கு, ஞான ஸம்பாத்யம், சரணாகதி அநுஷ்டானத்திற்கு, நியதி அல்ல. ஸதாசார்யனின் கருணையைப் பெற அந்த ஜீவனிடம், பலன் பெற பரிபக்குவமான, பூர்வ ஜன்ம யாத்ருச்சிக ஸுக்ருதம் உள்ளதே காரணம்.

ஆக, வாஸுதேவ ஸர்வம் என்கிற ஒரு மனோ நிலை, பல பிறவிகளுக்குப் பிறகு உண்டாகிறது ; அது, ஆசார்ய சம்பந்த த்தை அளிக்கிறது ; மோக்ஷ பல ஹேதுவாகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

46. <u>ஸர்வ கர்ம த்யாகம் சரணாகதிக்கு அங்கமா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களைக் கொண்டு, தர்மங்களின் த்யாகமாவது அதனுடைய ஸ்வரூப த்யாகம் என்றும் அதனால் அந்த த்யாகம் சரணாகதிக்கு அங்கம் என்றும், சொல்வது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில், **ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய** என்கிற பதங்களைக் கொண்டு, தர்மங்களின் த்யாகமாவது அதனுடைய ஸ்வரூப த்யாகம் என்றும் அது சரணாகதிக்கு அங்கம் என்றும், ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், வேத மார்க்கமான பகவத் ராமானுஜ க்ரந்த நோக்கை மீறி விளக்கம் அளிப்பர்.

அதாவது,

பக்தி யோகம், சம்சாரி ஜீவர்களுக்கு தன் பாரதந்த்ரிய ஸ்வரூபம் காரணமாக, செய்யத் தகுந்தது அல்ல என்கிற எண்ணத்தோடே முற்றிலும் தவிர்ப்பது சரணாகதிக்கு அங்கம், என பூர்வ பக்ஷிகளின் வாதம் அமைகிறது.

இது பஹுவித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. சரணாகதிக்கு அங்கமாக பக்தி யோக த்யாகம் சாஸ்த்திர விரோதம் என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம் என்பதை மூன்று வகைகளால் உணரலாம்.

ஆனுகூல்ய ஸங்கல்பாதி ஐந்து அங்கங்களைத் தவிர வேறு ஒரு செயலையும் எதிர் பார்க்காதது சரணாகதி என்கிற ப்ரமாணங்களோடு இவ்வாதம் விரோதிக்கும்.

அதிகாரி பேதம் கொண்டு, மோக்ஷ உபாயமாக பக்தி யோகத்தை விதிக்கிற ப்ரமாணங்களோடு இவ்வாதம் (பக்தி யோகம், சம்சாரி ஜீவர்களுக்கு தன் பாரதந்த்ரிய ஸ்வரூபம் காரணமாக, செய்யத் தகுந்தது அல்ல என்கிற வாதம்) விரோதிக்கும்.

உத்தரக்ருத்யமாக, யோகத்தை அநுஷ்டித்து, ஆழ்வார் பாசுரங்களை உலகிற்கு வெளிக் காட்டிய ஸ்ரீமந் நாதமுனிகளின் வ்ருத்தாந்தோடு விரோதிக்கும்.

3. பல ப்ரமாணங்கள், ஐந்து அங்கங்கோடு கூடிய சரணாகதியே மோக்ஷ சாதனம் என தெளிவு படுத்தியிருக்கிறது.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யப்படி,

ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி:

(ஒரு அங்கியும் ஐந்து அங்கங்களையும் கொண்டது சரணாகதி)

என்றும்,

பாஞ்சராத்ர சாஸ்த்திர விதிப்படி,

நிக்ஷேப அபர பர்யாய: ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத: ஸந்யாஸ த்யாக இத்யுக்த: சரணாகதி ரித்யபி

(ந்யாஸம் என்கிற சரணாகதி ஐந்து அங்கங்களைக் கொண்டது)

என்றும்

மேலும், பாஞ்சராத்ர ஆகமசாஸ்த்திரப்படி,

ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்சீத ஸ்வாங்கை பஞ்சபிராவ்ருதாம்

(மோக்ஷத்திற்காக ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதியே செய்ய வேண்டுவதாகிறது)

என்றும்

விதி வாக்யங்களை நினைவு கொள்ள வேண்டும்.

இதனால், பக்தி யோகம், சம்சாரி ஜீவர்களுக்கு தன் பாரதந்த்ரிய ஸ்வரூபம் காரணமாக, செய்யத் தகுந்தது அல்ல என்கிற எண்ணத்தோடே முற்றிலும் தவிர்ப்பது சரணாகதிக்கு அங்கம், என பூர்வ பக்ஷிகளின் வாதம் அநாதரணீயம்.

4. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரையைச் சார்ந்த ஸ்ரீமந் நாதமுனிகள், மதுரகவி ஆழ்வார் இயற்றிய

கண்ணினுண் சிறுத்தாம்பு

என்ற ப்ரபந்தத்தைக் கற்று, திருப்புளியாழ்வாரடியில் பன்னீராயிரம் முறை, அநுஸந்தித்தார்.

திவ்ய தம்பதிகள் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு அநுக்ரஹம் செய்ய ஆழ்வாரை நியமிக்க, ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரையைச் சார்ந்த ஸ்வாமி நம்மாழ்வாரும், அவரோடு சேர்ந்து மதுரகவி ஆழ்வாரும், ஸ்ரீமந் நாதமுனிகள் யோக காலத்தில் எழுந்தருளி, ஸ்ரீமந் நாதமுனிகளின் தேவையை கேட்டனர்.

ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி மற்றும் அதன் விசேஷ அர்த்தங்களை உபதேசிக்க ஸ்ரீமந் நாதமுனிகள் வேண்டினார்.

ஆழ்வாரும், திவ்ய தம்பதிகளின் நியமனப் படி, ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு திவ்ய புலன்களைக் (மனித புலன்களைப் போல் அல்லாது உயர்ந்த விஷயங்களைக் க்ரஹிக்கக் கூடிய புலன்களைக்) கொடுத்து ஆனைத்து ஆழ்வார் பாசுரங்களையும் அநுக்ரஹித்தனர் என்பது ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரை வரலாறு.

ஆக, யோகத்தை ஸ்வரூப விருத்தம் என்றும் அஹங்கார கார்யம் எனவும் ஜல்பிப்பது ஸம்ப்ரதாய விருத்தம்.

5. பக்தி யோகத்தில் உபாய புத்தி கூடாது எனும் பக்ஷமும், அசாஸ்த்ரீயமான யுக்தி வாதமானதால், தூர பரிஹரணீயம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ஸ்வாமி தேசிகன் சாஸ்த்ரீயமாக இவ்விஷயத்தை, பூர்வபக்ஷ - ஸித்தாந்தமாக விளக்குகிறார்.

பூர்வபக்ஷம்

சேஷ பூதனாகையாலே தன்னைத் தான் ரக்ஷித்துக் கொள்ள ப்ராப்தனும் அன்றிக்கே இருக்கிற இவனுக்கு ஸ்வ ரக்ஷணாரத்தமாக கர்தவ்யம் என்று ஒரு உபாயத்தை விதிக்கையும் அது இவனுக்கு ஸாத்யமாய் ஸாத்யோபாயமாய் பேர் பெறுகிறது என சொல்லுகையும் உபபன்னமோ ? ஆன பின்பு, பக்தி யோகாதிகள் சேஷத்வ அநுரூபங்கள் அல்லாமையாலே ஸ்வரூபத்துக்கு அநிஷ்டாவஹங்கள் என்றும், அத்யந்த பாரதந்த்ரிய விருத்தங்கள் ஆகையாலே அஸம்பாவிதங்கள் என்றும் சொல்ல ஒண்ணாதோ?

ஸித்தாந்தம்

அத்யந்த பாரதந்த்ரியத்தால் அவன் கொடுத்த ஸ்வாதந்த்ரியத்தை சுமந்து அவனுக்கு அபிமதங்களான உபாயங்களை அநுஷ்டிக்கையும் பலன் பெறுகையும் அவன் கை பார்த்து இருக்க வேண்டுகையும் ஸித்திக்கும் ஆகையால் சேஷபூதனுமாய் பரதந்த்ரனுமான இவனுக்கு யதா அதிகாரம் ஸ்வ ரக்ஷண வ்யாபாரம் பண்ணக் குறையில்லை.

சாஸ்த்திரம் விதித்த கர்தவ்யங்களைச் ஏற்று அநுஷ்டித்து அதனால் ஸர்வேஸ்வரனின் உகப்பைப் பெறுவது பாரதந்த்ரிய காஷ்டை என தெளிவிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ஆக, சாஸ்த்திரம் விதித்த உபாயங்களின் ஸ்வரூப த்யாகம், ஸகல ப்ரமாணங்களோடும் விரோதம் எனவும் அறுதியிடுகிறார் ஸ்வாமி தேசிகன்.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இங்கு ஸர்வ தர்மங்களுடைய ஸ்வரூப த்யாகத்தை அங்கமாக விதிக்கிறது என்றும், அவை அங்கமாம்படி இங்கு புத்தி விசேஷ த்யாக மாத்திரம் விதிக்கிறது என்றும் சொல்லுகிற பக்ஷங்கள் ஆக்ஞ அநுபாலனாதி சாஸ்த்திரங்களுக்கும் ப்ரபத்திக்கு நைரபேக்ஷ்யம் சொல்லும் சாஸ்த்திரங்களுக்கும் பூர்வாசார்ய ஸம்ப்ரதாயங்களுக்கும் ப்ரபன்னராய்ப் போந்த பூர்வ சிஷ்டர்களுடைய ஆசாரத்துக்கும் விருத்தங்களாம்

என அருளியுள்ளார்.

7. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களைக் கொண்டு, தர்மங்களின் த்யாகமாவது அதனுடைய ஸ்வரூப த்யாகம் என்றும் அதனால் அந்த த்யாகம் சரணாகதிக்கு அங்கம் என்றும், சொல்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

47. <u>ப்ரபன்னன் சாஸ்த்திர வச்யனா?</u>

முமுக்ஷுவான ப்ரபன்னன் சாஸ்த்திர வச்யன் அல்லன் என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவானன், பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி ப்ரபன்னனான ஒருவன் சாஸ்த்திர வச்யன் அல்லன் என்பது, ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

அதாவது,

சரணாகதன் பகவத் கைங்கர்யத்தை ஸ்வயம் ப்ரயோஜனமாக, வேறொரு பலனைக் கருதாது, செய்யும் போது அவனுக்கு சாஸ்த்திர நியமம் தேவை அன்று என பூர்பக்ஷிகள் வாதிடுவர்.

இது பஹுவித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. சரணாகதனின் உத்தர க்ருத்யம், அதாவது சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு ஜீவித காலத்தில் இங்கு இருக்க வேண்டிய ப்ரகாரம், சாஸ்த்திர விதியை மீறியதாகக் கூடாது என்கிற ப்ரமாணம் உபாதேயம்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (16-24)

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி

என்கிறான்.

அதாவது,

‘அதனால், தர்ம சாஸத்ரத்தில் விதித்தபடி ‘எது செய்ய தக்கது’ மற்றும் ‘எது செய்யத் தகாதது’ என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும்’ -

என்று பொது நியதியாக அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறான் கண்ணன். ஆக சரணாகதனுக்கு சாஸ்த்திர விதி மீறிய செயல் அங்கீகரிக்கப் படாதது.

விஷ்ணு தர்மத்தில் மஹரிஷி கூறுவதாவது :

ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி,

‘வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன்’ – என்கிறான் ஸர்வேஸ்வரன். ஆக, சாஸ்த்திர விதி மீறல் சரணாகதனுக்கும் ஏற்றதல்ல என்பதாகிறது.

பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மியின் திருவாக்கினால், பாஞ்சராத்ர சாஸ்த்திரத்தில், கூறப்பட்டது:

அவிப்லவாய தர்மாணாம் பால நாய குலச்ய ச சங்க்ரஹாய ச லோகஸ்ய மர்யாதா ஸ்தாப நாய ச ப்ரியாய மம விஷ்ணோச்ச தேவ தேவஸ்ய சாரங்கிண மநீஷீ வைதிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்

அதாவது, 'தர்மங்கள் மாறாமல் இருக்கவும், குலங்களை காப்பாற்றவும், இந்த உலகை தூய்மையான வழியில் நிலையாக நிறுத்தவும் , சாஸ்த்ரங்களுக்கான மரியாதை என்றும் பாதுகாக்கவும், சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்டவைகளை மீறுவதற்கு மனதாலும் நினைக்கக் கூடாது. ஏன் எனில் உகந்து ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானின் மகிழ்ச்சிக்காக' என்கிறாள் மஹாலக்ஷ்மி தாயார். இதுவும் சாஸ்த்திர வச்யதை ஸகல சம்சாரி ஜீவர்களுக்கும் உண்டு என்பதையே ப்ரகடனப் படுத்துகிறது.

ஆக சரணாகதனுக்கு சாஸ்த்திர விதி மீறுவதாகிய குற்றம் அத்யந்த பரிஹரணீயம்.

3. உகந்து பணி கொள்ளும் எம்பெருமான் திருவுள்ளம் மகிழ அவன் விதித்தவற்றை பின் பற்றுவது சரணாகத க்ருத்யம்.

உபநிஷத் சாரமான, ப்ருஹ்ம ஸுத்ரங்களில் (2-3-5-33 மற்றும் 2-3-6-40) வ்யாஸ பகவான், இவ்வாறு அருளினார் :

கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்; பராத் து தச்ருதே

அதாவது,

சாஸ்த்ரம் கூறுவதால் ஜீவன் செயல் புரியும் தன்மை உள்ளவன். ஆனால் ஜீவனுடைய செயல் புரியும் தன்மை பகவத் அதீனம்.

எம்பெருமானின் திருவுள்ளத்தை நித்ய முக்தர்கள் ப்ரத்யக்ஷத்தில் தெளிந்து செயல் படுவர்; சரணாகதன் சாஸ்த்திரத்தினால் தெளிந்து செயல்பட வேண்டும் என்பதாகிறது.

அபராத பரிஹாரமாக, சாஸ்த்திரங்கள்,

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என விதிக்கிறது.

அதாவது, சாஸ்த்திர மர்யாதையை மீறிய செயல் ஒரு ப்ராயஸ்சித்த ப்ரபத்தியால் பரிஹரிக்கப் படுகிறது என்பதால் சரணாகதனுக்கும் சாஸ்த்திர நியமம் உண்டென்பது விளக்கமாகிறது.

4. சரணாகதனின் ஏற்றத்தைக் கூறும் வரிகளால் சாஸ்த்திர மீறலை விதியாக்க முடியாது.

ஸர்வேஸ்வரன், மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவன விஷயத்தில், ப்ரீதி உடையவன் என்கின்றன சாஸ்த்திரங்கள். கண்ணனும் கீதையில் (7-17) **அஹம் ஸச மம ப்ரிய:** என அருளியுள்ளான்.

ஆக, பகவத் வாத்ஸல்யமாவது, தன் அடியார்களின் குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வது (**கேசவம் தோஷ போக்யம்**) என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

இந்த கருத்து பல விதமான ப்ரமாணங்களுக்கு முரணாகும்:

சீக்ஷா வல்லி, தைத்திரீய உபநிஷத், **ஸத்யம் வத , தர்மம் சர** (உண்மையே பேசு; தர்மப்படியே ஒழுகு) என்கிறது.

மாத்ரு தேவோ பவ , பித்ரு தேவோ பவ , ஆசார்ய தேவோ பவ , அதிதி தேவோ பவ (அன்னை, தந்தை, குரு அதிதி ஆகியோரை தெய்வமாகப் போற்ற வேண்டும்) என்பதும் உள்ளன.

இப்படி இருக்க, குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானை மகிழ்விக்க, இந்த விதிகளை பின் பற்றாமல், குற்றம் செய்து போக வேண்டும், என அர்த்தமாகிறது.

ஆக இது, ப்ரமாண விரோதம்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளின **ப்ருஹ்ம ஸூத்ரத்தில்**

விஹிதத்வாத் ச ஆஸ்ரம கர்மாபி

என்கிறார்.

அதாவது, இதை ஸ்ரீபாஷ்ய உரையில், ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் அனைவரும் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டும், என்று பகவத் ராமானுஜரால் விளக்கப் படுகிறது.

இப்படி இருக்க, குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானை மகிழ்விக்க, இந்த சாஸ்த்திர விதிகளை பின் பற்றாமல், குற்றம் செய்து போக வேண்டும், என அர்த்தமாகிறது.

ஆக இது, ப்ரமாண விரோதம்.

5. முக்தனாகும் அளவும் சரணாகதன் சாஸ்த்திர வச்யனே!

ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்கரிதம். விஸரிஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்கிறது மநு தர்ம சாஸ்த்திரம்.

அதாவது, மோக்ஷத்தை அடைபவன், அதன் பொருட்டு தன் தேகத்தை விடும் போது, புண்யங்களை தன் நண்பர்களிடமும் பாபத்தை தன் விரோதிகளிடமும் விட்டுச் செல்கின்றனர்.

அதன் பிறகு அந்த சரணாகதன் பாப புண்ய கர்ம பந்தம் அற்று பரமபதத்தை அடைகிறான், என்பதற்கு ப்ரமாணம் உளது.

ஆக, சரீரத்தை விட்டு ஜீவன் வெளிக்கிளம்பும் வரை சரணாகதனும் கர்ம வச்யனே; அதனால், சரணாகதன் தேஹ அவஸானத்தளவும், சாஸ்த்திர வச்யதை உடையவனே, என்பது ப்ரமாண ஸித்தம்; அதனால் தான், புத்திபூர்வக உத்தராகம் ஆகாமியாகவும் உண்டாக, சரணாகதனுக்கு வழி இருக்கிறது; அந்த குற்றத்திற்காகத் தான் சாஸ்த்திரத்தில் கூறும் **ப்ராயஸ்சித்த ப்ரபத்தி** விதியாகிறது.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இவ்விடத்திலே சிலர் "ஸர்வேஸ்வரன் பக்கலிலே ஸர்வ பரந்யாஸம் பண்ணின விவேகிக்குத் த்யாஜ்ய-உபாதேய-விபாக-நிர்ணாயகம் ஸ்வரூப ஞானம் அன்றோ? இப்படி இவன் ஸ்வரூப வச்யனாம் அத்தனை சாஸ்த்திர வச்யனாம் என்?" என்று சொல்லுவார்கள். இதுவும் அநுபபன்னம்

என அருளியுள்ளார்.

7. ஆக, முமுக்ஷுவான ப்ரபன்னன் சாஸ்த்திர வச்யன் அல்லன் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

48. <u>ப்ரபன்னனின் பகவத் கைங்கர்யம் சாஸ்த்திர ஸாபேக்ஷமாகவா?</u>

முமுக்ஷுவான ப்ரபன்னனுக்கு, பகவத் கைங்கர்யமாக செய்யும் செயல்களில் சாஸ்த்திர வச்யதை கிடையாது, என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவாக, பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி ப்ரபன்னனானவனுக்கு, பகவத் கைங்கர்யமாக செய்யும் செயல்களில் சாஸ்த்திர வச்யதை கிடையாது என்பது, ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

ஸ்ரீ ஆளவந்தாரின், ஸ்தோத்ர ரத்ன வரிகளாவது:

நிஜ கர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித: உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவே து தாமபி:

அதாவது,

தன் கடமையான வர்ணாஸ்ரம தர்மம் முதல் பக்தி யோகம் வரையில் உள்ளவற்றை அன்பினாலேயே ஊக்கம் பெற்றுச் செய்ய வேண்டும் ; அவற்றை உபாயபாகக் கருதாமல், மற்ற தேவதைக்கு அஞ்சாமல், எம்பெருமானே முக்கிய உபாயம் என்று அநுஸந்திக்க வேண்டும்,

என ஸ்ரீ ஆளவந்தார் அருளினார்.

இதை ப்ரமாணமாகக் கொண்டு,

சரணாகதன் பகவத் கைங்கர்யத்தை ஸ்வயம் ப்ரயோஜனமாக, வேறொரு பலனைக் கருதாது, செய்யும் போது அவனுக்கு சாஸ்த்திர நியமம் தேவை அன்று என பூர்பக்ஷிகள் வாதிடுவர்.

இது பஹுவித ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, இங்குள்ள கோவில்களில் ஆகம சாஸ்த்ரப்படி அமைத்த அர்ச்சா ரூப மூர்த்திக்கு (க்ருஹத்தில் உள்ள சாளக்ராம பெருமாளும் அர்ச்சா ரூப மூர்த்தி தான்), கைங்கர்யம் செய்வது உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

திருமழிசைபிரான் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதியில்

தரித்திருந்தேனாகவே தாரா கணப்போர், விரித்துரைத்த வெந்நாகத் துன்னை, - தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது

கூறியபடி

எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களைப் பற்றிய விஷயங்களை வாசித்தும், கேட்டும், வணங்கி, வழிபட்டும், பூஜித்தும் பொழுதை போக்க வேண்டுவதே உத்தரக்ருத்யம்.

ஆக, சரணாகதன் சாஸ்த்திரத்தினால் தெளிவு பெற்று, அதன் விதிப்படி பூஜித்து பொழுதை போக்க வேண்டுவதாகிறது.

3. சாண்டில்ய ஸ்ம்ருதிகளால் தெளிய வேண்டுவது,

 # ஸதீவ ப்ரிய பர்தாரம் ஜன்னீ இவ ஸ்தநனதயம். ஆசார்யம் சிஷ்யவன்மித்ரம் மித்ரவல்லாலயேத்தரிம்

அதாவது,

சாளக்கராமத்துக்கு திருவாராதனம் செய்யும் காலத்தில், ஒரு பதிவ்ரதை தன் கணவனை எப்படி நேசிப்பாளோ, ஒரு தாய் தன் கைக்குழந்தையிடம் வாத்ஸல்யத்தை (வாத்ஸல்யமாவது, குறைகளைக் காணாது நல்லது செய்வது) எப்படி காட்டுவாளோ, ஒரு சிஷ்யன் தன் ஆசார்யனிடம் எப்படி கௌரவ புத்தியுடன் இருப்பானோ, ஒரு நண்பன் காட்டும் மித்ர பாவம் எப்படியோ, அது போன்ற உணர்வுகளைக் கொண்டு சாஸ்த்திர விதிப்படி, ஸர்வேஸ்வரன் பக்கலிலே, கொள்ள வேண்டும்.

 # யதா யுவாநம் ராஜானம் யதா ச மத ஹஸ்தினாம். யதா ப்ரிய அதிதிம் யோக்யம் பகவந்தம் ததார்ச்சயேத்

அதாவது,

சாளக்கராமத்துக்கு திருவாராதனம் செய்யும் காலத்தில், ஸர்வேஸ்வரன் பக்கலிலே, ஒரு இளவரசனை உபசரிப்பது போல், மதங்கொண்ட யானையிடம் பயந்து நடப்பது போல், பிரியமான விருந்தாளியை கௌரவிப்பது போல், எண்ணம் வேண்டும்.

ஆக, உத்தர க்ருத்யமாக, சரணாகதன் செய்யும் பகவத் கைங்கர்யங்களையும், ப்ரீதியோடு சாஸ்த்திர விதி மீறல் அற்று அநுஷ்டிக்க வேண்டுவதாகிறது.

4. சாஸ்த்திர விதி மீறல், புத்திபூர்வக அபசாரத்தில் சேருமாகையால், சரணாகதனும் பகவத் கைங்கர்யத்தை சாஸ்த்திர விதிப் படி செய்ய வேண்டுவதாகிறது.

இதையே ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத ப்ருதக் லஷணம் சாஸ்திர சித்தஸ்ய த்ரிதா சப்தத சோதிதம்

என ஆளவந்தார் அருளிச் செய்தார்.

அதாவது, சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும் என்றார். பரிஹரிக்க வேண்டிய அபசாரம் ஆகும்.

சட்டம் ஒழுங்கு கெடாமால் இருக்கவும், குலங்களை காப்பதற்காகவும், லோகத்தை நல் வழியில் நிறுத்துவதற்காகவும் ஏற்படுத்தப் பட்ட சாஸ்த்ரங்களில் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட வர்ண ஆஸ்ரமத்துக்கான, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின், ஆணையை மீறக் கூடாது என்கிறது சாஸ்த்ரங்கள்.

5. கைங்கர்யமாவது

ஸ்வாமி உகந்த ஏவல் தொழில்

ஸர்வேஸ்வரன் உகப்பைக் கருதியே செய்யும் செயல்கள் தான் தொண்டாக அமையும்.

ஆக, நம் மனம் போனபடி செய்யும் பகவத், பாகவத கைங்கர்யங்கள், சாஸ்த்ர விதியை மீறுவதாக இருந்தால், அது கைங்கர்யமாகாது.

உதாரணமாக,

நாம் சந்தோஷப்படுத்தும் பொருட்டு இனிப்பை விரும்பாத ஒருவனுக்கு ஒரு இனிப்பு பண்டத்தை கொடுத்தால், அது எப்படி அவனை சந்தோஷப்படுத்த உதவாதோ, அதே போல் சாஸ்த்ர விதியை மீறி நாம் செய்யும் பகவத் பாகவத கைங்கர்யங்கள் ஸர்வேஸ்வரனுக்கு உகப்பை தராது. மாறாக, அதன் பலன் தீமையில் தான் முடியும்.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இங்கு சாஸ்த்திரம் கொண்டே அறிய வேண்டுகிற கைங்கர்யம் தன்னில் ஸ்வாமி ஸந்தோஷ ஜனகத்வம் அடியாக சேஷ பூதனான தனக்கு பிறக்கிற ப்ரீதியினுடைய ப்ரேரகத்வ அதிசயம் சொல்லுகையிலே தாத்பர்யம்

என அருளியுள்ளார்.

7. ஆக, முமுக்ஷுவான ப்ரபன்னனுக்கு, பகவத் கைங்கர்யமாக செய்யும் செயல்களில் சாஸ்த்திர வச்யதை கிடையாது, என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

49. ஸ்த்ரீ தர்மம்

1. தர்ம சாஸ்த்ரம் க்ருஹஸ்த ஸ்த்ரீ தர்மத்தை உரைக்கிறது:

கார்யேஷு தாஸீ, கரணேஷு மந்த்ரீ , ரூபேஷு லக்ஷ்மீ,க்ஷமயா தரித்ரீ ஸ்நேஹே ச மாதா, சயநே து வேச்யா ஷட்கர்மயுக்தா குலதர்ம பத்நீ

ஒன்று : **கார்யேஷு தாஸீ** – காலையில் வெளியில் கோலம் இடுவது தொடங்கி, முறையாக பூஜை அறையை சுத்தம் செய்து, கோலமிடுதல், விளக்கேற்றுதல், பகவத் நிவேதனத்திற்கு முறையோடு தளிகை பண்ணுவது போன்றவை, ஸ்த்ரீ தர்மம்.

இரண்டு: **கரணேஷு மந்த்ரீ** – பதிக்கு சாஸ்த்ரீயமான ஆலோசனை சொல்வதில் மந்த்ரியாக் இருக்க வேண்டும்.

இயம் ஸீதா மம ஸுதா ஸஹ தர்ம சரீதவா

என ஸீதையை ஸ்ரீராமனிடம் ஜனகர் அறிமுகபடுத்துகிறார்.

இவள் என் மகள் ஸீதை; தர்ம வழியில் செல்ல உனக்கு துணையாக இருப்பாள்.

இதற்காக திருமந்திர த்வய சரமஸ்லோகத்தை முறையோடு தினமும் ஜபிக்க வேண்டுவதாகிறது; ஏகதேசி வ்ரதத்தை அநுஷ்டிப்பது போன்றவையும் உண்டு.

மேலும், வைதீக கர்மாக்களான விவாஹம், க்ருஹப்ரவேசம், ஸ்ராத்தம் போன்ற அனைத்திலும் ஸ்த்ரீகளின் முக்கிய பங்கு உண்டு.

தர்ம கார்யம் தழைத்தோங்க குல ஸ்த்ரீகளின் பங்கு பெரிது.

மூன்றாவதாக, **ரூபேஷு லக்ஷ்மீ** – தோற்றத்தில் லக்ஷ்மியாக, அதாவது லக்ஷ்மீகரமாக, இருக்கவேண்டும். மநுதர்ம சாஸ்த்ரத்திலும் 'க்ருஹிணிக்கு மஹாலக்ஷ்மி தாயாரின் அம்சம் உளது', என்கிறது.

நாலாவதாக, **க்ஷமயா தரித்ரீ** – ரூபத்தினால் ஸ்ரீதேவியாக இருப்பவள் பொறுமையால் பூமாதேவியாக இருக்கவேண்டும்.

ஸ்நேஹே மாதா என்பது ஐந்தாவது. இங்கேதான் ஸ்த்ரீக்கு நம் தர்மம் எவ்வளவு உச்சஸ்தானம் கொடுத்திருக்கிறது என்று தெரிகிறது. அன்பு காட்டுவதில் ஒரு தாய் குழந்தையிடம் எப்படியிருப்பாளோ அப்படியே பத்னி பதியிடம் இருக்கவேண்டும் என்று அர்த்தம். அதாவது ஒரு பதிக்கு அவனுடைய பத்னியையே மாத்ரு ஸ்தானத்தில் உயர்த்திக் காட்டுகிறது. ஆதி மூல வேதமும் ஸ்த்ரீயை ஆசீர்வதிக்கும்போது "பத்துக் குழந்தையைப் பெற்றுக்கொள். அப்புறம் பதியையும் பதினோராவது குழந்தையாக்கிக்கொள்" என்கிறது.

இப்படி ஐந்தைச் சொன்னபின் கடைசியாகத்தான் சிற்றின்பத்தைச் சொல்லி, **சயநே து வேச்யா** என்கிறது ; இதுவும் வம்ச வ்ருத்தியான தர்மத்தை சொன்னபடி.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

50. <u>தேவதாந்தர நாமம் உள்ள கர்மா சரணாகதனுக்கு த்யாஜ்யமா?</u>

தேவதாந்தர சப்த ப்ரயோகம் நித்ய நைமித்திக கர்மங்களில் உள்ளதால் பரமேகாந்தியான சரணாகதனுக்கு அவைகள் விடத் தக்கவையாக 'ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய' என்பதற்கு அர்த்தம் கொள்ள வேண்டும், என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவாக, பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி பரமேகாந்தியாக சரணாகதன் ஆனவனுக்கு , தேவதாந்தர சப்த ப்ரயோகம் நித்ய நைமித்திக கர்மங்களில் உள்ளதால், அவைகள் விடத் தக்கவையாக 'ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய' என்பதற்கு அர்த்தம் கொள்ள வேண்டும், என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

இது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

பரமேகாந்தியான ஸ்ரீவைஷ்ணவ ப்ரபன்னன், தன் அதிகாரத்திலும் அதனால் அநுஷ்டித்த சரணாகதியின் அங்கத்திலும் உள்ள கார்ப்பண்யம், பரமேகாந்தித்வத்தை தெளிவிக்கிறது.

பரமேகாந்தித்வமாவது

சரண்யாந்தர வைமுக்யம் - உபநிஷத் கொண்டு அறியப் படுகிற ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை அன்றி வேறொரு தேவதையும் பரம்பொருளாகவோ துதிக்க வல்லதாகவோ ஆகாது.

ப்ரயோஜநாந்தர வைமுக்யம் - ஸ்வரூப ப்ராப்தமான மோக்ஷ பலனாகிற நிரந்தரமான நிரபராத பகவத் கைங்கர்யம் மட்டுமே, ஜீவர்களுக்கு உகந்த புருஷார்த்தம் என்கிற த்ருட சித்தம்.

2. இக்கருத்தை ப்ரதிபலிக்கும் ப்ரமாணங்களாவது:

மஹாபாரதத்தில் ஸர்வேஸ்வரன் திருவாக்காக உள்ளது:

அநன்ய தேவதா பக்தா யே மத் பக்த ஜந ப்ரியா: மாமேவ சரணம் ப்ராப்தாஸ்தே மத் பக்தா: ப்ரகீர்திதா:

அதாவது,

வேறு தேவதைகளிடம் பக்தி அற்றவர்களாய் பாகவதர்களிடம் அன்பு உடையவராய் என்னையே சரணமாக பற்றினவர்கள் என் பக்தர்களாவர்.

ஐந்தாவது வேதமாக போற்றப் படும் மஹாபாரதத்தில் வ்யாஸர் அருளியதாவது:

ப்ருஹ்மாணம் சிதிகண்டம் ச யாஸ்ச அன்ய தேவதா ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்

அதாவது,

சதுர்முகனையும் முக்கண்ணனையும் முமுக்ஷுக்கள் ஸேவிப்பதில்லை ஏனெனில் அவர்கள் தரும் பலன்கள் அற்பமானதே.

ஆக, சரணாகதனுக்கு, தேவதாந்தர சம்பந்தம் நிஷித்தம் என்பது ப்ரமாண ஸித்தம்; ஆகையால், தேவதாந்தர சப்த ப்ரயோகம் நித்ய நைமித்திக கர்மங்களில் உள்ளதால், அவைகள் விடத் தக்கவையாக, பூர்வ பக்ஷிகள் கூறுகின்றனர்.

இக்கருத்து, மற்ற ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

3. சாஸ்த்திர விதிகளுக்கு, பரஸ்பர விரோதமற்று அர்த்த நிர்ணயம் பண்ண வேண்டும் என்பது பகவத் ராமானுஜ ஸித்தாந்தம்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளின ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

விஹிதத்வாத் ச ஆஸ்ரம கர்மாபி

என்கிறார்.

அதாவது, இதை ஸ்ரீபாஷ்ய உரையில், ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் அனைவரும் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டும், என்று கூறப்படுகிறது.

ஆக, தேவதாந்தர சப்த ப்ரயோகத்தால் நித்ய நைமித்திக கர்மாக்கள் சரணாகதனுக்கு த்யாஜ்யம் என்பது இந்த ஸூத்ரத்தோடு விரோதிக்கும்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளின ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

ஸாக்ஷாதபி அவிரோதம் ஜைமிநி:

என்கிறார்.

அதாவது, இதை ஸ்ரீபாஷ்ய உரையில், ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் அனைவரும் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அநுஷ்டிக்கும் போது, தேவதாந்தரங்களின் அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனின் ஆராதனமாகவே கொள்ள வேண்டும், என்று கூறப்படுகிறது.

இவ்வாறு சாஸ்த்ரீயமான அர்த்தம் கொள்வதால், வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அநுஷ்டிக்க விதிக்கும் ப்ரமாண வாக்யத்துக்கும் பரமேகாந்தித்வத்துக்கும் விரோதம் வாராது.

4. இதே கருத்தை பல ப்ரமாணங்கள் விவரிக்கின்றன:

தக்ஷ ஸ்ம்ருதி வரிகளாவது :

யே யஜந்தி பித்ரூந் தேவாந் ப்ராஹ்மணாந் ஸஹூதாஸநாந். ஸர்வபூதாந்தராத்மாநம் விஷ்ணுமேவ யஜந்திதே

அதாவது,

‘பித்ருக்களையும், தேவர்களையும், ரிஷிகளையும், தன் நித்ய நைமித்திக கர்மா அநுஷ்டானத்தின் போது ஆராதிப்பவர்கள் அவர்களுக்கு அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனையே ஆராதிக்கிறார்கள்’.

ஆக, நாம் செய்யும் ஸந்த்யாவந்தன கர்மாக்களில் வரும் இதர தேவதைகளின் பெயர்களும் (சூர்யன், அக்னி) மற்றும் தர்ப்பண மந்த்ரத்தில் வரும் ‘**வசு, ருத்ர, ஆதித்யன்**’ போன்ற சப்தங்களும் ஸர்வ அந்தர்யாமியான விஷ்ணுவையே குறிக்கிறது எனப் பொருள்.

ஸ்ரீ பாஷ்யகாரரும் தனது **நித்யம்** எனும் க்ரந்தத்தில் இதை அருளியுள்ளார்.

தேவாந்ருஷீந் பித்ரூந் பகவத் ஆத்மகாந் த்யாத்வா ஸந்தர்ப்ய:

அதாவது,

தேவர்களையும் ரிஷிகளையும் பித்ருக்களையும் எம்பெருமானை அந்தர்யாமியாக உடையவராகவே எண்ணி தர்ப்பணம் செய்ய வேண்டும்.

இதைத் தவிர்த்து, சாஸ்த்திர விதி இல்லாத கர்மங்களினால் மற்றபடி தேவதாந்தர சம்பந்தம் / சப்த ப்ரயோகம் மோக்ஷ பலனை அழிக்கும், என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விளக்கங்கள்.

5. இக்கருத்தை ஸர்வேஸ்வரனான கண்ணன் தானே, தன் வாக்கால், பகவத் கீதையில் (9-24) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநன்தி அத தத்வேநது ச்யவந்திதே

அதாவது,

‘எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் நான் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறேன். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.’

ஆக, விதிக்கப் பட்ட வர்ண ஆஸ்ரம கர்மங்களில், தேவதா நாம உச்சாரணம், எம்பெருமானைக் குறித்தே என தெளிவாகிறது. இதை உணராமல் அவர தேவதைகளை ஆராத்யர்களாவும் பல ப்ரதர்களாகவும் நினைப்பது சாஸ்த்திர விரோதம்.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இத்தேவதைகள் பக்கல் பரத்வ புத்தியும் ஸாம்ய புத்தியும் ஸ்வநிஷ்டத்வ புத்தியும் ஆராத்யத்வ புத்தியும் பல ப்ரதத்வ புத்தியும் இல்லாமையாலே உபாஸ்ய விசேஷணங்களான ப்ராண வைஷ்வானர த்ரைலோக்யாதிகளால் இவனுக்கு வ்யபிசாரம் வாராதாப் போலே சாஸ்த்திர ஸித்தங்களான அக்நி இந்திர விசேஷணங்களாலும் இவனுக்கு ஐகாந்த்ய விரோதம் வாராது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

இத்தேவதைகள் பக்கல் - வர்ண ஆஸ்ரம கர்ம அநுஷ்டானத்தின் போது, தேவதாந்தர நாம உச்சாரணம் செய்யப்படும் தேவதாந்தரங்களின் விஷயத்தில்

பரத்வ புத்தியும் - இந்த தேவதைகளே பரம் பொருள் என்கிற எண்ணமும்

ஸாம்ய புத்தியும் - ஸர்வேஸ்வரனுக்கு ஸமமானவர்கள் இந்த தேவதைகள் என்கிற எண்ணமும்

ஸ்வநிஷ்டத்வ புத்தியும் - அந்த தேவதைகளின் ஆராதனம் ஜீவர்களின் வ்வரூப ப்ராப்தமானது என்கிற எண்ணமும்

ஆராத்யத்வ புத்தியும் - இந்த தேவதைக்ள் ஆராதிக்கத் தக்கவர்கள் என்கிற எண்ணமும்

பல ப்ரதத்வ புத்தியும் - இந்த தேவதைகள் பலன் அளிக்க வல்லவர்கள் என்கிற எண்ணமும்

இல்லாமையாலே - இம்மாதிரியான சாஸ்த்திர விரோதமான கருத்துக்களைக் கொள்ளாமல் இருப்பதாலே

உபாஸ்ய விசேஷணங்களான ப்ராண வைஷ்வானர த்ரைலோக்யாதிகளால் இவனுக்கு வ்யபிசாரம் வாராதாப் போலே - பல மோக்ஷ உபாய உபாஸநங்களில் விதிக்கப் பட்ட தேவதா நாம

உச்சாரணமானது தேவதாந்தர ஸ்பர்சம் உபாஸகனுக்கு ஏற்படுத்தாது என சாஸ்த்திரம் விளக்குவது போல

சாஸ்த்திர ஸித்தங்களான அக்நி இந்திர விசேஷணங்களாலும் இவனுக்கு ஐகாந்த்ய விரோதம் வாராது - நித்ய நைமித்தக கர்மாக்களில் வரும் தேவதாந்தர நாம உச்சாரணம் சரணாகதனுக்கு பரமேகாந்தித்வத்தை போக்காது.

7. ஆக, தேவதாந்தர சப்த ப்ரயோகம் நித்ய நைமித்திக கர்மங்களில் உள்ளதால் பரமேகாந்தியான சரணாகதனுக்கு அவைகள் விடத் தக்கவையாக 'ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய' என்பதற்கு அர்த்தம் கொள்ள வேண்டும், என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

51. பால்ய ப்ரபத்திக்குக் பின் விவாஹ அநன்தரம் புந: ப்ரபத்தி உசிதமா?

சிறு ப்ராயத்தில் பெண் பிள்ளைக்கு பெற்றோர்களால் ஒரு ஸதாசார்யன் மூலமாக, ப்ரபத்தி அநுஷ்டானம் ஸித்தித்துவிட்டால், விவாஹ அநன்தரம் புந: ப்ரபத்தி அநுசிதம்.

1. ஸ்ரீராமன் விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில் அருளியவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

 # ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்திதச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம

அதாவது,

ஒரு முறை சரணாகதி செய்தவனை தான் ரக்ஷிக்கும் வ்ரதம் உடையவன் என்றான்.

 # மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னைப் பற்றினால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'.

ஆக, மோக்ஷத்திற்காக சரணாகதி அநுஷ்டித்தவன் அந்த பலனை பெற்றே தீருவான் என்பது ஸர்வேஸ்வரன் திருவாக்கு.

2. சரணாகதி ஸக்ருத் கர்தவ்யம் ; பல முறை அநுஷ்டிக்கலாகாது ;

ஸநத்குமார ஸம்ஹிதை - ஸ்ரீமத் ராமாயண உதாரணம்

ராக்ஷஸாணாம் அவிஸ்ரம்பாத் ஆஞ்நேயஸ்ய பந்தனே யதா விகலிதா ஸத்ய: த்வமோகாப்யஸ்த்ர பந்தனா ததா பும்ஸாம் அவிஸ்ரம்பாத் ப்ரபத்தி: ப்ரச்யுதா பவேத் தஸ்மாத் அவிஸ்ரம்ப யுக்தானாம் முக்திம் தாஸ்யதி ஸாசிராத்

அதாவது, சிறிய திருவடி ப்ருஹ்மாஸ்த்ரத்தால் கட்டுண்ட போது ராக்ஷஸர்கள் நம்பிக்கை அற்று, மீண்டும் கட்ட முற்பட்டதால், ப்ருஹ்மாஸ்த்ரம் செயல் இழந்ததோ, அது போல ப்ரபத்தியில் நம்பிக்கை அற்று மீண்டும் அநுஷ்டிக்க புக்கால், அந்த ப்ரபத்தி பயனளிக்காது, என்றபடி.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

52. <u>ஸநாதன தர்மத்தில் மத மாற்றத்துக்கு ப்ரமாணம் உண்டோ ?</u>

பல வைதீக மதங்கள் (வேத வேதாந்தத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்ட மதங்கள்) பரம்பொருள் யார் என்பதை பலவிதமாக அறிவிக்கின்றனர்.

1. பரம்பொருள் யார் என அறியாமல் துதிக்கக் கூடாது என்பது சாஸ்த்திர (வேத) நியதி.

காரணம் து த்யேய:

என்பது உபநிஷத் வரி.

எவன் ஒருவன் உலகத்திற்கு காரணமோ, அவனே ஈஸ்வரன், அவனையே துதிக்க வேண்டும், என்கிறது.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்** (1-1-2-1)

ஜன்மாத்யஸ்ய யத:

அதாவது,

உலகம் உண்டாவதற்கும் இருப்பதற்கும் அழிவதற்கும் எவன் காரணமோ அவன் ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்படும் ஸர்வேஸ்வரனுக்கான இலக்கணமாவது -

யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவநதி யத் பிரயந்த்ய பி சம்விசந்தி தத் விஜிஜ்ஞாஸ் ஸ்வ தத் ப்ரஹ்மேதி

அதாவது,

எவனிடமிருந்து இந்த லோகங்கள் உண்டாகிறதோ, எவனால் அவை காக்கப் படுகிறதோ, எவனிடத்தில் அவை லயத்தை அடைகிறதோ அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா).

மேலும் ப்ரமாணங்களைக் கணிசிக்கும் போது, மஹா ப்ரளய காலத்தில் தானே இல்லாத ஒருவனுக்கு, ஸ்ருஷ்டி செய்ய வழி கிடையாது அல்லவா? ஆதலால், ப்ரளய காலத்திலும் எவன் நிலைத்து இருக்கிறானோ, அவனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா), என்பதாகிறது.

மஹோபநிஷத்தில்,

ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஸாந நேமே ஜாவா ப்ருத்வி நக்ஷத்ராணி

என்கிறது.

அதாவது,

நாராயணன் ஒருவனே, மஹா ப்ரளய காலத்தில், இருந்தான்; சதுர்முக ப்ருஹ்மாவும் இல்லை; சிவனுமில்லை; லோகங்கள் இல்லை; நக்ஷத்திரங்கள் இல்லை என்று மஹாப்ரளய காலத்தில் பல இல்லாத வஸ்துக்களையும் உபநிஷத் கூறுவதினால்,

மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா),

என்பதாகிறது.

ஐந்தாவது வேமாக க் கொண்டாடப்படும் மஹா பாரதத்தில், வேதவ்யாஸர் அருளும் போது,

ஆபூத ஸம்ப்லவே ப்ராப்தே ப்ரலீனே ப்ரக்ருதௌ மஹான் ஏகஸ்திஷ்டதி விச்வாத்மாச ஸ து நாராயண பிரபு

அதாவது,

பஞ்ச பூதங்கள் அனைத்தும் மூல ப்ரக்ருதியில் லயம் அடைந்த மஹா ப்ரளய காலத்தில், உலக நாயகனான ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே இருந்தான்,

என்கிறது.

ஆக, மஹாப்ரளயத்தில் இருக்கிற ஸ்ரீமந் நாராயணனே ப்ருஹ்மம் (பரம் பொருள், ஸர்வேஸ்வரன், பரமாத்மா)

ஸ்ரீமந் நாராயணனே ஈஸ்வரன், அதாவது பரதத்வம், பரம் பொருள், பரமாத்மா என்பதை மேலுமுள்ள சாஸ்த்திர வரிகளைக் கொண்டு தெளிய வேண்டும்.

2. தைத்ரீய உபநிஷத், நாராயண ஸுக்தத்தில்

நாராயண பரப்ரஹ்ம! தத்வம் நாராயண: பர: நாராயண பரோஜ்யோதி ஆத்மா நாராயண: பர:

என்ற வரி காணப் படுகிறது.

அதாவது,

நாராயணனே ப்ரப்ரஹ்மம்! நாராயணனே பரதத்வம்! நாராயணனே மேலான ஜோதி! நாராயணனே பரமாத்மா !

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில்,

மத்த: பரதரம் நாந்யத்கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய! மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ

என்று

'தனஞ்ஜயா, என்னைக் காட்டிலும் உயர்ந்த பொருள் வேறெதுவுமில்லை',

என அருளினான்.

பராசர மஹரிஷி அருளிய விஷ்ணு புராணத்தில்,

தேவ த்ரியக் மநுஷ்யாணாம் புன்னாமா பகவான் ஹரி: ஸ்த்ரி நாம்நி லக்ஷ்மிர்மைத்ரேய நாந்யோர் வித்யதே பரம்

என்று கூறியதால்,

பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் மற்றும் ஹரியைத் தவிர வேறு யாரும், ஸர்வ சேஷியாக, அதாவது பரமாத்மாவாக மாட்டார்கள்.

ஆக, ஸ்ரீமந் நாராயணனே ஸர்வேஸ்வரன், என்பதாகிறது.

3. முண்டகோகநிஷத்தில்,

தத் விக்ஞானார்த்தம் ஸ குருமேவ அபிகச்சேத் என்றும்,

ஆசார்யவான் புருஷோ வேத: என்றும்

அதாவது,

'நல்ல ஆசார்யனைப் பெற்றால் மட்டுமே பரம் பொருளை அறிந்து நற் கதி பெற முடியும்,

என சொல்லப் பட்டிருக்கிறது.

4. ப்ரமாணங்களை ஆராயும் போது,

ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருசயா ஸுஹ்ருதம் ததா. விஷ்ணோஹோ கடகூம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகைஹ ஸம்பாஷணேம் ஷடேதானி ஆசார்ய ப்ராப்தி ஹேதவஹ

அதாவது,

தெளிந்த தத்வ ஞானியாக, சாஸ்த்திரங்களை நன்கு அறிந்த, உயர்ந்த ஆசார்யன் ஒருவனை, இந்த சம்சாரி ஜீவன் அடைய, ஆறு காரணங்கள் சாஸ்த்திரத்தினால் கூறப் படுகின்றன; அவை ஆவன :

எம்பெருமானின், ஸகல ஜீவர்களிடம் கொண்டுள்ள பொதுவான நல்லெண்ணம்,

சம்சாரி ஜீவனனுடைய பூர்வ ஜன்ம யாத்ருச்சிக ஸுஹ்ருதம்,

சம்சாரி ஜீவனனுக்கு உண்டான ஸர்வேஸ்வரனின் கடாக்ஷம்,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் உண்டான இச்சை,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் த்வேஷம் இல்லாமை, மற்றும்

சம்சாரி ஜீவனனுக்கு உள்ள ஸாத்வீகர்களின் ஈடுபாடு

என்கிறது சாஸ்த்திரம்.

5. ஆக, ஸுக்ருதம் அற்றபடியால் தெளிவான ஞானமும் ஸதாசார்ய சம்பந்தமும் இல்லாமால் போகும் சம்சாரி ஜீவர்களுக்கு உபதேசம் தேவை அற்றது; பலன் அளிக்காது; ஆனால் அல்ப ஞானமுடைய ஆஸ்திகர்கள் கலங்காமல் இருக்க தெளிவு/ விவாதம் தேவையாகிறது.

ஸ்வாமி தேசிகன் ஸித்தோபாய சோதன அதிகாரத்தில் , தத்வ ஞான சம்பாத்யத்தின் தேவையை விளக்குகிறார் :

மற்றுளார்க்குத் தாங்கள் தெளிகைக்காகவும் குதர்க்கங்களாலே கலங்குவோரைத் தெளிவிக்கைக்காகவும் ஸமீசீன யுக்திகளோடே கேட்க ப்ராப்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

மற்றுளார்க்குத் - சாஸ்த்திர விவாதங்களில் ஈடுபடுவோருக்கு

தாங்கள் தெளிகைக்காகவும் - பூர்வாசார்யர்கள் அருளிய ப்ரமாண விஷயத்தில் தனக்கு தெளிவு உண்டாவதற்கும்

குதர்க்கங்களாலே கலங்குவோரைத் தெளிவிக்கைக்காகவும் - விபரீத வாதங்களைக் கொண்டு ப்ரமாண விஷயத்தில் தெளிவற்றவரைத் தெளிவிக்கவும்

ஸமீசீன யுக்திகளோடே - ப்ரமாண விஷயத்தை ஊர்ஜிதம் படுத்துவதான ஸத் தர்க்கங்களை முன் வைத்து

கேட்க ப்ராப்தம் - விவாதித்து தெளிய வேண்டும்.

மற்றபடி, மத மாற்றம் என்கிற ஒரு வ்யாபாரம், ஸநாதன ஸத் ஸம்ப்ரதாயத்தில் கிடையாது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

53. <u>சரணாகதன், விரும்பிய மந்திரம் கொண்டு கர்மாவை அநுஷ்டிக்கலாமா?</u>

சரணாகதன், சாஸ்த்திர விதி முறையை மீறி, தான் விரும்பும் போதும் தான் விரும்பிய மந்திரங்களைக் கொண்டும், கர்மங்களைச் செய்யலாம் என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவாக, பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி பரமேகாந்தியாக சரணாகதன் ஆனவனுக்கு , சாஸ்த்திர விதி முறையை மீறி, தான் விரும்பும் போதும் தான் விரும்பிய மந்திரங்களைக் கொண்டும், கர்மங்களைச் செய்யலாம் என்பது, ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

இது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

2. சாஸ்த்திரங்கள், விகல்பங்களை தெளிவிக்கின்றன. அவை இரு வகையாக உள்ளன.

 # வ்யவஸ்தித விகல்பம் - ஒரே பலனிற்காக, அதிகாரத்திற்கு ஏற்ப, விதிக்கப் பட்ட செயல்கள்.

 # அவ்யவஸ்தித விகல்பம் - ஒரே பலனிற்காக, அதிகார பேதம் இல்லாமல், அவரவர்களின் இச்சைக்கு ஏற்ப செய்ய அநுமதிக்கப் பட்ட செயல்கள்.

உதாரணம்:

வ்யவஸ்தித விகல்பம் - தர்ம சாஸ்த்திரத்தில், உள்ளது:

வாரூணம் திவ்யமாக்னேயம் வாயவ்யம் பார்த்திவம் ததா; மாந்த்ரம் மானஸமித்யேவம் ஸ்நாநம் ஸப்த விதம் ஸ்ம்ருதம்

என, ஸ்நாநம் செய்வதில் ஏழு விதமான அதிகாரி பேதங்கள் சாஸ்த்திரத்தினால் சொல்லப் படுகிறது. அதாவது,

மந்திர ஸ்நாநம் - மந்திரத்தைக் கொண்டு

பார்த்திவம் - மண்ணைக் கொண்டு

ஆக்நேயம் - ஹோம குண்டத்தில் உள்ள சாம்பல் கொண்டு

வாயவ்யம் - பசுவின் பாத தூளி கொண்டு

திவ்யம் - வெய்யிலோடு கூடிய மழையில்

வாருணம் - நீர் நிலையில்.. ஆறு, குளம் போன்றது (பொதுவான ஸ்நாநம் என நாம் அறிவது)

மாநஸம் - பகவத் த்யானம்

இவை அனைத்து வித ஸ்நாநங்களும், ஒரு சில கால கட்டத்தில், செய்து சுத்தி பெற சாஸ்த்திரம் அநுமதிக்கிறது.

இந்த வித்யாஸங்கள் அதிகாரி பேதத்தினால் ஸித்திக்கிறது.

ஒருவனுக்கு, **வாருண ஸ்நாநம்** செய்து போக உடல் வியாதி காரணமாக தடை இருக்கும் போது, **மந்திர ஸ்நாநம்** செய்து அதே சுத்தியைப் பெற, அவனுக்கு அதிகாரம் பிறக்கிறது; இதை சாஸ்த்திரம் அநுமதிக்கிறது; ஆனால், நல்ல உடல் ஆரோக்யம் உள்ளவன் மந்திர ஸ்நாந்த்திற்கு அதிகாரி ஆக மாட்டான்.

 # அவ்யவஸ்தித விகல்பம் -

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில், (4-25)

தைவமேவாபரே யஜ்ஞம் யோகின: பர்யுபாஸதே ப்ருஹ்மாக்நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோபஜுஹ்வதி

என்கிறான்.

சில 'கர்ம யோகிகள்' தேவார்ச்சனை போன்ற யோகத்தை செய்து வருகின்றனர்.

மற்றும் சிலர் ஹோமம் செய்கின்றனர்.

கர்ம யோகமாவது, தபஸ், யக்ஞம், தானம், தேவார்ச்சனை, தீர்த்த யாத்திரை, வேத அத்ய்யனம் முதலான 14 வகைகளில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து பலனை பெறுமளவும் விடாமல் அநுஷ்டிப்பதாகும்.

பக்தி யோக அதிகாரிக்கு, கர்ம யோகம் அநுஷ்டிக்க, கர்மத்தைத் தேர்ந்தெடுக்க, அதிகாரி பேதம் கிடையாது; இச்சை அடியாக ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என சாஸ்த்திரம் அநுமதிக்கிறது.

இம்மாதிரியாக, சாஸ்த்திரம் விதித்த விகல்பத்தை தெளிந்து, சாஸ்த்திர அதிகாரம் மீறாமல், சரணாகதனும் உத்தரக்ருத்யமாக கைங்கர்யங்களைச் செய்து போக வேண்டும். ஆக, சரணாகதனும், சாஸ்த்திர விதி முறையை மீறி, தான் விரும்பும் போதும் தான் விரும்பிய மந்திரங்களைக் கொண்டும், கர்மங்களைச் செய்யலாகாது.

3. சாஸ்த்திர விதிகளுக்கு உட்பட்டு, தன் மனம் போனபடி காலத்தையும் மந்திரங்களையும் நிர்ணயிக்காமல், கர்ம அநுஷ்டானம் செய்ய வேண்டும், என பல ப்ரமாணங்களைக்.கொண்டு தெளியலாம்.

 # கிம் வா ஸர்வஜகத்ஸ்ரஷ்ட: ! ப்ரஸந்நே த்வயி துர்லபம் ? த்வத் ப்ரஸாதபலம் புங்க்தே த்ரைலோக்யம் மதவானபி

என்பது துருவனின் வாக்யம்.

அதாவது,

உலகங்களை ஆள்பவனே! நீ சந்தோஷித்தால் கிடைக்காதது ஏதும் உண்டோ? அனைத்தும் கிடைக்கும். பகவானுக்கு சந்தோஷத்தை தருவது சாஸ்த்திர விதிப் படி ஆசார அநுஷ்டானங்களைப் பின் பற்றுவதே ஆகும்.

ஆக, எம்பெருமானின் திரு எண்ணங்களை சாஸ்த்திரத்தினால் அறிந்து விதிக்கப் பட்ட ஆசார அநுஷ்டானங்களை கை கொள்ள வேண்டியது மிக முக்கியமானதாகும்.

 # ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர: ஸ்வ கர்ம நிரத: ஸித்திம் யதா விந்த்தி தச்ருணு

என்கிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (18-45).

அதாவது, ‘தன் தன் வர்ணத்துக்கான செயல்களில், சாஸ்த்திர விதிப்படி ஈடுபட்டவன், பரம பலனை அடைகிறான்’. ஆக, இந்த கண்ணனின் வாக்கிலிருந்தும், அவரவர்களுக்கு உண்டான வர்ண தர்மங்களை சாஸ்த்ர விதிப்படி கண்டிப்பாக அநுஷ்டிக்க வேண்டும் என்பது தெரிகிறது.

ஆக, சரணாகதன் ஆனாலும், உகந்து பணி கொள்ளும் எம்பெருமான் திருவுள்ளம் கலங்காதிருக்க, சாஸ்த்திர விதி மீறாமல் கர்மங்களைச் செய்ய வேண்டுவதாகிறது.

4. சாஸ்த்தித்தில், மூன்று வித வைதீக கர்மாக்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. அதாவது,

நித்ய கர்மாக்கள் : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட, தினமும் செய்ய வேண்டிய, ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள்

நைமித்திக கர்மாக்கள் : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட, ஒரு சில காலங்களில் செய்ய வேண்டிய உபாகர்மா, விவாஹம், சீமந்தம், ஸ்ரார்தம், தர்ப்பணம், ஏகாதசி விரதம், ப்ராயஸ்சித்தங்கள் (சேது ஸ்நாநம், பஞ்சகவ்யம் ஸ்வீகரித்தல், பயோ வ்ரதம் முதலியன) போன்றவைகள்

காம்ய கர்மாக்கள் : சாஸ்த்திரத்தில் செய்ய வேண்டுவதாய் விதிக்கப் படாத, ஆனால் நற் பலன்களுக்கு காரணமாகக் கூடிய, ஞான சம்பாத்யம், கோவில் செல்லுதல், புண்ய நதியில் நீராட்டம் போன்றவைகள்.

சரணாகதனுக்கு, இவை அநுத்துக்குமே உத்தேச்யம் பகவத் ப்ரீதியாகும். எந்த ஒரு உலக பலனிலும் இச்சை கொள்ளாதவன் சரணாகதன்.

ஆக, இக்கர்மங்களை, எம்பெருமான் திருவுள்ளம் உகக்க, சாஸ்த்திர விதிகளை மீறாமல் அநுஷ்டிக்க வேண்டியதே அவசியம்.

5. சிலர், நித்ய கர்மாவான ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டிய இடத்தில், காயத்ரி மந்திர ஜபம் மட்டுமே அநுஷ்டிக்கலாம், என்பர்.

இது சாஸ்த்திர விதியோடு விரோதிக்கும்.

சிலர், நைமித்திக கர்மாவான ஸ்ராத்த தினத்தன்று, தன் அதிகாரத்திற்கு ஒவ்வாத, ஹிரண்ய தானம் செய்வதை ஸ்ராத்தமாகக் கொள்வர்.

இது சாஸ்த்திர விதியோடு விரோதிக்கும்.

சரணாகதன், முக்தனாகும் வரையில், சாஸ்த்திர விதிகளை பின்பற்ற வேண்டும். தவறினால் தண்டனை உண்டு. அந்த தண்டனையில் இருந்து விடுபட ப்ராயஸ்சித்த ப்ரபத்தி விதிக்கப் பட்டிருக்கிறது.

ப்ராயஸ்சித்த ப்ரபத்தியால் பாபங்கள் களையப் படும் விதம்.

அநுதாபாதுபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வத: தத்பூரணாசாபராதா: ஸர்வம் நச்சயந்தி பாதச:

அதாவது,

‘தவறு செய்து விட்டோம்’ என்ற குற்ற உணர்ச்சி, தவறுகள் செய்வதை நிறுத்துதல் , தவறுக்கான மன்னிப்பு கோரும் ப்ராயச்சித்தம் செய்ய எண்ணுதல் , ப்ராயச்சித்தம் செய்தல் ஆகியவற்றால் பாபங்கள் அனைத்தும் கால் கால் பாகமாக அழிகின்றன.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இச் சாஸ்த்திரங்களில் வ்யவஸ்திதமாக விதித்தபடி ஒழிய தம் தமக்கு ருசித்த மந்திரங்களைக் கொண்டு ஸர்வ கர்மங்களையும் அநுஷ்டித்தால் ப்ராயஸ்சித்தாதிகளும் பரக்கச் சொல்லப் பட்டன. ஆன பின்பு முக்தனாம் அளவும் ஸ்வ அதிகார அநுகுணமாகச் சாஸ்த்திரம் சொன்ன கட்டளை அன்றிக்கே கைங்கர்யம் பண்ண விரகில்லை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

இச் சாஸ்த்திரங்களில் - பகவானால் விதிக்கப் பட்ட வேத வேதாந்த பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களில்

வ்யவஸ்திதமாக விதித்தபடி ஒழிய - அவரவர்கள் வர்ண ஆஸ்ரம அதிகாரத்திற்கு ஏற்ப விதிக்கப் பட்ட வழி முறை அன்றி

தம் தமக்கு ருசித்த மந்திரங்களைக் கொண்டு - தாமாக மந்திர ப்ரயோகத்தை நிர்ணயம் செய்து

ஸர்வ கர்மங்களையும் அநுஷ்டித்தால் - விதிக்கப் பட்ட கர்ம அநுஷ்டானத்தைச் செய்தால்

ப்ராயஸ்சித்தாதிகளும் பரக்கச் சொல்லப் பட்டன - அது புத்தி பூர்வக அபசாரம் ஆன படியால் ப்ராயஸ்சித்தம் செய்ய வேண்டும் என்பது சாஸ்த்திர விதி

ஆன பின்பு முக்தனாம் அளவும் - சரணாகதனுக்கு ஸ்தூல சரீரத்தை விட்டு பரமபதம் அடையும் காலம் வரை

ஸ்வ அதிகார அநுகுணமாகச் சாஸ்த்திரம் சொன்ன கட்டளை அன்றிக்கே - அவரவர்கள் வர்ண ஆஸ்ரம அதிகாரத்திற்கு ஏற்ப சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட வழி முறை அன்றி

கைங்கர்யம் பண்ண விரகில்லை - பகவத் ப்ரீதிக்காகவே இருந்தாலும் அம்மாதிரி அநுஷ்டானங்களைச் செய்ய சாஸ்த்திர அநுமதி இல்லை.

7. ஆக, சரணாகதன், சாஸ்த்திர விதி முறையை மீறி, தான் விரும்பும் போதும் தான் விரும்பிய மந்திரங்களைக் கொண்டும், கர்மங்களைச் செய்யலாம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

54. <u>ப்ரபன்னனுக்கும் புத்த பூர்வக அபசாரம் ப்ரத்யவாயகரம்</u>

சரணாகதன், சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால் ஒரு தீங்கும் இங்கு விளையாது, என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவாக, பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி பரமேகாந்தியாக சரணாகதன் ஆனவனுக்கு , சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால், ஒரு தீங்கும் இங்கு விளையாது என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

இது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

2. சாஸ்த்திரம் விதித்த ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்களும், முக்தனாகும் அளவும் சரணாகதன் செய்ய வேண்டுவதே.

ஆக்ஞா அநுக்ஞா விபாகேன த்விதா சாஸ்த்ரீய பத்ததி நிக்ரஹ அநுதயா ஆத்யா பல தத்தத் ஆப்தயே

அதாவது,

சாஸ்த்ரத்தில் விதித்த பகவத் கைங்கர்யம் இரு வகையாக சொல்லப் படுகிறது:

ஆக்ஞா கைங்கர்யம் (செய்தே போக வேண்டிய நித்ய நைமித்திக கர்மாக்கள்)

அநுக்ஞா கைங்கர்யம் (கோவிலுக்கு செல்லுதல், புனித நதியில் நீராட்டம் போன்றவை)

ஆக்ஞா கைங்கர்யம் செய்வதினால் மன ஸுத்தி, புலனடக்கம் போன்றவை ஏற்படுமே அன்றிக்கு ஒரு தனிப்பட்ட புண்யம் வந்து சேராது; அவைகளை செய்யாமல் போனால் பாபம் வந்து சேரும். தீங்கு விளையும்.

அநுக்ஞா கைங்கர்யம் செய்வதினால் புண்யம் வந்து சேரும்; அவைகளை செய்யாமல் போனால் பாபம் வந்து சேராது.

ஆக, நித்ய நைமித்திக கர்மாக்கள் சாஸ்த்ரப்படி செய்ய வேண்டுபவன;

அவைகளை, அறியாமையாலோ அல்லது உடல் ஸ்ரமம் காரணத்தினால் செய்யாமல் தவிர்ப்பதோ சாஸ்த்ரத்தை மீறிய செயலாகும் என்று தெளிவுபட விளக்கியுள்ளான் கண்ணன் பகவத் கீதையில்.

ஆக, சரணாகதனுக்கும், நித்ய நைமித்திக கர்மாக்கள் விட தக்கவைகள் அல்ல, என்பதாகிறது. ஆனால் ஸாத்வீக த்யாகத்தோடு செய்ய வேண்டுவதாகிறது.

ஆக, சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால், ஒரு தீங்கும் இங்கு விளையாது என்பது ப்ரமாண விரோதம். இங்குள்ள காலம் பல கஷ்டங்களை அநுபவிக்க உண்டாகும்.

3. சரணாகதனுக்கு, சரீர முடிவிற்குள் உண்டாகும், ஆகாமியான அபசாரங்கள் இரு வகை:

அபுத்தி பூர்வக அபசாரம் - தேச கால அவஸ்தா நிலைகளால் ஏற்படும் சாஸ்த்திர விரோத செயல்; இது பாபமாகவே கருதப்படுவதில்லை என்பது சாஸ்த்திர நியதி.

புத்தி பூர்வக அபசாரம் - இது

சாஸ்த்திர மர்யாதையை மீறுவதாலும்

தேவதாந்தர ஸம்பந்தத்தினாலும்

பாகவத அபசாரத்தினாலும்

விளைவது;

இதை ப்ராயஸ்சித்தம் கொண்டு பரிஹரிக்காத போது சரீரம் உள்ள அளவிலே பல இன்னல்களை மனத்தாலோ சரீரத்தாலோ சந்திக்க நேரிடும், என்பது சாஸ்த்திர நியதி.

சரணாகதனுக்கு பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகள் ஸ்ருதி வரிகள், உரைக்கிறது;

அதாவது,

இஹைவ கேசித் உபக்ளேசா பவந்தி; கஞ்சா பவந்தி; காணா பவந்தி; அவிதேய பார்யா பவந்தி; அவிதேய புத்ரா பவந்தி

இதன் பொருளாவது, புத்தி பூர்வக அபசாரத்தைச் செய்துவிட்டு சாஸ்த்திரம் விதித்த ஒரு ப்ராயஸ்சித்தத்தை செய்யாத போது, இங்குள்ள காலம் கண்கள் செவிகள் கால்கள் போன்ற புலன்கள் பாதிக்கப் படுவதும், மனைவி மக்கள் போன்ற குடும்பத்திறனால் மனம் நோகப் பெறுவதும், சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகளாகிறது.

மேலும், புத்தி பூர்வக அபசாரத்திற்கு தீங்கு கிடையாது எனக் கொண்டால், சாஸ்த்திரம் விதிக்கும் **ப்ராயஸ்சித்த ப்ரபத்தி** அர்த்தமற்றதாகும்.

சாஸ்த்திரம்,

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என்கிறது. அதாவது தெரிந்தே ஒரு பாபத்தை சரணாகதன் செய்தானேயானால், ப்ரயஸ்சித்த ப்ரபத்தியே பரிஹாரமாகும், என்றபடி.

ஆக, சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால், ஒரு தீங்கும் இங்கு விளையாது என்பது ப்ரமாண விரோதம். ப்ராயஸ்சித்தம் அநுஷ்டிக்காத போது, இங்குள்ள காலம் பல கஷ்டங்களை அநுபவிக்க உண்டாகும்.

4. இந்த புத்தி பூர்வக அபசாரத்தில் தேவதாந்தர ஸம்பந்தம் கொடியது.

எது தேவதாந்தர சம்பந்தம்? என தெளிவாக அறிய வேண்டும்.

இதன் விடைகள், நான்கு விதமாக நம் சமூகத்தில் உள்ளன:

தேவதாந்தரங்களின் கோவிலுக்கு சென்று வழி படுவது; தேவதாந்தர படங்களையோ அல்லது உருவத்தையோ பூஜிப்பது.

தேவதாந்தரங்களுக்கும் ஒரு சில பலனளிக்கும் சக்தி இருப்பதாக மனதால் எண்ணி இருப்பது; அதனால், உறவினர் மற்றும் நண்பர்களின் தேவதாந்தர சம்பந்தத்தை நிராகரிக்க மனம் தயங்குவது.

இம்மாதிரி எண்ணத்தினால், உறவினர் மற்றும் நண்பர்களின் தேவதாந்தர சம்பந்தத்தைக் கொண்டு, அவர்கள் நம் நலனுக்காக செய்யும் தேவதாந்தர பூஜைகளை தடுக்காமல் விடுவது.

சமூக நிர்பந்தத்தால், தேவதாந்தர ஸ்தலங்களுக்கு பொருள் உதவி செய்வது.

இதில் எவ்வகை தேவதாந்தர ஸம்பந்தம் இருப்பினும், இங்குள்ள காலம் சரீரத்தினாலோ மனத்தினாலோ பல கஷ்டங்களை அநுபவிக்க உண்டாகும், என்பது ப்ரமாண ஸித்தம்.

5. மேலும், பாகவத அபசாரம் ராஜ தார அபசாரம் போன்றதாகையால் சரணாகதனுக்கு தூர பரிஹரணீயம்.

பாகவதர்கள் என்பவர் வெளி வேஷங்களால் நிச்சயிக்கப் படலாகாது. **ந லிங்கம் தர்ம காரணம்** என்பது ப்ரமாண வாக்யம்; அதாவது வெளித் தோற்றம் பாகவதத்வத்தை நிச்சயிக்காது.

பாகவதனானவன், பரம் பொருள் ஸ்ரீமந் நாராயணனே எனவும், அவனை அடைய சரணாகதி அநுஷ்டானமே அகிஞ்சனர்களுக்கு மோக்ஷ காரணம் எனத் தெளிந்து அதற்குத் தகுந்த நடத்தையில் ஈடுபடும் சரணாகதனே ஆவான். இதை ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் தெளிவு படுதிதியுள்ளார்.

பாகவத அபசாரமானது, பாகவதர்களைப் பற்றிய **12 விதமான வ்யக்தி தூஷணம்** என நம்பிள்ளை வரிகளைக் கொண்டு பரிசை ஸ்ரீ உ.வே. க்ருஷ்ணமாசார் வ்வாமி **ஆசார்ய வைபவம்** எனும் நூலில் தெளிவித்துள்ளார். அதாவது, பாகவதர் உருவத்தையோ, இருக்கும் இடத்தையோ, உறவினர்களையோ, உருப்பு ஊனத தையோ அல்லது இம்மாதிரியான விமர்சனம் பாகவத அபசாரமாகும்.

ஆக, சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால், ஒர தீங்கும் இங்கு விளையாது என்பது ப்ரமாண விரோதம். பாகவத அபசாரம், இங்குள்ள காலம் பல கஷ்டங்களை அநுபவிக்க காரணமாகும்.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இப்படி ப்ரபன்னருக்கும் சாஸ்த்திர வச்யனாய் சாஸ்த்ரோக்த கைங்கர்யமே பண்ண வேண்டுகையாலே விதி நிஷேத லங்கன பக்ஷமும் விஹித நிஷித்த த்யாக பக்ஷமும் வர்ண ஆஸ்ரம தர்மங்கள் ஔபாதிகங்களாலே ஸ்வரூப ஞானம் பிறந்தவனுக்கு த்யாஜ்யங்கள் என்கிற பக்ஷமும் இவை செய்யவுமாய் தவிரவுமாய் என்கிற பக்ஷமும் இவை தவிர்ந்தாலும் உகப்பிழக்கும் அத்தனையே வேறொரு ப்ரத்யவாயம் இல்லை என்கிற பக்ஷமும் இவை அநுஷ்டியாத போது லோக விரோத மாத்திரமே ப்ரத்யவாயம் என்கிற பக்ஷமும் மற்றும் இப்புடைகளில் உள்ள பக்ஷங்களுமெல்லாம் ஸம்யக் ந்யாய அநுக்ரஹீத சாஸ்த்ர ஸம்ப்ரதாயவிருத்தங்களானபடியாலே ஸத்வஸ்தர்களுக்கு அநுபாதேயங்கள்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

இப்படி ப்ரபன்னருக்கும் - இப்படி மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்த சரணாகதனுக்கு

சாஸ்த்திர வச்யனாய் சாஸ்த்ரோக்த கைங்கர்யமே பண்ண வேண்டுகையாலே - சாஸ்த்திர விதிப்படி ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் செய்ய வேண்டும் என்பதாலே

விதி நிஷேத லங்கன பகூஷும் விஹித நிஷித்த த்யாக பகூஷும் - சாஸ்த்திரத்தில் செய்ய வேண்டுவன என்று விதித்தவற்றையும் செய்யக் கூடாததாக நிஷேதித்த ப்ரகாரத்தை, கடை பிடிக்க தேவையில்லை என்றும் கடை பிடிக்கக் கூடாது என்கிற வாதங்களும்

வர்ண ஆஸ்ரம தர்மங்கள் ஔபாதிகங்களாலே ஸ்வரூப ஞானம் பிறந்தவனுக்கு த்யாஜ்யங்கள் என்கிற பகூஷும் - சரீர ஸம்பந்தத்தால் உண்டான வர்ண ஆஸ்ரம தர்மங்கள், தான் பகவானுக்கு சேஷன், என உணர்ந்த பிறகு அநுஷ்டிக்க தேவை இல்லை என்கிற வாதங்களும்

இவை செய்யவுமாய் தவிரவுமாய் என்கிற பகூஷும் - வர்ண ஆஸ்ரம தர்மங்ளை செய்யவதுவும் செய்யாமல் இருப்பதும் அவரவர் விருப்பம் எனும் வாதங்களும்

இவை தவிர்ந்தாலும் உகப்பிழக்கும் அத்தனையே வேறொரு ப்ரத்யவாயம் இல்லை என்கிற பகூஷும் - சாஸ்த்திர விதி மீறலால் பகவத் உகப்பை இழக்க காரணமானாலும் இந்த புவியில் அதனால் வேறொரு தீங்கு விளையாது என்கிற வாதங்களும்

இவை அநுஷ்டியாத போது லோக விரோத மாத்திரமே ப்ரத்யவாயம் என்கிற பகூஷும் - சாஸ்த்திர விரோத செயலால் பிறர் ஏசுக்கூடும் என்கிற தீங்கு மட்டுமே உளது என்கிற பகூஷும்

மற்றும் இப்புடைகளில் உள்ள பகூஷங்களுமெல்லாம் - மேலும் இம்மாதிரியான வாதங்கள் எல்லாம்

ஸம்யக் ந்யாய அநுக்ரஹீத சாஸ்த்ர ஸம்ப்ரதாய விருத்தங்களானபடியாலே ஸத்வஸ்தர்களுக்கு அநுபாதேயங்கள் - சாஸ்த்திர மர்யாதையை மீறுவது குற்றமே என தெளிந்த ஸத்வ குணம் மேலிட்ட ஸத் ஸம்ப்ரதாயத்தவர்களுக்கு ஏற்கத் தகாதவையே.

7. ஆக, சரணாகதன், சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால் ஒரு தீங்கும் இங்கு விளையாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

55. <u>ப்ரபன்னனுக்கு ஆக்ஞா கைங்கர்யம் அநுஷ்டேயமா?</u>

சரணாகதன், என்கிற அந்தஸ்தைப் பெற்ற ஸ்ரீவைஷ்ணவன் தன் பண்டைய தர்மமாகிற நித்ய நைமித்திக கர்மாக்களைத் துறக்க குறையில்லை, என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவாக, பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி பரமேகாந்தியாக சரணாகதன் ஆனவனுக்கு , அதாவது சரணாகதன், என்கிற அந்தஸ்தைப் பெற்ற ஸ்ரீவைஷ்ணவன், தன் பண்டைய தர்மமாகிற நித்ய நைமித்திக கர்மாக்களைத் துறக்க குறையில்லை என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் பக்ஷம்.

பகவத் ராமானுஜர் சரணாகதி கத்யத்தில்,

த்வய அர்த்தானுஸந்தானேன ஸஹ ஸதைவம் யாவத் சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீ ரங்கே ஸுகமாஸ்வ

என அருளியிருப்பதைக் கொண்டு, அதாவது காலத்தில் நீக்கமல்லாமல், சரணாகதன் இங்குள்ள காலம் த்வய மந்திரத்தை அர்த்தத்தோடு மனனம் செய்ய பகவத் ராமானுஜர் அருளியிருப்பதால், சரணாகதன், என்கிற அந்தஸ்தைப் பெற்ற ஸ்ரீவைஷ்ணவன் தன் பண்டைய தர்மமாகிற நித்ய நைமித்திக கர்மாக்களைத் துறக்க குறையில்லை, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

இது வேத மார்க்கமான ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

2. சாஸ்த்திரம் விதித்த நித்ய நைமித்திக கர்மாக்கள் அனைத்தும், முக்தனாகும் அளவும் சரணாகதன் செய்ய வேண்டுவதே.

நாரதாதி வாக்காலும் இவ்விஷயத்தை தெளியலாம்.

ஸர்வேஷாம் ஸ்ருதி மூலானாம் நித்ய நைமித்திக ஆத்மனாம். ஸ்ரௌதஸ்மார்த்த விருத்தேஷு காலேஷு ஜபம் ஆசரேத்

அதாவது,

வேதத்தினாலும் ஸ்ம்ருதிகளினாலும் விதிக்கப் பட்ட நித்ய நைமித்திக கர்மங்களுக்கு விரோதமில்லாத காலங்களில் ஜபம் செய்ய வேண்டும்.

இதனால், த்வய அர்த்தோத்தோடு அநுஸந்திக்க நியமித்த பகவத் ராமானுஜர், வேதத்தினாலும் ஸ்ம்ருதிகளினாலும் விதிக்கப் பட்ட நித்ய நைமித்திக கர்மங்களுக்கு விரோதமில்லாத காலங்களில், செய்ய வேண்டுவதாகவே கொள்ள வேண்டும்.

3. பகவத் ராமானுஜர் அருளியதன் தாத்பர்யத்தை உலக உதாரணம் கொண்டும் தெளியலாம்.

சில வணிக விளம்பரங்களை நாம் காண்பதுண்டு. சில ப்ரபலங்கள் அளிக்கும் வாக்கு மூலங்களை விளம்பரத்துக்கு விஷயமாக்குவர். அதாவது,

நன்கு தலை முடி வளர நான் எப்போதும் இந்த தைலத்தை உபயோகிக்கிறேன்

என்கிறார்கள், விளம்பரத்தில், அந்த ப்ரபலங்கள்.

இங்குள்ள "எப்போதும்" என்கிற பத அர்த்தமாக, அவர்கள் நாள் முழுவதும், வேறு எந்த செயலிலும் ஈடுபடாமல், தைலத்தை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றா அர்த்தம் கொள்வோம்?

அதன் தாத்பர்யமாவது, தலை முடியை அலங்கரிக்கும் காலங்கள் அனைத்திலும், அந்த தைலத்தை உபயோகிப்பார்கள் என்றல்லவா அர்த்தம் ஸித்திக்கும்!

அது போல, பகவத் ராமானுஜரின் கத்ய வரிகளுக்கு,

சாஸ்த்திரத்தால் விதிக்கப் பட்ட நித்ய நைமித்திக கர்மாக்களின் காலம் போக,

மற்றும்

சாஸ்த்திரத்தால் அநுமதிக்கப்பட்ட ஆகாரம் உண்பது, தூங்குவது போன்ற காலங்கள் நீங்கலாக,

சரணாகதன் இங்குள்ள காலம் த்வய மந்திரத்தை அர்த்தத்தோடு மனனம் செய்ய வேண்டும் என்பதாகிறதே அன்றி விதிக்கப்பட்ட கர்மாக்களை செய்யலாகாது எனக் கூறுவது குதர்க்கம். அப்படி அர்த்தம் கற்பிக்கும் போது, ஆகாரம் தூக்கம் போன்றவைகளும் செய்யலாகாது என்பதாகும். இது ப்ரத்யக்ஷ அநுஷ்டானத்தோடும் விரோதிக்கும்.

4. பெரியாழ்வார், திருப்பல்லாண்டு பாசுரத்தில்,

அண்டக் குலத்துக்கு அதிபதியாகி அசுரரிராக்கதரை இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்கு தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடிதொழுது ஆயிர நாமம்சொல்லி பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே

என அருளினார். அதாவது, சாஸ்த்திர விரோதிகளான அசுரர்களைக் களைந்த ஸகல அண்ட அதிபதியான ஸ்ரீமந் நாராயணனான ரிஷிகேசனைப் பற்றிய நீங்கள் தங்கள் பழைய குலமாகிய ஐச்வர்யார்த்தி எனும் நிலையைத் துறந்தீர். இதனால் அடியோங்களுடன் சேர்ந்து பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுங்கள் என்றபடி.

இதில், **பண்டைக் குலத்தைத் தவிர்ந்து** என்பதால், சரணாகதனுக்கு வர்ண ஆஸ்ரம தர்மங்கள் செய்யலாகாது என்பர் பூர்வ பக்ஷிகள்.

இந்த விளக்கம், ஸகல சாஸ்த்திர ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

ஸந்யாஸ ஆஸ்ரமத்தை ஸ்வீகரிக்கும் போது, க்ருஹஸ்தாஸ்ரம தர்மத்தை ஒருவன் விடுகிறான்; இருப்பினும் ஸந்த்யாவந்தனத்தை விடுவதில்லை; தர்ப்பண ஸ்ராத்தாதிகளை விடுகிறான்; புலன்களுக்கு அப்பால் பட்ட விஷய நியமங்களை, சாஸ்த்திர வரிகளைக் கொண்டே தெளிய வேண்டுவதாகிறது.

தக்ஷ ஸ்ம்ருதியில்,

ஸந்த்யா ஹீநோ அசுசிர் நித்யம் அநர்ஹ ஸர்வ கர்மஸு. யத்யந்த குருதே கர்ம ந தஸ்ய பல பாக் பவேத்

என சொல்லப் படுகிறது.

அதாவது, சாஸ்த்திர விதிப்படி ஸந்த்யாவந்தனம் செய்யாமல் போனால், அவன் எந்த ஒரு வைதீக கர்மாக்களுக்கும் தகுதி அற்றவனாகிறான். அப்படி, அவன் மற்ற வைதீக கர்மாக்களை செய்யும்

போது, ஸர்வேஸ்வரன் உகக்காத படியால், சரி வர அதன் பலன்களை அடையாமலே இருக்கிறான்.

ஆக, ஸ்ரீமந் நாராயணனை அறிந்து அவன் திருவடிகளை பற்றுபவர்களுக்கு, குலம் மாறுபடும். தேவதாந்தர குல ஸம்பந்தத்தை விட்டொழித்து ஸ்ரீவைஷ்ணவ குலத்தில் சேர்வதால், பண்டைக் குலத்தைத் தவிர்ந்து என்கிற பத ப்ரயோத்தை ஆழ்வார் செய்து போகிறார்.

இதனால், குலம் என்பது 'ஸ்ரீ வைஷ்ணவ குலம்' என அறிய வேண்டும். மோக்ஷத்திற்காக சரணாகதி அநுஷ்டித்தவர் அனைவரும், ஒரே ஸ்ரீ வைஷ்ணவ குலம், என்பதாயிற்று. இது ஜாதியுடன் வேறு பட்டது.

5. சரீரம் உள்ள மட்டில், வர்ண ஆஸ்ரம தர்மம் விலகாது.

அநுக்ஞா பரிஹாரௌ தேஹஸம்பந்தாத் ஜ்யோதிராதிவத்

என்று உரைக்கிறார் வேதவ்யாஸர் ப்ருஹ்ம ஸூத்ரத்தின் வாயிலாக.

அதாவது, தேஹ சம்பந்ததினால் மாறுபட்ட செயல்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரோத்ரியன் வீட்டு அக்னிக்கும் மயானத்து அக்னியின் வேறுபாடு போல்.

உதாரணமாக,

அக்நி (நெருப்பு) என்பது பொதுவானதானாலும், ஒரு நல்ல விஷயத்திற்கு (எம்பெருமானுக்கு கற்பூரம் காட்டுவது போல்) தேவைப் படும் போது, மயானத்தில் இருக்கும் அக்நியையோ அல்லது ஒரு புகை பிடிப்பவரிடம் உள்ள அக்நியையோ, உபயோகிக்க மாட்டோம் அல்லவா? காரணம் அந்த அக்நி சம்பந்தம் (இருக்கும் இடம்) ஏற்பு உடையதல்ல.

அது போலத்தான், கர்ம ஸம்பந்தம் அற்ற ஜீவர்களுக்குள் வித்யாஸம் இல்லாத போதும், ஒவ்வொரு ஜீவர்களின் சரீர ஸம்பந்தம் காரணமாக வித்யாஸம் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன.

அனைத்து வர்ணத்தில் உள்ளவர்களிலும், ஸ்ரீவைஷ்ணவ குலத்தைச் சார்ந்த பாகவதர்கள் மேன்மை ஆனவர்களே.

சரீரம் உள்ள மட்டிலும் நித்ய நைமித்திக வர்ண ஆஸ்ரம தர்மம் குலையாது என்பது பகவத் ராமானுஜரின் ஸ்ரீ பாஷ்ய விளக்கம்.

6. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

பாஷ்யகாரர் அந்திம தசையிலும் வருந்தி எழுந்திருந்து ஸந்த்யாகாலத்திலே ஜலாஞ்சலி ப்ரக்ஷேபம் பண்ணி அருளினார்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

பாஷ்யகாரர் - வேத மார்க்கமான நம் ஸித்தாந்த நிர்தாரணம் செய்த பகவத் ராமானுஜர்

அந்திம தசையிலும் - தான் எழுந்தருளியிருந்த 120 திருநஷத்திரத்தில், திருநாடு அலங்கரிப்பதற்கு முன்பு, வயது முதிர்ந்த காலங்களிலும்

வருந்தி எழுந்திருந்து - வயோதிகம் காரணமாக இருந்த தேஹ அஸௌகர்யத்தையும் பொருட்படுத்தாமல் எழுந்து நின்று

ஸந்த்யாகாலத்திலே - ஸந்த்யாவந்தனாதி நித்ய கர்மாக்களை செய்ய வேண்டிய காலங்களிலே

ஜலாஞ்சலி ப்ரக்ஷேபம் - அர்க்ய ப்ரதானத்தை உடைய ஸந்த்யாவந்தனாதி கர்மாக்களை

பண்ணி அருளினார் - சாஸ்த்திர விதிப்படி அநுஷ்டித்து நமக்கு முன்னோடியாக இருந்தார்.

7. ஆக, சரணாகதன், என்கிற அந்தஸ்தைப் பெற்ற ஸ்ரீவைஷ்ணவன் தன் பண்டைய தர்மமாகிற நித்ய நைமித்திக கர்மாக்களைத் துறக்க குறையில்லை என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

56. சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கமா ?

மோக்ஷ காரணமாக அநுஷ்டிக்கும் சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கமாகாது

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. முமுக்ஷுவாக, பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் விதித்தபடி பரமேகாந்தியாக சரணாகதன் ஆனவனுக்கு , அதாவது அவன் மோக்ஷ காரணமாக அநுஷ்டிக்கும் சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கமாகாது.

இது ப்ரமாண ஸித்தம்.

2. மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டானத்தின் லக்ஷணமாவது:

கார்ப்பண்யம் அதிகாரம்

ஐந்து அங்கங்களை மட்டுமே கொண்ட அநுஷ்டானம் ஸக்ருத் கர்த்தவ்யம்

உத்தரக்ருத்யம் உபேய பரம்

ஆக, மோக்ஷ காரணமாக அநுஷ்டிக்கும் சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கமாகாது, எனத் தெளிய வேண்டும்.

3. சரணாகதிக்கு கார்ப்பண்யம் அதிகாரம்

கார்ப்பண்யமாவது, சரணாகதியை அநுஷ்டிக்க, ஒரு சில தனிப்பட்ட தகுதிகள் சாஸ்த்திரத்தில் விதிக்கப் படுகின்றன:

பக்தி யோகத்தை செய்ய இயலாமை - அதாவது ஆகிஞ்சன்யம்.

பக்தி யோகத்தில் ஈடுபடுபவன், தன்னுடைய தொடக்கத்தில், ப்ராம்மண க்ஷத்ரீய அல்லது வைச்ய வர்ணத்தில் உள்ள ஆணாக இருக்க வேண்டும். அது இல்லாமல் இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது.

பக்தி யோகத்தில் ஈடுபடுபவன், அந்த அநுஷ்டானத்திலும், அதில் உள்ள உட்பிரிவுகளிலும், அதனுடைய பலன் விஷயத்திலும் பூரணமான அறிவு உடையவனாக இருக்க வேண்டும். அது இல்லாமல் இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது.

பக்தி யோகத்தில் ஈடுபடுபவன், அந்த அநுஷ்டானத்திற்கு தேவையான செயல்களைச் செய்ய (கர்ம, ஞான, பக்தி யோகத்தைச் செய்ய) சாமர்த்யம் உள்ளவனாக இருக்க வேண்டும். அது இல்லாமல் இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது.

பக்தி யோகத்தில் ஈடுபடுபவனின் பலனாவது, கால தாமதத்துடன் (ப்ராரப்த கர்மாவின் முடிவில், அதாவது ஒரு சில பிறவிகளுக்கு பிறகு) கிடைக்க இருப்பதால், அது வரை காத்திருக்க நேரிடும். அது வரையிலான கால தாமதத்தை இசையாது இருப்பது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தகுதியாகிறது.

வேறு பலனில் ஆசை இல்லாமை - அதாவது அநன்ய கதித்வம் (ப்ரயோஜநாந்தர வைமுக்யம்) -

மோக்ஷ பலனில் மட்டுமே ஆசை உள்ளவன்.

நான்கு வித பலனுக்காக, உலகத்தில், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை ஆராதாக்கிறார்கள்.

அதாவது,

அதில் முதல் வகை : ஆர்த்தன் - இழந்த செல்வத்திற்காக

இரண்டாம் வகை : அர்த்தார்த்தி - தன்னிடம் இல்லாத புதிய செல்வத்திற்காக

மூன்றாம் வகை : ஜிக்ஞாஸு - தன்னுடைய ஆத்ம ஸுகானுபவ ஆனந்தத்திற்காக

நான்காம் வகை : ஞானி - மோக்ஷ பலனிற்காக - எப்போதும் தான் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு மட்டுமே தாஸ பூதன் என்ற தன்னுடைய இயற்கையான நிலையையும் உணர்ந்து,

ஸர்வேஸ்வரனையும், அவன் (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களையும் சாஸ்த்ரங்களினாலே அறிந்து, அவனையே பலனாக அடைய விரும்புபவர்கள்.

வேறு தெய்வத்தை நாடாமை - அதாவது அநன்ய கதித்வம் (சரண்யாந்தர வைமுக்யம்)

மோக்ஷ பலனை அளிக்க சக்தி உள்ள ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் மட்டுமே ஆராதிக்கத் தகுந்தவன் என்கிற உணர்வோடு இருப்பவன். அதாவது, வேதவ்யாஸர் அருளின வகையிலே, 'ப்ருஹ்மாணம் ஷிதி கண்டம் ச யாச்சன்யா தேவதா ஸ்ம்ருதா: ப்ரதிபுத்தா: ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம்', ப்ராக்ருத லோகத்தில் வசிக்கும் ப்ருஹ்மா, சிவன் போன்ற தேவதைகளை, புத்தி உள்ளவர்கள் (உயர்ந்த பலனாகிய மோக்ஷத்தில் ஆசை உள்ளவர்கள்) ஸேவிப்பதில்லை. ஏனெனில் அவர்கள் கொடுக்கும் பலன்கள் அல்பமாயும் அழிவடையும் தன்மையும் மட்டுமே கொண்டுள்ளன'.

இந்த கார்ப்பண்யமாவது, சரணாகதிக்கு அதிகார கோடியிலும் அங்க கோடியிலும் ஸித்திக்கிறது.

4. **ஐந்து அங்கங்களை மட்டுமே கொண்ட சரணாகதி அநுஷ்டானம் ஸக்ருத் கர்த்தவ்யம்**

ப்ரமாணங்கள், ஐந்து அங்கங்கோடு கூடிய சரணாகதியே மோக்ஷ சாதனம் என தெளிவு படுத்துகிறது.

 # ஷட்விதா சரணாகதி:

(ஒரு அங்கியும் ஐந்து அங்கங்களையும் கொண்டது சரணாகதி)

என்றும்,

 # ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுக்த:

(ந்யாஸம் என்கிற சரணாகதி ஐந்து அங்கங்களைக் கொண்டது)

என்றும்

 # ஸ்வாங்கை பஞ்சபிராவ்ருதாம்

(சரணாகதி ஐந்து அங்கங்களைக் கொண்டது)

என்றும்

சொல்லப் படுகிற ப்ரமாணங்களை நினைவு கொள்ள வேண்டும்.

ஆக, இந்த ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எந்த செயலையும் அங்கமாக எதிர் பார்க்காதது சரணாகதி என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸ்ரீவிபீஷணனாழ்வார்,

ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மனே. நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணம் உபஸ்திதம்

என்று

வானரர்கள் மூலமாக ஸ்ரீராமனிடம் ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணமாகிய சரணாகதியைப் செய்து போக,

ஸ்ரீராமனும்

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்தீதச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம

என்று

ஒரு முறை சரணாகதி செய்தவனை தான் ரக்ஷிக்கும் வ்ரதம் உடையவன் என்றான்.

ஆக, சரணாகதி ஸக்ருத் கர்த்வயம் என தெளிய வேண்டும்.

5. **சரணாகதனுக்கு உத்தரக்ருத்யம் உபேய பரம்**

ஆக, ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, பகவத் கைங்கர்யங்களாகிற நித்ய (சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள்) , நைமித்திக (சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸ்ரார்தம், ஏகாதசி விரதம் போன்றவை) மற்றும் காம்ய (ஞான சம்பாத்யம், கோவில் செல்லுதல் போன்றவை) கர்மங்களை செய்யும் போது, சாஸ்த்ர முறைப்படி உகந்து செய்தல் மிக அவசியம்.

இந்த சாஸ்த்ர முறைப்படி உள்ள பகவத் கைங்கர்யம் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

இந்த உத்தரக்ருத்யமாவது, வர இருக்கும் பரிபூரண பகவத் கைங்கர்யமான மோக்ஷ பலனுக்கு ஒரு முன்னோடி. ஆக, உத்தரக்ருத்யம் உபேய பரம்.

ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய ரத்னாவளி க்ரந்தத்தில் (12)

இவனுக்கு ஆக்ஞா அநுக்ஞா ஸித்தங்களான கைங்கர்யங்கள் எல்லாம் ஸ்வயம் ப்ரயோஜநங்கள்

என அருளியுள்ளார்.

ஆக, மோக்ஷ காரணமாக அநுஷ்டிக்கும் சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கமாகாது, எனத் தெளிய வேண்டும்.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இப்படி இவன் பகவத் ஆக்ஞையாலே அநுஷ்டிக்கிற நித்ய நைமித்திகங்களும் பகவத் அநுக்ஞையாலே இவனுகப்பே ப்ரயோஜநமாக அநுஷ்டிக்கிற ஏற்றமான கைங்கர்யங்களும் இப் ப்ரபத்தியோடு துவக்கற்று நின்ற நிலை "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்கிற விதானத்தாலே ஸித்தமாயிற்று

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

இப்படி இவன் பகவத் ஆக்ஞையாலே - சரணாகதன் அநுஷ்டிக்க விதிக்கப் பட்டிருக்கிற சாஸ்த்திரங்களாலே

அநுஷ்டிக்கிற நித்ய நைமித்திகங்களும் - ஸந்த்யாவந்தன தர்ப்பணாதி கர்மங்களும்

பகவத் அநுக்ஞையாலே - எம்பெருமான் விதிக்கிற நற்பண்பு காரணமாக

இவனுகப்பே ப்ரயோஜநமாக அநுஷ்டிக்கிற ஏற்றமான கைங்கர்யங்களும் - பகவத் உகப்பே ப்ரயோஜநம் எனக் கருதி செய்யப் படும் அநுமதிக்கப் பட்ட பகவத் கைங்கர்யங்களும்

இப் ப்ரபத்தியோடு துவக்கற்று நின்ற நிலை - சரணாகதி பலனளிக்க காரணமாகாது என்கிற நிலை

ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய - சரமஸ்லோகத்தில் விளக்கிய சரணாகதிக்கு தர்மாந்தர நைரபேக்ஷ்யம், அதாவது ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எந்த ஒரு செயலையும் எதிர் பார்க்காத சரணாகதி அநுஷ்டானம்

என்கிற விதானத்தாலே ஸித்தமாயிற்று - என்கிறதாலே உறுதியானது.

7. ஆக, மோக்ஷ காரணமாக அநுஷ்டிக்கும் சரணாகதிக்கு ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் அங்கம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

57. <u>த்வய மந்திரத்தின் சாமான்ய அர்த்தம்</u>

1. முதல் வரி - உபாய பரம்.

இரண்டாம் வரி - புருஷார்த்த பரம் (உபேய பரம்)

ஸ்ரீமந் நாராயண சரணௌ - பிராட்டியோடு கூடிய எம்பெருமான் திருவடிகளில்

சரணம் ப்ரபத்யே - சரணம் அடைகிறேன். (உபாய பரம். சரணாகதி ப்ரகாரம்)

ஸ்ரீமதே நாராயணாய - திவ்ய தம்பதிகளுக்கு நிருபாதிக சேஷமாய் இருப்பதால் சேஷ வ்ருத்தியான நிரபராத கைங்கர்யங்களைச் செய்ய உத்தேச்யம் என இஷ்ட ப்ராப்தியைச் சொல்கிறது. (உபேய பரம்)

நம: - நான் என்கிற ஜீவன் நிரபேக்ஷ ஸ்வதந்தரனோ நிருபாதிக ஸ்வாமியோ அல்ல. இதனால் அநிஷ்ட நிவ்ருத்தியான அஹங்கார மமகார நீங்குதலைக் குறிக்கிறது. (உபேய பரம்)

2. த்வய மந்திர பூர்வ கண்டம் :

ஸ்ரீமன் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே

த்வய மந்திரத்தில் அனைத்து அங்கங்களோடு கூடிய அங்கி ஸ்வரூபம் சரணாகதி அநுஷ்டானத்தைத் தெளிவு படுத்துகிறது, என்பது பூர்வர்களின் ப்ராமாணிக விளக்கம்.

சரண சப்தத்திற்கு பல அர்த்தங்கள் உள்ளது:

உபாயே க்ருஹ ரக்ஷித்ரோ: சப்த: சரணமித்யயம் வர்த்ததே ஸாம்ப்ரதம் த்வேஷ உபாயார்த்தைக வாசக:

என்கிறது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வரி

அதாவது, **சரணம்** என்பது மூன்று அர்த்தங்களைக் குறிக்க வல்லது.

உபாயம் - சரமஸ்லோகத்தில், **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்னும் போது என்னையை உபாயமாகப் பற்று என்பதாகிறது.

ரக்ஷகன் - எம்பெருமான் ரக்ஷகனாகிறான், என்பது, **ஸர்வஸ்ய சரணம் ஸுக்ருத்** என்கிறது ஸ்ருதி வாக்யம்.

வீடு - பறவைகளின் வீடு என்பது, **பறவை சரணாலயம்** எனப்படுகிறது.

3. அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யப்படி,

ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி:

என்கிறபடியால்

சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது

இந்த அங்கங்களோடு சரணாகதன் தன் ஆத்ம ரக்ஷணத்தை ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும், என்பதை த்வய மந்திர பூர்வ கண்டம் விவக்ஷிக்கிறது.

நாரயண சப்தத்தினால், தத்புருஷ பஹுவ்ருஹி ஸமாஸங்களைக் கொண்டு, ஸர்வ ஆதாரத்வமும் ஸர்வ அந்தர்யாமித்வமும் ஸர்வேஸ்வரனுக்கு ஸித்திப்பதனால், **ஆனுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதி கூல்ய வர்ஜனமும்** சொன்னபடியாயிற்று.

சரணம் ப்ரபத்யே எனும் உத்தம புருஷ நிர்தேசத்தினால், அதாவது 'நான் சரணமாக பற்றுகிறேன்' என்பதால், **மஹா விஸ்வாஸமும் கார்பண்யமும்** ஸித்தித்ததாயிற்று.

கோப்த்ருத்வ வரணமாவது இந்த த்வய மந்திர முதல் வரியில், உபாயத்வ ப்ரார்த்தனையாக அமைவதால், சொன்னபடியாயிற்று.

ஆத்ம நிக்ஷேபம் எனும் அங்கி ஸ்வரூபமான சரணாகதி, மஹா விஸ்வாஸத்தோடு செய்யப் படும ரக்ஷக ப்ரார்தனையான **சரணம் ப்ரபத்யே** எனும் உத்தம புருஷ நிர்தேசத்தினால், விவக்ஷிதம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

58. அசக்யத்திலே ப்ரவ்ருத்தி என்பதை எப்படி விளக்குவது?

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களை, த்யாக விதி பக்ஷமாகக் கொண்டு, பக்தி யோகத்தை பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய எந்த ஒரு ஜீவரும் அநுஷ்டிக்கலாகாது என்பது, சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய என்கிற பதங்களை, த்யாக விதி பக்ஷமாகக் கொண்டு, பக்தி யோகத்தை, பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய எந்த ஒரு ஜீவரும் அநுஷ்டிக்கலாகாது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

இது ஸ்ருதி மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த ப்ரமாண விரோதம்.

2. சாஸ்த்திர விதி பக்ஷமாவது சாஸ்த்திரம் இடுகிற கட்டளை என அறிய வேண்டும்.

இக்கட்டளைகளை மீறும் போது பாபம் சம்பவிக்கும். அநிஷ்டங்கள் ஏற்படும்.

ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய என்கிற பதங்களை, த்யாக விதி பக்ஷமாக மட்டுமே கொண்டால், பக்தி யோகம் யாராலும் எப்போதும் செய்யலாகாது என்பது சாஸ்த்திர கட்டளை என்பதாகும்.

பூர்வபக்ஷிகள், ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய என்கிற பதங்களை, ஸர்வருக்கும் த்யாக விதி பக்ஷமாகச் சொல்லுவர். அந்த விதியாவது, பக்தி யோக சாஸ்த்திர விதிக்கு முரணாகும்.

இது பக்தி யோகத்தை அநுஷ்டிக்க விதிக்கிற,

உபநிஷத் வரிகளான,

த்யாயீத உபாஸீத

என்பதோடும்

ப்ருஹ்ம ஸூத்ர வரிகளான,

நாநா சப்தாதி பேதாத்

எனும் ஸூத்ரத்தோடும்

ஸர்வேஸ்வரனான கண்ணனின்,

பஜஸ்வ மாம்

எனும் பகவத் கீதா ஸ்லோகங்களோடும்

மேலும் பக்தி யோக வ்யாக்யானங்களான பகவத் ராமானுஜரின் ஸ்ரீபாஷ்ய கீதா பாஷ்ய க்ரந்தங்களோடும் விரோதிக்கும்.

3. ஸ்ரீ ஆளவந்தார் ஸ்தோத்திர ரத்னத்தில்,

நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே

அருளியுள்ளார்.

அதாவது,

கர்ம யோகம் ஞான யோகம் ஆகியவற்றை அங்கமாகக் கொண்ட பக்தி யோகம் செய்ய நான் தகுதி அற்றவன்; அதனால் உன் திருடிகளையே சரணமாகப் பற்றுகிறேன்,

என்பதாயிற்று.

ஆக, பக்தி யோகம் செய்ய ஞான சக்தி அற்றவனைக் குறித்து, பக்தி யோகத்தைத் தவிர்க்க ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய எனக் கண்ணன் கூறுவதாகும்.

இதனால் அறிய வேண்டுவது என்னவென்றால், அகிஞ்சனர்களுக்கு, பக்தி யோகம் செய்யத் தகாதது, என சாஸ்த்திரம் கட்டளை இடுவதாக விதி பக்ஷம்; ஞான சக்தி உள்ள ஸகிஞ்சனர்கள் பக்தி யோகம் செய்ய அதிகாரிகள்; பீஷ்மர் ஜனகர் வ்யாஸர் போன்றோர் பக்தி யோக அதிகாரிகள்.

விதி பக்ஷமான இவ்விளக்கத்தில் எந்த ஒரு ப்ரமாண விரோதமும் ஸித்திக்காது.

4. சரணாகதி அநுஷ்டானம், தனக்கு விதிக்கப் பட்ட ஐந்து அங்கங்களைத் தவிர வேறு எந்த ஒரு செயலையும், ப்ருஹ்மாஸ்த்திர ந்யாயம் போலே, மோக்ஷ காரணமாக அநுமதிக்காது, என்பது சாஸ்த்திர ஸித்தம்.

அதாவது, மோக்ஷ உபாயமான சரணாகதி அநுஷ்டானம் ஐந்து அங்கங்களை மட்டுமே கொண்டது என்பது ப்ரமாண ஸித்தம்.

 # ஷட்விதா சரணாகதி:

(ஒரு அங்கியும் ஐந்து அங்கங்களையும் கொண்டது சரணாகதி)

என்றும்,

 # ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுக்த:

(ந்யாஸம் என்கிற சரணாகதி ஐந்து அங்கங்களைக் கொண்டது)

என்றும்

 # ஸ்வாங்கை பஞ்சபிராவ்ருதாம்

(சரணாகதி ஐந்து அங்கங்களைக் கொண்டது)

என்றும்

ப்ரமாணங்கள் உள்ளன.

இதற்கு, ப்ருஹ்மாஸ்த்திரத்தை உதாஹரிப்பர்.

ப்ருஹ்மாஸ்த்திரம் இலக்கை கட்டுப் படுத்த ஸர்வ வல்லமை கொண்டது.

ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீராம தூதனாக வந்த திருவடியை கட்டுப் படுத்த ராவணனின் புதல்வனான இந்திரஜீத் ப்ருஹ்மாஸ்த்திரத்தை உபயோகித்ததாக வால்மீகி ராமாயணம் உரைக்கிறது.

இந்த ப்ருஹ்மாஸ்திரம் தானே ஸகல வலிமையையும் பெற்றிருப்பதால், இத்தோடு மற்ற அஸ்த்திரத்தை பயன் படுத்தும் போது, ப்ருஹ்மாஸ்த்திரம் செயல் இழந்து விடும்.

அது போல, சரணாகதி ஸர்வ பாபங்களையும் விலக்கி, மோக்ஷம் அளிக்க வல்லமை கொண்டிருப்பதால், அத்தோடு வேறொரு செயலை, மோக்ஷ காரணம் என்கிற எண்ணத்தோடு அநுஷ்டித்தால், சரணாகதி அநுஷ்டானம் பலன் கொடுக்காது.

இதனால் அறிய வேண்டுவது என்னவென்றால், சரணாகதி அநுஷ்டானத்தோடு, மோக்ஷ உபாயமாக பக்தி யோகம் செய்யத் தகாதது, என சாஸ்த்திரம் கட்டளை இடுவதாக விதி பக்ஷம் கொள்ள வேண்டும்.

5. ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய என்பதன் பொருளாவது,

ஸ்வ துஷ்கரேஷு தர்மேஷு குச காச அவலம்பத: ஆசா லேச அநுவ்ருத்தி வா த்யாக உக்த்யா வினிவார்யதே

என்பதாகிறது.

அதாவது,

தனக்கு செய்ய முடியாத தர்ம விஷயங்களில், வெள்ளத்தில் அடித்துச் செல்பவன் கரை சேர ஒரு புல்லைப் பிடித்துக் கொள்வதைப் போல, பக்தி யோகத்தை மெள்ள அநுஷ்டிக்க முயற்சிக்கலாம் எனும் அற்ப இச்சையாவது, பரித்யஜ்ய எனும் பதத்தினால் தடுக்கப் படுகிறது.

6. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

அசக்யத்திலே ப்ரவ்ருத்தனைத் "தவிர்" என்கையும், தனக்கு துஷ்கரங்களாய்க் கழிந்து நிற்கிறவற்றிலே அபிநிவேசமுடையவனை "இது வேண்டா" என்கையும் விகல்பித்த உபாயாந்தரங்களிலே ஒன்றை இங்கே கூட்டில் ப்ருஹ்மாஸ்த்திர ந்யாயத்தாலே விரோதிக்கும் என்று கழிக்கையும் விதி ப்ரகாரங்கள்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

அசக்யத்திலே - பக்தி யோகம் செய்ய ஞான சக்தி அற்றதாலே

ப்ரவ்ருத்தனைத் "தவிர்" என்கையும் - சம்சாரி ஜீவர்களை பக்தி யோகத்தை தவிர்க்க கட்டளையிடவும்

தனக்கு துஷ்கரங்களாய்க் கழிந்து நிற்கிறவற்றிலே - இவ்வாறு அகிஞ்சனனான ஜீவனானவனுக்கு

அபிநிவேசமுடையவனை "இது வேண்டா" என்கையும் - பக்தி யோகம் செய்யலாகாது என கட்டளையிடவும்

விகல்பித்த உபாயாந்தரங்களிலே ஒன்றை இங்கே கூட்டில் - இரு மோக்ஷ காரணங்களாக சாஸ்த்திரத்திலே விதிக்கப் பட்டிருக்கிறவற்றில் ஒன்றான, பக்தி யோகத்தில் உள்ள பல வகைகளில் ஒன்றை சரணாகதி அநுஷ்டானத்தோடு இணைந்து அநுஷ்டித்தால்

ப்ருஹ்மாஸ்த்திர ந்யாயத்தாலே விரோதிக்கும் என்று கழிக்கையும் - ப்ருஹ்மாஸ்திரம் எப்படி மற்றொரு அஸ்திரம் தன்னோடு சேர்ந்திருக்க இசையாதோ அவ்வழியிலே மோக்ஷ காரணமான சரணாகதி மற்றொரு மோக்ஷ காரணமான உபாயத்தை தன்னோடு சேர்த்து அநுஷ்டிக்க இசையாது எனும் காரணத்தினால் பக்தி யோகத்தை விடுகையும்

விதி ப்ரகாரங்கள் - 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய' என்பதற்கு சாஸ்த்திர கட்டளைகளாக அமையும்.

7. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மான் பரித்யைஜ்ய**" என்கிற பதங்களை, த்யாக விதி பக்ஷமாகக் கொண்டு, பக்தி யோகத்தை பரதந்த்திர ஸ்வரூபத்தை

உடைய எந்த ஒரு ஜீவரும் அநுஷ்டிக்கலாகாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

59. ஸுலபனுமாய் பரனுமான சரண்யன்

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம், அஹம், ஏகம், சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, ஸாத்யோபாய அநுஷ்டானத்தை பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய எந்த ஒரு ஜீவரும் அநுஷ்டிக்கலாகாது என்பது, சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் மாம், அஹம், ஏகம், சரணம் வ்ரஜ என்கிற பதங்களைக் கொண்டு, ஸாத்யோபாய அநுஷ்டானத்தை பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய எந்த ஒரு ஜீவரும் அநுஷ்டிக்கலாகாது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

இது ஸ்ருதி மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த ப்ரமாண விரோதம்.

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில்,

இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான் அன்று என்னைப் புறம் போகப் புணர்த்தது என் செய்வான்?

என அருளினார்.

அதாவது,

அநாதிகாலம் விலக்கப்பட்டு இருந்த என்னை இன்று ஒரு வஸ்துவாகக் கொண்டு பரம போக்யனன தன்னை என் நெஞ்சிலே தானே கொண்டு வைத்தான்; அநாதிகாலம் என்னை உபேக்ஷித்து விட்டு வைத்தது எதற்காக?

என்கிற பாசுர அர்த்தம் கொண்டு, சரமஸ்லோகத்திற்கு, ஸாத்யோபாயம் அநுசிதம் என அர்த்தம் பண்ணுவர் பூர்பக்ஷிகள்.

ஸர்வேஸ்வரன் ஸித்தோபாயமாக இருக்க, பரதந்தர சேதனன், அவனை அடைய ஒரு செயலிலும் ஈடுபடத் தேவை இல்லை என்கிற பூர்வ பக்ஷ சரமஸ்லோக விளக்கம் சாஸ்த்திர ப்ரமாணங்களோடும் பூர்வாசார்ய ஸ்ரீ ஸூக்திகளோடும் விரோதிக்கும்.

2. சரணாகதர்களின் குறைகளைக் காணாது அங்கீகரிக்கும் சரண்யனுக்கு தேவையான இரண்டு இலக்கணங்கள்:

பரத்வம் - தான் பலன் கொடுக்க நினைத்தால், அதை யாராலும் தடுக்க முடியாத நிலை.

ஸௌலப்யம் - தன்னை அண்டி வருபவர்களிடம் கொள்ள வேண்டிய கருணை.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பதில் உள்ள ஏற்றத்தை மேலும் பகவத் கீதையில் (9-24) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநன்தி அத தத்வேநது ச்யவந்திதே

அதாவது,

‘எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் நான் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறேன். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.’

ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஸாத்யோபாயத்தை அநுஷ்டிப்பவருக்கு, ஸித்தோபாயமாக சரண்யன் ஆகிறான்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், ஸ்ரீவிபீஷணனாழ்வார்,

ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மனே. நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணம் உபஸ்திதம்

என்று வானரர்கள் மூலமாக ஸ்ரீராமனிடம் ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணமாகிய சரணாகதியை விபீஷணன் செய்து போக, ஸ்ரீராமனை ‘சரண்யன்’ என்கிற பதத்தினாலே வ்யவஹரிக்கிறான்.

தன்னை சரணமாக அடைந்தவர்களிடம் உள்ள விசேஷங்களை காணாமல் அனைவருக்கும் அடைக்கலமாய் இருக்கும் சரண்யன், என

அநாலோசாத விசேஷ அசேஷ லோக சரண்யா

ஸ்ரீராமானுஜர் சரணாகதி கத்யத்தில் அருளியுள்ளார்.

ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே சரணாகதி அநுஷ்டித்தவர்களுக்கு ‘சரண்யன்’ என்று பகவத் ராமானுஜரும் அருளுகிறார்.

ஐந்தாவது வேதமாக போற்றப்படும் மஹாபாரதத்தில், வன பர்வாவில், மார்க்கண்டேய மஹரிஷி உபதேசிக்கும் போது,

ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ: கச்சத்வம்மேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா:

அதாவது,

மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேஸ்வரன் அனைத்து உலகங்களுக்கும் தந்தையாகவும் தாயாகவும் உள்ளான்; பாண்டவர்களே, அவனையே ரக்ஷகனாக கருதி அவனிடத்தில் சரணாகதியை கைக் கொள்ளுங்கள், என அருளியிருக்கிறார்.

அதாவது, சரணாகதி அநுஷ்டானத்தினால் சரண்யன் உகந்து சரணாகதனுக்கு பலனளிக்கிறான்.

ஆக, ஸர்வேஸ்வரன் ஸித்தோபாயமாக இருக்க, பரதந்தர சேதனன், அவனை அடைய ஒரு செயலிலும் ஈடுபடத் தேவை இல்லை என்கிற பூர்வ பக்ஷ சரமஸ்லோக விளக்கம் முறை அற்றது.

3. ஆக, சரமஸ்லோகத்தில் உள்ள மாம், அஹம், ஏகம், சரணம் வ்ரஜ என்கிற பதங்கள் தெளிவிப்பதாவது:

மாம் என்று சொல்லி ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னுடைய திருமேனியை தொட்டுக் காட்டுகிறான். இதனால், சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்க வல்ல, அவனிடம் உள்ள, ஒப்புயர்வற்ற ஸௌலப்யம் வெளிப் படுகிறது, என்றபடி

அஹம் (நான்) என்று சொல்லில் ஸர்வேஸ்வரனான கண்ணன் அனைவரைக் காட்டிலும் அவனுடைய உயர்த்தியை வெளிப் படுத்துகிறான். இதனால், சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்க வல்ல, அவனிடம் உள்ள, ஒப்புயர்வற்ற பரத்வம் எனும் குணம் வெளிப் படுகிறது, என்றபடி.

இந்த **ஏகம்** என்ற சொல்லில் முக்கியமாக கவனிக்க வேண்டியது:

ஸர்வேஸ்வரனான கண்ணனே பலனாகவும், பலனுக்கான வழியாகவும் இருக்கிறான்; அதாவது, மோக்ஷத்திற்கு வழியாக அவனே இருந்து ஸித்தோபாயமாகிறான்,

என்றபடி

இந்த **சரணம் வ்ரஜ** என்ற சொல்லில் முக்கியமாக கவனிக்க வேண்டியது:

ஜீவர்கள் ஸர்வேஸ்வரனான கண்ணன் விஷயத்தில் பரதந்த்ரர்கள் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஸர்வேஸ்வரனான கண்ணனால் கொடுக்கப் பட்ட ஸ்வாதந்த்ரியம் ஜீவர்களுக்கு இருப்பதினால், சாஸ்தரங்கள் ஜீவர்களை பரதந்தரன் (அதாவது பூரண ஸ்வதந்தரம் அற்றவன்) என்று கூறுகிறது.

ஞானமுள்ள ஜீவர்களின் பரதந்தரம், ஸர்வேஸ்வரனான கண்ணனின் ஆணைப்படி நடந்து போவதேயாகும். எதுவும் செய்யாமல் இருப்பது என கொள்ளலாகாது ஏன் என்றால் சாஸ்த்ரங்கள் ஜீவர்களுக்கு செயல் புரியும் தன்மை உண்டென்றும், அதன் காரணமாக (மோக்ஷத்தை விரும்புகிறவர்கள்) சரணாகதி போன்ற செயல்களைச் செய்ய சொல்லுகின்றன.

ஆக, பக்தி யோகம் செய்ய ஞான சக்தியாதிகள் அற்ற முமுக்ஷுவானவன், சரணாகதியை சாஸ்த்ர விதிப்படி அநுஷ்டிக்க வேண்டும் என்பதை கண்ணன் சரணம் வ்ரஜ என வலியுருத்துகிறான், என்றபடி.

4. ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய் மொழியில், **இன்று என்னைப் பொருளாக்கி** எனும் பாசுரத்திற்கு முன்பு,

திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்ன திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்

என அருளியுள்ளார்.

அதாவது, திருமாலிருஞ்சோலை என்று சொன்னேன் என்பதையே நிமித்தமாகக் கொண்டு என்னை ரக்ஷித்தான் என கூறுவதாயிற்று.

ஆக, ஒரு சிறு செயலான, அவன் ஊரைச் சொன்னதையே ஒரு காரணமாக்கி, தன் மனத்தில் வந்து புகுந்து, வழி நடத்தி, அதன் பிறகு தன்னை உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே எனும் படியாக சரணாகதியில் மூட்டி, தன்னை ரக்ஷிக்க வேண்டிய பொருளாகக் கருதி ரக்ஷித்தருளினான் எனஅப்பதிகத்திற்கு கருத்து கொள்ள வேண்டும்.

அதனால் அறியப் படுவது என்னவென்றால், ஜீவர்களிடம் உள்ள எம்பெருமானின் எல்லையற்ற கருணை. இதுவே, இந்த திருவாய் மொழி இன்றென்னை பொருளாக்கி பாசுரத்தின், தாத்பர்யம், என அறிய வேண்டும். இந்த விளக்கத்தினால், இப்பாசுரம் மற்ற பாசுரங்களோடும், உபநிஷத் வரிகளோடும் முரண்பாடு இல்லாமல் இருக்கும்.

அதாவது, சாஸ்த்திர விதிப்படி 'பக்தி 'யோகம்' என்ற பெரியதோரு உபாயத்தை செய்யாத போதும், சாஸ்த்திரத்தில் அநுமதித்தபடி அவன் திருவடியில் சரண் புகுந்த காரணத்தால், இன்று என்னை சம்சார துக்கத்திலிருந்து விலக்களித்து மோக்ஷமளிக்க முன் வந்திருக்கிறான், அவன் கருணையின் காரணமாக, என்று உணர வேண்டும்.

ஆக, ஜீவர்கள், தன்னை காத்துக் கொள்ள ஒரு அநுஷ்டானத்தையும் செய்யலாகாது என, உபநிஷத் வரிகளுக்கு விரோதமாக, ஆழ்வார் அருளினார் என கூறலாகாது.

அப்படி ஆழ்வார் கூறி இருந்தால் அதை தமிழ் மறை (தமிழ் வேதம்) என்று எப்படி கூற இயலும்?

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஆகையாலே கேவல ஸுலபனுமான த்ருணாதிகளைப் போல் அன்றிக்கே ஸ்லாக்யனுமாய், துர்லபமான மேருவைப் போல் அன்றிக்கே ஸுலபனுமாய் பரனுமான சரண்யன் ஆஸ்ரயணீயனுமாய் ப்ராப்யனுமாகிறான்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

ஆகையாலே கேவல ஸுலபனுமான - ஆக, மிக எளிமையான

த்ருணாதிகளைப் போல் அன்றிக்கே - அற்ப புல் போல இல்லாமல்

ஸ்லாக்யனுமாய் - ஏற்றம் உடையவனாய்

துர்லபமான மேருவைப் போல் அன்றிக்கே - எளிதில் அடைய முடியாத மேரு பர்வத்தைப் போல இல்லாமல்

ஸுலபனுமாய் - பின் பற்ற மிக எளியவனாயும்

பரனுமான - தான் செய்ய நினைப்பதை தடுக்க வல்லார் ஒருவரும் இல்லாத உயர்ந்தவனாயும்

சரண்யன் - சரணாகதர்களுக்கு இலக்காய் இருக்கும் ஸர்வேஸ்வரன்

ஆஸ்ரயணீயனுமாய் - அவனை அடைய அவனே அணுக உகந்தவனாய்

ப்ராப்யனுமாகிறான் - அவனே பரம புருஷார்த்தமாயும் இருக்கிறான்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம், அஹம், ஏகம், சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, ஸாத்யோபாய அநுஷ்டானத்தை பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய எந்த ஒரு ஜீவரும் அநுஷ்டிக்கலாகாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

60. ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம், அஹம்" என்கிற பதங்களைக் கொண்டு, தான் ஸித்தோபாயன் என்றும் ஸாத்யோபாய அநுஷ்டானத்தை சம்சாரி ஜீவர் அநுஷ்டிக்க மோக்ஷ பலன் நிச்சயம் என்றும் விதி இருக்க, பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய சம்சாரி ஜீவர்களுக்கு ஸாத்யோபாயம் அநுசிதம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் **மாம், அஹம்** என்கிற பதங்களைக் கொண்டு, தான் ஸித்தோபாயன் என்றும் ஸாத்யோபாய அநுஷ்டானத்தை சம்சாரி ஜீவர் அநுஷ்டிக்க மோக்ஷ பலன் நிச்சயம் என்றும் விதி இருக்க, பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய சம்சாரி ஜீவர்களுக்கு ஸாத்யோபாயம் அநுசிதம் என்று ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

இது ஸ்ருதி மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த ப்ரமாண விரோதம்.

2. ஸர்வேஸ்வரனான கண்ணின் சரமஸ்லோகத்தில் உள்ள **மாம்** எனும் பதமாவது, கர்ம யோக ஞான யோகங்களை அங்கமாகக் கொண்ட பக்தி யோகத்தை அநுஷ்டிக்க ஞான சக்தி அற்ற சம்சாரி ஜீவர்களுக்கும், தான் ஸித்தோபாயமாக இருந்து பலன் அளிக்க வல்லவன் என அறிவிக்கிறது.

பாரதத்தில், வேத வ்யாஸரின் வரிகளாவது:

ஸர்வேஷாம் ஏவ லோகாநாம் மாதா பிதா ச மாதவ: கச்சத்வமேனம் சரணம் சரண்யம் புருஷ்ரப:

அதாவது,

லக்ஷ்மிபதியான ஸ்ரீமந் நாராயணன் ஸகல ஜீவர்களுக்கும் தாம் தகப்பனாகிறான். அதாவது பலனளிக்க ஸித்தோபாயமாகிறான். அவனைச் சரணாமாக பற்றி பலன் பெறுவீர்களாக, பாண்டவர்களே!

இதனால், ஸர்வேஸ்வரன் பலனளிக்க காத்திருக்கும் ஸித்தோபாயமாகிறான்.

3. ஸர்வேஸ்வரனான கண்ணின் சரமஸ்லோகத்தில் உள்ள **அஹம்** எனும் பதமாவது, அகிஞ்சனனான சம்சாரி ஜீவர்களுக்கு, லகு உபாயமான சரணாகதி அநுஷ்டானத்தை விதித்து, மோக்ஷ பலனளிக்க அந்த ஸாத்யோபாய அநுஷ்டானத்தை தான் எதிர் நோக்கி காத்திருக்கும் நிலை தெளிவிக்கப் படுகிறது.

பாஞ்சராத்ர சாஸ்த்திர வரிகளாவது:

ஸர்வக்ஞோ அபி விச்வேச: ஸதா காருணிகோபி ஸந். சம்சார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே

அதாவது,

அனைத்தையும் நியமிக்கும் எம்பெருமான் ஸர்வக்ஞனாகவும் கருணை உள்ளம் கொண்டவனாயும் இருந்த போதிலும், லீலா விபூதியை நிர்வஹிக்கும் பொருட்டு ஸாத்யோபாயமான ரக்ஷக ப்ரார்த்தனையை எதிர் நோக்கியே இருக்கிறான்.

4. அநாதியாக சாஸ்த்திர ஆக்ஞையை மீறிய குற்றத்திற்காக சம்சாரி ஜீவர்கள், பகவந் நிக்ரஹமாக சம்சாரத்தில் அவதி படுகின்றனர். இந்த அநிஷ்டம் நீங்க, ஸர்வேஸ்வரனை வசீகரிக்க வேண்டும் என்பது ப்ரமாண ஸித்தம்.

கடோபநிஷத்தில், பக்தி யோகத்திற்கு தடையாக உள்ள பாபங்களை களைவதன் பொருட்டு ஒரு வழியை விவரிக்கும் போது,

இந்த்ரேப்யஹ பரா அர்த்தா அர்த்தேப்யஸ்ச பரம் மனஹ மனஸஸ்து பரா புத்திஹி புத்தேர் ஆத்மா மாஹான் பரஹ. மஹதஹ பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷப் பரஹ புருஷான்னப் பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதி:

என்று வசீகார பரம்பரையை விளக்குகிறது.

அதாவது, பக்தி யோக நிஷ்டன், தான் வசீகரித்து தன் கட்டுபாட்டுக்குள் கொண்டு வர வேண்டிதவற்றை வரிசைப் படுத்தி கூறப் பட்டிருக்கிறது:

 # புலன்கள் - ப்ராக்ருத பலன்களில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஐம்புலன்களின் செயல்களே பக்தி யோகத்திற்கு தடையாக இருக்கிறது.

ஆக புலன்கள் முதலில் வசீகரிக்கப் பட வேண்டுவதாகிறது.

 # விஷயம் - இப்புலன்கள் உலக விஷய சம்பந்தத்தினால் விஷய அநுபவத்தில் ஈர்க்கப் பண்ணுகிறது.

ஆகையால், உலக விஷயங்களை புலனோடு சம்பந்தபடாமல் வசீகரிக்கப் பட வேண்டுவதாகிறது.

 # மனஸ் - இப்புலன்கோடு உலக விஷயங்களின் சம்பந்தம் கொண்டதும் மனம் சிந்திக்கிறது. அதனால் உலக விஷய ஆசை வளர்கிறது.

ஆக மனம் வசீகரிக்கப் பட வேண்டுவதாகிறது.

 # புத்தி - உலக விஷயங்களை சிந்தித்த மனம்,புத்தியைக் கொண்டு முடிவெடுக்கிறது. ஆக முடிவிற்கேற்ப செயல்கள் ஏற்படுகிறது.

ஆக புத்தி வசீகரிக்கப் பட வேண்டுவதாகிறது.

 # ஆத்மா - புத்தியினால் முடிவெடுக்கப் பட்டதை ஆத்மா செயல் படுத்துகிறது.

ஆக ஆத்மா வசீகரிக்கப் பட வேண்டுவதாகிறது.

 # சரீரம் - இந்த ஆத்மாவின் செயலுக்கு காரணம், சத்வம், ரஜஸ், தமஸ் குணங்களாலான சரீரம். இந்த ஆத்மா சரீரம் கொண்டே அநுபவங்களை பெற முடிகிறது.

ஆக ஜீவர்களின் சரீரம் வசீகரிக்கப் பட வேண்டுவதாகிறது.

 # பரமாத்மா - ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே அனைத்துக்கும் நியமிப்பவனாக இருக்கிறான். சம்சாரி ஜீவர்களின் எண்ணமும் செயலும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு அதீனம்.

ஆக, அனைத்தையும் வசீகரிக்க ஒரே வழி ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயாணனை வசீகரிப்பது.

அது தான், சரணாகதி அநுஷ்டானம்.

அந்த சரணாகதி, பக்தி யோகத்தை செய்ய தடையாய் உள்ள பாபங்களை விலக்கும். அதனால், அந்த சரணாகதி பக்தி யோக நிஷ்டனுக்கு, பக்தி யோகத்தை நடத்திக் கொடுக்கும், அங்கமாகிறது.

இதையே ஸ்ரீராமானுஜர்,

தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ

என ஸ்ரீபாஷ்யத்தில் **ஆனுமானாதிகரணத்தில்** அருளினார்.

இதே சரணாகதி அநுஷ்டானம், அகிஞ்சனன் விஷயத்தில், மோக்ஷ பலனுக்கு ஸாதனமாக அமைகிறது என ஸர்வேஸ்வரனான கண்ணன் சரமஸ்லோகத்தில் அருளியுள்ளான்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இவ்விரண்டு பதத்திலும் ஸர்வ ரக்ஷகனான ஸர்வ சேஷி ரக்ஷணத்துக்கு அவசரம் பார்த்து நிற்கிற நிலையும் தோற்றுகிறது. இப்படி அவசர ப்ரதீக்ஷனான ஈஸ்வரன் "ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்கிறபடியே 'என்றோ நம்மை இவர்கள் அபேக்ஷிப்பது?' என்கிற அபிப்ராயத்தாலே அபிமுகனாய் நிற்கிற நிலை "மாம்" என்கிற பதத்திலே ஸுசிதம். 'என்று நாம் இவர்களை அழுக்கு கழற்றின ஆபரணத்தைப் போலே அங்கீகரிப்பது?' என்கிற அபிப்ராயத்தாலே ஸத்வரனாய் தன் பேறாக பலம் கொடுக்க நிற்கிற நிலை "அஹம்" என்கிற பதத்திலே காட்டுகிறது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

இவ்விரண்டு பதத்திலும் - சரமஸ்லோகத்தில் உள்ள 'மாம்' மற்றும் 'அஹம்' எனும் பதங்களிலும்

ஸர்வ ரக்ஷகனான ஸர்வ சேஷி ரக்ஷணத்துக்கு அவசரம் பார்த்து நிற்கிற நிலையும் தோற்றுகிறது - ஸர்வேஸ்வரன் சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷமளிக்க காலத்தை எதிர் நோக்கி உள்ளான்

இப்படி அவசர ப்ரதீக்ஷனான ஈஸ்வரன் - இப்படி காலத்தை எதிர் நோக்கியுள்ள ஸர்வேஸ்வரன்

ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்கிறபடியே 'என்றோ நம்மை இவர்கள் அபேக்ஷிப்பது?' என்கிற அபிப்ராயத்தாலே அபிமுகனாய் நிற்கிற நிலை - இப்படி சம்சாரி ஜீவர்கள் ஸாத்யோபாயத்தைச் செய்ய, அவர்களுக்கு மோக்ஷமளிக்க காத்துக் கிடக்கும் நிலை

மாம் என்கிற பதத்திலே ஸுசிதம் - 'மாம்' எனும் பதம் காட்டுகிறது. ஆக, ஸித்தமாக இருக்கிற நிலையானது, ஸர்வேஸ்வரனை ஸித்தோபாயனாகத் தெளிவிக்கிறது.

என்று நாம் இவர்களை அழுக்கு கழற்றின ஆபரணத்தைப் போலே அங்கீகரிப்பது?' என்கிற அபிப்ராயத்தாலே ஸத்வரனாய் - ஜீவர்களின் ரக்ஷணத்தை வ்ரதமாகக் கொண்ட ஸர்வேஸ்வரன், ஆபரணத்திலே அழுக்கை களைய அதன் ப்ரகாசம் வெளிப்படுமாப் போலே, சம்சாரி ஜீவர்களின் கர்ம சம்பந்தமான பிறவிப் பிணியை அகற்றிய படியே, ஸ்வ ஸ்வரூப ஆவிர்பாவம் பெற வேண்டுமென்ற நோக்கோடு

தன் பேறாக பலம் கொடுக்க நிற்கிற நிலை "அஹம்" என்கிற பதத்திலே காட்டுகிறது - சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷம் அளிக்கப் படுவது தனக்கு பலனாக எண்ணி காத்துக்கிடக்கிற ஸர்வேஸ்வரனின் நிலையானது, அதாவது ஸர்வேஸ்வரன் சம்சாரி ஜீவர்களிடம் ஸாத்யோபாயத்தை எதிர் நோக்கியே காத்து இருக்கிறான் என்பதாவது, 'அஹம்' எனும் பதம் தெளிவிக்கிறது.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**மாம், அஹம்**" என்கிற பதங்களைக் கொண்டு, தான் ஸித்தோபாயன் என்றும் ஸாத்யோபாய அநுஷ்டானத்தை சம்சாரி ஜீவர் அநுஷ்டிக்க மோக்ஷ பலன் நிச்சயம் என்றும் விதி இருக்க, பரதந்த்திர ஸ்வரூபத்தை உடைய சம்சாரி ஜீவர்களுக்கு ஸாத்யோபாயம் அநுசிதம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

61. <u>சரண்யனுக்கு துல்யமாக தன்னையும் உபாயமாக எண்ணுவதா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம் ஏகம்" என்கிற பதங்களைக் கொண்டு, எம்பெருமான் ஒருவனே மோக்ஷ உபாயமாக விதிக்கிறபடியால், விதி வாக்யமாக உள்ள ஸாத்யோபாயமும் கழிக்கப் படுகிறது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் **மாம் ஏகம்** என்கிற பதங்களைக் கொண்டு, எம்பெருமான் ஒருவனே மோக்ஷ உபாயமாக விதிக்கிறபடியால், விதி வாக்யமாக உள்ள ஸாத்யோபாயமும் கழிக்கப் படுகிறது என்று ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

இது ஸ்ருதி மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த ப்ரமாண விரோதம்.

2. இந்த **ஏகம்** எனும் பதம், அகராதியில், மூன்று அர்த்தங்களை உடையது:

முக்ய அந்ய கேவலேஷு ஏகம்

முக்ய - 'முக்யம்' என்பதால் ப்ரதானம் எனும்படியும்;

அந்ய - 'வேறு' என்பதால் மற்றதோடு வேற்றுமை எனும்படியும்; ('ஒன்று' என்றும் 'மற்றொன்று' என்றும் வ்யவஹரிக்கும் போது இவ்வர்த்தம் ஸித்திக்கும்)

கேவல - 'மட்டும்' என்பதால் மற்றவற்றை கழிப்பது எனும்படியாகவும்;

அமையும்.

மாம் ஏகம் என்கிற பதங்களைக் கொண்டு கேவல எனும் அர்த்தத்தைக் கொள்ளும் போது, ஸாத்யோபாயமான சரணாகதியைக் கழிப்பது எனும்படியாக பூர்வபக்ஷிகள் ஆர்த்தம் கொள்வர்.

இது, வேதங்களோடும் பகவத் ராமானுஜ க்ரந்தங்களோடும் விரோதிக்கும்.

மேலும், உலக விளக்கங்களோடும் விரோதிக்கும்.

உதாரணமாக,

கல்லூரி மாணவ சேர்க்கையின் போது,

"கல்லூரி மாணவ சேர்க்கை அதிகாரியிடம் மட்டுமே விண்ணப்பத்தை மாணவர்கள் அளிக்க வேண்டும்"

என்று ஒரு நியமம் இருக்குமாயின்,

அது விண்ணபத்தை பெற, மற்ற கல்லூரி ஊழியர்களை விலக்குமே அன்றி, மாணவர்கள் விண்ணப்பம் அளிப்பதையே விலக்காதன்றோ!

அது போல, எம்பெருமானே சரண்யன் என்றும் மற்ற தேவதைகள் சரண்யர்கள் ஆக மாட்டார்கள் என்பது சரமஸ்லோக விளக்கமே அன்றி, அது சரணாகதியையே விலக்குகிறது, என்பது பொருந்தாது.

3. சரமஸ்லோகத்தில் இந்த **ஏகம்** எனும் பதத்தினால் ஏவகாரமான 'மட்டுமே' என்கிற அர்த்தம் ஸித்திக்கும்.

நாம் இருக்கும் இந்த ப்ரக்ருதி மண்டலம் மூன்று குணங்களினால் ஆன மாயை. அதை கடப்பதற்கு கண்ணனை மட்டுமே நாம் சரணம் அடைய வேண்டும் என்று கண்ணன் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

7ம் அத்யாயம் 14 வது ஸ்லோகம்.

தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே

அதாவது,

‘என்னுடைய முக்குணங்களாலான மாயையை கடப்பதற்கு 'என்னை மட்டுமே' (மாமேவயே) சரண் அடைய வேண்டும்.

மேலும், ஸர்வேஸ்வரனை மட்டுமே ஆராதித்து பலன் பெறுவதை விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 62 வது ஸ்லோகம்

தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேன பாரத. தத் ப்ராஸாதாத் பராம் ஷான்திம் ஸிதானம் ப்ராப்யஸி சாஸ்வதம்

அதாவது,

‘ஸர்வ அந்தர்யாமியான வாஸுதேவனை மட்டுமே (தமேவ) சரணமாகப் பற்று. அவன் அநுக்ரக்ஹத்தால் கர்ம பந்தத்திலிருது விடு பட்டு பரமபதத்தை அடைவாய்’ - என்கிறான் கண்ணன்.

இதில் ஏவகாரமான மட்டுமே என்பதால் உணர வேண்டியவற்றின் விளக்கம்:

சரண்யன் - யாரைக் குறித்து சரணமாக வேண்டும் என்பது

சரணாகதி - சரண்யனைக் குறித்து செய்ய வேண்டிய சரணாகதி எனும் செயல்

இதில் மாமேவயே எனும் போதும், தமேவ எனும் போதும், ஏவகாரமான 'ஸர்வேஸ்வரனை மட்டுமே' என்று அர்த்தம் இருப்பதால், சரண்ய ஏகத்வத்தை குறிப்பிடுகிறதே அன்றி, சரணாகதியை நிஷேதித்தது ஆகாது, என்பது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்.

இந்த விளக்கம் ஸகல ப்ரமாணங்களோடும் ஒத்ததாக இருக்கும்.

4. பகவத் அதீன கர்த்ருத்வத்தை ஜீவர்கள் கொண்டவர்கள் ஆகையால், ஸ்ரீ கூரத்தாழ்வான், **வரதராஜஸ்தவம்** எனும் தனது க்ரந்தத்தில்,

இயம் இஹ மதி: அஸ்மத் உஜ்ஜீவனி வரத! தவ கலு ப்ரஸாதாத்ருதே. சரணம் இதி வாசோபி மே நோதியாத்வமஸி மயி தத: ப்ராஸாதோந்முக:

அருளினார்.

அதாவது,

வரதனே ! உன் திருவருள் இல்லையேல் 'நீ சரணமாக வேண்டும்' என்கிற வார்த்தைக் கூட என் வாயினின்று வராது.

இதனால் தெளிய வேண்டுவது என்னவென்றால், சரணமாக பற்ற சரணாகதி அநுஷ்டிக்க வேண்டும்; அந்த செயலும் எம்பெருமானின் இன்னருளாலே!

இது பராதீன கர்த்ருத்வத்தை விளக்குவதாகிறது. ஆக, ஸ்வாதீன கர்த்ருத்வத்தை உடைய ஸர்வ சேஷியான எம்பெருமானின் ஸித்தோபாயத்தோடு ஒக்க பராதீன கர்த்ருத்வத்தை உடைய ஜீவருடைய ஸாத்யோபாயம் ஆகாது, என்பதில் தாத்பர்யம்.

ஆக, ஜீவர்களுக்கு கர்த்ருத்வத்தை விலக்குலதாகக் கொள்ளுதல், ஸகல ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

ஸர்வ ரக்ஷகுக்கு உபயுக்தங்களான வசீகரணங்களை சாஸ்த்திர நியுக்தனான தான் அநுஷ்டிக்கையாலே ரக்ஷகுயில் தனக்கும் கர்த்ருத்வம் தோற்றி ஸித்தோபாய பூதனான சரண்யனோடு ஒக்க தன்னையும் உபாயமாக எண்ணப்புக இப்படி ப்ரஸக்தமான உபாய த்வித்வத்தை கழிக்கிறது "ஏக" சப்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

ஸர்வ ரக்ஷகுக்கு உபயுக்தங்களான - சம்சார பந்த விலக்குகைக்கு தேவையான

வசீகரணங்களை சாஸ்த்திர நியுக்தனான தான் அநுஷ்டிக்கையாலே - சாஸ்த்திர விதியினாலே சரணாகதியை தான் அநுஷ்டிப்பதனால்

ரக்ஷையில் தனக்கும் கர்த்ருத்வம் தோற்றி - மோக்ஷ பலனுக்கு தன் செயலும் ஒரு காரணம் எனக் கருதி

ஸித்தோபாய பூதனான சரண்யனோடு ஒக்க தன்னையும் உபாயமாக எண்ணப்புக - ஸித்தோபாயமான ஸர்வேஸ்வரன் போல் ஸாத்யோபாயத்தை அநுஷ்டிக்க தன்னால் செய்யப் பட்ட தன் செயலும் ஒரு ஸமமான காரணம் என்கிற எண்ணத்தால்

இப்படி ப்ரஸக்தமான உபாய த்வித்வத்தை கழிக்கிறது "**ஏக**" சப்தம் - ஏற்படுகிற மோக்ஷ காரணம் இரண்டாகிறது என்பதை மறுத்து ஸர்வ ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரனே ப்ராதான காரணம் என்றும் பராதீன கர்த்ருத்வத்தை உடைய ஜீவனின் ஸாத்யோபாயச் செயலை அப்ரதானமான ஒரு செயல் என கருத வேண்டும் என்கிற நோக்கில் ஏக சப்தம் அர்த்தமாகிறது, என்றபடி.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**மாம் ஏகம்**" என்கிற பதங்களைக் கொண்டு, எம்பெருமான் ஒருவனே மோக்ஷ உபாயமாக விதிக்கிறபடியால், விதி வாக்யமாக உள்ள ஸாத்யோபாயமும் கழிக்கப் படுகிறது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

62. <u>சரணாகதி ஸித்தோபாய ப்ரிபத்தியா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் சரணம் வ்ரஜ என்கிற பதங்களைக் கொண்டு, ஸித்தோபாயமான ஸர்வேஸ்வரன், ஜீவர்கள் மோக்ஷ காரணமாக ஏதும் செய்யாதிருக்க, தான் மட்டுமே மோக்ஷ காரணம் ஆகிறான் என்று ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

எம்பெருமான் பலனளிக்க ஸித்தோபாயமாய் இருக்க, சம்சாரி ஜீவர்கள் செய்ய வேண்டிருக்கிற, சரணாகதி அநுஷ்டானத்தைப் பற்றி, ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், கூறுவதாவது,

ஸம்பந்த ஞான மாத்திரம் (எம்பெருமானுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்த ஞானம் மட்டுமே சரணாகதி ஆகும்)

ஸித்தோபாய ப்ரதிபத்தி மாத்திரம் ' (எம்பெருமான் பலனளிக்க ஸித்தமாய் இருப்பதை உணர்வது மட்டுமே சரணாகதி ஆகும்)

அநிவாரண மாத்திரம் (எம்பெருமான் ரக்ஷிக்கும் போது விலக்காமல் இருப்பது மட்டுமே சரணாகதி ஆகும்)

அநுமதி மாத்திரம் (எம்பெருமான் ரக்ஷணத்தை ஏற்ப்பது மட்டுமே சரணாகதி ஆகும்)

அசித் வ்யாவ்ருத்தி மாத்திரம் (சரீர ஆத்ம ஸ்வரூபத்தை அறிந்திருப்பது மட்டுமே சரணாகதி ஆகும்)

சைதன்ய க்ருத்யம் (சேதனனின் செயல் மோக்ஷ சாதனமாகாது என அறிந்து கொள்வது மட்டுமே சரணாகதி ஆகும்)

சித்த ஸமாதானம் (தன் தன் ருசி அநுகுணமான செயல் மட்டுமே சரணாகதி ஆகும்)

அதிகாரி விசேஷணமென்று (எம்பெருமானிடம் எந்த ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் இருக்கும் நிலை மட்டுமே சரணாகதி ஆகும்)

என்கிற இவ்வழியிலே பூர்வபக்ஷிகள் அதிவாதம் செய்து மோக்ஷ ஸாதனமான சரணாகதி அநுஷ்டானத்தை நிஷேதிப்பர்.

இது ஸ்ருதி மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த ப்ரமாண விரோதம்.

2. ஒவ்வொரு ஜீவனுக்கும், அறிந்து செயலாற்றும் தன்மையை கொடுத்திருக்கிறான், எம்பெருமான்.

இதையே, வேத வ்யாஸரால் உபதேசிக்கப் பட்ட, உபநிஷத் விளக்கமான, ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத் - (ப்ருஹ்ம ஸூத்ரம் 2ம் அத்யாயம் 3ம் பாதம் 5வது அதிகரணம் 33ம் ஸூத்ரம்)

எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, நம் காரியத்தைப் பற்றி அறிந்து முயற்சித்து செயல் படக் கூடிய தகுதி ஜீவனுக்கு உண்டு.

அப்போது தான் சாஸ்த்ரம் 'இதை செய்' என்று ஒன்றை விதிப்பதும், 'இதை செய்யாதே' என்று ஒன்றை மறுப்பதும், அர்த்தமுள்ளகும்.

விதித்ததை செய்வதால் நற்பலனை அடையலாம்.

தடுத்தவற்றை செய்யாமல் இருப்பதால் கெட்ட பலனை அடையாமல் இருக்கலாம்.

மேலும், வேத வ்யாஸரால் உபதேசிக்கப் பட்ட, ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

பராத்து தச்ச்ருதே: - (ப்ருஹ்ம ஸுத்ரம் 2ம் அத்யாயம் 3ம் பாதம் 6வது அதிகரணம் 40ம் ஸுத்ரம்)

எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, இப்படிப் பட்ட செயலாற்றும் தன்மை எம்பெருமானால் கொடுக்கப் பட்டு வந்தது.

அதனால், எம்பெருமான் லகு உபாயமாக சரணாகதி அநுஷ்டானத்தை மோக்ஷ காரணமாக சாஸ்த்திரத்தில் விதித்து, அதை அநுஷ்டிக்க, கர்ம அநுகுணமாக, தேஹ இந்த்ரியங்களை சம்சாரி ஜீவர்களுக்கு அளித்து, ஒரு ஸுக்ருத விசேஷத்தாலே ஸதாசார்ய சம்பந்தத்தை ஏற்படுத்தி, க்ருஷி வலம் தினோதி எனும் கணக்கிலே, அறுவடைக்கு காத்திருக்கும் விவசாயி போல, சம்சாரி ஜீவர்கள் மோக்ஷம் பெற காத்திருப்பதும், ஸர்வ ஸ்வதந்தரனான எம்பெருமானுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்.

3. இது போல, ஸாத்யோபாய அநுஷ்டானம், மோக்ஷ பலனுக்கான உபாயம், என சாஸத்திர ப்ரமாணங்களான, உபநிஷத், பாஞ்சராத்ர வரிகளும் கூறுகின்றன.

ச்வேதாசுதர உபநிஷத்தில்,

யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை, தகும் ஹ தேவம் ஆத்ம்புத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே

என்கிறது. அதாவது, எவனுடைய நாபியிலிருந்து ப்ருஹ்மா உதித்தானோ, எவன் ப்ருஹ்மாவுக்கு வேதத்தை உபதேசித்தானோ, எவன் ஸர்வருக்கும் தத்வ ஞானத்தை தெளிவாக ப்ரகாசிக்க செய்ய வல்லவனோ அவனை மோக்ஷத்தை விரும்புவர்கள் சரணமாக அடைய வேண்டும்.

பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். சம்சார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே

என்கிறது; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

ஆக, எம்பெருமான் ஸித்தோபாயமாய் இருக்க, அவன் தானாகவே ரக்ஷிப்பான் என அர்த்தம் கொண்டால், சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்ட **மோக்ஷத்திற்கான பக்தி யோகம் மற்றும் சரணாகதி உபாயங்கள்** அர்த்தமற்றதாகி விடும்.

மேலும், உபநிஷத்துக்கள் ஸர்வேஸ்வரனை குற்றமற்றவன் என வர்ணிப்பதும் பொய்யாகிவிடும் அன்றோ?

ஏனெனில்,

அவன் தன் இச்சை அடியாக, 'ஒரு சிலருக்கு மோக்ஷம் கொடுத்து, ஒரு சிலருக்கு மோக்ஷம் கொடுக்காமல் கைவிட்டால்' பாரபக்ஷம் (ஜீவர்களுக்குள் விருப்பு வெறுப்பு உள்ள தன்மை) என்கிற தோஷம் அவனை வந்தடையும்.

மேலும், மோக்ஷம் பெறாத சில ஜீவர்கள் விஷயத்தில், எம்பெருமானை கருணை அற்றவன் எனவும் கூற நேரிடும்.

ஆக, பல ப்ரகாரங்களில் ப்ரமாணங்களை ஆராய்ந்த பகவத் ராமானுஜரும் மற்ற பூர்வர்களும் சாஸ்த்திரம் விதித்த சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷ காரணம் என சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவு படுத்தியுள்ளனர்.

சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என யுக்தி வாதம் செய்யும் பூர்வ பக்ஷிகளின் நிர்தேசம் சாஸ்த்திர விரோதம்.

4. இவ்விஷயத்தில், ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் அருளிய ஒரு சில வரிகளை நினைவு கொள்ள வேண்டும்:

 # தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது

அதாவது, புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயத்தில், அதாவது ஈஸ்வர தன்மைகளையும், மோக்ஷ சாதனங்களையும், நம் தர்க்க அறிவைக் கொண்டு நிர்ணயிக்கலாகாது; அதற்கு, சப்த ப்ரமாணங்களான, ஸ்ருதி பலமும் நம் ஸம்ப்ரதாய பூர்வாசார்யர்களான ஸ்ரீமந் நாதமுனி, யாமுன முனி, ஸ்ரீ ராமானுஜ முனி ஆகியோரின் ஸ்ரீ ஸுக்திகளுமே, ஆதாரம்.

 # உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே. ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஒர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்

அதாவது, ஸர்வ ஸ்வதந்தரனான ஸ்ரீமந் நாராயணன், தன்னுடைய உடமைகளான ஜீவர்களை ரக்ஷிப்பது, அவன் ஸ்வரூபதற்கு ப்ராப்தம்; சாஸ்த்திர சம்மதம்; அப்படி ரக்ஷிக்கும் போது, அந்த ஜீவர்களிடம் ஒரு செயலை, அந்த ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரங்களில் விதித்து, அதன்படி ஜீவர்களிடம் ஒரு அநுஷ்டானத்தை எதிர்பார்ப்பதில், அவனுக்கு ஒரு குறையுமில்லை.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஆகையால், ஈஸ்வரன் ப்ராஸாதநீயனாய் ப்ரதான ஸித்தோபாயம். பக்தி ப்ரபத்திகள் இரண்டும் ப்ரஸாதனங்களாய்க் கொண்டு ப்ரதானமில்லாத ஸாத்யோபாயங்கள். இவை இரண்டத்தொன்றிலே யதா அதிகாரம் நிலையாகக் கடவது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

ஆகையால் - மேற் கூறிய காரணத்தால்

ஈஸ்வரன் ப்ராஸாதநீயனாய் - ஸர்வேஸ்வரன் பலனளிப்பவனாய்

ப்ரதான ஸித்தோபாயம் - சம்சாரி ஜீவர்கள் மோக்ஷ பலன் பெற முக்கிய காரணம்

பக்தி ப்ரபத்திகள் இரண்டும் - பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானங்கள் இரண்டும்

ப்ரஸாதனங்களாய்க் கொண்டு - பலன் பெற சம்சாரி ஜீவர்களுக்கு விதிக்கப் பட்டவைகளாகக் கருதி

ப்ரதானமில்லாத ஸாத்யோபாயங்கள் - முக்யத்வத்வம் அற்ற, ஆனால் சாஸ்த்திர விதிப்படி அநுஷ்டிக்க வேண்டிய, செயல்களை

இவை இரண்டத்தொன்றிலே -பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானங்கள் என்கிற இரண்டில் ஏதேனும் ஒன்றை

யதா அதிகாரம் - அவரவர்களுக்கு உண்டான அதிகாரம் கொண்டு

நிலையாகக் கடவது - அநுஷ்டித்தே மோக்ஷ பலன் பெற முடியும் என்பது சாஸ்த்திர நிலைபாடு.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

+++++

63. தேசிக க்ரந்த விசாரம் மட்டும் குழுவின் நோக்கம்

1. **தேசிக க்ரந்த விசாரம் மட்டும்** எனும் குழு 13.5.2019 அன்று ஏற்படுத்தப் பட்டது.

2. இதன் முக்கிய நோக்கமாக, ஸ்வாமி தேசிக க்ரந்த விஷயமான பரிமாற்றத்தை நம் பூர்வர்கள் வகுத்த விதத்திலே, நம் குழுவில் பலரால் விவாதிக்க திட்டமிடப்பட்டது.

3. அவ்வழியிலே பல தரப் பட்ட கட்டுரைகளும், வினா-விடைகளும் இக்குழுவில் பதிவாயின, என்பதை அனைவரும் அறிவீர்.

4. சமீப காலமாக வெளி வந்த, நம் ஸம்ப்ரதாய விரோத கருத்துங்களுக்கு, நம் பூர்வர்கள் க்ரந்தங்களைக் காட்டி, நம் ஸம்ப்ரதாய பக்ஷத்தை தெளிவிக்கவும் ப்ரயத்நமும் இக்குழுவின் பதிவுகளில் காணப் பட்டது.

5, இதன் தொடர்ச்சியாக, தற்போது, ஸ்வாமி தேசிகனின் சரமஸ்லோகாதிகாரத்தை ப்ரமாணமாக்கி, நம் ஸ்ம்ந்ரதாய பக்ஷத்தை தினமும் ஒரு கட்டுரையாக அடியேன் பதிவு செய்து வருகிறேன்.

6. இவ்விஷயத்தில் சந்தேகங்கள் ஏற்படுமாயின் அதை வாய் மொழி கொண்டு நேர்முகமாக விளக்க வேண்டும் என நம் குழுவினரிடையே ஒரு கருத்து வெளியானது.

7. அதன் பரிவாஹமாக, அதிக விளக்கங்கள் இல்லாமல், எளிமையாக அரை மணி அவகாசத்தில், ஒரு சில சந்தேகங்களுக்கான சமாதனம் அளிக்க முடிவு செய்யப் பட்டது.

இதற்காக விவாத மேடை எனும் நேர்முகக் குழு, வாரத்தில் நான்கு நாட்கள், சமீப காலமாக இயங்கி வருகிறது, என்பதை அனைவரும் அறிந்ததே.

8. இந்த இணைய தளம் மூலமான நேர்முகமான விவாத மேடையின் முக்கிய அம்சங்களாவது:

விவாதங்கள், பொதுவாக அன்றாடம், தேசிக க்ரந்த விசாரம் மட்டும் குழுவில் பதிவாகும் விஷயத்தை ஒட்டியதாக இருக்க வேண்டுகிறது; ஆனால், ஒரு சில தினங்களில், விவாதங்கள், பதிவாகிய விஷயத்தை விட்டு விலகியும் காணப் படுகிறது.

அதனால், நேர்முக விளக்கங்கள், சுருக்கமாகவும் பதிவில் உள்ள விஷயங்களையோ ப்ரமாணங்களையோ மீண்டும் விளக்கமாக ப்ரயோகிக்காமலும், அமைக்கப் படுகிறது;

மேலும், இவ்விவாதங்களை ஒலிப்பதிவு செய்ய தடை செய்யப் பட்டிருக்கிறது.

9. தற்போது, விவாதத்தை ஒலிப்பதிவு செய்ய வேண்டும் என ஒரு கோரிக்கை வந்திருப்பதால், இந்த விவாத மேடையின் ஒலிப்பதிவு உசிதமாகாது என்கிற கருத்தை வலியுறுத்தி அது சம்பந்தமான அடியேன் கருத்தை பதிவிடுகிறேன்.

சுருக்கமாகவும், எழுத்து பதிவின் விளக்கங்களாவும், விவாதங்கள் அமைவதால், நேர்முக பதிவின் ஒலிப் பதிவு மட்டும் கொண்டு, சொல்ல வந்த விஷயத்தின் முழு தாத்பர்யம் உணர முடியாமல் போகலாம். அதனால் விவாத மேடை ஒலிப்பதிவு உசிதமாகாது.

இந்த நேர்முக விவாதம் நம் குழுவினரின் ப்ரயோஜனத்திற்காக மட்டுமே அன்றி பொது விநியோகத்திற்கு உகந்ததாகாது. எனவே விவாத மேடை ஒலிப்பதிவை தவிர்க்க வேண்டுவதாகிறது.

மேலும், விவாத மேடையில் கேள்விகள் கேட்போருக்கும், இந்த ஒலிப் பதிவும் அதன் பொது விநியோகமும், கேள்வி கேட்க தயக்கத்தை உண்டாக்கலாம். அப்படியானால், காலப் போக்கில், இந்த விவாத மேடை தன் பலனை இழந்து விட வாய்ப்புள்ளது. அதனாலும் விவாத மேடை ஒலிப்பதிவு உசிதமாகாது.

10. இவ்விவாதத்திற்கு பிறகு மனதில் நிலைக்காத சந்தேகம் இருக்குமாயின் எழுத்து வடிவத்தில், அங்கத்தினர், தேசிக க்ரந்த விசாரம் மட்டும் குழுவில் பதிவிடலாம்; பதிலளிக்கப் படும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

64. விபீஷண சரணாகதி - ஸ்ரீராமன் அளித்த அபயம்

சுக்ரீவன், விபீஷணனை எதிரி தரப்பிலிருந்து வந்த காரணத்தால் அதில் சூழ்ச்சி இருக்கக் கூடும் எனக் கருதி, அவனை ஏற்பதற்கு மறுத்து, ஸ்ரீராமனிடம் வாதிடுகிறான்.

அதற்கு சரணாகத ரக்ஷகனான ஸ்ரீராமன் பதில் உரைக்கிறான்.

 # பிஷாஷான் தானவான் யக்ஷான் ப்ருதிவ்யான் சைவ ராக்ஷஸான். அங்குள் அக்ரேந தான் அன்யன் இச்சன் ஹரிகணேஸ்வர

அதாவது, 'வானர தலைவனே! வந்தவன் யாராக (யக்ஷனாகவோ, தேவனாகவோ, ராக்ஷஸனாகவோ) இருந்தாலும் சரி, அவர்களால் துன்பம் வர நேர்ந்தாலும், அவர்களை விரல் நகத்தினாலேயே அழித்து என்னை நான் காத்துக் கொள்ள முடியும்'.

 # மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'.

 # ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி யேதத் வ்ரதம் மம

அதாவது, 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது எனது வ்ரதம்'.

 # அனயனம் ஹரி ஸ்ரேஷ்ட தத்தமஸ்யாம் அபயம் மயா. விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவணஸ்வயம்

அதாவது, ' வானர தலைவனே! விபீஷணனை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன் எனக் கூறு. நீ விபீஷணனை சந்திக்கும் தருணத்தில், அங்கு ராவணன், மனம் மாறி வந்திருந்தானேயானால், அவனையும் நான் மன்னித்து ஏற்றுக் கொண்டதாக கூறுவாயாக'.

இவ்வாறு பரம காருணிகனான ஸ்ரீராமன் பதிலளித்தான்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

65. பகவத் ஜீவ நவ வித சம்பந்தம்

இதனை,

பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி, ஸ்வாமி ஆதாரோ மம அத்மா ச போக்தா சாத்யமநூதித:

என்கிற ஸ்லோகம் கொண்டு விஷயீகரிக்கலாம்.

பகவான் நமக்குத் தந்தை : நாம் அவனுக்கு மக்கள். மக்களுக்கு காரணம் தந்தை அல்லவா? அதனால், அவன்ன்றி நாம் இல்லை என்தாகிறது.

பிதா-புத்ரன் உபமானம்

அவனே ரக்ஷிகன் : பெருமான் காப்பாளன். நாம் அனைவரும் அவனால் காக்கப்படுபவர்கள். ஜீவர்கள் ஸாத்யோபாயத்தை (சரணாகதி) அநுஷ்டிக்க ஸஹேதுக க்ருபையாலே அவன் ஸித்தோபாயன்.

ரக்ஷிகன்-ரக்ஷிய வஸ்துக்கள்

அவனே சேஷீ : அதாவது அடிமைகளான நம்முடைய, தொண்டுகளை ஏற்றுக் கொள்பவன் பகவான் என்பது இதன் பொருள். நாம் அனைவரும் அவனுக்குத் தொண்டு புரியும் இயல்புடைய தொண்டர்கள் என்பதும் இதனால் உணர்த்தப்படுகிறது.

சேஷ சேஷி பாவம்

அவன் பர்த்தா : பெருமாள் தான் கணவன். ஜீவாத்மாக்கள் அனைவரும் மனைவி போன்றவர்கள். ஆக, அவன் நியந்தா; ஜீவர்கள் நியாம்யர்கள்.

பர்த்தா-பார்யை உபமானம்.

அவனே க்ஞேயன் : அதாவது அறியப்பட வேண்டியவனான பரம்பொருள். அவனை சாஸ்த்திர முகத்தாலே அறிவதனாலேயே, ஸாத்யோபாயத்தை (சரணாகதி) அநுஷ்டிக்க அவனது ஸஹேதுக க்ருபையாலே ரக்ஷிக்கிறான்.

அறிபவன்- அறிவது பற்றிய விளக்கம்

அவன் ஸ்வாமி : பகவான் அனைத்தையும் உடையவனாக – ஸ்வாமியாக – உள்ளான். நாம் அவனுடைய உடமையாக, சொத்தாக உள்ளோம்.

ஸ்வாமி- தாஸ பாவம்

அவன் ஆதாரம் : உலகனைத்தையும், ஜீவாத்மாக்கள் – அனைவரையும் தாங்குபவனாக பகவான் உள்ளான். நாம் அவனால் தாங்கப்படுபவர்களாக உள்ளோம்.

ஆதார-ஆதேய விளக்கம்

அவன் ஆத்மா : நாம் அனைவரும் பெருமானுக்கு சரீரம் போன்றவர்கள். பகவான் நமக்கு ஆத்மா (பரமாத்மா). அவன் ஜீவர்களை தாங்குபவனாயும், நியமிப்பவனாயும், அடிமை கொள்பவனாயும் இருக்கிறான்.

சரீர ஆத்ம ஸம்பந்தம்

அவன் போக்தா : பெருமாள் நம்மை அநுபவிப்பவன். நாம் பெருமாளாலே அநுபவிக்கப்பட வேண்டியவர்கள். நித்ய விபூதியில், ஜீவர்களின் கைங்கர்யம் கொண்டு போக ரஸத்தையும், சம்சாரி ஜீவர்களின் கர்ம குணமான எண்ணங்களையும் செயல்களையும் கொண்டு லீலா ரஸத்தையும் அநுபவிக்கிறான், பகவான்.

போக்தா-போக்ய விளக்கம்

இதனால் அறிய வேண்டுவது என்னவென்றால்,

ஒன்பது விதமான பிரிக்க முடியாத பகவத்-ஜீவ சம்பந்தம்

உந்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது

என்கிற எண்ணமே.

அதற்கான உபமானங்களோடு கூடிய விளக்கங்கள் இந்த ஸ்லோகம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

66. மாம் ஏகம் சரணம் வ்ரஜ, பக்தி ப்ரபத்தியை நிஷேதிக்கிறதா?

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் என்கிற இரண்டும் மோக்ஷ காரணம் அன்று என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் என்கிற இரண்டும் மோக்ஷ காரணம் அன்று என்றும், எப்போதும், எம்பெருமான் ஸ்வாமி, ஜீவர்கள் தாஸர்கள், என்கிற நினைப்பே மோக்ஷ காரணம் என ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

இது ஸகல ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

2. இம்மாதிரியான விளக்கத்திற்கு காரணம் ஆழ்வார் ஸ்ரீஸுக்தி என்பர், பூர்வபக்ஷிகள்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

ஆறெனக்கு நின் பாதமே சரணாகத் தந்தொழிந்தாய், உனக்கோர் கைம்மாறு நானொன்றிலேன் எனதாவியும் உனதே, சேரு கொள்கரும்பும் பெருஞ் செந்நெல்லும் மலிதண் சிரீவரமங்கை நாறு பூந்தண் துழாய் முடியாய்! தெய்வ நாயகனே

அருளினார்.

அதாவது,

நிலங்களில் கரும்புகளும் பயிர்களும் இருக்கப் பெற்ற குளிர்ந்த மலைப்பதியிலே எழுந்தருளியிருக்கிற திருத்துழாய் மாலை அணிந்த திரு முடியை உடையவனே! தெய்நாயகப் பெருமானே! உன் திருநாமத்தை சொன்ன காரணத்தால், ஸித்தோபாயனான நீ அநுக்ரஹித்து விட்டாய்! இந்த மஹோபகாரத்திற்கு உன் விஷயத்திலே ஒரு பிரதி உபகாரமும் எனக்கு இல்லை; அடியேன் உனக்கு நிருபாதிக சேஷனானபடியால்.

இதனைக் கொண்டு ஸாத்யோபாயம் நிஷேதிக்கப் படுவதாக, பூர்வபக்ஷிகள், சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாண விரோதமாக, ஆட்சேபிப்பர்.

த்ராவிட வேத ஸாகரம் என்று ('தமிழ் மறை' என) ஸ்ரீமந் நாதமுனிகளால் அருளப் பெற்ற, ஆழ்வார் பாசுரத்தின் தாத்பர்யத்தை உணரத் தவறிவிட்டதே இம்மாதிரி விளக்கங்களுக்கு காரணமாகிறது.

த்ரிவித சேதன அசேதன ஸ்வரூப ஸ்திதி என்கிறபடி, ஸகல ஜீவர்களும், ஸர்வேஸ்வரனுக்கு நிரூபாதிக சேஷன். அவனே ஸர்வ சேஷி.

இந்த யதார்த்த நிலையை உணரும் போது, ஸ்வதந்தர ஆத்ம ப்ரமம் கொண்ட ஜீவன், ஆத்ம அபஹார சௌர்யத்திலிருந்து விலக, சாஸ்த்திரம் வதித்த ஒரு செயலை, செய்ய வேண்டுவதாகிறது.

அப்போது, அந்த செயலையும், ஸ்வஸ்மை ஸ்வ ப்ரீதயே ஸ்வயமேவ காரிதவான் என்று ஸர்வ சேஷியானவன், தானே தன் சந்தோஷத்திற்காக என்னைக் கொண்டு செய்து போகிறான், என ஆழ்வார் பாசுரத்தின் நோக்கு ஆகிறது.

ப்ராதான உபாயமான **ஸித்தோபாயம்** பரம புருஷார்த்தத்திற்கு காரணமாய் இருக்க, அப்ரதானமான ஸாத்யோபாயத்தை அது விலக்காது என்பதில் தெளிவு வேண்டும், ஏனெனில் வேத ப்ரமாணங்கள் அவ்வாறு கூறுவதால்.

இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும் ஆச்சுவை பெறினும் வேண்டும் என தொண்டரடிப் பொடி ஆழ்வார் அருளுவதால், ஆழ்வார் மோக்ஷத்தை அபுருஷார்த்தம் என கூறுவதாகக் கொள்ள இயலுமோ! அது, அர்ச்சாவதார அநுபவ ரஸத்தை கூற வந்ததாகத் தானே கொள்கிறோம் !

ஆகவே, ஆழ்வார் பாசுரங்களை, வேத ப்ரமாண விரோதம் இல்லாமல் நிர்தாரணம் பண்ண வேண்டும் என்பதே ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம்.

ஆக, ஸித்தோபாய மேன்மையைச் சொல்லுப் போது, அது ஸாத்யோபாயத்தை விலக்காது என்பதில் தெளிவு வேண்டும்.

3. மோக்ஷ பலனுக்காக, பக்தி யோகம் அநுஷ்டிக்க ஞான சக்தி அற்றவனுக்கு, சரணாகதி அநுஷ்டானமே உபாதேயம் என்பது ப்ரமாண ஸித்தம்.

ப்ராஹ்ம புராண வரிகளாவது:

சரணம் த்வாம் ப்ரபன்னாயே த்யான யோக விவர்ஜிதா: தேபி ம்ருத்யும் அதிக்ரம்ய யாந்தி தத் வைஷ்ணவம் பதம்

அதாவது,

எவர்கள் பக்தி யோகம் செய்ய தகுதி அற்று உபாயமாக தேவரீர் திருவடிகளில் சரணம் அடைகிறார்களோ, அவர்களும் மரணத்திற்கு பிறகு ஸ்ரீ வைகுந்தத்தையே அடைகிறார்கள்.

ஸம்ஹிதா வாக்யமாவது,

யத்யேன காமகாமேன ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷூணா யத் ஸாங்க்யேன யோகேன ந ச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத் தத் ந்யாஸேன ஏவ மஹாமுனே பரமாத்மா ச தேன ஏவ ஸாத்யதே புருஷோத்தம:

அதாவது,

முமுக்ஷுவால் எந்த மோக்ஷ பலனை கர்ம யோகம் மற்றும் ஞான யோகத்தை அங்கமாகக் கொண்ட பக்தி யோகத்தை அநுஷ்டிக்க இயலாதோ, மஹரிஷியே ! அவன் எம்பெருமான் திருவடிகளில் ந்யாஸ வித்யை ஆகிற சரணாகதி அநுஷ்டானத்தை மேற் கொண்டு, கர்ம பலன் அநுபவத்திற்காக திரும்ப முடியாத, பரம ஸுகத்தைப் பெறக் கூடிய புருஷோத்தமன் நித்ய வாஸம் செய்யும் பரமபதத்தை அடைகிறான்.

ஆக, அதிகாரி பேதங்களினால், பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானமும் சாஸ்த்திர விஹிதமான மோக்ஷ உபாயமாகிறது எனத் தெளிய வேண்டும்.

4. சாஸ்த்ரங்கள் கூறும் விஷயங்களிலும் மற்றும் அவைகளை அநுஸரித்து பகவத் ராமானுஜர் அருளிச் செய்த க்ரந்தங்களிலும் தெளிவான ஞானம் இல்லாமையே, உபநிஷத்துக்கு விரோதமாக, ஸ்ரீராமானுஜர் வழி வந்த நம் பூர்வாசார்யர்களின் வரிகளையும், ஆழ்வார் பாசுரங்களையும் விபரீதமாக புரிந்து கொள்வதற்கு காரணமாகிறது. இம்மாதிரியான சந்தேகங்களை விலக்க, ஸ்வாமி ஸ்ரீதேசிகன், தான் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரத்தில், மோக்ஷத்திற்கான சரணாகதி அநுஷ்டான தேவையை மற்றும் அநுஷ்டிக்க வேண்டிய முறையையும் தெளிவாக, ப்ரமாணங்களுடன், சாஸ்த்தர விதிகளை பின்பற்றி, விளக்கி அருளியுள்ளார் என்பது குறிப்பிட தக்கது.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

அபேக்ஷிதபலத்துக்கு உபாயமாக விதித்த ஸாதநாந்தரங்களை இடையிட வேண்டாதபடி ப்ரபத்திக்கு அநன்தரம் பர ஸ்வீகாரம் பண்ணிய சரண்யன் தனித்து நிற்கும் நிலையைப் பற்ற "ஏக" சப்தம் என்றும் சொல்லுவார்கள்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

அபேக்ஷிதபலத்துக்கு - மோக்ஷ பலனுக்கு

உபாயமாக விதித்த - மோக்ஷ காரணமாக சாஸ்த்திரங்களில் விதித்த

ஸாதநாந்தரங்களை இடையிட வேண்டாதபடி - பக்தி யோகத்தை அநுஷ்டிக்க வேண்டாதபடி

ப்ரபத்திக்கு அநன்தரம் - சரணாகதி அநுஷ்டானத்துக்கு பிறகு

பர ஸ்வீகாரம் பண்ணிய சரண்யன் - சரணாகதியை ஏற்றுக் கொண்ட எம்பெருமான்

தனித்து நிற்கும் நிலையைப் பற்ற - லகு உப்யமான சரணாகதி அநுஷ்டானம் என்கிற ஒரு செயலை மட்டுமே அகிஞ்சனனுக்கு விதித்து அதை மோக்ஷ காரணமாக ஆக்கி வேறெதையும் எதிர்பார்க்காமல் இருக்கும் ஸர்வேஸ்வரனின் தனி நிலையை

ஏக சப்தம் என்றும் சொல்லுவார்கள் - இந்த **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்பதால் தெளிவிக்கப் படுகிறது என்றும் அர்த்தம் பெறும்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**மாம் ஏகம் சரணம் வ்ரஜ**" என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் என்கிற இரண்டும் மோக்ஷ காரணம் அன்று என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

67. <u>மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்பதால் ப்ரபத்தி அங்கங்கள் நிஷேதிக்கிறதா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, சரணாகதியின் அங்கங்கள் விலக்கப் படுவதால், சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ காரணம் அன்று என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்கிற பதங்களைக் கொண்டு, சரணாகதயின் அங்கங்கள் விலக்கப் படுவதால், சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ காரணம் அன்று என்றும், எப்போதும், எம்பெருமான் ஸ்வாமி, ஜீவர்கள் தாஸர்கள், என்கிற நினைப்பே மோக்ஷ காரணம் என ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

இது ஸகல ப்ரமாணங்களோடும் விரோதிக்கும்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யப்படி,

ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி:

என்கிறபடியால்

சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது

இந்த அங்கங்களோடு சரணாகதன் தன் ஆத்ம ரக்ஷணத்தை ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

இதுவே 'சரணாகதி' அநுஷ்டானம் என பாஞ்சராத்ர சாஸ்த்ரங்கள் உரைக்கின்றன.

மேலும், பாஞ்சராத்ர ஆகமசாஸ்த்திரப்படி,

ப்ரபத்திம் தாம் ப்ரயுஞ்சீத ஸ்வாங்கை பஞ்சபிராவ்ருதாம்

என்கிற ப்ரமாணமும், மோக்ஷத்திற்காக ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதியே செய்ய வேண்டுவதாக விதிக்கிறது.

2. சௌநக மஹரிஷி விஷ்ணு தர்மத்தில்,

துர்க சம்சார காந்தாரம் அபராமபிதாவதாம். ஏக: க்ருஷ்ண நமஸ்காரோ முக்தி: தஸ்ய தேசிக:

என அருளினார்.

அதாவது,

சம்சாரமாகிய கரையில்லாத காட்டில் ஓடித் திரிபவர்களுக்கு நம: என்று சொல் கொண்டு கண்ணனை வணங்குவதே மோக்ஷம் அளிப்பதாகும்.

ஸ்ரீராமானுஜர் அருளிய ஸ்ரீரங்க கத்யத்திலும், முதலில் விச்வாசம் அவசியம் என அருளி, பிறகு **நமோஸ்து தே** என சரணாகதி அநுஷ்டானத்தையே அருளிகிறார். அதாவது,

நமோஸ்து தே என்பதில் உள்ள **நம:** என்னும் பதம் ஆத்ம சமர்ப்பணத்தைக் குறிக்கிறது என்னும் கருத்தை மந்த்ரராஜபத ஸ்தோத்திரம் -

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயா ஆத்ம நிவேதனம்

அதாவது

நமஸ்காரம் என்பதான ஆத்மசமபர்ப்பணத்தை யாரிடம் செய்து, தன்னுடைய துக்கம் அனைத்தும் நீங்கப் பெற்று, அடையவேட்டிய அனைத்தையும் அடைகின்றானோ அந்த ஸர்வேஸ்வரனை வணங்குகிறேன் – என்பதில் காணலாம்.

ஸ்ரீராமானுஜர் அருளிய ஸ்ரீ வைகுண்ட கத்யத்தில் ப்ரார்த்தனையத் தொடர்ந்து ஆத்மசமர்ப்பணம் என்பது தெளிவாகவே உரைக்கப் பட்டுள்ளது.

3. ஸ்ரீ பராசர மஹரிஷி, தான் அருளிய ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்,

தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததாஸ் ஸ்ம்ருதி: யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்

அதாவது,

சரணாகதி அநுஷ்டானம் நான்கு வித (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) பலன்களையும் அளிக்க வல்லது

என விளக்குகிறார்.

மோக்ஷ பலனிற்காக அல்லாமல், பல புராண இதிஹாஸ கதைகளில், பலர் சரணாகதி மேற் கொண்டதை நாம் அறிவோம்.

மஹாபாரதத்தில், த்ரௌபதியின் வஸ்த்திரம் துச்சாததனால் களையும் போது, அவள் தன்னை பாதுகாக்க முயற்சித்தாள். கண்ணனிடம் சரண் புகுகிறாள். பலன் பெற்றாள்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், காகாசுரனை ப்ருஹ்மாஸ்த்திரம் துரத்தும் போது, பல லோகங்களுக்கு சென்று, அவர்கள் உதவியை நாடி, தன் முயற்சி பலன்ற்று போகவே, ஸ்ரீராமனிடம் காகாசுரன் சரண் புகுந்தான். பலன் பெற்றான்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், சுக்ரீவன், வாலி வதத்திற்காக, ஸ்ரீராமனை சரண் புகுந்தான். பலன் பெற்றான்.

ஆக, சரணாகதி அநுஷ்டானம் ஸர்வ பல சாதனம்.

இங்கு அறிய வேண்டுவது என்னவென்றால், சரணாகதி அநுஷ்டானம் பலனளிக்க, விதிக்கப் பட்ட ஐந்து அங்கங்களைத் தவிர்த்து வேறு ஒரு செயலையும் சரணாகதி அநுஷ்டானம் எதிர்பாராது.

அதாவது, சரணாகதியை ஏற்று பலனளிக்க வல்ல சரண்யனிடம் **அநுகூல புத்தியும்**, சரண்யன் விஷயத்தில் **ப்ரதிகூல எண்ணத்தை விடுகையும்**, தன் **போக்கற்ற நிலையைத் தெளிந்து** (கார்ப்பண்யம்), சரண்யன் ரக்ஷிப்பான் என்கிற **மஹா விஸ்வாஸத்தோடு** செய்யப் படும் **பல ப்ரார்தனையே** (கோப்த்ருத்வரணம்), சரண்யன் பலனளிக்க காரணமாகிறது.

4. முமுக்ஷுவான சரணாகதனும், ஸ்வதந்தர விதியாலே, வர்ண ஆஸ்ரம தர்மங்களை மேற் கொள்ள வேண்டும் என்பது உகந்து பணி கொள்ளும் எம்பெருமான் திருவுள்ளம் உகக்க ஸ்வயம் ப்ரயோஜனமாக செய்ய வேண்டுவது.

இதையே ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய ரத்நாவளியில்,

இப்படி க்ருதக்ருத்யனான ப்ரபன்னனுக்கு வர்ண ஆஸ்ரமாதி தர்மங்கள் ஸ்வதந்தர ஆக்ஞா ஸித்தங்களான கைங்கர்ய விசேஷங்கள்

ஆக, இக்கர்மங்களை மோக்ஷ ஸாதநம் என எண்ணலாகாது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இப்படி பரிபூர்ணனான தன்னைப் ப்ரபத்தி பண்ணும் போது ஆனுகூல்ய ஸங்கல்பாதிகளை ஒழிய வேறொரு பரிகரத்தை இதிலே வித்யாந்தரத்திற் போலே சொருகிக் கொண்டு அதுவும் ப்ரஸாதனமான உபாயகோடியிலே நிற்கிறதென்னும் நினைவை கழிக்கைக்காக "ஏக" சப்தம் என்றும் சொல்லுவார்கள்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது,

இப்படி பரிபூர்ணனான தன்னைப் ப்ரபத்தி பண்ணும் போது - தனக்கு ஒரு பெறப் பட வேண்டிய தேவை உண்டென்று சொல்ல முடியாதபடி உள்ள ஸர்வேஸ்வரனிடம் சரணாகதி அநுஷ்டிக்கும் போது

ஆனுகூல்ய ஸங்கல்பாதிகளை ஒழிய வேறொரு பரிகரத்தை - சரணாகதி அநுஷ்டானத்திற்கு விதித்திருக்கிற ஐந்து அங்கங்கள் (அதாவது, ஆனுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல வர்ஜநம், மஹா விஸ்வாஸம், கோப்த்ருத்வரணம், கார்ப்பண்யம்) நீங்கலாக வேறொரு அங்கத்தை

இதிலே வித்யாந்தரத்திற் போலே சொருகிக் கொண்டு - ப்ருஹ்ம வித்யையான பக்தி யோகம் போலே (அதாவது, பக்தி யோகத்திற்கு அங்கங்களான வர்ண ஆஸ்ரம தர்மம் போன்றவைகளை) சேர்த்துக் கொண்டு

அதுவும் ப்ரஸாதனமான உபாயகோடியிலே நிற்கிறதென்னும் - அந்த அங்கங்களும் சரணாகதி அநுஷ்டானத்திற்கு தேவை எனும்படியான

நினைவை கழிக்கைக்காக "ஏக" சப்தம் என்றும் சொல்லுவார்கள் - எண்ணத்தை தவிர்க்க வேண்டும் என்னுமதை மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்னும் பதங்களால் தெளிவிக்கப் படுகிறது என்றும் அர்த்தம் பெறும்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கிற பதங்களைக் கொண்டு, சரணாகதயின் அங்கங்கள் விலக்கப் படுவதால், சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ காரணம் அன்று என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

68. பூர்வாசார்யர்கள் சரணாகதிக்கு அதிகாரிகளா?

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய**" என்றும் மற்றும் "**மாம் ஏகம் சரணம் வ்ரஜ**" எனும் பதங்களைக் கொண்டு, சரணாகதியின் அதிகாரம் ஞான சக்தி அபாவத்தாலே ஸித்திக்கும் போது, நம் பூர்வாசார்யர்களுக்கு ஞான சக்திகள் இருக்க, சரணாகதி அநுஷ்டானம் அவர்களுக்கு அடுக்குமோ என சிலர் சந்தேஹிப்பார்கள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினாலே அருளிய சரமஸ்லோகத்தில் ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய என்றும் மாம் ஏகம் சரணம் வ்ரஜ எனும் பதங்களைக் கொண்டு, மோக்ஷ பலத்திற்காக சரணாகதியின் அதிகாரம் ஞான சக்தி அபாவத்தாலே ஸித்திக்கும் போது, நம் பூர்வாசார்யர்களுக்கு ஞான சக்திகள் பூரணமாக இருக்க, அவர்களுக்கு மோக்ஷ காரணமாக சரணாகதி அநுஷ்டானம் அடுக்குமோ, என ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

இது சரணாகதி அநுஷ்டான சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

2. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், சரமஸ்லோக அர்த்தத்தை பொதுவாக விவரிக்கும் போது, ஸ்ரீராமானுஜர் அருளியதை அநுசரித்து,

ஸுதுஷ்கரேண சோசேத்ய: யேந யேந இஷ்ட ஹேதுந்நா ஸ ஸ தஸ்ய அஹமே வேதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:

என அருளினார்.

அதாவது, 'யார் ஒருவன் தான் விரும்புகிற பலனை தரக் கூடிய உபாயத்தை அநுஷ்டிக்க முடியாமல் வருந்தி என்னை சரணமாக பற்றுகிறானோ, அவனுக்கு நானே உபாயமாக இருந்து பலனளிக்கிறேன்' என்பதை சரமஸ்லோகத்திற்கு அர்த்தமாக விளக்கினார்.

இது, ஸ்ரீராமானுஜர் அருளிய கீதா பாஷ்யத்தோடும், சரணாகதி கத்யத்தோடும் முற்றிலுமாக பொருந்தும்.

இதனால் தெளிய வேண்டுவது, மோக்ஷ பலனுக்கான, சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரமாவது,

மோக்ஷ பலனில் இச்சை

மோக்ஷ உபாயமாக அநுஷ்டிக்க.வேண்டிய பக்தி யோகத்திற்கு தகுதி இன்மை

பக்தி யோகத்துக்கு பல ஸித்தியானது ப்ராரப்த காலம் முடிவதாக இருக்க, இந்த கால தாமதத்தை பொறுக்க மாட்டாமை

கால விளம்பத்தை ஸஹியாத நம் பூர்வ ஆசார்யர்கள், சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரிகளாம்.

3. இதே கருத்தை அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வரிகளும் வலியுறுத்துகிறது.

யத்யேன காமகாமேன ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷூணா யத் ஸாங்க்யேன யோகேன ந ச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத் தத் ந்யாஸேன ஏவ மஹாமுனே பரமாத்மா ச தேன ஏவ ஸாத்யதே புருஷோத்தம:

அதாவது,

முமுக்ஷுவால் எந்த மோக்ஷ பலனை கர்ம யோகம் மற்றும் ஞான யோகத்தை அங்கமாகக் கொண்ட பக்தி யோகத்தை அநுஷ்டிக்க இயலாதோ, மஹரிஷியே ! அவன் எம்பெருமான் திருவடிகளில் ந்யாஸ வித்யைமாகிய சரணாகதி அநுஷ்டானத்தை மேற் கொண்டு, கர்ம பலன் அநுபவத்திற்காக திரும்ப முடியாத, பரம ஸுகத்தைப் பெறக் கூடிய புருஷோத்தமன் நிதாய வாஸம் செய்யும் பரமபதத்தை அடைகிறான்.

ஆக, மோக்ஷ பலனுக்கான, சரணாகதி அநுஷ்டானத்தை அதிகாரமாவது, பக்தி யோகத்திற்கு தகுதி அற்று இருப்பது.

பக்தி யோகத்திற்கு, அதைத் தொடங்கும் பிறவியில், தகுதிக்கு தேவையாவது:

மோக்ஷ பலனில் இச்சை

மோக்ஷ உபாயமாக அநுஷ்டிக்க.வேண்டிய பக்தி யோகத்திற்கு பூரண தத்வ ஞான அநுஷ்டான சக்தி

உடல் நலம், யோக அநுஷ்டானத்திற்கு தடையாய், இல்லாமல் இருப்பது

த்ரை வர்ணிகத்வம்

புருஷனாக இருந்து போவது

பக்தி யோகத்துக்கு பல ஸித்தியானது ப்ராரப்த காலம் முடிவதாக இருக்க, இந்த கால தாமதத்தை பொறுக்க மன நிலை

இந்த தகுதிகளில் உள்ள ஒரு சில குறைபாடுகளினால், நம் பூர்வ ஆசார்யர்கள், சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரிகளாம்.

4. நம் பூர்வாசார்யர்கள், ஞான அநுஷ்டான சீலர்களாக இருந்த போதும், பகவத் சாக்ஷாத்காரத்தை இப்பிறவியிலேயே, பெற திருவுள்ளம் பற்றினர்.

ஸ்ரீமந் நாதமுனிகள், யோக சாஸ்த்திரம் அறிந்ததால், மதுரகவியாழ்வாரின், கண்ணினுண்சிறுத்தாம்பு ஆவ்ருத்தியால், ஸ்வாமி நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்து, தத்வ-ஹித-புருஷார்த்த விஷயங்களைத் தெளிந்து, அவ்வழியாலே நம் ஸத் ஸம்ப்ரதாய குரு பரம்பரையில், ஸ்வாமி நம்மாழ்வரை பெரும் இடத்தை வகிக்க செய்திருக்கிறார், என்பது ஆசார்ய பரம்பரை வரலாறு ஸித்தம்.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில்,

ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம், பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ, தாவி வையம் கொண்ட தடந்தா மரைகட்கே, கூவிக் கொள்ளும் கால மின்னம் குறுகாதோ?

அதாவது,

‘ஐந்து புலன்களைக் (பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, தொடுவது) கொண்டு சிற்றின்பங்களான உலக விஷயங்களில் பாபியான என்னை ஈடுபடுத்தி ஸர்வேஸ்வரனான நீ வருத்தப் படுத்தலாமா? உன் திருவடியை அடைகிற தருணம் எனக்கு விரைவில் வாராதோ?’

என வருந்துகிறார்.

ஸ்ரீ ஆளவந்தார், ஸ்தோத்திர ரத்நத்தில்,

தனம் மதீயம் தவ பாத பங்கஜம் கதா நு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா

என பகவத் ஸாக்ஷாத்காரத்துக்கு கால தாமதத்தை ஸஹியாத தன் நிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

பகவத் ராபானுஜர், கத்யத்யத்தில்,

கதாஹம் பகவந்தம் ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா

என அருளி, பகவத் ஸாக்ஷாத்காரத்துக்கு தன் ஆற்றாமையை வெளிக் காட்டியுள்ளார்.

ஆக, நம் பூர்வாசார்யர்களுக்கு பக்தி யோகத்திற்கான ஞான சக்திகள் இருக்க, சரணாகதி அநுஷ்டானம் அடுக்குமோ என் சந்தேகிப்பவர்களுக்கு, அவர்கள் மோக்ஷ பலனுக்கு கால தாமதத்தை இசையாதது, சரணாகதிக்கு அதிகாரத்தை அவர்களுக்கு அளித்திருக்கிறது, எனத் தெளிய வேண்டும்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

பல ஔஷதங்கள் தர வல்ல ஆரோக்யத்தை எல்லாம் இந்த ஸித்த ஔஷதம் ஒன்றுமே தரவற்றாகையாலே, நீ ஔஷதாந்தரங்களுக்கு அலமராதே இந்த ஔஷதம் ஒன்றையுமே உபஜீவிக்கவமையாம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது, ஒரு உபமானம் கொண்டு விளக்கப் படுகிறது.

பல ஔஷதங்கள் தர வல்ல - பல மருந்துகளைக் கொண்டு பல சரீர உபாதைகளை போக்க வேண்டி இருக்க, (அது போல , பல ப்ராயச்சித்ங்களைப் பண்ணி பல தரப் பட்ட பாபங்களை போக்க சாஸ்த்திரம் விதித்திருக்க)

ஆரோக்யத்தை எல்லாம் இந்த ஸித்த ஔஷதம் ஒன்றுமே தரவற்றாகையாலே - ஒரே ஒரு மருந்தே ஸகல சரீர உபாதைகளையும் போக்க வல்லதாக ஒன்று இருக்குமாயின், (அது போல, சரணாகதி அநுஷ்டானம் ஸகல பாப ப்ராயஸ்சித்தமாகுமாயின்)

நீ ஔஷதாந்தரங்களுக்கு அலமராதே - நீ பல மருந்துக்களை தேடிப் போகாதே, (அதே போல, பல மோக்ஷோபாயங்களை சம்சாரி ஜீவர்கள் அநுஷ்டிக்க வேண்டாதபடி)

இந்த ஔஷதம் ஒன்றையுமே உபஜீவிக்கவமையாம் - இந்த ஒரு மருந்தே உட்கொள்ள வேண்டியது, (அது போல, சரணாகதி அநுஷ்டானம் என்கிற ஒரு உபாயமே மோக்ஷத்திற்கு தடையான ஸகல பாபங்களையும், கால தாமதம் உள்பட, களைய வல்லது)

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய" என்றும் மற்றும் "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" எனும் பதங்களைக் கொண்டு, சரணாகதியின் அதிகாரம் ஞான சக்தி அபாவத்தாலே ஸித்திக்கும் போது, நம் பூர்வாசார்யர்களுக்கு ஞான சக்திகள் இருக்க, சரணாகதி அநுஷ்டானம் அவர்களுக்கு அடுக்குமோ என்பது சரணாதி அதிகாரத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

69. மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்பதால் பிராட்டிக்கு ஸித்தோபாயம் கூடுமோ?

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**மாம் ஏகம் சரணம் வ்ரஜ**" எனும் பதத்தைக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானத்தை எம்பெருமான் ஒருவனிடமே செய்ய வேண்டுவதாகிறது; பெரிய பிராட்டியிடம் அல்ல, என்பது ப்ரமாண விரோதம்.

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினால் அருளப்பட்ட **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** எனும் பதத்தைக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானத்தை எம்பெருமான் ஒருவனிடமே செய்ய வேண்டுவதாகிறது; பெரிய பிராட்டியிடம் அல்ல, என்று ஸித்தாந்த பூர்வ பக்ஷிகள் வாதிடுவர்.

இது சரணாகதி அநுஷ்டான சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

2. **அகலகில்லேன்** என்று எம்பெருமானோடு எப்போதும் கூடியே இருக்க் கூடிய பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாருக்கு **புருஷகாரத் தன்மை** (எம்பெருமானிடம் பரிந்துரைப்பது) மட்டும் உள்ளதா அல்லது **புருஷகாரத்தோடு கூடிய உபாயத்வமும்** (பலன் அளிப்பது) உண்டா, என, ப்ரமாணங்களைக் கொண்டு, பகவத் ராமானுஜ ஸித்தாந்தப் படி, நம் பூர்வாசார்யர்களால் தெளிவிக்கப் பட்ட விஷயத்தில், பூர்வபக்ஷிகள் குழம்புவர்.

பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாரும் ஸித்தோபாயமே என்பதை ஸ்ருதி ப்ரமாணத்தைக் கொண்டு அறியலாம்:

தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே

என்கிற ஸ்ருதி வாக்யத்தால் (ஸ்ரீஸுக்தம்),

லக்ஷ்மி தேவியை சரணமடைந்து இல்லாமையைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

பகவத் சாஸ்த்திரமும் இதையே தெளிவிக்கிறது.

 # லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே

என்கிற பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும்,

எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம்.

இதனாலும், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

புராண முகத்தாலும் இதைத் தெளியலாம்.

யக்ஞ வித்யா மஹாவித்யா குஹ்ய வித்யா ச ஷோபனே. ஆத்ம வித்யா ச தேவி, த்வம் விமுக்தி பல தாயிநி

என்று பராசர மஹரிஷி, விஷ்ணு புராணத்தில், பெரிய பிராட்டியாருக்கு முக்தி அளிக்கும் தன்மை உண்டு என அருளியிருக்கிறார்.

3. பெரிய பிராட்டியாரை குறிக்கும் **ஸ்ரீ** என்ற ஸம்ஸ்க்ருத சப்தத்திற்கு ஆறு அர்த்தங்கள் உள்ளன, என ஸ்வாமி தேசிகன் விளக்குகிறார்:

 # ச்ரீயதே - அடையப்படுகின்றாள்; எம்பெருமானிடம் பரிந்துரைக்க வேண்டி ஜீவர்கள் அவளை அடைகிறார்கள்.

 # ச்ரயதே - அடைகின்றாள்; தன்னை அண்டிய ஜீவரகளுக்காக எம்பெருமானை அவர்கள் விஷயமாக, பரிந்துரை செய்ய, அடைகிறாள்.

 # ச்ருணோதி - கேட்கறாள்; தன்னை அண்டிய ஜீவர்களின் குறைகளைக் கேட்கிறாள்.

 # ச்ராவயதி - கேட்பிக்கிறாள்; ஜீவர்களிடம் கேட்டதை ஸர்வேஸ்வரனிடம் விண்ணப்பிக்கிறாள்.

 # ச்ருணாதி - ஒழிக்கிறாள்; மோக்ஷத்திற்கு தடையான ஜீவர்களின் பாபங்களை ஒழிக்கிறாள்

 # ச்ரீணாதி - ஜீவர்களுக்கு பரிபூரண ப்ருஹ்மானுபவமான பலனை அளிக்கிறாள்.

ஆக, முதல் நான்கும் பெரிய பிராட்டியாரான மஹாலக்ஷ்மி தாயாருக்கு புருஷகாரமாக, அதாவது எம்பெருமானிடம் பரிந்துரைப்பவளாக, அமைகிறது. அடுத்த இரண்டும், உபாயமாக, அதாவது தானே பலனளிப்பதாகவும், அமைகிறது.

இதனால், பிராட்டியும் மோக்ஷ பலனை அளிக்கிற ஸித்த உபாயம் என அறியலாம். ஆக திவ்ய தம்பதிகளே பரம் பொருளாகின்றனர்.

4. மேலும், பக்தி யோக நிஷ்டன் உபாஸிக்கும் போது, பிராட்டியோடு கூடிய நாராயணனையே உபாஸிக்க வேண்டும் என்கிற உபநிஷத் விஷயத்தை பகவத் ராமானுஜர் தெளிவு படுத்தியுள்ளர்.

ஆனந்தாதய: ப்ரதானஸ்ய

என்கிற ஆனந்தாத்யதிகரண ப்ருஹ்ம ஸூத்ரத்தில், அதாவது ஸாதனாத்யாயத்தில் குணோபஸம்ஹார பாதத்தில், உபாஸகன் எந்த ஒரு பக்தி யோக வித்யையை அநுஷ்டித்தாலும், ஈஸ்வரனின் ஸ்வரூப நிரூபக தர்மமான பிராட்டியையும் சேர்த்தே உபாஸிக்க வேண்டுவதாய் ஸ்ரீபாஷ்யத்தில் விவரிக்கப்படுகிறது.

மோக்ஷ காரணமான பக்தி யோகத்தில், உபாஸ்யமாக இருப்பதினால், மஹாலக்ஷ்மி தாயாருக்கும் ஸித்தோபாயத்வம் உண்டென அறியலாம்.

மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டான விஷயத்தில் பெரிய பிராட்டி ஸித்தோபாயம் ஆக மாட்டாள் என்கிற பூர்வபக்ஷிகளின் வாதத்திற்கு ப்ரமாணம் கிடையாது.

சரணாகதி கத்யத்தில் - ஸ்ரீராமானுஜர், புருஷகார ப்ரபத்தியை பிராட்டியிடம் அநுஷ்டித்த பிறகு, திவ்ய தம்பதிகளின், சரணாகத ரக்ஷணத்திற்கு உகந்த குணங்களை வர்ணித்து திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் செய்யும் சரணாகதி அநுஷ்டானமாவது:

அபார காருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய ஔதார்ய ஐஸ்வர்ய ஸௌந்தர்ய மஹோததே ! அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யா ! ப்ரணதார்த்திஹரா ! ஆஸ்ருத வாத்ஸல்யைக ஜலதே ! அநவரத விதித நிகில பூத ஜாதாத்ம்யா ! அசேஷ சராசர பூதா ! நிகில நியமந நிரதா ! அசேஷ சித சித் வஸ்து சேஷி பூதா ! நிகில ஜகதா தாரா ! அகிலஜகத் ஸ்வாமிந் ! அஸ்மத் ஸ்வாமிந் ! ஸத்ய காமா ! ஸத்ய ஸங்கல்ப ! ஸகலேதர விலக்ஷணா ! அர்த்தி கல்பகா ! ஆபத்ஸகா ! ஸ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே!

அதாவது,

ஸ்ரீமந் நாராயணா என்பதால், இந்த சரணாகதி அநுஷ்டானம் ஸித்தோபாயமான திவ்ய தம்பதிகளிடம் செய்வதாகிறது.

இதையே **த்வய மந்திரமும்** சரணாகதி அநுஷ்டானத்துக்கு கர்ண மந்திரமாக இருந்து

ஸ்ரீமந் நாராயணா என்றே உபாய தசையிலும் (த்வய மந்திர பூர்வ கண்டத்திலும்) உபேய தசையிலும் (

த்வய மந்திர உத்தர கண்டத்திலும்) சொல்ல வேண்டுவதாகிறது.

ஆக, **ஸந்நியோகஸிஷ்ட ந்யாயத்தாலே**, பெருமாளைச் சொன்ன இடமெங்கும் பிராட்டியையும் சொன்னபடி என்பது பகவத் ராமானுஜ ஸித்தாந்தம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

அத: அநன்ய பர அநேக ஸ்ருதி ஸ்ம்ருதி அநுஸாரத: பத்னி விசிஷ்ட ஏவ ஏக: ப்ரபத்தவ்ய இஹோதித:

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

அத: அநன்ய பர - ஆதலால் வேறு பொருளை விளக்க நோக்கமற்று

அநேக ஸ்ருதி ஸ்ம்ருதி அநுஸாரத: - பற்பல ஸ்ருதி ஸ்ம்ருதிகளைத் தழுவி எம்பெருமான் ஒருவனை கூறுமிடத்தில்

பத்னி விசிஷ்ட ஏவ ஏக: - பத்நியோடு கூடிய எம்பெருமான் ஒருவனையே

ப்ரபத்தவ்ய இஹோதித: - ப்ரபத்தி செய்யப்பட வேண்பவனாக இச்சரமஸ்லோகத்தில் சொல்லப் பட்டுள்ளான்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" எனும் பதத்தைக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானத்தை எம்பெருமான் ஒருவனிடமே செய்ய வேண்டுவதாகிறது; பெரிய பிராட்டியிடம் அல்ல, என்பது சரணாதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

70. <u>ப்ரபத்தி ஸ்ருதி ஸித்தம் என்னில் ஸர்வருக்கும் கூடுமோ?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**சரணம் வ்ரஜ**" எனும் பதத்தினால், சரணாகதி ஸர்வருக்கும் ஸர்வ விஷயித்வம் அல்ல என்பது ப்ரமாண விரோதம்.

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினால் அருளப்பட்ட **சரணம் வ்ரஜ** எனும் பதத்தினால், சரணாகதி ஸர்வருக்கும் ஸர்வ விஷயித்வம் அல்ல, என்று சிலர் வாதிடுவர்.

அதாவது, உபநிஷத், ஸ்ம்ருதி, பாஞ்சராத்ரம் போன்ற சாஸ்த்திர பலத்தினால் சரணாகதி அநுஷ்டிக்கலாமாயிருக்க, வேத அத்யயனத்துக்கு தகுதி உள்ளவர்களே, சரணாகதி அநுஷ்டானத்துக்கு அதிகாரம் பெற்றவர்கள் என்பர் சிலர்.

ஆக, ஸர்வருக்கும் ஸர்வ விஷயித்வம் ஆகாது இந்த சரணாகதி அநுஷ்டானம் என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

2. பகவத் ராமானுஜர் சரணாகதி கத்யத்தில்,

அபார காருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்ய ஔதார்ய ஐஸ்வர்ய ஸௌந்தர்ய மஹோததே ! அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யா ! ப்ரணதார்த்திஹரா ! ஆஸ்ருத வாத்ஸல்யைக ஜலதே ! அநவரத விதித நிகில பூத ஜாதாத்ம்யா ! அசேஷ சராசர பூதா ! நிகில நியமந நிரதா ! அசேஷ சித சித் வஸ்து சேஷி பூதா ! நிகில ஜகதா தாரா ! அகிலஜகத் ஸ்வாமிந் ! அஸ்மத் ஸ்வாமிந் ! ஸத்ய காமா ! ஸத்ய ஸங்கல்ப ! ஸகலேதர விலக்ஷணா ! அர்த்தி கல்பகா ! ஆபத்ஸகா ! ஸ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே!

என அருளியுள்ளார்.

அதாவது, தன்னை அடைந்தவர்களிடம் உள்ள விசேஷங்களை காணாமல் அனைவருக்கும் அடைக்கலமாய் இருக்கும் சரண்யன், சரணாகத பல ப்ரதன்,

என ஸ்ரீராமானுஜர் சரணாகதி கத்யத்தில் அருளியுள்ளதால்,

ஆக, சரணாகதி அநுஷ்டானம் ஸர்வருக்கும் ஸர்வ விஷயத்திலும் ஏற்ற ஸாதனமாகிறது.

இதனால், சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷத்தை அளிக்க வல்ல, ஸர்வேஸ்வரனிடம் உள்ள, ஒப்புயர்வற்ற மூன்று ப்ரதான குணங்கள் வெளிப் படுகின்றன:

வாத்ஸல்யம் - ஒரு சிறிய செயலாகிய சரணாகதி அநுஷ்டானத்தினால், தன் அடியார்களின் குற்றத்தைப் பாராமல் ஏற்றுக் கொள்வது

ஸௌசீல்யம் - ஸர்வேஸ்வரனான கண்ணன், பாப புண்ய கர்மவஸ்யனான அர்ஜுன ன் போன்றவர்களுடன் கலந்து பழகுதல்; அர்ஜுனனுக்கு தேரோட்டியாய் பணி புரிதல்.

ஸௌலப்யம் - மஹா யோகிகளுக்கும் எளிதில் கிடைக்கப் பெறாத தன் விஸ்வரூபத்தை, தனக்கு ப்ரியமான அர்ஜுனனின் ஆசைக்கு இணங்கி காட்டியது.

இப்படிப் பட்ட ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனையே ஸர்வ விதங்களிலும் சரண்யன் என உணர்ந்து, அவன் சாஸ்த்திரத்தில் விதித்த சரணாகதி அநுஷ்டானத்தை, அவன் திருவடிகளில் செய்வதே ஸகல அகிஞ்சனனுக்கு செய்யப் ப்ராப்தம்.

மேலும், ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னை பூஜிப்பவர்களை பற்றிய அவன் கருத்தை பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

9ம் அத்யாயம் 32 வது ஸ்லோகம் -

மாம் ஹி பார்த்த வ்யபாச்ரித்ய யேபி ஸ்யு:பாபயோநய: ஸ்த்ரீயோ வைஸ்யாஸ் ததா சூத்ராஸ் தேபி யாந்தி பராம் கதிம்

அதாவது,

‘பெண்கள், வேளாளர், வணிகர் போன்ற யாராயினும் என்னை சரண் அடைந்து நற்கதியை அடையலாம்.

ஆக, சரணாகதி அநுஷ்டானம் ஸகல முமுக்ஷுக்களுக்கும், பாகுபாடின்றி, அநுஷ்டிக்க தகுந்தது, என்பதாகிறது.

3. ஸ்ரீ பராசர மஹரிஷி, தான் அருளிய ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்,

தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததாஸ் ஸுகம், யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்

அதாவது,

சரணாகதி அநுஷ்டானம் நான்கு வித (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) பலன்களையும் அளிக்க வல்லது

என விளக்குகிறார்.

மோக்ஷ பலனிற்காக அல்லாமல், பல புராண இதிஹாஸ கதைகளில், பலர் சரணாகதி மேற் கொண்டதை நாம் அறிவோம்.

மஹாபாரதத்தில், த்ரௌபதியின் வஸ்த்திரம் துச்சாததனால் களையும் போது, அவள் தன்னை பாதுகாக்க முயற்சித்தாள். கண்ணனிடம் சரண் புகுகிறாள். பலன் பெற்றாள்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், காகாசுரனை ப்ருஹ்மாஸ்த்திரம் துரத்தும் போது, பல லோகங்களுக்கு சென்று, அவர்கள் உதவியை நாடி, தன் முயற்சி பலன்ற்று போகவே, ஸ்ரீராமனிடம் காகாசுரன் சரண் புகுந்தான். பலன் பெற்றான்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், சுக்ரீவன், வாலி வதத்திற்காக, ஸ்ரீராமனை சரண் புகுந்தான். பலன் பெற்றான்.

ஆக, சரணாகதி அநுஷ்டானம் ஸர்வ பல சாதனம்.

4. வ்யாஸ பகவான் மஹாபாரதத்தில்,

யே ச வேத விதோ விப்ரா: யே ச ஆத்யாத்ம விதோ ஜநா: தே வதந்தி மஹாத்மானம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்

என அருளினார்.

அதாவது,

எந்த அந்தணர்கள் வேதத்தின் முன் பாகத்தை அறிகிறார்களோ எந்த ஜநங்கள் பரமாத்ம விஷயமான உபநிஷத் பாகத்தின் அர்த்தத்தை உணர்கிறார்களோ அவர்கள் ஸர்வேஸ்வரனான கண்ணனை ஸர்வருக்கும் ஸர்வ பலனுக்கும் ஸித்தோபாயமாக சொல்லுவர்.

இந்த ஸித்தோபாயனான எம்பெருமான், சம்சாரி ஜீவர்களுக்கு பலனளிக்க காரணமாக இருந்து, அவனால் சாஸ்த்திரங்களில் விதிக்கப் பட்ட பக்தி யோகம் மற்றும் ப்ரபத்தி, ஜீவர்களுக்கு ஸாத்யோபாயமாகத் தெளிய வேண்டும்.

ஆக, அகிஞ்சனன் விஷயத்தில், சரணாகதி அநுஷ்டானம் ஸர்வருக்கும் ஸர்வ பலனும் அளிக்க வல்லது, என்பது ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இந்த சரண வரணம் அர்ஜுனனைக் குறித்து உபதேசிக்கப் பட்டதேயாகிலும் "அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யா" என்கிறபடியே ஸர்வ விஷயம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இந்த சரண வரணம் - இந்த சரணாகதி அநுஷ்டானம்

அர்ஜுனனைக் குறித்து உபதேசிக்கப் பட்டதேயாகிலும் - க்ஷத்ரியனான அர்ஜுனனுக்கு குருக்ஷேத்ர யுத்த களத்தில், யுத்தம் புரிவதில் அவன் கொண்ட கலக்கத்தை தெளிவிக்க உபதேசித்த போதிலும்

அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யா" என்கிறபடியே ஸர்வ விஷயம் - பகவத் ராமானுஜர் சரணாகதி கத்யத்தில் தெளிவித்தபடி, அனைவருக்கும் அனைத்து புருஷார்த்தங்களுக்கும் ஸர்வேஸ்வரன் ஸித்தோபாயமாகிறான், என்றபடி.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "**சரணம் வ்ரஜ**" எனும் பதத்தினால், சரணாகதி ஸர்வருக்கும் ஸர்வ விஷயித்வம் அல்ல என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

71. <u>சரமஸ்லோக வ்ரஜ எனும் பதத்தினால், சரணாகதி மனோ வ்யாபாரமா?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "வ்ரஜ" எனும் பதத்தினால், சரணாகதி அநுஷ்டான பரம் அன்று, மனோ வ்யாபாரமே என்பது ப்ரமாண விரோதம்.

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினால் அருளப்பட்ட வ்ரஜ எனும் பதத்தினால், சரணாகதி செயல் ரூபமானது இல்லை என்றும் ஸித்தோபாயமாக எம்பெருமானை நினைத்திருக்கும் மனோ வ்யாபாரமே, என்று ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

ஸித்தோபாயனான எம்பெருமான் மோக்ஷ காரணமாக இருக்க, சரணாகதி அநுஷ்டானம், எம்பெருமானுக்கு அவத்யத்தை உண்டு பண்ணுவதாக ஓர் யுக்தி வாதம் செய்து பூர்வபக்ஷிகள் ஆட்சேபிப்பர்.

சரணாகதி, உபநிஷத், ஸ்ம்ருதி, பாஞ்சராத்ரம் போன்ற சாஸ்த்திர பலத்தினால் அநுஷ்டேயமாயிருக்க, அதை மனோ வ்யாபாரமே என்பர் பூர்வ பக்ஷிகள்.

2. ஸர்வேஸ்வரனான கண்ணன் ஆர்ஜுன ஸம்வாதம் பகவத் கீதை எனும் கீதோபநிஷத்.

பகவத் கீதை - 2ம் அத்யாயம் 7 வது ஸ்லோகம் -

தன் கவலைகளை பல ஸ்லோகங்களில் வெளியிட் பிறகு, அர்ஜுனன் தனது முதல் கேள்வியை கண்ணனிடம் கேட்டான்:

கார்பண்ய தோஷோ உபஹதஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸமூடசேதா:யத் ஸ்ரேய: ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந் மே சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்

அதாவது,

நான் தர்ம விஷயத்தில் குழம்பியவனாக உள்ளேன். (மதிப்பிற்குறிய உறவினர்களை கொல்வது தர்மமா?) ஸ்ரேயோ மார்க்த்தை (பரம புருஷார்த்த்தை) தெளிய விரும்புகிறேன். எனக்கு எது நன்மையானதென்று உன்னால் நிச்சயிக்க பட்டதோ, அதை உன் சிஷ்யனாய் உன்னை சரணமடைந்த எனக்கு, கூறி செயல் புரிய கட்டளையிட வேண்டும்.

கலங்கிய அர்ஜுனனால், இங்கு கேட்கப்பட்ட கேள்வி, தன் செயல் என்னவாக வேண்டும் என்பதே!

ஸ்ரேயோ மார்க்கம் பற்றி வினவிய அர்ஜுனனுக்கு, மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதாகிய பக்தி யோகத்தை பல ஸ்லோகங்களில் விவரித்து, பிறகு அதன் சுருக்கத்தை இந்த ஸ்லோகத்தில் அளிக்கிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 65 வது ஸ்லோகம் -

மன் மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ் குரு. மாமே வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதி ஜானே ப்ரியோஸிமே

அதாவது,

'பக்தியோடு என்னை நீ ஆராதித்தாயேயானால் நீ என்னையே அடைவாய். இது என் ப்ரதிக்ஞை.' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

பக்தி யோகம் மேன்மேலும் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் அதற்கு ஏற்றவாறு செயல்களை புரிய வேண்டும் என்பதை புரிய வைத்து, மிக மிக ரஹஸ்யமான பக்தி யோகத்தின் முக்கியமான பாகங்களை மீண்டும் உபதேசித்தான் கண்ணன்.

அதாவது, தைல தாரையைப் போல் (அதாவது, எண்ணெயை பெருக விட்டால் இடைவெளி இல்லாமல் சீராக விழுவது போல்), எப்பொழுதும் ஸர்வேஸ்வரனான கண்ணனைப் பற்றியே, நினைவில் இடைவெளி அற்று, இந்த பக்தி யோகம் செய்பவனுக்கு இருக்க வேண்டும் என்றான் கண்ணன்.

ஆத, பக்தி யோகம் செயல் ரூபம் என்பதில் ஆட்சேபம் இருக்க முடியாது.

அதற்கு மாற்றாக, சரணாகதி அநுஷ்டானத்தை இந்த ஸ்லோகத்தில் விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 66 வது ஸ்லோகம் -

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

அதாவது,

'மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

இந்த பக்தி யோகம் செய்பவனுக்கு, தைல தாரையைப் போல் (அதாவது, எண்ணெயை பெருக விட்டால் இடைவெளி இல்லாமல் சீராக விழுவது போல்) எப்பொழுதும் ஸர்வேஸ்வரனான கண்ணனைப் பற்றியே, நினைவு இருக்க வேண்டும் என்று கண்ணன் முன் ஸ்லோகத்தில் கூறியதைக் கேட்ட அர்ஜுனன் சோகத்தை அடைந்தான். இந்த மாதிரியான த்யானம் மிகக் கடினம் என்பதால் ஏற்பட்ட சோகம் இது.

அர்ஜுனன் சோகம் கொண்டது, மாசுச: அதாவது 'சோகப் படாதே', என்ற கண்ணனின் இந்த ஸ்லோகத்தின் வார்த்தைகளால் தெளிவாகிறது. சோகம் உள்ளவனைத் தானே சோகப்படாதே என்று தேற்ற முடியும்!

இந்த அர்ஜுனனின் சோகத்தை போக்கும் விதத்தில், பக்தி யோகம் எனும் செயலை விடுத்து வேறொரு உபாயத்தை விளக்கும் போது, அதுவும் செயல் ரூபமானதாகத் தானே கொள்ள வேண்டும்.

இந்த ஸம்வாதத்தில், அஹம் (நான்) மற்றும் த்வா (உன்னுடைய) எனும் பதங்களைக் கொண்டு, உத்தம மற்றும் மத்யம புருஷ நிர்தேசம் தெளிவு. இதனால், தெளிவாக விகல்பமாக வேறொரு செயலைச் சொல்லும் போது, மனோ வ்யாபாரமாக ஊகிக்க வழி இல்லை.

அப்படி அது மனோ வ்யாபாரமாக இருக்குமேயானால் மாம் ஏகம் சரணம் வ்ரஜ எனும் இடத்தில் மாம் ஏகம் ஸதா ஸ்மர என்றல்லவா கண்ணன் சொல்லி இருக்க வேண்டும்.

மேலும், இவ்விஷயத்தை மற்ற ப்ரமாணங்களோடு ஒப்பிட்டு பார்க்கும் போது, பகவத் ராமானுஜரின் ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய, கத்ய நிர்தேசம், ஸாத்யோபாய அநுஷ்டானம் அங்க அங்கி பூர்வகமாக விதிக்கப் படுவதாகவே சொல்லுகிறது. மனோ வ்யாபாரம் எனும் விளக்கம் ப்ரமாண விரோதம். வெறும் யுக்தி வாதம். நிராகரிக்க வேண்டியது.

3. த்வய மந்திர அர்த்தத்தை ப்ரதிபலிக்கும் சரமஸ்லோக வ்ரஜ பதம் பற்றி காண்போம்.

சரணம் வ்ரஜ (சரணமாக பற்று) எனும் கண்ணன் வரிகளுக்கு அநுகுணமாக த்வய மந்திரத்தில் சரணம் ப்ரபத்யே (சரணமாக பற்றுகிறேன்) எனும் படியாக உள்ளது. ஆக, சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷ ஸாதனம் என்பதாயிற்று.

த்வய மந்திரத்தில் அனைத்து அங்கங்களோடு கூடிய அங்கி ஸ்வரூபம் சரணாகதி அநுஷ்டானத்தைத் தெளிவு படுத்துகிறது.

நாரயண சப்தத்தினால், தத்புருஷ பஹுவ்ருஹி ஸமாஸங்களைக் கொண்டு, ஸர்வ ஆதாரத்வமும் ஸர்வ அந்தர்யாமித்வமும் ஸர்வேஸ்வரனுக்கு ஸித்திப்பதனால், ஆனுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதி கூல்ய வர்ஜனமும் சொன்னபடியாயிற்று.

சரணம் ப்ரபத்யே எனும் உத்தம புருஷ நிர்தேசத்தினால், அதாவது 'நான் சரணமாக பற்றுகிறேன்' என்பதால், மஹா விஸ்வாஸமும் கார்பண்யமும் ஸித்தித்ததாயிற்று.

கோப்த்ருத்வ வரணமாவது இந்த த்வய மந்திர முதல் வரியில், உபாயத்வ ப்ரார்த்தனையாக அமைவதால், சொன்னபடியாயிற்று.

ஸர்வேஸ்வரன் தானே அருளிய பகவத் கீதையில், (18-62)

தமேவ சரணம் கச்ச ஸர்வ பாவேன பாரத தத் ப்ரஸாத் பராம் சாந்திம் ஸ்தானம் ப்ராப்யஸி சாச்வதம்

அருளியபடி,

அனைத்து ப்ரகாரங்களாலும், ஸர்வேஸ்வரனை சரணமாக பற்றி நிரந்தரமான பலனைப் பெறுவாய்,

என்றபடி, ரக்ஷக ப்ரார்த்தனையை எதிர் பார்க்கிறான் அவன் என்பது தெளிவு.

இது பக்தி யோகத்தை விளக்கும் சந்தர்ப்பம். அதனால் முக்குணங்களாலான சரீர சம்பத்தத்தினால் பக்தி யோகத்திற்கு தடையான பாப புண்ய கர்மாக்கள் விலக 'சரணாகதி' அங்க ப்ரபத்தியாக விதிக்கப் படுகிறது. இது கர்ம யோகத்திற்கும் மற்றும் ஞான யோகத்திற்கும் பொருந்தும். இந்த சரணாகதியை ஸத்வாரக ப்ரபத்தி என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதாவது, இந்த சரணாகதி, பக்தி யோகத்தை இடையிட்டு கொண்டு மோக்ஷ பலனை அடைய செய்கிறது.

ஆக, எந்த ஒரு சரணாகதிக்கும், ரஷக ப்ரார்த்தனையான கோப்த்ருத்வரணம் விதிக்கப் படுகிறது.

4. ஸர்வ அங்கங்களோடு கூடிய சரணாகதி அநுஷ்டானம், அங்கி பரமான, வ்ரஜ பத விளக்கம்.

ஆத்ம நிக்ஷேபம் எனும் அங்கி ஸ்வரூபமான சரணாகதி, மஹா விஸ்வாஸத்தோடு செய்யப் படும ரக்ஷக ப்ரார்தனையான சரணம் ப்ரபத்யே எனும் உத்தம புருஷ நிர்தேசத்தினால், விவக்ஷிதம்.

அநன்ய ஸாத்யே ஸ்வபீஷ்டே மஹாவிஸ்வாஸ பூர்வகம் ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: சரணாகதி:

என்கிற ப்ரமாணத்தால்,

தன்னால் ஒரு பலனைப் பெற்றுக் கொள்ள.முடியாத போது, மஹாவிஸ்வாஸத்தோடு ஒரு ஸமர்த்தனை உபாயமாக வேண்டுவதே ஆத்ம நிக்ஷேபம் எனும் சரணாகதி,

எனத் தெளிவாகிறது.

ஆக, **வ்ரஜ** என்பது மனோ வ்யாபாரமாகாது; செயல் வடிவம் கொண்ட அநுஷ்டானமே என்பது ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

வ்ரஜ என்கிற சப்தமும் ப்ரபத்யே என்கிற இடத்தில் அறுதியிட்ட ஸபரிகர ஆத்ம நிக்ஷேபத்தையே சொல்லுகிறது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

வ்ரஜ என்கிற சப்தமும் - சரமஸ்லோகத்தில் கண்ணனால் உரைக்கப் பட்ட வ்ரஜ என்னும் சொல்லின் அர்த்தமாவது

ப்ரபத்யே என்கிற இடத்தில் அறுதியிட்ட - த்வய மந்திர முதல் வரியில் சொல்லப்பட்ட ப்ரபத்யே எனும் பதம் அர்த்தமாகவே

ஸபரிகர ஆத்ம நிக்ஷேபத்தையே சொல்லுகிறது - ஐந்து அங்கங்களோடு கூடிய ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணம் எனும் அங்கியையே சொல்வதாகிறது.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், "வ்ரஜ" எனும் பதத்தினால், சரணாகதி அநுஷ்டான பரமன்று மனோ வ்யாபாரமே என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

72. சரணாகதிக்கு அல்லது ஸர்வேஸ்வரன் மோக்ஷம் கொடான்

1. ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய் மொழி :

உலகம் உண்ட பெருவாயா! உலப்பில் கீர்த்தி யம்மானே! நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி ! நெடியாய் அடியேன் ஆருயிரே! திலதம் உலகுக்கு ஆய் நின்ற திருவேங்கடத்து எம்பெருமானே ! குலதொல் அடியேன் உன் பாதம் கூடும் ஆறு கூறாயே

2. பத உரை :

உலகம் உண்ட பெரு வாயா - ப்ரளய காலத்தில் உலகங்களையெல்லாம் வயிற்றில் தரிப்பவனே

நிலவும் சுடர் சூழ் ஒளி மூர்த்தி - அப்ராக்ருத திவ்ய திருமேனி உடையவனே!

நெடியாய் - உயர்ந்தவனே!

அடியேன் ஆர் உயிரே - அடியேனுக்கு ஆதாரமாயும் நியாம்யனும் சேஷியானவனே !

உலகுக்கு திலதம் ஆய் நின்ற திருவேங்கடத்து - உலக மக்களை உஜ்ஜீவிக்க செய்ய திலகம் போன்றதான திருமலையிலே விளங்குகின்ற

எம்பெருமானே - ஸ்வாமியே!

குலம் தொல் அடியேன் - பரம்பரையாக உனக்கே அடிமைப் பட்டிருப்பவனான அடியேன்

உன பாதம் - உனது திருவடிகளை

கூடும் ஆறு - வந்து சேறும்படியை

அருளிச் செய்யவேணும்.

3. விளக்கம் :

தன் நிர்ஹேதுக க்ருபையாலே ப்ரளய காலத்திலும் ஸகல ஜீவர்களையும் ரக்ஷிப்பவனான அகார வாச்யனான எம்பெருமான் என்பதாயிற்று.

அகிஞ்சனர்கள் மோக்ஷ காரணமாக, ஸர்வேஸ்வரன் திருவடிகளை சரணமாய்ப் பற்ற அப்ராக்ருத திவ்ய திருமேனி உடைய பரம ஸௌலப்யம் உடையவனாவனே என்பதாயிற்று

தான் சாஸ்த்திரத்தில் விதிப்படி ஓர் மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிக்க, ஸர்வேஸ்வரனை தடுக்க வல்லார் ஒருவரும் கிடையது எனும்படி பரத்வத்தினால் உயர்ந்து நிற்பவன் என்பதாயிற்று.

இப்படிப்பட்ட பரத்வம் மற்றும் ஸௌலப்யத்தைக் கொண்ட ஸர்வேஸ்வரனான சேஷியை

ஆனந்தமயனான எம்பெருமான் ஸகல ஜீவர்களும் உஜ்ஜீவிக்க திருமலையில் எழுந்தருளி

பரம்பரையாக ஸ்ரீவைஷ்ணவ குலத் தோன்றல் அனைவரும் அந்த எம்பெருமான் திருவடிகளில், அவன் விதித்த சரணாகதியை அநுஷ்டித்து

எப்போது அடியேன் தேஹ அவஸாநம் ஏற்பட்டு உன் திருவடியை அடைவேனோ, என்றபடி.

ஆக, சரணாகதி அநுஷ்டித்து பரம புருஷார்த்தத்திற்கு காத்திருக்கும் நிலை விளக்கப் பட்டிருக்கிறது இந்த பதிகத்தில்.

4. கேள்விக்கான பதில் :

இப்பதிகத்தில் கடைசி பாசுரமாவது:

அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின் என்று என்று அருள் கொடுக்கும் படிக்கேழ் இல்லாப் பெருமானைப் பழனக் குருகூர்ச் சடகோபன், முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங் கடத்துக்கு இவை பத்தும், பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே

முடிப்பான் சொன்ன ஆயிரத்துத் திருவேங் கடத்துக்கு இவை பத்தும் - இப்பதிக ஆழ்வார் பாசுரங்களை அநுஸந்திப்பதால்

அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் - சாஸ்த்திரம் விதித்த சரணாகதியை எம்பெருமான் திருவடிகளில் அநுஷ்டித்தவர்களாய்

பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே - இங்குள்ள காலம் அவன் நினைவாலும், பரமபதத்தை அடைந்தவாறே ஸாக்ஷாதாகவும், அவனை அநுபவித்து, முக்தாத்மா மீண்டும் கர்ம ஸம்பந்தமாக இப்புவிக்கு திரும்புவதில்லை என்றபடி.

ஆழ்வார் பாசுரங்களுக்கு உபநிஷத் மற்றும் பகவத் ராமானுஜ க்ரந்த விரோதமாக அர்த்தம் அமைப்பது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தமாகாது.

விபீஷணன், ராவண அரசவையை விட்டு கிளம்பிய உடனே,

உத்பபாதா கதா பாணி சதுர்பிஸ் ஸஹ ராக்ஷஸை:

என்பதால் நான்கு ராக்ஷஸர்களோடு கிளம்பினான். அந்த அரசவையில் நடந்த விவாதத்தை கேட்டு, விபீஷணன் எண்ணங்களை ஏற்று, அந்த ராக்ஷஸர்கள் கிளம்பியதாக தாத்பர்யம். ஆக, விபீஷண சரணாகதியில் இவர்களின் சரணாகதியும் அந்தர்கதமாயிற்று.

விபீஷண சரணாகதியை ஏற்ற ஸ்ரீராமனின் வரி :

அனயனம் ஹரி ஸ்ரேஷ்ட தத்தமஸ்யாம் அபயம் மயா. விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவணஸ்வயம்

அதாவது, ' வானர தலைவனே! விபீஷணனை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன் எனக் கூறு. நீ விபீஷணனை சந்திக்கும் தருணத்தில், அங்கு ராவணன், மனம் மாறி வந்திருந்தானேயானால், அவனையும் நான் மன்னித்து ஏற்றுக் கொண்டதாக கூறுவாயாக'. இவ்வாறு ஸ்ரீராமன் பதிலளித்தான்.

ராவணனையே ஏற்ற ஸ்ரீராமன் விபீஷணனோடு வந்த ராக்ஷஸர்களையும் ஏற்றான் என்பது கைமுதிக ந்யாய ஸித்தம்.

சரணாகதி அநுஷ்டானமாவது **ஆத்ம ஆத்மீய பர ஸமர்ப்பணம்** ஆகும். அதாவது தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் செய்யப்படும் சரணாகதி அநுஷ்டானம்.

இது **ஆசார்ய நிஷ்டை** ப்ரகாரம்.

அவ்வழியிலே, இக்காலத்திலும் கூட, தன் நினைவை இழந்து மரண படுக்கையில் இருப்பவருக்கும், தான் அங்கங்களை அநுஷ்டியாதிருக்க, **ஆசார்ய நிஷ்டை** மூலமாக சரணாகதி அநுஷ்டானம் அவர்களுக்கு செய்விக்கப் படுகிறது அன்றோ!

ப்ராபத்திக்கல்லது ஸர்வேஸ்வரன் மோக்ஷம் கொடான் என்பது ப்ரமாண ஸித்தம், என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஸ்வாமி தேசிகனின் **அதிகாரி விபாகதிகாரம்** வரிகள்:

ப்ரபன்னாத் அந்யேஷாம் ந திஷ்டி முகுந்தோ நிஜபதம்

ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேஸ்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்க இரங்கான்

அதாவது, பக்தி யோகத்திற்கு அங்க ப்ரபத்தியாகவோ அல்லது ஸ்வதந்தர ப்ரபத்தி நிஷ்டன் விஷயத்தில் மோக்ஷார்த்தமாகவோ, சரணாகதி அநுஷ்டானம் தேவையாகிறது என்பது ப்ரமாண ஸித்தம். ஸ்ரீ ராமானுஜ ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்ய சரணாகதி கத்ய க்ரந்த நிர்தேசம். இதனால் தெளிய வேண்டுவது என்னவென்றால், ஆப்ரிக்க கண்டத்தில் உள்ளவனுக்கும் சரணாகதி அநுஷ்டானத்தால் மோக்ஷம் உண்டு; பகவத் க்ஷேத்ரமான திருவல்லிக்கேணியில் உள்ளவனுக்கும் சரணாகதி அநுஷ்டானம் இல்லையேல் மோக்ஷம் பெற இயலாது, என்பதேயாகும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

73. சரணாகதி அஸக்ருத் கர்த்தவ்யம் என்பது ப்ரமாண விரோதம்

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரணாகதி அநுஷ்டானத்தை ஒரே முறை அநுஷ்டிக்க வேண்டியிருப்பதை மறுப்பது ப்ரமாண விரோதம்.

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவான் தன் திருவாக்கினால் அருளப்பட்ட சரணாகதி அநுஷ்டானம் ஒரே முறை அநுஷ்டிக்க வேண்டியிருக்க, அதை ஸித்தோபாய ப்ரதிபத்தியாக யாவத் ஆயுஷம் நினைத்திருக்க வேண்டுவது என்று ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

ஸித்தோபாயனான எம்பெருமான் மோக்ஷ காரணமாக இருக்க, சரணாகதியாவது, எம்பெருமானோடு உள்ள தனது சேஷ -சேஷி சம்பந்தத்தை வாழ் நாள் முழுவதும் மனதில் தரிக்க வேண்டுவதாக ஓர் யுக்தி வாதம் செய்து பூர்வபக்ஷிகள் ஆட்சேபிப்பர்.

சரணாகதி, உபநிஷத், ஸ்ம்ருதி, பாஞ்சராத்ரம் போன்ற சாஸ்த்திர பலத்தினால் ஸக்ருத் கர்த்தவ்யமாய் இருக்க, அதை மறுப்பர் பூர்வ பக்ஷிகள்.

2. சரணாகதி அநுஷ்டான பரமே; சம்பந்த ஞானமான மனோ வ்யாபாரம் அன்று, என்பது சாஸ்த்திர விதி:

ஸ்ரீமத் ராமாயணத்தில், விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில், சுக்ரீவாதிகளை தெளிவிக்கும் பொருட்டு, சரணாகதி அநுஷ்டானம் விளக்கப் படுகிறது.

ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் சரணம் கத: அரி: ப்ராணான் பரித்யேஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மனா

ஒருவன், பலனை உடனடியாக விரும்பி செய்யும் ஆர்த்த ப்ரபத்தியோ அல்லது குறிப்பிட்ட காலத்தில் பலன் பெற வேண்டி செய்யும் த்ருப்த ப்ரபத்தியோ, அநுஷ்டித்தானேயானால், அவன் விரோதியானாலும் உயிரைக் கொடுத்தாவது ரக்ஷிக்க வேண்டும், என்பதாகிறது.

இதனால் சரணாகதி என்பது பலனைப் ப்ரார்த்தித்து செய்ய வேண்டிய அநுஷ்டானமே அன்றி சம்பந்த ஞானம் மட்டுமே போதுமானதாகாது என உணரலாம்.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (10-13)

ஆஹுஸ் த்வாம் ரிஷயஸ் ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ் ததா. அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீஷி மே

அதாவது,

‘பகவானுடைய பரத்வத்தை நாரதர், அஸிதர், தேவலர், வ்யாஸர் கூறுகிறார்கள் என்று நீ உபதேசித்திருக்கிறாய் - இது அர்ஜுனன் சொல்.’

தேவலருடைய மந்த விச்வாசத்தை மஹாவிச்வாசமாக்கி அவருடைய சரணாகதியை ஏற்றுக் கொண்டதை உதாஹரித்து ஸர்வேஸ்வரனுடைய பரத்வத்தை இங்கு விளக்கப் பட்டிருக்கிறது.

மேற் கூறிய பகவத் கீதை ஸ்லோகத்தில், அர்ஜுனன் தேவலரை ரிஷியாக கொண்டாடி அவர் வரலாற்றையும் உதாஹரித்து கண்ணனிடம் வினவுகிறான்.

தேவலர் ஒரு முனிவராக இருந்து வந்தார். இருந்தாலும், பல ஜன்மங்கள் எடுத்து சம்சாரத்தால் உழன்றவர். அவருடைய ஸத் ஸங்கத்தானால், பிறகு ஒரு பிறவியில் அவருக்கு சாண்டில்ய மஹரிஷியின் அநுக்ரஹம் கிடைக்கப் பெற்றது. சாண்டில்ய மஹரிஷி முக்காலமும் உணர்ந்த ஞானி. அவர் தேவலருக்கு உபதேசிக்கலானார். ‘தேவலரே ! உமக்கு முக்தி பெற சரணாகதியில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் மஹா விஸ்வாஸம் இன்னும் ஏற்படவில்லை. அதனால் சரணாகதி அநுஷ்டானத்தை செய்யாமல் பிறவிகளை வீணாக்குகிறீர்’. அதனால் இந்த பிறவியில் சரணாகதி அநுஷ்டானத்தை செய்து முடிக்க உபதேசிக்கிறார். ‘பரம காருணிகனான ஸர்வேஸ்வரன் உனது நம்பிக்கையை மஹா விஸ்வாஸமாக மாற்றி உமக்கு மோக்ஷம் அளிப்பான்’ என்றும் உபதேசித்தார்.

இதுவே, சாண்டிலி ஸம்ருதியில்,

வ்ருத்தைவ பவதோ யாதா பூயஸி ஜன்ம ஸந்ததி: தஸ்யாமன்யதாம் ஜன்ம ஸந்சின்தய சரணம் வ்ரஜ:

நீர் அநேக ஜன்மங்களை வீணாக கழித்து விட்டீர். ஸர்வேஸ்வரனான எம்பெருமானிடத்தில் சரணாகதி அநுஷ்டானம் செய், என மந்த விச்வாசமுடைய தேவலரை சாண்டில்ய மஹரிஷி பணித்தார்.

அதாவது, மோக்ஷத்தை அடைய பகவானின் மேன்மைகளை உணர்ந்தால் போதாது, அது அநுஷ்டானத்தில் முடிய வேண்டும் என்று இந்த சரித்திரம் உணர்த்துகிறது. முதல் முயற்சியை தொடங்கினால் மற்றதை பகவான் பார்த்துக் கொள்வான் என்று தாத்பர்யம்.

3. சரணாகதி ஸக்ருத் கர்தவ்யம் என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸ்ரீமத் ராமாயண வரிகளால் உணர வேண்டியது:

பருஹ்மா ஸ்வயம்பூ: சதுரானநோ வா ருத்ர: த்ரிநேத்ர: த்ரிபுராந்தகோ வா இந்த்ரோ மஹேந்த்ர: ஸுரநாயகோவா த்ராதும் ந ஷக்தா யுதி ராம வத்யம்

அதாவது, ‘போரில் ஸ்ரீராமன் கொல்ல உத்தேசித்தவனை, ஸர்வேஸ்வரன் நாபியிலிருந்து உண்டான ப்ருஹ்மாவாலும் ரக்ஷிக்க முடியாது. முக்கண்ணனான மூன்று புரமும் நாசம் செய்த ருத்ரனாலும் ரக்ஷிக்க முடியாது. தேவாதிபதியான இந்த்ரனாலும் ரக்ஷிக்க முடியாது’ என்ற ஸ்ரீமத் ராமாயண வசனம் அவனுடைய வல்லமையை உணர்த்துகிறது.

இவ்வளவு வல்லமை வாய்ந்த ஸ்ரீராமன்,

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீ திச யாசதே அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம

என விபீஷண சரணாகதியின் போது உரைக்கிறான்.

அதாவது, 'ஒரு முறை சரணாகதி செய்தவனுக்கு, அதாவது நான் உன்னுடையவன் என்றவனுக்கு, நான் எல்லா விதமான பயங்களிலிருந்து விடுவிக்கிறேன்' என்கிறான் ஸ்ரீராமன்.

விஷ்ணு தர்மத்தில் சௌநக மஹரிஷியின் வரிகள்:

துர்க சம்சார காந்தாரம் அபார அபிதாவதம். ஏக: க்ருஷ்ண நமஸ்காரோ முக்தி தீரஸ்ய தேசிக:

அதாவது,

சம்சாரமாகிய கரையில்லாத காட்டில் திரிபவனுக்கு க்ருஷ்ணனைக் குறித்த ஒரு நமஸ்காரம் மோக்ஷத்தை அளிக்கும்.

இங்கு சொல்லப் பட்ட நம: எனும் பதம் சரணாகதி அநுஷ்டானத்தையே குறிக்கிறது.

மந்த்ரராஜபத ஸ்தோத்திரத்தில்,

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயா ஆத்ம நிவேதனம்

எனப்படுகிறது.

அதாவது

நமஸ்காரம் என்பதான ஆத்மசமபர்ப்பணத்தை யாரிடம் செய்து, தன்னுடைய துக்கம் அனைத்தும் நீங்கப் பெற்று, அடையவேட்டிய அனைத்தையும் அடைகின்றானோ அந்த ஸர்வேஸ்வரனை வணங்குகிறேன்.

ஆக, சரணாகதி அநுஷ்டானம் ஸக்ருத் கர்தவ்யம் என்பது பாரமாண ஸித்தம்.

4. சரணாகதி அநுஷ்டானம் ப்ருஹ்மாஸ்த்திர ந்யாயத்தாலே மற்றுமொரு முறை அநுஷ்டிப்பதை ஏற்காது.

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத் உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேத தேவ ஹி

என்கிறது சாஸ்த்ரம்.

அதாவது, மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான ப்ராயசித்தத்தை (பரிஹாரத்தை) உடனடியாக செய்ய வேண்டும். அப்படி பரிஹாரமாக செய்ய வேண்டிய செயல் என்ன என்றால் எம்பெருமானிடம் மன்னிப்பு கோருவதாகிய 'ப்ராயச்சித்த சரணாகதி' ஆகும்.

மோக்ஷ பலனுக்காக சரணாகதியை அநுஷ்டித்த பின்னர் மோக்ஷத்திற்கு வழியாக எண்ணி வேறு எதைச் செய்தாலும் அதுவும் பாபமே.

சரணாகதன் செய்யும் அனைத்து பகவத், பாகவத, ஆசார்ய கைங்கர்யங்களும் எம்பெருமானின் உகப்பிற்காகவே அன்றி மோக்ஷ காரணமாக அல்ல, என்ற தெளிவு வேண்டும்.

ஆக, சரணாகதி அநுஷ்டானம், ப்ருஹ்மாஸ்த்திரம் வேறொரு அஸ்த்திர பிரயோகத்தை ஏற்காதோ, அது போல, வேறொரு உபாயத்தை ஏற்காது.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

ஸக்ருத் க்ருத: சாஸ்த்ரார்த்த: என்கிற நிர்ணயத்துக்கு உபாஸநத்திற் போலே இங்கு ஆவ்ருத்தி வேண்டும் படி அபவாதம் இல்லை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஸக்ருத் க்ருத: சாஸ்த்ரார்த்த: - சாஸ்த்திரம் விதித்த செயலை ஒரு முறை செய்தாலே அது முழுமை பெற்று விடும்

என்கிற நிர்ணயத்துக்கு - என்பதாகிற விதி வாக்யத்திற்கு

உபாஸநத்திற் போலே - பக்தி யோகம் போலே

இங்கு ஆவ்ருத்தி வேண்டும் படி - சரணாகதி அநுஷ்டானத்தை மீண்டும் மீண்டும் செய்ய

அபவாதம் இல்லை - கீழ் கூறிய ந்யாயத்தைத் தடுக்கும் வசனம் சாஸ்த்திரத்தில் இல்லை

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், சரணாகதி அநுஷ்டானத்தை ஒரே முறை அநுஷ்டிக்க வேண்டியிருப்பதை மறுப்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

74. பரதந்த்ர ஜீவனுக்கு சரணாகதி விதிக்கலாகுமோ?

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், அத்யந்த பரதந்தரனான ஜீவனுக்கு சரணாகதி அநுஷ்டானம் விதிக்கலாகாது என்பது ப்ரமாண விரோதம்.

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், மாம் ஏகம் சரணம் வ்ரஜ என சரணாகதியை அகிஞ்சனனுக்கு விதித்திருக்க, அத்யந்த பரதந்தரனான ஜீவனுக்கு சரணாகதி அநுஷ்டானம் விதிக்கலாகாது என்று ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

ஸித்தோபாயனான எம்பெருமான் மோக்ஷ காரணமாக இருக்க, சரணாகதியாவது, எம்பெருமானோடு உள்ள தனது சேஷ -சேஷி சம்பந்தத்தை வாழ் நாள் முழுவதும் மனதில் தரிக்க வேண்டுவதாக மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்பதன் பொருளாகுமே அன்றி, அத்யந்த பரதந்திரனான ஜீவனுக்கு ஓர் உபாயத்தை விதித்ததாகாது என யுக்தி வாதம் செய்து பூர்வபக்ஷிகள் ஆட்சேபிப்பர்.

சரணாகதி, உபநிஷத், ஸ்ம்ருதி, பாஞ்சராத்ரம் போன்ற சாஸ்த்திர பலத்தினால் கர்த்தவ்யமாய் இருக்க, அதை மறுப்பர் பூர்வ பக்ஷிகள்.

2. பகவத் ராமானுஜர் வேதார்த்த ஸங்க்ரஹத்தில், சம்சாரி ஜீவர்களை **ஞான-சிகீர்ஷா-ப்ரயத்நம்** உடையவர்கள் என விளக்கியுள்ளார்.

ஞானமாவது , விஷயத்தை அறியவும், பரிசீலிக்கவும், புலன்களை நியமிக்கவும் உள்ள தன்மை.

சிகீர்ஷா என்பது பலனிலும் அதற்கான செயலிலும் இச்சை கொள்வது

ப்ரயத்ந்மாவது , இச்சை கொண்ட செயலில் முயற்சிப்பது

இதில், **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என அருளிய ஸர்வேஸ்வரனான கண்ணன் தானே, ஜீவன் கர்த்ருத்வம் உடையவன் என பகவத் கீதையில் (18-14) விளக்கியுள்ளான்.

அதிஷ்டானம் ததா கர்தா கரணம் ச ப்ருதக்விதம். விவிதாஸ்ச ப்ருதக்சேஷ்டா தைவம் சைவாத்ர பஞ்சமம்

அதாவது,

‘ஸகல செயல்களுக்கும் காரணங்கள் ஐந்து :

ஜீவன்

சரீரம்

புலன்கள் (மனம் உள்பட)

ப்ராணன்

பரமாத்மா

என்கிறான் கண்ணன்.

பகவத் கீதையில் (18-15)

சரீர வாங்மனோபிர்யத்கர்ம ப்ராரபதே நர: ந்யாயம் வா விபரீதம் வா பஞ்சைதே தஸ்ய ஹேதவ:

அதாவது,

‘சாஸ்த்ரம் சம்மதித்த அல்லது மறுத்த கர்மாக்களை, அந்த விதிப்படி செயலாற்றும் போதும், மேற் கூறிய ஐந்தும் காரணமாகின்றன.’

என்கிறான் கண்ணன்.

இதனால் அறிய வேண்டுவதாவது, ஜீவர்கள் சாஸ்த்திரத்தால் விதிக்கப் பட்டவைகளை செய்தே தீர வேண்டும் என்பதாகிறது. அத்யந்த பாரதந்த்ரிய ஸ்வரூபம் கொண்ட ஜீவர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம் விதிக்கக் கூடுமோ என ஆட்சேபிப்பது, பகவத் கீதையின் இதர ஸ்லோகங்களோடும் விரோதிக்கும்.

3. பகவத் ராமானுஜரின் ஸ்ரீ பாஷ்யம் எனும் க்ரந்தத்தில், ப்ருஹ்ம ஸுத்ர வ்யாக்யானம் பண்ணி தெளிவிக்கிறார்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ‘ப்ருஹ்ம ஸுத்ரம்’

2ம் அத்யாயம் 3ம் பாதம் 5வது அதிகரணம் 33ம் ஸுத்ரம்

கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்

அதாவது,

சாஸ்த்ரம் கூறுவதால் ஜீவன் கத்ருத்வம் உள்ளவன்.

இந்த ஸுத்ரம் கத்ராதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு விளக்கப்படுவது ஜீவர்கள் செயல் புரியும் தன்மை உடையவர்கள் என்று. ஏன் ஏன்றால், ‘இதைச் செய்’ என்றும் ‘இதை செய்யாதே’ என்றும் ஆணையிடும் சாஸத்ரத்திற்கு ப்ரயோஜனம் வேண்டுவதாகையால்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய ‘ப்ருஹ்ம ஸுத்ரம்’

2ம் அத்யாயம் 3ம் பாதம் 6வது அதிகரணம் 40ம் ஸுத்ரம்

பராத் து தச்ருதே

அதாவது,

ஜீவனுடைய கத்ருத்வம் பகவத் அதீனம்.

இந்த ஸுத்ரம் பரயத்தாதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு விளக்கப்படுவது ஜீவர்கனின் செயல் புரியும் தன்மை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் ஆதிக்கத்தில் உள்ளது என்று.

இதனால் தெளிய வேண்டுவதாவது, ஜீவர்கள் பராதீன கர்த்ருத்வம் உடையவர்கள். அதாவது, பகவத் ஆணைக்கு இணங்க செயல் புரியும் தன்மை கொண்டவர்கள் என்பதாகும். ஆக, மாம்

ஏகம் சரணம் வ்ரஜ என கண்ணன் நியமிக்கும் போது, அதை செயல்படுத்துவது பாரதந்த்ரிய ஸ்வரூபத்தை உடைய ஜீவர்களுக்கு செய்யக் கூடாதது என யுக்தி வாதம் செய்யும் பக்ஷத்தை நிரசித்ததாகும்.

4. பாரதந்த்ரிய தன்மையை உலக வழக்கிலும் தெளியலாம்; ஒரு வணிக நிறுவனத்தில் பணி புரியும் பணியாளர்கள், அந்த நிறுவனத்தைக் குறித்து பாரதந்த்ரியம் கொண்டவர்களே.

அதனால், அந்த நிர்வாகம் விதித்த பணிகளை செயல் படுத்தாமல் கைவிடுவது, அந்த பணியாளர்களின் பாரதந்த்ரிய ஸ்வரூபத்திற்கு உகந்ததாகுமா?

அவ்வாறு விதித்த பணிகளை, பணியாளர்கள் செயல் படுத்தாத போது, நிர்வாகத்தின் சீற்றத்திற்கு தானே அவர்கள் காரணமாவர்.

அது போல, சாஸ்த்திரத்திலும், பகவான் தன் திருவாக்கினாலே அருளியவற்றையும், தான் பரதந்திரன் என ஜீவர்கள் கை விடும் போது, அது ஸர்வேஸ்வரனின் நிக்ரஹத்திற்கே காரணமாகும். அதனால் ப்ரத்யவாயமும் உண்டென்று உணரலாம்.

இதையே ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹத்தில்,

அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணத ப்ருதக் லஷணம் சாஸ்திர சித்தஸ்ய த்ரிதா சப்தத சோதிதம்

என ஆளவந்தார் அருளிச் செய்தார்.

அதாவது, சாஸ்த்ரத்திற்கு உட்படாத செயல்கள் அனைத்தும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும் என்றும் சாஸ்த்திரம் விதித்தவற்றை மறுக்காமல் செய்து போவதே ஜீவர்களின் லக்ஷணம், என அருளினார்.

சட்டம் ஒழுங்கு கெடாமால் இருக்கவும், குலங்களை காப்பதற்காகவும், லோகத்தை நல் வழியில் நிறுத்துவதற்காகவும் ஏற்படுத்தப் பட்ட சாஸ்த்ரங்களில் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட வர்ண ஆஸ்ரமத்துக்கான, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின், ஆணையை மீறக் கூடாது என்கிறது சாஸ்த்ரங்கள்.

ஆக, சாஸ்த்திர விதியை மீறுவதும், சாஸ்த்திர விதிக்கு குதர்க்கமாக, பகவத் ராமானுஜ ஸித்தாந்த வழியை மறந்தும், அர்த்த நிர்ணயம் செய்வதும் அசுரத் தன்மை உள்ளவைகளாகும். தூர பரிஹரணீயம்.

கண்ணன் தன் திருவாக்கினாலே அருளிய மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்பதற்கு, வேத விரோதமாக, சாரீரக சாஸ்த்திர விரோதமாக, பாஞ்சராத்ர பகவத் சாஸ்த்திர விரோதமாக, கீதா பாஷ்ய விரோதமாக, அர்த்தம் கற்பிப்பது அசுரச் செயல் என்பது ஸம்ப்ரதாய நிர்தேசம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

க்ரியாஸ்ரயத்வ ரூபமான கத்ருத்வம் சேதன அசேதன ஸாதாரணம். ப்ரயத்னாஸ்ரயத்வ ரூபமான கத்ருத்வம் சேதனைகாந்தம். ப்ரயத்னமாவது சரீராதி ப்ரேரண ஹேதுவான புத்தி விசேஷம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

க்ரியாஸ்ரயத்வ ரூபமான கத்ருத்வம் - செயல் புரியும் தன்மை

சேதன அசேதன ஸாதாரணம் - சேதன அசேதனர்களுக்கு பொதுவானது.

ப்ரயத்னாஸ்ரயத்வ ரூபமான கத்ருத்வம் - முயற்சியோடு கூடிய செயல் புரியும் தன்மை

சேதனைகாந்தம் - சேதனர்களுக்கே உரியது; அசேதனங்களுக்கு கிடையாது.

ப்ரயத்னமாவது - முயற்சியாவது

சரீராதி ப்ரேரண - ஜீவனை ஒழிந்த மற்ற அசேதனமான சரீரத்தையும் புலன்களையும் செயல் புரிய நியமிக்க

ஹேதுவான புத்தி விசேஷம் - புத்தி காரணமாகிறது. (புத்தி என்பது ஞானத்தின் ஒரு நிலையான முடிவெடுக்கும் தன்மை)

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், அத்யந்த பரதந்தரனான ஜீவனுக்கு சரணாகதி அநுஷ்டானம் விதிக்கலாகாது என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

75. <u>பிள்ளான் வரி ப்ரபத்தி அநுஷ்டானத்தை நிஷேதிக்கிறதோ?</u>

ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில் விதித்த பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் ஸ்வரூப விருத்தம் என பிள்ளான் வரிகளைக் கொண்டு ஆட்சேபிப்பது ஸர்வ ப்ரமாண விரோதம்.

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில் விதித்த பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் ஸ்வரூப விருத்தம் என திருக் குருகை பிரான் பிள்ளானின் பகவத் விஷய வரிகளைக் கொண்டு ஆட்சேபித்து ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

ஸித்தோபாயனான எம்பெருமான் மோக்ஷ காரணமாக இருக்க, பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானங்களாவது, எம்பெருமானோடு உள்ள தனது சேஷ -சேஷி சம்பந்தத்தை உணராது அஹங்காரத்தினால் ஏற்படுவது என யுக்தி வாதம் செய்து பூர்வபக்ஷிகள் ஆட்சேபிப்பர்.

பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம், உபநிஷத், ஸ்ம்ருதி, பாஞ்சராத்ரம் போன்ற சாஸ்த்திர பலத்தினால் கர்த்தவ்யமாய் இருக்க, அதை மறுப்பர் பூர்வ பக்ஷிகள்.

2. திருக்குருகை பிள்ளானின் திருவாராயிரப்படி ஆழ்வார் பாசுர விளக்கம்.

திருக் குருகை பிரான் பிள்ளான், பகவத் ராமானுஜரின் தாய் மாமனான, திருமலைப் பிள்ளையின் புத்ரன். பிள்ளான், பகவத் ராமானுஜரின் சிஷ்யராக இருந்து சாஸ்த்திர விஷயங்களை க்ரஹித்தவர்.

பகவத் ராமானுஜர், தன் ப்ராசார்யனான ஸ்ரீ ஆளவந்தாருக்கு அளித்த வாக்குப் படி, ஆழ்வார் பாசுர விளக்கங்களை தன் சிஷ்யரான பிள்ளானைக் கொண்டு அருளிச் செய்தார்.

ஆழ்வார் பாசுரங்களுக்கு, பல வைணவ மரபைச் சேர்ந்தவர்கள், விளக்க உரையை அருளியுள்ளனர்:

திருக்குருகைப்பிரான் பிள்ளை அருளிய திரு ஆறாயிரப்படி

நஞ்சீயர் எழுதிய ஒன்பதினாயிரப்படி

வாதிகேசரி - அழகிய மணவாளப் பெருமாள் ஜீயர் எழுதிய பன்னிரண்டாயிரப்படி

பெரியவாச்சான்பிள்ளையின் இருபத்தி நாலாயிரப்படி

நம்பிள்ளை காலட்சேபமாகச் சொல்ல வடக்கு திருவீதி பிள்ளை பட்டோலை கொண்டு அருளியது முப்பத்தாறாயிரப்படி

இந்த ஐந்தில், நம்பிள்ளை சொல்ல திருவீதிப்பிள்ளை எழுதிய முப்பத்தாறாயிரப்படி உரைக்கு மட்டும்

ஈடு என்னும் சிறப்பு அடைமொழி உண்டு.

இவற்றில் ஈடு என்னும் சொல் செய்யுளுக்கு ஈடாக எழுதப்பட்டுள்ள உரை என்பதனைக் குறிக்கும்.

இவற்றில் ‘படி’ என்னும் சொல் ஓலையில் எழுதப்பட்டுள்ள எழுத்தெண்ணிக்கைப் படிவத்தைக் குறிக்கும்.

ஒரு படி என்பது 32 எழுத்துகளைக் குறிக்கும். பிள்ளானின் உரையில், 6000 படிகள் உள்ளதால் இந்நூல் ஆறாயிரப்படி எனப் பெயர் பெற்றது.

ஆக, பிள்ளான்,

திரு ஆறாயிரப் படி

எனும் உரை எழுதினார். அதாவது அதில் 6000x32 எழுத்துகள் இருக்கின்றன.

இந்த வேத ப்ரமாணங்களோடும் ஸ்ரீ ராமானுஜ க்ரந்தங்களோடும் ஒத்த கருத்துக்களைக் கொண்ட திரு ஆறாயிரப் படி எனும் நூல் , ஸ்ரீ ராமானுஜரால் கடாக்ஷித்து அங்கீகரிக்கப் பெற்றது.

3. ஸ்ரீ பிள்ளான் ஸ்ரீ ஸூக்தியான **திரு ஆறாயிரப் படி** ,

தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே; ஈஸ்வரனால் வரும் நன்மை முலைப்பால் போலே

என்ற விளக்கத்துக்கு,

விதிக்கப் பட்ட பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் செய்யத் தகாதது என்ற கருத்து உடையது, என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

அப்படி ஒரு அர்த்தம் கொண்டால், அது ஸகல உபநிஷத், ப்ருஹ்ம ஸூத்ர, புராண வரிகளோடும் விரோதிக்கும்.

பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் எல்லாம் தன்னுடைய பராதீன கர்த்ருத்வத்திலே தாத்பர்யம், என அறிய வேண்டும்.

அதாவது ஜீவர்களுக்கு செயல் புரியும் தன்மை உண்டு; ஆனால் அது பகவத் அதீனம்.

இதையே ப்ருஹ்ம ஸூத்ரங்கள்,

கர்தா சாஸ்த்ராத்தவக்த்வாத்; பராத்து தச்ருதே:

என விளக்குகிறது.

இதுவே ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விளக்கம்.

ஆக, கீதோபநிஷத்தில், கண்ணனால் விதிக்கப் பட்ட, உபாய அநுஷ்டானமாவது,

பஜஸ்வ மாம் என்றும்

மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்றும்

பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷத்திற்கான சாதனம் என தெளிவிக்கிறது.

உபநிஷத்துக்களில் விதிக்கப்பட்ட

நிதித்யாஸிதவ்ய: எனும் பக்தி யோகமும்

மற்றும்

முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே எனும் சரணாகதி அநுஷ்டானமும்

அர்த்தம் அற்றது ஆக்காதபடி பிள்ளான் உரைக்கு விளக்கமளிக்க வேண்டும் அன்றோ!

பல க்ரந்தங்களினால் பகவத் ராமானுஜர் (ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம்) மற்றும் ஸ்வாமி தேசிகன் (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம், விரோத பரிஹாரம்)அருளிச் செய்ததை ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள், ஸத் ஸம்ப்ரதாய பாமரர்களுக்கும், பல காலமா விளக்கி உள்ளனர்.

இப்படி சாஸத்ரங்கள் கூறும் விஷயங்களை சரியாக புரிந்து கொள்ளாமல், ஸ்ரீயப்பதியான நாராயணன், தானே ரக்ஷிப்பான் என்றும், அவன் விதித்த சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதில்லை என்றும் கூறிக் கொண்டும் வெறுமனே இருந்தால், எம்பெருமான் ஒருக் காலும் மோக்ஷத்தை கொடுக்கவே மாட்டான், என்பது ப்ரமாணத்தினால் உணரக் கூடியது.

4. ஆக, ஜாதி, மத, ஸ்தான பேதமின்றி, வேத மார்க்கமான பகவத் ராமானுஜ ஸித்தாந்தமான ஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாயமான சரணாகதி அநுஷ்டானத்தை மோக்ஷோபாயமாக அகிஞ்சனர்களான அனைவரும் அநுஷ்டித்து பலன் பெறலாம்.

ஸ்வாமி தேசிகனின் **அதிகாரி விபாகதிகாரம்** வரிகள்:

ப்ரபன்னாத் அந்யேஷாம் ந திஷ்டதி முகுந்தோ நிஜபதம்

ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேஸ்வரன் பரம புருஷார்த்தம் கொடுக்க இரங்கான்

அதாவது, பக்தி யோகத்திற்கு அங்க ப்ரபத்தியாகவோ அல்லது ஸ்வதந்தர ப்ரபத்தி நிஷ்டன் விஷயத்தில் மோக்ஷார்த்தமாகவோ, சரணாகதி அநுஷ்டானம் தேவையாகிறது என்பது ப்ரமாண ஸித்தம். ஸ்ரீ ராமானுஜ ஸ்ரீ பாஷ்ய கீதா பாஷ்ய சரணாகதி கத்ய க்ரந்த நிர்தேசம்.

இதனால் தெளிய வேண்டுவது என்னவென்றால், ஆப்ரிக்க கண்டத்தில் உள்ளவனுக்கும் சரணாகதி அநுஷ்டானத்தால் மோக்ஷம் உண்டு; பகவத் க்ஷேத்ரமான திருவல்லிக்கேணியில் உள்ளவனுக்கும் சரணாகதி அநுஷ்டானம் இல்லையேல் மோக்ஷம் பெற இயலாது, என்பதேயாகும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இப்படி பக்த்யாதிகளைப் போலே சரணாகதி தர்மமும் கர்தவ்யமாக விதிக்கப் படுகையால் 'தன்னால் வரும் நன்மை விலைப் பால் போலே, ஈஸ்வரனால் வரும் நன்மை முலைப் பால் போலே' என்று பிள்ளான் வார்த்தைக்கு பக்தி ப்ரபத்யாதிகள் எல்லாம் அவனாலே வருகிறனவென்று நினைக்க வேணாடுமென்று தன்னுடைய பராதீன கர்த்ருத்வத்திலே தாத்பர்யம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இப்படி பக்த்யாதிகளைப் போலே சரணாகதி தர்மமும் கர்தவ்யமாக விதிக்கப் படுகையால் - பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் இரண்டுமே அவரவர்கள் அதிகாரத்திற்கு ஏற்ப செய்ய வேண்டுவதாக சாஸ்த்திரங்கள் அறுதியிட்டு கூறுவதால்

தன்னால் வரும் நன்மை விலைப் பால் போலே, ஈஸ்வரனால் வரும் நன்மை முலைப் பால் போலே' என்று பிள்ளான் வார்த்தைக்கு - திருக் குருகை பிரான் பிள்ளானின் பகவத் விஷய

விளக்கத்தில், நாமே நம் முயற்சியால் மட்டுமே பலனைப் பெறுவதாக நினைக்கும் செயலாவது, வெளியில் வாங்கும் பாலோடு ஒக்க மிதமான பலனை மட்டுமே அளிப்பதாயும், முயற்சி ஏதும் அற்ற ஒருவனுக்கு, ஈஸ்வரன் தானே அருளும் போது, அதுவாவது தன் தாய்ப் பாலின் தன்மையை ஒக்க, நோயைத் தீர்க்கும் மருந்து போன்றதாகும் என்கிற விளக்கத்திற்கு

பக்தி ப்ரபத்யாதிகள் எல்லாம் அவனாலே வருகிறனவென்று நினைக்க வேணாடுமென்று - விதிக்கப் பட்டிருக்கிற பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானங்களாவது அவன் செய்விக்க நாம் செய்வதாக ஸாத்வீக த்யாகத்தோடு

தன்னுடைய பராதீன கர்த்ருத்வத்திலே தாத்பர்யம் - செய்ய வேண்டுவதாக ஜீவனின் பகவத் அதீனமான செயல் புரியும் தன்மையைச் சொல்வதில் நோக்கம்.

6. ஆக, ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில் விதித்த பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் ஸ்வரூப விருத்தம் என பிள்ளான் வரிகளைக் கொண்டு ஆட்சேபிப்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

76. ஸ்ரீஆளவந்தார் ப்ரபத்தி அநுஷ்டித்து அதற்காக வருந்தினாரா?

ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்நத்தில் "**ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வா**" என தான் அநுஷ்டித்த சரணாகதிக்கு மன்னிப்பு கோருவதாக ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் அர்த்தம் பண்ணுவர்; அது ப்ரமாண விரோதம்; அது, ஸ்ரீ ஆளவந்தாரின் வரிகளுக்கான விபரீத அர்த்தம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்நத்தில் **ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வா** என தான் அநுஷ்டித்த சரணாகதிக்கு மன்னிப்பு கோருவதாக ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் அர்த்தம் பண்ணுவர்; அதாவது, ஸ்ரீ ஆளவந்தார், யதா சாஸ்த்திரம் பண்ணின ப்ரபத்தியை அபராத கோடியில் சேர்ப்பதால், அது அத்யந்த ப்ரமாண விரோதம்; அது, ஸ்ரீ ஆளவந்தாரின் வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

மஹா ப்ராக்ஞரான் ஸ்ரீ ஆளவந்தார், ஸ்தோத்திர ரத்நம் எனும் க்ரந்தத்தில், முதலில் சாஸ்த்ரீயமாக சரணாகதியை மோக்ஷ காரணமாக அநுஷ்டித்துவிட்டு, பின்பு அந்த சரணாகதியை அநுஷ்டித்தது தவறு என அதே க்ரந்தத்தில் சொல்வதாவது, முறை ஆகாது. ஏனெனில், சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ ஸாதனம் என்பதற்கு ஸ்ருதி, ஸ்ம்ருதி, பாஞ்சராத்ர சாஸ்த்திர ப்ரமாணங்கள் உள்ளன.

2. சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்பது, பகவத் ராமானுஜ க்ரத்த விரோதமான, ஸித்தாந்த ஏகதேசிகளின் அசாஸ்த்ரீயமான கூற்று.

ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் க்ரந்தமான வசன பூஷண எண் : 62

ஆபத்தைப் போக்கிக் கொள்கிறோம் என ப்ரமித்து அத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே வேண்டுவது. அதாவது, எம்பெருமான் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி சம்சாரமாகிற ஆபத்தைப் போக்கிக் கொள்கிறோம் என்று தான் பண்ணுகிற ப்ரபத்தியாலே தன் ஆபத்தைப் போக்கிக் கொள்வதாக ப்ரமித்து ஸ்வரூப நாசமாகிற ஆபத்தை விளைத்துக் கொள்ளாதொழிகையே இவன் செய்ய வேண்டுவது. ஓர் ஆபத்தை பரிஹரித்துக் கொள்ள முயன்று மற்றோர் ஆபத்தை விளைத்துக் கொள்ளாதே இவன் ஸ்வ யத்நத்தில் நின்றும் விலகி இருக்கவே எம்பெருமான் தானே ரக்ஷிக்கும் என்று கருத்து

இக்கருத்து, உபநிஷத் வரிகளோடும், வ்யாஸரின் ப்ருஹ்ம ஸூத்ரங்களோடும், ஸ்ரீராமானுஜரின் கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம் மற்றும் ஸகல சாஸ்த்திரங்களோடும் முரண்படும்.

புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயத்தில், அதாவது ஈஸ்வர தன்மைகளையும், மோக்ஷ சாதனங்களையும், நம் தர்க்க அறிவைக் கொண்டு நிர்ணயிக்கலாகாது; அதற்கு, சப்த ப்ரமாணங்களான, ஸ்ருதி பலமும் நம் ஸம்ப்ரதாய பூர்வாசார்யர்களான ஸ்ரீமந் நாதமுனி, யாமுன முனி, ஸ்ரீ ராமானுஜ முனி ஆகியோரின் ஸ்ரீ ஸூக்திகளுமே, ஆதாரம்.

ஸ்வாமி தேசிகனும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில்,

உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே. ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஓர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்

என அருளினார்.

அதாவது, ஸர்வ ஸ்வதந்தரனான ஸ்ரீமந் நாராயணன், தன்னுடைய உடமைகளான ஜீவர்களை ரக்ஷிப்பது, அவன் ஸ்வரூபதற்கு ப்ராப்தம்; சாஸ்த்திர சம்மதம்; அப்படி ரக்ஷிக்கும் போது, அந்த ஜீவர்களிடம் ஒரு செயலை, அந்த ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரங்களில் விதித்து, அதன்படி ஜீவர்களிடம் ஒரு அநுஷ்டானத்தை எதிர்பார்ப்பதில், அவனுக்கு ஒரு குறையுமில்லை.

ஆக, சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாணங்களை மீறி, யுக்தி வாதத்தினால் ப்ரபத்தி அநுஷ்டானம் ஸ்வரூப நாச காரணம் என்கிற பக்ஷம் தூர பரிஹரணீயம்.

3. ஸ்ரீ ஆளவந்தார் செய்த சரணாகதி.

மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரமாவது,

ஆகிஞ்சன்யம் (பக்தி யோகம் செய்ய இயலாமை)

அநன்ய கதித்வம் (வேறு பலனை நாடாமை; வேறு தேவதையை நாடாமை)

ஸ்ரீஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில், (21)

நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே

அருளியுள்ளார்.

அதாவது,

கர்ம யோகம் ஞான யோகம் ஆகியவற்றை அங்கமாக க் கொண்ட பக்தி யோகம் செய்ய நான் தகுதி அற்றவன்; அதனால் உன் திருடிகளையே சரணமாகப் பற்றுகிறேன்,

என்பதாயிற்று.

4. ஸ்ரீ ஆளவந்தார் சரணாகதி அநுஷ்டித்ததற்காக மன்னிப்பு கோரினார், எனப் படும் பூர்வபக்ஷிகளின் விளக்கம் தவறானது. சாஸ்த்திர விரோதமானது.

ஸ்தோத்திர ரத்னம் (65) வரிகளுக்கான விளக்கம் :

அக்ருத்ரிம த்வச் சரணார விந்த ப்ரேம ப்ரகர்ஷாவதி மாத்மவந்தம் பிதாமஹம் நாத முநிம் விலோக்ய ப்ரஸீத மத் வ்ருத்தம சிந்தயித்வா

இந்த ஸ்லோகத்துக்கான சாஸ்த்ரீயமான பொருளாவது,

எம்பெருமானே ! உன் திருவடிகளில் கொண்ட பக்தியால், வேறு பலனில் என் மனம் செல்லாதவாறு நீ வென்றாய். அடியேனுக்கு ப்ரசார்யனும் பாட்டனாருமான ஸ்ரீமந் நாதமுனிகளின் சம்பந்தத்தின்ல், அடியேன் செய்யும் பிழைகளைப் பொருட்படுத்தாது ஸர்வ வித கைங்கர்யமும் அளித்தருள வேண்டும்.

இங்குள்ள பிழையாகக் கருதுவது, சாஸ்த்திரர விஹிதமான, சரணாகதி அநுஷ்டானம் என பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

இங்கு பிழைகளை பொருட்படுத்தாமைக்கு விஷயமாவது, அஹங்காரம் மற்றும் மமகாரமாகிய எண்ணங்களை தவிர்க்க ப்ரார்த்தனையாகிறது, என்பது சாஸ்த்ரீய விளக்கம்.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி

ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம், தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து, எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே

அதாவது,

எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனின் அர்ச்சா வடிவத்தை இடைவிடாததாகவும், குற்றமற்றதாகவும்

(குற்றம் என்பது, 'நான் செய்கிறேன்' என்ற எண்ணம், அது அஹங்காரம்; 'எனக்காக செய்கிறேன்' என்ற எண்ணம், அது மமகாரம்)

செய்து போகிற கைங்கர்யத்தை எம்பெருமானின் சந்தோஷத்திற்காக என்ற எண்ணத்தோடு செய்ய வேண்டும்.

ஆக, ஸ்ரீ ஆளவந்தாரின் ப்ரார்த்தனையாவது, சம்சாரி ஜீவர்களின் அஹங்கார மமகாரங்களாகிய பிழைகள் கைங்கர்யங்களில் உண்டாகுமேயானால், அவைகளை மன்னித்தருள வேண்டுவதாவது.

ஸ்ரீ ஆளவந்தார், இம்மாதிரியான கர்பண்ய அநுஸந்தானத்தை பல ப்ரகாரங்களில் விளக்கியுள்ளார்.

ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்னம்

ஸ்தோத்திர ரத்னம் - 62 வது ஸ்லோகம்

அமர்யாத ஷூத்ரஸ் சலமதி: அஸூயா ப்ரஸ்வபூ க்ருதக்நோ துர்மாநீ ஸ்மர ப்ரவஸோ வஞ்சன பர ந்ருஸ்ம்ஸ பாபிஷ்ட கத மஹமிதோ துக்க ஜலதே அபாராதுத் தீர்ணஸ் தவ பரிசரேயம் சரணயோ

இந்த ஸ்லோகத்தில் ஆழ்வார், கார்ப்பண்ய அநுஸந்தானம் செய்து போகிறார். அதாவது,

அமர்யாத – சாஸ்த்திர வரம்பு மீறினவனும்

கூூத்ர: –அற்ப விஷயங்களில் சாபல்யம் உள்ளவனும்

சலமதிர: - அல்ப உலக விஷயங்களில் சபல புத்தியுடனும்

அஸூயா ப்ரஸ்வபூ –பொறாமைக்குப் பிறப்பிடமானவனும்

க்ருதக்நோ -நன்றி கெட்டவனும்

துர்மாநீ –துர் அஹங்காரம் உள்ளவனும்

ஸ்மர ப்ரவஸோ – காமத்துக்குப் பரவசப் பட்டவனும்

வஞ்சன பர – பிறரை வஞ்சிப்பவனும்

ந்ரு ஸ்ம்ஸ – கொடும் தொழில் புரிபவனும்

பாபிஷ்ட – மஹா பாபியுமான

இப்படி குற்றங்களைக் கொண்டு இருக்கும் எனக்கு , எப்போது பகவத் கைங்கர்யம் ஸித்திக்கும், என்றபடி.

இம்மாதிரியான கார்ப்பண்ய அநுஸந்தானம் சரணாகதனுக்கு உத்தர க்ருத்யம். இந்த அநுஸந்தானம், சரணாகதி அநுஷ்டானம் செய்ததற்கு மன்னிப்பு ஆகாது; அந்த வாதம் அசாஸ்த்ரீயம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

அப்படியாகில், "பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத" என்கிற பூர்வாசார்ய புரஸ்காராதிளும் தாம் செய்கிறதாகையாலே இதுக்கு க்ஷமை கொள்ள வேண்டி அநவஸ்தையாம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

அப்படியாகில் - மோக்ஷ பலனுக்காக தான் ஒரு சிறு முயற்சியும் செய்யலாகாது எனக் கொண்டால் (சரணாகதி அநுஷ்டானம் செய்ததால் மன்னிப்பு கோர வேண்டும் என்றால்)

பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத - ஞான பரம்பரையாலும் பிறவியாலும் பாட்டனாராய் உள்ள ஸ்ரீமந் நாதமுனிஙளை நினைத்து அடியேனுடைய பாபங்களை பொருத்தருள வேண்டும்,

என்கிற பூர்வாசார்ய புரஸ்காராதிளும் - என பூர்வர்களின் மேன்மையையிட்டு

தாம் செய்கிறதாகையாலே - ப்ரார்த்னா ரூபமாக, மன்னிப்பு கோருவதாக, தான் ஒரு செயலைச் செய்ய புகுந்தால்

இதுக்கு க்ஷமை கொள்ள வேண்டி அநவஸ்தையாம் - இந்த மன்னிப்பு பெற, மன்னிப்பு கேட்கும் ஒரு செயல் செய்த குற்றம் வந்தடைய மீண்டும் ஓர் மன்னிப்பு கேட்க நேரிடும். ஆக, ப்ரார்தனையாகிய ஒரு பாபச் செயலைப் போக்க, மற்றொரு பாபச் செயலான மன்னிப்பு கோருவது என நேருவது மீண்டும் மீண்டும் அநுஷ்டிக்க வேண்டுவதால், அது முடிவற்ற மன்னிப்பு கோரும் படலமானபடியால், அநவஸ்தையாம்.

6. ஆக, **ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்திர ரத்நத்தில் "ப்ரஸீத மத் வ்ருத்தம் அசிந்தயித்வா" என தான் அநுஷ்டித்த சரணாகதிக்கு மன்னிப்பு கோருவதாக ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் அர்த்தம் பண்ணுவது** சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

77. <u>ப்ரபன்னனுக்கு புத்தி பூர்வக அபசாரம் அநிஷ்டாவகமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக சரணாகதனுக்கு புத்தி பூர்வக அபசாரமும் அநிஷ்டித்தை விளைவிக்காது என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்பதற்கு விளக்கமாக, சரணாகதனுக்கு தெரிந்தே செய்யும் பாபங்களால் தீங்கு ஏற்படாது என்பது அத்யந்த ப்ரமாண விரோதம்; அது, பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், சரணாகதர்ளுக்கு சாஸ்த்திர விரோத செயல்களுக்கு அநுமதி வழங்கப் பட்டதாக ஒரு தோற்றத்தை உண்டு பண்ணும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. சாஸ்த்திரங்கள், முமுக்ஷுக்கள் பாலனைப் போலே இருக்க வேண்டுவதாக உரைக்கிறது.

ப்ருஹதாரண்யக உபநிஷத்தில்,

தஸ்மாத் ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத். பால்யஸ்ச பாண்டித்யந்ச நிர்வித்யாத முனி:

அதாவது,

முமுக்ஷுவிற்கு சொன்ன பால்யமாவது, தத்வ ஞானம் பெற்ற பண்டிதர்கள் பாலனைப் போல இருந்து கொண்டு வகுத்த விஷயத்தில் சிந்தனையைக் கொண்டு செல்ல வேண்டும், என்றபடி.

இதைக் கொண்டு சரணாகதனுக்கு சாஸ்த்திர வச்யதை கிடையாது என்கின்றனர் பூர்வபக்ஷிகள். இது சாஸ்த்திர விரோதம்; பகவத் ராமானுஜ ஸ்ரீ பாஷ்ய க்ரந்த விரோதம்.

3. உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, **ப்ருஹ்ம ஸூத்ரம்** மற்றும் அதற்கு வ்யாக்யானமாக அமைந்த பகவத் ராமானுஜரின் **ஸ்ரீ பாஷ்ய க்ரந்த விளக்கம்** :

3ம் அத்யாயம் 4ம் பாதம் 13வது அதிகரணம் 49ம் ஸூத்ரம்

அனாவிஷ்குர்வன் அன்வயாத்

அதாவது,

தன் பெருமையை வெளியிடாது பாலனை போல் செயல் செய்ய வேண்டும்.

இந்த ஸூத்ரம் ஆனாவிஷ்காராதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு விளக்கப்படுவது, 'ஜீவர்கள் ஒரு குழந்தையைப் போல் இருந்து செயல் பட வேண்டும்' என்பது.

சாஸ்தரங்கள் ஜீவர்களை பரதந்தரன் (ஸ்வதந்தரம் அற்றவன்) என்று கூறுகின்றன. மேலும் சாஸ்த்ரங்கள், ஜீவர்களை 'பாலனை போல் செயல் செய்ய வேண்டும்' என்கின்றன.

ஆகையால், இதன் அர்த்தங்களாக இந்த ஜீவர்கள் சாஸ்த்ர விதிகளுக்கு கட்டுப் படாமல் தான் நினைத்ததை செய்து போகத் தகுமோ என்றால், 'பாலனை போல் செயல் செய்ய வேண்டும்' என்பது இவ்வாறு சொல்ல வந்தது அல்ல என உணர வேண்டும்.

அதாவது, ஜீவர்கள் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், சாஸ்த்ரங்களில் விதித்த படி, செயல் புரிய கடமைப் பட்டவனாவார்கள்.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் (சாஸ்த்ரத்தில் விதித்த) ஆணைப்படி நடக்க கடமைப் பட்ட ஜீவர்களை, பூரண ஸ்வதந்தரம் இல்லாமையால், பரதந்தரன் என்கிறது சாஸ்த்ரம்.

அதனால் சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்ட செயல்களை, ஜீவர்கள் பரதந்தரர்கள் என்று எண்ணி செய்யாமல் விடுவது, சாஸ்த்ரத்தை மீறிய செயலாகும். அதனால் பாபங்கள் வந்து சேரும் என சாஸ்த்ரங்கள் தெளிவு படுத்துகின்றன.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் (சாஸ்த்ரத்தில் விதித்த) ஆணைப்படி நடக்க கடமைப் பட்ட ஜீவர்களை, பூரண ஸ்வதந்தரம் இல்லாமையால், பரதந்தரன் என்கிறது சாஸ்த்ரம்.

இந்த நிலையை உணர்ந்தால், பரதந்த்ர நிலையை சொல்லும் போது, கர்மாக்களை ஸாத்வீக த்யாகத்தோடு செய்ய வேண்டுபவன எனக் கூறுகிறது என்பது புரிபடும். அதாவது, கர்மங்களை செய்துவிட்டு 'இந்த கார்மாவினால் வரும் பலன் எனதல்ல', 'இவைகள் ஸ்ரீமந் நாராயணனாலேயே நடத்தி வைக்கப் படுகின்றன' மற்றும் 'ஸ்ரீமந் நாராயணனே இவைகளை என்னைக் கொண்டு செய்து போகிறான்' என்று த்யாகம் செய்வது ஸாத்விக த்யாகமாகும்.

அதே போல், இந்த ஸுத்ரமும், வேதத்தை அத்யயனம் செய்தவன், ரஹஸ்யமாக உபதேசம் மூலம் பெற வேண்டிய பாண்டியத்தைப் பெற்று, ஒரு பாலகனைப் போல் தன் பெருமையை வெளியிடாமல் மறைத்துக் கொள்ள வேண்டும் என்றே கூற விழைகிறது.

இங்கே, குழந்தை தன்மையாக உரைப்பது, அஹங்காரம் அற்று, பாண்டித்யத்தைப் பெற்ற பிறகு எப்பொழுதும் ஆத்மாவை சிந்தித்த வண்ணம் இருக்க வேண்டும் என்பதையே வலியுருத்துகிறது. இதுவே மோக்ஷத்தை விரும்பும் ஜீவர்களுக்கு பால்ய தன்மையாகும்.

உபநிஷத்துகளிலும் 'பாலனை போல் செயல் செய்ய வேண்டும்' என்று கூறுவதன் நோக்கம் தன்னடக்கத்துடன் செயல் பட வேண்டும் என கூற வந்ததே. இதுவே பக்தி யோகம் செய்பவனுக்கும் பொருந்தும்.

சிறு வயதில் இருக்கும் பாலகனுக்கு, தன்னுடைய ஏற்றத்தையோ அல்லது தன்னுடைய குடும்பத்தின் ஏற்றத்தையோ மற்றவர்களிடம் வெளிக் காட்ட தெரியாது அல்லவா?

அந்த ஏற்றத்தினால் கர்வம் ஏற்பட்டு எண்ணங்களும் செயல்களும் சிறு வயதில் இருக்கும் பாலகனுக்கு மாற்றம் அடையாது அல்லவா?

அது போல இருக்க வேண்டும், என்பதாகிறது.

தான் நினைத்ததை சாஸ்த்ர கட்டுப்பாடு இல்லாமல் செய்து போகக் கூறுவதாக ஸுத்ரத்திற்கு பொருள் கொள்வது நேர்மையாகாது.

ஏன்எனில் அவைகள், சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிகளுக்கு முரணானது; சரணாகதன் எம்பெருமான் திருவுள்ளம் உகக்க சாஸ்த்திர விதிகளை மீறாமல் செயல் பட வேண்டும் என்பதை உணர்த்தி **வழுவிலா அடிமை செய்ய வேண்டும்** என ப்ரார்த்திக்கிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

4. ஸர்வேஸ்வரனான கண்ணன், இவ்விஷயத்தை பகவத் கீதையில் தெளிவிக்கிறான்.

செய்ய வேண்டிய செயல்களின் ஸாத்வீக த்யாகத்தை (விடுகையை) விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 12 வது ஸ்லோகம்

அனிஷ்டமிஷ்டம் மிஸ்ரம் ச த்ரிவிதம் கர்மண: பலம். பவத்யத்யாகினாம் ப்ரேத்ய ந து ஸன்யாஸினாம் க்வசித்

அதாவது,

‘இஷ்டமல்லாதது, இஷ்டமானது, இரண்டும் கலந்தது என்ற பலன் ஸாத்விக த்யாகம் செய்யாதவர்க்கு ஸம்பவிக்கும். அதை செய்தவர்க்கு எந்த பலனும் ஸம்பவிக்காது.’ - என்கிறான் கண்ணன்.

சாஸ்த்ரத்தை சரிவர உணர்ந்த தத்வ ஞானிகளிடம், கேட்டறிந்து, தர்ம சாஸத்ரத்தில் விதித்த படி ‘எது செய்ய தக்கது’ மற்றும் ‘எது செய்யத் தகாதது’ என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும் என்கிறான் கண்ணன் அவனுடைய இந்த கீதோபதேசத்தில்.

அதாவது, ஜீவர்களுக்கு செயல்கள் புரிவதில் ஸ்வதந்தரம் இருக்கிறது. அப்படி ஸ்வதந்தரம் இருந்தால் தான் அவர்கள் செயல்களால் வரும் பாபம் அல்லது புண்யம் மற்றும் அதற்கான ஸுக துக்கங்களை அநுபவிக்க அவர்கள் காரணமாவார்கள்.

மேலும் சாஸ்த்ரங்கள், செயல்களை செய்ய ஸ்வதந்தரம் உள்ளவர்களை தான், ‘இதை செய்’ அல்லது ‘இதை செய்யாதே’ என்று பணிக்க முடியும்.

ஆனால், இந்த செயல் புரிய உள்ள ஸ்வதந்தரம் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு உட்பட்டது என்பதை உணர வேண்டும். அதனால் தான் ஸாத்வீக த்யாகம் விதிக்கப் படுகிறது.

நாம் செய்யும் அனைத்து செயல்களும் ஸாத்வீக த்யாகத்துடன் செய்யப் பட்டால் அவைகளால் பாபம் ஏற்படாது என்று விளக்குகிறான்

ஸர்வேஸ்வரனான கண்ணன், இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 17 வது ஸ்லோகம்

யஸ்ய நாக்ருதோ பாவோ புத்திர் யஸ்ய ந லிப்யதே. ஹத்வாபி ஸ இமாம்லோகான்ன ஹந்தி ந நிபத்யதே

அதாவது,

‘ஈஸ்வரன் தான் கர்த்தா என்பதை உணர்ந்து ‘நான் கர்த்தா அல்ல’ என்றும் ‘எனது கர்மா அல்ல’ என்ற எண்ணத்தோடு யுத்ததில் பீஷ்மாதிகளை கொன்றாலும் இவன் கொன்றவனாகான் ’ - என்கிறான் கண்ணன்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் கீதோபதேசத்தை, சோகம் அடைந்த அர்ஜுனனுக்கு அவன் கேள்விகளுக்கு பதில்களாக, அருளினான். அர்ஜுனன் தர்ம விஷயத்தில், அதாவது மதிப்பிற்குறிய உறவினர்களான பீஷ்மர், த்ரோணர், க்ருபர் போன்றவர்களை யுத்தத்தில் கொல்வது தர்மமா என்ற அடிப்படையில், குழம்பியவனாக இருந்தான். அதனால் அவன் கண்ணனிடம், ஆத்மாவிற்கு உயர்ந்த கதியை தரக் கூடிய பரம புருஷார்த்தத்தை தெளிய விரும்பினான். அதையும், அவன் கண்ணனிடம் யுத்த களத்திலே சிஷ்யனாய் சரணமடைந்து ப்ரார்த்தித்தான்.

கண்ணன், அர்ஜுனனுக்கு ஏற்பட்ட இந்த சோகத்தை போக்குவதற்காக, பல விதமாக விளக்கினான்; சரீரம் வேறு ஆத்மா வேறு என தொடங்கி, மோக்ஷத்திற்கு வழியான பக்தி யோகத்தையும் மற்றும் அதற்கு அங்கங்களாக அநுஷ்டிக்க வேண்டிய கர்ம யோகம், ஞான யோகத்தையும் விவரிக்கலானான்.

அத்தருணத்தில், அதாவது பக்தி யோகத்தை விவரிக்கும் போது, தெய்வ பிறவியான ஜீவர்கள் பிறவிப் பிணியிலிருந்து விடுபட்டு மோக்ஷமடைகிறார்கள் என்றும் அஸுரப் பிறவியான ஜீவர்கள் பிறவியை அடைந்து துன்பத்திலேயே மேன்மேலும் ஆழ்ந்திருக்கிறார்கள் என்றும் விளக்கினான் கண்ணன்.

ஆக, மேற்படி ஸ்லோகங்களுக்கு பகவத் ராமானுஜரின் கீதா பாஷ்ய விளக்கங்களில், கர்த்ருத்வ எண்ணம் அற்று ஸாத்வீக த்யாகத்தோடு செய்யப் படும் சாஸ்த்ரீயமான செயல்கள், எத்தகையாயினும், தீங்கை விளைவிக்காது என அருளப் பட்டிருக்கிறது.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இப்படி பராதீன கர்த்ருத்வம் ப்ராமாணிகமாகையாலே ஆத்மாகவுக்கு கர்த்ருத்வம் இல்லாமையாலே ஸ்வரூபம் தெளிந்தவனை நிஷித்த கர்மங்கள் ஒன்றும் லேபியாது என்கிற பக்ஷமும் நிரஸ்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இப்படி பராதீன கர்த்ருத்வம் - ஜீவர்களுக்கு பகவத் அதீனமாக செயல் புரியும் தன்மை மட்டுமே உண்டென்று

ப்ராமாணிகமாகையாலே - சாஸ்த்திரங்கள் சொல்லுகிறபடியால்

ஆத்மாகவுக்கு கர்த்ருத்வம் இல்லாமையாலே - ஜீவனுக்கு ஸ்வதந்தரமாக செயல் புரியும் தன்மை இல்லாதபடியால்

ஸ்வரூபம் தெளிந்தவனை - ஜீவன் பகவானுக்கு தாஸ பூதன் எனத் தெளிந்து அவன் திருவடிகளைப் பற்றினவனுக்கு

நிஷித்த கர்மங்கள் ஒன்றும் லேபியாது - சாஸ்த்திர விரோத செயல்கள் ஏற்படாது; ஏற்பட்டாலும் எந்த ஒரு தீங்கும் விளையாது

என்கிற பகூஷும் நிரஸ்தம் - என்கிற வாதம் ஏற்கத் தகுந்ததல்ல.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக சரணாகதனுக்கு புத்தி பூர்வக அபசாரமும் அநிஷ்டித்தை விளைவிக்காது என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

78. <u>ஆத்ம உஜ்ஜீவனத்தின் பொருட்டு ஒரு சிஷ்யனுக்கு பல ஆசார்யன்</u>

1. ஸமாஸ்ரயண ஆசார்யன் :

பஞ்ச ஸம்ஸ்காரம் என்பது 'ஸமாச்ரயணம்' ; அதனை செய்விப்பவர் ஸமாஸ்ரயண ஆசார்யன். இந்த ஸம்ஸ்காரம் சாஸ்த்ரத்தில் ஒருவரை ஸ்ரீவைஷ்ணவர் ஆக நெறிப்படுத்தும் முறையாக விளக்கப்பட்டுள்ளது.

இந்த ச்லோகம் இதை நன்கு விளக்குகிறது:

தாபப் புண்ட்ர ததா நாம மந்த்ரோ யாகஸ் ச பஞ்சம:

என்பதில் ஐந்து நடவடிக்கைகளும் உள்ளன.

தாப: – உஷ்ணம் – சங்கமும் சக்ரமும் உஷ்ணப்படுத்தப்பட்டுத் தோள்களில் பொறிக்கப்படுவது

புண்ட்ர – த்வாதச (12) ஊர்த்வ புண்ட்ரங்களை (திருமண், ஸ்ரீசூர்ணம்) உடலில் குறிப்பிட்ட பாகங்களில் தரித்தல்

நாம – தாஸ்ய நாமம் தரித்தல். ஆசார்யனால் வழங்கப்படும் தாஸ்ய நாமம் 'ராமானுஜ தாசன்'

மந்த்ர – மந்த்ரோபதேசம் (திருமந்தரம், த்வயம், சரமச்லோகம் இம்மூன்றும் மந்திர உபதேசமாக ஆசார்யனிடமிருந்து பெறுதல்)

யாக – இல்லத்தில் தினமும் எம்பெருமானைத் தொழத் திருவாராதனக் கிரமத்தை அறிதல்

ஸமாஸ்ரயனம் செய்விக்கும் ஆசார்யன் பிறவிப் பயனை உணர வழி செய்கிறார்

2. காலக்ஷேப ஆசார்யன்:

குரு என்கிற பதத்தின் அர்த்தமாவது,

கு ஷப்தஸ்து அந்தகாரஹ ஸ்யாத். ரு ஷப்தஹ தன்னிரோதகஹ. அந்தகாரஹ நிரோதித்வாத். குரு ரித்யபிதீயதே

அதாவது,

கு என்ற சப்தம் அறியாமையையும்

ரு என்ற சப்தம் அதை போக்குவதையும் குறிக்கும்.

அதனால் அறியாமையை போக்குபவனே **குரு** ஆகிறான்.

ஸகல வைதீக கர்மாவைத் தொடங்கும் போதும், குரு பரம்பரையை, த்யானிக்க வேண்டுவதாகிறது:

குருப்ய: தத் குருப்யஸ் ச நமோவாகே மதீமஹே, வ்ருணீ மஹேச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம்பதி

என ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளினார். அதாவது, 'நம்முடைய குருவிற்கும், அவர்களுடைய குருக்களுக்கும், நம: என்கிற சொல்லினால் வணக்கத்தை தெரிவிக்கிறேன். அனைவருக்கும் முதல் குருவான, ஸகலருக்கும் ஸ்வாமியான, ஸ்ரீமந் நாராயண தம்பதியை, நாம் அடைய வேண்டிய பலனாகவும், அதற்கு வழியாகவும் நினைத்து வணங்குகிறேன்.

குரும் ப்ரகாசயேத் தீமான் மந்த்ரம் யத்னேன கோபயேத் அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ

என்பது சேஷ ஸம்ஹிதா வாக்யம்.

அதாவது, குருவை பலர் அறிய ப்ரகாசப் படுத்த வேண்டும். அவர் கற்றுவித்த மந்தரங்களை அனைவரிடமிருந்தும் மறைக்கப் பட வேண்டும்.

ஆசார்யனை ப்ரகாசப் படுத்தாமல் இருப்பதாலும் அல்லது மந்தரங்களை ரஹஸ்யமாக பாதுகாக்காமல் பலரிடம் கூறுவதாலும், ஸம்பத்தும் ஆயுஸும் குறைந்து போகும். ஞான ஸம்பத்தும், மந்தர நிஷ்டையும் குறைந்து போகும் எனபதாயிற்று.

சுவேதாசுதர உபநிஷத்,

யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாஷந்தே மஹாத்மந:

என்கிறது.

அதாவது, எவனுக்கு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாரயணனிடத்தில் உள்ள பக்தி போல் குருவினிடத்திலும் பக்தி உள்ளதோ, அவனுக்கு குருவின் அநுக்ரஹத்தால் ஸகல ஆத்ம விஷயாமான அர்த்தங்களும், தெளிவாகும்.

ஞான ப்ரதானம் செய்விக்கும் ஆசார்யன் முமுக்ஷுவாக்கி மோக்ஷ உபாயத்தில் தெளிவு பெற வழி செய்கிறார்

3. பரந்யாஸ ஆசார்யன்

தேவலர் ஒரு முனிவராக இருந்து வந்தார். இருந்தாலும், பல ஜன்மங்கள் எடுத்து சம்சாரத்தால் உழன்றவர். அவருடைய ஸத் ஸங்கத்தானால், பிறகு ஒரு பிறவியில் அவருக்கு சாண்டில்ய மஹரிஷியின் அநுக்ரஹம் கிடைக்கப் பெற்றது. சாண்டில்ய மஹரிஷி முக்காலமும் உணர்ந்த ஞானி. அவர் தேவலருக்கு உபதேசிக்கலானார். 'தேவலரே ! உமக்கு முக்தி பெற சரணாகதியில் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் மஹா விஸ்வாஸம் இன்னும் ஏற்படவில்லை. அதனால் சரணாகதி அநுஷ்டானத்தை செய்யாமல் பிறவிகளை வீணாக்குகிறீர்'. அதனால் இந்த பிறவியில் சரணாகதி அநுஷ்டானத்தை செய்து முடிக்க உபதேசிக்கிறார். 'பரம காருணிகனான ஸர்வேஸ்வரன் உனது நம்பிக்கையை மஹா விஸ்வாஸமாக மாற்றி உமக்கு மோக்ஷம் அளிப்பான்' என்றும் உபதேசித்தார்.

இதுவே, சாண்டிலி ஸம்ருதியில்,

வ்ருத்தைவ பவதோ யாதா பூயஸி ஜன்ம ஸந்ததி: தஸ்யாமன்யதாம் ஜன்ம ஸந்சின்தய சரணம் வ்ரஜ:

நீர் அநேக ஜன்மங்களை வீணாக கழித்து விட்டீர். ஸர்வேஸ்வரனான எம்பெருமானிடத்தில் சரணாகதி அநுஷ்டானம் செய், என மந்த விச்வாசமுடைய தேவலரை சாண்டில்ய மஹரிஷி பணித்தார்.

அதாவது, மோக்ஷத்தை அடைய பகவானின் மேன்மைகளை உணர்ந்தால் போதாது, அது அநுஷ்டானத்தில் முடிய வேண்டும் என்று இந்த சரித்திரம் உணர்த்துகிறது. முதல் முயற்சியை தொடங்கினால் மற்றதை பகவான் பார்த்துக் கொள்வான் என்று தாத்பர்யம்.

பரந்யாஸம் செய்விக்கும் ஆசார்யன் பிறவிப் பயனை அடைய வழி செய்கிறார்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

79. <u>சரணம் வ்ரஜ என்பதில் அநுஷ்டான விதி நோக்கல்ல என்பது சரியா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "சரணம் வ்ரஜ" என்கிற பதங்களுக்கு சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்க நோக்கில்லை; பகவத் சம்பந்த ஞானத்தை அறிவுறுத்தவதே நோக்கு என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **சரணம் வ்ரஜ** என்கிற பதங்களுக்கு விளக்கமாக, சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்க நோக்கில்லை; பகவத் சம்பந்த ஞானத்தை அறிவுறுத்தவதே நோக்கு என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. சரமஸ்லோகத்தில் உள்ள **சரணம் வ்ரஜ** என்கிற பதங்களுக்கு அந்ய பரமாக ஓர் விளக்கத்தை, (அதாவது எம்பெருமானின் ஸ்வாமித்வத்தை ஏற்று விதித்த ஸாத்யோபாயத்தை செய்யாமல் இருப்பதான விளக்கத்தை) , பூர்வபக்ஷிகள் அளிக்க ப்ரதான காரணங்களாவது:

மநு பகவான் கூறுவதாவது:

யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி ஸ்தித: தேந சேத விவாதஸ்தே மா கங்கா மா குரூன் கம:

அதாவது,

அந்தர்மாயாமியாக அனைவரின் ஹ்ருதயத்தில் இருக்கும் எம்பெருமான் திருவுள்ளத்துக்கு உகந்ததை செய்து போவதால், பாபத்தை தொலைக்க கங்கைக்கும் போக வேண்டாம், குருக்ஷேத்ரத்துக்கும் போக வேண்டாம்.

வேத வ்யாஸர், பாரதத்தில்,

யோ அந்யதா ஸந்தமாத்மானாம் அந்யதா ப்ரதிபத்யதே. கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா

என அருளினார்.

அதாவது,

எம்பெருமானுக்கு பரதந்தரனான ஜீவன், தன்னை ஸ்வதந்தரனாக எண்ணுவதால் ஆத்ம அபஹாரத்தை செய்தவனாகிறான். இந்த குற்றத்தை புரிந்தவன் வேறு எந்த குற்றத்தை செய்ய்த் தான் தயங்குவான்?

ஜீவர்களிடம் ஸஹஜ காருண்யம் கொண்ட எம்பேருமானின் ஏற்றத்தை சொல்லும் பல வரிகளைக் கொண்டு, அவனால் சாஸ்த்திரங்களில் விதிக்கப் பட்ட ஸாத்யோபாயத்தை நிராகரிப்பர் பூர்வபக்ஷிகள்; இது ஸ்ரீ ராமானுஜ க்ரந்தங்களான ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம், கத்ய த்ரயம் ஆகியவைகளோடு விரோதிக்கும்.

3. சம்பந்த ஞான மாத்திரம் மோக்ஷ காரணமான ப்ரபத்தி எனக் கொண்டால், ப்ரபத்திக்கு அநுஷ்டானம் சொல்வது அதிவாதமாகும்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யம் கொண்டு இவ்விஷயத்தைத் தெளியலாம்.

நீச பாவேன ஸந்த்யோத்யம் ஆத்மநோ யத் ஸமர்ப்பணம். விஷ்ண வாதிஷு சதுர்த்தி தத் ஸம்ப்ரதான ப்ரதர்சினி. நீசி பூதோ ஹ்ய ஸ: ஆத்மா யத் ஸம்ரக்ஷ்ய தயா அர்ப்யதே. தத் கஸ்மா இதி ஆபேக்ஷாயாம் விஷ்ணவே இதி: யதே

அதாவது,

ஜீவனின் சேஷத்வ ஞானமாவது, எம்பெருமானிடம் ஜீவனை ஸமர்ப்பிக்கை என தெளிவிக்கப் படுகிறது. மூல மந்திரத்தில், நாராயண சப்தத்தில், நான்காம் வேற்றுமையான ஸம்ப்ரதானத்தால், ஆத்ம ஸமர்ப்பணத்தில் தெளிவு உண்டாகிறது, என்றபடி.

பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். சம்சார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே

என்கிறது;

அதாவது,

கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

ஆக, எம்பெருமான் ஸித்தோபாயமாய் இருக்க, அவன் ஸ்வாமி என்கிற மனோ வ்யாபாரம் மோக்ஷ ஸாதநம் என அர்த்தம் கொண்டால், சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்ட **மோக்ஷத்திற்கான பக்தி யோகம் மற்றும் சரணாகதி உபாயங்கள்** அர்த்தமற்றதாகி விடும்.

பல ப்ரகாரங்களில் ப்ரமாணங்களை ஆராய்ந்த பகவத் ராமானுஜரும் மற்ற பூர்வர்களும் சாஸ்த்திரம் விதித்த சரணாகதி அநுஷ்டானமாவது, பரிகரங்களோடு கூடிய ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணம்; அதுவே, மோக்ஷ காரணம் என சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவு படுத்தியுள்ளனர்.

சரணம் வ்ரஜ என்பதாவது ஸித்தோபாய ஞானம் மாத்திரமே என யுக்தி வாதம் செய்யும் பூர்வ பக்ஷிகளின் நிர்தேசம் சாஸ்த்திரம் மற்றும் ஸம்ப்ரதாய விரோதம்.

4. சம்பந்த ஞான மாத்திரம் மோக்ஷ காரணமான ப்ரபத்தி எனக் கொண்டால், மோக்ஷ காரணமான ஸாதநங்களை விளக்கும் விதி வாக்யங்கள், பயனற்றதாகும்.

அதாவது ஜீவர்களுக்கு செயல் புரியும் தன்மை உண்டு; ஆனால் அது பகவத் அதீனம். இதையே ப்ருஹ்ம ஸூத்ரங்கள்,

கர்தா சாஸ்த்ராத்தவக்த்வாத்; பராத்து தச்ருதே:

என விளக்குகிறது.

இதுவே ஸ்ரீ ராமானுஜ **ஸ்ரீபாஷ்ய** விளக்கம்.

அதாவது அத்வைதிகள், உபநிஷத்தில் உள்ள **தத்வமஸி** (நீ அது ஆகிறாய்) போன்ற வரிகளின் அர்த்த ஞானமே ஜீவ-ப்ருஹ்ம ஐக்கியத்திற்கு, அவர்கள கூறும் மோக்ஷத்திற்கு, காரணம் என்பதை நிராகரித்து, **அவிதேய ஞானம் மோக்ஷ ஸாதனம் என்பவர்க்கு, விதி விரோத தோஷங்கள் ஏற்படும்** என தெளிவித்தார், ஸ்ரீ ராமானுஜர்.

அதே வழியில், சாஸ்த்திரம் விதித்த ஸாத்யோபாயத்தை விலக்கி, எம்பெருமானின் ஞானமே மோக்ஷ காரணம் என்பது, அத்வைதிகளின் வாதத்திற்கு ஒக்க, பரிஹரணீயம் என ஸ்வாமி தேசிகன் அருளினார்.

சாஸ்த்திரக்கள், பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷத்திற்கான சாதனம் என தெளிவிக்கிறது.

உபநிஷத்துக்களில் விதிக்கப்பட்ட

நிதித்யாஸிதவ்ய: எனும் பக்தி யோகமும்

மற்றும்

முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே

எனும் சரணாகதி அநுஷ்டானமும் அர்த்தம் அற்றது ஆக்காதபடி சரமஸ்லோகத்துக்கு விளக்கமளிக்க வேண்டும் அன்றோ!

பல க்ரந்தங்களினால் பகவத் ராமானுஜர் (ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், சரணாகதி கத்யம்) மற்றும் ஸ்வாமி தேசிகன் (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம், விரோத பரிஹாரம்)அருளிச் செய்ததை ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள், ஸத் ஸம்ப்ரதாய பாமரர்களுக்கும், பல காலமாக, பாதை மாறாமல், விளக்கி உள்ளனர். ஸாத்யோபாயமற்ற ஸித்தோபாயம் மோக்ஷ காரணம் அன்று என்பது ப்ரமாண ஸித்தம். ஆனால், ஸித்தோபாயமே மோக்ஷத்திற்கான ப்ரதான காரணம் என்பதும் ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இது ஸம்பந்த அநுஸந்தான கர்பமாக வேண்டுகைக்காக ஸம்பந்த ஞானம் ப்ரபத்தி என்று சொன்னார்கள் அத்தனை. இது பரந்யாஸ ரூப ப்ரபத்தியின் ஸ்வரூப-பரிகர-அதிகாராதிகளை முன்பே பரக்கச் சொன்னோம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இது ஸம்பந்த அநுஸந்தான கர்பமாக - மோக்ஷ காரணமாக அநுஸந்திக்க வேண்டியதை உள்ளடக்கி

வேண்டுகைக்காக ஸம்பந்த ஞானம் ப்ரபத்தி - சொன்ன முக்கிய விஷயமே ஜீவ-ஈஸ்வர ஸம்பந்த ஞானம் எனும் ப்ரபத்தி யோக்யதை

என்று சொன்னார்கள் அத்தனை - அன்றிக்கு, ஸம்பந்த ஞானம், ஸாத்யோபாயமான சரணாகதி அநுஷ்டானத்தை விலக்க வந்ததாகாது.

இது பரந்யாஸ ரூப ப்ரபத்தியின் ஸ்வரூப-பரிகர-அதிகாராதிகளை முன்பே பரக்கச் சொன்னோம் - சரணாகதி சம்பந்தமான, அங்கங்களோடு கூடிய ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணத்திற்காக அதிகாரத்தையும் அநுஷ்டிக்கும் முறையையும், ப்ரமாண பூர்வகமாக, விவரித்து முன் அதிகாரங்களில் கூறப்பட்டுவிட்டன. அதாவது, முமுக்ஷுத்வாதிகாரம், அதிகாரி விபாகாதிகாரம், உபாய விபாகாதிகாரம், ப்ரபத்தி யோக்யாதிகாரம், பரிகர விபாகாதிகாரம் மற்றும் ஸாங்க ப்ரபதனாதிகாரம்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "சரணம் வ்ரஜ" என்கிற பதங்களுக்கு சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்க நோக்கில்லை; பகவத் சம்பந்த ஞானத்தை அறிவுறுத்தவதே நோக்கு என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

80. மாம் ஏகம் சரணம் வ்ரஜ ஈஸ்வர-ஜீவ சம்பந்த ஞானம் சொன்னபடியா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கிற பதங்களுக்கு பகவத்-ஜீவ சம்பந்த ஞானத்தை அறிவுறுத்தவதே நோக்கு என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்கிற பதங்களுக்கு விளக்கமாக, பகவத்-ஜீவ சம்பந்த ஞானத்தை அறிவுறுத்தவதே நோக்கு என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. உபாயம் என்ற சொல்லாவது, 'பலத்திற்கான சாதனம்' என பொருள் கொண்டது.

ஸித்தோபாயமாவது , எம்பெருமான், பலனை அளிப்பதற்கு ஸித்தமாக (தயார் நிலையில்) இருப்பதை குறிக்கிறது.

ஆக, ஸித்தோபாயமான எம்பெருமான் இருக்க, சம்சாரி ஜீவர்கள், அவனை அறிந்து, மோக்ஷத்திற்காக எந்த ஒரு ஸாத்யோபாயத்தையும் செய்யாமல் இருப்பதே சரணாகதி, என பூர்வபக்ஷிகள் கூறுவர்.
இந்த விளக்கம், ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் போன்ற க்ரந்தங்களோடு முற்றிலுமாக விரோதிக்கும்.

மேலும், அந்த ஸித்தோபாய விளக்கம், சாஸ்த்திரத்தினாலும் ஒத்துக் கொள்ளப் பட்டது அல்ல. மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்கிற சரமஸ்லோக வரிக்கு அவ்வாறு அர்த்தம் கற்பிப்பது ப்ரமாண விரோதம்.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (7-14)

தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே

அதாவது,

‘என்னுடைய முக்குணங்களாலான மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்’ என சொல்லப் பட்டிருக்கிறது.

ஐந்தாவது வேதமாக போற்றப்படும் மஹாபாரதத்தில், வன பர்வாவில், மார்க்கண்டேய மஹரிஷி உபதேசிக்கும் போது,

ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ: கச்சத்வம்மேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா:

அதாவது,

மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேஸ்வரன் அனைத்து உலகங்களுக்கும் தந்தையாகவும் தாயாகவும் உள்ளான்; பாண்டவர்களே, அவனையே ரக்ஷகனாக கருதி அவனிடத்தில் சரணாகதியை கைக் கொள்ளுங்கள்,

என அருளியிருக்கிறார்.

இதனால், சம்சாரி ஜீவர்கள், பலனுக்காக சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட சரணாகதியை செய்ய வேண்டும், என்றதாகிறது.

கண்ணனும் பகவத் கீதையில், இதையே பல ப்ரகாரங்களிலும் உபதேசிக்கிறான்.

ஆக, **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்கிற சரமஸ்லோக வரிக்கு சரணாகதி அநுஷ்டானம் செய்யத் தகாதது என்கிற பூர்வபக்ஷிகளின் விளக்கம், ஸாத்யோபாயத்தை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

3. பகவத் கீதையின் அர்த்தத்தை, உபநிஷத் வரிகளுக்கு விரோதமில்லாமல், விளக்கமளிக்க வேண்டும்.

இதையே ஸ்ரீ ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹம் எனும் நூலிலும், பகவத் ராமானுஜர் கீதா பாஷ்யம் எனும் க்ரந்தத்திலும், ஸ்வாமி தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை எனும் விளக்க உரையிலும் விவரித்துள்ளனர்.

இதற்கு மாறான அனைத்து கருத்துக்களும், வேத சாரமான கீதோபநிஷத்துக்கு தாத்பர்யமாகாது.

மநு ஸ்ம்ருதியில் கூறப்படுவதாவது,

ஆர்ஷம் தர்மோபதேசம் வேத சாஸ்த்ரா விரோதிநா யஸ்தர்க்கேண அநுஸந்ததே ஸ தர்ம வேத நேத்ர:
அதாவது,

வேத வேதாந்தங்களுக்கு விளக்க உரையாக உள்ள க்ரந்தங்களை, அதாவது ஸம்ருதி, புராணம், ப்ருஹ்ம ஸூத்ரம் போன்றவைகளை, விளக்கும் போது, வேத வேதாந்த வரிகளுக்கு, விரோதம் வராத வகையில் யார் அறிந்து கொள்கிறானோ அவனே தர்ம சாஸ்த்திரம் அறிந்தவன். இவ்விதம் உணராதவன் தர்ம சாஸ்த்திரம் அறிந்தவனாக மாட்டான்.

ஆக, ஆழ்வார்கள் மற்றும் நம் பூர்வாசார்யர்களின் ஒரு சில வரிகளைக் கொண்டு மற்ற வரிகளை கை விட்டு, உபநிஷத்துக்கு விரோதமாக அர்த்தம் சொல்லுவது, வேத வேதாந்தங்கள் கூறும், சாஸ்த்திரம் அறிந்தவன் செய்யும் செயலாகாது.

மாம் ஏகம் சரணம் வ்ரஜ எனும் சரமஸ்லோக வரிக்கு, பூர்வபக்ஷிகள், யுக்தி வாதம் செய்து, சரணாகதி அநுஷ்டானத்தை மறுப்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய விரோதம்.

4. அது போலவே, உபநிஷத்தோடு முரண் படாமல் விளக்கமளிக்க, ஸ்வாமி நம்மாழ்வாரின் சில பாசுரங்களைக் கொண்டு, அவருடைய திரு உள்ளக் கருத்தை அறிந்து, மற்ற பாசுரங்களை விளக்க வேண்டும்.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (9-10-5) :

சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் அரண் அமைந்த மதிள் சூழ் திருக் கண்ணபுரத் தரணி யாளன் தனது அன்பர்க்கு அன்பாகுமே

அதாவது,

ஞான, சக்தி, கர்மானுஷ்டானம் போன்றவைகளில் குறைகள் இருந்தாலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடியை சரணமாக பற்றினவர்க்கு, சரீர காலம் முடிந்த பிறகு, அவன் வைகுந்தத்தை கொடுத்தருளுகிறான், எனபதாயிற்று.

ஆக, உபநிஷத் வரிகளோடு ஒக்க, மோக்ஷமடைய சரணாகதி அநுஷ்டானம் தேவையே என்பது ஆழ்வார் திரு உள்ளம், என்று உறுதியாகிறது.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (6-10-10) :

அகல கில்லேன் இறையும்என்று அலர்மேல் மங்கை உறைமார்பா நிகரில் புகழாய் உலகமூன் றுடையாய் என்னை ஆள்வானே நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே புகலொன்றிலா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

அதாவது,

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே! வேறுகதி ஒன்றும் இல்லாத அடியேன் உனது திருவடியை சரணமாக அடைந்தேன் என்கிறார்.

ஆக, உபநிஷத் வரிகளோடு ஒக்க, அகிஞ்சனர்களுக்கு, சரணாகதி அநுஷ்டானம் தேவையே என்பது ஆழ்வார் திரு உள்ளம், என்று உறுதியாகிறது.

ஆக, மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்கிற சரமஸ்லோக வரிக்கு சரணாகதி அநுஷ்டானம் செய்யத் தகாதது என்றும், பகவத் சம்பந்த ஞானமே சொல்லப் படுகிறது, என்கிற பூர்வபக்ஷிகளின் விளக்கம், குத்ருஷ்டி மத ப்ரவேசம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

சாதனமும் நற்பயனும் நானே ஆவன்; சாதகனும் என் வயமாய் என்னைப் பற்றும்; சாதனமும் சரண நெறி அன்று உனக்கு; சாதனங்கள் இந் நிலைக்கு ஓர் இடையில் நில்லா; வேதனை சேர் வேறு அங்கம் இதனில் வேண்டா; வேறு எல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன்; தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றி; சோகம் தீர் என உரைத்தான் சூழ்கின்றானே

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

சாதனமும் - மோக்ஷ உபாயமாகவும், அதாவது ப்ராபகமாகவும்

நற்பயனும் - மோக்ஷ பலனாகவும், அதாவது ப்ராப்யமாகவும்

நானே ஆவன் - நானே இருப்பேன்

சாதகனும் - உபாய அநுஷ்டானத்தைச் செய்பவனும்

என் வயமாய் - எனக்கு கட்டுபட்டவனாய்

என்னைப் பற்றும் - என்னையே சரணடைகிறான்.

சாதனமும் சரண நெறி அன்று உனக்கு - சரணாகதி எனும் சாஸ்த்ரீயமான மோக்ஷ உபாயம், உனக்கு, ப்ரதான உபாயமாகது

சாதனங்கள் - மோக்ஷ உபாயமான பக்தி யோகம்

இந் நிலைக்கு - சரணாகதி அநுஷ்டானத்தோடு

ஓர் இடையில் நில்லா - சம்பந்தம் உடையது ஆகாது

வேதனை சேர் வேறு அங்கம் இதனில் வேண்டா - ஸ்ரமப்பட்டு செய்ய வேண்டிய கர்ம யோகம் ஞான யோகம் போன்ற எந்த செயலும் சரணாகதி அநுஷ்டானத்துக்கு அங்கமாகாது

வேறு எல்லாம் நிற்கும் நிலை நானே நிற்பன் - பக்தி யோகம் தரக் கூடிய பலனை அளிக்க, பக்தி யோக உபாய நிலையில் நானே இருந்து சரணாகதனை அநுக்ரஹிப்பேன்.

தூதனுமாம் நாதனுமாம் என்னைப் பற்றி - பக்தருக்கு தூது செல்லும் எளிமை உடையவனும், ஸர்வருக்கும் ஸ்வாமியான பரத்வமும் உடைய என்னையே சரணமாகப் பற்றி

சோகம் தீர் - சம்சார சோகத்தை விலக்கிக் கொள்

என உரைத்தான் - என பகவத் கீதை சரமஸ்லோகத்தில் உரைத்தவன்

சூழ்கின்றானே - "ஸ்வஸ்மை ஸ்வ ப்ரீதையே ஸ்வயமேவ காரிதவான்" எனும் படியாக என்னை ஆட் கொள்கின்றானே. ஸாத்வீக த்யாகத்தோடு சரணாகதி அநுஷ்டானத்தைச் செய்விக்கிறானே!

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்கிற பதங்களுக்கு பகவத்-ஜீவ சம்பந்த ஞானத்தை அறிவுறுத்தவதே நோக்கு என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

81. கலியனின் பெரிய திருமொழி

திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழி பாசுரம் :

கோவை யின்தமிழ் பாடு வார்குடம் ஆடு வார்தட மாமலர்மிசை, மேவு நான்முகனில் விளங்கு புரிநூலர், மேவு நான்மறை வாணர் ஐவகை வேள்வி ஆறங்கம் வல்லவர் தொழும், தேவ தேவபிரான் திருக்கோட்டி யூரானே

1. பத உரை :

கோவை இன் தமிழ் - இனிய இந்த திருமொழியை

பாடுவார் - அனுபவித்து பாடக்கூடியவர்கள்

குடம் ஆடுவார் - ப்ரீதியோடு குடமெடுத்து ஆடுவது போலே

தட மா மலர் மிசை மேவு - உயர்ந்த நாபிக் கமலத்தின் மீது உள்ள

நான் முகனில் - சதுர்முகனைக் காட்டிலும்

விளங்கு புரிநூலர் - பூணூல் அணிந்தவர்களும்

மேவு நால் மறை வாணர் - நான்கு வேதங்களையும் கற்றவர்களும்

ஐவகை வேள்வி - பஞ்ச மஹா யஜ்ஞ அநுஷ்டானத்திலும்

ஆறு அங்கம் - வேதத்தின் அங்கங்கள் ஆறையும் கற்பதிலும்

வல்லவர் - ஸமர்த்தர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள்

தொழும் - வணங்கப்பெற்ற

தேவதேவபிரான் - தேவாதிதேவன்

திருக்கோட்டியூரான் - திருக்கோட்டியூரில் உள்ளான்

2. பஞ்ச மஹா யக்ஞம் :

ப்ருஹ்ம யக்ஞம்

தேவ யக்ஞம்

பித்ரு யக்ஞம்

மநுஷ்ய யக்ஞம்

பூத யக்ஞம்

3. வேதத்தின் ஆறு அங்கங்கள் :

சீக்ஷா

வ்யாகரணம்

சந்தம்

ஜோதிடம்

நிருக்தம்

கல்பம்

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

82. <u>ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்பதால் ப்ரபத்தி அநுபாயமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு பரம காருணிகனான எம்பெருமான் ஒரு ஸாத்யோபாயத்தை எதிர்பாரமல் ஜீவர்களுக்கு மோக்ஷமளிப்பான் என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு பரம காருணிகனான எம்பெருமான், சம்சாரி ஜீவர்களிடம் ஒரு ஸாத்யோபாயத்தை எதிர்பாரமல் அவர்களுக்கு மோக்ஷமளிப்பான் என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. **மோக்ஷயிஷ்யாமி** என்கிற பத விளக்கம்.

ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி (மோக்ஷத்திற்கு விரோதியான அனைத்து பாபங்களிலிருந்து விடுவிக்கிறேன்) என்ற சொற்களின் தாத்பர்யம்:

ஸ்வர்கம் போன்ற ப்ராக்ருத லோக பலன்களை அளிக்கவல்ல புண்யங்களும், ஒரு சரணாகதனுக்கு பாபமே (அதாவது, மோக்ஷத்திற்கு விரோதியே) என்று உணரத்தக்கது.

பலன் கொடுக்க ஆரம்பித்த, இந்த சரீரம் உள்ள வரை அநுபவிக்க இசைந்த பாப புண்யங்களைத் தவிர முன்பு செய்த மற்ற பாப புண்ய கர்மாக்கள் முழுமையாக விலக்கப் படும்.

புண்யம் மற்றும் பாபம் என்ற சொல்லின் விளக்கம்:

புண்யமாவது இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்

பாபமாவது இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்

முறையாக மோக்ஷத்திற்காக சரணாகதி அநுஷ்டித்தவன் (த்ருப்த ப்ரபத்தி செய்தவன்) விஷயத்தில் இந்த பாபம் மற்றும் புண்யம் ஆகிற கர்மாக்கள் விலகும் விதம்:

ஸஞ்சித கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை - அடியோடு விலக்கப் படுகிறது

ப்ராரப்த கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பித்தவை - இந்த சரீரம் முடியும் காலம் வரை உள்ள கர்மாக்கள் பலன் கொடுத்துவிடும் ; மீதம் உள்ள கர்மாக்கள், மற்றுமொரு சரீரத்தை கொடுக்காமல் விலக்கப்படும்

இப்பிறவியில் சரணாகதிக்குப் பிறகு சேரும் பாபங்கள் -

தெரியாமல் கவனக்குறைவால் ஏற்படுபவன - அடியோடு விலக்கப் படுகிறது

இப்பிறவியில் சரணாகதிக்குப் பிறகு சேரும் பாபங்கள் - தெரிந்தே ஏற்படுபவன - ப்ராயச்சித்த ப்ரபத்தி, அதாவது மன்னிப்பு கோரும் மற்றுமொரு சரணாகதி, செய்வதால் அடியோடு விலக்கப் படுகிறது

இப்பிறவியில் செய்யும் பாபங்கள் - தெரிந்தே ஏற்படுபவன - ப்ராயச்சித்த ப்ரபத்தி (மன்னிப்பு கோரும் மற்றுமொரு சரணாகதி) செய்யாவிட்டால், அந்த பாபங்களுக்கான தண்டனையே இப்பிறவியிலேயே அநுபவிக்க நேரிடும்

ஆக, மோக்ஷ பலனுக்காக சரணாகதி அநுஷ்டித்தவனுக்கு, கேட்ட காலத்தில் மோக்ஷம் அடைவது என்பது எந்த காரணத்தாலும் கிடைக்காமல் போகாது என்று ஸர்வேஸ்வரனான கண்ணன் உறுதி அளிக்கிறான்.

கடினமான பக்தி யோகத்தை செய்ய ஞான சக்தி போன்றவைகளை அற்றவன், பக்தி யோகத்தை விட்டு, ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதி அநுஷ்டானத்தை, ஸாத்வீக த்யாகத்தோடு ஒரு ஸதாசார்யனால் செய்விக்க பட்டு, பிறகு மோக்ஷத்திற்காக வேறொரு வழியை நாடாமல் இருப்பதே ஸர்வேஸ்வரனான கண்ணன் விதிக்கும் எளிமையான மோக்ஷத்திற்கான வழி என்பது உணரத்தக்கது. இதுவே ஸகல சாஸ்த்ரங்களினாலும் சொல்லப்படுவது.

பக்தி யோகத்தின் தன்மையால் ஏற்பட்ட அர்ஜுனனின் சோகத்தை போக்கும் விதத்தில், மோக்ஷத்திற்கான ஒரு எளிய முறையை சாஸ்த்ர விதிப்படி அறிவித்து மாசுச: அதாவது 'சோகப் படாதே', என்ற இந்த ஸ்லோகத்தின் வார்த்தைகளால் அர்ஜுன னை தேற்றினான் கண்ணன்.

இது அகிஞ்சனான முமுக்ஷுக்களின் அனைவருக்கும் ஸாமான்யம்.

3. பாவாந்தர அபாவ வாதம் :

சரமஸ்லோகத்தில் உள்ள **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்பதற்கு விளக்கம், ஸாரஸாரக்ஞ ஸ்ரீ உ.வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்யஸ்வாமியின் கீதா ஸாரம் வரிகள் கொண்டு அறியலாம்.
என்னைப் பெறுவதற்கு தடங்கலான எல்லாப் பாப புண்யங்களிலிருந்தும் விடுவித்து என்னை அடையச் செய்கிறேன்

ஆக, **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்று **அநிஷ்ட நிவ்ருத்தியை** சொல்லும் இடத்தில் (பாபங்களின் விடுதலை) **இஷ்ட ப்ராப்தியும்** அதாவது அவனை அடைவதாகிற பரமபத ப்ராப்தியும் சொன்னதாயிற்று என்பது நம் பூர்வர்களின் திருவுள்ளம்.

ஏனெனில் நாம் **பாவாந்தர அபாவ வாதிகள்** ; ஒன்றின் இல்லாமை மற்றதன் இருப்பை குறிக்கும்.

ஆக, **மோக்ஷ பலன்** (பாபங்களின் விடுதலை) என்பதும் **பரமபத ப்ராப்தி** என்பதும் ஏக புருஷார்த்தத்தின் இரு நிலைகளே!

ஆக, பாபங்கள் விலகி பரம புருஷார்த்தத்தை அடைய ஸாத்யோபாயம், சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்டமையால், சரணம் வ்ரஜ என்கிற சரமஸ்லோக பதத்திற்கு, சரணாகதி அநுஷ்டானமே கருத்து, என்பது ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி தேசிக ஸித்தாந்தம்.

4. ஸாத்யோபாயத்தை நிஷேதிக்க வந்தது அல்ல மோக்ஷயிஷ்யாமி எனும் பதம்.

இங்கு **ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி**

என்பது சரணாகதனால் முன்பு சேர்த்து வைத்த கர்மாக்கள் கழிக்கப் படுகின்றன.

இங்குள்ள காலம், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, ஏற்படும் தெரிந்து செய்யும் பாபங்களை சாஸ்த்ர விதிப்படி நீக்க சரணாகதன் செயல் பட வேண்டும்.

இதுவே ஸகல சாஸ்த்ரங்களினாலும் சொல்லப்படுவது.

அந்த சாஸ்த்ர விதிப்படி கொள்ள வேண்டிய செயலாவது, மீண்டும் ஒரு முறை செய்ய வேண்டிய சரணாகதி ஆகும். அதை ப்ராயச்சித்தமாக செய்ய வேண்டும், என்றபடி.

அதாவது,

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என்கிறது சாஸ்த்ரம்.

அதன் பொருள், மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான, புந: ப்ரபத்தியாகிற, 'ப்ராயச்சித்த சரணாகதியை' உடனடியாக செய்ய வேண்டும். ஆக, செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு 'ப்ராயச்சித்த சரணாகதியை' அவனிடத்தில் அநுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரன், சரணாகதனை மன்னித்து விடுகிறான் என்கிறது சாஸ்த்ரங்கள்.

இவ்வாறு, ஒரு சரணாகதன், தெரிந்து செய்யும் பாபத்திற்கு பரிஹாரமாக மற்றொரு சரணாகதியே ப்ராயச்சித்தமாக அமைகிறது, என்பதால், மோக்ஷ ஸாதநமாக, ஒரு சரணாகதி அநுஷ்டானம் முதலில் தேவை என்பதும் ஸித்திக்கிறது.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இவ்விடத்தில் "மோக்ஷயிஷ்யாமி" என்கிற உத்தமனாலே 'நான்' என்று தோற்றா நிற்க , மிகுதியான "அஹம்" என்கிற பதம் அர்த்த ஸ்வபாவத்தாலே ஸர்வ பாப விமோசனத்துக்கு உறுப்பான அகடிதகடனா சக்தியாதிகளை விவக்ஷித்து ஸப்ரயோஜனமாகிறது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இவ்விடத்தில் - அகிஞ்சனனான முமுக்ஷு விஷயத்தில்

மோக்ஷயிஷ்யாமி" என்கிற உத்தமனாலே - மோக்ஷ பலனை அளிக்கிறேன், என்கிற வரியின் முதல் வேற்றுமை உருப்பாலே (அதாவது, 'நான் மோக்ஷமளிக்கிறேன்' என்பதாக கொள்ள வேண்டுவதாகிறது)

நான்' என்று தோற்றா நிற்க - நான், எனும் பதம் அவ்வரியில் (மோக்ஷயிஷ்யாமி எனும் போது) தெளிவாக உரைக்கப் படாத போதும்

மிகுதியான "அஹம்" என்கிற பதம் - மறைந்து நிற்கும், நான், எனும் பதம் (அதாவது, 'நான் மோக்ஷமளிக்கிறேன்' என்று தெளிவாக இல்லாத காரணத்தினால்)

அர்த்த ஸ்வபாவத்தாலே - மோக்ஷமளிக்கிறேன் எனும் பத அர்த்தத்தைக் கொண்டு

ஸர்வ பாப விமோசனத்துக்கு உறுப்பான - சம்சாரி ஜீவர்களின் அனைத்து பாபங்களையும் போக்க காரணமான

அகடிதகடனா சக்தியாதிகளை விவக்ஷித்து - எம்பெருமானுக்குள்ள, நம்மால் செய்ய முடியாததையும் சுலபமாக செய்யக் கூடிய சக்தி, கருணை, ஞானம் போன்ற தன்மைகளைக் கருத்தில் கொண்டு

ஸப்ரயோஜனமாகிறது - அவனது ஆற்றல், சரணாகதர்களான ஜீவர்களுக்கு, பாபங்களைக் களைய உபயோகமாகிறது.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிற பதங்களுக்கு பரம காருணிகனான எம்பெருமான் ஒரு ஸாத்யோபாயத்தை எதிர்பாரமல் ஜீவர்களுக்கு மோக்ஷமளிப்பான் என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

83. <u>த்வா என ஜீவ பாரதந்த்ரியம் கூறுவதால் ப்ரபத்தி அநுபாயமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**த்வா**" என்கிற பதத்திற்கு பரதந்த்ரனான சம்சாரி ஜீவன் ஸாத்யோபாயத்தை அநுஷ்டிக்காமல் இருக்க வேண்டுவது என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **த்வா** என்கிற பதத்திற்கு அத்யந்த பரதந்த்ரனான சம்சாரி ஜீவன், மோக்ஷ காரணமாக ஸர்வேஸ்வரன் கையை எதிர் நோக்கி, சரணாகதி அநுஷ்டிக்காமல் இருக்க வேண்டுவது என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. பகவத் கீதையில் அர்ஜுனன் கேட்ட கேள்விக்கு பதில் என்ன?
அர்ஜுனன், தர்மத்திற்கும் அதர்மத்திர்கும் வித்யாஸம் புரியாமல் (மதிப்பிற்குறிய உறவினர்களை கொல்வது தர்மமா ?) என முதல் கேள்வியை கண்ணனிடம் கேட்டதற்கு

கண்ணன் பகவத் கீதை - 2ம் அத்யாயம் 12 வது ஸ்லோகம் முதல் பதில் கூறு விழைகிறான் ;

2ம் அத்யாயம் 12 வது ஸ்லோகம் -

ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்

அதாவது,

‘ஸர்வேஸ்வரனான நான் இதற்கு முன் அநாதி காலமாக இருந்திருக்கிறேன். பின்பும் இருப்பேன். அதே போல் நீயும் இந்த அரசர்களும் எப்போதும் இருப்பீர்கள்’

இதனால் கண்ணன் சரீரம் வேறு ஆத்மா வேறு என உணர்த்துகிறான்.

பிறந்து அழிய கூடிய சரீரத்தை கண்டு நாம் முன்பு இருந்ததில்லை என்றோ அல்லது நாம் இந்த சரீர அழிவிற்கு பிறகு இருக்க போவதில்லை என்ற எண்ணமோ உண்மை அல்ல என கூற முற்படுகிறான்.

இந்த சரீரத்திற்குள் இருக்கும் ஆத்மா அழிவற்றது என்பதை உணர்த்துகிறான். அதன் விளைவாகத்தான் நாம் செய்யும் ‘நல்லது’ அல்லது ‘கெட்டது’ போன்ற செயல்களின் பலனை வரும் பிறவிகளில் நாம் அநுபவிக்க நேரிடுவதாக கூறுகிறான் கண்ணன்.

அதை உணர்ந்திருந்த தால் தான் அர்ஜுனன் தர்ம விஷயத்தில் குழம்பியவனாக உள்ளான். (மதிப்பிற்குறிய உறவினர்களை கொல்வது தர்மமா ? இந்த பிறவியில் இந்த யுத்தத்திற்கு பிறகு ராஜ ஸுகம் கிடைத்தாலும், வரும் பிறவிகளில் துன்பங்கள் வந்து சேருமோ என்ற குழப்பங்கள்)

பகவத் கீதை - 2ம் அத்யாயம் 12 வது ஸ்லோகம் முதல் கீதோபதேசம் தொடங்கி 18ம் அத்யாயம் 66 வது ஸ்லோகத்தில் முடிவு பெறுகிறது.

கண்ணன் பல விதமாக, அர்ஜுனனுக்கு ஏற்பட்ட சந்தேகத்திற்தான, பதிலை விளக்குகிறான் ;

சரீரம் வேறு, ஆத்மா வேறு; சரீரம் உண்டாகி அழியக் கூடியது (இது நாம் அறிந்த உண்மை), ஆனால், ஆத்மா அழிவற்றது.

நமது (நாம் செய்யும் 'நல்லது' அல்லது 'கெட்டது' போன்ற செயல்களின்) கர்ம பலனினால் மீண்டும் மீண்டும் சரீர சம்பந்தத்தை ஏற்படுத்தி கொள்கிறோம். பெரிய அளவில் துன்பத்தையும் சில இன்பங்களையும் இம்மாதிரி பிறவிகளில் அநுபவிக்கிறோம்.

இந்த பிறவியில் நாம் எதை ப்ரமாணமாக கொண்டு செயல் பட வேண்டும்.

பிறவி பயன் என்ன?

அதிலும் உயர்ந்த பலன் (துன்பம் கலவாத மட்டற்ற இன்பம்) என்ன ?

அதை அடைய வழி !

இதை விளக்கிய பிறகு, சரமஸ்லோகத்தில், இவை எல்லாவற்றையும் அறிந்த 'உன்னை' , அதாவது த்வா என்கிற பதத்தினால், அர்ஜுனனுக்கு கண்ணன் விளக்குகிறான்.

3. முமுக்ஷுவானவன், மற்ற பலன்களில் உள்ள தோஷங்களைத் தெளிந்தே மோக்ஷ உபாயத்தில் ப்ரவ்ருத்திக்கிறான்.

ஆக, எம்பெருமானை அடைவதை அன்றி (மோக்ஷத்தை தவிர்த்து) மற்ற அனைத்து பலன்களிலும் ஏழு விதமான குற்றங்கள் இருப்பதாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதாவது,

அல்பத்வம் - ஸுகத்தின் அளவில் குறைவு

அஸ்திரத்வம் - நிரந்தரம் அற்ற தன்மை கொண்ட ஸுகம்

துக்க மூலத்வம் - அந்த ஸுகத்தை அடையும் முயற்சியில் உள்ள துக்கம்

துக்க மிஸ்ரத்வம் - அநுபவிக்கும் போது துக்கம் கலந்த ஸுக ரூபமான பலன்

துக்கோதர்கத்வம் - ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்

விபரீத அபிமான மூலத்வம் - தன்னைப் பற்றிய உண்மையற்ற எண்ணங்கள்

ஸ்வாபிக ஆனந்த விருத்வத்வம் - துக்கம் கலசாத இயல்பான சந்தோஷத்திற்கு மாறானது

இதை உணர்ந்து, பரம புருஷார்த்தத்தில் ருசி உண்டான 'உன்னை' என்கிறான் அர்ஜுனனிடம், கண்ணன்.

4. ஆக, **த்வா** (உன்னை) என்று சொல்லில் ஸர்வேஸ்வரனான கண்ணன் கூற விழைவதாவது:

உயர்ந்த தத்வமாகிய ஸர்வேஸ்வரனான கண்ணனையும் மற்ற தாழ்ந்த தத்வங்களையும் சரிவர புரிந்து கொண்ட 'உன்னை'

மோக்ஷத்தைத் தவிர மற்ற அனைத்து பலன்களில் உள்ள தோஷங்களை சரிவர புரிந்து கொண்ட 'உன்னை'

அங்கங்களோடு கூடிய சரணாகதி அநுஷ்டானத்தையும், அதற்காக ஸாத்வீக த்யாகத்தையும் செய்து முடிக்க, அத்தோடு ஆத்ம ரக்ஷா பொருப்பை கண்ணனிடம் ஒப்படைத்து, பிறகு மோக்ஷத்திற்காக வேறொரு வழியை நாடாமல் நிற்கிற 'உன்னை'
என்பதாகும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

த்வா" என்கிறது "ந த்வே வாஹம்" முதலான உபதேச பரம்பரையாலே சித சித் ஈஸ்வர விவேகம் பிறந்து ஐஸ்வர்யாதி புருஷார்த்தங்களுடைய அல்பத்வ அஸ்த்திரத்வாதி தோஷங்களைத் தெளிந்து மத் ப்ராப்தி ரூபமான பரம புருஷார்த்தத்தை பெற வேண்டும் என்று..

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

த்வா" - உன்னை

என்கிறது "**ந த்வே வாஹம்**" முதலான உபதேச பரம்பரையாலே - எனனும் போது கீதோபதேசத்தை பூர்ணமாகப் பெற்ற உன்னை என பொருள்

சித சித் ஈஸ்வர விவேகம் பிறந்து - சேதன அசேதன ஈஸ்வர தத்வங்களை ஈததற்கு உரிய தன்மைகளைக் கொண்டு தெளிந்து

ஐஸ்வர்யாதி புருஷார்த்தங்களுடைய அல்பத்வ அஸ்த்திரத்வாதி தோஷங்களைத் தெளிந்து - அந்த விவேகத்தினால் பரம புருஷார்த்தமான மோக்ஷ பலன் அன்றிக்கே மற்றதன் குற்றங்களை உணர்ந்து

மத் ப்ராப்தி ரூபமான பரம புருஷார்த்தத்தை பெற வேண்டும் என்று.. - தன் ஸ்வரூபத்துக்கு உகந்த மோக்ஷ பலனில் இச்சை கொண்டிருக்கும் படியாக, என்றபடி

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "த்வா" என்கிற பதத்திற்கு பரதந்த்ரனான சம்சாரி ஜீவன் ஸாத்யோபாயத்தை அநுஷ்டிக்காமல் இருக்க வேண்டுவது என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

84. நித்ய விபூதியிலிருந்து ப்ராக்ருத லோகத்தில் அவதாரம்?

1. பொதுவான ஜீவ உட் பிரிவுகளில், விசேஷித்து உள்ள ஸ்வரூப, ஸ்திதி மற்றும் ப்ரவ்ருத்தி எவ்வாறு உள்ளன என தெளியும் போது, அந்த பிரிவுகளின் வேற்றுமை புலனாகும்.

பத்தர் (சம்சாரி ஜீவர்கள்) - ஸ்வரூப, ஸ்திதி மற்றும் ப்ரவ்ருத்தி

பத்த ஸ்வரூபம் : சம்சாரத்திற்கு காரணமான அவித்யை, கர்மா, வாசனை, ருசி மற்றும் ப்ரக்ருதி சம்பந்தத்தோடு கூடி இருத்தல்.

பத்த ஸ்திதி : கர்ம அனுகுணமாக, ஈஸ்வர ஸங்கல்பத்தால் அளிக்கப்பட்ட தேவ-மனுஷ்ய-த்ரியக்-தாவர சரீரத்தை அதற்குரிய காலம் வரை தரித்து இருத்தல்

பத்த ப்ரவ்ருத்தி : பாபங்களையோ (சாஸ்த்திர விதிக்கு முரணானது) அல்லது புண்யங்களையோ (சாஸ்த்திர விதிக்கு அனுகுணமானது) அல்லது இரண்டும் அற்றது (கண் இமைத்தல், மூச்சு விடுதல் போன்றவை) செய்த வண்ணம் இருத்தல்.

முக்தர் (சம்சாரத்திலிருந்து முக்தி பெற்றவர்கள்) - ஸ்வரூப, ஸ்திதி மற்றும் ப்ரவ்ருத்தி

முக்த ஸ்வரூபம் : சம்சார பந்தத்திலிருந்து விடுபட சாஸ்த்திரம் விதித்த 'பக்தி யோகம்' அல்லது 'சரணாகதி அனுஷ்டானம்' செய்து, அதனால் சம்சார சம்பந்தம் அடியோடு நீங்கப் பெற்று, இயல்பான ஜீவ ஸ்வரூபத்தை அடைந்து இருத்தல்.

முக்த ஸ்திதி : மோக்ஷம் பெறும் வரை சம்சாரத்திலும், அதை பெற்றவுடன் முடிவு அற்றதாயும் இருப்பது

முக்த ப்ரவ்ருத்தி : சேஷனான ஜீவனின் இயல்பு நிலையை அடைந்த பிறகு, சேஷியான பரமனுக்கு கைங்கர்யம் செய்து அவனை மகிழ்விப்பது

நித்யர் (எக்காலத்திலும் சம்சார சம்பந்தம் அற்றே இருப்பவர்கள்) - ஸ்வரூப, ஸ்திதி மற்றும் ப்ரவ்ருத்தி

நித்ய ஸ்வரூபம் : எப்போதுமே இயல்பான ஜீவ ஸ்வரூபத்தோடு இருந்து போவது

நித்ய ஸ்திதி : தொடக்கமும் முடிவும் அற்ற இயல்பு நிலை

நித்ய ப்ரவ்ருத்தி : அனைத்து காலங்களிலும் சேஷியான பரமனுக்கு கைங்கர்யம் செய்து அவனை மகிழ்விப்பது, அதனால் தானும் மகிழ்வது.

2. ஆக, ஈஸ்வர, நித்ய, முக்தர்களுக்கு கர்ம அனுகுணமான பிறவி கிடையாது.

ஈஸ்வரன் தன் இச்சை அடியாக அவதாரங்களை மேற் கொள்கிறான்.

தன் அவதார ரஹஸ்யத்தை 4 ஸ்லோகங்களால் கண்ணன், பகவத் கீதையில், விளக்குகிறான்.

பஹூநிமே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுந. தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப

அஜோபி ஸந் அவ்ய்யாத்மா பூதானாமீஸ்வரோபி ஸன். ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா

யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர் பவதி பாரத. அப்யுக்தானாம் அதர்மஸ்ய த்தாத்மானம் ஸ்ருஜாம்யஹம்

பரித்ராணாய ஸாதூனாம் வினாஷாயச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே

என்று கண்ணன் அருளினான்.

அதாவது

‘பல பிறவிகள் எனக்கும் போயின. உனக்கும் போயின. அந்த பிறவிகளை எல்லாம் நான் இப்போதும் அறிகிறேன்.நீ அறிவதில்லை’.

‘நான் பிறவி அற்றவனே ஆகிலும், எல்லோருக்கும் ஈஸ்வரனாயும் இருக்கும் நான், அப்ராக்ருத (ஸுத்த ஸத்வ) திருமேனியுடன் என் இச்சையினால் மட்டுமே அவதரிக்கிறேன்’.

‘எப்பொழுது எல்லாம் தர்மத்திற்கு வாட்டம் ஏற்படுகிறதோ, அதர்ம்ம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் நான் அவதரிக்கிறேன்’

‘அடியார்களை காக்கவும், துஷ்டர்களை அழிக்கவும், தர்மத்தை நிலை நிறுத்தவும் யுகம் தோரும் நான் அவதரிக்கிறேன்’.

என்று கண்ணன் அருளினான்.

3. முக்தனுக்கு பரிபூர்ண ப்ரஹ்ம அனுபவம் கிடைத்த போது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனோடு ஆனந்த ஒற்றுமையும்,

ஸ ஸ்வராட் பவதி (அவன் அரசனாகிறான்),

ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி (ஸகல லோகங்களுக்கும் முக்தன் தன் இஷ்டம் கொண்டு செல்கிறான்)

என்கிற உபநிஷத் வாக்யங்களின் அர்த்தம் கொண்டு பார்த்தால் முக்தனுக்கு சாஸ்த்திர கட்டுப்பாடு அற்ற தன்மையையும் பாப புண்ய கர்ம வச்யத்தை இல்லாமையையும் சொன்னதாகும்.

இந்த நிலை நித்யர்களுக்கும் பொருந்தும்.

அதனால் ஈஸ்வரனைப் போல, நித்ய முக்தர்களும், இந்த லோகத்தில் அவதாரங்களைச் செய்யும் போது, ஆழ்வார்களாகவும் ஆசார்ய புருஷர்களாகவும் இருந்து கொண்டு, பகவத் கைங்கர்யமாகிற, சம்சாரி ஜீவர்களின் ஆத்ம உஜ்ஜீவனத்திலேயே காலத்தை செலவிடுவர்கள்.

நித்ய முக்தர்களுக்கு பாப புண்ய கர்ம ஸம்பந்தம் கிடையாது; அதன் வாயிலாக வரும் ஸுக துக்கங்களும் கிடையாது.

ஈஸ்வரனைப் போல, நித்ய முக்தர்களுக்கும், அவதார காலத்தில் உண்டாகும் சாம்சாரிக ஸுக துக்கங்கள் அபிநயமே!

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

85. <u>உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப் பட்ட நாள் எது?</u>

1. பெரியாழ்வாரின் திருப் பல்லாண்டு :

எந்நாள் எம்பெருமான் உந்தனக்கு அடியோம் என்று, எழுத்துப்பட்ட அந்நாளே, அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்று உய்ந்தது காண், செந்நாள் தோற்றித் திரு மதுரையுள் சிலை குனித்து ஐந்தலைய பைந்நாகத்து தலை பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே

அதாவது,

ஸ்வாமிந்! தேவரீர்க்கு நாங்கள் சேஷ பூதர்கள் என உணர்ந்து என்று, ஆத்ம அபஹார சௌர்யம் நீங்கக் காரணமான சொல்லானது எங்களுடைய வாயில் த்வய மந்திர பூர்வகமாக உண்டாகப் பெற்ற நாள் எந்த தினமோ அந்த தினம் முதலாகவே, அடியோங்களுடைய அடிமைப்பட்டவை எல்லாம் நல்ல கதியை அடைந்து உஜ்ஜீவித்துவிட்டது ; நல்ல நக்ஷத்திரத்திலே திருவவதரித்து அழகிய வடமதுரையிலே கம்ஸனை முறித்து, ஐந்து தலைகளையுடய படத்தோடு கூடின காளிய நாகத்தினுடைய தலைமேலே குதித்தவனே! தேவரீருக்கு மங்களாசாஸநம் செய்வோம்.

2. வேத வ்யாஸர், பாரதத்தில்,

யோ அந்யதா ஸந்தமாத்மானாம் அந்யதா ப்ரதிபத்யதே. கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா

என அருளினார்.

அதாவது,

எம்பெருமானுக்கு பரதந்தரனான ஜீவன், தன்னை ஸ்வதந்தரனாக எண்ணுவதால் ஆத்ம அபஹாரத்தை செய்தவனாகிறான். இந்த குற்றத்தை புரிந்தவன் வேறு எந்த குற்றத்தை செய்ய்த் தான் தயங்குவான்?

இவ்விஷயத்தில், தொண்டரடிப் பொடி ஆழ்வார்

உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவார் உணர்வு ஒன்று இல்லா கள்ளத்தேன் நானும் தொண்டு ஆய்த் தொண்டுக்கே கோலம் பூண்டேன் உள்ளுவார் உள்ளிற்று எல்லாம் உடன் இருந்து அறிதி என்று வெள்கிப்போ என்னுள்ளே நான் விலவு அறச் சிரித்திட்டேனே

என அருளினார் ; அதாவது,

என்னுள்ளேயும் அந்தர்யாமியானவன் ஸர்வேஸ்வரன், அந்த அந்தர்யாமி இருப்பதாக எண்ணமில்லாமல், மற்றவர்களை ஏமாற்றும் கள்ளனாகிய அடியேன் அந்த அந்தர்யாமியான ஸர்வேஸ்வரனிடம் சேஷத்வம் உடையவனான, அதாவது தன்னை பாகவதன் என மற்றவர் எண்ணுப்படியான, தோற்றத்தை செய்துக் கொண்டு, ஆனால், அந்த அந்தர்யாமியான ஸர்வேஸ்வரன் அடியேனுடைய சிந்தனைகளை அறிவாவதாக உணர்ந்த பின்பு, வெட்கப்பட்டு, என் நிலைமையை உணர்ந்து, நானே என்னை நொந்து கொள்கிறேன்.

ஆக, ஆத்ம அபஹார சௌர்யம் நீங்க, அநுஷ்டிக்க வேண்டுவது, ஆத்ம சமர்ப்பணம் ; # அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யப்படி,

ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி:

என்கிறபடியால் சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது:

ஆனுகூல்ய ஸங்கல்பம் - சாஸ்த்ரத்தில் விதித்த படி நடக்க உறுதி கொள்ளல்

ப்ராதிகூல்ய வர்ஜனம் - சாஸ்த்ரத்தில் தடுக்கப் பட்டவைகளை செய்யாதிருத்தல் என்ற உறுதி கொள்ளல்

மஹாவிச்வாசம் - ஸர்வேஸ்வரன் மோக்ஷம் அளிப்பான் என்ற நம்பிக்கை

கார்ப்பண்யம் - தான் பக்தி யோகம் செய்ய தகுதி அற்றவன் என்று அநுஸந்தித்தல்

கோப்த்ருத்வ வரணம் - பக்தி யோக ஸ்தாந்த்தில் ஸர்வேஸ்வரன் இருந்து பலன் கொடுக்கப் ப்ரார்த்தனை

இந்த அங்கங்களோடு சரணாகதன் தன் ஆத்ம ரக்ஷணத்தை ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும். இதுவே **சரணாகதி அநுஷ்டானம்** என சாஸ்த்ரங்கள் உரைக்கின்றன. மேலும், இந்த சரணாகதி அநுஷ்டானத்தை ஒரு ஸதாசார்யனால் செய்விக்க பட வேண்டுமாய் சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன.

ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதனாதிகாரத்தில்**, ஸாத்யோபாய அநுஷ்டான நோக்கை அருளியுள்ளார்;

பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத் வசீகார காரணம் தத் பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புத:

அதாவது, ஸித்தோபாயனான எம்பெருமானை வசீகரிக்க பக்தி, ப்ரபத்தி காரணமாகிறது; அந்த ஸாத்யோபாயம் பலனை அபேக்ஷிப்பவர்களால் செய்ய வேண்டுவதாகிறது.

3. ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதி அநுஷ்டானத்திற்கு, அங்கியாக இருப்பது **ஆத்ம சமர்ப்பணம்** ; அது மூன்று வித சமர்ப்பணத்தை கூறுவதாகும்; இதை ஸ்வாமி தேசிகன் **ஸாங்க ப்ரமதநாதிகாரத்தில்** தெளிய விளக்குகிறார்.

சரணாகதி அநுஷ்டானத்தில் மூன்று விதமான சமர்ப்பணம் உள்ளன; அதாவது

ஸ்வரூப சமர்ப்பணம் - ஸர்வேஸ்வரனுக்கு இயற்கையிலேயே அடிமையான தன்னை சமர்ப்பிப்பது.

பர சமர்ப்பணம் - சாஸ்த்திரத்திலே விதித்த பக்தி யோகத்தைப் பண்ண ஞான சக்தி அற்றவனான நான் என்றும், எம்பெருமானே பக்தி யோகத்தில் நின்று, தன்னை காக்க வேண்டும் என்கிற ப்ரார்த்தனை.

பல சமர்ப்பணம் - இந்த அநுஷ்டானத்தால் வரும் பலன் எம்பெருமானின் உகப்பிற்காகவே என்கிற எண்ணம் கொள்வது.

இதையே,

ஆத்ம ஆத்மீய பரந்யாஸ: ஆத்ம நிக்ஷேப உச்யதே

என பாஞ்சராத்ர சாஸ்த்திரம் விதிக்கிறது; அதாவது, ஆத்மாவையும் அதனைச் சேர்ந்தவைகளையும் ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிப்பது தான் ஆத்ம நிக்ஷேபம்; அதுவே சரணாகதி அநுஷ்டானத்தில் அங்கியாகிறது.

த்வய மந்திர சரணாகதி விளக்கம் - பூர்வ கண்டம் :

ஸ்ரீமன் நாராயண சரணௌ சரணம் பிரபத்யே

த்வய மந்திரத்தில் அனைத்து அங்கங்களோடு கூடிய அங்கி ஸ்வரூபம் சரணாகதி அநுஷ்டானத்தைத் தெளிவு படுத்துகிறது.

நாரயண சப்தத்தினால், தத்புருஷ பஹுவ்ருஹி ஸமாஸங்களைக் கொண்டு, ஸர்வ ஆதாரத்வமும் ஸர்வ அந்தர்யாமித்வமும் ஸர்வேஸ்வரனுக்கு ஸித்திப்பதனால், **ஆனுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதி கூல்ய வர்ஜனமும்** சொன்னபடியாயிற்று.

சரணம் ப்ரபத்யே எனும் உத்தம புருஷ நிர்தேசத்தினால், அதாவது 'நான் சரணமாக பற்றுகிறேன்' என்பதால், **மஹா விஸ்வாஸமும் கார்பண்யமும்** ஸித்தித்ததாயிற்று.

கோப்த்ருத்வ வரணமாவது இந்த த்வய மந்திர முதல் வரியில், உபாயத்வ ப்ரார்த்தனையாக அமைவதால், சொன்னபடியாயிற்று.

ஆத்ம நிக்ஷேபம் எனும் அங்கி ஸ்வரூபமான சரணாகதி, மஹா விஸ்வாஸத்தோடு செய்யப் படும ரக்ஷக ப்ரார்தனையான **சரணம் ப்ரபத்யே** எனும் உத்தம புருஷ நிர்தேசத்தினால், விவக்ஷிதம்.

அநன்ய ஸாத்யே ஸ்வபீஷ்டே மஹாவிஸ்வாஸ பூர்வகம் ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: சரணாகதி:

என்கிற ப்ரமாணத்தால்,

தன்னால் ஒரு பலனைப் பெற்றுக் கொள்ள முடியாத போது, மஹாவிஸ்வாஸத்தோடு ஒரு ஸமர்த்தனை உபாயமாக வேண்டுவதே ஆத்ம நிக்ஷேபம் எனும் சரணாகதி,

எனத் தெளிவாகிறது.

4. ஒரு ஸ்ரீ வைஷ்ணவன் தன் ஆசார்யனிடம் செய்து கொள்ளும் 'பஞ்ச ஸம்ஸ்காரத்தில்' வரும் த்வய மந்திர உச்சாரணமே, சரணாகதியாக கருதி, **உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப் பட்ட நாள்** ஆக்க வல்லதாகாது ஏனெனில்,

ஸர்வக்ஞோபி ஹி விஸ்வேஸ: ஸதா காருணிகோபி ஸந். சம்சார தந்த்ர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே

என்கிற பகவத் சாஸ்த்திரம், எம்பெருமான் எல்லாம் அறிந்தவனாயும், பரம காருணிகனாக இருந்த போதிலும், ரக்ஷிக்க வேண்டும் என்கிற ப்ரார்த்தனையை எதிர் பார்க்கிறான், என்பதாயிற்று.

அதாவது, மந்திர உபதேச காலத்தில், மோக்ஷத்திற்காக ஒரு ஆத்ம சமர்ப்பண ஸங்கல்பம் கிடையாது என்பதால், பஞ்ச ஸம்ஸ்காரம் சரணாகதி அநுஷ்டானமாகாது என தெளிவடைய வேண்டுவதாகிறது.

ஆக, **உந்தனக்கு அடியோம் என்று எழுத்துப் பட்ட நாள்** என்பது ஆத்ம நிக்ஷேப ப்ரபத்தி அநுஷ்டான தினம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

86. <u>ஸர்வ பாபேப்யோ மோக்ஷம் புண்யங்கள் களையப் படாததாகுமோ?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'பாபங்களிலிருந்து விடுவித்து புண்யங்களை அநுபவிக்கச் செய்வது' என்கிற பொருள் ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** என்கிற பதங்களுக்கு 'பாபங்களிலிருந்து விடுவித்து புண்யங்களை அநுபவிக்கச் செய்வது' என்கிற பொருள் பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.
இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. முமுக்ஷுவான சரணாகதனுக்கு, ஸுக ரூபமான ப்ராக்ருத பலன்களும், ரசிகரமாக ஆகாததால், அவைகளையும் விலக்க வேண்டுவதாக சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன.

பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி வரிகளைக் காணும் போது,

பரமாத்மனி யோ ரக்த: விரக்த: அபரமாத்மனி ஸர்வேஷணா வினிர்முக்த: ஸ பைஷம் போக்தும் அர்ஹதி

எனப் படுகிறது.

அதாவது,

எவன் முமுக்ஷுவாக பரமாத்மாவிடம் ஆசை கொண்டவனாக இருக்கிறானோ அவன் உலக விஷயங்களில் பற்று அற்று பிக்ஷை எடுத்து புசித்துக் கொண்டிருக்கத் தக்கவன்.

வ்யாஸ பகவான் மஹா பாரதத்தில்,

ருத்ர ஆதித்ய வஸுனாம் ச ததா அந்யேஷாம் திவௌகஸாம். ஏதே வை நிரயாஸ்தாத் ! ஸ்தானஸ்ய பரமாத்மந:

என அருளினார்.

அதாவது,

ஸ்ரீ வைகுந்தத்தை அறியும் போது, ருத்ரர்கள் ஆதித்யர்கள் வஸுக்கள் மற்ற தேவர்கள் வசிக்கும் லோகங்களும் நரகத்திற்கு ஸமமானவையே.

ஆக, ஸ்வர்காதி பலன்களும் முமுக்ஷுவான சரணாகதனுக்கு விரும்பத் தகாதவையே! அதனால், அவர்களுக்கு பாபத்தின் பலனாக ஸ்வர்காதிகளும் ஸம்பவிக்கும் என அர்த்தமாகும்.

இதனால், **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** எனும் பதங்களாவது, மோக்ஷ பலனுக்கு விரோதமான, ப்ராக்ருத பலனளிக்கும் அனைத்து கர்மாக்களும் பாப சப்தார்த்தம் என்று நம் பூர்வர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

3. பராசர மஹரிஷி, விஷ்ணு புராணத்தில்,

த்ரை வர்கிகான் த்யஜேத் தர்மான் ஆரம்பான் அவனீபதே. மித்ராதிஷு ஸமோ மைத்ர: ஸமஸ்தேஷ்வ ஏவ ஜந்துஷு

என அருளினார்.

அதாவது,

நான்கு புருஷார்த்தங்களான தர்ம, அர்த்த காம, மோக்ஷ என்பதில் முபுக்ஷுவானவன் முதல் மூன்றையும் கை விட வேண்டும்.

ஆக, தன் இச்சை அடியாகவோ, சாஸ்த்திர நியமங்களின் காரணமாகவோ, ப்ராக்ருத பலன்களின் ப்ராப்தி விருப்பத்தகாத போது, முமுக்ஷுவிற்கு அந்த பலன்களும் பாப கோடியிலேயே சேருகிறது.

அதனால், சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** எனும் பதங்களாவது, மோக்ஷ பலனுக்கு விரோதமான அனைத்து கர்மாக்களும் விலக்கப் படுகின்றன என்று நம் பூர்வர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

4. ஸ்வாமி நம்மாழ்வார் - திருவாய்மொழி (1-5-10)

சார்ந்த இருவல் வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி வீடு திருத்துவான், ஆர்ந்த ஞானச் சுடராகி அகலம் கீழ்மேல் அளவிறந்து, நேர்ந்த வுருவாய் அருவாகும் இவற்றி னுயிராம் நெடுமாலே

இதன் பொருளாவது:

நம்மிடம் சேர்ந்திருக்கிற புண்ய பாப வினைகள் தொலைத்து, சப்தாதி விஷய பற்றையும் தவிர்த்து, தன்னிடத்திலே உறுதியான சித்தத்தை பொருந்த வைக்கும்படி என்னைத் திருத்தி, மோக்ஷ பலன் பெற சில திருத்தங்களைச் செய்து ஒழுங்கு படுத்த ஆரம்பித்துவிட்டான்; பரிபூர்ணமான ஸ்வயம்ப்ரகாச ஞான ஒளியை உடையனாய் சுற்றும் கீழும் மேலும் எல்லையற்று எங்கும் வியாபதித்தவனாய் மிகவும் நுட்பமான அசித்தும் சித்துமாகிற இந்தப் பொருள்களுக்கு அந்தர்யாமியாய் நிற்கிற வ்யாமோஹமே வடிவான எம்பெருமான்.

இதனால் ப்ராக்ருத பலன்களை தருகிற பாப புண்யங்கள் இரண்டுமே விலக்கத் தக்கவையே!

சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில், சரீர இந்த்ரியங்களைக் கொடுத்து, சாஸ்த்திரங்களை வழங்கி, அதை ப்ரவர்த்திப்பிக்க ஆசார்யர்களை பெறச் செய்து, ஒரு லகு உபாயத்திலே மூட்டி, பரம புருஷார்த்தத்தை அளித்து, தான் உகக்கிறான் அந்த எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணன்.

நம் சாம்சாரிக நிலையை உணர்ந்தால், பிறவிப் பிணி நீங்க, ஸர்வேஸ்வரனின் உபகாரம் மனதில் பதியும்.

ந கர்த்ருத்வம் ந கர்மணி லோகஸ்ய ஸ்ருஜதி ப்ரபு: ந கர்ம பல சங்க யோகம் ஸ்வபாவஸ்து ப்ரவர்த்ததே

என்கிறான் கீதையில் கண்ணன்.

அதாவது, கர்ம சம்பந்தமற்ற பரிசுத்த ஜீவன், சாம்ஸாரிக வ்யாபாரத்தை (இந்த பிறவியில் ஏற்படும் சுக துக்கங்களுக்காக நாம் செய்யும் காரியத்தை) செய்ய முயற்சி எடுப்பதோ அல்லது கர்மேந்த்ரியங்களை ப்ரேரிப்பதோ (புலன்களை கொண்டு சுக துக்கங்களுக்கான காரியங்களை செய்விப்பது) இல்லை.

ஆக, சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** எனும் பதங்களாவது, பாப புண்யமாகிற இரு வினைகளையுமே விலக்கக் கூறுவதாக அமையும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

பாபமாவது சாஸ்த்திர வேத்யமான அநர்த்த ஸாதனம். அநர்த்தமாவது ப்ரதிகூல ப்ராப்தியும் அநுகூல நிவ்ருத்தியும். இங்கு பாப சப்தம் முமுக்ஷுவைப் பற்ற அநிஷ்ட பலன்களான சாம்சாரிக புண்யங்களையும் சொல்லுகிறது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

பாபமாவது - பாபம் என்கிற பதத்தின் விளக்கமாவது

சாஸ்த்திர வேத்யமான அநர்த்த ஸாதனம் - சாஸ்த்திரத்தால் அறியப் படுகிற விரும்பத் தகாத பலனுக்கு காரணம்

அநர்த்தமாவது ப்ரதிகூல ப்ராப்தியும் அநுகூல நிவ்ருத்தியும் - அநர்த்தம் எனும் சொல்லாவது விரும்பத்தகாததை அடையச் செய்கிறதுவதும் மற்றும் விரும்பிய வற்றை பெற முடியால் செய்கிறதுவும்

இங்கு பாப சப்தம் - சரமஸ்லோக விளக்க சந்தர்பத்தில் பாபத்தின் பொருளாவது

முமுக்ஷுவைப் பற்ற - மோக்ஷ ருசி கொண்ட சரணாகதன் விஷயத்தில்

அநிஷ்ட பலன்களான சாம்சாரிக புண்யங்களையும் சொல்லுகிறது - விரும்பத்தகாத பலனாகிற ப்ராக்ருத ஸுக ரூபமான பலன்களையும் பாப காரணமாக உணர்த்தப் படுகிறது.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'பாபங்களிலிருந்து விடுவித்து புண்யங்களை அநுபவிக்கச் செய்வது' என்கிற பொருள் சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

87. **பாப புண்ய கர்மாக்களின் விளைவு**

1. **ந புக்தம் ஷீயதே கர்ம** என்கிற சாஸ்த்திர விதிப்படி, பாப புண்ய கர்மாக்கள் அநுபவியாமல் அழியாது; இது சாஸ்த்திர நியமம்.

2. அதனால் தான் ஸர்வேஸ்வரனான கண்ணன், புண்யத்தின்ல் ஏற்படும் ஸுகமும் பாபத்தினால் விளையும் துன்பத்தையும் கர்ம அநுகுணமாக பகவான் செய்யும் பல ப்ரதானம் என உணர்ந்து செயல் பட அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறான்.

ஸுக துக்கே ஸமே க்ருத்வா லாபாலாபௌ ஜயாஜயௌதத: யுத்தாய யுஜ்யஸ்வ ந ஏவம் பாபம் அவாப்ஸ்யஸி

என்கிறது கீதோபதேசம்.

அதாவது

இதுவரை ஆத்மா என்பது அழியாதது, உடலை விட மாறுபட்டது, உடல் மூலம் உண்டாகும் உபாதைகளால் தீண்டப்படாதது, சுக துக்கங்களால் பாதிப்பு அடையாதது என்று உணர்ந்து கொண்டாய். மேலும், இந்தப் போரின் மூலம் உண்டாகும் லாபநஷ்டம், வெற்றிதோல்வி முதலியவற்றைக் கருத்தில் கொள்ளாமல், போர் மூலம் உண்டாகப் போகும் ஸ்வர்கம் முதலான பலன்களில் விருப்பு வைக்காமல் போர் புரிவாயாக. இதன் மூலம் உனக்குப் பாபம் என்பது ஏற்படாது. இங்கு பாபம் என்பது என்ன – மீண்டும் மீண்டும் பிறவி எடுத்து சம்சாரத்தில் உழல்வதே பாபம் எனப்பட்டது. இதன் உட்கருத்து – நீ இந்த சம்சார பந்தத்தில் இருந்து விடுபடுவாய் – என்பதாகும்.

ஆக ஆத்மாவின் உண்மையான அறிவை அர்ஜுனனுக்கு க்ருஷ்ணன் இதுவரை புகட்டினான். மேலும், கர்ம யோகத்தை உபதேசிக்கத் தொடங்குகிறான்.

3. ஸ்வாமி தேசிகன், **ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்**, சரணாகதன் விஷயத்தில், புண்ய பாபங்கள் நீங்கும் விதத்தை வர்ணிக்கிறார்.

ஆகையால், சரணாகதனுக்கு விலக்கப் பட்ட பாப புண்ய கர்மாக்களை அவர்கள் மோக்ஷத்தை அடையும் சமயத்தில், ஸர்வேஸ்வரன் அவர்களது புண்ய கர்மாக்களை அவர்களது நண்பர்களிடமும் பாப கர்மாக்களை அவர்களது விரோதிகளிடமும் சேர்த்து விடுகிறான் என சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்கரிதம். விஸரிஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்கிறது மநு தர்ம சாஸ்த்திரம்.

அதாவது, மோக்ஷத்தை அடைபவன், அதன் பொருட்டு தன் தேகத்தை விடும் போது, புண்யங்களை தன் நண்பர்களிடமும் பாபத்தை தன் விரோதிகளிடமும் விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு எம்பெருமான் சரணாகதன் விஷயத்தில் ஸங்கல்பிக்கிறான்.

அதன் பிறகு அந்த சரணாகதன் பாப புண்ய கர்ம பந்தம் அற்று பரமபதத்தை அடைகிறான், என்கிறது சாஸ்த்திரம்.

4. ஆக, புண்ய பாப கர்மாக்கள் அநுபவித்தே கழிக்க வேண்டுவதாகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

88. <u>செய்த வேள்வியர் ஆகமாட்டாதவர்கள் சரணாகதி அநுஷ்டிக்காதவர்</u>

1. ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழி (5-7-5)

எய்தக் கூவுதல் ஆவதே எனக்கு? எவ்வதெய் வத்து ளாயுமாய் நின்று, கைத வங்கள்செய் யும்கரு மேனியம் மானே, செய்த வேள்வியர் வையத் தேவரறாச் சிரீவர மங்கலநகர், கைத்தொழ இருந்தாய் அதுநானும் கண்டேனே

அதாவது,

உன்னைப் பெறுவதற்காகக் கூப்பாடு போடுவதானது எனக்குத் தகுமோ கரிய திருமேனி கொண்ட ஸ்வாமியே ! க்ருதக்ருத்யர்களான

சரணாகதர்கள் வர்த்திக்கிற வானமலைப் பதியிலுள்ளார் எல்லாரும் ஸேவிக்கும்படி எழுந்தருளி இருப்ப வனே! அடியேனும் அவ்விருப்புக் காணப் பெற்றேன்.

மோக்ஷ பலனுக்காக சாஸ்த்திரம் விதித்த சரணாகதியை அநுஷ்டிப்பவனை **செய்த வேள்வியன்** அதாவது க்ருதக்ருத்யன் என்றும் இங்குள்ள காலம் செய்யப் பெறும் பகவத் கைங்கர்யங்கள் அனைத்துமே சரணாகதனின் புருஷார்த்த கோடியில் சேர்ந்ததாகிறது.

2. ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழி (5-7-1)

நோற்ற நோன்பிலேன் நுண்ணறி விலேனாகிலும் இனி யுன்னைவிட்டு,ஒன்றும் ஆற்ற கின்றிலேன் அரவினணை யம்மானே, சேற்றுத் தாமரை செந்நெ லூடுமலர் சிரீவர மங்கலநகர், வீற்றிருந்த எந்தாய். உனக்கு மிகையல்லே னங்கே.

அதாவது,

சாஸ்த்திரம் விதித்த பக்தி யோகத் திற்கு அங்கமான கர்ம யோகம் மற்றும் ஞான யோகம் செய்ய ஞான சக்தி அற்ற என்னை உன்னுடைய ரக்ஷிய வஸ்துவாகக் கருதி ஏற்க வேண்டுவதாய் சரண் புகுகிறபடி.

3. இவ்விளக்கம் ஆசார்ய ஸ்ரீ ஸுக்திகளைக் கொண்டு தெளியலாம்:

ஸ்ரீஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில்,

நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே

அருளியுள்ளார்.

இதில்,

ந தர்மநிஷ்டோஸ்மி

என்கிற பதங்களைக் கொண்டு, பக்தி யோகத் திற்கு அங்கமான கர்ம யோகம் மற்றும் ஞான யோகம் செய்ய ஞான சக்தி அற்ற என்னை, என்று ஆகிஞ்சன்ய அநுஸந்தானம் செய்து சரணாகதி அநுஷ்டானத்தை மேற் கொள்கிறார்.

ஸ்ரீ ராமானுஜரால் அருளப் பட்ட சரணாகதி கத்யத்தை கவனிக்க வேண்டும். அது, ஸ்ரீராமானுஜர், தான் சரணாகதி அநுஷ்டிக்கும் ப்ரகரணம், என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அநாலோசாத விசேஷ அசேஷ லோக சரண்யா

என்று ஆரம்பித்து,

த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே - அத்ர த்வயம்

என அந்த பத்தி முடிவில் அருளி எம்பெருமானின் திவ்ய திருவடிகளில், த்வய மந்த்ர பூர்வகமாக, சரணாகதி அநுஷ்டிக்கிறார், ஸ்ரீராமானுஜர்.

த்வய மந்த்ரத்தில் ஐந்து அங்கங்களும் சொல்லப் படுகிறது, என்பதை அறியவும்.

ஸ்வாமி தேசிகன், தான் அருளிய அடைக்கலப்பத்தில்,

பத்தி முதலாமவற்றில் பதியெனக்குக் கூடாமல் எத்திசையும் உழன்றோடி இளைத்துவிழும் காகம் போல் முத்திதரு நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில் அத்திகிரி அருளார்க்கு அடைக்கலம் நான் புகுந்தேனே

என

பக்தி யோகத் திற்கு அங்கமான கர்ம யோகம் மற்றும் ஞான யோகம் செய்ய பாங்கான இடம் அற்றதால், ஆகிஞ்சன்ய அநுஸந்தானம் செய்து சரணாகதி அநுஷ்டானத்தை மேற் கொண்டதாக விளக்குகிறார்

4.செய்த வேள்வியர் ஆகமாட்டாதவர்கள் சரணாகதி அநுஷ்டிக்காதவர்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

89. கலங்கி உபாய புத்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடே ஒக்கும்

முமுக்ஷுப்படி 253 சூர்ணிகை - கலங்கி உபாய புத்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடே ஒக்கும்

1. மேல் குறிப்பிடது, தென்கலை ஸம்ப்ரதாய பிள்ளைலோகாசாரின் வரி.

2. முதலில் ப்ரபத்தி பற்றி தெளிவோம்.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், தனது க்ரந்தங்களின் வாயிலாக, சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷத்திற்கு உபாயம் என தெளிவு படுத்தியுள்ளார், ஏன் ஏன்றால் பற்பல சாஸ்த்திரங்கள் அவ்வாறு கூறுவதினால்.

 # நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுக்த: ஸந்யாஸஸ் த்யாக இத்யுக்த: சரணாகதி ரித்யபி

என்கிற ப்ரமாணத்தினால், கூறப்படுவது என்னவென்றால்,

ஐந்து அங்கங்களுடன் கூடிய ஆத்ம ஸமர்ப்பண அநுஷ்டானம் என்கிற மறு பெயருள்ள ந்யாஸமே, ஸந்யாஸம் என்றும், த்யாகம் என்றும், சரணாகதி என்றும் சொல்லப் படுகிறது.

ஆக, சரணாகதி ஒரு அநுஷ்டான முறையே எனத் தெளிவாகிறது.

 # அப்ரார்திதோ ந கோபாயேத் இதி தத் ப்ரார்தனா மதி: கோபாயிதா பவேத் ஏவம் கோப்த்ருத்வ வரணம் ஸ்ம்ருதம்

என்பதினால்,

மோக்ஷ பலனை ப்ரார்த்திக்காத போது, எம்பெருமான் அப்பலனை கொடுப்பதில்லை. ஆக, இதனாலும் மோக்ஷத்திற்கான சரணாகதி அநுஷ்டான முறை தேவைப்படுகிறது என அறியலாம்.

மேலும், ஸ்ரீராமானுஜர் ஒரு பங்குனி உத்திர நன்னாளில் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் தாயார் சேர்த்தியில் சரணாகதியை அநுஷ்டித்துள்ளார்.

இதையே, சரணாகதி கத்யம் என்ற ஒரு உரையாடலாக ஸ்ரீ ராமானுஜரால் அருளப் பட்டது.

பாராமார்த்திக பகவத் சரணாரவிந்தயுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஞான பரம்பக்தி க்ருத பரிபூரண அநவரத நித்ய விஷததம அனன்யப்ரயோஜன அநவதிகாதிஷயப்ரிய பகவதனுபவ ஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரிதா அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதி ரூப நித்ய

கைங்கர்ய ப்ராப்த்யுபேக்ஷயா பாரமார்திகி பகவத் சரணாரவிந்த சரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே

என திவ்ய தம்பதிகளிடம் சரணாகதி செய்து போக,

அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே

என்று தாயாரால் அந்த சரணாகதி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

அவ்வரிகள் சரணாகதி கத்யத்தில் உள்ளன.

ஆக, சரணாகதி அநுஷ்டானம் தேவையாகிறது.

ஒவ்வொரு பங்குனி உத்தரத்திலும் ஸ்ரீரங்கத்தில் கத்யங்கள் ஸேவிக்கப்படுகின்றன.

சரணாகதி காவ்யமான ஸ்ரீமத் ராமாயணத்தில், பல சரணாகதி அநுஷ்டானங்கள் நிறைவேற்றப் பட்ட போதிலும், முக்கியமாக உதாஹரிக்க வேண்டுவன விபீஷண சரணாகதியும், பரத சரணாகதியுமே.

ஸ்ரீவிபீஷணனாழ்வார்,

ஸர்வ லோக சரண்யாய ராகவாய மஹாத்மனே. நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணம் உபஸ்திதம்

என்று வானரர்கள் மூலமாக ஸ்ரீராமனிடம் ஆத்ம ரக்ஷா பர ஸமர்ப்பணமாகிய சரணாகதியைப் செய்து போக,

ஸ்ரீராமனும் ‘

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்திதச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம

என்று ஒரு முறை சரணாகதி செய்தவனை தான் ரக்ஷிக்கும் வ்ரதம் உடையவன் என்றான்.

ஆனால், தென்கலை ஸம்ப்ரதாயத்தில், சம்சாரி ஜீவர்களுக்கு சரணாகதி அநுஷ்டானம் உபாயமல்ல, அது அபாயமாகும் எனக் கூறுகின்றனர்.

ஆக, ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்துக்கும்,தென்கலை ஸம்ப்ரதாயத்துக்கும் வித்யாஸம், இதனாலும், உள்ளது என அறிய வேண்டும்.

3. தர்ம தேவதை கூறிய பாதக சப்தமாவது எது என்று தெளிய வேண்டும்.
விஷ்ணு தர்மத்தில்,

அத: பாதக பீதஸ்த்வம்

என்கிற வசனத்திற்கு, தர்ம தேவதை பாதகமாக சொன்ன பக்தி யோகம் செய்யத் தகாதது என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

இதற்கு, சாஸ்த்ரீயமான அர்த்தமாவது :

இந்த ஸ்லோகத்தில் பாதக சப்தத்தாலே பக்தி யோகத்திற்கு தடையாக உள்ள பாதகங்களே சொல்லப் படுகின்றன.

அந்த பக்தி யோகத்திற்கு தடையான பாபங்கள் விலக ப்ராயசித்தங்களைச் செய்ய வேண்டியது கடினம் என்று பயந்தாயேயானால், அந்தந்த பாபங்களுக்கா ப்ராயசித்தங்களை விட்டு ஸ்ரீமந் நாரயணனிடத்தில் ஒரு சரணாகதி அநுஷ்டானத்தினால், அந்த பக்தி யோகத்தை செய்ய தடையாக இருக்கும் பாபங்கள் போகும். இதை கண்ணன் கீதையில் (7-14)

மாமயேவ ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே

என விவரித்தருளினான்.

ஆனால் மோக்ஷம் அடைவதற்கு விரோதியான பாபங்கள் போவதற்கு பக்தி யோகத்தை செய்ய முடியாதவன், பக்தி யோகத்தை விட்டு சரணாகதியை அநுஷ்டி வேண்டும், என்பது தெளியப்படுவது.

இப்படி உபநிஷத்துக்கு அநுகுணமான ஸ்லோக அர்த்தத்தை விட்டு, அதற்கு முரணாக

ஸர்வகுஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரமம் வச:

என்று கண்ணனாலே பகவத் கீதையில் (18-64) உயர்ந்ததாகவும் பாதுகாக்கப் பட வேண்டியதாகவும் சொல்லப் பட்ட பக்தி யோகத்தை தர்ம தேவதை பாதகமாக நிந்தித்த்து என்பது ப்ரமாண விருத்தமாகும்.

இந்த முமுக்ஷுபடி வரி கொண்டு ப்ரபத்தியையும் பாதக கோஷ்டியில் ஸித்தாந்த ஏகதேசிகள் சேர்த்தார்கள் அத்தனை.

4 கலங்கி உபாய புத்யா பண்ணும் **ப்ரபத்தியும்** பாதகத்தோடே ஒக்கும் - என்கிற முமுக்ஷுபடி வரி இரு வகைகளாக அர்த்தம் கொள்ளலாம்.

தென்கலை ஸம்ப்ரதாயத்தில், சரணாகதி மனோ வ்யாபாரம் என்பர்; அதாவது ஸித்தோபாய ப்ரதிபத்தியே சரணாகதி என்பர்.

ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாயத்தில், சரணாகதி அநுஷ்டானம், சாஸ்த்திர விதிப்படி ஐந்து அங்கங்களோடு அநுஷ்டிக்க வேண்டுவதாக அறிவுறுத்தப் படுகிறது.

ஆக, தென்கலை ஸம்ப்ரதாயத்தில், ப்ரபத்தி அநுஷ்டானத்தை பாதகம் எனக் கூறி நிந்திக்க வாய்ப்புண்டு.

ஆனால், அது வேத வரிகளோடும் பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யத்தோடும் விரோதிக்கும். விதிக்கப் பட்ட சரணாகதி அநுஷ்டானம் பாதகம் ஆக முடியாது.

சாஸ்த்திரங்கள் சரணாகதியை ஸக்ருத் கர்தவ்யமாக விதிக்கிறது.

இதை, ஒரு சரணாகதன், மீண்டும் அநுஷ்டிப்பனேயானால், அது தவறு, என வ்வாமி தேசிக ஸம்ப்ரதாயத்தில் கூறக் குறையில்லை.

தென்கலை ஸம்ப்ரதாயத்தில், **புந: ப்ரபத்திக்கு** ப்ரஸக்தியே கிடையாது; ஏனெனில் ஸித்தோபாய ப்ரதிபத்தி என்கிற மனோ வ்யாபாரம் ஸக்ருத் கர்த்தவ்யமாக முடியாது.

யாவத் ஆயுஷம் அந்த ப்ரதிபத்தி இருந்தே போக வேண்டும் அன்றோ!

அப்படி இருக்க, **புந: ப்ரபத்தியை** பாதக சப்தத்தினால் முமுக்ஷுபடி வ்யாக்யானம் விளக்கி அமைகிறது.

4. ஆக, சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும், ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என கூறும் ஸித்தாந்த ஏகதேசிகள், புந: ப்ரபத்தியை பாதக சப்தம் கொண்டு நிந்திக்கப்படுகிறது என்கிற வ்யாக்யானம் (முமுக்ஷுப்படி 253 சூர்ணிகை - கலங்கி உபாய புத்யா பண்ணும் ப்ரபத்தியும் பாதகத்தோடே ஒக்கும்) முற்றிலும் அநுபபன்னம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

90. <u>ஸர்வ பாபேப்யோ மோக்ஷம் என்பதில் புத்தி பூர்வக அபசாரமும் சேரும்</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து என்பதால் சரணாகதனுக்கு புத்தி பூர்வக உத்தராகமும் பலனளிக்காது' என்கிற பொருள் ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து என்பதால் சரணாகதனுக்கு புத்தி பூர்வக உத்தராகமும் பலனளிக்காது' என்கிற பொருள் பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. சரணாகதனின் கர்மாக்கள் விலகும் முறை:

சரணாகதன் விஷயத்தில் நீக்கப் பட வேண்டிய சம்சாரத்திற்கு காரணமான கர்மாக்களின் வகைகள்:

 # ஸஞ்சித கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை - இந்த கர்மாக்களின் பலன்களை அநுபவித்து முடிய எத்தனை பிறவிகள் ஆகலாம் என கணிக்க முடியாத அளவிற்கு அதிகமானவை.

 # அநப்யுகத ப்ராரப்த கர்மாக்கள் - இந்த பிறவியல் பலன் கொடுக்க ஆரம்பித்த கர்மாக்கள் நீங்கலாக, பலன் கொடுக்க ஆரம்பித்த மற்ற கர்மாக்கள். (ப்ராரப்த கர்மாவாவது, பலன் கொடுக்க ஆரம்பித்து, ஒரு சில பிறவிகளைக் கொடுக்க வல்ல பாப புண்ய கர்மாக்கள்)

 # அபுத்திபூர்வக உத்தராகம் - 'சரணாகதி' அநுஷ்டித்த பிறகு தெரியாமல் செய்யும் பாபங்கள்.

 # புத்திபூர்வக உத்தராகம் - 'சரணாகதி' அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்கள்.

சரணாகதர்களுக்கு (த்ருப்த ப்ரபன்னர்களுக்கு), அந்த அநுஷ்டான துவக்கத்தில், அதாவது த்வய மந்த்ர உச்சரிப்பின் ஆரம்பத்தில், ஸஞ்சித கர்மாக்களையும், அநப்யுகத ப்ராரப்த கர்மாக்களையும், விலக்க ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் அநுக்ரஹித்து விடுகிறான்.

'சரணாகதி' அநுஷ்டித்த பிறகு அபுத்திபூர்வக உத்தராகங்களை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தன் கருணையின் காரணமாக, பாபமாகவே கருதாது விலக்கு அளித்து விடுகிறான்.

'சரணாகதி' அநுஷ்டித்த பிறகு புத்திபூர்வக உத்தராகங்களை போக்க, இரு வழிகள் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன.

அதாவது, 'ப்ராயச்சித்தமான' சரணாகதியை அவனிடத்தில் அநுஷ்டிப்பது மற்றும் 'ப்ராயச்சித்தமான' சரணாகதியை அநுஷ்டிக்காமல், அதற்கான தண்டனைகளை அநுபவிப்பது.

ஆக, சரணாகதி அநுஷ்டானத்தினால், பிறகு ஏற்படும் புத்தி பூர்வக அபசாரங்கள் விலகாது.

3. மோக்ஷோபாயத்தை அநுஷ்டித்தவன், பரமபதம் அடைய விரோதி கர்மாக்கள் விஷயத்தில் உபநிஷத் வரிகள்.

கௌஷீதகி உபநிஷத் வரிகளாவது,

தத் ஸுக்ருத் துஷ்க்ருதே தூனுதே. தஸ்ய ப்ரியா ஞாதய: ஸுக்ருதம் உபயந்தி அப்ரியா துஷ்க்ருதம்

அதாவது,

மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்து பரமபதத்தை அடைய சரீர த்யாகம் செய்யும் போது, அவனது புண்யங்கள் நண்பர்களிடையும் பாபங்கள் விரோதிகளையும் சென்றடைகிறது.

முண்டகோபநிஷத் வரிகளாவது,

யதா பஷ்யத பஷ்யதே ருக்ம வர்ணம் கர்தாரமீசம் புருஷம் ப்ருஹ்ம யோநிம். ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சன: பரமம் ஸாம்யம் உபயிதி

அதாவது, உபாஸகனுக்கு எப்போது ஜகத் காரணனான, அதி ஸுந்தர திருமேனி உடையவனான வாஸுதேவனைக் காண்கிறானோ அப்போதே புண்ய பாப கர்மங்களை உதரிவிட்டு பகவானுக்கு ஸாம்ய நிலையைப் பெறுகிறான்.

ஆக, பாப புண்ய கர்மாக்கள், அநுபவியாமல் தாண்டாது.

4. சரணாகதி கத்யத்தில் அருளிய முக்தனாகும் முன்பு களைய வேண்டிய கர்ம விரோதி வர்க்கம்.

ப்ரபன்னன், முக்குணங்களலான சரீர ஸம்பந்தமானது தேஹ அவஸானத்தளவும் நீடிப்பதினால், சம்சாரத்தில் தான் இருந்திருக்கிற நிலையை உணர்ந்து இவ்வரிகள் ஸ்வரூப நிஷ்டை ஸித்திக்க அநுஸந்திக்க ப்ராப்தம்:

மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம் ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம் தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம்

அதாவது,

இந்தப் ப்ரக்ருதி எனப்படும் முக்குணங்களாலான (ஸத்வம், ரூஸ் மற்றும் தமஸ்), சம்சாரி ஜீவர்களின் சரீரம் இருக்கிறதே ,

இது அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது.

ஸ்ரீமந் நாராயணன் , பரமன்; அவனுக்கு நாம் நல்லடியார்கள் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து,

அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது.

ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது.

தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது.

மாயா வித்யை செய்பவன்,காண்பவரை மயக்க , தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று

ப்ரக்ருதியானது , சரீரத்தையும் , இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து

சம்சாரி ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல்,

அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து,

புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது.

இதை அநுஸந்திப்பதால், அவ்வப்போது தலை தூக்கும் சரீர-ஆத்ம ப்ரமம் நீங்கி, அசித் விலக்ஷணனான தன் ஸ்வரூபத்தை உணர்ந்து உத்தர க்ருத்யத்தில் செயல் பட ஹேதுவாகும்.

ப்ரபன்னன், தனக்கு ஸ்வாமியானவனிடம், தோஷ க்ஷமாபணம், அநுஸந்திக்க ப்ராப்தம்.

மனோவாக் காயை: அனாதிகால ப்ரவ்ருத்த அநந்த அக்ருத்ய கரண க்ருத்யா கரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்தாபசராந் ஆரப்த-கார்யாந் அநாரப்த கார்யான் க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாம்ச ஸர்வாந் அஶேஷத: க்ஷமஸ்வ

அதாவது, பல வித தோஷங்களுக்கு க்ஷமை ப்ரார்த்திக்க ப்ராப்தம்; பகவத் அபசாரம், பாகவத அபசாரம், அஸஹ்ய அபசாரம், செய்த பாபங்கள், செய்கின்ற பாபங்கள், பாபச் செயல்களால் மேலும் ஸித்திக்க போகிற பாபங்கள் அனைத்துக்கும் க்ஷமை ப்ராப்தம்.

இதை அநுஸந்திப்பதால், ப்ரக்ருதி சம்பந்தத்தினால் ஏற்படும் ப்ராப்த விரோத செயல்களைத் தெளிந்து, தன் ஸ்வரூபத்தை உணர்ந்து செயல் பட ஹேதுவாகும்.

இங்கு அநுஸந்திக்கப்படும் பாப க்ஷமையாவது **க்ருதான் க்ரியமாணான் கரிஷ்யமாணான்** என்று முக்கலங்களையும் குறிக்கிறது; இங்கு, **கரிஷ்யமாணான்** என்று செய்யப் போகிற பாபங்களுக்கு க்ஷமை ப்ரார்த்திப்பதாவது, தேச கால அவஸ்தா வைகுண்யத்தாலே, ஏற்படும் அபுத்திபூர்வக பாபங்களுக்கான க்ஷமை.

சரணாகதனுக்கு புத்தி பூர்வக அபசாரத்துக்கு, ப்ராயஸ்சித்தம் விதித்திருப்பதால், அவ்வழியாலே அப்பாபங்கள் கழியும்.

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என்கிறது சாஸ்த்ரம்.

அதாவது, மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான ப்ராயசிதத்தை (பரிஹாரத்தை) உடனடியாக செய்ய வேண்டும். அப்படி பரிஹாரமாக செய்ய வேண்டிய செயல் என்ன என்றால் எம்பெருமானிடம் மன்னிப்பு கோருவதாகிய ‘ப்ராயச்சித்த சரணாகதி’ ஆகும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்**

உத்தராகத்தில் புத்தி பூர்வகம் அல்லாதவை ஈஸ்வரன் க்ஷமிக்க ஷ்லேஷியாதே போம். புத்தி பூர்வங்களானவை ப்ரபன்னனுக்கு "ப்ராயஸ்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்" என்கையாலே புந: ப்ரபத்தியாலே சமிக்கும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

உத்தராகத்தில் புத்தி பூர்வகம் அல்லாதவை - சரணாகதி அநுஷ்டானத்தின் பிறகு தெரிந்தே செய்யும் பாபங்கள் அற்றவை, அதாவது தெரியாமல் ஏற்படும் பாபங்கள்

ஈஸ்வரன் க்ஷமிக்க ஷ்லேஷியாதே போம் - ஈஸ்வரனால் பாபமாகக் கருதப் படாமல் மன்னிக்கப் படுகிறது

புத்தி பூர்வங்களானவை - சரணாகதி அநுஷ்டானத்தின் பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களானது

ப்ரபன்னனுக்கு "ப்ராயஸ்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்" என்கையாலே - சாஸ்த்திரமானது மற்றொரு மன்னிப்பு கோரும் ப்ராயஸ்சித்த ப்ரபத்தியை விதிக்கையாலே

புந: ப்ரபத்தியாலே சமிக்கும் - அந்த ப்ரயஸ்சித்த ப்ரபத்தியாலே தெரிந்து செய்யும் பாபங்கள், சரணாகதனுக்கு விலக்கப்படுகிறது

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து என்பதால் சரணாகதனுக்கு புத்தி பூர்வக உத்தராகமும் பலனளிக்காது' என்கிற பொருள் சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

91. <u>தாள் பணிந்தோம், வன்துயரை மருங்கு கண்டிலமால்</u>

1. ஸ்வாமி நம்மாழ்வார் பெரிய திருவந்தாதி:

வானோ? மறிகடலோ? மாருதமோ? தீயகமோ? கானோ? ஒருங்கிற்றும் கண்டிலமால், ஆன் ஈன்ற கன்று உயரத்தாம் எறிந்து காய் உதிர்த்தார் தாள் பணிந்தோம், வன்துயரை யாவா! மருங்கு

2. பத உரை :

வானோ - ஆகாசமோ?

மறி கடலோ - அலைகள் நிறைந்த கடலோ?

மாருதமோ - காற்றோ?

தீயகமோ - நெருப்போ?

கானோ - காடோ?

ஒருங்கிற்றும் - என மறைந்து போன இடம்
(எது என்றால்)

வன் துயரை - வலிய (நமது) பாபங்களை

மருங்கு கண்டிலமால் - ஸமீபத்தில் காணப்படாமல்
(எதைப் போல என்றால்)

ஆன் ஈன்ற கண்டு - பசுவினால் பெறப்பட்ட வத்ஸாஸுரனை

உயர எறிந்து - (விளாமரத்தின்) மேலே வீசியெறிந்து

காய் உதிர்த்தார் - (அவ்விளாமரத்தின்) காய்களை உதிர்த்தவன்
(பாபங்களைக் களைய செய்ய வேண்டுவதாவது)

தாள் - கண்ணபிரானுடைய திருவடிகளை

பணிந்தோம் - சரணமாக பற்றி நின்றோம், என்றபடி.

3. விளக்கம் :

கம்சனாலே ஏவப்பட்ட அசுரன், விளா மரத்தின் வடிவமாய், கண்ணன் தன் கீழ் வரும்பொழுது மேல் விழுந்து கொல்லுவதாக எண்ணி வந்து நிற்க; அதனை அறிந்து கண்ணன், அங்கு தன்னை முட்டிக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவம் கொண்டு வந்த வத்ஸாஸுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, விளவும் கன்றுமாகிய இருவரும் சிதைந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்து இறந்தனர் என்பது கன்று உயர எறிந்து காய் உதிர்த்த வரலாறு.

 # தாள் பணிந்தோம், வன்துயரை மருங்கு கண்டிலமால்

என்பதாவது

சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் அரண் அமைந்த மதிள் சூழ் திருக் கண்ணபுரத் தரணி யாளன் தனது அன்பர்க்கு அன்பாகுமே

என்கிற திருவாய்மொழி பாசுரத்தின்படி

அதாவது,

ஞான, சக்தி, கர்மானுஷ்டானம் போன்றவைகளில் குறைகள் இருந்தாலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடியை சரணமாக பற்றினவர்க்கு, சரீர காலம் முடிந்த பிறகு, அவன் வைகுந்தத்தை கொடுத்தருளுகிறான், எனபதாயிற்று.

ஆக, சரண்யனின் திருவடிகளை பற்றி நிற்பதே, சம்சார பந்த காரணமான பாபங்களைக் களைய, சரணாகதனின் செயலாகும்.

சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது; அதையே ஆண்டாள், திருப்பாவையில், அநுக்ரஹிக்கிறாள்.

தூமலர் தூவித் தொழுது - அந்த ஆசார்யனை முன்னிட்டு ஸ்ரீமந் நாராயணனை வணங்கி

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க - சாஸ்த்திரம் விதித்த கர்தவ்யமான, ஐந்து அங்கங்களோடு கூடின சரணாகதி அநுஷ்டான மந்திரங்களை ஆசார்யன் உச்சரிக்க அதை உச்சரித்து, அவ்விஷயத்தில் ஆத்ம நிவேதனத்தை மனதினிலும் த்யானித்திருக்க (அதாவது, சரணாகதி அநுஷ்டானம் செய்து போக)

போய பிழையும் புகுதருவான் நின்றனவும் - ஸஞ்சிதம், ப்ராரப்தம் மற்றும் உத்தராகம் அனைத்தையும்

தீயினில் தூசாகும் - மாயனான எம்பெருமான், பாப புண்ய கர்மாக்களை, தீயிலிட்ட தூசு போல அழித்து, (உத்தராகம் அனைத்தையும் ப்ராயஸ்சித்த மற்றும் லகு தண்டனையாலே களைந்து) சரணாகதனுக்கு, மோக்ஷ சாம்ராஜ்யத்தையே அளித்து அருள்கிறான், என்றபடி.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

92. ஸர்வ பாபேப்யோ மோக்ஷம் கேசவம் தோஷ போக்யம் என்பதா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதால் சரணாகதனின் குற்றங்களை போக்யமாக எம்பெருமான் ஸ்வீகரிக்கிறான் என்கிற பொருள் ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதால் சரணாகதனின் குற்றங்களை போக்யமாக எம்பெருமான் ஸ்வீகரிக்கிறான் என்கிற பொருள் பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. எம்பெருமானது வாத்ஸல்யமாவது, சரணாகதியை ஸ்வீகரிக்கக் காரணமாகிறது, என்பது ப்ரமாண ஸித்தம்; அதன் பொருளாக, தன் அடியார்களின் குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்வது (**கேசவம் தோஷ போக்யம்**) என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

பெரியாழ்வார் திருமொழியில்,

தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும் மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்கண் வைத்த என்னுடைய திருவரங்கற் கன்றியும் மற்றொருவர்க்கு ஆளா வாரே

என அருளியிருக்கிறார்.

அதாவது, பெரிய பிராட்டியரே எம்பெருமனிடத்தில், சரணாகதன் செய்த குற்றங்களை எடுத்துரைத்தாலும், தன் அடியார்கள் அவ்வாறு குற்றங்களை செய்ய மாட்டார்கள் என எம்பெருமான் வாதிடுவதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி சரணாகதனின் ஏற்றத்தை விளக்கியுள்ளார்.

இதை ஆதாரமாகக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

இதில், ஆழ்வாரின் திரு உள்ளத்தை பாசுர வரிகளைக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும்

என்ற வரிகளில் உள்ள **போலும்** என்கிற பதம்,

'என்னடியார்கள் தெரிந்து தவறு செய்யாதவர்கள்' என்று உரைக்கவில்லை; ஆனால் அவ்வாறு இருப்பதாக ஒரு தோற்றமுண்டு என்பதாகிறது.

ஆக, இந்த பாசுரம், சரணாகதன் பாபம் செய்ய மாட்டான் என மிகைப் படுத்தி அவன் ஏற்றத்தை கூறுதாகிறது.

அதன் தாத்பர்யமாவது, எம்பெருமானின் கருணையால், சரணாகதன் செய்யும் புத்தி பூர்வக அபராதங்களை அவன் பொருட்டாக மதிப்பதில்லை; அதனால், உயர்ந்த மோக்ஷ பலனுக்கு அதை தடையாக கொள்வதில்லை என்பதாகும். இது ஸகல சாஸ்த்திரங்களோடு ஒத்த விளக்கமாகிறது.

ஆக, இதனால் முறையோடு சரணாகதி அநுஷ்டித்திருந்தால் அதன் பிறகு, தெரிந்தே செய்யும் பாபங்கள் சரணாகதனுக்கு ஏற்படாது, என்பது ஆழ்வாரின் கருத்தில்ல. அப்பாபங்களை, ஒரு சிறு ப்ராயஸ்சித்த ப்ரபத்தியாலோ அல்லது லகு தண்டனையாலோ களையப்படும், என்பதே ப்ரமாண பூர்வகமான விளக்கம். அது மோக்ஷ பலனுக்கு ப்ரதிபந்தகமாகாது என்பதே கருத்து.

3. பெரியாழ்வார் திருமொழி பாசுரத்துக்கு, ஸ்ரீராமாயண அவதார சம்பவம் எடுத்துக்காட்டு, என நம் பூர்வர்கள் விளக்குவர்.

ஸ்ரீ ராம அவதாரம் முடிந்த பிறகு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனும் ஸ்ரீ மகாலட்சுமி பிராட்டியும், பரமபதத்தில் (ஸ்ரீ வைகுண்டம்) பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.
பிராட்டி, நீங்கள் ஏன், ஸ்ரீரங்கத்தில் தெற்கு நோக்கி பள்ளிகொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்கிறாள்.

பெருமாளும், நம் விபீஷணன் அரசாண்டு வருகிற இலங்கையை கடாஷிக்கவே அப்படி சயனித்துள்ளேன் என்கிறார்.

முன்பு, விபீஷணன், இராவணனிடத்தில், சீதாபிராட்டியை ஸ்ரீராமனிடம் விட்டு விடும் படி கூற, அதற்கு இராவணன் மறுக்க, விபீஷணனும் இந்த சீதாபிராட்டி இலங்கை வந்ததில் இருந்து நாட்டிற்கு ஒரே அபசகுநங்களாகவே நிகழ்வதாகவும், அதனால் தான் சீதா பிராட்டியை கொண்டு விடும் படியும் சொல்லவதாக, விபீஷணன் சொன்னான்.

அதை பிராட்டி நினைவு படுத்தி, அதாவது சரணாகதனான விபீஷணன், தன்னைக் குறை கூறியதாக, ஒரு தோற்றத்தை ஏற்படுத்தினாள்.

ஸர்வேஸ்வரன், பிராட்டியிடம், விபீஷணன் அப்படி சொல்லி இருக்க மாட்டான்; அப்படி சொல்லி இருந்தாலும், அது நன்மை செய்வதற்கே இருக்கும், என்றான்.

இதன் தாத்பர்யபாவது,

வாத்ஸல்யத்தையே குணமாகக் கொண்ட பெரிய பிராட்டி, சரணாகதர்கள் பக்ஷத்தில் எம்பெருமானின் திருவுள்ளம் எத்தகையது என தெளிய, இவ்வாறு ஒரு குற்றத்தை விபீஷணன் செய்ததாகக் கூறி, எம்பெருமானின் திருவுள்ளம் அறிய வகை செய்தாள்.

இதுவே பாசுரத்தின் நோக்கு. இந்த பாசுரம் கொண்டு, சரணாகதர்களுக்கு தவறு செய்ய அநுமதி கிடைத்து விட்டதாகக் கொள்ளலாகாது.

கேசவம் தோஷ போக்யம் எனும் பூர்வபக்ஷிகளின் வாதம் சாஸ்த்திர விரோதம்.

4. சரணாகதர்களின் அபசாரத்தை மனம் உவந்து ஏற்பான் ஸர்வேஸ்வரன், எனும் கருத்து பல விதமான ப்ரமாணங்களுக்கு முரணாகும்:

சீக்ஷா வல்லி, தைத்திரீய உபநிஷத், **ஸத்யம் வத** , **தர்மம் சர** (உண்மையே பேசு; தர்மப்படியே ஒழுகு) என்கிறது.

மாத்ரு தேவோ பவ , **பித்ரு தேவோ பவ**, '**ஆசார்ய தேவோ பவ** , **அதிதி தேவோ பவ** (அன்னை, தந்தை, குரு அதிதி ஆகியோரை தெய்வமாகப் போற்ற வேண்டும்) என்பதும் உள்ளன.
இப்படி இருக்க, குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானை மகிழ்விக்க, இந்த விதிகளை பின் பற்றாமல், குற்றம் செய்து போக வேண்டும், என அர்த்தமாகிறது.
ஆக இது, ப்ரமாண விரோதம்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளின ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

விஹிதத்வாத் ச ஆஸ்ரம கர்மாபி

என்கிறார்.

அதாவது, இதை ஸ்ரீபாஷ்ய உரையில், ஸர்வேஸ்வரனுடைய ஆணையால் அனைவரும் வர்ண ஆஸ்ரம கர்மாக்களை அநுஷ்டிக்க வேண்டும், என்று கூறப்படுகிறது.

இப்படி இருக்க, குற்றங்களை சந்தோஷமாக ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானை மகிழ்விக்க, இந்த விதிகளை பின் பற்றாமல், குற்றம் செய்து போக வேண்டும், என அர்த்தமாகிறது.

ஆக இது, ப்ரமாண விரோதம்.

ஆனால்,

மநீஷீ வைதிகாசாரம் மநஸா அபி ந லங்கயேத்

என்கிறது பாஞ்சராத்ர சாஸ்த்திர வாக்கியம்.

இதன் பொருளாவது, சாஸ்த்ரத்தில் விதிக்கப் பட்டவைகளை மீறுவதற்கு மனதாலும் நினைக்கக் கூடாது. ஏன் எனில் உகந்து ஏற்றுக் கொள்ளும் எம்பெருமானின் மகிழ்ச்சிக்காக.

ஆக, **கேசவம் தோஷ போக்யம்** என்பது பூர்வபக்ஷிகளின் அதிவாதம். அதாவது, வாத்ஸல்யத்தை மிகைப் படுத்தி கூறுவதாகும். ப்ரமாண விரோதம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

புத்தி பூர்வக உத்தராகமும் ஈஸ்வரனுக்கு போக்யம் என்று விவக்ஷிதமாகில் ப்ரபந்நருக்கு இதுவே யதா சக்தி ஸம்பாத்யமாம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

புத்தி பூர்வக உத்தராகமும் - சரணாகதி அநுஷ்டாத்திற்கு பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களும்

ஈஸ்வரனுக்கு போக்யம் - எம்பெருமானுக்கு உகந்தவையே

என்று விவக்ஷிதமாகில் - எனும் அர்த்தம் கொண்டால்

ப்ரபந்நருக்கு - சரணாகதனுக்கு

இதுவே - இந்த தெரிந்தே செய்யக்கூடிய பாபங்களே

யதா சக்தி ஸம்பாத்யமாம் - அவரவர்கள் சக்திக்கு ஏற்ப செய்ய வேண்டுவதாகும். (இது சாஸ்த்திர விரோதம் என்பதை உணர்த்தும் வகையில் இந்த பங்க்தி அமைக்கப் பட்டிருக்கிறது)

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதால் சரணாகதனின் குற்றங்களை போக்யமாக எம்பெருமான் ஸ்வீகரிக்கிறான் என்கிற பொருள் சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

93. புத்தி பூர்வக பாபங்களுக்கு ப்ராயஸ்சித்தம் தேவியில்லையா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதால் சரணாகதனின் குற்றங்களை ஒரு ப்ராயஸ்சித்தம் அன்றிக்கே பகவான் விலக்குகிறான் என்கிற பொருள் ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதால் சரணாகதனின் குற்றங்களை ஒரு ப்ராயஸ்சித்தம் அன்றிக்கே பகவான் விலக்குகிறான் என்கிற பொருள் பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. சாஸ்த்திரங்கள், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளில் மோக்ஷத்திற்கான சரணாகதி செய்தவர்களுக்கு, எக்காரணத்தினாலும் மோக்ஷ பலன் கிடைக்காமல் போகாது, என உறுதி அளிக்கின்றன:

வாமன புராணத்தில், மஹரிஷி கூறும் போது,

தேவ சார்ங்கதரம் விஷ்ணும் யே ப்ரபந்நா: பராயணம். ந தேஷாம் யம ஸாலோக்யம் ந ச தே நரகோகஸ:

என்கிறார்.

அதாவது, சார்ங்கம் என்னும் வில்லை உடைய நாராயணனே தாங்கள் பெற வேண்டிய உயர்ந்த பலன் எனக் கருதி, அவன் திருவடிகளில் சரணாகதி செய்தவர்கள், யம லோகம் செல்வதில்லை.

அவர்களுக்கு நரக இருப்பும் இல்லை.

பராசர மஹரிஷி விஷ்ணு புராணத்தில்,

ஸ்வபுருஷ மபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததியம கில தஸ்ய கர்ணமூலே –பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹ மந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்

என அருளிச் செய்தார்.

அதாவது, இது யமன் கூறும் வார்த்தைகள். தன்னுடைய கைகளில் பாசக்கயிற்றுடன் உள்ள தன் கிங்கரர்களைப் பார்த்து யமன், 'நான் சாதாரணமானவர்களுக்கே ப்ரபு ஆவேன். எனது அதிகாரம் எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனின் பக்தர்களிடம் செல்வதில்லை. ஆகவே, ஸர்வேஸ்வரனான மதுஸூதனன் திருவடிகளில் சரணாகதி செய்தவர்களிடம் நீ செல்ல வேண்டாம்' என்று உரைத்தான்.

ஸ்ருதி வரிகளும்,

ந கலு பாகவதா: யம விஷயம் கச்சன்தி

இதையே கூறுகிறது.

அதாவது, சரணாகதன் தங்களின் பாபங்களுக்காக யம லோகம் சென்று தண்டனை பெறுவதில்லை, என அறியப் படுகிறது.

இதனால், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, மோக்ஷ பலன் நிச்சயமாகையால், இங்குள்ள காலம், புத்தி பூர்வக அபசாரத்தினாலும் எந்த ஒரு தண்டனையும் கிடையாது, என பூர்வபக்ஷிகள் கூறுவர். இது சாஸ்த்திர விரோதமாகும்.

3. சரணாகதனுக்கு, சரீர முடிவிற்குள் உண்டாகும், ஆகாமியான அபசாரங்கள் இரு வகை:

அபுத்தி பூர்வக அபசாரம் - தேச கால அவஸ்தா நிலைகளால் ஏற்படும் சாஸ்த்திர விரோத செயல்; இது பாபமாகவே கருதப்படுவதில்லை என்பது சாஸ்த்திர நியதி.

புத்தி பூர்வக அபசாரம் - இது

சாஸ்த்திர மர்யாதையை மீறுவதாலும்

தேவதாந்தர ஸம்பந்தத்தினாலும்

பாகவத அபசாரத்தினாலும்

விளைவது;

இதை ப்ராயஸ்சித்தம் கொண்டு பரிஹரிக்காத போது சரீரம் உள்ள அளவிலே பல இன்னல்களை மனத்தாலோ சரீரத்தாலோ சந்திக்க நேரிடும், என்பது சாஸ்த்திர நியதி.

சரணாகதனுக்கு பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகள் ஸ்ருதி வரிகள், உரைக்கிறது;

அதாவது,

இஹைவ கேசித் உபக்ளேசா பவந்தி; கஞ்சா பவந்தி; காணா பவந்தி; அவிதேய பார்யா பவந்தி; அவிதேய புத்ரா பவந்தி

இதன் பொருளாவது, புத்தி பூர்வக அபசாரத்தைச் செய்துவிட்டு சாஸ்த்திரம் விதித்த ஒரு ப்ராயஸ்சித்தத்தை செய்யாத போது, இங்குள்ள காலம் கண்கள் செவிகள் கால்கள் போன்ற புலன்கள் பாதிக்கப் படுவதும், மனைவி மக்கள் போன்ற குடும்பத்திறனால் மனம் நோகப் பெறுவதும், சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகளாகிறது.

மேலும், புத்தி பூர்வக அபசாரத்திற்கு தீங்கு கிடையாது எனக் கொண்டால், சாஸ்த்திரம் விதிக்கும் ப்ராயஸ்சித்த ப்ரபத்தி அர்த்தமற்றதாகும்.

சாஸ்த்திரம்,

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என்கிறது. அதாவது தெரிந்தே ஒரு பாபத்தை சரணாகதன் செய்தானேயானால், ப்ரயஸ்சித்த ப்ரபத்தியே பரிஹாரமாகும், என்றபடி.

ஆக, சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால், ஒரு தீங்கும் இங்கு விளையாது என்பது ப்ரமாண விரோதம். ப்ராயஸ்சித்தம் அநுஷ்டிக்காத போது, இங்குள்ள காலம் பல கஷ்டங்களை அநுபவிக்க உண்டாகும்.

4. ஆக, ஒரு சரணாகதனுக்கு, தெரிந்து செய்யும் பாபம் நேர்ந்தால், அவனுக்கு நரகம் போன்ற யம பயம் கிடையாது என்று

யஸ்மின் கஸ்மின் குலே ஜாதா யத்ர குத்ர நிவாசின வாஸுதேவ ரதா நித்யம் யமலோகம் ந யாந்தி தே

ப்ரமாண வரிகள் கூறுகினறன.

அதாவது

எந்த குலத்தில் பிறந்திருந்தாலும் எந்த இடத்தில் வஸித்தாலும், சரணாகதனுக்கு யம லோகம் கிடையாது என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ஆனால், இங்குள்ள காலத்தில், ஒரு சரணாகதன் மனம் அறிந்தே ஒரு பாபத்தை செய்து விட்டு, ப்ராயச்சித்தமாக மன்னிப்பு கோரும் ஒரு சரணாகதியை செய்யாமல் இருந்தால், சிறு தண்டனைகளைப் பெறுவர் என் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

இந்த கருத்தை ராஜகுமாரர்கள் தவறு செய்தால், அவர்கள் பெறும் குறைவான தண்டனைகளைக் கொண்டு அறியலாம்.

ந ப்ராக்வத் புத்திம் பூர்வாதே ந சாத்யந்தம் அநுக்ரஹ. லகுர் தண்ட பிரபன்னச்ய ராஜ புத்ர அபராதவத்

என்கிற நியாயத்தாலே அறியலாம்.

அதாவது, மோக்ஷத்திற்காக செய்த சரணாகதிக்குப் பின்பு அறிந்து பாபங்கள் செய்தால், சரணாகதிக்கு முந்தய நிலைபோல் பகவத் நிக்ரஹம் (அதனால், தண்டனை) கடுமையாக இராது.

ஆனால், இந்த பாபங்களினால், சரணாகதன் விஷயத்தில் ஸர்வேஸ்வரனின் திருவருளும் இங்குள்ள காலம் குறைந்தே இருக்கும்.

சரணாகதன் விஷயத்தில், மன்னிப்பு கோராத அறிந்து செய்யும் பாபத்திற்கு, ராஜகுமாரின் குற்றத்திற்கான தண்டனை போல் சிறு தண்டனைகள் வந்தே தீரும்.

ஆக, அந்த தண்டனையும் வாராதிருக்க, ப்ராயச்சித்த சரணாகதியை சாஸ்த்திரம் விதிக்கிறது.

ஆக, மோக்ஷத்திற்காக செய்த சரணாகதி பின்பு செய்யப் போகும் பாபத்திற்கு ஒரு போதும் பரிஹாரமாகாது.

நிமித்தம் உதித்தால் அல்லது நைமித்திகம் பிறவாது, எனபது ஸர்வ ப்ரமாண ஸித்தம். அதாவது, தவறு நேர்ந்த பிறகே ப்ராயஸ்சித்தமோ அல்லது அதற்கான தண்டனையோ ஸம்பவிக்க முடியும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

பாபங்களுக்கு த்ருஷ்ட ப்ரத்யவாயங்களும் நரகாதி ப்ரத்யவாயங்களும் உண்டாயிருக்க நரகாதிகள் இவனுக்கில்லை என்று விசேஷ வசனங்கள் சொன்னால் த்ருஷ்ட ப்ரத்யவாயங்களுக்கு பாதகமில்லை. வசன விரோதத்தில் ந்யாயம் ப்ரவ்ருத்தியாது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

பாபங்களுக்கு - சரணாகதன் செய்யும் புத்தி பூர்வக அபசாரங்களுக்கு

த்ருஷ்ட ப்ரத்யவாயங்களும் நரகாதி ப்ரத்யவாயங்களும் - இவ்வுலகில் காணப் படுகிற துக்கங்களும், மரணத்திற்கு பிறகு சம்பவிக்கக் கூடிய நரக பலன்களும்

உண்டாயிருக்க - சாஸ்த்திரக்களால் நிச்சியித்திருக்கிற போது

நரகாதிகள் இவனுக்கில்லை - சரணாகதனுக்கு நரக வாஸம் ஒரு போதும் கிடையாது

என்று விசேஷ வசனங்கள் சொன்னால் - என்று சரணாகதன் விஷயத்தில் சாஸ்த்திரங்கள் விசேஷித்து அறிவுறுத்துவதனால்

த்ருஷ்ட ப்ரத்யவாயங்களுக்கு பாதகமில்லை - இவ்வுலகில் காணப் படுகிற சில துக்கங்கள், சரணாகதனின் புத்தி பூர்வக பாபங்களுக்கு பலனாக சம்பவிக்கும், எனக் கூறுவதற்கு தடையில்லை.

வசன விரோதத்தில் - சாஸ்த்திரத்தில் மேலோட்டமாக தோற்றுகிற முரண்களுக்கு விளக்கமாக

ந்யாயம் ப்ரவ்ருத்தியாது - உலக ந்யாயங்களைக் கொண்டு (புலன்களுக்கு அப்பாற்பட்ட சாஸ்த்திர விஷயங்களில்) தீர்மானிக்கலாகாது. அதாவது, இவ்விஷயத்தில் சாஸ்த்திரத்தில் உள்ள மற்ற வரிகளைக் கொண்டே அர்த்த நிர்ணயம் செய்ய வேண்டும் என்றபடி.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதால் சரணாகதனின் குற்றங்களை ஒரு ப்ராயஸ்சித்தம் அன்றிக்கே பகவான் விலக்குகிறான் என்கிற பொருள் சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

94. ப்ராயஸ்சித்தம் பண்ணாத புத்தி பூர்வக அபசாரங்களுக்கு அநிஷ்டம்?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதற்கு ஏற்ப, புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் அன்றிக்கே, ஒரு லகு ப்ரத்யவாயமும் இங்கே தோற்றாதிருக்க காண்கிறோமே என்பர் பூர்வபக்ஷிகள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்துக்கு விளக்கமாக, அதாவது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதற்கு ஏற்ப, புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் அன்றிக்கே, ஒரு லகு ப்ரத்யவாயமும் இங்கே தோற்றாதிருக்க காண்கிறோமே என்பர் பூர்வபக்ஷிகள்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த விளக்கம், மோக்ஷ காரணமாக சரணாகதியை விதிக்கும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். இது ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாய விரோதம். தூர பரிஹரணீயம்.

2. ப்ரபன்னனின் ஆகாமியான புத்தி பூர்வக உத்தராகம்:

சரணாகதனுக்கு, சரீர காலத்தில், பாபங்கள் இரு வகைகளில் ஏற்படலாம்.

அதன் விளைவாவது,

சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரியாமல் செய்யும் பாபங்களை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தன் கருணையின் காரணமாக, பாபமாகவே கருதாது விலக்கு அளித்து விடுகிறான்.

அதாவது,

தூங்குகிற காலத்திலோ அல்லது அறியாமலோ ஏற்படும் பாபங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன.

கவனக் குறைவினால் ஏற்படும் பாபங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன.

காலம், தேசம், அவஸ்தை போன்ற நிலையில் தன்னை மீறிய காரணங்களினால் ஏற்படும் பாபங்கள் முற்றிலுமாக நீக்கப் படுகின்றன.

சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களை போக்க, இரு வழிகள் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன:

செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு **ப்ராயச்சித்தமான சரணாகதியை** அவனிடத்தில் அநுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், அந்த பாபங்களைக் காரணமாகக் கொண்டு துன்பத்தைக் கொடுக்காமல், மன்னித்து விடுகிறான்.

செய்த பாபத்திற்காக மனதினால் வருத்தம் கொள்ளாமலும், அதற்காக **ப்ராயச்சித்தமான சரணாகதியை** அநுஷ்டிக்காமலும் இருந்தால், இங்குற்ற காலம் அதற்கான லகு தண்டனைகளைக் கொடுத்து இந்த பாபத்திலிருந்து விடுவிக்கிறான், என்கிறது சாஸ்த்திரங்கள்.

முடிவில் மோக்ஷத்தையும் அளிக்கிறான் , தன் கருணையினால் அந்த ஸர்வேஸ்வரன்.

இந்த பரிஹரிக்கப் படாத புத்திபூர்வக உத்தராகம், கழியும் ப்ரகாரமாவது:

அநுதாபாதுபரமாத் ப்ராயச்சித்தோந்முகத்வத: தத்பூரணாசாபராதா: ஸர்வம் நச்சயந்தி பாதச:

அதாவது,

‘தவறு செய்து விட்டோம்’ என்ற குற்ற உணர்ச்சி, தவறுகள் செய்வதை நிறுத்துதல் , தவறுக்கான மன்னிப்பு கோரும் ப்ராயச்சித்தம் செய்ய எண்ணுதல் , ப்ராயச்சித்தம் செய்தல் ஆகியவற்றால் பாபங்கள் அனைத்தும் கால் கால் பாகமாக அழிகின்றன.

3. ஸ்ரீமத் ராமாயண உபமானம்.

அசோக வனத்தில் ஸீதா பிராட்டியை துன்புருத்தி வந்த அரக்கிகள், ஸீதையிடம் சரணம் அடைந்தனர்.

பவேயம் சரணம் ஹி வ:

ஹே ராக்ஷஸிகளே! உங்களுக்கு நான் சரணம் புகுகின்றவள் ஆவேன் (சரணம் என்று அடைந்த ராக்ஷஸிகளைக் காப்பேன்) என ஸீதா பிராட்டி உறுதி அளித்தாள்.

பின்னரும், ராவணனுக்கு பயந்து, அவர்கள் பிராட்டியை துன்புருத்தி வந்தனர். அது சரணாகதன் தெரிந்து செய்யும் பாபமாயிற்றே!

ஆக, தெரிந்து செய்யும் பாபங்களுக்காக, ப்ராயச்சித்தமாக மன்னிப்பு கோரும் ஒரு சரணாகதியை மேற் கொள்ளாமல் இருந்தாலும், சரணாகதர்களுக்கு எந்த தண்டனையிம் இன்றி பலன் அளிக்கப் படுகிறதாக இங்கு ஒரு கேள்வி இங்கு எழுகிறதே!

ராம ராவண யுத்தத்திற்கு பிறகு, சினம் கொண்ட அநுமான், அந்த அரக்கிகளை அழிக்க முன் வருகிறான்.

அப்போது,

மர்ஷயாமீஹ துர்பலா

அவர்களின் தவறுகளை நான் பொறுக்கிறேன்.

பாபானாம் வா ஷுபானாம் வா வதார்ஹாணாம் ப்ளங்கம கார்யம் கருணம் ஆர்யேண ந கஸ்சித் நாபராத்யதி

பாபம் பண்ணவாளோ, நல்லவாளோ, வதம் பண்ணக் கூடிய அளவுக்குத் தப்பு பண்ணவாளோ, யாரா இருந்தாலும் மன்னிக்க வேண்டும். ஒரு தப்புக் கூடப் பண்ணாதவன்னு யாருமே கிடையாது, அபராதமே செய்யாதவன்னு, ஒருத்தனுமே கிடையாது. அதனால, கருணையோட இருக்கணும், தப்பை மன்னிக்கணும்.

என அருளினாள் ஸீதை. இதனால், அரக்கிகள் தண்டனையிலிருந்து விடுபட்டு விட்டதாகவே தோன்றுகிறது.

இப்போது, பரிஹரிக்கப்படாத புத்தி பூர்வக உத்தராகத்துக்கு லகு தண்டனை கிடையாதோ எனும் ஐயத்திற்கான பதிலைக் காண்போம்.

ஸீதை மன்னித்தாலும் கோபமுற்ற அநுமான் தங்களை அழித்து விடுவான் என்ற பயம் அந்த அரக்கிகளுக்கு உண்டானதே, அதுவே லகு தண்டனையாக அமைந்தது. அதனால் அவர்கள் பாபம் நீங்கப் பெற்று சரணாகதி பலனுக்கு அதிகாரத்தைப் பெற்றனர்.

ஆக, ஒரு சில மிருதுவான சரணாகதரை, அவர்களின் அறிந்து செய்யும் தவறுகளுக்காக, **பிராயச்சித்த சரணாகதி** செய்த பின் மன்னிப்பதும், ஒரு சில கடினமான சரணாகதரை அவர்களது அந்த தவறுகளுக்காக இவ்வுலகில் தண்டிப்பதும் அவர்களது பாபங்களைப் போக்கி மோக்ஷதத்திற்காக அவர்கள் செய்த சரணாகதிக்கு பலன் அளிக்க வேண்டும் என்ற ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் கருணையின் காரணமாகவே ஏற்படுகிறது, என்பது ப்ரமாண ஸித்தம்.

4. பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக உத்தராகத்தின் லகு தண்டனைகள் பல வகை.

சரணாகதனுக்கு பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகள் ஸ்ருதி வரிகள், உரைக்கிறது;

அதாவது,

இஹைவ கேசித் உபக்ளேசா பவந்தி; கஞ்சா பவந்தி; காணா பவந்தி; அவிதேய பார்யா பவந்தி; அவிதேய புத்ரா பவந்தி

இதன் பொருளாவது, புத்தி பூர்வக அபசாரத்தைச் செய்துவிட்டு சாஸ்த்திரம் விதித்த ஒரு ப்ராயஸ்சித்தத்தை செய்யாத போது, இங்குள்ள காலம் கண்கள் செவிகள் கால்கள் போன்ற புலன்கள் பாதிக்கப் படுவதும், மனைவி மக்கள் போன்ற குடும்பத்திறனால் மனம் நோகப் பெறுவதும், சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், பரிஹரிக்கப் படாத புத்தி பூர்வக அபசாரத்திற்கான தண்டனைகளாகிறது.

மேலும், புத்தி பூர்வக அபசாரத்திற்கு தீங்கு கிடையாது எனக் கொண்டால், சாஸ்த்திரம் விதிக்கும் ப்ராயஸ்சித்த ப்ரபத்தி அர்த்தமற்றதாகும்.

சாஸ்த்திரம்,

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என்கிறது. அதாவது தெரிந்தே ஒரு பாபத்தை சரணாகதன் செய்தானேயானால், ப்ரயஸ்சித்த ப்ரபத்தியே பரிஹாரமாகும், என்றபடி.

ஆக, சாஸ்த்திர விதி முறையை மீறி, செயல்படுவதால், ஒரு தீங்கும் இங்கு விளையாது என்பது ப்ரமாண விரோதம். ப்ராயஸ்சித்தம் அநுஷ்டிக்காத போது, இங்குள்ள காலம் பல கஷ்டங்களை அநுபவிக்க உண்டாகும்.

சாஸ்த்திரங்களால் விதிக்கப்பட்ட ப்ராயஸ்சித்தகம் அநுஷ்டியாத போது, சரணாகதனின் புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, மேலே குறிப்பிட்ட லகு தண்டனைகள் ஒரு உதாரணமே.
இந்த, புத்தி பூர்வக உத்தராகத்தின் தன்மைக்கு ஏற்ப, தாபத்ரய உபாதைகளும், சாஸ்த்திர அறிவில் கலக்கமும், பகவத் கைங்கர்யத்தில் ஈடுபாடு குறைதலும், பகவத் பாகவது கைங்கர்யங்களில் தடைகளும், மேலும் அபசாரங்களும், பெரியோர்களால் நிந்திக்கப் படுவதும், நற்பலன்கள் ஜீவித காலத்தில் கிடைக்காமல் போவதுமாக பல ப்ரகாரங்களாக இருக்கும் என ஸ்ருதிகளிலும், மந்வாதி தர்ம சாஸ்த்திரங்களிலும், இதிஹாஸ புராண பகவத் சாஸ்த்திரங்களிலும் ப்யஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

சாபராதராய் அநுதாபமும் அன்றிக்கே புந: ப்ரபத்தியும் பண்ணாதே இருப்பார் சில ப்ரபன்னருக்கு உபக்ளேசங்களாகச் சொன்ன காணத்வாதி த்ருஷ்ட ப்ரத்யவாயங்கள் காணாதிரா நின்றோம் என்கை மந்த சோத்யம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

சாபராதராய் - தெரிந்தே பாபங்களைச் செய்துவிட்டு

அநுதாபமும் அன்றிக்கே - செய்த பாபங்களுக்கு வருந்தாமலும்

புந: ப்ரபத்தியும் பண்ணாதே - ப்ராயஸ்சித்த ப்ரபத்தியை அநுஷ்டிக்காது

இருப்பார் சில ப்ரபன்னருக்கு - இருக்கும் கடின ப்ரக்ருதியான சரணாகதருக்கு

உபக்லேசங்களாகச் சொன்ன - லகு தண்டனைகள் உண்டு என சாஸ்த்திரங்களால் விதிக்கப் பட்ட

காணத்வாதி த்ருஷ்ட ப்ரத்யவாயங்கள் - எந்த ஒரு உடல் ரீதியான கஷ்டங்களையும்

காணாதிரா நின்றோம் என்கை - அவர்கள் அநுபவிக்காமல் இருப்பதை இவ்வுலகில் காண்கிறோமே எனும் வாதம் (அதாவது, சரணாகதனின் புத்திபூர்வக அபசாரத்துக்கு, ப்ராயஸ்சித்த ப்ரபத்தி அநுஷ்டியாத போதும் எந்த ஒரு லகு தண்டனையும் ஏற்படாது எனும் வாதம்)

மந்த சோத்யம் - சாஸ்த்திரத்தை உணராது வரும் விளக்கம்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதற்கு ஏற்ப, புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் அன்றிக்கே, ஒரு லகு ப்ரத்யவாயமும் இங்கே தோற்றாதிருக்க காண்கிறோமே என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

95. <u>கொடியதான பாகவத அபசாரமும் பரிஹரணீயம்</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதைத் தொடர்ந்து, புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் செய்ய விதி இருக்க, பாகவத அபசாரமும் பரிஹரணீயம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்** என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதைத் தொடர்ந்து, புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் செய்ய விதி இருக்க, பாகவத அபசாரமும் பரிஹரணீயம் என்பதால், பாகவத அபசாரம் எத்தகையது எனத் தெளிய வேண்டும்.

2. இப்படி சாஸ்த்ர விதிப்படி நடந்து போகும் சரணாகதன்,

மூன்று விதமாக உலகத்து மக்களை பிரித்து,

அவரவர்களுடைய இயல்பிற்கு ஏற்ப, செயல்பட வேண்டுமென அருளினார் பகவத் ராமானுஜர்.

அவர்களாவர் :

 # அநுகூலர் -

ஸத் ஸம்ப்ரதாயத்தில் நிலையாக நின்று, தன்னுடைய பகவத், பாகவத, ஆசார்ய சேஷத்வத்தை நன்கு உணர்ந்து, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே பரம் பொருள் எனத் தெளிந்து, சாஸ்த்திரம் விதித்த வகையிலே மோக்ஷ உபாயமாக சரணாகதியை அநுஷ்டித்து இருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரேஷ்டர்கள்.

இவர்களை பாகவதர்கள் என்றும், சரணாகதன் என்றும் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்னும் பத ப்ரயோகங்களால் அறியலாம்.

இம்மாதிரியான பாகவதர்களை தெளிந்து அவர்கள் திருவுள்ளம் உகக்க வர்த்திப்பது, சரணாகதனின் லக்ஷணம். இதனால் பகவான் திருவுள்ளம் உகக்கிறது.

அதாவது,

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-19)

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

என அருளினான்.

அதாவது,

பல புண்ய பிறவிகளின் இறுதியில் ஞானவான், ‘எல்லாம் வாசுதேவனே’ என்று கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான். அவ்வித மகாத்மா கிடைத்தற்கு அரியவன். அதாவது, பரதேவதா நிஷ்கர்ஷமான, ஸ்ரீமந் நாரயணனே ஸர்வ ஆதாரன், ஸர்வ நியந்தா மற்றும் ஸர்வ சேஷி என உணர்ந்து போவது பல கோடி புண்ய பிறவிகளுக்கு பிறகே தோன்றுகிறது என தாத்பர்யம். ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் (7-17) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

தேஷாம் க்ஞாநி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:

அதாவது,

‘அவர்களுக்குள் க்ஞாநியான முமுக்ஷு என்பவன் எனக்கு பிரியமானவன். ஏனெனில் அவன் என்னையே அடைய ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்.’

 # ப்ரதிகூலர் -

அநுகூலருக்கு மாறான லக்ஷணம் கொண்டவர்கள். சாஸ்த்திரம் விதித்த ஸதாசார்ய ஸ்ரீஸுக்திகளை ஏற்காமலும் அவைகளை மாற்றி அமைப்பதிலும் ஆர்வம் கொண்டு பகவத் பாகவத ஆசார்ய த்வேஷிகளாக இருப்பவர்கள்.

இம்மாதிரியான ப்ரதிகூலரைக் கண்டால் கொடிய ஸர்பம் அல்லது கொழுந்து விட்டு ப்ரகாசிக்கும் நெருப்பு ஜ்வாலையைக் கண்டது போல விலகி வர்த்திப்பது, சரணாகதனின் லக்ஷணம்.

ஏனெனில்,

உயர்ந்ததொரு பலனைப் பெற சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்வரூப ப்ராப்தமாக இருந்த போதிலும், அதற்கு தடையாக உள்ள அந்த 'ப்ராப்தி விரோதி' வர்க்கத்தை 12 விதமாக பிரித்து ஸ்வாமி தேசிகன் விளக்கி அருளியிருக்கிறார்.

ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்திர விரோதமாக செயல்படும் அசுர குணம் உடையவனுக்கு ஏற்படும் கதி என்ன என்று பகவத் கீதையில் (16-19) உறுதி படுத்துகிறான்.

தானஹம் த்விஷத: க்ரூரான் சம்சாரேஷு நராதமான். க்ஷிபாம்யஜஸ்ரம் அசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு

அதாவது,

'என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள், என்னை பற்றி சிந்திக்காமல் சம்சார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், அசுர யோனியில் பிறக்க செய்கிறேன்.' - என்கிறான் கண்ணன்.

 # அநுபயர் -

மேல் இரண்டிலிருந்தும் வேறுபட்டு இங்குள்ள வாழ்க்கையையே ப்ரதானமாகக் கொண்டு இருப்பவர்கள். பகவத் சிந்தையை முற்றிலுமாக விடுத்து வாழ்பவர்கள்.

இம்மாதிரியான அநுபயர்களைக் கண்டால், ரத்னத்திற்கும் வீதியில் கிடக்கும் கற்களுக்கும் வித்யாஸம் அறியாத பாமரத்வத்தை எண்ணி அவர்களை பொருட்டாகவே கருதாமல் இருப்பது, சரணாகதனின் லக்ஷணம்.

அத்யப்ரப்ருதி ஹே லோகா:! யூயம் யூயம் வயம் வயம் அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம் வயம் து கிங்கரா விஷ்ணோ:, யூயம் இந்த்ரியகிங்கரா:

என்று நாரதர், உலக மக்களை திருத்துவதாக வந்து, தன் இயலாமையை விளக்குகிறார்.

அதாவது, 'ஜனங்களே! இன்று முதற்கொண்டு நீங்கள் நீங்கள்தாம்; நாங்கள் நாங்கள்தாம்.

எங்களுக்கும் உங்களுக்கும் ஒருவிதச் ஸம்பந்தமும் இல்லை.

நீங்கள் பணத்திலும் சிற்றின்பத்திலும் நிறைய அவா உடையவர்கள்.

நாங்கள் ஸ்ரீமந் நாராயணனிடத்தில் ஆசை உடையவர்கள்.

நீங்கள் பணத்திலும் இகலோக இன்பத்திலும் ஆசை உடையவர்களானபடியால் ஐம்புலன்களுக்கு வேலைசெய்யும் வேலைக்காரர்கள்.

நாங்கள் எம்பெருமானுடைய வேலைக்காரர்கள். ஆகையால் உங்களுடன் நாங்கள் சேர மாட்டோம்.

எங்கள் தன்மையே வேறு; உங்கள் தன்மையே வேறு' என்கிறார் நாரதர்.

ஆக, அநுபயர்களான சம்சாரி ஜீவர்கள் ஒரு சரணாகதனால் புறக்கணிக்கத் தகுந்தவர்கள்.

3. இப்படியாக, செல்வம் மற்றும் புலன் விஷயங்களில் கொண்ட மிகுந்த ஆசை காரணமாக ஒரு சரணாகதன், பகவத் பாகவதர்களை, அதாவது ஸ்ரீவைஷ்ணவர்களை, தரக் குறைவாக நடத்தினான் என்றால்,

அரசனின் முன்னிலையில் அரச குமாரனை அவமானப்படுத்தினால் அரசனுக்கு எத்தனை கோபம் உண்டாகுமோ அது போன்று எம்பெருமான் தன் மனதில் சீற்றம் கொள்வான்.

அதாவது,

ஸ்ரீவைஷ்ணவரை அவமதித்தால், அதன் காரணமாக ஞானம் மற்றும் பகவத் கைங்கர்யத்தை, இங்குள்ள காலம், இழக்க நேரிடலாம். மேலும் பல அநிஷ்டங்கள் உண்டாகலாம்.

ஆக, ஒரு சரணாகதன் எப்போதுமே ஸ்ரீவைஷ்ணவர்களை கௌரவமாகவே மனத்தாலும் செயலாலும் கொள்ள வேண்டும். அதுதான் எம்பெருமான் உகந்தது.

ஏவம் முக்தி பலா அநியம: தத வஸ்தா அவத்ருதே தத வஸ்தா அவத்ருதே

என்று வேதவ்யாஸர் அருளிய

ப்ருஹ்ம ஸுத்ரம் சொல்லுகிறது.

அதாவது,

ஞான சக்தி படைத்த உபாஸகனே ஆனாலும், அந்த முமுக்ஷுவானவன் தனது எண்ணங்களாலும், சொல்களாலும், செயல்களாலும் ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு மன வருத்தம் உண்டாக்கினால், அதுவே பாகவத அபசாரமாகி, அவன் செய்து வரும் பக்தி யோகத்திற்கு கால விளம்பத்தை ஏற்படுத்தும்

ஆக, சரணாகதன் ஆனாலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு உகந்தவர்களாக கருதும் பாகவதர்களிடம் அபசாரப் படுவதினால் அவன் மிகுந்த சீற்றம் கொள்கிறான் என்கிறது சாஸ்த்ரம்.

4. ஆக, பாகவத அபசாரம் கொடியது; அது மேலும் பல அநிஷ்டங்களுக்கு காரணமாகும்.

ப்ருஹ்ம வித் பாப வர்க்காணாம் அநன்தானாம் மஹீயஸாம். தத் த்வேஷி ஸங்க்ரமம் ஜானன் த்ரஸ்யே தத் ஆபராதத:

என ஸ்வாமி தேசிகன் அருளியுள்ளார்.

அதாவது,

எல்லை அற்றனவாயும் பெரியதாயும் அமைகிற பாகவத அபசாரமாவது, பாகவதனான ஸ்ரீவைஷ்ணவ சரணாகதனின் விரோதிகளிடம் ஒருவனுக்கு ஈடுபாடு ஏற்படும் போதும், பாகவத அபசாரம் ஸம்பவித்து, அந்த பாகவதனிடம் உள்ள பாபக் கூட்டங்கள் அவனைப் பற்றிக் கொள்ளும் என அறிந்து, அம்மாதிரியான பாகவத அபசாரத்துக்கு அஞ்ச வேண்டுவதாகிறது.

இந்த பாகவத அபசாரமாவது, ஸத் ஸம்ப்ரதாயத்தில் நிலை நிற்கும் நம் ஆசார்ய புருஷர்களான ஸ்ரீமந் நாதமுனி, யாமுன முனி, ராமானுஜ முனி மற்றும் ஸ்வாமி தேசிகன் போன்ற மஹநீயர்களின் சாஸ்த்ரீய நிலைகளை ஏதோ ஒரு லௌகீக காரணத்தால் விரோதிப்பவர்களோடு ஈடுபாடு கொள்வதும் அடங்கும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இப்படி யதா சக்தி அபராதங்களைப் பரிஹரித்து போகா நின்றால் பாகவத அபசாரமும் அது உடையாரோடு ஸம்ஸர்க்கமும் போரப் பரிஹரணீயம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இப்படி - சாஸ்த்திர விதிப்படி சரணாகதி அநுஷ்டித்து

யதா சக்தி - தன் அதிகாரத்துக்கு ஏற்ப

அபராதங்களைப் - சரணாகதன் தெரிந்தே செய்யும் பாபங்களை

பரிஹரித்துப் போகா நின்றால் - சாஸ்த்திரத்தாலே விதிக்கப் பட்ட ப்ராயஸ்சித்த ப்ரபத்தியாலே போக்கிக் கொண்டு இருக்கும் சரணாகதனுக்கு

பாகவத அபசாரமும் - மேலும், சாஸ்த்திரக்களில் அறிவுறுத்தப் பட்ட பாகவத அபசாரமும்

அது உடையாரோடு - பாகவத அபசாரத்தைச் செய்து போவோருடன்

ஸம்ஸர்க்கமும் - எதோ ஒரு விதத்தில் சேர்க்கையும்

போரப் பரிஹரணீயம் - முற்றிலும் தவிர்க்க ப்ராப்தம்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷம்**" என்கிற பதங்களுக்கு 'அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பதைத் தொடர்ந்து, புத்தி பூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் செய்ய விதி இருக்க, பாகவத அபசாரமும் பரிஹரணீயம்

என்பது ஸத் ஸம்ப்ரதாய விளக்கம்; இதுவே வேத மார்க்கம் ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தம் ; இதுவே, ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசம்.

மேலும், **ப்ரபத்திக்கு கோரின பலத்துக்கு ஒன்றாலும் பிரதிபந்தம் இல்லை -** என ஸ்வாமி தேசிகன் **ரஹஸ்ய ரத்னாவளி** க்ரந்தத்தில் அருளினார்.

எக்காரணத்தினாலும் சரணாகதனுக்கு மோக்ஷ பலன் கிட்டாமல் போகாது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

96. <u>ஸர்வ ஸ்வதந்த்ரனானவன் ஸாத்யோபாத்தை அபேக்ஷிப்பதில்லை</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதத்திற்கு ' சம்சாரி ஜீவர் ஒன்றும் செய்யாதிருக்க அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதத்திற்கு 'சம்சாரி ஜீவர் ஒன்றும் செய்யாதிருக்க அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (10-8-9) :

இன்று என்னைப் பொருள் ஆக்கி தன்னை என்னுள் வைத்தான் அன்று என்னைப் புறம் போகப் புணர்த்தது என் செய்வான்

இதற்கு அர்த்தம் கூறும் போது,

அசேதனத்தைப் போலே இருந்த என்னை, மோக்ஷம் பெற தகுதி உள்ளவனாய் கருதி, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், ரக்ஷித்தருளினான். அவன் திருவருளைப் பெறுவதற்கு முன்புள்ள நாட்களில், பரதந்த்ரனான நான் சம்சார கடலிலே மூழ்க, அவன் ஒன்றும் செய்யாதிருந்தான். இப்படிப் பட்ட எம்பெருமான், முன்பு கை விட்டதற்கு காரணம் சொல்லாமலும், இன்று என்னை அங்கீகரித்ததற்கு காரணம் சொல்லாமலும், இருப்பதற்கு விஷயமானது, எம்பெருமானின் ஸர்வ சுதந்திரமே.

ஆக, ஜீவர்களாகிய நாம், தன்னை காத்துக் கொள்ள எந்த ஒரு அநுஷ்டானத்தையும் செய்வது பொருந்தாது. எம்பெருமானது கருணை எப்போது எவன் பக்கலிலே விழுகிறதோ, அப்போது

அவன் ரக்ஷிக்கப் படுவான் என எண்ணி காத்தாருப்பதே சரணாகதியாகும், என பூர்வ பக்ஷிகள் அர்த்தம் கூறுவர்.

இந்த விளக்கம், பக்தி யோகம் மற்றும் சரணாகதியை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும், ஸ்ரீ ராமானுஜர் அருளிய சரணாகதி கத்யம், ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் போன்ற க்ரந்தங்களோடும் முற்றிலுமாக விரோதிக்கும்.

அதாவது திருவாய் மொழி (10-8-1)ல்,

திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்ன திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்

என அருளியுள்ளார்.

அதாவது, திருமாலிருஞ்சோலை என்று சொன்னேன் என்பதையே நிமித்தமாகக் கொண்டு என்னை ரக்ஷித்தான் என கூறுவதாயிற்று.

ஆக, ஒரு சிறு செயலான, அவன் ஊரைச் சொன்னதையே ஒரு காரணமாக்கி, தன் மனத்தில் வந்து புகுந்து, வழி நடத்தி, அதன் பிறகு தன்னை சரணாகதியில் மூட்டி, தன்னை ரக்ஷிக்க வேண்டிய பொருளாகக் கருதி ரக்ஷித்தருளினான் எனஅப்பதிகத்திற்கு கருத்து கொள்ள வேண்டும்.

அதனால் அறியப் படுவது என்னவென்றால், ஜீவர்களிடம் உள்ள எம்பெருமானின் எல்லையற்ற கருணை. இதுவே, இந்த திருவாய் மொழி 10-8-9, **இன்றென்னை பொருளாக்கி** பாசுரத்தின், தாத்பர்யம், என அறிய வேண்டும். இந்த விளக்கத்தினால், இப்பாசுரம் மற்ற பாசுரங்களோடும், உபநிஷத் வரிகளோடும் முரண்பாடு இல்லாமல் இருக்கும்.

அதாவது, சாஸ்த்திர விதிப்படி **பக்தி யோகம்** என்ற பெரியதோரு உபாயத்தை செய்யாத போதும், சாஸ்த்திரத்தில் அநுமதித்தபடி அவன் திருவடியில் சரண் புகுந்த காரணத்தால், இன்று என்னை சம்சார துக்கத்திலிருந்து விலக்களித்து மோக்ஷமளிக்க முன் வந்திருக்கிறான், அவன் கருணையின் காரணமாக, என்று உணர வேண்டும்.

ஆக, ஜீவர்களாகிய நாம், தன்னை காத்துக் கொள்ள ஒரு அநுஷ்டானத்தையும் செய்யலாகாது என, உபநிஷத் வரிகளுக்கு விரோதமாக, ஆழ்வார் அருளினார் என கூறலாகாது.

ஆக, **மோக்ஷயிஷ்யாமி** என கண்ணன் அருளியது, சாஸ்த்திரம் விதித்த ஒரு லகு உபாயத்தை செய்திருக்க, பரம காருணிகனான எம்பெருமான், பல கோடி ஜந்மாக்களை பெற வழியாக்கும் கர்மாக்களை சரணாகதன் விஷயத்தில் களைகிறான், என்றபடி.

3. சம்சாரி ஜீவர்களிடம் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ள ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், இந்த ஜீவர்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக, சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

அதாவது, அவனது க்ருபை (கருணை) இருவிதம்:

 # நிர்ஹேதுக க்ருபை (காரணம் இல்லாமல் வரும் கருணை)

ஸஹேதுக க்ருபை (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை)

ஆனால் இந்த இரண்டு க்ருபைகளுக்கும் உள்ள விஷயங்கள் வேறுபட்டிருக்கின்றன :

அதாவது,

நிர்ஹேதுக க்ருபை (காரணம் இல்லாமல் வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஆத்மாவை நித்யமாக வைத்திருத்தல்,

அவனது ஞானத்தை நித்யமாக வைத்திருத்தல்,

ப்ரளய தசையில் அசித் துல்யமாக இருந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரத்தையும் புலன்களையும் கொடுக்க ஸங்கல்பித்தல்,

இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்குதல்,

சம்சாரி ஜீவர்களின் நலனுக்காக சாஸ்த்திரத்தை வெளியிடுதல்,

அந்த சாஸ்த்திரத்தில் எளிமையான மோக்ஷ வழியை அமைத்துக் கொடுத்தல்,

முக்தரை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மீண்டும் சம்சாரதிதிற்கு அநுப்பாமல் இருத்தல்

போன்றவைகள் எம்பெருமானுக்கே உள்ள, ஜீவர்களிடம் எதையும் எதிர் பார்க்காத, ஒரு கருணையின் காரியம்.

ஸஹேதுக க்ருபை (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது -

ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரத்தில் விதித்த கார்யங்களை செய்து போகின்ற சம்சாரி ஜீவர்கள் பக்கலிலே உண்டாகும் கருணை.

அதாவது, ஸஹேதுக க்ருபைக்கு காரணமாவது, அவனால் சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்ட,

விதி (செய்ய வேண்டுவன) மற்றும்

நிஷேத (செய்யக் கூடாதவன)

என்கிற பாகுபாடு, பயன் உள்ளதாக இருப்பதற்கு.

ஆக, **மோக்ஷயிஷ்யாமி** என கண்ணன் அருளியது, **நிர்ஹேதுக க்ருபையால்** மோக்ஷ காரணமாக, ஒரு லகு உபாயத்தை விதித்து, பரம காருணிகனான எம்பெருமான், அம்முகத்தாலே, பல கோடி ஜந்மாக்களை பெற வழியாக்கும் கர்மாக்களை, தன் **ஸஹேதுக க்ருபையாலே** சரணாகதன் விஷயத்தில் களைகிறான், என்றபடி.

4. சம்சாரி ஜீவர்களுக்கு **மோக்ஷயிஷ்யாமி** எனும் போது, ஸஹேதுகமாக ஸர்வேஸ்வரன் செய்யும் உபகாரம், சாஸ்த்திரம் கொண்டு தெளிய வேண்டும்.

முண்டகோகநிஷத்தில்,

தத் விக்ஞானார்த்தம் ஸ குருமேவ அபிகச்சேத்

ஆசார்யவான் புருஷோ வேத:

அதாவது,

'நல்ல ஆசார்யனைப் பெற்றால் மட்டுமே பரம் பொருளை அறிய முடியும்'
என சொல்லப் பட்டிருக்கிறது.

ஸம்ஹிதா வரிகளாவது,

பாபிஷ்ட: க்ஷத்ர பந்துஸ்ச புண்டரீக்ஷ புண்யக்ருதா ஆசார்ய வத்தயா முக்தெள தஸ்மாத் ஆசார்யவான் பவேத்

என்கிறது.

அதாவது,

மிகுந்த பாபத்தைச் செய்து போன க்ஷத்ரபந்துவும், மிகுந்த புண்யங்களையே செய்து வந்த புண்டரீகனும், ஆசார்ய சம்பந்தம் பெற்றதானாலேயே மோக்ஷத்தை அடைந்தார்கள், என சரித்திரம்.

ஆக, ஒருவனுக்கு மோக்ஷ பலன் கிடைக்க, சாஸ்த்ர ஞானத்தை தெளிவு படக் கொடுத்து, 'சரணாகதி' அநுஷ்டானத்தை செய்வித்து, ஆசார்யர்கள் பெரும் உதவி செய்கிறார் என்பதை உணரலாம். ஆக, ஆசார்ய சம்பந்தமே மோக்ஷ காரணம்.

ப்ரமாணங்களை ஆராயும் போது,

ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருசயா ஸுஹ்ருதம் ததா. விஷ்ணோஹோ கடக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகைஹ ஸம்பாஷணேம் ஷடேதானி ஆசார்ய ப்ராப்தி ஹேதவ:

எனப் படுகிறது. அதாவது,

தெளிந்த தத்வ ஞானியாக, சாஸ்த்திரங்களை நன்கு அறிந்த, உயர்ந்த ஆசார்யன் ஒருவனை, இந்த சம்சாரி ஜீவன் அடைய, ஆறு காரணங்கள் சாஸ்த்திரத்தினால் கூறப் படுகின்றன; அவை ஆவன :

எம்பெருமானின், ஸகல ஜீவர்களிடம் கொண்டுள்ள பொதுவான நல்லெண்ணம்,

சம்சாரி ஜீவனனுடைய பூர்வ ஜன்ம யாத்ருச்சிக ஸுஹ்ருதம்,

சம்சாரி ஜீவனனுக்கு உண்டான ஸர்வேஸ்வரனின் கடாக்ஷம்,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் உண்டான இச்சை,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் த்வேஷம் இல்லாமை, மற்றும்

சம்சாரி ஜீவனனுக்கு உள்ள ஸாத்வீகர்களின் ஈடுபாடு

என்கிறது சாஸ்த்திரம்.

முன் ஜன்மத்தில் செய்த ஜீவர்களுடைய ஒரு புண்ய விசேஷம் (யாத்ருச்சிக ஸுஹ்ருதம் போன்றது), பிழையற கற்று பரிபூரண சாஸ்த்ர ஞானம் உடைய ஆசார்யனை அடைவதற்கு, ஒரு காரணமாக அமைகிறது என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ஆக, **மோக்ஷயிஷ்யாமி** என கண்ணன் அருளியது, சாஸ்த்திரம் விதிக்கு உட்பட்டு, ஒரு லகு உபாயத்தை எம்பெருமான் செய்விக்க இந்த ஜீவர்கள் செய்கிறார்கள், என்றபடி.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

தன் நினைவில் விலக்கு இன்றித் தன்னை நண்ணார் நினைவு அனைத்தும் தான் விளைத்தும் விலக்கும் நாதன் என் நினைவை இப் பவத்தில் இன்று மாற்றி இணை அடிக்கீழ் அடைக்கலம் என்று எம்மை வைத்து முன் நினைவால் யாம் முயன்ற வினையால் வந்த முனிவு அயர்ந்து முத்தி தர முன்னே தோன்றி நன் நினைவால் நாம் இசையும் காலம் இன்றோ நாளையோ என்று நகை செய்கின்றானே

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

தன் நினைவில் விலக்கு இன்றித் - தன் ஸங்கல்பத்துக்கு எந்த ஒரு தடையும் இல்லாமல்

தன்னை நண்ணார் - எம்பெருமானை விட்டு விலகி இருக்கும் நாஸ்திகர்களுக்கு

நினைவு அனைத்தும் - சாம்சாரிக போக இச்சை அனைத்தும்

தான் விளைத்தும் விலக்கும் நாதன் - அந்த தாழ்ந்த போகங்களை தடை செய்த எம்பெருமான்

என் நினைவை இப் பவத்தில் - பகவத் சிந்தனத்தை கொடுத்து, அவ்வழியாலே, இந்த லோகத்தில் உள்ள சாம்சாரிக பற்றை,

இன்று மாற்றி - ஒழித்துக் கட்டி

இணை அடிக்கீழ் - எம்பெருமானின் திருவடிகளுக்கு கீழ்

அடைக்கலம் என்று - ரக்ஷிய வஸ்துவாக

எம்மை வைத்து - சம்சாரி ஜீவனை ஏற்று

முன் நினைவால் யாம் முயன்ற - முன்பு சரீர ஆத்ம ப்ரமத்தினால் சம்சாரி ஜீவர்கள் செய்து போந்த

வினையால் வந்த முனிவு அயர்ந்து - கர்மத்தால் ஏற்பட்ட பகவத் சீற்றம் நீங்கி

முத்தி தர முன்னே தோன்றி - மோக்ஷம் அளிக்க சம்சாரி ஜீவர்கள் காணும் வண்ணம் அவதரித்து

நன் நினைவால் நாம் இசையும் காலம் - ஒரு ஸுக்ருத விசேஷத்தால் ஞானம் பெற்று பரமபதத்தை அடைய இசைந்த போதும்

இன்றோ நாளையோ என்று நகை செய்கின்றானே - சம்சாரி ஜீவர், இந்த பரமபத ப்ராப்தியை பெற, இன்று நாளை என, காலம் கடத்துகிறானே (எனப் பரிஹஸிக்கப் படுகிறார்கள்)

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதத்திற்கு ' சம்சாரி ஜீவர் ஒன்றும் செய்யாதிருக்க அனைத்து பாபங்களிலிருந்து விடுவித்து' என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

97. <u>சரமஸ்லோகத்தில் சரணாகதி உபசந்தன மாத்திரம்</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தத்தில் ஆசையை உண்டாக்கவே அன்றி, சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ உபாயம் அன்று' என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு ' சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தமாகிய பரமபத ப்ராப்தியில் ஆசையை உண்டாக்கவே அன்றி, சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ உபாயம் அன்று' என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சில பாபங்களினால் உண்டாகும் பகவந் நிக்ரஹம், பகவத் உபசாரங்களினால் சமிப்பதில்லை எனும் ப்ரமாணங்களைக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானம் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** எனும் கண்ணன் கீதோபதேச வரிகளுக்கு விஷயமாகாது என்பர் பூர்வ பக்ஷிகள்.

வராஹ புராணத்தில், எம்பெருமான் பூமா தேவியிடும் கூறும் வசனமாவது:

ப்ரமாதாதபி கீலாலம் ய: ஸ்ப்ருஷேத் வைஷ்ணவோ நர: உபசாரா சதே நாபி ந க்ஷமாமி வஸுந்தரே

அதாவது,

எந்த விஷ்ணு பக்தன் ரத்தத்தை ஒருவன் அறியாமலும் தொடுகிறானோ அந்த குற்றத்தை நூறு உபசாரங்கள் எனக்கு செய்தாலும் நான் அதை பொறுப்பதில்லை என்றாகிறது.

இந்த ப்ரமாண வரிக்கான அர்த்தமாவது, சாஸ்த்திர விதிகளை மீறுவதிலேயே இச்சை கொண்டவன், போலியாக கோவிலில் பகவத் உபசாரத்தை பரிஹாரமாக நினைத்து செய்பவன் விஷயத்தில், பகவந் நிக்ரஹம் பரிஹரிக்கப் படுவதில்லை, என்றபடி.

ஆக, அந்த வரிகளுக்கான ப்ரகரணம் வேறானது.

சாஸ்த்திர விதிகளில் ஈடுபாடு கொண்ட ஒரு முமுக்ஷுவானவன், தான் அகிஞ்சனன் என உணர்ந்து, பக்தி யோகத்தை அநுஷ்டிக்க முடியாமல் சோகிக்கும் போது, அந்த அதிகாரிக்கு விதிக்கும் சரணாகதி அநுஷ்டானம், மோக்ஷ ஸாதனம் என்பது பஹுவித ப்ரமாண ஸித்தம்.

இவ்விரண்டும் பின்ன விஷயங்கள்.

3. உபநிஷத் சாரமான **ப்ருஹ்ம ஸுத்ர** வரிகளுக்கு வ்யாக்யானமாக அமைந்தது, ஸ்ரீராமானுஜரின் **ஸ்ரீபாஷ்யம்**

உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸுத்ரம்**

நாநா சப்தாதி பேதாத்

என்கிறது.

அதாவது ப்ருஹ்ம வித்யைகள்,

ந்யாஸ வித்யை (சரணாகதி அநுஷ்டானம்)

உபாஸனம் (பக்தி யோகம்)

என்கிற பிரிவுகளைக் கொண்டது.

அந்த **உபாஸனம்** (பக்தி யோகம்) அநுஷ்டிக்கும் போது, எம்பெருமானின் ஸ்வரூப நிரூபக தர்மங்களோடு அவனுடைய மற்ற கல்யாண குணங்களையும் த்யானம் செய்ய வேண்டுவதாகிறது.

அந்த **உபாஸனம்** (பக்தி யோகம்) பல விகல்பங்களை உடையது. அதாவது, ஸத் வித்யை, தஹர வித்யை, மது வித்யை போன்றவைகள்.

அந்த **உபாஸனம்** (பக்தி யோகம்) என சொல்லப்படுவதில் ஏதேனும் ஒன்றை தன் இச்சை அடியாக தேர்வு செய்து அநுஷ்டிக்க வேண்டுவதாகிறது.

அந்தந்த தேர்வு செய்யப் பட்டு அநுஷ்டிக்கிற பக்தி யோகத்திற்கு, எம்பெருமானின் ஸ்வரூப நிரூபக தர்மங்களோடு அவனுடைய தேர்வு செய்யப்பட்ட பக்தி யோகத்தல், அதற்கு குறிப்பிட்ட கல்யாண குணங்களை த்யானிக்க வேண்டுவதாகிறது.

சரணாகதி அநுஷ்டானம் என்பது ஐந்து அங்கங்களும் ஒரு அங்கியையும் கொண்ட ஷட் விதா சரணாகதி எனும்படியான அநுஷ்டானம். உபாஸநம் அநுஷ்டிக்க ஞான சக்தி அற்றவனுக்கு இந்த லகு உபாயம் மோக்ஷ காரணமாக இருக்கிறது.

உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய ப்ருஹ்ம ஸூத்ரம்

விகல்ப: அவிஸிஷ்ட பலத்வாத்

என்கிறது.

அதாவது, ஸகல ப்ருஹ்ம வித்யைகளுக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

ஆக, ப்ருஹ்ம வித்யைகளான **பக்தி யோகம்** மற்றும் **சரணாகதி அநுஷ்டானம்** மோக்ஷ காரணம் என்பது ப்ரமாண ஸித்தம்.

4. ஸ்ரீமத் ராமாயணம், சரணாகதி சாஸ்த்திரத்தை, உபநிஷத்துக்கு விரிவுரையாக விளக்க வந்த, உப ப்ருஹ்மணமாகும்.

சுக்ரீவன், விபீஷணனை எதிரி தரப்பிலிருந்து வந்த காரணத்தால் அதில் சூழ்ச்சி இருக்கக் கூடும் எனக் கருதி, அவனை ஏற்பதற்கு மறுத்து, ஸ்ரீராமனிடம் வாதிடுகிறான்.

அதற்கு சரணாகத ரக்ஷகனான ஸ்ரீராமன் பதில் உரைக்கிறான்.

 # பிஷாஷான் தானவான் யக்ஷான் ப்ருதிவ்யான் சைவ ராக்ஷஸான். அங்குள் அக்ரேந தான் அன்யன் இச்சன் ஹரிகணேஸ்வர

அதாவது, 'வானர தலைவனே! வந்தவன் யாராக (யக்ஷனாகவோ, தேவனாகவோ, ராக்ஷஸனாகவோ) இருந்தாலும் சரி, அவர்களால் துன்பம் வர நேர்ந்தாலும், அவர்களை அழித்து என்னை நான் காத்துக் கொள்ள முடியும்'.

 # மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'.

 # ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி யேதத் வ்ரதம் மம

அதாவது, 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது எனது வ்ரதம்'.

 # அனயனம் ஹரி ஸ்ரேஷ்ட தத்தமஸ்யாம் அபயம் மயா. விபீஷணோவா ஸுக்ரீவ யதிவா ராவணஸ்வயம்

அதாவது, ‘ வானர தலைவனே! விபீஷணனை நான் ஏற்றுக் கொண்டு விட்டேன் எனக் கூறு. நீ விபீஷணனை சந்திக்கும் தருணத்தில், அங்கு ராவணன், மனம் மாறி வந்திருந்தானேயானால், அவனையும் நான் மன்னித்து ஏற்றுக் கொண்டதாக கூறுவாயாக’. இவ்வாறு ஸ்ரீராமன் பதிலளித்தான்.

ஆக, ஸ்ரீராமனின் இந்த வாக்கினால், சரணாகதனான விபீஷணனைச் சேர்ந்தவனான ராவணன் என்ற காரணத்தினால், மஹாபாபியான ராவணனை மன்னித்து ஏற்க ஸ்ரீராமன் தயாராக நிற்கிறான் என தெரிகிறது.

இது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திருக் கல்யாண குணமாகும். அதனால், அவனால் விதிக்கப் பட்ட **சரணாகதி அநுஷ்டானம்** மோக்ஷ உபாயமாகும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இப்படி வ்யவஸ்தித விஷயமாக வசனங்கள் தாமே காட்டுகையாலே விரோதமில்லாமையால் இது உபசந்தன மாத்ரம் அன்று

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இப்படி - சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ காரணம் எனும் பக்ஷபடி

வ்யவஸ்தித விஷயமாக - அதிகாரிகளைக் குறித்து பேதங்கள் இருப்பதால்,

வசனங்கள் தாமே காட்டுகையாலே - அதாவது அகிஞ்சனன் மற்றும் ஸகிஞ்சனன் எனும் பேதம், பஹுவித சாஸ்த்திர ப்ரமாணங்களின் படி, மோக்ஷ உபாயம் வெவ்வேறாகக் காட்டப் பட்டிருப்பதால்

விரோதமில்லாமையால் - அதிகாரி பேதத்தினால் உபாயங்கள் வெவ்வேறாக இருப்பது விரோதமாகச் சொல்லலாகாது என்றபடி

இது - சரமஸ்லோகத்தில் உபதேசிக்கப் பட்ட சரணாகதி அநுஷ்டானம்

உபசந்தன மாத்ரம் அன்று - சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தத்தில் ஆசையை உண்டாக்கவே, என்பதாகாது.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சம்சாரி ஜீவர்களுக்கு பரம புருஷார்த்தத்தில் ஆசையை உண்டாக்கவே அன்றி, சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ உபாயம் அன்று' என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

98. அப்ராக்ருத அசேதநத்துக்கு ஞானத்வம் உண்டா?

1. ஸ்வாமி தேசிகனின் **ஸ்ரீ தத்வ மாத்ருகை** வரி :

அசேதநமாவது ஞாத்ருத்வம் இல்லாத வஸ்து ; இதற்கு வ்யாபாரம் உண்டேயாகிலும், ஞாத்ருத்வம் இல்லாமையாலே ஸ்வ-புத்தி-பூர்வக-ப்ரவ்ருத்தி லக்ஷணமான கர்த்ருத்வமும் போக்த்ருத்வமும் இல்லை

ஆக, சுத்த ஸத்வமான அசேதநத்துக்கும், தர்ம பூத ஞானமான அசேதந்த்துக்கும், 'அறியும் தன்மை' கிடையாது ; அந்த 'அறியும் தன்மை' சேதநனுக்கே அசாதாரண தர்மம்.

2. அப்ராக்ருதமான அசேதந சுத்த ஸத்வத்துக்கு ஞானத்துவம் இருக்கும் ; தர்ம பூத ஞானத்தைப் போல ; அதானல் ஸ்வயம் ப்ரகாசம் ; ஸ்ருதி பலத்தால், அந்த சுத்த ஸத்வ நித்ய விபூதியை அறிய வேண்டுவது :

ஞானானந்த மயா லோகா:

அதாவது, ஞானமாயும் ஆனந்த மயமாயும் உள்ள லோகம்.

ஜீவனுக்கு அசேதனத்வம் கிடையாது ; அசேதந சம்பந்தத்தினால் சரீரம் ஸித்திக்கிறது.

முக்தனான ஜீவன் தேஹத்தோடும், தேஹமில்லாமலும் இருக்கலாம். அப்படி பெறக்கூடிய தேஹம் அசேதனம், அப்ராக்ருதம்.

அசேதனம் என்கிற பதத்திற்கு அறியும் தன்மை அற்ற வஸ்து எனப் பொருள்.

அறியும் தன்மை கொண்டது சேதனம்.

3. ஆக, ஞான விஷயத்தில், ஞானமாய் இருப்பது, ஸ்வயம் ப்ரகாச விஷயம் ;

இது சேதந வஸ்துவிற்கு சாமான்யம் ;

அசேதந வஸ்துக்களான ப்ருக்ருதி மற்றும் காலத்துக்கு இத்தன்மை கிடையாது ; அசேதந வஸ்துக்களான சுத்த ஸத்வம் மற்றும் தர்ம பூத ஞானத்துக்கு இத்தன்மை உண்டு.

ஞான குணத்வமானது, சேதநனுக்கு அசாதாரணம். அதாவது அறியும் தன்மை சேதநனுக்கு அசாதாரணம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

99. ஸித்தோபாய ப்ரபத்தி ஸாத்யோபாயத்தை நிஷேதுக்குமா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சம்சாரி ஜீவர்களின் பாபங்களை விடுவிப்பது' என்பது பரம புருஷார்த்தத்தை அடைய தடையான பாபங்களை விலக்குவதாகும்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு ' சம்சாரி ஜீவர்களின் பாபங்களை விடுவிப்பது' என்பது பரம புருஷார்த்தத்தை அடைய தடையான பாபங்களை விலக்குவதாகும்; இந்த ஸித்தோபாய ப்ரதிபத்தியால், ஸாத்யோபாயமான சரணாகதி மறுக்கப் படுகிறது என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை விளக்குகிறான் ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில்:

18ம் அத்யாயம் 56 வது ஸ்லோகம் -

ஸர்வகர்மண்யபி ஸதா குர்வாணோ மத்வயபாஸ்ரய. மத் ப்ரஸாதாத் ஆப்னோதி சாஸ்வதம் பதம் அவ்யயம்

அதாவது,

அனைத்து கர்மாக்களுக்கும் ஸர்வேஸ்வரனே காரணம், என உணரும் போது, அதனாலேயே பரம புருஷார்த்தமான என்னை பெறுகிறான் என்கிறான் கண்ணன்.

இந்த ஸ்லோகத்தை ப்ரமாணமாக்கி ஸித்தோபாய ப்ரதிபத்தியே மோக்ஷ காரணம் என்பர் பூர்வ பக்ஷிகள்.

அதுவல்ல இந்த ஸ்லோகத்தின் தாத்பர்யம்; இதைக் கண்ணன் கூறிய முன் பின் ஸ்லோகங்களோடு ஆராய வேண்டும்.

 # ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ - பகவத் கீதை 18-9 - ஸாத்வீக த்யாக விளக்கம்.

 # மாம் ஏகம் சரணம் வ்ரஜ - பகவத் கீதை 18-66 - சரணாகதி அநுஷ்டான விளக்கம்.
நித்ய நைமித்திக கர்மாக்களை (அதாவது, தினசரி செய்ய வேண்டிய செயல்கள் மற்றும் ஒரு சில காலத்தில் செய்ய வேண்டிய செயல்கள்) கண்டிப்பாக செய்தே போக வேண்டும் என்றும் அதனை விடுகை என்று சாஸ்த்ரங்களில் குறிப்பிடுவது, ஸாத்வீக த்யாகமேயாகும் என்று தெளிவு பட கண்ணன், பல ஸ்லோகங்களில், கூறியிருந்தான்.

இதனால், மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டானம் விலக்கப் படவில்லை; ஆனால் அந்த செயலை ஸாத்வீக த்யாக புத்தியோடு அநுஷ்டிக்க வேண்டும் என்பதாகிறது.

2. பாப புண்ய விளக்கம்:
எம்பெருமான் சாஸ்த்திரத்திலே விதிக்கப்பட்ட செயல்களை செய்யாமல் இருப்பதும் (க்ருத்ய அகரணம்), அவன் சாஸ்த்திரம் கொண்டு மறுக்கப் பட்ட செயல்களை செய்து கொண்டு இருப்பதும் (அக்ருத்ய கரணம்) அவன் திருவுள்ளம் சீற்றம் கொள்ள காரணமாகிறது.

ஏனெனில்,

தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி

என்று கண்ணன் (பகவத் கீதை 16-24) அருளிச் செய்திருக்கிறான்.

அதாவது, 'இது செய்யத் தக்கது' மற்றும் 'இது செய்யத் தகாதது' என்ற முடிவை எடுப்பதற்கு சாஸ்த்ரமே ப்ரமாணம்.

புண்யம் மற்றும் **பாபம்** என்ற சொற்களின் சாமான்ய விளக்கம்:

புண்யமாவது இந்த ஸம்ஸாரி ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்.

பாபமாவது இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்.

ஆகையால் சாஸ்த்ரத்தைக் கொண்டு அவனுடைய கட்டளையை தெளிவாக அறிந்து, சாஸ்த்ரம் கூறியபடி, எதையும் செய்ய வேண்டும், என அறிந்து போக வேண்டும்.

3. பரம புருஷார்த்தமான பரமபத ப்ராப்திக்கு தடையான பாபங்கள்:

ப்ராப்தி விரோதி எனப்படும் மோக்ஷ பலனுக்கு விரோதி உண்மையான ஞானத்தில் குறைபாடு, என்பதாகிறது;

அழியக் கூடிய விஷயங்களில் பற்று கூடி, அந்த ஸர்வேஸ்வரனின் உண்மை நிலையை சாஸ்த்திரம் கொண்டு அறியாதிருப்பது;

அவன் சம்சாரி ஜீவர்களுக்கு அருள இருக்கும் உயர்ந்த பலனை உணராதிருப்பது;

அறிய அவாவும் அற்றிருப்பது.

இந்த, ஞானக் குறைப் பட்டின் கொடுமையை, ஸ்ரீராமானுஜர், சரணாகதி கத்யத்தில் தெளிவு படுத்துகிறார்:

மதீயானாதி கர்ம ப்ரவாஹ ப்ரவ்ருத்தாம் பகவத் ஸ்வரூப திரோதானகரீம் விபரீத ஜ்ஞான ஜனனீம் ஸ்ஸ்வவிஷயாயாஸ்ச போக்த புத்தேர் ஜனனீம் தேஹேந்த்ரியத்வேன போக்யத்வேன சூக்ஷ்மரூபேண சாவஸ்திதாம் தைவீம் குணமயீம் மாயாம்

அதாவது,

இந்தப் ப்ரக்ருதி எனப்படும் முக்குணங்களாலான (ஸத்வம், ரூஸ் மற்றும் தமஸ்), சம்சாரி ஜீவர்களின் சரீரம் இருக்கிறதே ,

இது அநாதிகாலமாக அடியேன் செய்த கர்மவினை என்கிற ஆற்று வெள்ளத்தில் அடித்துத் தள்ளப்பட்டு பகவானின் ஸ்வரூபத்தை அறியாதபடி செய்கிறது.

ஸ்ரீமந் நாராயணன் , பரமன்;

அவனுக்கு நாம் நல்லடியார்கள் என்கிற நல்ல எண்ணங்கள் தோன்றாதபடி தடுத்து,

அதற்கு எதிரான எண்ணங்களை நினைக்கச் செய்கிறது.

ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக நினைக்கச் செய்கிறது.

தனக்குத் தானே இன்பமானவன் என்கிற எண்ணத்தைத் தோன்றச் செய்கிறது.

மாயா வித்யை செய்பவன்,காண்பவரை மயக்க , தன் கையில் மயில்தோகை வைத்திருப்பதைப் போன்று

ப்ரக்ருதியானது , சரீரத்தையும் , இந்த்ரியங்களையும் தன்வசம் வைத்து

சம்சாரி ஜீவனை மயக்கி அவன் உண்மையை அறியாமல்,

அவனுக்குத் தவறான அறிவைக்கொடுத்து,

புலன் இன்பங்களில் ஈடுபடச் செய்கிறது.

ஆக, இம்மாதிரியான ஸ்வரூப விருத்தமாக விஷயங்களை நினைத்திருந்து, மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிமாமல் இருப்பது, கர்ம அநுகுணமாக பவனளிக்கும் ஸர்வேஸ்வரனானவன், சம்சாரி ஜீவர்களிடம் கொண்ட சீற்றத்தினால், 'இவன் நம்மை வசீகரிக்கக் கடவன் அல்லன்' என நினைத்திருப்பதே ஆகும்.

பூர்வ ஜன்ம ஸுக்ருத விசேஷத்தினால் ஸதாசார்ய சம்பந்தமும், மோக்ஷ உபாயமுமே பரம புருஷார்த்தத்திற்கு ஸாதனம், என்பது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம்.

4. சரணாகதனின் பாபங்கள் விலகும் முறை:

 # சரணாகதி என்ற ஒரு அநுஷ்டானம், தானே பலன் அளிக்க வல்லது அல்ல.
அந்த அநுஷ்டானத்தில், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், மனம் இரங்கி மோக்ஷத்திற்கு தடையான பாப புண்ய கர்மாக்களை விலக்குகிறான் என்பதே தாத்பர்யம்.

இதையே ஸ்ரீ ராமானுஜர்

தஸ்ய ச வசீகரணம் தத் சரணாகதிரேவ

என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை வசீகரிக்கும் விதமாக மோக்ஷத்திற்கான வழியை விளக்குகிறார்.

ஸம்ஸாரத்திற்கு காரணமான கர்மாக்களின் வகைகள்:

ஸஞ்சித கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை -

ப்ராரப்த கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பித்தவை -

சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரியாமல் செய்யும் பாபங்கள்.

சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்கள்.

சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரியாமல் செய்யும் பாபங்களை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், தன் கருணையின் காரணமாக, பாபமாகவே கருதாது விலக்கு அளித்து விடுகிறான்.

சரணாகதி அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்களை போக்க, இரு வழிகள் சாஸ்த்ரங்களில் கூறப் படுகின்றன:

செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு ப்ராயச்சித்தமான சரணாகதியை அவனிடத்தில் அநுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், அந்த பாபங்களைக் காரணமாகக் கொண்டு துன்பத்தைக் கொடுக்காமல், மன்னித்து விடுகிறான்.

செய்த பாபத்திற்காக மனதினால் வருத்தம் கொள்ளாமலும், அதற்காக **ப்ராயச்சித்தமான சரணாகதியை** அநுஷ்டிக்காமலும் இருந்தால், இங்குற்ற காலம் அதற்கான தண்டனைகளைக் கொடுத்து இந்த பாபத்திலிருந்து விடுவிக்கிறான்;

முடிவில் மோக்ஷத்தையும் அளிக்கிறான் , தன் கருணையினால், அந்த ஸர்வேஸ்வரன்.
ஆக, சரணாகதி அநுஷ்டானமே மோக்ஷ காரணமாகிறது என்பது ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இந்த பாபங்களினின்றும் விடுவிக்கையாவது, அநாதியான விபரீத அநுஷ்டானத்தாலே பிறந்த நிக்ரஹ அபிப்ராயத்தை ஈஸ்வரன் தான் விடுகை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இந்த பாபங்களினின்றும் - பரம புருஷார்த்தமான மோக்ஷ பலனை அடைய தடையாக உள்ள பாபங்களை

விடுவிக்கையாவது - விலக்குவதாவது

அநாதியான விபரீத அநுஷ்டானத்தாலே - சம்சாரி ஜீவர்கள், பல பிறவிகளிலே செய்து வந்த சாஸ்த்திர விரோத செயல்களால்

பிறந்த நிக்ரஹ அபிப்ராயத்தை - எம்பெருமானுக்கு, அந்த சம்சாரி ஜீவர்களிடம், ஏற்பட்ட சீற்றமாவது

ஈஸ்வரன் தான் விடுகை - தான் விதித்த மாம் ஏகம் சரணம் வ்ரஜ என்கிற சரணாகதி அநுஷ்டானத்தை மேற்கொள்ளும் போது, சம்சாரி ஜீவர்களிடம், ஏற்பட்ட சீற்றமாவது ஈஸ்வரனுக்கு விலக்கப் பெறுகிறது.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு ' சம்சாரி ஜீவர்களின் பாபங்களை விடுவிப்பது' என்பது பரம புருஷார்த்தத்தை அடைய தடையான பாபங்களை விலக்குவதாகும்; இந்த ஸித்தோபாய ப்ரதிபத்தியால், ஸாத்யோபாயமான சரணாகதி மறுக்கப் படுகிறது என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

100. <u>ப்ரபன்னனின் புத்தி பூர்வக புண்யம் மோக்ஷ விளம்பத்தை ஏற்படுத்துமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சரணாகதனுக்கு புத்தி பூர்வக புண்யம்' என்பது பரம புருஷார்த்தத்தை அடைய விளம்பத்தை ஏற்படுத்தும் என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு ' சரணாகதனுக்கு புத்தி பூர்வக புண்யம்' என்பது பரம புருஷார்த்தத்தை அடைய விளம்பத்தை ஏற்படுத்தும் என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. உபநிஷத் சாரமான **ப்ருஹ்ம ஸூத்ரத்திற்கு** பகவத் ராமானுஜரின் ஸ்ரீ பாஷ்ய விளக்கம், மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவனுக்கு கர்ம சம்பந்தம் விலகுவதை தெளிவாக அருளியுள்ளார்.

ப்ருஹ்ம ஸூத்ரம்

4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸூத்ரம்

ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷௌ தத் வ்யபதேஷாத்

அதாவது,

மோக்ஷ உபாயம் அநுஷ்டித்த உபாஸகன் விஷயத்தில் ஸஞ்சிதமும் அபுத்திபூர்வக உத்தராகமும் அழியும்.

இந்த ஸூத்ரம் ததகிமாதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு, மோக்ஷத்தை அடைய விரும்பி அதற்காக சாஸ்த்ரத்தில் விதித்த அநுஷ்டானத்தை செய்பவர்களின் 'ஸம்ஸாரத்திற்கு காரணமான பாப புண்ய கர்மாக்களை' விலகுகிற விதத்தை விளக்கப் படுகிறது.

பக்தி யோகம் அல்லது **சரணாகதி** என்ற ஒரு செயல், தானே பலன் அளிக்க வல்லது அல்ல. அந்த அநுஷ்டானத்தில், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், மனம் இரங்கி மோக்ஷத்திற்கு தடையான பாப புண்ய கர்மாக்களை விலக்குகிறான் என்பதே தாத்பர்யம். இதையே ஸ்ரீ ராமானுஜர் தஸ்ய ச வசீகரணம் தத் சரணாகதிரேவ என்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை வசீகரிக்கும் விதமாக மோக்ஷத்திற்கான வழியை விளக்குகிறார்.

சம்சாரத்திற்கு காரணமான கர்மாக்களின் வகைகள்:

ஸஞ்சித கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பிக்காதவை - இந்த கர்மாக்களின் பலன்களை அநுபவித்து முடிய எத்தனை பிறவிகள் ஆகலாம் என கணிக்க முடியாத அளவிற்கு அதிகமானவை.

உபாஸகன் மற்றும் சரணாகதன் இருவருக்கும் இது விநாசத்துக்கு விஷயமாகிறது.

ப்ராரப்த கர்மாக்கள் - பலன் கொடுக்க ஆரம்பித்தவை - இந்த கர்மாக்களின் பலன்கள் முடிய தற்போது உள்ள பிறவியைத் தவிர மேலும் ஒரு சில பிறவிகள் ஆகலாம்.

உபாஸகன் விஷயத்தில் இது அநுபவத்துக்கு விஷயமாகிறது; சரணாகதன் விஷயத்தில், தற்போது உடைய உடலை தரிப்பதற்கு தேவையான கர்மாக்கள் அநுபவத்துக்கு விஷயமாகும்; மற்றவை விநாசத்துக்கு விஷயமாகிறது.

பக்தி யோகம் தொடங்கிய பிறகு அல்லது **சரணாகதி** அநுஷ்டித்த பிறகு தெரியாமல் செய்யும் பாபங்கள்.

பாபமாகவே கருதப் படாமல் விலகுகிறது.

பக்தி யோகம் தொடங்கிய பிறகு அல்லது **சரணாகதி** அநுஷ்டித்த பிறகு தெரிந்தே செய்யும் பாபங்கள்.

ப்ராயஸ்சித்தத்தினாலோ தண்டனையாலோ அழிக்கப் படுகிறது.

பக்தி யோகம் செய்பவர்கள், ப்ராரப்த கர்மாக்கள் முடிந்த உடன் மோக்ஷத்தை அடைவார்கள்; சரணாகதர்கள் (த்ருப்த ப்ரபன்னர்கள்), தற்போது உள்ள பிறவி முடியும் காலத்தில் மோஷத்தை அடைவார்கள் என்பது ப்ரமாண ஸித்தம்.

ஆக, குறிப்பிட்ட காலத்துக்கு மேல், மோக்ஷ பலனைப் பெற, புத்தி பூர்வக உத்தர புண்யங்கள் தடையாகாது.

3. மோக்ஷ உபாயமான பக்தி யோகமோ அல்லது சரணாகதியையோ அநுஷ்டித்தவன் விஷயத்தில் புத்தி பூர்வக உத்தர புண்யங்களும் விலகுவதை தெளிவு படுத்தியுள்ளார் ஸ்ரீ பாஷ்யத்தில் பகவத் ராமானுஜர்.

ப்ருஹ்ம ஸூத்ரம்

4ம் அத்யாயம் 1ம் பாதம் 8வது அதிகரணம் 14ம் ஸூத்ரம்

இதரஸ்ய அபி ஏவம் அஸம்ஷ்லேஷ பாதே து

அதாவது,

உபாஸன்த்திற்கு முன் செய்யப்பட்ட புண்யமும் பாபம் போல் அழிந்துவிடும். பிறகு செய்யப்படும் புண்யமும் பாபம் போல் ஒட்டுவதில்லை

இந்த ஸூத்ரம் இதராதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு, மோக்ஷத்தை அடைய விரும்பி அதற்காக சாஸ்த்ரத்தில் விதித்த அநுஷ்டானத்தை செய்பவர்களின் புண்ய கர்மாக்களும் பாபம் போல் விலகுகிற விதத்தை விளக்கப் படுகிறது.

புண்யம் மற்றும் பாபம் என்ற சொற்களின் விளக்கம்:

புண்யமாவது இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிப்படி உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சந்தோஷம்; அதன் விளைவாக ஏற்படும் அநுகூலங்கள்.

பாபமாவது இந்த ஜீவர்கள் செய்யும் சாஸ்த்ர விதிக்கு மாறாக உள்ள செய்கையால் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு ஏற்படும் சீற்றம்; அதன் விளைவாக ஏற்படும் ப்ரதிகூலங்கள்

ஆனால், மோக்ஷத்தை அடைய விரும்பி அதற்காக சாஸ்த்ரத்தில் விதித்த அநுஷ்டானத்தை செய்பவர்களின் பாபமாவது இந்த ஜீவர்கள் செய்யும் மோக்ஷத்திற்கு விரோதமான செய்கையால் ஏற்படும் ப்ரதிகூலங்கள். சாஸ்த்ர விதிப்படி உள்ள சில புண்யங்களும் பக்தி யோகிகளுக்கு விரோதியே ஏன் எனில், சில கர்மங்கள் ஸ்வர்காதி பலன்களை கொடுக்க வல்லதாக இருந்தால், அது பக்தி யோகத்திற்கு மற்றும் அதனால் வரும் மோக்ஷ பலனுக்கு கால தாமதத்தை ஏற்படுத்தும். அதனால் அந்த புண்யமும் பாப கோஷ்டியில் சேர்க்கப் படுகிறது.

இப்படி இருக்க, மோக்ஷத்திற்காக பக்தி யோகம் செய்பவனுக்கும் சரணாகதி அநுஷ்டித்தவனுக்கும் முன்பு செய்யப் பட்ட புண்ய கர்மாக்களும் (ஸஞ்சித கர்மாக்கள் மற்றும் ப்ராரப்த கர்மாக்கள்) , பாபத்தைப் போலவே அழிந்து விடுகின்றன.

ஆனால், புத்தி பூர்வக உத்தர புண்யங்களினால், சரீர தாரணத்திற்கு தேவையான புண்யங்களை, அதாவது அன்னம், ஆரோக்யம் போன்றவைகளை, மட்டுமே பலன் தரும்படி ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் வைத்து விட்டு, மோக்ஷம் அடையும் தருவாயில் மீதமுள்ள புண்ய கர்மாக்களையும் அழித்து விடுகிறான்.

இந்த புண்ய கர்மாக்களினால் பெறக் கூடிய ப்ராக்ருத பலன்களை விட மோக்ஷ பலன் மிக உயர்ந்தது, என்பது உணரத் தக்கது.

ஆக, குறிப்பிட்ட காலத்துக்கு மேல், மோக்ஷ பலனைப் பெற, புத்தி பூர்வக உத்தர புண்யங்கள் தடையாகாது.

4. பாப புண்ய கர்மங்கள், இவ்வதிகாரிளின் விஷயத்தில், நண்பர் விரோதிகளையும் அடையும் விதத்தையும் சாஸ்த்திரங்கள் தெளிவிக்கின்றன.

ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்கரிதம். விஸரிஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்கிறது மநு தர்ம சாஸ்த்திரம்.

அதாவது, மோக்ஷத்தை அடைபவன், அதன் பொருட்டு தன் தேகத்தை விடும் போது, புண்யங்களை தன் நண்பர்களிடமும் பாபத்தை தன் விரோதிகளிடமும் விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு எம்பெருமான் சரணாகதன் விஷயத்தில் ஸங்கல்பிக்கிறான்.

அதன் பிறகு அந்த சரணாகதன் பாப புண்ய கர்ம பந்தம் அற்று பரமபதத்தை அடைகிறான்.

 # எம்மனாஎன் குலதெய்வமே என்னுடைய நாயகனே நின்னுளேனாய்ப் பெற்றநன்மை இவ்வுலகினில் ஆர்பெறுவார் நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே

என அருளிகிறார் பெரியாழ்வார்.

அதாவது, யமன் போல் நம்மீது விழுந்து அழுத்துகின்ற பாபங்கள் அனைத்தும் ஓடிச் சென்று நம் பகைவர்களை அடைகின்றன.

 # தஸ்ய புத்ரா: தாயமுபயந்தி ஸுக்ருத: ஸாது க்ருதியாம் த்விஷந்த: பாப க்ருத்யாம்

என்கிறது உபநிஷத்.

அதுவும் இதே அர்தத்தையே கூறுகிறது.

அதாவது, தகப்பன் சொத்தை பிள்ளைகள் பங்கிட்டு கொள்வதைப் போல், நண்பர்களும் விரோதிகளும் புண்ய பாபங்களை பெற்றுக் கொள்கின்றனர்.

ஆக, குறிப்பிட்ட காலத்துக்கு மேல், மோக்ஷ பலனைப் பெற, புத்தி பூர்வக உத்தர புண்யங்கள் தடையாகாது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

உபய பாவனா க்ரமத்தாலே வந்த புத்தி பூர்வ உத்தர புண்யங்களில் ப்ரதிபந்தமில்லாதவையும் உபாஸகனுக்கு வித்யா அநுகுண பூர்வ உத்தர புண்யங்களும் பல ப்ராதனத்தாலே கழியும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

உபய பாவனா க்ரமத்தாலே - சரணாகதன் ஒரு விதத்திலே சம்சார சம்பந்தம் கொண்டும் மற்றொரு விதத்திலே பரம பருஷார்த்த இசாசை கொண்டும் இரண்டு விதமாக சரீர யாத்திரையைக் கழிக்கும் போது

வந்த புத்தி பூர்வ உத்தர புண்யங்களில் - அவர்களுக்கு ஏற்படும் தெரிந்தே ஏற்படும் புண்ய செயலானது

ப்ரதிபந்தமில்லாதவையும் - விதித்த மோக்ஷ பலனுக்கான காலத்திற்கு தடை ஆகாத வகையிலும்

உபாஸகனுக்கு வித்யா அநுகுண பூர்வ உத்தர புண்யங்களும் - மோக்ஷ உபாயத்தை மேற்கொண்ட உபாஸகன் மற்றும் சரணாகதனுக்கு, அந்த அநுஷாடானத்திற்கு உண்டான தன்மையின் படி, பலன் அளிக்க வல்லதாகாத முன்பும் பின்பும் ஏற்படுகிற புண்யங்களும்

பல ப்ராதனத்தாலே கழியும் - மோக்ஷ பலன் பெறும் தருவாயில் விலகி விடும்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சரணாகதனுக்கு புத்தி பூர்வக புண்யம்' என்பது பரம புருஷார்த்தத்தை அடைய விளம்பத்தை ஏற்படுத்தும் என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

101. <u>ப்ரபன்னனின் புத்தி பூர்வக பாப க்ருத்யங்களுக்கு தடையில்லை?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சரணாகதனுக்கு புத்தி பூர்வக பாபம்' என்பது ஒட்டாது என்றும் அப்பாங்கள் உண்டாகத் தடையில்லை என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு ' சரணாகதனுக்கு புத்தி பூர்வக பாபம்' என்பது ஒட்டாது என்றும்

அப்பாங்கள் உண்டாகத் தடையில்லை என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

ஸர்வேஸ்வரன் தன் கருணையின் காரணமாக, பாபம் ஏற்படும் போது, ஆஸ்ருதர்களுக்கு அளிக்கும் சலுகைகளை, பாபம் செய்ய ஆஸ்ருதர்களுக்கு அநுமதி அளிப்பதாகக் கொள்வது, உலக நோக்கிலும் நற் பண்பாகாது.

2. மஹாபாரதத்தில், வேத வ்யாஸர் விளக்கியதாவது:

தபோ ந கல்கோ அத்யயன் ந கல்க: ஸ்வாபாவிகோ வேத விதி: ந கல்க: ப்ரஸஹ்ய வித்தாஹரணம் ந கல்க: தான்யேவ பாவ உபஹதானி கல்க:

அதாவது,

தவம் பாபமாகாது; வேத அத்யயனம் பாபமாகாது; வேத விஹித கர்மங்களும் பாபமாகாது; அக்கர்மங்களை அநுஷ்டிக்க த்ரவ்ய ஸம்பாத்யமும் பாபமாகாது; ஆனால் அச் செயல்களை ஸாத்வீக த்யாகமற்று, விபரீத எண்ணங்களோடு செய்வது பாபம், என்பதாகிறது.

இங்கு விளக்கப்படுவது, கவனக் குறைவால், ஸாத்வீக த்யாகமின்றி, விஹித கர்மங்கள் செய்யப் பட்டால் அது பாப துல்யமாகும்; அம்மாதிரி அநவதானத்தினால், உண்டாகும் பாபமானது, சரணாகதன் விஷயத்தில், **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு விஷயமாகும் என்றபடி.

ஆக, மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவனுக்கு, தடையின்றி, ஸகல சாஸ்த்திர விரோதமான பாபச் செயல்களைச் செய்ய அநுமதி அளிப்பதாக **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** எனும் பதங்கள் விளக்குவதாகக் கருதுவது முற்றிலும் அநுபபன்னம்.

3. ஸர்வேஸ்வரனுக்கு **ஆஸ்ருத பக்ஷபாதி** எனும் உயர்ந்த குணம் உண்டு; அதுவே சம்சாரி ஜீவர்கள் உஜ்ஜீவிக்கக் காரணமாகிறது.

ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

7ம் அத்யாயம் 17 வது ஸ்லோகம் -

தேஷாம் ஞானி நித்ய யுக்த ஏக பக்தி விஷிர்ஷ்யதே. ப்ரியோஹி க்ஞாநிநோர்த்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:

அதாவது,

நான்கு வித பலன்களையும் விரும்பி பலரால் எம்பெருமான் ஆஸ்ரயிக்கப் படுகிறான்.

அவர்களுக்குள் ஞானி என்பவன் எனக்கு பிரியமானவன். (அதாவது, பகவானையே புருஷார்த்தமாகக் கருதி வேறொரு பலனில் இச்சை அற்று இருப்பவன் ஞானி)

ஏனெனில் அவன் என்னுடனேயே இருக்க ப்ரிய படுபவன். மற்றவர்கள் பலன் கிடைத்ததும் விலகுவார்கள்.'

ஆக, இவர்கள் திறத்தில், ஸர்வேஸ்வரன் **ஆஸ்ருத பக்ஷபாதியாகிறான்**, என்றபடி.

ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்களில் ஞானி ஏற்றமுடையவன் என்பதை கண்ணன் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

7ம் அத்யாயம் 18 வது ஸ்லோகம் -

உதாரா: ஸர்வ ஏவைதே க்ஞாதித்வாத்மைவ மே மதம்.ஆஸ்தித: ஸஹி யுக்தாத்மா மாமேவாநுக்தமாம் கதிம்

அதாவது,

என்னை (கண்ணனை) பூஜிப்பவர்கள் நால்வரும் கொடையாளர்கள். அதில் ஞானி எனக்கு ஆத்மா. இது என் ஸித்தாந்தம், என்கிறான் கண்ணன்.

ஆத்மா நியமிக்க சரீரம் இயங்குவது போல, எம்பெருமான் திருவுள்ளப் படியே நடந்து போகும் ஞானிகளின் இச்சைக்கு ஏற்ப எம்பெருமான் செயல்படுவதாக தாத்பர்யத்தை உணர்த்துகிறான்.

இதுவும், ஸர்வேஸ்வன் **ஆஸ்ருத பக்ஷபாதி** எனும் அவனது குணத்தை உணர்த்துகிறது.

ஆக, ஸ்வரூப அநுகுணமான சாஸ்த்திர விஹித செயல்களைச் செய்வதிலேயே, சரணாகதன் நிலைத்துப் போக வேண்டும்; அப்படி இருக்கும் போது, அவர்களின் இச்சைகளை ஸர்வேஸ்வரன் பூர்த்தி செய்கிறான், என்பதே தாத்பர்யம்; இதனால், சரணாகதனுக்கும் பாபங்களைச் செய்ய அநுமதி வழங்கப் படவில்லை என உணர வேண்டும்.

4. ஆகாமியான பாபங்களுக்கு, சரணாகதன் விஷயத்தில் **அஸ்லேஷம்** மற்றும் **விநாசம்** என இரு வகைப்படுத்தி சாஸ்த்திரங்கள் வர்ணிப்பதாலும், புத்திபூர்வக உத்தராகத்துக்கு, ப்ராயஸ்சித்தம் விதித்திருப்பதாலும், **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** எனபதற்கு, ப்ரகரணத்தை ஒட்டி அர்த்த நிர்ணயம் பண்ண வேண்டும்.

ஆண்டாள், திருப்பாவையில், இவ்விஷயங்களை விளக்குகிறாள்.

 # தூமலர் தூவித் தொழுது - அந்த ஆசார்யனை முன்னிட்டு ஸ்ரீமந் நாராயணனை வணங்கி

 # வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க - சாஸ்த்திரம் விதித்த கர்தவ்யமான, ஐந்து அங்கங்களோடு கூடின சரணாகதி அநுஷ்டான மந்திரங்களை ஆசார்யன் உச்சரிக்க அதை உச்சரித்து, அவ்விஷயத்தை மனதினில் த்யானித்திருக்க (அதாவது, சரணாகதி அநுஷ்டானம் செய்து போக)

ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி: , என்கிற ப்ரமாணத்தினால்,

சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது:

 # போய பிழையும் புகுதருவான் நின்றனவும் - ஸஞ்சிதம், ப்ராரப்தம் மற்றும் புத்தி பூரவமாயும் அபுத்த பூர்வகமாயும் உள்ள உத்தராகம் அனைத்தையும்

 # தீயினில் தூசாகும் - மாயனான எம்பெருமான், அப்பாப புண்ய கர்மாக்களை, தீயிலிட்ட தூசு போல, விநாசத்தையும், அஸ்லேஷத்தையும், சாஸ்த்திர முறைப்படி உண்டாக்கி

குறிப்பிட்ட காலத்திலே, சரணாகதனுக்கு, மோக்ஷ சாம்ராஜ்யத்தையே அளித்து அருள்கிறான், என்றபடி.

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, **ப்ருஹ்ம ஸூத்ரம்** ; அதன் வ்யாக்யானமான ஸ்ரீ ராமானுஜரின் **ஸ்ரீ பாஷ்யம்**

4ம் அத்யாயம் 1ம் பாதம் 7வது அதிகரணம் 13ம் ஸூத்ரம்

ததகிம உத்தர பூர்வ அகயோ: அஸ்லேஷ வினாஷௌ தத் வ்யபதேஷாத்

அதாவது,

மோக்ஷ உபாயம் அநுஷ்டித்தவன் விஷயத்தில், **அஸ்லேஷம்** மற்றும் **விநாச** விஷயமான கர்மாக்களை வேறுபடுத்தி விளக்கப் படுகின்றன.

ஆக, சரணாகதனின், அபுத்தி பூர்வக உத்தராகம் **அஸ்லேஷத்துக்கு** விஷயம் என்றும், பரிஹரிக்கப்பட்ட புத்தி பூர்வக உத்தராகம் **விநாசத்துக்கு** விஷயம் எனத் தெளிவு.

சரணாகதன் விஷயத்தில் ப்ராயஸ்சித்தத்தை விதிக்கிறது சாஸ்த்திரம்.

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத்

என்கிறது சாஸ்த்ரம்.

அதன் பொருள்,

மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான 'ப்ராயச்சித்த சரணாகதியை' உடனடியாக செய்ய வேண்டும். ஆக, செய்த பாபத்திற்காக மனதினால் வருந்தி மற்றுமொரு 'ப்ராயச்சித்த சரணாகதியை' அவனிடத்தில் அநுஷ்டிப்பதனால், ஸர்வேஸ்வரன், சரணாகதனை மன்னித்து விடுகிறான் என்கிறது சாஸ்த்ரங்கள்.

சரணாகதனுக்கு புத்தி பூர்வக அபசாரங்கள் பாதகங்களை அளிப்பதில்லை என சாஸ்த்திர விதிகளை மீறி அர்த்தம் கற்பிக்கலாகாது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

வித்யா மஹாத்ம்யத்தாலே இக் கர்மங்களுக்கு விநாசமாவது ஈஸ்வரன் இவற்றுக்கு ப்ராப்தமான பல ப்ரதான அபிஸந்தியை விடுகை; அஸ்லேஷமாவது, இவ்வாஸ்ருதர் திறத்தில் இக்கர்ம பல ப்ரதான அபிஸந்தி உதியாதொழிகை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

வித்யா மஹாத்ம்யத்தாலே - ப்ருஹ்ம வித்யையான பக்தி யோக, சரணாகதி அநுஷ்டானத்தினால்

இக் கர்மங்களுக்கு - மோக்ஷ உபாய அநுஷ்டானத்தின் பிறகு ஏற்படும் பாப புண்ய கர்மங்களுக்கு

விநாசமாவது - மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவன் விஷயத்தில் அழிவாவது

ஈஸ்வரன் - பாப புண்ய கர்மாவின் ஆதாரத்தில் சம்சாரி ஜீவர்களுக்கு பலன் அளிக்கும் ஸர்வேஸ்வரன்

இவற்றுக்கு ப்ராப்தமான பல ப்ரதான அபிஸந்தியை விடுகை - ஸஞ்சிதம் போன்ற பாப புண்ய கர்மங்களுக்கு பலனளிக்கிற எண்ணத்தை முற்றிலுமாக விடுகை

அஸ்லேஷமாவது - மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவன் விஷயத்தில் பாப புண்யங்களின் கர்மங்கள் ஏற்படாதிருப்பது

இவ்வாஸ்ருதர் திறத்தில் - இந்த மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவர் விஷயத்தில்

இக்கர்ம பல ப்ரதான அபிஸந்தி உதியாதொழிகை - ஆகாமியான அபுத்தி பூர்வக உத்தராகம் காரணமான பாப புண்யங்களை ஒட்டி பலனளிக்க வேண்டிய கர்மங்களாகவே, கருதாதிருக்கை

ஆக, புத்தி பூர்வக பாபங்கள் சரணாகதனுக்கு உண்டானால், அது பரிஹரிக்காத மட்டில், அநிஷ்டங்கள் ஸித்திக்கும், என்பது ப்ரமாண விளக்கம்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களுக்கு ' சரணாகதனுக்கு புத்தி பூர்வக பாபம்' என்பது ஒட்டாது என்றும் அப்பாங்கள் உண்டாகத் தடையில்லை என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

102. ஒருவரின் பாப புண்யங்களை மற்றவருக்கு பலனாக்க அடுக்குமோ?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு 'ஒருவர் செய்யும் கர்மங்களுக்கு மற்றவருக்கு பலனளிக்க தகுமோ' என ஆட்சேபிப்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு 'சரணாகதனின் ஸஞ்சித, அநப்யுபகத ப்ராரப்த கர்மங்களை, அவன் மரண காலத்தில், அவன் நண்பர் பகைவர்களுக்கு பிரித்து அளிப்பது தகுமோ' என ஆட்சேபிப்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. மஹாபாரதத்தில், கண்ணன் செயல்களை ஆராய்ந்தால், தன் அடியார்கள் பக்கலிலே த்வேஷம் கொள்பவரை தனக்கு விரோதியாகவே அவன் கருதுகிறான், என தெளிவு உண்டாகும்.

மஹாபாரதத்தில் வேதவ்யாஸர், கண்ணன் விதுரர் க்ருஹத்திற்கு சென்ற போது,

சுசிஸ்து ப்ரயதோ பூத்வா விதுரோந்நமுந்நமுபஹாரத்

என்றார். அதாவது, மிகவும் தூய்மையானவரான விதுரர், கண்ணனுக்கு அந்த உணவை அளித்தார்.

அதனால், கண்ணனுக்கு விதுரரிடன் உள்ள ப்ரீதி கூறப் படுகிறது.

விதுரருடைய க்ருஹத்திலிருந்து பாண்டவ தூதனாக வந்த கண்ணனைப் பார்த்து, துரியோதனன்,

பீஷ்ம த்யோணாவதிக்ரம்ய மாம் சைவ மதுசூதந. கிமர்த்தம் புண்டரிகாக்ஷ புக்தம் வ்ருஷள போஜனம்?

என்றான்.

அதாவது, மதுசூதநா! பீஷ்மர், த்ரோணர் போன்றவர்களின் க்ருஹங்களை விட்டுவிட்டு, என் க்ருஹத்தையும் விட்டுவிட்டு, ஒரு வேளாளனான விதுரருடைய க்ருஹத்தில் ஆகாரம் ஏன் உட்கொண்டாய்? என்று வேளாளரான விதுரருடைய ஆகாரம் ஏற்கத் தகாதது என்பதை குறித்து துரியோதனன் வினவினான்.

அதற்கு கண்ணன் அளித்த பதிலாவது,

த்விஷதந்நம் ந போக்தவ்யம் நைவ போஜயேத் பாண்டவாந் த்விஷஸே ராஜந் மம ப்ராணா ஹி பாண்டவா:

அதாவது, தர்ம சாஸ்த்திரப் படி, விரோதிகள் வீட்டில் உணவு உட்கொள்ளக் கூடாது; விரோதிகளுக்கு உணவு அளிக்கக் கூடாது; அரசனே! எனக்கு உயிரினும் மேலான பாண்டவர்களை நீ விரோதிப்பதால், நீ எனக்கும் விரோதியாகிறாய், என்றான் கண்ணன்.

இங்கு, கண்ணன் அளித்த பதிலாவது, தன் பக்தர்களின் விரோதி தனக்கும் விரோதி என்பதாகும். அதனால், எம்பெருமானிடம் த்வேஷம் கொண்டவர்களிடம் பகவந் நிக்ரஹம் ஏற்படுவதைக் காட்டிலும், அவனுக்கு ப்ரீதிக்கு பாத்திரமான சரணாகதன் பக்கலிலே ஒருவனுக்கு த்வேஷம் உண்டாகுமேயானால், பகவந் நிக்ரஹம் அவர்கள்பால் உண்டாகும் என்றபடி.

ஆக, சரணாகதனின் பாப புண்யங்களை விரோதி நண்பர்களிடம் பகிர்வது, ஈஸ்வரனின் ஸ்வ ஸங்கல்ப நியதம்.

இதனால், அத்யந்த ப்ரீதி கொண்ட சரணாகதன் விஷயத்தில், மற்றவர்கள் ப்ரீதியோ த்வேஷமோ கொண்டால், ஸர்வேஸ்வரனின் அநுக்ரஹ ஸங்கல்பம், ப்ரீதி கொண்டவர்களிடமும், அவன் நிக்ரஹ ஸங்கல்பம், த்வேஷம் கொண்டவர்கள் பக்கலிலே உண்டாகிறது, என அறியலாம். அதனால் சரணாகதனின் பாபங்களை அவன் விரோதிகள் சுமக்கிறார்கள் எனவும் அவனது புண்யங்களை அவனது நண்பர்கள் ஏற்கிறார்கள் எனக் கூற குறையில்லை.

3. சரணாகதன், பரம பாகவதன் ஆகிறான் என்றபடியால், அவனுடைய விரோதிகளை தண்டிப்பதற்காக சரணாகதனின் பாபச் சுமைகளை ஏற்றுகிறான்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் கீதையில் (7-19)

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:

என அருளினான்.

அதாவது,

பல புண்ய பிறவிகளின் இறுதியில் ஞானவான், ‘எல்லாம் வாசுதேவனே’ என்று கருதி என்னை அடைக்கலமாகப் பற்றுகிறான். அவ்வித மகாத்மா கிடைத்தற்கு அரியவன்,

என்கிறான் கண்ணன்.

அதாவது, ஸித்தோபாயனும் ஸித்தோபேயனும் ஸர்வேஸ்வரனே உணர்ந்து முமுக்ஷுவானவன் ஸாத்யோபாயம் அநுஷ்டிக்கும் போது, அவனை மஹாத்மா என கண்ணன் கொண்டாடுகிறான்.

ஸர்வேஸ்வரனான கண்ணன், சாஸ்த்திர விரோதமாக செயல்படும் அசுர குணம் உடையவனுக்கு ஏற்படும் கதி என்ன என்று பகவத் கீதையில் (16-19) உறுதி படுத்துகிறான்.

தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான். க்ஷிபாம்யஜஸ்ரம் அசுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு

அதாவது,

‘என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள், என்னை பற்றி சிந்திக்காமல் சம்சார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், அசுர யோனியில் பிறக்க செய்கிறேன்.’ -

என்கிறான் கண்ணன்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் ஞானமுள்ள ஜீவர்களுக்கு, மனித பிறவியைக் கொடுத்து, சாஸ்த்ரங்களைக் கொடுத்து, அதை சரிவர உபதேசிக்கத் தகுந்த ஆசார்யர்களைக் கொடுத்து, தன்னுடைய ஸ்வாபாவிக நிரந்தர மோக்ஷ ஸுகத்தை அடைய வழியையும் அந்த சாஸ்த்ரங்களிலே காட்டிக் கொடுத்து, பிறகு அந்த பத்த ஜீவர்கள் விஷயத்தில் ஒரு ஸுக்ருதத்தை (ஒரு விசேஷ புண்யத்தை) எதிர்பார்த்து காத்துக் கிடந்து பரம உபகாரம் இந்த பத்த ஜீவர்களிடம் ஸர்வேஸ்வரனான கண்ணன் செய்துள்ளான்.

ஆனால் பலர் இந்த லோகத்தில், ஸர்வேஸ்வரனான கண்ணனால் கொடுக்கப் பட்ட மனித பிறவியை கொண்டு சாஸ்த்ரத்திற்கு விரோதமான செயல்களையே செய்து கொண்டு, ஸர்வேஸ்வரனான கண்ணனை மறந்து, அவன் விதித்தவைகளையும் புறக்கணித்து, தான் ஸ்வதந்த்ரன் என்ற இறுமாப்புடன் இருந்து கொண்டு, என்றும் இங்குள்ள போகங்களே சிறந்தது என்று இருக்கும் போது, கண்ணனுக்கு கோபம் ஏற்படுகிறது. அதன் விளைவாக இந்த ஸ்லோகத்தில் அவர்களை கண்ணன் கடுமையாக விமர்சிக்கிறான்.

இதனால் அறிய வேண்டுவதாவது, தன்னிடம் த்வேஷம் உள்ளவர்கள் எனும் இடத்தில், தனக்கு ப்ரீதர்களான பக்தர்களிடம் த்வேஷம் கொண்டவர்களும் பகவந் நிக்ரஹத்திற்கு ஆளாகின்றனர், என்றபடி. அதனால் சரணாகதனின் பாபங்களை அவன் விரோதிகள் சுமக்கிறார்கள் எனக் கூற குறையில்லை.

4. சாட்யாயனி ஸ்ருதியும் இவ்வாறே கோஷிக்கிற படியால், அதீந்த்ரிய விஷயங்களில் சாஸ்த்திரமே ஆதாரம்; யுக்தி வாதம் செய்யலாகாது.

தஸ்ய புத்ரா: தாயம் உபயந்தி ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்

மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவனின் அந்திம தேஹ யாத்திரை காலத்தில், தகப்பன் சொத்தை புத்திரர்கள் பங்கிட்டு கொள்வதைப் போலே, நண்பர்களும் பகைவர்களும் சரணாகதனின் பாப புண்யங்களை பங்கிட்டுக் கொள்வர்.

லோக நீதியில் உள்ளதெல்லாம் மோக்ஷ சாஸ்த்திரத்தில் ஊஹிக்கை வசன விருத்தம் என ஸ்வாமி தேசிகன் ஸித்தோபாய சோதனாதிகாரத்தில் தெளிவித்துள்ளார். அதாவது, யுக்தி வாதத்தால் சாஸ்த்திர விதிகளை மறுக்க ஒண்ணாது, என அறிவுறுத்துகிறார்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஆரேனும் அநுஷ்டித்த கர்மங்களுக்கு ஆரேனும் பக்கலிலே நிக்ரஹ அநுக்ரஹங்கள் பிறந்தால் அதிப்ரஸங்கம் வாராதோ என்னில், இதுவும் முமுக்ஷு விஷயத்தில் அநுகூல ப்ரதிகூலருக்கு உபசார அபசார ரூபமான கர்மம் அடியாக வருகிறதாகையால் அதிப்ரஸங்கம் இல்லை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஆரேனும் அநுஷ்டித்த கர்மங்களுக்கு - சரணாகதனின் அநுபவியாமல் இருக்கக் கூடிய ஸஞ்சிதம், அநப்யுபகதம் போன்ற பாப புண்ய கர்மங்களானது
ஆரேனும் பக்கலிலே நிக்ரஹ அநுக்ரஹங்கள் பிறந்தால் - பாப புண்ய கர்மங்களைச் செய்த சரணாகதன் அநுபவிக்காமல் அவனது நண்பரும் பகைவரும் அநுபவிக்க நேர்ந்தால்

அதிப்ரஸங்கம் வாராதோ என்னில் - அது முறையற்றது ஆகும் என்று விளக்கினால்

இதுவும் முமுக்ஷு விஷயத்தில் - சரணாகதனின் சரீர முடிவில் இந்த பாப புண்ய கர்ம விநியோகம்,

அநுகூல ப்ரதிகூலருக்கு - அந்த சரணாகதனின் நண்பர் பகைவருக்கு

உபசார அபசார ரூபமான கர்மம் அடியாக வருகிறதாகையால் - அவர்கள் செய்யும் செயல் ஏற்படுவதால் (அதாவது, சரணாகதனின், உகப்பிற்காகவும் மன வருத்தத்திற்காகவும், அவர்கள் செயல் படுவதால்)

அதிப்ரஸங்கம் இல்லை - அந்த நண்பர்களும் பகைவர்களும், தங்கள் செயலுக்கான பாப புண்ய பலன்களையே அநுபவிக்கிறார்; ஆக, அது முறை தவறியது ஆகாது.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு 'ஒருவர் செய்யும் கர்மங்களுக்கு மற்றவருக்கு பலனளிக்க தகுமோ' என ஆட்சேபிப்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

103. <u>ஆகாமியான பாபங்கள் சரணாகதியால் களையப் படுமோ?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு 'முன்னும் பின்னும் நேரும் ஸகல பாபங்களும் அழிகிறது' என்பது பல ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு சரணாகதிக்கு முன்னும் பின்னும் நேரும் ஸகல பாபங்களும்

அழிகிறது என்பது பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரணாகதி ஸர்வ பல ஸாதனம், என்கிறது ப்ரமாணம்; ஆக, பாபங்களின் நீக்கம் அந்தந்த பலனுக்கு தடையான உள்ளவைகளாகவே என **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்பதற்கு சாஸ்த்ரீயமாக அர்த்தம் கொள்ள வேண்டும்.

ஸ்ரீ பராசர மஹரிஷி, தான் அருளிய ஸ்ரீவிஷ்ணு புராணத்தில்,

தாவதார்த்தி ததா வாஞ்சா தவான் மோஹ ததாஸ் ஸுகம், யாவன் நயாதி சரணம் த்வாமஸேஷ அக நாசனம்

அதாவது,

சரணாகதி அநுஷ்டானம் நான்கு வித (தர்ம, அர்த்த, காம, மோக்ஷ) பலன்களையும் அளிக்க வல்லது

என விளக்குகிறார்.

மோக்ஷ பலனிற்காக அல்லாமல், பல புராண இதிஹாஸ கதைகளில், பலர் சரணாகதி மேற் கொண்டதை நாம் அறிவோம்.

மஹாபாரதத்தில், த்ரௌபதியின் வஸ்த்திரம் துச்சாததனால் களையும் போது, அவள் தன்னை பாதுகாக்க முயற்சித்தாள். கண்ணனிடம் சரண் புகுகிறாள். பலன் பெற்றாள்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், காகாசுரனை ப்ருஹ்மாஸ்த்திரம் துரத்தும் போது, பல லோகங்களுக்கு சென்று, அவர்கள் உதவியை நாடி, தன் முயற்சி பலன்ற்று போகவே, ஸ்ரீராமனிடம் காகாசுரன் சரண் புகுந்தான். பலன் பெற்றான்.

ஸ்ரீமத் ராமாயணத்தில், சுக்ரீவன், வாலி வதத்திற்காக, ஸ்ரீராமனை சரண் புகுந்தான். பலன் பெற்றான்.

ஆக, சரணாகதி அநுஷ்டானம் ஸர்வ பல சாதனம்.

இங்கு அறிய வேண்டுவது என்னவென்றால் நால் வகை பலன்களையும் அந்தந்த பலன்களுக்கு தடையான பாபங்களை விலக்குவதைக் குறிப்பதாகும்.

அதனால் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** எனும் போது சம்சாரி ஜீவர்களின் அனைத்து பாபங்களும் களையப்படுகிறது எனும் விளக்கம் அத்யந்த அநுபபன்னம்.

பகவத் கீதைக்கு விளக்கமாக, ஸ்வாமி தேசிகன் அருளிய **தாத்பர்ய சந்த்ரிகை** எனும் நூலில், சரமஸ்லோகத்தின் சாராம்சத்தை ஸ்வாமி தேசிகன் நிர்தாரித்து உள்ளார்.

அதாவது, ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், சரமஸ்லோக அர்த்தத்தை பொதுவாக விவரிக்கும் போது, ஸ்ரீராமானுஜர் அருளியதை அநுசரித்து,

ஸுதுஷ்கரேண சோசேத்ய: யேந யேந இஷ்ட ஹேதுந்நா ஸ ஸ தஸ்ய அஹமே வேதி சரமஸ்லோக ஸங்க்ரஹ:

என அருளினார்.

அதாவது, 'யார் ஒருவன் தான் விரும்புகிற பலனை தரக் கூடிய உபாயத்தை அநுஷ்டிக்க முடியாமல் வருந்தி என்னை சரணமாக பற்றுகிறானோ, அவனுக்கு நானே உபாயமாக இருந்து பலனளிக்கிறேன்' என்பதை சரமஸ்லோகத்திற்கு அர்த்தமாக விளக்கினார்.

இது, ஸ்ரீராமானுஜர் அருளிய கீதா பாஷ்யத்தோடும், சரணாகதி கத்யத்தோடும் முற்றிலுமாக பொருந்தும்.

ஆக,

ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி எனும் போது சம்சாரி ஜீவர்களின் விரும்பிய பலனுக்கு தடையான பாபங்களே களையப்படுகிறது எனும் விளக்கமே உபபன்னமாகிறது.

3. ஸ்ரீ ராமானுஜர், பகவத் கீதைக்கு விளக்க உரையாக அருளின **ஸ்ரீ கீதா பாஷ்யத்தில்** , இரு வித அர்த்தங்களை அருளியதாவது :

முதலில் , 'அனைத்து தர்மங்களையும் கை விடுதல்' என்பதற்கு அனைத்து கர்மங்களையும் தனது பலனுக்காக, தானே செய்கிறோம் என்கிற எண்ணத்தை கை விடுதல் ஆகும் என்ற கருத்தில் பொதுவாக அருளிச் செய்தார்.

அதாவது, **ஸாத்விக த்யாகம்** என்பதை உரைத்தார்.

இரண்டாவது வ்யாக்யானத்தில், 'அனைத்து தர்மங்களையும் கை விடுதல்' என்பதற்கு மோக்ஷ பலனுக்காக செய்யும் பக்தி யோகத்திற்கு தடையான பாபங்கள் ஏராளமாக இருப்பதைக் கண்டு பயந்தால், அந்த பாபங்களை களைவதற்காக அந்த ப்ரயச்சித்த ஸ்தானத்தில் கண்ணனைக் கொண்டு, அந்த பாபங்களை களைய வேண்டுவதாக உரைத்தார்.

இது பக்தி யோகத்திற்கு **அங்க ப்ரபத்தி** ஆகிறது.

ஆக, அங்க ப்ரபத்தி ப்ரகரணத்தில், பக்தி யோகம் செய்ய தடையான பாபங்களின் நீக்கம் மட்டுமே விளக்கப் படுவதால், **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** எனும் போது, பாபங்களின் நீக்கமாவது, சாஸ்த்திர அநுகுணமாக அர்த்த ஸங்கோசம் செய்து கொள்வதே ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்தம் எனத் தெளிய வேண்டும்.

4. முமுக்ஷுவின் சரணாகதி அநுஷ்டான ப்ரகரணத்தில்,

பிராட்டியிடம் புருஷகார ப்ரபத்தி செய்ய வேண்டுவதாகிறது; இது **உபாய விரோதியான** பாபங்களைக் களைய நியமமாக செய்ய வேண்டுவது.

அதன் பிறகு, திவ்ய தம்பதிகளிடம் செய்ய வேட்டியது மோக்ஷார்த்த ப்ரபத்தி; இது **ப்ராப்தி விரோதியான** பாபங்களைக் களைய செய்ய வேண்டுவது.

 # சரணாகதி கத்யம் ஒரு உரையாடலாக ஸ்ரீ ராமானுஜரால் அருளப் பட்டது; இது, ஒரு பங்குனி உத்தர திருநாளிலே, பகவத் ராமானுஜர், ஸ்வ நிஷ்டையாக, சரணாகதி அநுஷ்டித்த ப்ரகாரம்.

சரணாகதி கத்யத்தில் **புருஷகார ப்ரபத்தி -** உபாய விரோதியான பாபங்கள் களைய செய்யப் படும் சரணாகதி.

நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபேக்ஷயா பாரமார்திகி பகவத் சரணாரவிந்த சரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே

என பெரிய பிராட்டியிடம் தனது சரணாகதி பலிக்க வேண்டுமென புருஷகார ப்ரபத்தி செய்து போக,

அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே

என்று தாயாரால் அந்த புருஷகார ப்ரபத்தி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

அதாவது, இந்த சரணாகதி அநுஷ்டானத்தினால், குற்றமற்ற (அதாவது அஹங்கார மமகாரமற்ற) கைங்கர்யம் ஸித்திக்க வேண்டுமென்றும், சேஷ வ்ருத்தியையே தனக்கு உண்டான செயலாக லயித்து மிக பிரியத்துடன் சேஷியின் உகப்பிற்காகவே செய்து போவதுவும், சரீர அவஸாந்த்திற்கு பிறகு, நித்ய விபூதியில் நித்ய கைங்கர்யம் ஸித்திக்கவும் சரணாகதி அநுஷ்டிக்கிற அடியேனுக்கு, இந்த சரணாகதி அநுஷ்டானம் பலனளிக்க வேண்டும்,

என்கிற புருஷகார ப்ரபத்தி, இங்கே தெரிகிறது.

அதற்கு, பெரிய பிராட்டியான ஸ்ரீரங்க நாச்சாயார்,

‘அப்படியே ஆகட்டும்; உன் மனோரதம் பூர்த்தி அடையட்டும்’

என அந்த புருஷகார ப்ரபத்தி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. இதனால், மோக்ஷ பலனுக்கான சரணாகதி அநுஷ்டானம் ஸித்திக்கட்டும், என **உபாய விரோதியான பாபங்களை** களைவதாக பிராட்டி அநுக்ரஹம்.

சரணாகதி கத்யத்தில் மோக்ஷ பலனிற்காக **சரணாகதி அநுஷ்டானம் -** ப்ராப்தி விரோதியான பாபங்கள் களைய செய்யப் படும் சரணாகதி.

சரணாகதி கத்யத்தில் - ஸ்ரீராமானுஜர், திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் செய்யும் சரணாகதி அநுஷ்டானம்.

ஸ்ரீமந் நாராயணா ! அஸரண்ய சரண்யா ! அநந்ய சரண: த்வத் பாதாரவிந்தயுகளம் சரணம் அஹம் ப்ரபத்யே

அதாவது,

ஸ்ரீமந் நாராயணா என்பதால், இந்த சரணாகதி அநுஷ்டானம் ஸித்தோபாயமான திவ்ய தம்பதிகளிடம் செய்வதாகிறது.

இப்படிப் பட்ட ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனையே ஸர்வ விதங்களிலும் சரண்யன் என உணர்ந்து, அவன் சாஸ்த்திரத்தில் விதித்த சரணாகதி அநுஷ்டானத்தை, அவன் திருவடிகளில் செய்வதே முமுக்ஷுவான அகிஞ்சனனுக்கு செய்யப் ப்ராப்தம், என்றாகிறது.

இங்கு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளில் ஸ்வ நிஷ்டையாக, **ப்ராப்தி விரோதியான பாபங்கள்** நீங்க, சரணாகதி அநுஷ்டானம் செய்ததாயிற்று.

அதனால் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்பது ப்ரகரணத்தைப் பொருத்து, சாஸ்த்திர விரோதமில்லாமல், அர்த்த நிர்ணயம் பண்ண வேண்டுவதாகிறது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இங்கு ப்ராப்தி விரோதியாவது 'ஸாபராதனான இவன் நம்மை அநுபவிக்கக் கடவன் அல்லன்' என்கிற பகவத் ஸங்கல்பம்; உபாய விரோதியாவது 'நம்மை இவன் தெளிந்து வசீகரிக்கக் கடவன் அல்லன்' என்கிற ஸங்கல்பம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இங்கு - கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் உள்ள ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி எனும் போது

ப்ராப்தி விரோதியாவது - பலனுக்கு தடைகளான பாபங்களாவது

ஸாபராதனான இவன் நம்மை அநுபவிக்கக் கடவன் அல்லன் - மட்டற்ற பாபங்களை உடைய இந்த சம்சாரி ஜீவன் மோக்ஷ பலனாகிற பகவத் அநுபவத்தை பெறாமல் போகட்டும்

என்கிற பகவத் ஸங்கல்பம் - எனும் ஸர்வேஸ்வரனின் ஆணை

உபாய விரோதியாவது - பலனைப் பெற செய்ய வேண்டிய செயல்களுக்கு தடையாக இருக்கிற பாபங்களாவது

நம்மை இவன் தெளிந்து வசீகரிக்கக் கடவன் அல்லன் - மட்டற்ற பாபங்களை உடைய இந்த சம்சாரி ஜீவன் மோக்ஷ பலனைப் பெற சாஸ்த்திரம் விதித்த உபாயத்தை அநுஷ்டித்து அவ்விதத்திலான பகவந் நிக்ரஹத்தை சமிப்பிகாமல் போகட்டும்

என்கிற ஸங்கல்பம் - எனும் ஸர்வேஸ்வரனின் ஆணை

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு 'முன்னும் பின்னும் நேரும் ஸகல பாபங்களும் அழிகிறது' என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும் வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

104. அநிஷ்ட நிவ்ருத்தியில் இஷ்ட ப்ராப்தியும் அந்தர்கதமோ?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அநிஷ்ட நிவ்ருத்தி மட்டுமே சொல்லப் பட்டதால் இஷ்ட ப்ராப்தி சொன்னதாகாது என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு அநிஷ்ட நிவ்ருத்தி மட்டுமே சொல்லப் பட்டதால் இஷ்ட ப்ராப்தி சொன்னதாகாது என்பது சிலர் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாயம் **பாவாந்தர அபாவத்தை** தன்மையாகக் கொண்டது. அதாவது, ஒன்றின் இல்லாமை மற்றொன்றின் இருப்பைச் சொல்ல ப்ராப்தம். அதே போல, ஒன்றின் இருப்பு மற்றொன்றின் இல்லாமையை குறிக்கும்.

சரமஸ்லோகத்தில் உள்ள **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்பதற்கு விளக்கம், ஸாரஸாரக்ஞ ஸ்ரீ உ.வே. திருக்கள்ளம் நரஸிம்ஹ ராகவாசார்ய ஸ்வாமியின் **கீதா ஸாரம்** வரிகள் கொண்டு அறியலாம்.

என்னைப் பெறுவதற்கு தடங்கலான எல்லாப் பாப புண்யங்களிலிருந்தும் விடுவித்து என்னை அடையச் செய்கிறேன்

ஆக, **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்று **அநிஷ்ட நிவ்ருத்தியை** சொல்லும் இடத்தில் (பாபங்களின் விடுதலை) **இஷ்ட ப்ராப்தியும்** அதாவது அவனை அடைவதாகிற பரமபத ப்ராப்தியும் சொன்னதாயிற்று என்பது நம் பூர்வர்களின் திருவுள்ளம்.

ஏனெனில் நாம் **பாவாந்தர அபாவ வாதிகள்** ; ஒன்றின் இல்லாமை மற்றதன் இருப்பை குறிக்கும்.

ஆக, **மோகஷ பலன்** (பாபங்களின் விடுதலை) என்பதும் **பரமபத ப்ராப்தி** என்பதும் ஏக புருஷார்த்தத்தின் இரு நிலைகளே!

ஆக, பாபங்கள் விலகி பரம புருஷார்த்தத்தை அடைய ஸாத்யோபாயம், சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்டமையால், **சரணம் வ்ரஜ** என்கிற சரமஸ்லோக பதத்திற்கு, சரணாகதி அநுஷ்டானமே கருத்து, என்பது ஸ்ரீ ராமானுஜ ஸ்வாமி தேசிக ஸித்தாந்தம்.

இதே கருத்தை, பகவத் கீதை (18-65), சரமஸ்லோகத்தின் முந்திய ஸ்லோகத்தில் காணலாம்.

மன் மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ் குரு. மாமே வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதி ஜானே ப்ரியோஸிமே

என்றான்.

அதாவது,

அஸஞ்சலமான பக்தியுடன் எப்போதும் என்னையே நினை; என்னையே அடைவாய். இது உண்மை; உன்னிடம் இந்த ப்ரதிக்ஞையை நான் செய்கிறேன். இது உன்னை ஏமாற்றுவதற்காக சொன்ன வார்த்தை அல்ல. நீ எனக்கு மிகவும் ப்ரியன் அன்றோ என உறுதி அளித்தான் கண்ணன்.

இங்கு கூறப்பட்டது, பக்தி யோகத்தின் பலனாக, **இஷ்ட ப்ராப்தியாக** பகவத் ப்ராப்தி சொல்கிறது; இதனால் **அநிஷ்ட நிவ்ருத்தியான** சம்சார பந்த காரணமான பாபங்களின் நீக்கமும் சொன்னதாயிற்று.

3. சௌநக மஹரிஷி அருளிச் செய்த விஷ்ணு தர்மத்தில்,

யதா ந க்ரயதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாலநாந்மணே: தோஷ ப்ரஹாணந்ந ஞானமாத்மந: க்ரியதே ததா. யதோதபான கரணாத் க்ரியதே ந ஜலாம்பரம். ஸதைவ நீயதே வ்யக்திம் அஸத: ஸம்பவ: குத: ததா ஹேய குண த்வம்ஸாத் அவ போதாதயோ குணா: ப்ரகாஷ்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மனோ ஹி தே

என அருளினார்.

அதாவது,

அழுக்கடைந்த ரத்நத்தில், அழுக்கை நீக்கனால், ரத்நத்தின் ப்ரகாசம் வெளிப்படும். ப்ரகாசம் புதிதாக உண்டாக்கப் படுவதில்லை.

குளம், கிணறு வெட்ட, பூமியில் உள்ள மண்ணை அவ்விடத்திலே நீக்கனால், தண்ணீர் தானே வெளிப்படும். தண்ணீர் புதிதாக உண்டாக்கப் படுவதில்லை.

அது போல, ஆத்மாவிற்கு கர்ம சம்பந்தமாகிய பாபங்களை அகற்றினால், அந்த ஆத்மாவின் இயற்கை தன்மையான ஞான விகாசமும் அதன் பரிவாஹமான பகவத் அநுபவமும் தானே உண்டாகும் என்றபடி.

ஆக, **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என சம்சார பந்த காரணமான அனைத்து பாபங்களையும் கழற்றினால், சம்சாரி ஜீவனுக்கு ஸ்வாபாவிக ஆவிர்பாவம் உண்டாகும், என்றபடி.

4. பகவத் ராமானுஜரும், ஸ்ரீ பாஷ்ய லகு ஸித்தாந்தத்தில்,

அவித்யா நிவ்ருத்திரேவ ஹி மோக்ஷ:

என்று அருளினார்.

அதாவது,

மோக்ஷத்திற்கு தடையான அவித்யை எனும் பாபங்களைக் களைவதே பரம புருஷார்த்தம், என அருளினார்.

இதையே ஸ்வாமி தேசிகன், மூல மந்திராதிகாரத்தில்,

ஏகமேவ ஸ்வரூபேண பரேண ச நிரூபிதம். இஷ்ட ப்யாபாதி: அநிஷ்டஸ்ய நிவாருத்திஷ்சேதி கீர்த்தயேத்

என அருளினார்.

ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தைக் கொண்டும் அதற்கு எதிரானவற்றைக் கொண்டும், அதாவது இஷ்டத்தை பெறுதல் என்றும், அநிஷ்டத்தை விலக்குதல் என்றும் கொண்டு, ஒரே பொருள் படச் சொல்லப் படுகிறது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இப்படி "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்மாமி" என்று கார்ய காரண ரூப ஸமஸ்த ப்ரதிபந்த ப்ரவாஹ நிவ்ருத்தியைச் சொல்ல ஸ்வத ப்ராப்தமான பரிபூரண பகவத் அநுபவ ஆவிர்பாவம் சொல்லிற்றாயிற்று

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இப்படி - முமுக்ஷுவான அகிஞ்சனன் விஷயத்தில் லகு உபாயமான சரணாகதி அநுஷ்டானம் விதித்திருக்கும் போது

ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்மாமி - உன்னை அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்

என்று கார்ய காரண ரூப - என்கிற உபதேச வரிகளைக் கொண்டு, உபாயமும் அதற்கான பலனின் தன்மைகளையும் விளக்கும் போது

ஸமஸ்த ப்ரதிபந்த ப்ரவாஹ நிவ்ருத்தியைச் சொல்ல - பரம புருஷார்த்தத்திற்கு தடையான அனைத்து பாப கோஷ்டியின் நீக்குதலை ப்ரதானமாகச் சொல்ல

ஸ்வத ப்ராப்தமான - அநாதி கால கர்ம சம்பந்தமான உபாதி ப்ரயுக்த சம்சார பந்தம் நீங்கி இயற்கை நிலையில் ஸகல ஜீவர்களுக்கும் தன்மையான

பரிபூரண பகவத் அநுபவ ஆவிர்பாவம் - தடையற்ற பகவத் அநுபவம் பெறும் நிலை

சொல்லிற்றாயிற்று - பெற்றதாக அர்த்தம் ஸித்திக்கும், என்றபடி

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அநிஷ்ட நிவ்ருத்தி மட்டுமே சொல்லப் பட்டதால் இஷ்ட ப்ராப்தி சொன்னதாகாது என்பது சரணாகதி அநுஷ்டானத்தை உணராது வரும்

வாதம்; ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

105. ஸர்வ பாப நிவ்ருத்தி கைவல்ய பல அநுபவத்துக்கும் ஸாத்யமோ?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தையும் குறிப்பதாகக் கொள்வது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தையும் குறிப்பதாகக் கொள்வது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. கைவல்யபமாகிற ஆத்ம அநுபவமாவது, ப்ரக்ருதியில் உள்ள ஸகல வித அசித் விஷய அநுபவம் நீங்கலான பரிசுத்த ஆத்ம அநுபவம். இந்த ஆத்மானுபவம் துக்க கலப்பற்றது; ஆனால் இந்த கைவல்யானுபவம் பகவத் அநுபவத்தை விட வேறானது என்பது ப்ரமாண ஸித்தம்.

ஏஹ லௌகிகம் ஐஸ்வர்யம் ஸ்வர்காத்யம் பாரலௌகிகம். கைவல்யம் பகவந்தம் ச மந்த்ரோயம் ஸாத்ய இஷ்யதி

என்கிற நாரதீய கல்ப வரிகளைக் கொண்டு காணும் போது, இம்மந்திரம், இம்மையில் ஐச்வர்யத்தையும் மறுமையில் ஸ்வர்காதிகளையும், தன் ஆத்ம அநுபவமாகிற கைவல்யத்தையும், பரிபூரண ப்ருஹ்மானுபவமாகிற மோக்ஷத்தையும் அளிக்க வல்லது, எனப் படுகிறது.

ஆக, ஒவ்வொரு பலனைப் பெறவும் அதற்கு தடையான பாபங்களை ஓர் உபாயத்தால் நீக்கப் பெற்று, இந்த ஜீவன் அடையப் பெறுகிறான் என்பது ப்ரமாண ஸித்தம். ஆக, பலன்களில், கைவல்யமும் பகவத் ப்ராப்தியும் இரு ரூபங்களாய் இருக்க, அவ்வோ பலன்களுக்கு தடையான பாபங்கள் வேறுபட்டு நிற்கும் என்பது ஸாமான்ய ந்யாயத்தால் தெளிவாகும்.

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு, இரண்டு பலன்களையும் (கைவல்யம் மற்றும் பகவத் ப்ராப்தி) அடைய ஒரே பாப நிவ்ருத்தி எனும் பூர்வபக்ஷிகளின் வாதம் பொருந்தாது ஏனெனில் பலன்களில் தாரதம்யம் உள்ளபடியால்.

3. ஆத்ம ஸாக்ஷாத்காரமாகிய பலன், இந்த கர்ம பூமியில் பெறப் படுவதால் அது அநித்யமானது என்பதும் ஸித்தம்.

ஞான யோகத்தில் ஈடுபட்டிருப்பவன், தான் பெற்ற ஆத்ம அநுபவத்தகன் போது, உலக விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்வான் என்று கண்ணன் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

6ம் அத்யாயம் 22 வது ஸ்லோகம் -

யம் லப்த்வா சாபரம் லாபம் மன்யதே நாதிகம் தத: யஸ்மின் ஸ்திதெள ந துக்கேன குருணாபி விசால்யதே

அதாவது,

‘ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் இருப்பவன் யோகத்தில் இல்லாத போதும் வேறு ஸுகத்தை விரும்ப மாட்டான். ஸத்புத்ரன் மரணத்தை கேட்டாலும் கலங்க மாட்டான்.’

இதனால், மஹாப்ரளயத்தில் ஸர்வமும் அழியக்கூடிய லோகத்தில், ஆத்மானுபவம் பெறப் படுவதால், அந்த அநுபவம் அநித்யமானது.

பரிபூரண ப்ருஹ்ம அநுபவமான பகவத் அநுபவமானது, **அநாவ்ருத்தி சப்தாத் அநாவ்ருத்தி சப்தாத்** என்கிற ப்ருஹ்ம ஸுத்ர வரிகளின்படி, நித்யமானது.

ஆதலால், அழியக்கூடிய தன்மை கொண்ட ஆத்ம அநுபவமாகிற கைவல்யம், **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களுக்கு விஷயமாகாது.

4. சம்சாரி ஜீவர்கள் பெறக் கூடிய, சதுர்வித பலன்களில் ஒன்றான பகவத் ப்ராப்தி மட்டுமே நித்யமானது என கண்ணன், பகவத் கீதையில் அருளினான்.

ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்கள் நால்வர் என்பதை கண்ணன் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான். அதாவது புருஷார்த்தங்கள் நான்கு என தெளிவிக்கிறான் கண்ணன்.

7ம் அத்யாயம் 16 வது ஸ்லோகம் -

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி க்ஞானீ ச பரதர்ஷப:

அதாவது,

‘சதுர் வித புருஷார்த்தங்களாவது:

இழந்த ஐச்வர்யத்தைப் பெற நினைப்பவன்.

கைவல்யமாகிற ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன்.

புதிய ஐஸ்வர்யத்தை வேண்டுபவன்

பகவத் ப்ராப்தியாகிற என்னையே அடைய விரும்புபவன்.'

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் ப்ராப்தி எத்தகையது என்பதை பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

8ம் அத்யாயம் 15 வது ஸ்லோகம் -

மாமுபேத்ய புநர்ஜன்ம துக்காலயம் அசாச்வதம். நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமாம் கதா:

அதாவது,

'என்னை பெற்று என்னையே எல்லாமாக கொண்டவர்கள் என்னையே அடைவார்களாகையால் நிலையற்றதாயும் துக்கத்திற்கு இருப்பிடமான பிறவியை பெற மாட்டார்கள்.'

ஸர்வேஸ்வரனான கண்ணன் பகவத் ப்ராப்தியின் நித்யத்வத்தை மேலும் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

8ம் அத்யாயம் 16 வது ஸ்லோகம் -

ஆப்ரஹ்ம புவனால்லோகா: புநராவர்த்திநோர்ஜுந. மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே
அதாவது,

'நான்முகனாகிய ப்ருஹ்மா இருக்கும் லோகம் உட்பட எல்லா லோகங்களும் அழிகின்றனவையே. பகவத் ப்ராப்தியைக் கருதி என்னையே அடைகிறவர்கள் மட்டுமே மறு பிறவியை பெற மாட்டார்கள்.'

ஆக, அநித்யமான ப்ராக்ருத லோகத்தில் அநுபவிக்கும் அநுபவமும் அநித்யமானதே. இதனால் கைவல்யானுபவம் அநித்யமே என்பது ஸித்தம்.

சதுர்வித புருஷார்த்தங்களில், பகவத் ப்ராப்தி மட்டுமே நித்யமாகையால், **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்பது பரிபூரண ப்ருஹ்மானுபவமாகிற பகவத் ப்ராப்திக்கே விஷயமாகும்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஸர்வ பாபங்களும் கழிந்தால் ஸ்வத ப்ராப்தமான பகவத் அநுபவத்தை இழந்து கிடக்கைக்குக் காரணம் இல்லாமையால் அப்போது பகவத் அநுபவ ரஹிதமான ஆத்ம மாத்ர அநுபவம் கடியாது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஸர்வ பாபங்களும் கழிந்தால் - ஓர் உபாயத்தினால் ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி என்கிற படி ஸகல கர்மங்களும் களையப் பட்டால்

ஸ்வத ப்ராப்தமான - ஸ்வாபாவிக நிலையில் உள்ள

பகவத் அநுபவத்தை - பரிபூரண ப்ருஹ்மானுபவத்தை

இழந்து கிடக்கைக்குக் - அடையாமல் இருக்க

காரணம் இல்லாமையால் - ஒரு பாப விசேஷம் காரணமாக அமையாமல் போவதால்

அப்போது - ஓர் உபாய விசேஷத்தால் கைவல்ய அநுபவத்தைப் பெற்ற போது

பகவத் அநுபவ ரஹிதமான ஆத்ம மாத்ர அநுபவம் - பகவத் அநுபவம் அற்ற ஜீவாத்ம அநுபவம் மட்டுமே

கடியாது - பெறக்கூடும் என்பது நிலைக்காது.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தையும் குறிப்பதாகக் கொள்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

106. மோக்ஷ பலனே கைவல்ய பலன் ஆகுமா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தையே மோக்ஷ பலன் எனக் குறிப்பதாகக் கொள்வது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தையே மோக்ஷ பலன் எனக் குறிப்பதாகக் கொள்வது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இதற்கு ப்ரதான காரணம், பகவத் கீதை (5-28) ஸ்லோகத்திற்கு கொள்ளும் விபரீத அர்த்தம்.

ஸர்வேஸ்வரனான கண்ணன், பக்தி யோகத்திற்கு அங்கமான, கர்ம யோகத்தின் மேன்மையை பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

யதேந்த்ரிய மனோ புத்திர் முனிர் மோக்ஷபராயணா: விகதேச்சா பய க்ரோதோ யத் ஸதா முக்த ஏவஸ:

அதாவது,

'ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அன்றி வேறு எதிலும் முயறசி அற்று இருப்பவன் பல தசை போல் யோக தசையிலும் முக்தனை போன்றவன்.'

பக்தி யோகத்திற்கு அங்கமாக 'கர்ம யோகம்' மற்றும் 'ஞான யோகம்' விதிக்க பட்டிருக்கிறது. பக்தி யோகத்தின் பலன் மோக்ஷம், அல்லது பகவத் சாக்ஷாத்காரம் (பகவத் தரிசனம்), அதாவது, கர்ம சம்பந்தம் அற்ற துக்கம் கலசாத இன்ப நிலையாகிற பரமபதத்தை அடைதல்.

அதற்கு அங்கமான கர்ம யோகத்தின் பலன் புலன் அடக்கம். இந்த கர்ம யோகி, தன்னுடைய யோக காலத்திலும் மற்ற அவகாசத்திலும் உலக இன்பங்களில் மனதை செலுத்தவே கூடாது. அதாவது, தன்னுடைய புலன் உருப்புக்களுக்கு (கண், காது, மூக்கு, நாக்கு போன்றவைகளுக்கு) உலக இன்பங்களை கொண்டு தீனி இடக் கூடாது.

உலக விஷயங்களில் ஈடுபாடு அற்று கர்ம யோகத்தை செய்யும் யோகி, ஞான யோகத்தை அநுஷ்டிக்காமல் கர்ம யோகத்தை கொண்டே ஞான யோகத்தின் பலனான ஆத்ம சாக்ஷாத்காரத்தை (தன்னுடைய ஆத்ம தரிசனம்) பெற முடியும் என்று கண்ணன் விளக்குகிறான்.

அதாவது,

கர்ம யோகத்தின் பலன் கிடைக்க பெற்ற பிறகும் (அதாவது, புலன் அடக்கம்) கர்ம யோகத்தை செய்து கொண்டே இருந்து ஞான யோகத்தின் பலனை (ஆத் தரிசனம்) பெற முடியும். ஞான யோகத்தை விட, பழகி விட்ட கர்ம யோகத்தை அநுஷ்டிப்பது, சுலபம் என்று அர்ஜுனனுக்கு உறைக்கிறான் கண்ணன்.

ஆக, பகவத் ப்ராப்திக்கு துல்யமாக ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை கண்ணன் உரைக்கவில்லை என்பது தெளிவு.

2. கைவல்யம் மோக்ஷமாகிற பகவத் ப்ராப்தியைச் சொல்ல வந்ததல்ல.என பதற்கான ப்ரபாணங்கள்.

ஜிதந்தே ஸ்தோத்தரத்தில்,

மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்தயே ந கதாசந இச்சாம்யஹம் மஹாபாஹோ ஸாயுஜ்யம் தவ ஸுவ்ரத

என்று சொல்லப் படுகிறது.

அதாவது, ஸாலோக்ய ஸாரூப்யம் போன்றவைகள் மோக்ஷமாகாது. ஸாயுஜ்யத்தையே மோக்ஷமாக ப்ரார்த்திக்கிறேன் என்று இந்த ஸ்தோத்தரத்தில் கூறப்படுகிறது.

ஆனால், ஸாயுஜ்யத்தை பெற்றவன், ஸாலோக்யம், ஸாரூப்யம், ஸாமீப்யம் அனைத்தையும் பெற்றே தீருவான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படி இருக்க, உபநிஷத்தில்,

ஸாயுஜ்யம் ஸமுபயோரத்ர போக்தவ்யஸ்யாவிசிட்டதா ஸார்ஷ்டிதா தத்ர போக்யஸ்ய தாரதம்ய விஹீநதா

என்கிறது.

அதாவது, முக்தன் **ஸாயுஜ்யம்** மற்றும் **ஸார்ஷ்டிதா** என்கிற இரு வகையான போகங்களை ஸ்ரீவைகுண்டத்தில் அநுபவிக்கிறான்.

பரமபதத்தை அடைந்த முக்த ஜீவர்கள் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நராயணனோடு சமமான பரிபூரண ப்ருஹ்மானுபவமாகிய ஸுக அநுபவத்தைப் பெறுகிறான் என்று சாஸத்ரங்கள் கூறுகின்றன.

இந்த அநுபவம் இரு வகையாக உள்ளன. அதாவது,

 # ஸாயுஜ்யம் - போக்ய ஸாம்யம் ; ஸாயுஜ்யம் என்றால் இணைந்தே இருவரிடையே உள்ள ஸம்பந்தம் ஆகும் (ஸயுக் பாவம்).

நித்ய முக்தர்களாலும் ஸர்வேஸ்வரனாலும் அநுபவிக்கப் படுவது ஸமமானதாகும்.
உதாரணத்திற்கு, ஒரே இனிப்பை இருவர் உண்பது ஸாயுஜ்யம் என்ற போக்ய ஸாம்யம்.

 # ஸார்ஷ்டிதா - போக ஸாம்யம் ; நித்ய முக்தர்களாலும் ஸர்வேஸ்வரனாலும் அநுவவிப்பதனால் ஏற்படும் ஸுக அநுபவம் ஸமமாகும்.

உதாரணத்திற்கு, ஒரே இனிப்பை இருவர் உண்ணும் போது ஏற்படும் ஒரே ஸுக அநுபவம் ஸார்ஷ்டிதா என்ற போக ஸாம்யம்.

அதாவது, இனிப்பு பண்டங்களில் பிடித்தம் உள்ளவனும் பிடித்தம் இல்லாதவனும் ஒரே இனிப்பை உண்ணும் போது இருவருக்கும் ஸமமான ஸுக அநுபவம் இருக்காது அல்லவா? இது போகத்தில் உள்ள வேற்றுமையைக் காட்டும். ஆக, இந்த வேற்றுமை இல்லாமல் இருப்பது ஸார்ஷ்டிதா ஆகும்.
இந்த மோக்ஷ அநுபவம் கைவல்ய அநுபவத்தை விட வேறானது.

ஸ்ரீ கூரத்தாழ்வான் வரதராஜஸ்தவத்தில்,

போகா இமே விதி சிவாதிபதம் ச கிம்ச ஸ்வ ஆத்மானுபூதி : இதி யா கில முக்தி: உக்தா. ஸர்வம் தத் ஊஷஜலஜோஷம் அஹம் ஜுஷயே ஹஸ்தயத்ரினாத் தவ தாஸ்யமஹாரஸக்ஞ:

என அருளினார்.

அதாவது,

பேரருளாளனே! தேவரீர் கைங்கர்ய ரஸத்தை உணர்ந்த அடியேன் இம்மைப் பலன்களையும் ருத்ராதி பதவிகளிலும், மோக்ஷ பதத்தினால் சொல்லப் படும் ஆத்மானுபவத்திலும் இச்சை கொள்ளாது அவைகளை உப்பு ஜலம் போலே அசாரமாக நினைத்திருப்பேன்.

ஆக, கைவல்ய பலன் பகவத் ப்ராப்தி அல்லாததால், ஸர்வ பாப விமோசனத்திற்கு காரணமாகாது. ஐச்வர்ய பலனைக் காட்டிலும் உயர்ந்ததே ஆகிலும், கைவல்ய பலனும் நிஷித்தம்.

3. மோக்ஷ காரணமாக உள்ள ப்ருஹ்ம வித்யைகள் என்ற பக்தி யோகம் 32 வகைகள் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அதையே ஸூத்ரக்காரரும்,

நாநா சப்தாதி பேதாத்

என அருளினார்.

அதாவது, ஸத் வித்யை, மது வித்யை, தஹர வித்யை, உபகோசல வித்யை, ந்யாஸ வித்யை (சரணாகதி) போன்றவைகள்

ஆனால், அனைத்துக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

ஒவ்வொரு மோக்ஷத்தில் ஆசை உள்ளவனும், தன்னுடைய ஆசையின் அடிப்படையில், ப்ருஹ்ம வித்யையை தேர்வு செய்து அநுஷ்டிக்கலாம்.

உதாரணத்திற்கு, **பஞ்சாக்நி வித்யை -**

பக்தி யோகத்தில், ஸர்வேஸ்வரனை, தான் ஆத்மாவாக கொண்டவன் என்று தனக்கு முக்கியத்வம் அளித்து த்யானம் செய்வது;

இதனுடைய பலன் -

ப்ராரப்த கர்மா முடிந்த பிறகு சிறிது காலம் கைவல்யமாகிற தன் ஆத்ம ஸ்வரூபத்தை இந்த ப்ராக்ருத லோகத்தில் இருந்து கொண்டே அநுபவித்து விட்டு பிறகு மோக்ஷத்தை அடைவது.

ஆக, முமுக்ஷுவான உபாஸகன் விஷயத்தில் சொல்லப் படும் ஆத்ம அநுபவமே மோக்ஷ பலனாகாது.

4. ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜித்து பெறும் பலன்களில் ஒன்றான கைவல்யத்தின் தன்மை எத்தகையது என்பதை கண்ணன் பகவத் கீதையில் அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

7ம் அத்யாயம் 29 வது ஸ்லோகம் -

ஜராமரண மோக்ஷாய மாமாஸ்ரிய யதந்தி யே. தே ப்ருஹ்ம த த் விது: க்ருத்ஸ்நம் அத்யாத்மம் கர்ம சாகிலம்

அதாவது,

‘மூப்பு மரணம் போன்ற அவஸ்தைகள் அற்று ஆத்ம ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்க என்னை உபாஸிப்பவர்கள் ப்ருஹ்ம, அத்யாத்ம கர்ம ஸ்வரூபத்தை அறிய வேண்டும்.’

ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிப்பவர்கள் நால்வர் என்று முன்னம் கூறியருந்தான் கண்ணன்.

அதாவது, இழந்த செல்வத்தை பெற நினைப்பவன் என்றும், புதிய செல்வத்தை விரும்புவன் என்றும், தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசை படுபவன் என்றும் மற்றும் ஸர்வேஸ்வரனான கண்ணனை அடைய விரும்புபவன் என்றும்.

இதில் முதல் இரண்டு வகை செல்வத்தை பற்றியது - ப்ராக்ருத லோகங்களில் உள்ள அசேதன ஸுகானுபவங்கள்.

மூப்பு, மரணம் இவைகளிலிருந்து விடு பட்டு, தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க விரும்புவது **கைவல்யம்** ஆகும்.

ப்ரக்ருதி காரியமான அசேதன விஷயங்களிலும் ஆசை இல்லாமல், பரம சேதனனான ஸர்வேஸ்வர அநுபவமும் இல்லாமல், கேவலம் பரிசுத்தமான தன் ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க விரும்புவது, அதாவது ஆத்ம சாக்ஷாத்காரம். கைவல்யானுபவம், மேரு பர்வத்திலுள்ள ஒரு தேச விசேஷத்தில் சென்று அநுபவிப்பதே ஆகும்.

இந்த கைவல்ய அநுபவம், இதே ப்ராக்ருத லோகத்தில் அநுபவிக்கக் கூடியது; முடிவு காலம் உள்ளது; மீண்டும் கர்மாவிற்கு ஏற்ப பிறவியை அடைவிக்கக் கூடியது. ஐச்வர்ய ஆனுபவத்தை விட காலம் நீண்டு இருப்பதால், கைவல்ய பலனை முடிவில்லாதது போன்ற வரிகள் உள்ளன, என்பது ஸ்ரீ ராமானுஜ கீதா பாஷ்ய விளக்கம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஜரா மரண மோக்ஷாய" என்றதுவும் தேவர்களுடைய அமரத்வ வ்யபதேசம் போலே ஆபேக்ஷிகம்; க்ரமேண முக்தி பர்யந்தமாம் விஷயத்தைப் பற்ற சொல்லுகிறதாகவுமாம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஜரா மரண மோக்ஷாய" - பகவத் கீதை (7-29) ஸ்லோகத்தினால் மரணமற்றவர்கள் என கைவல்ய பலானுபவம்

என்றதுவும் - சொல்லப்பட்டதினால்

தேவர்களுடைய அமரத்வ வ்யபதேசம் போலே - தேவர்களை இறப்பு அற்றவர் என சாஸ்த்திரங்களின் பல இடங்களில் கூறுவது போல

ஆபேக்ஷிகம் - அர்த்த விவரணம் கொள்ள வேண்டும்.

க்ரமேண முக்தி பர்யந்தமாம் விஷயத்தைப் பற்ற - உபாஸநத்தில் பஞ்சாக்னி வித்யா நிஷ்டன் ஆத்மா சாக்ஷாத்கார அநுபவத்தை சில காலம் பெற்றிருந்து மோக்ஷத்தை பிறகு அடையும் ப்ரகாரத்தையே

சொல்லுகிறதாகவுமாம் -விளக்கவந்ததாகும்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தையே மோக்ஷ பலன் எனக் குறிப்பதாகக் கொள்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

107. <u>கைவல்ய பலன் நித்யமான புருஷார்த்தமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தை நித்யமான மோக்ஷ பலன் எனக் குறிப்பதாகக் கொள்வது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தை நித்யமான மோக்ஷ பலன் எனக் குறிப்பதாகக் கொள்வது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

ஸ்வாமி நம்மாழ்வார் - திருவாய்மொழி (6-9-10)

குறுகா நீளா இறுதி கூடா எனையூழி, சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகா லின்றி மாயோ னுனக்கே யாளாகும், சூறுகா லத்தை யுறுமோ அந்தோ தெரியிலே?

அருளினார்.

அதாவது,

நிரந்தரம் அற்ற அசித் விலக்ஷணமான ஸ்வ ஸ்வரூப அநுபவமான கைவல்யமானது, முடிவில்லாததுமான, எக்காலத்திலும் அழிய முடியாத படி **இன்பம் சேர்ந்தாலும்** நித்ய நிரந்தர

பகவத் கைங்கர்யமான மோக்ஷ பலனாகிய **உனக்கே ஆள் ஆகும்** என்பது **சிறு காலத்தை** என்றபடி சிறிது காலமே இருக்கமேயானாலும், அந்த மோக்ஷ பலன் உயர்ந்ததே; ஒரு நாளும் கைவல்ய பலத்தோடு ஒத்திருக்காது !

இப்பாசுரத்தை ப்ரமாணமாக்கி, பூர்வபக்ஷிகள், கைவல்யம் மோக்ஷ பலனென்றும், கைவல்ய பலன் நிரந்தர்ம் என்றும் வாதிட முற்படுவர். அது, பல ப்ரமாணங்களோடும், ஆழ்வார் ஸ்ரீ ஸுக்திகளோடும் விரோதிக்கும்.

இப்பாசுரத்தின் நோக்கானது, கைவல்ய பலனை விட, அதனினும் வேறான பகவத் ப்ராபாதியே ஸர்வருக்கும் ஸ்வரூப ப்ராப்தம், என விளக்க வந்ததேயாம்.

உதாரணமாக,

'கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கலாம்; ஆனால் ஹரிஸ்சந்திரன் கூறுவது பொய் ஆகுமோ'

என கூறப்படுவதாவது, ஹரிஸ்சந்திரனின் உண்மை பேசும் தன்மையை விளக்க வந்ததே அன்றி, மேற்கே சூர்ய உதயம் உண்டாகலாம் என்பதாகாது அன்றோ, அது போல பகவத் ப்ராப்தியின் ஏற்றத்தை கூற, ஆழ்வார் கைவல்ய அநுபவத்தை மாற்றி அமைக்கிறார், என்றபடி.

2. ஆத்மானுபவத்தைப் பெற்றவனுக்கு, அது அநுபவிக்கப் படுகிற இடம் எது என்பது ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப் படுகிறது.

யோகிநாம் அம்ருதம் ஸ்தானம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணாம்

ஸநகாதி யோகிகள் தங்கியிருக்கும் இடமே ஆத்மானுபவம் செய்கிறவர்களுக்கு இடமாகும் என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப் படுகிறது. ஸநகாதி யோகிகள் இருப்பது ப்ருக்ருதி மண்டலமேயாகையால் ஆத்மானுபவம் பெறுவதும் ப்ரக்ருதி மண்டலமே என்பது இதனால் ஏற்படுகிறது.

ஆத்மானுபவம் பெறுவது நிலையில்லாத இடமாக இருப்பதால் ஆத்மானுபவமும் அநித்யம் - நிலையற்றது என்பது இதனால் ஏற்படுகிறது.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில் (6-44)

பூர்வாப்யாஸேந தேநைவ ஹ்ரியதே ஹ்யவஸோSபி ஸ : ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய ஸப்தப்ரஹ்மாதிவர்ததே

என்கிறது. அதை கீதா பாஷ்யம் கொண்டு விளக்கும் போது, ஸ்ரீராமானுஜர்,

ப்ரக்ருதி பந்தாத் விமுக்த: தேவ மனுஷ்யாதி சப்த அபிலாப அநர்ஹம் ஞானானந்தைகதானாம் ஆத்மாநம் ப்ராப்நோதி

என்கிறார்.

அதாவது,

உலக விஷயத்தில் ஈடுபாடு அற்று விலகுபவன், ஓர் உபாஸனத்தால், தேவ மனுஷ்யாதி சரீரங்களான மாறுதலை அடைகிற ப்ரக்ருதியின் பரிணாமமான விஷய அநுபவங்களிலிருந்து விலகுகிறான் என்பதே ஸ்ரீகீதா பாஷ்ய பக்ங்திக்குப் பொருள்.

இதனால் ஆத்மானுபவத்தைப் பெற்ற காலத்தில் விஷயானுபவங்களிலிருந்து விலகுகிறானே தவிர ஆத்மானுபவ காலம் முடிந்த உடன், கர்மங்கள் முழுமையாக விலகாத தால், விஷயாந்தரங்களில் பற்றுதலும், அதனால் சம்சார பந்தமும் வரும் என்று கருத்து.

4. ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்கள் யாவும் தமிழ் மறை என்று போற்றப் படுகிறது. அதனால் வேதாந்த வாக்யங்கள் கூறுவதற்கு முரணாக ஆழ்வார்கள் எதையும் தம் ப்ரபந்தத்தில் கூற மாட்டார்கள் என்பதை முதலில் தெளிவாக அறிய வேண்டும்.

அற்றது பற்றெனில் உற்றது வீடு உயிர் செற்றது மன்னுறில் அற்றிறைப் பற்றே

அதாவது,

‘விஷயங்களில் பற்று முழுக்க போய்விட்டால் ஆத்மாவானது விஷயானுபவத்திலிருந்து விடுதலை அடைந்து ஸ்வபேதத்தை அநுபவிக்க தகுந்த தாகும். அந்த ஆத்மானுபவத்தை விட்டு அதில் அகப்படாது நிலையான பகவத் கைங்கர்யத்தை ஆசைப் பட்டால் எம்பெருமானைப் பற்று’

என்று ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்தார்.

இதில் நிலையான பகவத் கைங்கர்யத்தை என்று சொன்னதாலே ஆத்மானுபவம் நிலையற்றது என்று ஏற்படுகிறது.

ஆக, அந்த ஆத்மானுபவத்திற்கு முடிவுண்டு.

ஆத்மானுபவத்தைப் பெற்றவனுக்கு ஸர்வ (எல்லா) கர்மங்களிலிருந்தும் விடுபட்டிருக்கிறான் என்பது கிடையாது.

அப்படி ஸர்வ (எல்லா) கர்மங்களிலிருந்தும் விடுபட்டிருந்தானேயானால் பரமாத்ம அநுபவத்தை இழப்பதற்கு காரணம் இல்லையே! ஆத்மாவை மட்டும் அநுபவிப்பவனுக்கு பரமாத்ம அநுபவம் இல்லாமையால் அதற்கு தடையான கர்மங்கள் இருக்கிறது என்றே ஏற்படுகிறது. ஆத்மாவை மட்டும் அநுபவிப்பவன் எல்லா கர்மங்களிலிருந்தும் விடுபடாமையால் அந்த அநுபவத்தைப் பெறுகிற இடம் பரமபதம் அல்ல.

எல்லா கர்மங்களிலிருந்தும் வினுபட்டவனுக்கே பரமபதத்தை அடைய முடியும்.
ஆகையால், ஆத்மாவை மட்டும் அநுபவிப்பவனுக்கு, அந்த அநுபவத்தைப் பெறுகிற இடம் ப்ரக்ருதி மண்டலமேயாகையால், அழிவுள்ள இடத்தில் அநுபவிக்கிற பலனும் முடிவுள்ளதாகவே இருக்கும். அந்த அநுபவம் முடிந்த பிறகு, கர்ம அநுகுணமாக, பிறவிகள் தொடங்கும், என்பதாகிறது.

ஆக, ஞான சக்தி பெற்று, அசேதன அநுபவத்தைக் காட்டிலும் உயர்ந்ததான, ஆனால் பகவத் அநுபவத்தைக் காட்டிலும் அற்பமான கைவல்ய பலனாகிய ஆத்ம அநுபவத்தை பெரிதாக

நினைத்து யோகத்தை செய்வதுவும் **ப்ராப்தி விரோதி** எனப்படும் மோக்ஷ பலனுக்கு விரோதி ஆகிறது, என்பது தெளிவு.

5. ஐந்தாவது வேதம் என்று போற்றப் படுகிற மஹாபாரதத்தில் ஆத்மானுபவம் அநித்யம் என்று கூறப் படுகிறது.

சதுர்விதா மம ஜநா பகதா ஏவஹி தே ஸ்ம்ருதா: தேஷம் ஏகாந்தின: ஸ்ரேஷ்டா: தே சைவ அந்யதேவதா: அஹமேவ கதிஸ்தேஷாம் நிராஷி: கர்மகாரிணாம் யே து சிஷ்டாஸ்த்ரயோ பக்தா: பலகாமா ஹி தே மதா: ஸர்வே ச்யவன தர்மாண: ப்ரதிபுத்தஸ்து மோக்ஷ பாக்

என்னிடம் பக்தி செய்பவர்கள் நால் வகையினர்.

இழந்த ஐஸ்வர்யத்தை பெற விரும்புகிறவனும் என்னிடம் பக்தி செய்கிறான்.

புதிதாக ஐஸ்வர்யத்தை பெற விரும்புகிறவனும் என்னிடம் பக்தி செய்கிறான்.

கைவல்யம் என்கிற ஆத்மானுபவத்தை பெற விரும்புகிறவனும் என்னிடம் பக்தி செய்கிறான்.

பரமாத்மாவான என்னை அடைய விரும்புகிறவனும் என்னிடம் பக்தி செய்கிறான்.

இந்த நால் வகையான பக்தர்களில் என்னையே அடைய விரும்புகிறவன் ஞானி ஆவான். மிகவும் சிறந்தவன். ஏன் என்றால் ஞானிக்கு வேறு பலனில் ஆசை இல்லை. அவனுக்கு நானே அடைய வேண்டிய பலனாக இருக்கிறேன்.

மற்ற மூன்று விதமான பக்தர்கள் என்னைக் காட்டிலும் வேறான மற்ற பலன்களில் ஆசை உள்ளவர்கள். அவர்களுக்கு கிடைக்கும் பலனும் அழிவுள்ளது. என்னையே பெற விரும்பும் ஞானியானவன் மோக்ஷத்தை அடைகிறான் என்று எம்பெருமான் சொல்வதாக ஐந்தாவது வேதமாக போற்றப் படுகிற மஹாபாரதத்தில் கூறப்படுகிறது.

இதனால் கைவல்யம் என்ற ஆத்மானுபவம், பகவத் அநுபவமாகிற மோக்ஷ பலனாகாது என்றும் அழிவுள்ளது என்றும் ஏற்படுவதால் அந்த அநுபவத்தைப் பெறுகிற இடம் அழியாத இடமான பரமபதத்தில் பெறுவதாகக் கூற முடியாது.

6. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

கேவல ஆத்ம அநுபவம் நித்யமன்று என்னுமிடமும் சாக்ஷாத் மோக்ஷம் அன்று என்னுமிடமும் "சதுர்விதா மம ஜநா பக்தா" என்கிற வசனாத்தாலே ஸித்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

கேவல ஆத்ம அநுபவம் - பகவத் அநுபவமில்லாத கைவல்யமாகிற ஆத்ம அநுபவம்

நித்யமன்று - நிரந்தரம் இல்லை

என்னுமிடமும் -என ப்ரமாணத்தைக் கொண்டு விளக்கப்படுவதுவும்

சாக்ஷாத் மோக்ஷம் அன்று - பகவத் அநுபவத்தைக் கொண்ட மோக்ஷ பலனாகாது என்றும்

என்னுமிடமும் - என ப்ரமாணத்தைக் கொண்டு விளக்கப்படுவதுவும்

சதுர்விதா மம ஜநா பக்தா" - ஐந்தாவது வேதமாக போற்றப் படுகிற வ்யாஸரின் மஹாபாரத

என்கிற வசனாத்தாலே ஸித்தம் - வரிகளால் நிரூபிதம் ஆகிறது.

7. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தை நித்யமான மோக்ஷ பலன் எனக் குறிப்பதாகக் கொள்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

108. <u>கைவல்ய பலனுக்கு அர்ச்சிராதி கதி உண்டா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தை மட்டுமே பலனாகக் கொண்டவருக்கு அர்ச்சிராதி கதி உண்டு எனக் கொள்வது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தை மட்டுமே பலனாகக் கொண்டவருக்கு அர்ச்சிராதி கதி உண்டு எனக் கொள்வது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. கைவல்யமாகிற ஆத்ம அநுபவ புருஷார்த்தம், ஜீவ மாத்ர உபாஸகனுக்கும், பகவத் உபாஸகனுக்கும் ஸித்திக்கும்.

உபாஸநம் என்பது துக்க நிவ்ருத்தி ஸாதனமாக சாந்தோக்ய உபநிஷத், பூம வித்யா ப்ரகரணத்தில், விளக்கப் படுகிறது.

நான்கு வித **ஜீவாத்ம உபாஸனம்** கைவல்யமாகிற ஆத்ம அநுபவத்திற்கு காரணமாகும்.

ப்ரக்ருதியுடன் கூடிய ஆத்மாவை ப்ருஹ்மம் எனும் நினைவோடு உபாஸித்தல்

ப்ரக்ருதியுடன் கூடிய ஆத்மாவை நான் எனும் நினைவோடு உபாஸித்தல்

ப்ரக்ருதியின் சம்பந்தமற்ற ஆத்மாவை ப்ருஹ்மம் எனும் நினைவோடு உபாஸித்தல்

ப்ரக்ருதியின் சம்பந்தமற்ற ஆத்மாவை நான் எனும் நினைவோடு உபாஸித்தல்

ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (7-16), அர்ஜுன னுக்கு உபதேசிக்கும் போது,

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுஹ்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி ஞானி ச பரதர்ஷப:

என்கிறான்.

அதாவது,

என்னிடம் (கண்ணனை) பக்தி யோகம் செய்பவர்கள் நால்வர் :

இழந்ததை பெற நினைப்பவன்.

ஆர்த்தன் - இழந்த செல்வத்திற்காக (பொருட்கள் அல்லது அநுபவம்) பரிதவிப்பவர்கள், அதை பெறுவதற்கு ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிக்கிறார்கள்.

ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன்.

அசேதன வஸ்துக்களையும் விட உயர்ந்தது ஆத்மா ஏனெனில் அது நித்யமாயும், ஆனந்தமாயனாயும், ஞான குண பூர்ணத்வம் உடையதாயும் இருப்பதால்.

ஜிக்ஞாஸு - தன்னுடைய பரிசுத்தமான ஆத்ம ஸுகானுபவ ஆனந்தத்தை விரும்புகிறவர்கள். அதை வேண்டி பெறுபவர்கள். (ஆனால், பக்தி யோகத்திற்கு முன்பு கண்டிப்பாக ஆத்ம தரிசனம் பெற வேண்டும். அதுவும் ஒரு ஸுக அநுபவம். பக்தி யோகத்திற்கு முன்பு வரும் ஆத்ம ஸுகானுபவத்தை பக்தி யோக நிஷ்டன் விரும்புவதில்லை; பகவத் அநுபவத்தையே விரும்புகிறான்.) இங்குள்ள ஸுகத்தை விட பல மடங்கு உயர்ந்த்து ஆத்ம ஸுகானுபவம். ஆனால் பகவத் அநுபவத்தை விட குறைந்த ஸுகம்.

புதிய ஐஸ்வர்யத்தை வேண்டுபவன்.

அர்த்தார்த்தி - தன்னிடம் இல்லாத புதிய செல்வத்தை (பொருட்கள் அல்லது அநுபவம்) வேண்டி, அதை பெறுவதற்காக இவர்கள் ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிக்கிறார்கள்.

என்னையே அடைய விரும்புபவன் **ஞானி**

நித்யமான, தன் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான, துக்க கலப்படம் அற்ற ஸுக ரூபமான, பரமபத ப்ராப்தியையும், அங்கு கிடைக்கக் கூடிய பகவத் கைங்கர்யமே மோக்ஷம் எனப்படுவது.

ஆக, பகவத் உபாஸனத்தில் கைவல்யமாகிற ஆத்ம சாக்ஷாத்காரத்தை மட்டுமே **ஜிக்ஞாஸு** பலனாக வேண்டுகிறான்.

ஆக, கைவல்யமாகிற ஆத்ம சாக்ஷாத்காரத்தில், பகவத் அநுபவம் இல்லாமையால் அது **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாம்மி** என்பதற்கு விஷயமாகாது.

3. பகவத் அநுபவத்தைப் பெற மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவன் அர்ச்சிராதி மார்க்கத்தாலே, பரமபதம் செல்கிறான்.

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, **ப்ருஹ்ம ஸூத்ரம்**

4ம் அத்யாயம் 3ம் பாதம் 5வது அதிகரணம் 14ம் ஸூத்ரம்

அப்ரதீகாலம்பனான் நயதீதி பாதராயண உபயதா ச தோஷாத் தத்க்ரதுஸ்ச

அதாவது,

தத்க்ரது ந்யாயப்படி ப்ரஹ்மத்தையும் அதன் கார்ய வஸ்துக்களை ப்ரஹ்ம ஆத்மகமாக உபாஸிப்பவர்களே ஆதிவாஹிகளால் அர்ச்சிராதி மார்க்கத்தில் அழைத்து செல்ல படுகிறார்கள் என்பது பாதராயணர் கருத்து.

இந்த ஸூத்ரம் கார்யாதிகரணத்தில் இடம் பெறுகிறது.

இங்கு, மோக்ஷத்தை விரும்பி பக்தி யோகத்தை செய்பவர்கள், ஸர்வேஸ்வரனை உபாஸிப்பவர்களாகவே இருந்து, அர்ச்சிராதி மார்க்கத்தில் ஆதிவாஹிகளால் அழைத்து செல்லப் படுகிறார்கள் என விவரிக்ப் படுகிறது. இது மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவர்கள் அனைவருக்கும் பொது.

ஆக, மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவர்கள், பக்தி யோகமாயினும் சரி சரணாகதி அநுஷ்டானமானாலும் சரி, உரிய காலத்தில் தேஹத்தை விடுத்து அர்ச்சிராதி மார்க்கம் வழியே பகவத் ப்ராப்தியைப் பெற ஆதிவாஹிகளால் வழி நடத்தப் படுகிறார்கள் என்பது ப்ரமாண ஸித்தம்.

இதனால் தெளிய வேண்டுவதாவது, இதர பலன்களாகிய ஐச்வர்யம் கைவல்யம் போன்றவைகளுக்காக உபாயத்தை அநுஷ்டிப்பவர்களுக்கு, ஜீவ கமனத்தில், அர்ச்சிராதி மார்க்கம் கிடையாது; அதனால் பரமபத ப்ராப்தி கிடையாது; மேலும் நிரந்தரமான பகவத் அநுபவமும் கிடையாது என்பது ப்ரமாண நிர்தேசம்.

4. அர்ச்சிராதி மார்க்கத்தில் செல்பவன் மட்டுமே கர்ம அநுகுணமாக ப்ராக்ருத லோகத்திற்கு திரும்புவதில்லை.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்**

1ம் அத்யாயம் 2ம் பாதம் 3வது அதிகரணம் 17ம் ஸூத்ரம்

ஸ்ருதொபநிஷத்க கத்யா பிதான்னாச்ச

அதாவது,

உபாஸகனுக்கு அர்ச்சிராதிகதியில் கண்ணுக்குள் இருப்பவனான பரம புருஷனே ப்ருஹ்மத்தை அடைவிக்கிறான்.

ப்ருஹ்ம வித்யைகள் (மோக்ஷம் பெறும் வழி) என்ற உபாஸநம் மற்றும் ந்யாஸ வித்யை 32 வகைகள் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ஆனால், அனைத்துக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

ஒவ்வொரு உபாஸகனும் (பக்தி யோக நிஷ்டனும்), தன்னுடைய ஆசையின் அடிப்படையில், ப்ருஹ்ம வித்யையை தேர்வு செய்து அநுஷ்டிக்கலாம்.

உதாரணத்திற்கு,

 # பஞ்சாக்நி வித்யை -

ஸர்வைஸ்வரனை, தான் ஆத்மாவாக கொண்டவன் என்று தனக்கு முக்கியத்வம் அளித்து த்யானம் செய்வது; இதனுடைய பலன் - சிறிது காலம் கைவல்யமாகிற தன் ஆத்ம ஸ்வரூபத்தை இந்த ப்ராக்ருத லோகத்தில் இருந்து கொண்டே அநுபவித்து விட்டு பிறகு மோக்ஷத்தை அடைவது.

அனைத்து ஜீவர்களும் சரீரத்தை விட்டு கிளம்பும் போது, செல்லும் பாதையானது: மோக்ஷத்தை அடைபவர்கள் அர்ச்சிராதி மார்கத்தனால் செல்வதாயும், ஸ்வர்காதிகளை அடைபவர்கள் துமாதி மார்கத்தனால் செல்வதாயும் மற்றும் நரகத்திற்கான வழி நிரைய பதவி என்றும் உபநிஷத்துக்களில் சொல்லப்படுகின்றன.

ஒவ்வொரு உபாஸகனும் (பக்தி யோக நிஷ்டனும்) தன் யோக காலத்தின் முடிவில் அர்ச்சிராதி மார்கத்தனால் மோக்ஷத்தை அடைகிறான், என்றபடி.

உபநிஷத்துக்களில், ஜீவர்களின் தன்மையையும், பரமாத்மாவின் தன்யையையும் வேறு படுத்திக் காட்டப் பட்டிருக்கிறது. மிகச் சிறியதாகவும், ஞானம் உடையவனாயும், பிறப்பு-இறப்பு அற்றவன் என்றும் ஜீவர்களின் தன்மையை விளக்கப் பட்டிருக்கின்றன; மிகவும் பெரியவனாயும், எங்கும் பரவி இருப்பவனாயும், ஞானம் உள்ளவனாயும், ஆனந்தமாய் இருப்பவனாயும் பரமாத்மாவின் தன்மையை விளக்கப் பட்டிருக்கிறது.

வேதாந்தங்களைக் கற்றுப் பரமாத்மாவின் உண்மை நிலையை அறிந்த உபாஸகனுக்கு (பக்தி யோக நிஷ்டனுக்கு) அநுஸந்திக்க வேண்டுவதாய் சொல்லப் பட்ட அர்ச்சிராதி கதியை அநுஸந்திப்பதனால், கண்ணுக்குள் இருப்பவனாய் சொல்லப்பட்ட, பரமாத்மாவே ப்ருஹ்மத்தை அடைவிக்கிறான்.

உபநிஷத்தில் **கம் ப்ருஹ்ம கம் ப்ருஹ்ம** என்ற சொற்கள், ஸுகத்துடன் பெரியாதாயும் உள்ளது என பொருள் கொண்டது. இது ப்ருஹ்மத்தின் இலக்கணம். இத்தகைய ப்ருஹ்மமே **ய ஏக்ஷோக்ஷிணி** , அதாவது கண்களில் உள்ளவன் என கூறப் படுகிறது. அதாவது, மோஷத்தை அடைபவன் செல்லும் பாதை அர்ச்சிராதி மார்க்கம் என விளக்கப்படுகிறது.

முப்பத்தி இரண்டு வகைகளான ப்ருஹ்ம வித்யைகள் (மோக்ஷம் பெறும் வழி) என்ற பக்தி யோகத்திற்குள் **உபகோஸல வித்யையும்** ஒன்று.

பக்தி யோக நிஷ்டனுக்கு, **கதி சிந்தனம்** மோக்ஷ உபாயத்திற்கு அங்கம். தான் அந்திம தசையில் செல்ல இருக்கும் அர்ச்சிராதி மார்க்க சிந்தனம் உபாஸகனுக்கு உபாய அங்கமாகிறது.

உபகோஸல வ்ருத்தாந்தத்தினால், மோக்ஷ உபாயத்தினால் அந்திம தசையில், அர்ச்சிராதி மார்கத்தில் செலுத்தப்பட்டு பகவத் ப்ராப்தியை பெற வைக்கிறது, எனத் தெளிவிக்கப் படுகிறது. இந்த அர்ச்சிராதி மார்க்கம், மற்ற பலன்களாகிய ஐச்வர்யம் கைவல்யம் போன்றவைகளுக்கு கிடையாது என்பது ப்ரமாணம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஆகையால் ப்ருஹ்ம ப்ராப்தி இல்லாதாற்கு இச் ஸ்லோகத்தில் சொல்லுகிற ஸர்வ பாப நிவ்ருத்தி இல்லை; ஸர்வ பாப நிவ்ருத்தி உடையாருக்கு ப்ருஹ்மானுபவ ஸங்கோசம் இல்லை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஆகையால் - கைவல்யத்தை புருஷார்த்தமாக வேண்டினவனுக்கு அர்ச்சிராதி மார்க்கம், சரீரத்தை விடும் போது, ஜீவாத்ம கமனத்திற்கு ஏற்படாதாகையால்

ப்ருஹ்ம ப்ராப்தி இல்லாதாற்கு - பகவத் அநுபவத்தையே பலனாக கொள்ளாதவற்கு

இச் ஸ்லோகத்தில் சொல்லுகிற - இந்த சரமஸ்லோகத்தில் உள்ள விஷயமான

ஸர்வ பாப நிவ்ருத்தி - ஸர்வ பாபத்திலிருந்தும் விடுதலை

இல்லை - என்பது ஏற்படாது

ஸர்வ பாப நிவ்ருத்தி - ஸர்வ பாபங்களிலிருந்தும் முற்றிலுமாக விடுதலை

உடையாருக்கு - அடைந்தவர்களுக்கு

ப்ருஹ்மானுபவ ஸங்கோசம் - பகவத் அநுபவத்தின் இழப்பிற்கு

இல்லை - காரணம் ஏதும் இல்லை.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு அசித் விலக்ஷணமான கைவல்யமாகிற ஜீவாத்ம அநுபவத்தை மட்டுமே பலனாகக் கொண்டவருக்கு அர்ச்சிராதி கதி உண்டு எனக் கொள்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

109. ஸாத்வீக அபசாரம் என்றால் என்ன?

1. ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் அடியார்களிடம் அபசாரப் படுவது ஒரு ராஜதார அபசாரம் போன்றது என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

அதாவது, அரசனிடம் தவறு இழைத்தவன் கூட மன்னிப்பு பெறலாம். ஆனால், அரசியிடம் தவறாக நடந்தவன் விஷயத்தில், அரசன் எப்படி கட்டுக்கடங்காத சீற்றம் கொள்வானோ அது போல, பாகவதர்களிடம் ஏற்படும் தவறுதல்களினால் எம்பெருமானுக்கு சீற்றம் உண்டாகிறது.

ஆக, ஒரு சரணாகதன், இங்குள்ள காலம், தெரிந்து செய்யக் கூடிய பாபங்களில் விலக்க வேண்டியவற்றுள் ப்ரதானம் பாகவத அபசாரம்.

2. இந்த ஸ்ரீவைஷ்ணவ இலக்கணத்தை ப்ரமாணம் கொண்டு அறியலாம்.

 # ரூக்ஷாக்ஷராணி ச்ருன்வன் வை ததா பாகவதேரி தான் ப்ரணாம பூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத் வைஷ்ணவோ ஹி ஸ:

என்கிறது சாஸ்த்ரம்.

அதாவது, 'ஒரு பாகவதன் தன்னை குறித்து கடுமையாகப் பேசினாலும், அவனை வணங்கியபடி நின்று , அவன் கோபத்திற்கு தான் இலக்கானதற்காக மன்னிப்பு கேட்பவனே உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் ஆவான்' என்பதாகும் .

இப்படி செய்யவில்லை எனில் அவன் பகவானின் கருணையை இழக்கிறான், எம்பெருமானுக்கு மிகவும் நெருக்கமான அடிமையாக இருத்தல் என்பதாகிய தனது ஸ்ரீவைஷ்ணவ ஸ்வரூபத்தை இழக்கிறான், புலன்களை வசப்படுத்தும் தன்மை மற்றும் பொறுமை ஆகியவற்றை இழக்கிறான்.

ஸ்ரீ ராமானுஜ ஸத் ஸம்ப்ரதாயத்தில், **ஸ்ரீவைஷ்ணவர்கள் பாகவதர்கள் ப்ரபன்னர்கள் பரமேகாந்திகள்** என்பது பர்யாய பதங்கள் ; அதாவது, ஒரே பொருளை உணர்த்தும் பல பதங்கள் - பகவத் அடியார்கள், என்பதைச் சொல்லுவதாகிறது ; இந்த பகவத் அடியார்களின் லக்ஷணத்தை அறிய, ஸ்வாமி தேசிகனின் **ப்ரபாவ ரக்ஷ அதிகாரத்தில்** உள்ள வரிகளை நினைவில் கொள்வது நன்று :

நம் தர்சனத்திலே நிலை உடையவராய், முமுக்ஷுக்களாய், கர்ம-ஞான-பக்தி-ப்ரபத்திகளில் ஏதேனும் ஒரு சாஸ்த்திர மர்யாதையாலே பகவத் ப்ரவணரானார்க்கு....

ஆக உபயுக்த தத்வ ஹித புருஷார்த்த ஞானம் பெற்று, மோக்ஷ உபாயத்தை அநுஷ்டித்தவர்கள் அனைவருமே பாகவதர்கள், என்பது ஸ்வாமி தேசிகன் திருவுள்ளம்.

3. பாகவத அபசாரம் ஸாத்வீகமானதானாலும், ப்ரத்யவாயகரம் என்கிறது சாஸ்த்திரம் ; ஸ்வாமி தேசிகன் அபராத பரிஹார அதிகாரத்தில் இதனை உதாஹரிக்கிறார்.

நித்யஸூரியான கருடனுக்கு ஏற்பட்ட **ஸாத்வீக அபசாரத்தை** சாண்டிலீ வ்ருதாந்தத்தில் காண்போம்.

சாண்டிலீ என்றவள் மிகுந்த ஞானமும் அநுஷ்டானமும் உடைய பாகவதோத்தமை.

அவள் கடல் நடுவே ஒரு தீவில் வசித்து வந்தாள்.

ஒரு சமயம், காவலர் என்பவரும் , அவருடைய மருமானான கருடனும், வருண லோகம் செல்லும் வழியில், இவளது ஆஸ்ரமத்தில் ஓர் இரவு தங்கினர் .

இவளது உபசரிப்பை கண்ட கருடன் தன் மனதில் , “இவள் இங்கிருப்பது அவளுக்கு தகுந்த இடமாக ஆகாது. இவளை நாம் யக்ஞ யாகாதிகள் நடக்கும் பவித்ரமான இடத்தில் கொண்டு விட்டு விடுவோம்’ என எண்ணினார்.

மறு நாள் தன் சிறகுகள் அனைத்தும் உதிர்ந்து நிற்பதை கண்டு, தான் எண்ணியதன் விளைவாகவே இது ஏற்பட்டதாக உணர்ந்து அவளிடம் மன்னிப்பு கோரினார் கருத்மான்.

ஆகவே, நித்யஸூரிகளாக உள்ளோருக்கும், இங்கு அவதார காலத்தில், இம்மாதிரி அஹங்காரம் (ஸாத்வீகமாக இருந்தாலும்) ஏற்படுமேயானால், அதற்கு மன்னிப்பு, தண்டனை போன்றவைகள் தவிர்க் முடியாது என அபிநயித்து காட்டினார் நித்ய ஸூரியான கருத்மான்.

ஆக, பரமனைப் பற்றிய தெளிவான ஞானமும், அதற்கேற்ற அநுஷ்டானமும் உடையவர்களை பாகவதர்கள் என்று போற்றியும், அவர்கள் இருப்பைக் கொண்டு, தாழ்வாக நினைக்கலாகாது என்று ஸ்வாமி தேசிகன் சந்தேகமற பல இடங்களில் விளக்கிக் காட்டியுள்ளார்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

110. <u>உத்தரக்ருத்யத்தில் தோஷங்கள் ப்ரத்யவாயகரமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு சரணாகதன் தன் இஷ்டப்படி இங்குள்ள காலம் உத்தரக்ருத்யங்களை செய்து போகலாம் என்பது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதங்களைக் கொண்டு சரணாகதன் தன் இஷ்டப்படி, உத்தரக்ருத்யமாக இங்குள்ள காலம் பகவத் கைங்கர்யங்களை செய்து போகலாம் என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரணாகதன் சாஸ்த்திர விதிப்படியே கைங்கர்யங்களைச் செய்ய வேண்டும் என்பது ப்ரமாண ஸித்தம்.

விஷ்ணு தர்மத்தில் கூறுவதாவது :

ஸ்ருதி ஸ்ம்ருதி மமை ஆக்ஞா யஸ்தாமுவ்லங்ய வர்த்தே ஆக்ஞாஸ்சேதீ மம த்ரோஹீ மத் பக்த: அபி ந வைஷ்ணவ:

என்ற எம்பெருமானின் திருவாக்குப் படி,

‘வேதாந்தங்களும், ஸ்ம்ருதிகளும் என் கட்டளைகளாகும்; அவற்றை மீறி நடப்பவர்கள் யாராக இருப்பினும் எனது ஆணைகளை மீறுபவன் ஆவான் ; அவன் என்னிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்தாலும் அவன் வைஷ்ணவன் அல்லன்’ – என்கிறான் ஸர்வேஸ்வரன் .

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸ்ரீ ராமானுஜர்,

‘**பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி**’

என்று ‘சேஷ - சேஷி’ விஷயத்தை விளக்கி அருளியுள்ளார்.

அதாவது,

சேஷன் - தன் செயலினால் எப்போதும் சேஷிக்கு உகப்பை ஏற்படுத்துபவன்.

சேஷி - சேஷனின் செயலினால் எப்போதும் உகப்பை அடைபவன்.

ஆக, ஸர்வ சேஷியான ஸ்ரீமந் நாராயணனின் திருவுள்ளத்தை, முக்தனாகும் போது பரமபதத்தில் ப்ரத்யக்ஷத்தால் அறிந்தும், சரணாகதன் உத்தரக்ருத்ய தசையில் சாஸ்த்திரம் கொண்டு அறிந்தும், கைங்கர்யங்களைச் செய்வதே, சேஷனாகிய ஜீவன் அநுஷ்டிக்க வேண்டுவது.

3. சரணாகதி கத்யத்தில், பகவத் ராமானுஜர் புருஷகார ப்ரபத்தி பண்ணும் ப்ரகரணத்தில், தனது உத்தரக்ருத்யமான கைங்கர்யங்களை ப்ரார்த்திக்கிறார்.

அதாவது,

பாராமார்த்திக பகவத் சரணாரவிந்தயுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஞான பரம்பக்தி க்ருத பரிபூரண அநவரத நித்ய விஷததம அனன்யப்ரயோஜன அநவதிகாதிஷயப்ரிய பகவதனுபவ ஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரிதா அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதி ரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபேக்ஷயா பாரமார்திகி பகவத் சரணாரவிந்த சரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே

என பெரிய பிராட்டியிடம் தனது சரணாகதி பலிக்க வேண்டுமென புருஷகார ப்ரபத்தி செய்து போக,

அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே

என்று தாயாரால் அந்த புருஷகார ப்ரபத்தி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.
அதாவது, இந்த சரணாகதி அநுஷ்டானத்தினால், சாஸ்த்திரங்களினால் தெளிவிக்கப் படுகிற, பரபக்தி, பரஞானம் மற்றும் பரம பக்தி போன்ற நிலைகளை இங்கே பெற வேண்டும் என்றும், பகவத் கைங்கர்யமன்றி வேறொரு பலனில் இச்சை வராதபடி இருக்க வேண்டுமென்றும், குற்றமற்ற சாஸ்த்திர விதிப்படி, அதாவது அஹங்கார மமகாரமற்ற, கைங்கர்யம் இங்குள்ள காலம், ஸித்திக்க வேண்டுமென்றும், சேஷ வ்ருத்தியையே தனக்கு உண்டான செயலாக லயித்து மிக பிரியத்துடன் சேஷியின் உகப்பிற்காகவே செய்து போவதுவும், சரீர அவஸாந்த்திற்கு பிறகு, நித்ய விபூதியில் நித்ய கைங்கர்யம் ஸித்திக்கவும் சரணாகதி அநுஷ்டிக்கிற அடியேனுக்கு, இந்த சரணாகதி அநுஷ்டானம் பலனளிக்க வேண்டும்,
என்கிற புருஷகார ப்ரபத்தி, இங்கே தெரிகிறது.

அதற்கு, பெரிய பிராட்டியான ஸ்ரீரங்க நாச்சாயார்,

‘அப்படியே ஆகட்டும்; உன் மனோரதம் பூர்த்தி அடையட்டும்’

என அந்த புருஷகார ப்ரபத்தி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

ஆக, சரணாகதன் சேஷியின் இச்சைப்படி கைங்கர்யங்களை செய்து போக வேண்டுவதாக பகவத் ராமானுஜர், அருளியுள்ளார்.

4. சரணாகதி சாஸ்த்திரமான ஸ்ரீமத் ராமாயணத்தில், தம்பி லக்ஷ்மணன் ஸீதா ராமனிடம் சரணாகதியை அநுஷ்டித்து, ஸ்ரீராம கைங்கர்யத்துக்காக வநவாசம் மேற் கொண்டு, அதன் பிறகு அங்கு செய்து போகும் கைங்கர்யமாவது, ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் உத்தரக்ருத்யமாக அநுஷ்டிக்க வேண்டிய கைங்கர்ய ப்ரகாரம் விளக்கப் படுவதாய் அமைகிறது.

இளைய பெருமாள் ஸ்ரீ ராமனிடம் அருளினான்:

அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ருத: ஸ்வபதஸ்சதே. பரவானஸ்மி காகுஸ்த த்வயி வர்ஷ சதம் ஸ்திதே. ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாம் இதி மாம் வத

அதாவது,

வனவாசத்தின் போது, நடத்திக் காட்டிய இச்சம்பவம் ஆரண்ய காண்டத்தில் உள்ளது; ‘ஸ்ரீ ராமா! நீ நூற்றுக் கணக்கான வருடங்கள் இருந்தாலும், நான் உனக்கு ஸகல வித கைங்கர்யங்களையும், நீ விழித்திருக்கும் போதும் தூங்கும் போதும், செய்வேன். தேவரீர் உகந்த இடத்தில் பரணசாலையை அமைக்குமாறு அடியேனுக்கு கட்டளை இட வேண்டும்’

என்று லக்ஷ்மணன் ஸ்ரீராமனின் திருவுள்ளத்தை அறிந்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கைங்கர்யமாவது,

ஸ்வாமி உகந்த ஏவல் தொழில்

லக்ஷ்மணன் ஸ்ரீராமனை கேட்டு அறிந்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால், ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் செய்யும் பகவத் கைங்கர்யம், ஸர்வேஸ்வரனை நேரிலே கேட்டு அறிந்து செய்ய இயலாததாகையால், சாஸ்த்ரத்தைக் கொண்டே எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது திருவுள்ளத்தை அறிய வேண்டும்.

இந்த சரணாகதன் செய்யும் அனைத்து பகவத் கைங்கர்யங்களும் சாஸ்த்ரத்தின் அநுமதி உள்ளதாகவே இருக்க வேண்டும்.

தன் மனதில் தோன்றியவாறு செய்யும் கைங்கர்யம் குற்றம் உள்ளதாகவே அமையும். அது கைங்கர்யம்

ஆகாது, என்பது சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

இவ்வனுபவ பரிவாஹமாய் "க்ரியதாமிதி மாம் வத" என்கிறபடியே சேஷி உகந்த பரிபூரண கைங்கர்யம் வருகிறது; "பாரமார்த்திக" என்கிற கத்ய வாக்யத்திற் சொன்ன பல பர்வ பரம்பரையெல்லாம் இங்கே யதா ப்ரமாணம் விவக்ஷிக்கப் படுகின்றன

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இவ்வனுபவ பரிவாஹமாய் - தடையற்ற பகவத் கைங்கர்யத்தை முக்த தசையில் பெற ஓர் உபாயத்தை அநுஷ்டித்து அதனுடைய எண்ணத்தின் போக்கு வீடாய் இங்குள்ள காலம்

க்ரியதாமிதி மாம் வத - இளைய பெருமாள் வந வாசத்தில் ஸ்ரீராமனிடம் பகவத் கைங்கர்யங்களை ப்ரார்த்திப்பது

என்கிறபடியே சேஷி உகந்த பரிபூரண கைங்கர்யம் - ஸ்வாமியின் திருவுள்ளம் அறிந்து அதற்கேற்ப கைங்கர்யங்களைச் செய்வது

வருகிறது - சேஷனான ஜீவனுக்கு உகந்தது

பாரமார்த்திக - பகவத் அநுபவத்தை பெற சரணாகதி அநுஷ்டானத்தில் உள்ள ப்ரார்த்தனையாவது

என்கிற கத்ய வாக்யத்திற் சொன்ன - பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யத்தில் அருளியபடி

பல பர்வ பரம்பரையெல்லாம் - உத்தரக்ருத்யமான பெறப் படுகிற பலனில்

இங்கே - இங்குள்ள காலம்

யதா ப்ரமாணம் - சாஸ்த்திரத்தில் விதித்தபடி செய்ய வேண்டுவதாக

விவக்ஷிக்கப் படுகின்றன - சொல்லப் படுகிறது

ஆக, உத்தரக்ருத்யத்தில் தோஷங்கள் ப்ரத்யவாயகரம்,

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**" என்கிற பதங்களைக் கொண்டு சரணாகதன் தன் இஷ்டப்படி இங்குள்ள காலம் பகவத் கைங்கர்யங்களை செய்து போகலாம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

111. சரணாகதனின் சோகம் மோக்ஷ பலனுக்கு தடையா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு சரணாகதனுக்கு இது விதிபரம் என்றும், சரணாகதன் சோகித்தானேயானால் மோக்ஷ பலனுக்கு ப்ரத்யவாயம் உண்டு என்பது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **மாசுச:** என்கிற பதத்தைக் கொண்டு சரணாகதனுக்கு இது விதிக்கப் பட்டுள்ளதால், சரணாகதியை அநுஷ்டித்தவன் பிறகு ஏதேனும் ஒரு காரணத்தினால், அவனுக்கு சோகம் உண்டாகுமேயானால், அதனால் மோக்ஷ பலனுக்கு ப்ரத்யவாயம் உண்டு என்பது ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதம்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷ ஸாதனம் என்பதையும், சரணாகதனுக்கு பிறகு உதிக்கிற பாபங்கள் மோக்ஷ பலனுக்கு தடையாகாது என்பதனையும், ஸர்வேஸ்வரன் அவதார காலத்தில் தன் திருவாக்கினாலே பல ப்ரகாரமாக உறுதி படுத்தியுள்ளான்.

சக்ரவர்த்தி திருமகன், விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில் தன் திருவாக்கினாலே தெளிவித்த சாஸ்த்திர அர்த்தம்.

சுக்ரீவன், சரணாகதி அநுஷ்டித்து நின்ற விபீஷணனை எதிரி தரப்பிலிருந்து வந்த காரணத்தால் அதில் சூழ்ச்சி இருக்கக் கூடும் எனக் கருதி, அவனை ஏற்பதற்கு மறுத்து, ஸ்ரீராமனிடம் வாதிடுகிறான்.

அதற்கு சரணாகத ரக்ஷகனான ஸ்ரீராமன் பதில் உரைக்கிறான்.

 # மித்ரபாவேன ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சன. தோஷோ யத்யபி தஸ்யஸ்யாத் ஸதா வேதத் அஹர்ஹிதெள

அதாவது, 'தோழனாக வேடம் தரித்து ஒருவன் என்னிடம் சரணாகதனாக வந்தால் கூட, அவன் தோஷமுள்ளவனாயினும், அவனை நான் காத்தருள்வேன்'.

 # ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி யேதத் வ்ரதம் மம

அதாவது, 'என்னிடம் ஒரு முறை, 'நான் உன்னுடையவன்' என்று ஒருவன் சரண் புகுந்துவிட்டால், அவனை காத்தருள்வது எனது வ்ரதம்'.

இது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் சரணாகத ரக்ஷணம் எனும் திருக் கல்யாண குணமாகும்.

வராஹ பெருமான், பூமிப் பிராட்டிக்கு, சரணாகதனைக் கரை சேர்க்க தான் அளித்த வாக்குறுதி. பூமிப் பிராட்டி கேட்கிறாள்:

நான் கூக்குரலிட்டு அழுதபோது ஓடோடி வந்து ரட்சித்தீர்கள். நான் உங்கள் பார்யை, சிஷ்யை, பத்னி என்பதால் வந்தீர்கள். இந்த பூமியில் இருக்கிற ஜீவன்கள் கூப்பிட்டால், வருவீர்களா? என்னை ரட்சித்த மாதிரி இவர்களை ரக்ஷிப்பீர்களா? என்று கேட்டாள்.

எத்தனை வித ரூபங்களில் பகவான் வந்தாலும், அவன் பேசுகிற பேச்சிலே மாற்றம் கிடையாது. வராஹ பிரான் பூமி பிராட்டிக்குப் பதில் சொன்னான்:

வராஹ சரமஸ்லோகத்தில், ஸர்வேஸ்வரன் பூமிப் பிராட்டிக்கு வாக்களிக்கிறான்.

ஸ்திதே மனஸி ஸு ஸ்வதே சரீரே சதி யோ நர தாது சாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விஸ்வ ரூபஞ்ச மா மஜம் ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண சந்நிபம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

அதாவது,

'எவனொருவன், தனது உடல் நல்ல நிலையில் இருக்கும் போது, என்னிடம் மோக்ஷத்திற்கான சரணாகதியை ஒரு முறை அநுஷ்டித்து இருக்கின்றானோ, அவனது கடைசி காலத்தில், மூச்சு, பேச்சின்றி, நாக்கு தடுமாறும் நிலையில், மரக்கட்டையாக இருக்கும்போது, என்னை அவன் நினைக்கத்தேவை இல்லை. நானே அவனுக்கு என் நினைவை உண்டு பண்ணி வழி நடத்துவேன்' என்றான் ஸர்வேஸ்வரன். இது எம்பெருமான் சரணாகதனுக்கு அளித்த உறுதி மொழி.

சரணாகத வத்ஸலனான அந்த ஸர்வேஸ்வரன், சரணாகதன் சோகப் படுவானேயானால், அவனைக் கை விட்டு விடுவான் எனும் வாதம் பகவானின் திருவுள்ளத்தை ப்ரதிபலிக்கும் வரிகளோடு விரோதிக்கும். அதானால் **மாசுச:** என்பது சரணாகதன் மோக்ஷ காரணமாக சோகப் பட வழியில்லை எனக் கூறுவதாகும்; அது விதி அன்று. சோகமற்றிருப்பது சரணாகதனுக்கு உரிய மன நிலை, என்கிறான் கண்ணன்.

3. ஸர்வேஸ்வரனான கண்ணன் அருளிய பகவத் கீதையில், அர்ஜுன ஸம்வாதத்தில், **மாசுச:** என்கிற பத ப்ரயோகத்தின் முக்கிய நோக்கு.

மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனையே சரண் புகுந்து அதனால் செய்ய வேண்டிய சரணாகதி அநுஷ்டானத்தை இந்த ஸ்லோகத்தில் விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 66 வது ஸ்லோகம்

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

அதாவது,

‘மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே’ -

என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

இந்த பக்தி யோகம் செய்பவனுக்கு, தைல தாரையைப் போல் (அதாவது, எண்ணெயை பெருக விட்டால் இடைவெளி இல்லாமல் சீராக விழுவது போல்) எப்பொழுதும் ஸர்வேஸ்வரனான கண்ணனைப் பற்றியே, நினைவு இருக்க வேண்டும் என்று கண்ணன் முன் ஸ்லோகத்தில் கூறியதைக் கேட்ட அர்ஜுனன் சோகத்தை அடைந்தான். இந்த மாதிரியான த்யானம் மிகக் கடினம் என்பதால் ஏற்பட்ட சோகம் இது.

அர்ஜுனன் சோகம் கொண்டது, **மாசுச:**, அதாவது ‘சோகப் படாதே’, என்ற கண்ணனின் இந்த ஸ்லோகத்தின் வார்த்தைகளால் தெளிவாகிறது. சோகம் உள்ளவனைத் தானே சோகப்படாதே என்று தேற்ற முடியும்!

இந்த அர்ஜுனனின் சோகத்தை போக்கும் விதத்தில், ஸர்வ தர்மான் பரித்யஜ்ய என்று கண்ணன் ஸ்லோகத்தை தொடங்கினான், அதாவது ‘அனைத்து மோக்ஷ காரணமான நிவ்ருத்தி தர்மங்களையும் விடுத்து (தர்மங்களாவது, சாஸ்த்ரத்தைக் கொண்டே அறிய வேண்டிய பலனுக்கான செயல்) என்று தொடங்கினான கண்ணன்.

ஆக, சோகப் பட்ட அர்ஜுனனை தேற்ற கண்ணன் லகு உபாயத்தை விதித்து **மாசுச:** என்று சோகத்திற்கு காரணமான பக்தியோகத்திற்கு மாற்றான ஒரு விகல்பத்தை விளக்கினான் கண்ணன். ஆகையால், **மாசுச:** என்பதை விதியாகக் கொள்ளலாகாது; விதியாகக் கொண்டால் விதி மீறலுக்கு ப்ரத்யவாயம் உண்டாகும்; அது பல சாஸ்த்திரங்களோடும், பகவத் ராமானுஜரின் கீதா பாஷ்யத்தோடும் விரோதிக்கும்.

4. சாஸ்த்திரங்கள் விதிக்கும் உபாயங்களில், முதலில் அதிகாரத்தை விளக்கும்.

உதாரணமாக,

ஸ்வர்க்க காமோ யஜேத

என்பதால், ஸ்வர்க்கத்தை அடைய இச்சை உள்ளவர்கள் யாகம் செய்ய வேண்டும், என்பதாகிறது.

இதில், 'ஸ்வர்கத்தில் ஆசை' என்பது அந்த கர்த்தாவிற்கு அதிகாரம்; அது விதியாகாது; 'ஆசைப் படுவது' என்பது மனோ நிலை; அதை விதிக்க முடியாது. ஸவர்கத்திற்கான யாகம், அந்த ஆசை உள்ள அதிகாரிக்கு விதிக்ப் படுகிறது.

அது போல, உலக விஷயத்தில் வைராக்யம் கொண்ட அகிஞ்சனான முமுக்ஷுவிற்கு சோகம் அதிகாரம்; அது மனோ நிலை; அதை விதிக்க முடியாது. அவனுக்கு மோக்ஷ காரணமாக விதிக்கப் படுவது சரணாகதி அநுஷ்டானம்.

அதனால், **மாசுச:** எனும் பதம் முமுக்ஷுவிற்கு அதிகாரத்தையும் சரணம் வ்ரஜ எனும் பதம் மோக்ஷத்திற்கான சரணாகதி அநுஷ்டான விதியையும் விளக்குவதாகிறது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஆகையால், இவ்வுபாயத்தில் இழியுமவனுக்கு சோக ஹேதுக்ககளெல்லாம் கழிகையாலே சோகிக்க வேண்டாம் என்னும் இடத்தைச் சொல்லிக் கொண்டு விச்வாசத்தை த்ருடீகரிக்கையிலே தாத்பர்யம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஆகையால் - பக்தி யோகம் அநுஷ்டிக்க ஞான அநுஷ்டான சக்தி அற்ற அகிஞ்சனனுக்கு லகு உபாயமாக சரணாகதி அநுஷ்டானம் விதித்தபடியால்

இவ்வுபாயத்தில் இழியுமவனுக்கு - சரணாகதியை அநுஷ்டிப்பவனுக்கு

சோக ஹேதுக்ககளெல்லாம் கழிகையாலே - பக்தி யோகத்தை மோக்ஷ காரணமாக விதிக்கிற உபாயத்தால் உண்டாகும் சோகம் (அகிஞ்சனனுக்கு) விலக்கப் படுவதாலே

சோகிக்க வேண்டாம் - மோக்ஷமடைய சோகத்திற்கு ஒரு காரணமும் கிடையாது

என்னும் இடத்தைச் சொல்லிக் கொண்டு - என்பதை விளக்க வேண்டுவதாய்க் கொண்டு

விச்வாசத்தை த்ருடீகரிக்கையிலே தாத்பர்யம் - சரணாகதனுக்கு மோக்ஷ பலனுக்கு எதனாலும் தடை சம்பவிக்காது என்பதை நிச்சயப் படுத்துவதில் மாசுச: எனும் பத ப்ரயோகத்திற்கான உத்தேச்யம்

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு சரணாகதனுக்கு இது விதிபரம் என்றும், சரணாகதன் சோகித்தானேயானால் மோக்ஷ பலனுக்கு ப்ரத்யவாயம் உண்டு என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

112. சரணாகதி சோக நிஷேத விதி பரமா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு சரணாகதனுக்கு ஸர்வ வித சோகத்தையும் நிஷேதித்து விதிக்கிறது என்பது, ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **மாசுச:** (சோகப் படாதே) என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவான சரணாகதனுக்கு, இங்குள்ள காலம், ஸர்வ வித சோகத்தையும் நிஷேதிப்பதாக விதி உள்ளது என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

மனோ நிலை, விதிக்கு விஷயமாக முடியாது. செயல் ரூபமான கர்த்வயங்களே விதிக்கு விஷயமாகும். 'ஆசைப் படாதே' என்றும் 'கோபப் படாதே' என்றும் 'சோகப் படாதே' என்றும் விதிக்க வழியில்லை.

உதாரணமாக,

உலக விஷயத்தில் ஆசையற்ற முமுக்ஷு மோக்ஷ உபாயத்திற்கு அதிகாரியாகிறான், எனும் போது, 'உலக விஷயத்தில் ஆசைப் படாதிருப்பது' மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிக்க அதிகாரத்தை அளிக்கிறது. ஆசைப் படாதது விதியாகாது; மோக்ஷ உபாய அநுஷ்டானமாகிய செயல் ரூபமான கர்த்வ்யமே விதிக்கு விஷயமாகும்.

2. அர்ஜுனனுக்கு, குருக்ஷேத்ர யுத்தத்தில், பகவத் கீதை அவதார காரணமாக, தன் பந்துக்களின் விநாசத்தைத் தொட்டு சோகம் உண்டானது. அதாவது பந்துக்களை வதம் செய்து ராஜ்ய ஸுகத்தைப் பெறுவது அதர்மமோ என்கிற சோகம்.

கண்ணன், சரீர ஆத்ம விவேகத்தை உண்டு பண்ணி அக்கலக்கத்தைக் களைந்தான்.

பகவத் கீதையில் அர்ஜுனன் கேட்ட கேள்விக்கு பதில் என்ன?

அர்ஜுனன் தர்மத்திற்கும் அதர்மத்திர்கும் வித்யாஸம் புரியாமல் (மதிப்பிற்குறிய உறவினர்களை கொல்வது தர்மமா ? என) முதல் கேள்வியை கண்ணனிடம் கேட்டதற்கு கண்ணன் பகவத் கீதையில் பல ஸ்லோகங்களினால் பதில் கூற விழைகிறான். முதலில்,

2ம் அத்யாயம் 12 வது ஸ்லோகம் -

ந த்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா: ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்

அதாவது,

‘ஸர்வேஸ்வரனான நான் இதற்கு முன் அநாதி காலமாக இருந்திருக்கிறேன். பின்பும் இருப்பேன். அதே போல் நீயும் இந்த அரசர்களும் எப்போதும் இருப்பீர்கள்’

இதனால் கண்ணன் சரீரம் வேறு ஆத்மா வேறு என உணர்த்துகிறான்.

பிறந்து அழிய கூடிய சரீரத்தை கண்டு நாம் முன்பு இருந்ததில்லை என்றோ அல்லது நாம் இந்த சரீர அழிவிற்கு பிறகு இருக்க போவதில்லை என்ற எண்ணமோ உண்மை அல்ல என கூற முற்படுகிறான்.

இந்த சரீரத்திற்குள் இருக்கும் ஆத்மா அழிவற்றது என்பதை உணர்த்துகிறான். அதன் விளைவாகத்தான் நாம் செய்யும் ‘நல்லது’ அல்லது ‘கெட்டது’ போன்ற செயல்களின் பலனை வரும் பிறவிகளில் நாம் அநுபவிக்க நேரிடுவதாக கூறுகிறான் கண்ணன்.

இவ்வாறு ஆத்ம நித்யத்வத்தை உணர்த்தி அர்ஜுனனின் சோகத்தை களைய முற்படுகிறான் கண்ணன்.

ஆனால், சரமஸ்லோக ப்ரகரணத்தில், பந்து விநாச சோகத்தைக் குறித்து சொல்லப் பட்டது அல்ல **மாசுச**: (சோகப் படாதே) எனும் கண்ணனின் விளக்கம், என்பது உணரத் தக்கது.

3. இரண்டாவது சோகம், தன் பிறவியைக் குறித்து அர்ஜுனன் கொண்ட சோகம்.
ஸர்வேஸ்வரனான கண்ணன், அர்ஜுனன் சோகத்தைக் களைய, அவன் தெய்வ குணம் உடையவன் என்று இந்த ஸ்லோகத்தில் உறுதி படுத்துகிறான்.

16ம் அத்யாயம் 5 வது ஸ்லோகம் -

தைவீ ஸம்பத்விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா. மாசுச: ஸம்பதம் தைவீம்பிஜாதோஸி பாண்டவ

அதாவது,

‘தைவ ஸம்பத் மோக்ஷ சாதனம். ஆஸுரரை சார்ந்த ஸம்பத் ஸம்ஸார பந்தத்திற்கு ஹேதுவாகும். அர்ஜுனா நீ தைவ ஸம்பத் உடையவன். கவலைப் படாதே’

ஸர்வேஸ்வரனான கண்ணன் ஸம்ஸாரியான பத்த ஜீவர்களை இரு வகையாக பிரித்து அர்ஜுனனுக்கு விளக்கினான்; அதாவது, தெய்வப் பிறவி என்றும் அஸுரப் பிறவி என்றும்.

இதைக் கேட்ட அர்ஜுனனிடம், கண்ணன் இவ்வாறு கூறலானான்.
அதாவது, தார்மிகர்க்குள் தலை சிறந்தவனான பாண்டு புத்திரன் ஆகையாலும், ஸத்வ குணம் மேலோங்கி கீதோபதேசம் கேட்பதாலும், அர்ஜுனன் தெய்வப் பிறவியே என்றும் ‘அவன் வருத்தப்பட வேண்டாம்’

என்றும் கண்ணன் தெளிவு பட கூறினான்.

அர்ஜுனனுடைய, மிகுந்த மன வருத்தம் உடைய தோற்றத்தைக் கண்டு, கண்ணன் இவ்வாறு கூறலானான்.

ஆக, சரமஸ்லோக ப்ரகரணத்தில், பிறவியைக் குறித்த சோகத்தை பற்றி சொல்லப் பட்டது அல்ல **மாசுச**: (சோகப் படாதே) எனும் கண்ணனின் விளக்கம்.

4. சரமஸ்லோகத்தில் (பகவத் கீதை 18-66) உள்ள **மாசுச**: (சோகப் படாதே) என கண்ணன் உரைக்கக் காரணமென்ன என்பதை முன் ஸ்லோக வரிகளினால் தெளியலாம்.

மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை பூரணமாக விளக்கிவிட்டான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இனி அர்ஜுனன் கீதோபதேசத்தை ஆராய்ந்து செயல் படட்டும் என்றான்
கண்ணன் இந்த ஸ்லோகத்தில்.

18ம் அத்யாயம் 63 வது ஸ்லோகம் -

இதிதே க்ஞானமாக்யதாம் குஹ்யாதகுஹ்யதரம் மயா. விம்ருச்யை ததசேஷேண யதேச்சஸி ததா குரு

அதாவது,

‘மோக்ஷம் பெறுவதற்கான ரஹஸ்யங்களுக்குள் மிக ரஹஸ்யமான கர்ம, ஞான, பக்தி யோகம் உனக்கு நன்கு விளக்க பட்டது. நீ பராமர்சித்து உன் விருப்பம் போல் செய்.’ - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.
மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதை பூரணமாக விளக்கிவிட்டான் ஸர்வேஸ்வரனான கண்ணன், இனி அர்ஜுனனை தனக்கு மிகவும் பிடித்தவன் என்று கூறி, பக்தி யோகத்தின் சுருக்கத்தை வரும் இரண்டொரு ஸ்லோகங்களில் விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 64 வது ஸ்லோகம் -

ஸர்வ குஹ்யதமம் பூய: ஸ்ருணு மே பரம் வச: இஷ்டோஸிமே த்ருடமிதி ததோ வஷ்யாமி தே ஹிதம்

அதாவது,

‘எனக்கு நீ மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறபடியால் பரம ரஹஸ்யமான பக்தி யோகத்தை மீண்டும் உபதேசிக்கிறேன். கேள்.’ - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

மோக்ஷத்திற்காக ஸர்வேஸ்வரனை ஆராதித்து பலன் பெறுவதாகிய பக்தி யோகத்தின் சுருக்கத்தை இந்த ஸ்லோகத்தில் விளக்குகிறான் கண்ணன்.

18ம் அத்யாயம் 65 வது ஸ்லோகம் -

மன் மனா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ் குரு. மாமே வைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதி ஜானே ப்ரியோஸிமே

அதாவது,

‘பக்தியோடு என்னை நீ ஆராதித்தாயேயானால் நீ என்னையே அடைவாய். இது என் ப்ரதிக்ஞை.’ - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

பக்தி யோகம் மேன்மேலும் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் அதற்கு ஏற்றவாறு செயல்களை புரிய வேண்டும் என்பதை புரிய வைத்து, மிக மிக ரஹஸ்யமான பக்தி யோகத்தின் முக்கியமான பாகங்களை மீண்டும் உபதேசிக்கிறான் கண்ணன்.

அதாவது,

தைல தாரையைப் போல் (அதாவது, எண்ணெயை பெருக விட்டால் இடைவெளி இல்லாமல் சீராக விழுவது போல்), எப்பொழுதும் ஸர்வேஸ்வரனான கண்ணனைப் பற்றியே, நினைவில் இடைவெளி அற்று, இந்த பக்தி யோகம் செய்பவனுக்கு இருக்க வேண்டும் என்றான் கண்ணன்.

இதைக் கேட்ட அர்ஜுனன் முகத்தில் உண்டான சோகத்தை கவனித்த கண்ணன், தடையற்ற பக்தி யோகம் அநுஷ்டிப்பது கடினம் என்று சோகப் பட்டானேயானால், லகு உபாயமான சரணாகதியை அநுஷ்டிக்கலாம் என அடுத்த ஸ்லோகம் (பகவத் கீதை 18-66) வரிகளால் விளக்குகிறான்.

ஆக, சரமஸ்லோகத்தில் உள்ள **மாசுச**: என்பது சாம்சாரிக சோகங்களை விலக்க விதிக்கிறது என்கிற பூர்வ பக்ஷ ஸித்தாந்தம் முற்றிலும் அநுபபன்னம்.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

ஆகையால் இங்கு உபாய விசேஷ அநுஷ்டானங்கள் வந்தால் உபாய அநுபந்தியாயும் பல அநுபந்தியாயும் வரும் சோகத்தில் ப்ராப்தி இல்லை என்கிறது

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஆகையால் - பக்தி யோகம் அநுஷ்டிக்க சக்தி அற்ற அகிஞ்சனனுக்கு சரணாகதி எனும் லகு உபாயம் மோக்ஷ காரணமாக விதித்திருக்கிற படியால்

இங்கு - சரணாகதி விதியை விளக்கும் இச்சந்தர்ப்பத்தில்

உபாய விசேஷ அநுஷ்டானங்கள் வந்தால் - லகு உபாயமான சரணாகதி அநுஷ்டானங்களை விளக்கும் சந்தர்ப்பம் வரும் போது

உபாய அநுபந்தியாயும் - சரணாகதி எனும் மோக்ஷ உபாய விஷயத்தில் வரும்

பல அநுபந்தியாயும் வரும் - மற்றும் அந்த உபாயத்திற்கான பலனாகிய மோக்ஷ விஷயத்தில் வரும்

சோகத்தில் ப்ராப்தி இல்லை - கலக்கங்களுக்கு வழியில்லை - (சோகம், ஆசை போன்றவைகள் மன நிலையின் பரிவாஹமே அன்றி விதிக்கு விஷயமாகாது)

என்கிறது - என விளக்குகிறது மாசுச: எனும் சரமஸ்லோக பதம்.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு சரணாகதனுக்கு ஸர்வ வித சோகத்தையும் நிஷேதித்து விதிக்கிறது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

113. சரணாகதிக்கு அதிகாரம் சம்சார பயமா அல்லது சோகமா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு சோகம், சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரத்தை கொடுக்க, சம்சார பயமுள்ளவன் மோக்ஷ உபாய அதிகாரி என்பது எப்படிப் பொருந்தும் என சிலர் கலங்குவார்கள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **மாசுச:** (சோகப் படாதே) என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு சோகம் கொள்வது சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரத்தை கொடுக்கிறது என விளக்கப் படுகிற போது, பயமுள்ளவன் மோக்ஷ உபாய அதிகாரி என்பது எப்படிப் பொருந்தும் என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; ஆக, சோகமுடையவனாய் இருப்பது விதி பரம் என கருத்து கொள்வர் பூர்வபக்ஷிகள். அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

இந்த கருத்துக்கு ப்ரதான காரணம், ஜிதந்தா ஸ்தோத்திர வரிகள்:

அஹம் பீதோஸ்மி தேவேஷ ! ஸம்ஸாரோ அஸ்மின் பயாவஹே. பாஹி மாம் புண்டரிகாக்ஷ ! ந ஜானே சரணம் பரம்

அதாவது,

தேவர்களின் தலைவனே! பயத்தைத் தரும் சம்சாரத்தைக் கண்டு அஞ்சுகிறேன். தாமரைக் கண்ணா! புகல் ஒன்றில்லா அடியேனை தேவரீரே காத்தருள வேண்டும்

ஆக, சம்சார பயமே சரணாகதிக்கு அதிகாரம் என்றும், மாசுச: (சோகப்படாதே) என்பது விதி பரம் என்றும் பூர்வபக்ஷிகள் வாதிடுவர்.

2. ஸ்வாமி திருமங்கை ஆழ்வார் - பெரிய திருமொழி (1-6-4)

வம்பு உலாம் கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்ப் பொருள் தாரம் என்று இவற்றை நம்பினார் இறந்தால் நமன் தமர்ப் பற்ற எற்றி வைத்து, எரி எழுகின்ற செம்பினால் இயன்ற பாவையைப் பாவீ ! தழுவு என மொழிவதர்க்கு அஞ்சி, நம்பனே. வந்து உந் திருவடி அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்

அதாவது,

தாலி கட்டின மனைவியை விலக்கி பிறர் மனைவியை விரும்பினவர்கள் இறந்து போனால் யமபடர்கள் பிடித்துக் கொண்டு துன்பப்படுத்தி, பெரும் பாவங்களைச் செய்து இவ்விடம் வந்து சேர்ந்தவனை, செம்பினால் ஆன நெருப்பினால் எரிகின்ற ஸ்த்ரீ பிம்பத்தை தழுவு, என சொல்லப் போகிறார்கள் என்று பயப்பட்டு நைமிசாரணியத்து எம்பெருமானிடம் வந்து, உன் திருவடி அடைந்தேன், என்று சொன்ன படி.
மோக்ஷ பலனிற்காக எம்பெருமானின் திருவடியை சரணாகப் பற்ற, சோகமுள்ளவன் அதிகாரி என கண்ணன் கீதையில் **மாசுச**: (சோகப் படாதே) என உரைத்துப் போக, ஆழ்வார் இங்கு நரக பயம் கொண்டு, ஸர்வேஸ்வரன் திருவடியைப் பற்றினார் என்பது எப்படி ஸங்கதமாகும்.

பகவத் கீதை சம்வாதத்தில், அர்ஜுனன், பயத்தாலும் சோகத்தாலும், மூன்று முறை தன் கலக்கத்தை வெளியிட்டான்:

பந்துக்களின் விநாசம் குறித்து பயம்

தன் பிறவி தெய்வ ஸம்பத்தா அல்லது அசுர ஸம்பத்தா என்கிற சோகம்

பக்தி யோகம் அநுஷ்டிக்க இயலாத சோகம்.

ஆக, பயமும் சோகமும் லகு மோக்ஷ உபாயத்துக்கு அதிகாரம் என்றபடி.

3. சம்சார பந்தத்தில் உள்ள தோஷங்களை உணரும் போது பயமும் அதன் போக்கு வீடாக சோகமும் ஏற்படுவது, அதிகாரத்தின் இரு அம்சங்கள்.

அநாதி மாயையாலே ஸுப்தனாய், அதாவது, அநாதியான ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதன வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை அந்த சம்சாரி ஜீவர்கள் பெற்று, அதன் விளைவாக விபரீத ஞானமுடையவனாய், அழுக்கடைந்திருக்கும் நிலையை, பராசர மஹரிஷி,

அநேக ஜன்ம ஸாஹஸ்ரீம் ஸம்சார பதவீம் வ்ரஜன். மோஹ ஸ்ரமம் ப்ர்யாதோஸௌ வாஸனா ரேணு குண்டித:

என அருளினார்.

அதாவது,

அநேகமாயிரம் ஜன்மங்காளக, சம்சாரத்தில் சிக்கி, ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற குணங்கள் கலந்த ப்ரக்ருதி என்கிற அசேதன வஸ்துவின் பரிமாணங்களாலான சரீரத்தை பெற்று, மோஹம், அக்ஞானம் போன்ற புழுதிகளால் மூடப்பட்டு, இந்த துக்க மயமான சம்சார வாழ்வே போக்யம் என

கருதும் அளவிற்கு 'ப்ரக்ருதியின் சேர்க்கை' **ஸம்ஸர்கஜா தோஷ குணா பவந்தி** என்கிற வரிக்கு ஏற்ப,இந்த சம்சாரி ஜீவர்களின் எண்ணத்தையும் செயல்களையும் ஆட் கொள்கின்றன. அதனால், இந்த தோஷத்தை உணர்ந்தவடன், சாமசாரிக பயமும் அதனால் ஏற்படும் சோகமும் அதிகாரமாகி, லகு மோக்ஷ உபாயத்தில் இழிய சம்சாரி ஜீவனுக்கு வழி செய்கிறது, என்றபடி.

4. ஸ்வாமி தேசிகன் திருச்சின்னமாலையில்,

 # தருமன் விடத் தாம் தூது போனார் வந்தார் தரணி பொறாத் திண் பாரம் தவிர்த்தார் வந்தார் அரு மறையின் பொருள் அனைத்தும் விரித்தார் வந்தார் அஞ்சின நீ என்னை அடை என்றார் வந்தார் தருமம் எலாம் தாமாகி நிற்பார் வந்தார் தாமே நம் வினை அனைத்தும் தவிர்ப்பார் வந்தார் பரம் எனது நீ புலம்பல் என்றார் வந்தார் பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்தார் வந்தார் தாமே

என அருளினார்.

அதாவது,

 # தருமன் விடத் தாம் தூது போனார் வந்தார் -
அடியவரிடம் கருணை காரணமாக, பாண்டவ தூதனாக, தருமனுக்காக, தானே சென்றான் கண்ணன்

 # தரணி பொறாத் திண் பாரம் தவிர்த்தார் வந்தார் -
மோக்ஷ லகு உபாயத்தை விவரித்தும்பூ பாரத்தை தவிர்த்தவன் கண்ணன்

 # அரு மறையின் பொருள் அனைத்தும் விரித்தார் வந்தார் -
வேத சாரத்தை கீதோபநிஷத்தாக அருளினான் கண்ணன்

 # அஞ்சின நீ என்னை அடை என்றார் வந்தார் -
சரணாகதி அநுஷ்டான அதிகாரமாகிய சாம்சாரிக பயமும் அதனால் உண்டாகும் சோகமும் நீங்க **மாசுச:** என விளக்கி அகிஞ்சனானவன் சரணம் அடைய சரணம் வ்ரஜ பதங்களால் விதித்தான் கண்ணன்

 # தருமம் எலாம் தாமாகி நிற்பார் வந்தார் -
ஸர்வ பாப நிவ்ருத்திக்காக ஸித்தோபாயனாக தானே ஆனான் கண்ணன்

 # தாமே நம் வினை அனைத்தும் தவிர்ப்பார் வந்தார் - பக்தி யோகம் செய்ய வேண்டிய பாப நாசகத்தை தானே செய்பவன் கண்ணன்

 # பரம் எனது நீ புலம்பல் என்றார் வந்தார் - பய சோகத்தை விலக்க, பரத்தை ஏற்று, மாசுச: என அருளினான் கண்ணன்.

 # பார்த்தனுக்குத் தேர் ஊர்ந்தார் வந்தார் தாமே - பார்த்த ஸாரதி எனப் பெயர் பெற்ற கண்ணன்

ஆக, சாம்சாரிக பயமும் அதனால் உண்டாகும் பக்தி யோக அநுஷ்டான இயலாமையால் ஏற்படும் சோகமும், சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரம் ஆகிறது.

5. ஸ்வாமி தேசிகன் **சரமஸ்லோக அதிகாரத்தில்** ,

கீழ் அபிமதம் ஸித்தியாதே நின்ற நிலையைப் பார்த்து சோகமும் மேல் அபிமதத்துக்கு ப்ரதிபந்தங்களான ப்ரபல விரோதிகளைப் பார்த்து பயமும் நடையாடுகிறதாகையாலே முமுக்ஷுவுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியிலும் இஷ்ட ப்ராப்தியிலும் ஒன்றைச் சொல்ல இரண்டும் வருமாப் போலே அதிகாரத்திலும் பய சோகங்களில் ஒன்றைச் சொல்ல இரண்டும் ஸித்திக்கும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

கீழ் அபிமதம் ஸித்தியாதே - சம்சார பந்தம் நீங்கி மோக்ஷ பலன் பெறாதே நிற்கிற

நின்ற நிலையைப் பார்த்து சோகமும் - தன் நிலையைக் கண்டு துக்கமும்

மேல் அபிமதத்துக்கு ப்ரதிபந்தங்களான ப்ரபல விரோதிகளைப் பார்த்து - அதன் பிறகு தன் இஷ்ட மோக்ஷ பலனுக்கு விரோதிகளான பாபங்களைக் கண்டு

பயமும் நடையாடுகிறதாகையாலே - அச்சமும் உண்டானால்

முமுக்ஷுவுக்கு அநிஷ்ட நிவ்ருத்தியிலும் இஷ்ட ப்ராப்தியிலும் ஒன்றைச் சொல்ல இரண்டும் வருமாப் போலே - சரணாகனுக்கு ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி (பாபங்களிலிருந்து விடுவிக்கிறேன்) எனும் அநிஷ்ட நிவ்ருத்தியையோ அல்லது மாமே வைஷ்யஸி (என்னையே அடைவாய்)எனும் இஷ்ட ப்ராப்தியையோ சொல்லும் போது, ஒன்றைச் சொல்ல மற்றொன்று சேர்ந்தே வருவது போல

அதிகாரத்திலும் பய சோகங்களில் ஒன்றைச் சொல்ல இரண்டும் ஸித்திக்கும் - அதிகாரமாகிய மாசுச: (சோகப் படாதே) எனும் போது பயம் மற்றும் சோகம் எனும் இரண்டு அதிகாரங்களில் ஒன்றைச் சொல்ல மற்றொனாறும் சேர்ந்தே வரும், என்றபடி.

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு சோகம் சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரத்தை கொடுக்க, பயமுள்ளவன் மோக்ஷ உபாய அதிகாரி என்புது எப்படிப் பொருந்தும் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

114. <u>ஆர்த்த ப்ரபன்னனுக்கு ப்ரபத்திக்கு அநன்தரம் சோகம் ஸாத்யமா?</u>

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு சோகம், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு நீங்க ப்ராப்தம் என்பது ஆர்த்த ப்ரபன்னன் விஷயத்தில் ஸித்தியாதே என சிலர் கலங்குவார்கள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **மாசுச:** (சோகப் படாதே) என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு சோகம், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு நீங்க ப்ராப்தம் என்பது ஆர்த்த ப்ரபன்னன் விஷயத்தில் ஸித்தியாதே என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரணாகதனில் இரு வகை : **த்ருப்த ப்ரபன்னன்** மற்றும் **ஆர்த்த ப்ரபன்னன்**

ஸர்வேஸ்வரனான கண்ணன், பகவத் கீதையில் (7-16), அர்ஜுன னுக்கு உபதேசிக்கும் போது,

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுஹ்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி க்ஞானீ ச பரதர்ஷப:

என்கிறான்.

அதாவது,

என்னிடம் (கண்ணனை) பக்தி யோகம் செய்பவர்கள் நால்வர் :

இழந்ததை பெற நினைப்பவன்

ஆர்த்தன் - இழந்த செல்வத்திற்காக (பொருட்கள் அல்லது அநுபவம்) பரிதவிப்பவர்கள், அதை பெறுவதற்கு ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிக்கிறார்கள்.

ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன்

அசேதன வஸ்துக்களையும் விட உயர்ந்தது ஆத்மா ஏனெனில் அது நித்யமாயும், ஆனந்தமாயனாயும், ஞான குண பூர்ணத்வம் உடையதாயும் இருப்பதால்.

ஜிக்ஞாஸு - தன்னுடைய பரிசுத்தமான ஆத்ம ஸுகானுபவ ஆனந்தத்தை விரும்புகிறவர்கள். அதை வேண்டி பெறுபவர்கள். (ஆனால், பக்தி யோகத்திற்கு முன்பு கண்டிப்பாக ஆத்ம தரிசனம் பெற வேண்டும். அதுவும் ஒரு ஸுக அநுபவம். பக்தி யோகத்திற்கு முன்பு வரும் ஆத்ம ஸுகானுபவத்தை பக்தி யோக நிஷ்டன் விரும்புவதில்லை; பகவத் அநுபவத்தையே விரும்புகிறான்.) இங்குள்ள ஸுகத்தை விட பல மடங்கு உயர்ந்த்து ஆத்ம ஸுகானுபவம். ஆனால் பகவத் அநுபவத்தை விட குறைந்த ஸுகம்.

புதிய ஐஸ்வர்யத்தை வேண்டுபவன்

அர்த்தார்த்தி - தன்னிடம் இல்லாத புதிய செல்வத்தை (பொருட்கள் அல்லது அநுபவம்) வேண்டி, அதை பெறுவதற்காக இவர்கள் ஸர்வேஸ்வரனான கண்ணனை பூஜிக்கிறார்கள்.

பகவத் அநுபவத்தைப் பெற விரும்புவன்

நித்யமான, தன் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான, துக்க கலப்படம் அற்ற ஸுக ரூபமான, பரமபத ப்ராப்தியையும், அங்கு கிடைக்கக் கூடிய பகவத் கைங்கர்யமே மோக்ஷம் எனப்படுவது.

பகவத் அநுபவத்தைப் பெற விரும்புவன் ஞானி - எப்போதும் தான் ஸர்வேஸ்வரனான கண்ணனுக்கு மட்டுமே தாஸ பூதன் என்ற தன்னுடைய ஸ்வாபாவிகமான நிலையையும் உணர்ந்து, ஸர்வேஸ்வரனான கண்ணனையும், அவன் (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களையும் சாஸ்த்ரங்களினாலே அறிந்து, அவனையே மோக்ஷ பலனாக அடைய விரும்புபவர்கள்.

முமுக்ஷுவானவன் பக்தி யோகத்தை அநுஷ்டிக்க ஞான சக்தி அற்று இருந்தானேயானால் மாம் ஏகம் சரணம் வ்ரஜ என கண்ணன் விதிக்கிறான். இந்த சரணாகதி அநுஷ்டானம், எனும் ப்ரபத்தி, இரு வகைகளாக சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன.

த்ருப்த ப்ரபன்னன் - மேல் பிறவிகளை ஸஹிக்க மாட்டாதவனாக சோகம் கொண்டு அநுஷ்டிக்கப் படும் ப்ரபத்தி, த்ருப்த ப்ரபன்னன் செய்கிற செயலாகும்.

ஆர்த்த ப்ரபன்னன் - இப்பிறவியில் உள்ள கர்மங்களை ஸஹிக்க மாட்டாதவனாக சோகம் கொண்டு அநுஷ்டிக்கப் படும் ப்ரபத்தி, ஆர்த்த ப்ரபன்னன் செய்கிற செயலாகும்.

ஆக, **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என கண்ணனால் அருளப் பட்ட மோக்ஷ ஸாதனமான சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு மாசுச: எனும் படியாக சோகம் நீங்க ப்ராப்தம் என்பது ஆர்த்த ப்ரபன்னன் விஷயத்திலும் ஸித்திக்கும்.

3. ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (9-10-5) :

சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் அரண் அமைந்த மதிள் சூழ் திருக் கண்ணபுரத் தரணி யாளன் தனது அன்பர்க்கு அன்பாகுமே

அதாவது,

ஞான, சக்தி, கர்மானுஷ்டானம் போன்றவைகளில் குறைகள் இருந்தாலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடியை சரணமாக பற்றினவர்க்கு, சரீர காலம் முடிந்த பிறகு, அவன் வைகுந்தத்தை கொடுத்தருளுகிறான், எனபதாயிற்று.

ஆக, சரண்யனின் திருவடிகளை பற்றி நிற்பதே சரணாகதனின் செயலாகும். இந்த சரணாகதி அநுஷ்டானம், எனும் ப்ரபத்தி, இரு வகைகளாக சாஸ்த்திரங்கள் உரைக்கின்றன.

த்ருப்த ப்ரபன்னன் விஷயத்தில், கர்ம அநுகுணமாக தேஹ முடிவில் மோக்ஷம் ஸித்திக்கும்;
ஆர்த்த ப்ரபன்னன் விஷயத்தில், கர்மாவை உடனே முடிவிற்கு கொண்டு வந்து, தேஹ முடிவில் மோக்ஷம் ஸித்திக்கும், என்றபடி.

ஆதனால், மோக்ஷ ஸாதனமான சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு கண்ணனால் சரமஸ்லோகத்தில் அருளப் பட்ட **மாசுச:** எனும் பதம், ஆர்த்த ப்ரபன்னன் விஷயத்திலும், சோகம் நீங்க ப்ராப்தம் என்பது பொருந்தும்.

4. ஸ்ரீமத் ராமாயணத்தில் (6-18-28), விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில், ஸ்ரீராமன் சுக்ரீவாதிகளோடு விவாதிக்கும் போது, சரணாகத ரக்ஷணத்தை, **கண்டு மஹரிஷி** வரி கொண்டு விள்குகிறான்;

ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் சரணாகத: அரி: ப்ராணாந் பரித்யைஜ்ய ரக்ஷிதவ்ய க்ருதாத்மநா

அதாவது, சரணாகதனை, அவன் கேட்ட காலத்தில் உயிரைக் கொடுத்தாவது ரக்ஷிக்க வேண்டும், என ஸ்ரீராமன் சுக்ரீவாதிகளுக்கு விளக்கினான்.

அதனால், **த்ருப்த ப்ரபன்னன்** மற்றும் **ஆர்த்த ப்ரபன்னன்** இருவருக்கும் அவரவர்கள் கேட்ட காலத்திலேயே மோக்ஷத்தை எம்பெருமான் கொடுத்தருள்கிறான் என்பது ப்ரமாண ஸித்தம்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

மாசுச: என்கிற இதுவே சோக நிமித்தமானவையெல்லாம் மோசநீயமாகைக்கு நியாமகமாகையாலே ப்ராரப்த கர்மத்திலும் சோக நிமித்தாம்சமெல்லாம் கழிகையால் ஆர்த்தி அதிசயமுடையவனுக்கு அப்போதே மோக்ஷம் ஸித்திக்கும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

மாசுச: - சோகப் படாதே

என்கிற இதுவே - எனும் சரமஸ்லோக பதமே

சோக நிமித்தமானவையெல்லாம் - சோகத்திற்று காரணமாக இருக்கும் கர்மங்களெல்லாம்

மோசநீயமாகைக்கு நியாமகமாகையாலே - நீங்கப் பெறும் நிலையாலே

ப்ராரப்த கர்மத்திலும் சோக நிமித்தாம்சமெல்லாம் - இச்சரீர தாரணத்திற்கு காரணமான கர்மங்கள்

கழிகையால் - சரணாகதி அநுஷ்டானத்தினால் களையப் படுவதினால்

ஆர்த்தி அதிசயமுடையவனுக்கு - ஆர்த்த ப்ரபத்தி அநுஷ்டித்த சரணாகதனுக்கு

அப்போதே மோக்ஷம் ஸித்திக்கும் - சரணாகதி அநுஷ்டானத்தின் பிறகு உடனே பரமபத ப்ராப்தி உண்டாகும்

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு சோகம், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு நீங்க ப்ராப்தம் என்பது ஆர்த்த ப்ரபன்னன் விஷயத்தில் ஸித்தியாதே என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

115. சரணாகதனுக்கும் சோக நிவ்ருத்தி இங்கு ஏற்படாமல் இருக்கிறதே

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு ஸர்வ வித சோகமும், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, நீங்க ப்ராப்தம் என்பதை ஏற்க இயலாது என சிலர் கலங்குவார்கள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் **மாசுச:** (சோகப் படாதே) என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு ஸர்வ வித சோகமும், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, நீங்க ப்ராப்தம் என்பதை ஏற்க இயலாது என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரமஸ்லோகத்தில் **மாசுச:** (சோகப் படாதே) என்கிற பதத்தைக் கொண்டு, பத்து வித சோக நிவ்ருத்தியை, நம் பூர்வர்களின் விளக்கப்படி, அறிய வேண்டுவதாவது; அதாவது,

சரணாகதி தர்மத்துக்கு ஜாதி ஆஸ்ரம நியமம் இல்லாததால், சரணாகதி அநுஷ்டானத்துக்கு தன் அதிகாரத்தை நினைத்து சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

பக்தி யோகம் போலே ஆயுள் உள்ள வரை செய்ய வெண்டுவதாக சரணாகதி அநுஷ்டானம் இல்லாமையாலே, இந்த உபாயம் செய்ய தன்னால் ஸாத்யமோ என சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

ஸர்வ சக்தனுமாயும் பரம காருணிகனான ஸ்வதந்தரனான எம்பெருமான் இருக்க, ஸித்தோபாயத்தைப் பற்றி (பலன் அளிப்பவனின் எண்ணங்களைப் பற்றி) சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

ஆக்ஞா அநுக்ஞா கைங்கர்யங்கள் இந்த மோக்ஷ உபாயத்துக்கு அங்கமாகாதபடியால், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு உண்டாகும் இந்த கைங்கர்ய குறைபாடுகள், மோக்ஷ பலனுக்கு தடையோ என சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

சரணாகதி அநுஷ்டானத்தின் பிறகு உண்டாகும் புத்தி பூர்வக அபராதங்களைக் களைய ப்ராயஸ்சித்த ப்ரபத்தி விதித்திருப்பதால், அந்த அபராதங்கள் மோக்ஷ பலனுக்கு தடையோ என சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

சரணாகதி அநுஷ்டானத்தின் பிறகு உண்டாகும் புத்தி பூர்வக அபராதங்களைக் களைய ப்ராயஸ்சித்த ப்ரபத்தி அநுஷ்டியாத கடின ப்ரக்ருதி விஷயத்தில், அந்த அபராதங்களைக் களைய லகு தண்டனை சொல்லப் படுவதால், அதுவும் மோக்ஷ பலனுக்கு தடையோ என சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

நரக துல்யமான இச்சரீர சம்பந்தம் முக்த தசையில் நீடிக்குமோ என சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

கேட்ட காலத்தில் பல ஸித்தி உண்டு என, ஆர்த்த த்ருப்த ப்ரபன்ன விகல்பத்தாலே அறியப் படுவதால், மோக்ஷ பலன் சம்பந்தமாக சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

காலம் குறித்து மோக்ஷ உபாயமான சரணாகதி அநுஷ்டிக்காத போதும், ஜன்மாந்தரங்களைக் கண்டு சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

கைவல்ய பலனும் மோக்ஷ அநுபவத்துக்கு தடையாகையாலே, **ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி** எனும் போது அவைகளும் களையப் படுவதால் சோகிக்க வேண்டாம் என்பதாகிறது.

3. மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டானத்தினால் உண்டாகக்கூடிய சோக நிவ்ருத்திகளாவது:

ஸந்த்குமார ஸம்ஹிதையில்,

குயோநிஷ்வபி ஸஞ்சாதோ ஸ: ஸக்ருத் சரணம் கத: த மாதா பித்ரு ஹந்தாரம்பி பாதி பவர்திஹா

என்கிறது, அதாவது

எந்த ஜாதி பிறந்தவராயினும், தாய் தந்தையை கொல்லும் அளவிற்கு தீய குணங்களைக் கொண்டவனாயினும், ஒரு முறை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடத்தில் சரணாகதி அநுஷ்டானேயானால், கருணை உள்ளம் கொண்ட ஸர்வேஸ்வரன், அவனை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவித்து மோக்ஷமளிக்கிறான். ஆக, சரணாகதி அனைவருக்கும் மோக்ஷ ஸாதனம் என்பதாகிறது.

ஸர்வ வல்லமை வாய்ந்த ஸ்ரீராமன்,

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீ திச யாசதே அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம

என விபீஷண சரணாகதியின் போது உரைக்கிறான்.

அதாவது, ‘ஒரு முறை சரணாகதி செய்தவனுக்கு, அதாவது நான் உன்னுடையவன் என்றவனுக்கு, நான் எல்லா விதமான பயங்களிலிருந்து விடுதலை அளிக்கிறேன்’ என்கிறான் ஸ்ரீராமன்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதா வாக்யப்படி,

ஆனுகூல்யஸ்ய ஸங்கல்ப: ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம். ரக்ஷிஷ்யதீதி விச்வாச: கோப்த்ருத்வ வரணம் ததா. ஆத்ம நிக்ஷேப கார்பண்யே ஷட்விதா சரணாகதி:

என்கிறபடியால்

சரணாகதி அநுஷ்டானத்திற்கு , சாஸ்த்ரத்தில் ஐந்து அங்கங்கள் விதிக்கப் பட்டிருக்கிறது.

இந்த அங்கங்களோடு சரணாகதன் தன் ஆத்ம ரக்ஷணத்தை ஸர்வேஸ்வரனிடம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

இதுவே **சரணாகதி அநுஷ்டானம்** என சாஸ்த்ரங்கள் உரைக்கின்றன.

மேலும், இந்த சரணாகதி அநுஷ்டானத்தை ஒரு ஸதாசார்யனால் செய்விக்க பட வேண்டுமாய் சாஸ்த்ரங்கள் விதிக்கின்றன.

ஆக, சரணாகதி அநுஷ்டானத்திற்கு வேறு நியமம் கிடையாது,என்பது ப்ரமாண ஸித்தம்.

4. சரணாகதி அநுஷ்டானத்தில் ஸித்திக்கிற மோக்ஷ பலனில் உண்டாகக்கூடிய சோக நிவ்ருத்திகளாவது:

பாஞ்சராத்ர சாஸ்த்திரப் படி,

அபாய ஸம்ப்லவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத் ப்ராயச்சித்தி ரியம் ஸாத்ர யத் புந: சரணம் வ்ரஜேத் உபாயாநாமுபாயத்வ ஸ்வீகாரேப்யேத தேவ ஹி

அதாவது, மனதால் பாபம் என அறிந்து, ஒரு பாபச் செயலை செய்ய நேர்ந்தால், ஒரு சரணாகதன் அதற்கான ப்ராயசித்தத்தை (பரிஹாரத்தை) உடனடியாக செய்ய வேண்டும். அப்படி பரிஹாரமாக செய்ய வேண்டிய செயல் என்ன என்றால் எம்பெருமானிடம் மன்னிப்பு கோருவதாகிய 'ப்ராயச்சித்த சரணாகதி' ஆகும். ஆக, இப்பாபச் செயல, மோக்ஷ பலனுக்கு தடையாகாது.

மநு தர்ம சாஸ்த்திரமானது,

ப்ரியேஷு ஸ்வேஷு ஸுக்ருதம் அப்ரியேஷு ச துஷ்கரிதம். விஸரிஜ்ய த்யாநயோகேந ப்ரஹ்மாப்யேதி ஸநாதநம்

என்கிறது.

அதாவது, மோக்ஷத்தை அடைபவன், அதன் பொருட்டு தன் தேகத்தை விடும் போது, புண்யங்களை தன் நண்பர்களிடமும் பாபத்தை தன் விரோதிகளிடமும் விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு எம்பெருமான் சரணாகதன் விஷயத்தில் ஸங்கல்பிக்கிறான். ஆக, கர்ம க்ருதமான சரீரம் முக்த தசையில் கிடையாது.

பாஞ்சராத்ர சாஸ்த்திரப் படி, காலம் குறிக்காமல் சரணாகதி அநுஷ்டித்தவன் விஷயத்தில்

அதோபாய ப்ரஸக்தோபி புக்த்வா போகனநாமயான் அந்தே விரக்திமாஸாத்ய விஷதே வைஷ்ணவம் பதம்

‘உலக அநுபவத்தில் ருசி கொண்டு அதற்கான செயல்களில் ஈடுபட்டிருக்கிற ஒரு சரணாகதன், அதிலுள்ள ஆசைகள் நீங்கி விரக்தி உண்டாகும் வரை, மோக்ஷ பலனுக்கு கால தாமதம் ஏற்படும்’.

எனப் படுகிறது.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தன் திருவாக்கினால் அருளியது;

ஆப்ரஹ்ம புவனால்லோகா: புநராவர்த்திநோர்ஜுந. மாமுபேத்யது கௌந்தேய புநர்ஜன்ம ந வித்யதே

என்கிறான் கீதையில் கண்ணன்.

அதாவது, ‘நான்முகனாகிய ப்ருஹ்மா இருக்கும் லோகம் உட்பட எல்லா லோகங்களும் அழிகின்றனவையே. என்னையே அடைகிறவர்கள் மட்டுமே மறு பிறவியை பெற மாட்டார்கள்.’

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இங்கு சொல்லுகிற சோக நிவ்ருத்திக்கு ஒரு படியாலும் ஸங்கோசம் இல்லாமையாலே இவ்வுபாய விசேஷ ஞானத்தாலும் அநுஷ்டானத்தாலுமாக ஸர்வ ப்ரகார தோஷ ஹேதுக்களெல்லாம் கழியும்படி சொல்லிற்றாயிற்று

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இங்கு - இந்த சரமஸ்லோகத்தில் உள்ள மாசுச: எனும் பதமானது

சொல்லுகிற சோக நிவ்ருத்திக்கு - வெளியிடுகிற சோகத்தின் நீக்குதலை

ஒரு படியாலும் ஸங்கோசம் இல்லாமையாலே - எக்காரணத்தினாலும் குறைத்து மதிப்பிட முடியாதாகையாலே

இவ்வுபாய விசேஷ ஞானத்தாலும் - மோக்ஷ காரணமான சரணாகதி பற்றிய தெளிவான அறிவினாலும்

அநுஷ்டானத்தாலுமாக - அவ்வறிவு பெற்ற காரணத்தால் சரணாகதி அநுஷ்டானத்தை செய்து போனதாலும்

ஸர்வ ப்ரகார தோஷ ஹேதுக்களெல்லாம் - சம்சார பந்தத்தினால் ஏற்படும் ஸர்வ வித சோக காரணங்களும், அதாவது கர்ம சம்பந்தம்

கழியும்படி சொல்லிற்றாயிற்று - முக்த தசையில் விலகும் என சொன்னபடி; ஆக, இங்குள்ள காலம் இவ்விஷயத்தில் சோகிக்க வேண்டாமென சொன்னபடி

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் "**மாசுச:**" என்கிற பதத்தைக் கொண்டு முமுக்ஷுவிற்கு ஸர்வ வித சோகமும், சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு, நீங்க ப்ராப்தம் என்பதை ஏற்க இயலாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

116. சம்ப்ரதாயத்துக்கு பரிசுத்தியாவது பிறவிப் பிணியைக் களைவது

1. அமிர்தஸ்வாதினி - பாசுரம் 14 :

பரக்கும் புகழ் வரும் பைம்பொருள் வாய்த்திடும், பத்தர்களாய் இரக்கின்றவர்க்கு இவை ஈந்தால் அறம் உளது என்று இயம்பார் கரக்கும் கருத்துடை தேசிகர் கன்று என நம்மை எண்ணிச் சுரக்கும் சுரவிகள் போல் சொரிகின்றனர் சொல் அமுதே

2. பத உரை:

பரக்கும் புகழ் வரும் - லோகத்தில் கீர்த்தி உண்டாகும்

பைம்பொருள் வாய்த்திடும் - மக்களின் ஆதரவால் தனம் பெருகும் (என்கிற எண்ணம் சிறிதும் கொள்ளாமல்)

பத்தர்களாய் இரக்கின்றவர்க்கு - பக்தியோடு சாஸ்த்திரார்தங்களைத் தெளிய விரும்புவோர்க்கு

இவை ஈந்தால் - இந்த சாஸ்த்திர ரஹஸ்யங்களை உபதேசித்தால்

அறம் உளது - புண்யம் கிட்டும்

என்று இயம்பார் - என்றும் நினைத்து உபதேசிக்க மாட்டார்

கரக்கும் கருத்துடை தேசிகர் - ஆனால், பூர்வாசார்யர்கள் அருளின ரஹஸ்ய அர்த்தங்களை காத்து வைத்திருக்கிற நம் ஸம்ப்ரதாய ஆசார்யர்கள்

கன்று என நம்மை எண்ணிச் - பசுவானது தனது கன்றிடம் ப்ரத்யுபகாரம் எதையும் எதிர்பாராமல் இருந்து

சுரக்கும் சுரவிகள் போல் - பாலூட்டக் கொடுக்குமோ, அது போல

சொரிகின்றனர் சொல் அமுதே - நம் ஆசார்யர்கள் சாஸ்த்திர ரஹஸ்ய அர்த்தங்களை பூர்வர் வழி மீறாமல் ஸத் சிஷ்யர்களுக்கு விஷய தானம் செய்தருள்கின்றனர்.

3. சாஸ்த்திர விஹித ப்ரபந்த வரிகளின் விளக்கம்:

சாஸ்த்திரார்தங்களை ஸத் சிஷ்யருக்கு உபதேசிக்க வேண்டுகையும், அதை முன்னோர் வழி மாறாமல் உபதேசிக்கையும், இந்த விஷய தானத்தை புகழுக்காகவோ பணத்திற்காகவோ செய்யலாகாது என்பதையும், ஸ்வாமி தேசிகன், இப் ப்ரபந்தத்தில் தெளிவிக்கிறார்.

சாண்டில்ய ஸம்ருதியில் கூறப் படுவதாவது,

ஸம்வத்ஸரம் ததர்தம் வா மாஸத்ரயமதாபி வா பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நி:ஸ்ப்ருஹோ வேதத்

அதாவது

ஆசார்யனாவன், ஸத் சிஷ்யனை ஒரு வருஷமோ ஆறு மாதமோ மூன்று மாதமோ பற்பல வகைகளில் சோதனை செய்து, சிஷ்யனின் நிஷ்டையை அறிந்து, தனக்கு ஒரு லாபத்தையும் எதிர் பார்பாமல் கருணையோடு உபதேசிக்க வேண்டும்.

மநு தர்ம சாஸ்த்திரத்தில்,

சிஷ்ய பாபம் குரோரபி

எனப்படுகிறது.

அதாவது,

சிஷ்ய குண பூர்த்தி அற்ற ஏதேனும் ஒரு சிஷ்யனுக்கு ஆசார்யன் உபதேசத்தால், அந்த ஆசார்யன் அவனை சிஷ்யனாக ஸ்வீகரித்தது பாபமாகும். அந்த சிஷ்யனால், பாபம் ஆசார்யனுக்கு ஏற்படும். அந்த பாபத்தின் விளைவாக, ஆசார்யனுக்கு நிஷ்டை குலையும்; ஞானம் அழியும் என குருபரம்பராசாரத்தில், ஸ்வாமி தேசிகன், வருவதை விசாரியாதே இந்திரனுக்கு உபதேசித்து ப்ருஹ்மா வேதத்தை மறந்த கதையை உதாகரித்து விளக்கியுள்ளார்

ஜயாக்ய ஸம்ஹிதையில்,

ஸாக்ஷாத் நாராயணோ தேவஹ க்ருத்வா மர்த்ய மயீம் தனும் மக்னானு தரதே லோகான் காருண்யா ஷாஸ்த்ர பாணினா

என, அப்பழுக்கற்ற வைதீக ஸம்ப்ரதாயத்தில் தோன்றிய அனைத்து ஆசார்யர்களுமே ஸர்வேஸ்வரனின் அம்சம் உடையவர்கள். சம்சாரி ஜீவர்கள் உஜ்ஜீவிக்க ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், ஆசார்ய வேடம் தரிக்கிறான் என்கிறது சாஸ்த்திரங்கள்.

ஆக, வேத மார்க்கமான, பகவத் ராமானுஜ ஸித்தாந்தமான, ஸ்வாமி தேசிக தர்சனமான இந்த ஸம்ப்ரதாயத்தில், ஸகல ஜீவர்களும் சாஸ்த்திர விஹித ஸாத்யோபாய அனுஷ்டானத்தால், ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனின் திருவுள்ள உகப்பு பெற்று உஜ்ஜீவிக்கிறார்கள், என விளக்கப் படுகிறது; இதை சம்சயம் அற விளக்க, இந்த ஸம்ப்ரதாய ஆசார்யர்கள் யத்நிக்கிறார்கள்.

ஸ்வாமி தேசிகன், சிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் சிஷ்யர்கள், கவனமாக இருக்க வேண்டியதை அருள்கிறார்:

பண்டிதை: அர்த்த கார்பண்யாத் பண்ய ஸ்த்ரீபிரவ ஸ்வயம்; ஆத்மா ஸம்ஸ்க்ருத்ய ஸம்ஸ்க்ருத்ய பரோபகாரணீக்ருத:

அதாவது,

விலை மாதர்கள் தங்கள் அழகை பெருக்கிக் கொண்டு பிறருக்கு பயன்பட்டு லாபத்தை அடைவது போல், சில பண்டிதர்கள் தன் ஞானத்தை வ்யாபாரமாக்க முற்படுவர்.

ஆக, தன் பாண்டித்யத்தை விலை பேசி, உலக போக்கை அனுசரித்து, ஸம்ப்ரதாய பூர்வர்களின் வழி மறந்து விளக்கம் அளிப்பதாகிய குற்றம் புரியும் பண்டிதர்களை கை விடுவது ஏற்றது.

ஆக பூர்வர்களின் வழியை மாற்றும் பாகவதர்களை கடுமையாக விமர்சிக்கிறார் ஸ்வாமி தேசிகன்

ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில் சிஷ்யர்கள் கவனமாக இருக்க வேண்டியதை ஸ்வாமி தேசிகன், அருள்கிறார்:

ந விச்வாச: க்வசித் கார்யோ விசேஷாத்து கலௌ யுகே; பாபிஷ்டா வாத வர்ஷேண மோஹயந்தி விசக்ஷணான்

அதாவது

கலி யுகத்தில், பாபிஷ்டர்கள், தனது துர் வாதங்களைக் கொண்டு சாமான்ய ஞானம் உடையவர்களை, ஸம்ப்ரதாய விளக்கங்களை மீறி, மதி மயக்கம் அடையச் செய்வார்கள்.

இந்த வரி, தத்வ ஹித புருஷார்த்தங்களை விளக்கிய பின்னர், நம் ஸத் ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் கடமைகளை விளக்கும் அதிகாரத்தில் இடம் பெறுகிறது; ஆதலால், இந்த சந்தர்பத்தில் துர் வாதங்களாக கூறப்படுவது, ஸத் ஸம்ப்ரதாயத்தை சேர்ந்தவர்களைப் பற்றியே, எனபது அறிய வேண்டுவது.

ஆக, ஆசார்ய பக்தியால், மனதில் ஸ்புரித்தவைகள், சாஸ்த்திர ஸம்ப்ரதாய விளக்கங்களுக்கு அடியொற்றியே இருக்க வேண்டும், என உணர வேண்டும். ஆசார்ய அனுக்ரஹத்தை காரணம் காட்டி, தனக்கு ஸ்புரித்தது என சாஸ்த்திர ஸம்ப்ரதாய விளக்கங்களுக்கு விரோதமாக நிர்வாகம் செய்வது ஆசார்ய லக்ஷணமாகாது, என்பது உணரத் தக்கது. இவ்வாறு, ஸம்ப்ரதாய வழியை அழிப்பவர்களின் விளக்கங்கள் துர் வாதங்களாக கூறப்படுகிறது.

ஸம்ப்ரதாய ப்ரமாண விரோதமாக நிர்வாகம் செய்து தனது ஸத் சிஷ்யர்களை, ஏதோ ஒரு லௌகீக காரணத்திற்காக குழப்பும் வித்வான்கள், பண்டிதர்களாக இருந்தாலும், ஸ்வாமி தேசிகன் வரிகளைக் கொண்டு ஆராயும் போது அவர்கள் நிராஹரிக்கப் பட வேண்டியவர்களே, என்பதில் குறையில்லை.

ஸ்ரீ பாஷ்ய மங்கள ஸ்லோகத்தில், பகவத் ராமானுஜர்,

பாராசர்யா வச ஸ்ஶதாம் உபநிஷத் துக்தாபிதி மத் யோத்த்ருதாம் சம்சாராக்நி விதீபந வ்யபகத ப்ராணா த்ம சஞ்ஜீவநீம் பூர்வாச்சார்ய ஸ்ஶ ரஷிதாம் பஹுஶ மதி வ்யாகாத தூரஸ்திதாம் ஆநீதாம் து நிஜா ஷரை ஸ்ஶ மநசோ பௌமா பிபந்து அந்வஹம்

என அருளினார். அதாவது தன்

பூர்வாச்சார்ய ஸ்ஶ ரஷிதாம் பஹுஶ மதி வ்யாகாத

என்று பூர்வாசார்ய வழியிலே சாஸ்த்திர அர்த்தங்களை விளக்கியதாக அருளியுள்ளார்.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரம் -

ஆசார்ய க்ருத்யாதிகாரத்தில்

இப்படி ரஹஸ்யத்ரயத்தைப் பற்றின கீழும் மேலும் உள்ள பாசுரங்களை எல்லாம் வேதாந்த உதயன ஸம்பரதாயமான மடைப் பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாம் கேட்டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் தன்னை கிளியைப் பழக்கி வைக்குமாப் பொலே பழக்கி வைக்கவர் திருவுள்ளத்திலே இரக்கமடியாக பெருமாள் தெளிய ப்ராகாசிப்பித்து மறவாமற் காத்து பிழையற பேசுவித்த பாசுரங்கள்

என்று ஸ்ரீராமானுஜ ஸ்ரீஸூக்திகளை ப்ரமாணங்களாகக் கொண்டு, தனது க்ரந்தங்கள் இருப்பதாக அருளியுள்ளார்.

ஆக, க்ரந்த நிர்மாணமாக, தனது பாண்டித்யத்தினால், அதாவது வ்யாகரண தர்க்க சாஸ்த்திர அறிவினால், உலக போக்கை அனுஸரித்து, பூர்வர்களின் வழியை சிதைப்பது, இழிவானவன் செய்யும் செயலாக, ஸ்வாமி தேசிகன் நிந்திக்கிறார்.

ஏகதஸ்த்வபவர்கார்த்தம் அனுஷ்டானாதி கௌஷலம். லோக அனுஸாரஸ்த்வேகத்ர குரு: பஸ்சாதுதீரித:

அதாவது, முமுக்ஷுவின் க்ருத்யங்களைச் செய்து கொண்டு, உலக போக்கை அனுஸரித்து விஷய மாற்றம் செய்யும் பண்டிதனும் இழிவானவனே.

ஸ்வாமி தேசிகன்,

ஏதே மஹ்ய மபோட மன்மத க்ஷரா உன்மாதயா நாதாதய்ஹ த்ரயந்த ப்ரதிநந்தனீய விவித உதந்தாஹா ஸ்வதந்தாமிஹ ஷ்ரத்தா தவ்ய ஷரண்ய தம்பதிதயா திவ்யாபகா வ்யாபகாஹா ஸ்ப்ரத்தா விப்லவ விப்ரலம்ப பதவீ வைதேசிகா தேசிகாஹா

என, ஆசார்யர்களின் உயர்வை தனது காரிகை கொண்டு விளக்குகிறார்.

அதாவது,

தான் வித்வான்கள் என்கிற கர்வம் அல்லாமல், தன் ஆசார்யர்களிடம் தான் கற்றவற்றை மாற்றி அமைத்து சிஷ்யர்களை வஞ்சிக்காத தன்மை கொண்ட, ஸ்ரீமந் நாதமுனிகள் ஸித்தாந்த வழி வந்த

ஆசார்யர்கள், திவ்ய தம்பதிகளின் கருணையை, சம்சாரி ஜீவர்கள் பக்கம், அவர்களை சாஸ்த்திர விதிகளை பின் பற்றச் செய்து, ப்ரவஹிக்கச் செய்கிறார்கள்.

அதனால் ஸம்ப்ரதாயத்திற்கு பரிசுத்தியானது, ஸத் ஸம்பரதாய ஆசார்யர்கள், சம்சாரி ஜீவர்களுக்கு செய்யும் பரோபகாரமான, சம்சாரி ஜீவர்களை சரணாகதி அனுஷ்டானத்தில் மூட்டி, பிறவிப் பிணியை போக்க வைப்பதாகும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

117. சரமஸ்லோகம் சரணாகதியை விதிக்கிறதா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் “சரணாகதி அநுஷ்டானமே" ஸித்திக்கிறது என்பதை ஏற்க இயலாது என சிலர் கலங்குவார்கள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில், மோக்ஷ காரணமாக சரணாகதி அநுஷ்டானமே விதிக்கப் படுகிறது என்பதை ஏற்க இயலாது என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரமஸ்லோக பதங்களுக்கான சாஸ்த்ரீய விளக்கம் : **ஸர்வ தர்மாந் பரித்யைஜ்ய** என்கிற பதங்களினால் அறிய வேண்டுவது; (அதாவது, மோக்ஷ காரணமாக பக்தி யோகத்தை தவிர்த்து சரணாகதி அநுஷ்டான விதிக்கான விவரணம்)

அதிகாரி விசேஷம் - சரணாகதி அநுஷ்டானத்திற்கு அதிகாரி யார் என நிர்ணயிக்கும் பதம்.

ஆகிஞ்சன்ய புரஸ்காரம் - பக்தி யோகம் அநுஷ்டிக்க சக்தி அற்ற தன்மை அதிகாரம்.

துஷ்கர பரிகாராந்தர நைரபேக்ஷ்யம் - கடினமான மோக்ஷ ஸாதனத்தை விதிக்காமை.

அசக்ய ப்ரவ்ருத்தி அநௌசித்யம் - முடியாத செயலை விதிக்காமை.

துஷ்கர அபிநிவேச வையர்த்யம் - பக்தி யோக அநுஷ்டான அபிமான நீக்கம்.

உபாய விசேஷ சுரணையுடைமை - சரணாகதி அநுஷ்டான அபிமானம்.

3. சரமஸ்லோக பத சாஸ்த்ரீய விளக்கம் : **மாம்** என்கிற பதத்தினால் அறிய வேண்டுவது; (அதாவது, தன் திருமேனியை தொட்டுக் காட்டி தன் தன்மையை ஸர்வேஸ்வரனான கண்ணன் விளக்கும் ப்ரகாரம்)

 # சரண்ய விசேஷம் - ஸித்தோபாயமே எம்பெருமானின் இயல்பு.

 # சரண்ய குண பூர்ணத்வம் - சரண்யனிடம் உள்ள ரக்ஷகத்வத்துக்கு தேவையான பரத்வம் மற்றும் ஸௌலப்யம்.

 # ஹித தம உபதேசித்வம் - கண்ணின், சம்சாரி ஜீவ உஜ்ஜீவனத்திற்கு, மிகவும் உகந்த உபதேசம்.

4. சரமஸ்லோக பத சாஸ்த்ரீய விளக்கம் : **ஏகம்** என்கிற பதத்தினால் அறிய வேண்டுவது; (அதாவது, மற்றவற்றை நீக்கி தன் ஏற்றத்தை ஸர்வேஸ்வரனான கண்ணன் விளக்கும் ப்ரகாரம்)

 # ப்ராப்ய ப்ராபகம் - உபாய உபேய விஷயத்தில் சரண்யனின் முக்யத்வம்.

 # நிரபேக்ஷ கர்த்ருத்வம் - ஸர்வ ஸ்வதந்தரனான எம்பெருமானின் ரக்ஷண செயல்.

 # வ்யாஜ மாத்ர ப்ரதீக்ஷித்வம் - சம்சாரி ஜீவர்களின் விதிக்கப் பட்ட லகு உபாயத்தை மட்டுமே எதிர் பார்க்கும் சரண்யன்.

 # உபாயாந்தர நிரபேக்ஷித்வம் - பலனுக்காக பக்தி யோகத்தை எதிர் பார்க்காத சரண்யன்.

 # பரிகராந்தர நிரபேக்ஷித்வம் - ஐந்து அங்கங்களைத் தவிர வேறொன்றையும் எதிர் பார்க்காத சரண்யன்.

 # ஸர்வ பல சரண்யத்வம் - அனைத்து பலன்களையும் அளிக்க வல்ல எம்பெருமானின் தன்மை.

 # சரண்யாந்தர அஸஹத்வம் - தேவதாந்தர ஸம்பந்தத்தை விலக்குவதை எதிர் பார்க்கும் சரண்யன்.

 # சரண்யைவசிஷ்ட்யம் - சரண்யனிடம் மஹாவிச்வாசத்தை எதிர் பார்க்கும் சரண்யன்.

5. சரமஸ்லோக பத விளக்கம் : **சரணம்** என்கிற பதத்தினால் அறிய வேண்டுவது; (அதாவது, சரணாகதி அநுஷ்டான உபாய விவரணம்)

 # உபாயாந்தர ஸ்தாந நிவேஷ்யத்வம் - பக்தி யோக ஸ்தானத்தில் நின்று பலனைத் தரும் சரண்யன்.

 # பர ஸவீக்ருதத்வம் - முமுக்ஷுவின் பக்தி யோக பரத்தை ஏற்கும் சரண்யன்.

6. சரமஸ்லோக பத விளக்கம் : **வ்ரஜ** என்கிற பதத்தினால் அறிய வேண்டுவது; (அதாவது, அநுஷ்டான பூர்வகமான சரணாகதி விதியை உணர்த்துவது)

 # ஸாத்யோபாய விசேஷத்வம் - சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதாகிற விதி.

 # பரிகர - சரணாகதி அநுஷ்டானம் ஐந்து அங்கங்களைக் கொண்டது.

 # ஸர்வ அதிகாரத்வம் - வர்ண ஆஸ்ரம நியமங்கள் அற்று ஸர்வருக்கும் பொதுவான உபாயம்.

ஸக்ருத் கர்தவ்யத்வம் - ஒரே முறை அநுஷ்டிக்க வேண்டுவது சரணாகதி அநுஷ்டானம்.

ஸுகரத்வம் - சுலபமானது சரணாகதி அநுஷ்டானம்.

அவிளம்ப பலம் - குறித்த காலத்தில் பலன் அளிக்க வல்லது சரணாகதி அநுஷ்டானம்.

ப்ராரப்த நிவர்த்தகத்வம் - அநப்யுபகத ப்ராரப்த கர்மாவைப் போக்க வல்லது சரணாகதி அநுஷ்டானம்.

பராதீன கர்த்ருத்வம் - முமுக்ஷுவின் சரணாகதி அநுஷடான தன்மை பகவத் அதீனம்.

சாஸ்த்தர வச்யத்வம - முமுக்ஷுவின் சரணாகதி அநுஷடானம் சாஸ்த்திர விதி.

7. சரமஸ்லோக பத விளக்கம் : **அஹம்** என்கிற பதத்தினால் அறிய வேண்டுவது; (அதாவது, பலனை அளிக்கும் ஸித்தோபாயனான எம்பெருமானின் தன்மையின் விளக்கம்)

பரம காருணிகத்வம் - எம்பெருமானின் கருணை ஜீவர்களுக்கு மோக்ஷ காரணம்.

ஸுப்ரஸன்னத்வம் - சரணாகதி அநுஷ்டானத்தினால் எம்பெருமானின் சீற்றம் விலகுதல்.

நிரங்குச ஸ்வாதந்த்ரியம் - தடையற்ற சுதந்திரம் உடையவன் எம்பெருமான்.

துர்நிவாரத்வம் - அடியார்களைக் காப்பதை இயல்பாக உடைய எம்பெருமான்.

பரானபேக்ஷத்வம் - பிறர் கையை எதிர்பார்க்காமல் பலனை அளிக்க வல்ல எம்பெருமான்.

அவஸர ப்ரதீக்ஷித்வம் - நற் பலனை அளிக்க, ஜீவர்களின் ஸுக்ருதத்தை எதிர் பார்த்து இருப்பவன் எம்பெருமான்.

8. சரமஸ்லோக பத விளக்கம் : **த்வா** என்கிற பதத்தினால் அறிய வேண்டுவது; (அதாவது, முமுக்ஷுவின் நிலையை விவரிக்கும் பதம்)

க்ருததக்ருத்யத்வம் - சரணாகதனுடைய அநுஷ்டான பூர்த்தி.

கர்தவ்யாந்தர நிரபேக்ஷம் - சரணாகதனிடம் வேறொரு செயலையும் பலனிற்காக எதிர் பாராதது.

பகவத் ப்ரியத்வம் - விதிக்கப்பட்ட நித்ய நைமித்தியாதி கர்மங்களை பகவத் பிரீதி கருதி, சரணாகதன் செய்தல்.

9. சரமஸ்லோக பத விளக்கம் : **ஸர்வ பாப** என்கிற பதங்களினால் அறிய வேண்டுவது; (அதாவது, மோக்ஷ பலனுக்கு தடையான பாப விசேஷங்களை வர்ணிக்கிறது)

த்ரைகாலிக விரோதி பூயஸ்த்வம் - ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமியான பாபங்கள்

விரோதி வர்க்க வைசித்ரியம் - மோக்ஷ பலனுக்கு விரோதியான பாபக் கூட்டங்கள்

10. சரமஸ்லோக பத விளக்கம் : **மோக்ஷயிஷ்யாமி** என்கிற பதத்திளினால் அறிய வேண்டுவது; (அதாவது, பாபங்களின் நீக்கம் பற்றிய விளக்கம்)

 # ஈஸ்வர ஸங்கல்ப மாத்ர நிவர்த்யத்வம் - பாபங்கள் பகவத் ஸங்கல்பத்தால் களையப் படுகிறது.

 # விரோதி நிவ்ருத்தி காலம் - சரணாகதனின் இச்சை அடியாக பாபங்கள் நீங்க குறித்த காலம்.

 # விரோதி நிவ்ருத்தி ஸ்வரூபம் - பாபங்கள் நீங்கும் ப்ரகாரம். அஸ்லேஷம் (பாபம் ஒட்டாமை) மற்றும் விநாசம் (பாபங்களின் அழிவு).

 # ஸ்வரூப ஆவிர்பாவம் - பாபம் நீங்கி முக்த தசையில் உண்டாகும் இயற்கை நிலை.

 # பரிபுரண பகவத் அநுபவம் - முக்த தசையில் ஸ்வாபாவிக பகவத் சேஷ வ்ருத்தி அநுபவம்.

 # ஸர்வ வித கைங்கர்யம் - முக்த தசையில் அனைத்து வித ஸர்வ சேஷி உகந்த ஏவல் தொழில்.

 # அபுனராவர்த்தி - முக்தனானவன் கர்ம வச்யனாவதில்லை.

11. சரமஸ்லோக பத விளக்கம் : **மாசுச:** என்கிற பதத்திளினால் அறிய வேண்டுவது; (அதாவது, சோகத்திற்கு காரணமான விஷயங்கள் நீக்கப் பெறுகிறது)

 # முன்பு சோக ஹேது ப்ராசூர்யம் - உபாய பல கலக்கம் சரணாகதி அநுஷ்டானத்தின் முன்பு.

 # பின்பு சோகிக்க ப்ராப்தமில்லை - உபாய பல கலக்க நீக்கம்ம் சரணாகதி அநுஷ்டானத்தின் பின்பு.

 # நிஸ்சம்சயத்வம் - முமுக்ஷுவான சரணாகதனுக்கு பலத்தில் சந்தேகமற்ற நிலை.

 # சோக நிவ்ருத்தி - முமுக்ஷுவான சரணாகதனுக்கு தேஹ யாத்திரையிலும் ஆத்ம யாத்திரையிலும் சோக நீக்கம்.

 # நிர்பயத்வம் - சரணாகதனுக்கு சரீரம் விடப் பெற்றால் ஆத்மா என்னகுமோ என்கிற பய நீக்கம்.

 # ஹர்ஷ விசேஷம் - சரணாகதனுக்கு சரீரம் உள்ள வரை ஸுக துக்கம் கர்ம அநுகுணமானவை எனும் தெளிவு.

 # சரீர பாத கால ப்ரதீக்ஷத்வம் - சரணாகதனுக்கு பரம பத ப்ராப்தியை எதிர் நோக்கி காத்திருப்பது

 # கைங்கர்ய ரஸிகத்வம் - உத்தரக்ருத்யமாக பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்ய ஈடுபாடு.

12. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

இவை ப்ரதானமாய் மற்றும் இவற்றுக்கு அபேக்ஷிதங்களெல்லாம் சப்த சக்தியாலும் அர்த்த ஸ்வபாவத்தாலும் அநுஷிஷ்டங்கள்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இவை - இந்த சரமஸ்லோகத்தில் உள்ள விளக்கமானது

ப்ரதானமாய் - நேரடியாக முக்கியமானதாயும்

மற்றும் இவற்றுக்கு அபேக்ஷிதங்களெல்லாம் - மேலும் சரமஸ்லோக அர்த்தத்தைச் சார்ந்த மற்ற சாஸ்த்ரீய விவரங்களெல்லாம்

சப்த சக்தியாலும் - பதங்களுக்கு உசிதமான அகராதிப் படி உள்ள பொருள் நிர்ணயத்தாலும்

அர்த்த ஸ்வபாவத்தாலும் - அப்பொருளை அடிப்படையாகக் கொண்ட சாஸ்த்ரீயமான மற்ற விவரணத்தாலும்

அநுஷிஷ்டங்கள் - சரமஸ்லோகத்தில், சரணாகதி அநுஷ்டானம் விதிக்கப் படுகிறது, என்றபடி

13. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் “சரணாகதி அநுஷ்டானமே" ஸித்திக்கிறது என்பதை ஏற்க இயலாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

118. சரணாகதி சாம்சாரிக சோக நிவ்ருத்தி ஹேதுவா?

பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் ‘சரணாகதி அனுஷ்டானமே சாம்சாரிக சோகத்தை போக்க வல்லது’ எனும் திரண்ட பொருளை ஏற்க இயலாது என சிலர் கலங்குவார்கள்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அனுஷ்டிக்க வேண்டுவதே!

1. பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் சரணாகதி அனுஷ்டானமே சாம்சாரிக சோகத்தை போக்க வல்லது எனும் திரண்ட பொருளை ஏற்க இயலாது என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; மேலும், பகவத் கீதை வரிகளுக்கான விபரீத அர்த்தம்.

2. சரமஸ்லோகமானது, அகிஞ்சனனுக்கு, சரணாகதி அனுஷ்டானமே மோக்ஷ காரணம் என விளக்குவதாவது; இது வேத மார்க்கம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்தம்.

ஏகம் ஸர்வ ப்ரதம் தர்மம் ஸ்ரியா ஜுஷ்டம் ஸமாஸ்ரிதை: அபேத சோகை: ஆசார்யை: அயம் பந்தா ப்ரதர்சித:

அதாவது,

நம் ஸதாசார்யர்கள், ஸர்வேஸ்வரனான பிராட்டியோடு கூடிய எம்பெருமானின் திருவடிகளில் சரண் அடைந்தவர்கள், ஒரு முறை அனுஷ்டிக்க வேண்டுவதாயும், அது ஸகல துன்பங்களையும் களைவதாயும் உள்ள இந்த சரணாகதி அனுஷ்டான உபாயத்தை நன்கு விளக்கியுள்ளனர்.

3. ஸ்வாமி தேசிகனின் அதிகார ஸங்க்ரஹம்:

குறிப்புடன் மேவும் தருமங்கள் இன்றி அக் கோவலனார் வெறித் துளவக் கழல் மெய்யரண் என்று விரைந்து அடைந்து பிரித்த வினைத்திரள் பின் தொடரா வகை அப்பெரியோர் மறிப்புடை மன்னருள் வாசகத்தால் மருள் அற்றனமே

அதாவது,

மிக கடினமான கர்ம ஞான பக்தி யோகம் செய்ய முடியாதவனாய் மனதில் கலக்கத்துடன் உள்ளவனை தன் திருவடிகளில் பரந்யாஸம் அனுஷடிக்க வைத்து அனைத்து பாபங்களையும் தொடராதபடி போக்கி பலன் அளிப்பதை சரமஸ்லோகத்தில் வெளியிட்டான், கண்ணபிரான். அதன் காரணமாக நிர்பரனாய் நிர் பயனாய் நிஸ்சம்சயனாய் எப்போதும் மகிழ்வுற்றிருக்கிறோம்.

இப்படி அல்ப ஸுகமும் மற்றும் துக்கங்ளோடும் கூடிய ஸம்ஸார பந்தத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டு மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத ஸுக ரூபமாக மட்டுமே இருக்கக் கூடிய பரமபதத்தை அடைய எண்ணி, சாஸ்த்ரத்தில் விதித்த சரணாகதியை ஒரு ஸதாசார்யன் மூலமாக அனுஷ்டித்த ஒரு சரணாகதன், ஸ்வ நிஷ்டையுடன் இருந்து கொண்டு இங்குள்ள காலம் செய்ய வேண்டிய செயல்களை சாஸ்த்திரப்படி செய்துவிட்டு, இந்த உடலை விட்டு விலகி பரமபதத்தை அடைந்து அங்கு அடையப் போகும் அனுபவத்தை பெற வேண்டி ஸர்வேஸ்வரனான கண்ணன் தேரோட்டியாய் நின்று அர்ஜுனனுக்கு விளக்கிய பகவத் கீதை உபதேச கடைசி வரி (18-66) சரமஸ்லோகம்.

 # ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஷுச:

என்கிறான் கீதையில் (18-66) ஸர்வேஸ்வரனான கண்ணன்.

அதாவது, 'மோக்ஷ ஸாதனமான அனைத்து வழிகளையும் விட்டு என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே' - என்கிறான் கண்ணன் அர்ஜுனனிடம்.

இந்த ஸ்லோகத்தில் கூறியதன் முக்கிய பொருள்: கடினமான பக்தி யோகத்தை செய்ய ஞான சக்தி போன்றவைகளை அற்றவன், அதனால் பக்தி யோகத்தை செய்ய முடியாமல் சோகப் படுகிறவன், பக்தி யோகத்தை விட்டு சுலபமாக, மோக்ஷத்தைப் பெற ஸர்வேஸ்வரனான கண்ணனின் திருவடிகளை பற்றி, 'சரணாகதி'யை அனுஷ்டிக்கலாம் என்றே தாத்பர்யம்.

4. இந்த சரமஸ்தோகத்தின் கருத்தை ஸ்வாமி தேசிகன், ஒரு காரிகையில் ஸங்க்ரஹிக்கிறார்:

வ்யாஸ ஆம்னாய பயோதி கௌஸதுபநிபம் ஹ்ருத்யம் ஹரே: உத்தமம் ஸ்லோகம் கேசந லோக வேத பதவி விஸ்வாஸிதார்த்தம் விது: யேஷாம் உக்திஷு முக்தி சௌத விசிகா ஸோபந பங்க்திஷு அமி வைசம்பாயந சௌநக ப்ரப்ருத்ய: ஸரேஷ்டா: சிர கம்பின:

அதாவது,

எம்பெருமானுக்கு போக்யமானதான, கடலில் உண்டான கௌஸ்துப ரத்னம் போலே, வேத வ்யாஸரின், ஐந்தாவது வேதமாகப் போற்றப்படும் மஹாபாரதத்தில் அருளப் பட்ட, கண்ணன் எம்பெருமானின் சரமஸ்லோக அர்த்தத்தை, சில பூர்வ ஆசார்யர்கள் வேத வழிகளாலும் லோக நியதிகளாலும் தெளிவு படுத்தி, சரணாகதி சாஸ்த்திரத்தை விளக்கியுள்ளனர். மோக்ஷ ஸாதனமான சரணாகதி அனுஷ்டானத்தை, எந்த ஆழ்வார்கள் முதலிய பூர்வ ஆசார்யர்களின் ஸ்ரீஸுக்திகளால் விளக்கப் படுகின்றனவோ, அதை வைசம்பாயனர் சௌநகர் போன்ற மஹரிஷிகள் தலை அசைத்து ஆமோதிக்கின்றனர்.

5. ஸ்வாமி தேசிகன் சரமஸ்லோக அதிகாரத்தில் ,

அல்பக்ஞனாய் அல்ப சக்தியாய் பரிமித காலாவர்த்தியாய் விலம்ப க்ஷமனும் அன்றிக்கே இருக்கிற உன்னாலே அறியவும் அனுஷ்டிக்கவும் அரிதாய்ப் பல விலம்பமும் உண்டாயிருக்க உபாயாந்தங்களில் அலையாதே

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

அல்பக்ஞனாய் - ஞான குறைபாடு மிகுந்தவனாக இருக்கும் சம்சாரி ஜீவன்

அல்ப சக்தியாய் - அனுஷ்டான சக்தி குறைவாக இருக்கும் சம்சாரி ஜீவன்

பரிமித காலாவர்த்தியாய் - பரிபூரண ஆத்ம ஞானத்தை பெற கால அவகாசம் அற்ற சம்சாரி ஜீவன்

விலம்ப க்ஷமனும் அன்றிக்கே - சம்சார துக்க விலகலுக்கு கால தாமதத்தை இசையாத சம்சாரி ஜீவன்

இருக்கிற உன்னாலே - என்கிற நிலையிலே உள்ள நீ

அறியவும் - பூரண ஆத்ம ஞானத்தை பெறவும்

அனுஷ்டிக்கவும் - சாஸ்த்திர விதிப் படி மோக்ஷ உபாயமான பக்தி யோகத்தை அனுஷ்டிக்கவும்

அரிதாய்ப் - செய்ய முடியாதவனாய்

பல விலம்பமும் உண்டாயிருக்க - மோக்ஷ பலன் தாமதமாய் பெறப்படுவதாய் இருக்க

உபாயாந்தங்களில் அலையாதே - அந்த பக்தி யோகத்தை அனுஷ்டிக்க முயற்சிக்காதே (அதாவது, அகிஞ்சனனுக்கு சரணாகதி அனுஷ்டானமே மோக்ஷ ஸாதனம், என்றபடி)

6. ஆக, பகவத் கீதையில் கண்ணன் அருளிய சரமஸ்லோகத்தில் 'சரணாகதி அனுஷ்டானமே சாம்சாரிக சோகத்தை போக்க வல்லது' எனும் திரண்ட பொருளை ஏற்க இயலாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

119. ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயம் ஆன்மீக ருசியை அழிக்கிறதா?

1. புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களான, பிறவிக்கு முன், உலகம் உண்டாக காரணம் போன்றவற்றை விளக்குகிறது ஆன்மீகம்.

இவ்விஷயத்தில், பல மதங்கள் இவ்வையத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு மதத்திற்கும் தேவையான அம்சங்கள் மூன்று:

அந்த கொள்கைக்கு ஆதாரமான நூல்

அந்த கொள்கையின் தத்வ நிர்ணயம் (புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயக்களில் உள்ள உண்மை நிலை, என்கிற விளக்கம்)

மதத்தை தழுவிய செயல்பாடுகள்

2. பொதுவாக, ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாய கொள்கைகளுக்கு, பல விஷயங்களில், மாறான கருத்துக்களை கொண்டதாய் இருப்பினும், பௌத்தம் ஜைனம் சீக்கியம் போன்ற மதங்களோடு ஒப்பிட்டு ஆன்மீகத்தில் வெறுப்பை, ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாயம் வளர்க்கிறது, எனக் கூற வழியில்லை ஏனெனில் பெரும்பாலானோருக்கு இதர மத கொள்கைகளில் தெளிவு கிடையாது.

3. ஆனால் வைதீக மதங்களுள், அதாவது வேதத்தை ப்ரமாணமாகக் கொண்ட மதங்களுள் உள்ள பல ஸம்ப்ரதாயங்களில், (அத்வைதம், சைவம், மத்வம் போன்றவைகளில்) இம்மாதிரி ஒரு குற்றச் சாட்டு எழுகிறதாகவே கொள்ள வேண்டும்.

ஆனால் இது உண்மைக்கு புரம்பானது, என்பது இரு விஷயங்களால் தெளியலாம்.

4. முதலாவதாக, இவ்வாறு குற்றம் சுமத்துபவர்கள், ஒரு விஷயத்தைக் கவனம் கொள்ள வேண்டும் - வைதீக மதமான, வேத மார்க்கமான கொள்கைகளை அவர்கள் நன்கு அறிந்திருந்தால் தான், ஸ்வாமி தேசிக ஸித்தாந்தம், ஆன்மீகத்தில் வெறுப்பை வளர்க்கிறது, என வாதிட முகாந்திரம் உண்டாகும். இல்லாவிடில், ஆதாரமற்ற இக்குற்றச்சாட்டுக்கு மறுப்பைக் கூட, அவர்களுக்கு விளக்க முடியாமல் போகும்.

ஓர் உலக உதாரணம் கொண்டு ஆராய்வோம் ! அதாவது,

அடிப்படை இயற்பியல் அறிவு (Basic physics knowledge) அற்ற ஒரு ஏழு வயது பாலகன், வல்லுனரான பொறியாளராக உள்ள தன் பிதாவிடம், ஆகாய விமானம் மேலே பறக்கக் காண்கிறோம்; ஆனால், கல்லை நாம் மேலை எறிந்தால் ஏன் கீழே விழுகிறது எனக் கேள்வியை அந்த பாலகன் எழுப்பினால், அந்த பிதாவிற்கு, இவ்விஷயத்தில், அடிப்படை அறிவு மலர்ச்சி அடையாத பாலகனுக்கு, புரிய வைக்க கடினமாகிறது அன்றோ!

அது போல, வேத வேதாந்த அடிப்படை அறிவு அற்றவர்கள் எழுப்பும் ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாயம் பற்றிய வெறுப்பு ஆன்மீகம் போன்ற குற்றச் சாட்டு அமையும் என உணர வேண்டும்.

வேதாந்த பயிற்சி பற்றிய தெளிவிற்காக !

முன் காலத்தில், குரு குல வாச படிப்பு முறையில் வைதீக ஆன்மீகம் கற்றவர், நான்கு வித, வேத பாடங்களை, முறைப்படி கற்றறிந்தனர். அதாவது,

கௌத்தம மஹரிஷி அருளிய ந்யாய சாஸ்த்திரம் (புலன்களுக்கு அப்பாற் பட்ட வேத விஷயங்களில், புலன்களால் அறியப் படும் ந்யாயங்களோடு வேறுபட்டிருக்கும்)

ஜெய்மிநி மஹரிஷி அருளிய மீமாம்ஸா சாஸ்த்திரம் (வேதங்களின் பத உரை)

பாணினி மஹரிஷி அருளிய வ்யாகரண சாஸ்த்திரம் (இலக்கணத்தினால் காட்டப்படும் அர்த்தம்)

வ்யாஸர் மஹரிஷி அருளிய சாரீரக சாஸ்த்திரம் (தத்வ-ஹித-புருஷார்த்த நிர்ணயம்)

இவைகளைக் கற்றறிய போதிய கால அவகாசம் நமக்கு இல்லாமையால், இதை நன்கு கற்றறிந்த நம் பூர்வாசார்யர்களான ஸ்ரீமந் நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், பகவத் ராமானுஜர் ஸ்வாமி தேசிகன் போன்ற மஹநீயர்களின் க்ரந்தங்களை அடியொற்றியே நமது ஸித்தாந்தம் நிலை படுத்தப் பட்டுள்ளது.

உதாரணமாக,

மருத்துவத்தை முழுதுமாக கற்றறிய முடியாத நாம், உடல் உபாதை காரணமாக, நல்லதொரு மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மருந்தை, ஆராய்ச்சி செய்யாமல், ஸ்வீகரிக்குமாப் போலே, முழுமையான வேதார்த்தங்களை க்ரஹிக்க முடியாத நாம், வேத மார்க்கமான பகவத் ராமானுஜ ஸித்தாந்தமான ஸ்வாமி தேசிக தர்சனத்தை பின்பற்றுவதில் குறையில்லை. இதில் ஆன்மீக வெறுப்புக்கு வழியில்லை. இது ஆன்மீக தெளிவிற்கு காரணமாகிறது.

5. இரண்டாவதாக இதைத் தொட்டு மேலொரு ஆட்சேபம் உண்டாக வாய்ப்பிருக்கிறது

அதாவது, வைதீக மதங்களில், அதாவது வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்த மதங்களில், மற்ற ஸம்ப்ரதாய வேத வித்பன்னர்களின் ஸித்தாந்தத்தை, ஸ்வாமி தேசிக ஸித்தாந்திகள், அங்கீகரிக்காமல் இருப்பது, பண்போ? இது, ஆன்மீக வெறுப்புக்கு, காரணமாகாதோ? என்பதாகும்.

இவ்விஷயத்தையும், ஓர் உலக உதாரணம் கொண்டு ஆராய்வோம் ! அதாவது,

நன்கு கற்றறிந்த இரு வழக்கறிஞர்கள், நீதி மன்றத்தில் வாதிடும் போது, கற்றறிந்த நீதிபதி தனது தீர்ப்பில், பொதுவாக ஒருவர் பக்ஷத்தை அங்கீகரித்து மற்ற பக்ஷத்தை நிராகரிக்கிறார் அன்றோ! இதில் வழக்கறிஞர்கள் பற்றின விருப்பு வெறுப்புக்கு, நீதி மன்றம், வழி வகுக்காது அல்லவா!

அது போல வேத வித்பன்னர்களாக பலர், புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆன்மீக விஷயத்தில், வைதீக மதங்கள்

அர்த்த நிர்ணயம் பண்ணும் போது,

ஒரு மதக் கொள்கை ஏற்க உகந்ததாகவும்,

மாற்று அர்த்த நிர்ணயம் நிராகரிக்க வேண்டுவதாயும்

கொள்வதில் குறையில்லே.

இதில் ஆன்மீக வெறுப்புக்கு வழியில்லை.

6. ஓர் வைதீக உதாரணத்தைக் காண்போம்.

உபநிஷத், பர தத்வத்தையும் (பரம்பொருள்) மற்றும் அவர தத்வத்தையும் (ஜீவர்களும் அறிவற்ற வஸ்துக்களையும்) கூறும்போது,

பேத ஸ்ருதி (வேற்றுமைகள்),

அபேத ஸ்ருதி (ஒற்றுமைகள்) மற்றும்

கடக ஸ்ருதி (இரண்டுக்கும் உள்ள சம்பந்தம்)

எனப் பிரிக்கிறது.

ஆதி சங்கரர் ஸித்தாந்தமாவது அத்வைதம் எனப்படுவது:

அதாவது

அபேத ஸ்ருதியை (ஒற்றுமைகளை) மட்டும் கை கொண்டு, மற்றவற்றை விட்டு ஸித்தாந்தம் செய்தனர்.

ப்ருஹ்மம் என்கிற பரம் பொருள் ஒன்றே சத்தியம்.

உலகில் உள்ள அனைத்தும், நாம் உள்பட, கனவில் தோன்றுவது போல், பொய்.

அவித்யா (மதி மயக்கம்) என்கிற தோஷத்தால் ப்ருஹ்மம், உண்மையில் இல்லாத இந்த உலகை உள்ளதாக மயங்குகிறது. இல்லாத உலக வஸ்துக்கள், அந்த பரம் பொருளுக்கு, தோற்றமளிக்கின்றன.

அத்வைத தத்த்வத்தின் சாரமாக, வேதங்களிலிருந்தும் உபநிஷத்துக்களில் இருந்தும், நான்கு அபேத வாக்யங்களைத் தனிப்படுத்தினார் சங்கரர்.

அதாவது ஈஸ்வரனுக்கும் ஜீவர்களுக்கும், அசேதநங்களுக்கும் உள்ள ஒற்றுமை வாக்யங்களைத் தனிப்படுத்தினார் சங்கரர்.

அந்த வாக்யங்களை மஹாவாக்யங்கள் என குறிப்பிட்டார் சங்கரர்.

அதை விரோதிக்கும் அனைத்து உபநிஷத் வரிகளும் அதற்கான பொருள்களும் ஏற்க தகுந்தவைகள் அல்ல, என தன் அத்வைத மதத்தை ஸ்தாபித்தார்.

மத்வர் ஸித்தாந்தமாவது த்வைதம் எனப்படுவது:

அதாவது பேத ஸ்ருதியை (வேற்றுமைகளை) மட்டும் கைகொண்டு, மற்றவற்றை விட்டு ஸித்தாந்தம் செய்தனர்.

அந்த மதத்தில் 5 வேற்றுமைகள் நிரந்தரமானவை. அதாவது,

ப்ருஹ்மத்துக்கும் (பரம் பொருளுக்கும்) ஜீவர்களுக்கும் வேற்றுமை,

ஜீவர்களுக்குள் வேற்றுமை,

ப்ருஹ்மத்துக்கும் உலகுக்கும் வேற்றுமை,

ஜீவர்களுக்கும் உலகுக்கும் வேற்றுமை மற்றும்

உலகிலுள்ள பொருள்களுக்குள் வேற்றுமை.

ஆனால், ஸ்ரீராமானுஜர் அருளிய விசிஷ்டாத்வைதத்தில் அபௌருஷேயமான உபநிஷத் வரிகளுக்குள் ஏற்ற தாழ்வு கிடையாது, என அருளினார்;

அனைத்து உபநிஷத் வரிகளும் சம வலிமை கொண்டனவே என அருளி, பேத ஸ்ருதி (ஒற்றுமைகள்) மற்றும் அபேத ஸ்ருதி (வேற்றுமைகள்) இரண்டையும் கடக ஸ்ருதியைக் (சம்பந்தம்) கொண்டு இணைத்து,

இதி ஸர்வம் ஸமஞ்சஸம்

அதாவது 'இவ்வாறு முரண்பாடுகள் களையப் பட்டது'

என தனது ஸ்ரீபாஷ்யத்தில் உறுதி செய்தார்.

உபநிஷத் வரிகளில் முரண்பாடுகள் இல்லாத வகையில், ஜீவர்களுக்கும் ப்ருஹ்மத்திற்கும் (பரம் பொருளுக்கும்) உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, சரீர - பரமாத்ம சம்பந்தம் கொண்டு விளக்கி அருளினார், பகவத் ராமானுஜர்.

ஆதலால், ஸநாதன தர்மத்தில் ப்ரமாணமாக ஏற்கும் வேத வேதாந்தமான உபநிஷத் வரிகளுக்கு, தம் இச்சை காரணமாக, சில வரிகளை அங்கீகரிப்பதும் வேறு சிலவற்றை விட்டுவிடுவதும், ஸத்

ஸம்ப்ரதாய கொள்கைகளுக்கு, அதாவது வேத மார்க்கம் என்பதற்கு, விரோதம் என ஸ்ரீ ராமானுஜர் ஸித்தாந்த ஸ்தாபனம் செய்தார்.

7. ஸ்வாமி தேசிகன், பகவத் ராமானுஜரின் க்ரந்தங்களை அடியொற்றியே, ஸித்தாந்த நிர்வாகம் செய்தார். இது மற்ற வைதீக மதங்களோடு மாறு பட்டு இருப்பதனால், இது ஆன்மீக வெறுப்புக்கு காரணம் எனக் கூறலாகாது.

மற்ற வைதீக மதஸ்தர்களால், ஸ்வாமி தேசிக ஸத் ஸம்ப்ரதாய வழியை, மாற்றி நிர்வஹிக்க முயற்சி உண்டாகும் போது, ஸ்வாமி தேசிகனின் க்ரத்த வரிகளைக் கொண்டே அந்த முயற்சியின் உள் நோக்கத்தை வெளிக்காட்டுவது, வெறுப்பினால் அல்ல; ஸ்வாமி தேசிக அபிமானிகள், ஸ்வாமி தேசிகனிடம் கொண்ட அளவு கடந்த ப்ரதிபத்தியே காரணம்.

தான் பின் பற்றாத மதங்களை மாற்றி அமைக்க நினைப்பது வெறுப்பின் நிலைபாடு; அவரவர்கள் மதத்தில் உள்ள நிலைபாடுகளை, அவரவர்களின் க்ரந்தங்களைக் கொண்டு தெளிவிப்பது, வெறுப்பினால் அல்ல, எனத் தெளிய வேண்டும்.

ஆக, ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாய காலக்ஷேபத்தினாலேயே, ஸத் ஸம்ப்ரதாய நிலை விளங்கும். ஜீவ உஜ்ஜீவனத்திற்கு ஹேதுவாகும். பிறரால், ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாய வழிகள் மாற்றப்படும் போது, அதைத் தடுக்க வகை செய்யும். இது வெறுப்பினால் ஏற்படுவது அல்ல.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

120. <u>என் கண்ணனைக் கண்ட கண்கள் - பூமாதிகரணம்</u>

1. உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்** , பகவத் ர்மானுஜரால் ஸ்ரீ பாஷ்யம் எனும் க்ரந்தத்தில் விளக்கப் பட்டுள்ளது.

உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்** வரி:

நாநா சப்தாதி பேதாத்

என்கிறது.

அதாவது, முமுக்ஷு அநுஷ்டிக்க வேண்டிய **ப்ருஹ்ம வித்யைகள்** 32 வகைகளைக் கொண்டது. அந்த **ப்ருஹ்ம வித்யைகள்** (உபாஸனமாகிய பக்தி யோகம்) அநுஷ்டிக்கும் போது, எம்பெருமானின் ஸ்வரூப நிரூபக தர்மங்களோடு அவனுடைய மற்ற கல்யாண குணங்களையும் த்யானம் செய்ய வேண்டுவதாகிறது.

அந்த உபாஸனம் (பக்தி யோகம்) பல விகல்பங்களை உடையது. அதாவது, ஸத் வித்யை, தஹர வித்யை, மது வித்யை போன்றவைகள்.

அந்த உபாஸனம் (பக்தி யோகம்) என சொல்லப்படுவதில் ஏதேனும் ஒன்றை தன் இச்சை அடியாக தேர்வு செய்து அநுஷ்டிக்க வேண்டுவதாகிறது.

அந்தந்த தேர்வு செய்யப் பட்டு அநுஷ்டிக்கிற பக்தி யோகத்திற்கு, எம்பெருமானின் ஸ்வரூப நிரூபக தர்மங்களோடு அவனுடைய தேர்வு செய்யப்பட்ட பக்தி யோகத்தல், அதற்கு குறிப்பிட்ட கல்யாண குணங்களை த்யானிக்க வேண்டுவதாகிறது.

உபநிஷத் சாரமான வேதவ்யாஸர் அருளிய **ப்ருஹ்ம ஸூத்ரம்** வரி:

விகல்ப: அவிஸிஷ்ட பலத்வாத்

என்கிறது.

அதாவது, ஸகல ப்ருஹ்ம வித்யைகளுக்கும் மோக்ஷ பலன் ஒன்றே.

2. பகவத் ராமானுஜரின் ஸ்ரீபாஷ்யம் - **பூமாதிகரணம்** (அத்யாயம.1- பாதம். 3- அதிகரணம் 2) : பூம வித்யை என்பது சாந்தோக்ய உபநிஷத் விஷயம்.

இப்போது சொல்லப்படுகிற பூம வித்யை, நாரதருக்கும் - சநத்குமார்ருக்குமான சம்வாதம். நாரதர் ஸர்வஜ்ஞராக இருந்தாலும, நம் போன்றவர்களின் மேன்மையைக் கருதி கேட்க்கப்பட்ட நாரதருடைய பிரச்நத்துக்கு, உத்ரமாக இந்த வித்யை அமைகிறது .

பகவந் நாமங்கள் சப்த ரூபமானவை. அவை பாபங்களை அழிக்க வல்லது. அவைகளை உச்சரிக்கக் கூடிய வாக் இந்திரியம் உயர்தது. வாக் இந்திரியத்தை நியமிக்கக் கூடிய மனஸ் , வாக் இந்திரியத்தைக் காட்டிலும் உயர்ந்தது சங்கலபம். சங்கல்பத்தைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்தது சித்தம். சித்தத்தை காட்டிலுமு சிரேஷ்டமானது தியானம், அன்னம், ஆப: , வாயு, ஆகாசம் இப்படி ஒன்றைக்காட்டிலும் மற்றது உத்கிருஷ்டமானது என்று சொல்லிக் கொண்டுபோய், முடிவில்,

யோவை பூமா தத்ஸுகம்

என்பதாக முடிக்கிறது.

அப்படி எல்லாவற்றைக் காட்டிலும் சிறந்தது பூமா என்பதற்கு தாத்பர்யம் ஆத்மாவா? பரமாத்மாவா? என்பது கேள்வி.
இந்த, அதிகரணத்துக்கு விஷயம், பூமா அதாவது, சத்ய சப்த வாச்யமான வஸ்து பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன்தான் என்பது சித்தாந்தம்.

3. சாந்தோக்ய உபநிஷத்,

யோவை பூமா தத் ஸுகம். யத்ர நாந்யத் பச்யதி. நாந்யத் ஸ்ருணோதி. நாந் யத் விஜாநாதி. ஸ பூமா

என்கிறது

இதையே விஷய வாக்யமாகக் கொண்டு, வேதவ்யாஸர் ப்ருஹ்ம ஸூத்ரத்தில்

பூமா ஸம்ப்ரஸாதத்யுபதேஷாத்

என அருளியிருக்கிறார்.

அதற்கு ஸ்ரீராமானுஜர் தனது ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கம் அருளியுள்ளார்.

அதாவது, எல்லையற்றதுமான, மிகச் சிறந்ததுமான, ஆனந்த ரூபமான ப்ருஹ்மத்தை (ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை), அவனது குணங்களோடும் ஐஸ்வர்யங்களோடும், அநுபவிக்கும் போது அநுபவிப்பவன் வேறொன்றையும் காண்கிறதில்லை; கேட்பதில்லை; அறிகிறதில்லை.

காரணம், ஸர்வேஸ்வரனை ஆத்மாவாக கொள்ளாத (ப்ருஹ்மத்தின் ஆதிக்கத்தில் இல்லாத) பொருட்கள் எங்கேயும் கிடையாதபடியால் !

அநுகூலமாய் உள்ள அனைத்தும் ஸுகத்தை கொடுக்கக்கூடியது. அதனால், மேலும் ப்ருஹ்மத்தை விட உயர்ந்த ஸுக அநுபவம் வேறொன்றும் இன்மையால், முக்தன் வேறொன்றையும் காண்கிறதில்லை.

4. ஸ்வாமி திருப்பாணாழ்வார், அமலனாதிபிரான் (10) :

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை அண்டர் கோன் அணி அரங்கன் என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே.

அதாவது,

ஸர்வருக்கும் ஸ்வாமியாய், ஆதாரமாய், நியந்தாவாய் இருக்கும், சக்ரவர்த்தி திருமகனுக்கே ஆராத்ய தெய்வமான அரங்கன், ஸௌலப்யத்தால் வெண்ணை திருடியவனாக அவதரித்தாலும், அவனே பரதத்வம் என்கிற எண்ணம் என் நினைவில் இருந்து எப்போதும் நீங்காது.

 # பத உரை :

கொண்டல் வண்ணனை - காளமேகம்போன்ற வடிவையுடையனும்

கோவலன் ஆய் வெண்ணெய் உண்டவாயன் - கோபால குமாரனாகப் பிறந்து வெண்ணெயமுது செய்த திருவாயை யுடையனும்

என் உள்ளம் - என்னுடைய நெஞ்சை

கவர்ந்தானை - கொள்ளை கொண்டவனும்

அண்டர் கோன் - நித்யஸூரிகட்குத் தலைவனும்

அணி அரங்கன் - (பூமண்டலத்துக்கு) அலங்காரமான திருவரங்கத்தில் கண்வளர்ந்தருள்வபனும்

என் அமுதினை - எனக்குப் பரமபோக்யமான அம்ருதமாயிருப்பவனுமான அழகிய மணவாளனை

கண்ட கண்கள் - ஸேவிக்கப்பெற்ற (பரமபத நாதனையும்)

மற்றொன்றினைக் - வேறொன்றையும்

காணா - .காணமாட்டா

சாந்தோக்ய உபநிஷத்தில், வரும் பூமா விஷயத்தை, ஆழ்வார் பாசுரத்தில் அருளியுள்ளார்.

என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே

அதாவது, ஸர்வ சேதன அசேதன வஸ்துக்களும் எம்பெருமானை ஆத்மாவாகக் கொண்டது; ஆக, ப்ருஹ்மாத்மகம் அல்லாத வஸ்துக்களே இல்லாதபடியால், **என் அமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே** , என்றபடி.

என அருளினார்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

121. <u>சரணாகதனுக்கு அர்ச்சாவதார கைங்கர்யம்</u>

1. அர்ச்சாவதாரத்திற்கே கைங்கர்யம் புரிதல் சரணாகதனுக்கு உத்தரக்ருத்யம் :

ஒரு முமுக்ஷுவானவன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, இங்குள்ள கோவில்களில் ஆகம சாஸ்த்ரப்படி அமைத்த அர்ச்சா ரூப மூர்த்திக்கு (க்ருஹத்தில் உள்ள சாளக்ராம பெருமாளும் அர்ச்சா ரூப மூர்த்தி தான்), கைங்கர்யம் செய்வது உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அநுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய 5ம் பத்து 8ம் திருவாய்மொழி கடைசியில்,

விண் மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடற்சேர்ப்பாய்! மண் மீது உழல்வாய்! இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்! எண்மீதியன்றபுற வண்டத்தாய்! எனதாவி உள்மீதாடி உருக்காட்டாதே ஒளிப்பாயோ?

என உள்ளது.

அதாவது,

விண்மீதிருப்பாய் – பரத்வம் - இது நித்தியவிபூதியில் உள்ள பர வாஸுதேவன்

கடல் சேர்ப்பாய் – வ்யூஹம் - என்பது வாஸுதேவ, சங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தன்

மண்மீது உழல்வாய் – விபவம் - என்பது எம்பெருமானின் அவதாரங்களாம்.

மலைமேல் நிற்பாய் – அர்ச்சை - என்பது கோவில்களில் உள்ள எம்பெருமானின் திருவுருவங்களாம்

மறைந்துறைவாய் – அந்தர்யாமி - என்பது எம்பெருமான் அனைவருக்கும் உள்ளிருந்து நியமிப்பவன்'

என்கிற அர்த்தம் கொண்டது இப்பாசுரம்.

3. பௌஷ்கர ஸம்ஹிதா வரி:

நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்

அதாவது,

எவன் ஒருவன் எண்ணத்தில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திருமேனி விஷயத்திலும், அந்த ஸ்ரீமந் நாராயணன் தான் பரம் பொருள் என்ற விஷயத்திலும் தெளிவான ஞானம் இருக்கிறதோ அவன் அருகில் ஸர்வேஸ்வரன் வந்து நல்வழி நடத்துகிறான்.

4. விஷ்வக்ஸேந ஸம்ஹிதா வரி:

ஸர்வாதிஷாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மந்த்ர பிம்பயோ: மந்த்ரே வாச்யத்மனா நித்யம் பிம்பே து க்ருபயா ஸ்திதம்

அதாவது,

மந்த்ரங்களினால் சொல்லப் படுகிற பரவாஸுதேவனுக்கான ஷாட்குண்யம் (ஆறு குணங்கள்), **மந்திர பிம்பமான** அர்ச்சா ரூபத்திலும் உள்ளன.

அது ஆவன: ஞானம் (அனைத்தையும் எப்போதும் அறிபவன்), பலம் (ஸர்வத்தையும் தாங்குபவன்), ஐஸ்வர்யம் (அனைத்தையும் நியமிப்பவன்), வீர்யம் (மாறுதல் அற்றவன்), சக்தி (மிக எளிதாக எதையும் செய்வபவன்), தேஜஸ் (கண்டவுடன் வணங்கச் செய்பவன்).

5. அர்ச்சா மூர்த்தியான எம்பெருமான், **மந்த்ர பிம்பம்** எனப் படுவதால், பகவத் ஸாந்நித்யம், அர்ச்சாவதார மூர்த்திக்கு, மந்த்ர அநுஷ்டானங்களினால் ஏற்படுகிறது.

கோவில்களில் உள்ள பெருமாள், ஆழ்வார் ஆசார்யர்கள் பாகவதர்களால் மங்களாசாஸனம் செய்யப் பட்டிருப்பதால் அப்பெருமானுக்கு ஸாந்நித்யம் அதிகம்.

6. கோயிலுக்கு எழுந்தருளும், ஞான அநுஷ்டான சீலர்களான மகான்கள் துதிக்கும் துதிகளால் பகவத் ஸாந்நித்யம் பெருகும், என்கிறது சாஸ்த்திரம்.

அதே சமயம் அங்கே வரும் பக்தர்களின் குணங்கள், மாறுபட்ட நடத்தைகள், அவர்களால் ஏற்படும் தீட்டுக்கள் போன்றவைகளால், அர்ச்சா மூர்த்திகளின் பகவத் தன்மை அகன்று விடும், என்பதும் சாஸ்த்திர விளக்கம்.

அவைகளை சரி செய்து அர்ச்சா மூர்த்திகளின் ஸாந்நித்யம் குறையாமல் இருக்க **பவித்ரோத்ஸவம்** அனைத்து கோவில்களிலும் கொண்டாடப் படுகிறது.

லோக க்ஷேமம் கருதி வருடம் தோரும் செய்யப்படுவதுதான் புனிதப்படுத்தும் **பவித்திர உத்ஸவம்**

7. தற்போது, ஒரு சில கோவில்களில் பல விதமான எச்சில், தீட்டு போன்றவையும், பெருமாளைத் தொட்டு கைங்கர்யம் செய்து போகும் அர்ச்சகர்களிடம் தேவதாந்தர ஸம்பந்தத்தையும், பரவலாகக் காண முடிகிறது.

இதனால், கோவில்களில் பகவத் ஸாந்நித்யம் இழக்கக் கூடும்.

ஆனால், க்ருஹங்களில் உள்ள சாளக்ராம பெருமாளுக்கு, இந்த மாதிரியான அநாசாரம் கலசாத கைங்கர்யங்கள் ஸித்திப்பதால், அந்த பெருமாளிடம் செய்யப் படும் கைங்கர்யம், தற்காலத்தில் சிறந்தது எனக் கூறக் குறையில்லை.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

122. <u>முழுக்ஷுவானபோதும் ஸாத்யோபாயம் சிலருக்கு ஏன் ஸித்திப்பவில்லை?</u>

ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய மோக்ஷ ஸாதனமான ஸாத்யோபாயத்தை ஏற்க இயலாது என்பர் சிலர்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. **ஸித்தோபாயனான** ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய **மோக்ஷ ஸாதனமான ஸாத்யோபாயத்தை** ஏற்க இயலாது என ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

பலனை அடைய காரணமாய் இருப்பது **உபாயம்**

அது,

ஸித்தோபாயம் என்றும்

ஸாத்யோபாயம் என்றும்

இரு வகைப் படும்.

ஸித்தோபாயமாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், பலனை அளிப்பதற்கு ஸித்தமாக (தயார் நிலையில்) இருப்பதை குறிக்கிறது.

ஸாத்யோபாயமாவது, பலனை பெற வேண்டுபவர்கள், அதைப் பெறுவதாற்காக, சாஸ்த்திரத்தினால் விதிக்கப் பட்ட, செய்ய வேண்டிய செயல்.

சாஸ்த்திரத்தில், ஸம்ஸாரி ஜீவர்கள் மோக்ஷ பலனை அடைவதற்கு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை

ஸித்தோபாயமாகவும்,

பக்தி யோகம் அல்லது **சரணாகதி அநுஷ்டானத்தை**

ஸாத்யோபாயமாகவும்

கூறுகிறது.

2. ஸ்ரீராமானுஜர் ஒரு பங்குனி உத்திர நன்னாளில் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் தாயார் சேர்த்தியில் சரணாகதியை அநுஷ்டித்துள்ளார்.

இதையே, சரணாகதி கத்யம் என்ற ஒரு உரையாடலாக ஸ்ரீ ராமானுஜரால் அருளப் பட்டது.

பாராமார்த்திக பகவத் சரணாரவிந்தயுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஞான பரம்பக்தி க்ருத பரிபூரண அநவரத நித்ய விஷததம அனன்யப்ரயோஜன அநவதிகாதிஷயப்ரிய பகவதனுபவ ஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரிதா அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதி ரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபேக்ஷயா பாரமார்திகி பகவத் சரணாரவிந்த சரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே

என பிராட்டியிடம், மோக்ஷ காரணமாக திவ்ய தம்பதிகளிடம் தனக்கு சரணாகதி அநுஷ்டானம் ஸித்திக்க வேண்டும் என புருஷகார ப்ரபத்தி செய்து போக,

அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே

என்று தாயாரால் அந்த சரணாகதி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. அதாவது சரணாகதி அநுஷ்டானத்திற்கு தடையான உபாய விரோதியான பாபங்கள் நீங்கப் பெறுவாய் என அநுக்ரஹித்தாயிற்று.

அவ்வரிகள் சரணாகதி கத்யத்தில் உள்ளன.

3. ஸித்தோபாய ஸாத்யோபாய விஷயங்கள், ஐந்தாவது வேதமாக போற்றப் படும், மஹாபாரத வன பர்வாவிலும் ப்ரஸித்தம்.

ஸர்வேஷாம் எவ லோகானாம் பிதா மாதா ச மாதவ: கச்சத்வமேனம் சரணம் சரண்யம் புருஷர்ஷப:

அதாவது,

லக்ஷ்மீபதியான எம்பெருமானே தாயும் தந்தையுமாக சரண்யர்கள். பாண்டவர்களே ! ரக்ஷகனான அவர்களிடம் சரணம் அடைந்தே பலனைப் பெறுங்கள்.

ஆக, ஸித்தோபாய ஸாத்யோபாய விளக்கங்கள் தெளிவாகின்றன.

4. முமுக்ஷுவாக இருந்தாலும், பிராட்டியோடு கூடிய எம்பெருமானே ஸித்தோபாயம் என்றும் அவன் விதித்த ஸாத்யோபாயமே மோக்ஷ காரணம் எனபதில் தெளிவு உண்டாகாமல் இருப்பதற்கு மூன்று காரணங்கள்:

திருமுகப் பாசுரம் இல்லாமை - சரணாகதி அநுஷ்டானம் ஸித்திக்க பிராட்டி அநுக்ரஹம் இல்லாமை

ஸதாசார்ய அநுக்ரஹம் இல்லாமை - தத்வ தர்சினிகளான வேத மார்க்கமான பகவத் ராமானுஜ ஸித்தாந்த வழி வந்த ஆசார்ய அநுக்ரஹம் இல்லாமை

ஸத் ஸம்ப்ரதாய ஸித்தி இல்லாமை - முமுக்ஷுவே ஆனாலும், பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்த விஷயங்களில் ஸ்ருதி வாக்ய அநுகுணமான ஸம்ப்ரதாய சம்பந்தம் அற்று இருக்கை

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

இவ்வர்த்தங்களில் ஞாதவ்யமான ஸித்தோபாயத்தைப் பற்றவும் ஸாத்யோபாய விஷயமாகவும் இவ்வுபாய ப்ரபாவ விஷயமாகவும் கர்ம வச்யருக்கு கடுகத் தெளிவு பிறவாமைக்கு ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன் இவர்களுடைய பூர்வ அபராதத்தாலே இட்ட நினைப்பு ஈடு மாறுகைக்கு ப்ரதான காரணம் மூன்று உண்டு

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இவ்வர்த்தங்களில் - பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்த விஷயங்களில்

ஞாதவ்யமான - அறிய வேண்டுவதான

ஸித்தோபாயத்தைப் பற்றவும் - பலனளித்து உபாயமாள உள்ளவனைப் பற்றியும்

ஸாத்யோபாய விஷயமாகவும் - பலனைப் பெறுபவன் அதை அடைவதற்காக விதிக்கப் பட்ட ஒரு செயலைச் செய்ய வேண்டுவதைப் பற்றியும்

இவ்வுபாய ப்ரபாவ விஷயமாகவும் - இவை இரண்டிற்கும் உள்ள ஏற்றமும்

கர்ம வச்யருக்கு - சம்சாரி ஜீவர்ளுக்கு (முமுக்ஷுவாகவே இருந்த போதும்)

கடுகத் தெளிவு பிறவாமைக்கு - உடனே தெளிவு உண்டாகாமைக்கு

ஸ்வதந்தரனான ஸர்வேஸ்வரன் - அனைவரையும் தன் இச்சைப்படி நியமிக்க ஆற்றல் கொண்ட எம்பெருமான்

இவர்களுடைய பூர்வ அபராதத்தாலே - இந்த முமுக்ஷுவான சம்சாரி ஜீவர்களின் ப்ராரப்த பாபத்தாலே

இட்ட நினைப்பு - இந்த ஜீவன் சாஸ்த்திர உபாய விஷயத்தை உள்ளபடி அறியக் கூடாது எனும் பகவத் ஸங்கல்பம்

ஈடு மாறுகைக்கு - மாறுவதற்கு

ப்ரதான காரணம் மூன்று உண்டு - முக்கிய அம்சங்கள் மூன்று (தேவையானவை இல்லாமை - திருமுகப் பாசுரம், ஸதாசார்ய அநுக்ரஹம்ஸதாசார்ய அநுக்ரஹம், ஸத் ஸம்ப்ரதாய ஸித்தி)

6. ஆக, ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய மோக்ஷ ஸாதனமான ஸாத்யோபாயத்தை ஏற்க இயலாது என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

123. முமுக்ஷுவுக்கு எங்கும் திருவருள் பெற்று இன்புற்று இருக்க ப்ராப்தம்

1. திருப்பாவைக்கு அப்படி என்ன விசேஷம்?

ஒரு நூலின் விசேஷத்தை அதன்,

வக்த்ரு வைலக்ஷ்ண்யம் - அதாவது, 'நூலை இயற்றியவரின் பெருமை',

க்ரந்த வைலக்ஷ்ண்யம் - அதாவது, 'நூலின் பெருமை',

விஷய வைலக்ஷ்ண்யம் - அதாவது, 'அதன் பொருளின் பெருமை'

கொண்டே தீர்மானிக்க வேண்டும்.

‘திருப்பாவையை’ அருளிச்செய்த கோதையின் சீர்மை, திருப்பாவையின் சீர்மை, அதன் பொருளின் சீர்மை இவற்றைப் பார்ப்போம்:

 # வக்த்ரு வைலக்ஷ்ண்யம் (கோதையின் சீர்மை)

இந்நூலை இயற்றிய ஆண்டாளின் சீர்மை யாதெனில் ‘அஞ்சுகுடிக்கொரு சந்ததி’ அவள்.

அதாவது எம்பெருமானுக்கு என்ன நேரிடுமோ என்று அஞ்சி அவனுக்கே ‘பல்லாண்டு’ பாடிய பெரியாழ்வாரின் திருமகள்.

 # க்ரந்த வைலக்ஷ்ண்யம் (திருப்பாவையின் சீர்மை)

ஆண்டாள் அருளிய நூலின் ஏற்றம் என்னவென்றால்,

வேதங்கள் கடினமான தேவபாஷையான சம்ஸ்க்ருதத்தில் அமைந்திருக்கின்றன.

ஆனால் ஆண்டாள் அருளிய நூல்கள், உலகியல் மொழியான செந்தமிழில், அனைவருக்கும் உரியதாய் செந்திறத்த தமிழோசை என்று கொண்டாடப்படுவதாய், எளிய இன்தமிழில் அமைந்திருப்பதாய் இருப்பதால், வேதங்களைக் காட்டிலும் உயர்ந்ததாக கருதப் படுகிறது.

மற்றைய ஆழ்வார்களின் அருளிச்செயல்களான பெரிய திருமொழி, திருவாய்மொழி, பெரியாழ்வார் திருமொழி போல ஆயிரம், ஐந்நூறு என்றில்லாமல், அதே சமயம் திருப்பாணாழ்வாரின் அமலனாதிபிரான் போல மிகவும் சுருக்கமாகவும் இல்லாமல் பாடல்களில் அமைந்திருக்கிறது கோதைப் பிராட்டியின் நூல்.

மற்றைய ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் தமிழில் அமைந்திருந்தாலும், பல இடங்களில் பொருள் புரிவது சிரமம். அதோடு அவைகள் நாம் அறிய வேண்டிய அர்த்தங்கள் எல்லாவற்றையும் சொல்லாமல் சிலவற்றை மட்டுமே கூறும்.

ஆனால் திருப்பாவையின் முப்பது பாடல்கள் ‘வேதமனைத்துக்கும் வித்தாக’ இருந்து நமது ‘பாதகங்களைத்’ தீர்த்து, நமக்குப் ‘பரமனடியைக்’ காட்டுவதாக உள்ளது.

 # விஷய வைலக்ஷ்ண்யம் (அதன் பொருளின் சீர்மை)

தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவையே இந்த வாழ்வின் பயன் என்று சொல்லப்பட்டாலும் மற்ற சாதாரண நூல்களைப் போல முதல் மூன்று பலன்களைப் பற்றிப் பேசாமல், மோக்ஷம் பற்றி பேசுகிறது, திருப்பாவை.

உனக்கே நாமாட் செய்வோம்

என்று பரம பிரயோஜனம் என்று சொல்லப்படும் பரனான எம்பெருமானுக்கே பிரயோஜனமான பரம புருஷார்த்தத்தைப் பேசுகிறது.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கும், உயிர்களுக்கும் உள்ள உறவை விளக்குகிறது.

அர்த்த பஞ்சகமான **உயிர்நிலை** (ஜீவர்கள்), **இறைநிலை** (ஸர்வேஸ்வரன்), **நெறிநிலை** (உபாயம்), **ஊழ்வினை நிலை** (பலனுக்கான விரோதி), **வாழ்நிலை** (பலன்) பற்றியும் தெளிவாக விளக்குகிறது.

அவனின்றித் தான் வாழ இயலாது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திப் பாடுகிறாள்; அவனை மணந்து கொண்டு வாழ்வதாக இனிய கற்பனை செய்கிறாள்; பரம புருஷார்த்தமாகிய, பகவத் கைங்கர்யத்தை, அருளிச் செய்கிறான்.

அதனால், ஸம்ஸ்க்ருத வேத சாரத்தை, தமிழில் நன்கு உணர்த்திய நூலுக்கு ஏற்றம்; அதனை அருளிய கோதை நாச்சியாரான ஆண்டாளுக்கு ஏற்றம்; அந்த ஆண்டாளின் மநோரதத்தை பூர்த்தி செய்த யதிராஜருக்கு எற்றம்.

2. அதனால் தான் பட்டர், பூமி பிராட்டியான கோதை நாச்சாயாரின், திருப்பாவை எனும் நூலின் மேன்மையை இவ்வாறு வ்யவஹரித்தார்:

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் வேதமனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ் ஐயைந்தும் மைந்தும் அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு

என அருளினார்.

அதாவது, திருப்பாவையானது, சம்சாரி ஜீவர்களின் உஜ்ஜீவனத்திற்கு பெரிதும் பயன் படும்.

பாதகங்கள் தீர்க்கும் - ஒரு சரணாகதி அநுஷ்டானத்தினால், சம்சாரத்திற்கு காரணமான கரம்மாக்களை அடியோடு அகலும்.

பரமனடி காட்டும் - பகவத் கைங்கர்யமான பரம புருஷார்த்தத்திற்கு வழியான சரணாகதி அநுஷ்டானத்தை விளக்கும்.

வேதமனைத்துக்கும் வித்தாகும் - சாஸ்த்திர வழியிலேயே, ஆண்டாளின் திரு தமையனாகிய பகவத் ராமானுஜர் அநுக்ரஹித்த க்ரந்த வழியிலே, பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்தத்தை, அதாவது வேதத்தின் மையக் கருத்தை, விளக்குவதாகும்.

கோதைதமிழ் ஐயைந்தும் மைந்தும் அறியாத மானிடரை - 30 பாசுரங்களைக் கொண்ட கோதையின் திருப்பாவையை அறியாதவர்கள்

வையம் சுமப்பதும் வம்பு - இந்த மாயப்ரபஞ்சத்தில் மீள முடியாத துக்க அநுபவங்களோடு இருந்தே தீருவர்.

3. ஆண்டாள் பாசுர சாஸ்த்ரீயமான விளக்கம் :

 # மாமாமயன் மாதவன் வைகுந்தன் என்று என்பதால் **பரதத்வம்** விளக்கப் படுகிறது; **மாமாயன்** எனும் பதம் ஸர்வேஸ்வரனுடைய லீலா விபூதி நிர்வாஹத்தையும், அதனால் அவனுக்கு உண்டாகும் லீலா ரஸமும், **மாதவன்** என்பதனால் பிராட்டியோடு கூடியே அவனது பர தத்வ விசேஷமும்,, **வைகுத்தன்** என்பதால் அமரர்க்கு அதிபதியாக அவனது போக ரஸமும், கொண்டவனாக, அவனது பரதத்வ விசேஷம் விளக்கப் படுகிறது.

நாராயணனே நமக்கே பறை தருவான் என்பதால் ரக்ஷக ப்ரார்த்தனையான **பரம ஹிதம்** விளக்கப் படுகிறது.

திருவருள் பெற்று என்பதால் இஷ்ட ப்ராப்தியான **பரம புருஷார்த்தம்** விளக்கப் படுகிறது.

4. ஆண்டாளின் கடைசி பாசுரமான **வங்க கடல் கடைந்த** எனும் திருப்பாவையில், இவ்விஷயங்களைக் கூறி நிறைவாகிறது:

வங்கக் கடல் கடைந்த - முமுக்ஷுக்களுக்கு அமிர்தமாகிற மோக்ஷ பலனை அளிக்க ஸஹஜ ஸுக்ருதான எம்பெருமான்

மாதவனை - அகலகில்லேன் என்று உபாய உபேய தசைகளில் பெரிய பிராட்டியை பிரியாத எம்பெருமான்

கேசவனை - சதுர்முகன், ருத்ரன் போன்றவர்களின் ஸ்ருஷ்டி தொடக்கமான ஜகத் காரணனான எம்பெருமான்

திங்கள் திருமுகத்து சேய் இழையார் - ஸத்வ குணம் மேலிட்டு, அதற்கு அநுகுணமான பண்புகள் நிறைந்த சரணாகதர்கள்

சென்று இறைஞ்சி - உயர்ந்த பலனிற்காக கோப்த்ருத்வரணமாகிற ப்ரார்த்தனையோடு சரணாகதி அநுஷ்டானத்தை சாஸ்த்திர விதிப்படி, திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் அநுஷ்டிக்க

அங்கப் பறை கொண்ட ஆற்றை - பரம்பதத்தில் பெறக் கூடிய பரம புருஷார்த்தத்தை,

அணி புதுவைப் - ஸ்ரீவில்லிபுத்தூரில் பூமிப் பிராட்டியின் அவதாரமான,

பைங்கமலத் தண் தெரியல் பட்டர் பிரான் - குளிர்ந்த மலர் மாலையை, ஸத்வ குண ப்ரதிநிதியாக அணிந்திருக்கிற பெரியழ்வாரின், அதாவது தனக்கு கிடைத்த ஸதாசார்யனாக பெரியாழ்வாரை கருதி,

கோதை - கோவிந்தனையே ப்ராபகமாகவும் ப்ராப்யமாகவும் நினைத்திருக்கும் கோதையானவள்

சொன்ன சங்கத் தமிழ் மாலை முப்பதும் - பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்தத்தை, சாஸ்த்திரப் படி, சம்சாரி ஜீவர்கள் உஜ்ஜீவனத்தை காரணமாகக் கொண்டு அருளின

தப்பாமே - பர தத்வ, பரம ஹித, பரம புருஷார்த்தத்தை சம்சயம் விபர்யயம் அன்றி மோக்ஷ உபாயம் (சரணாகதி) அநுஷ்டித்தவர்களுக்கு,

இங்கு - சம்சார தசையிலேயே (மோக்ஷ தசைக்கு முந்தியே)

இப்பரிசுரைப்பார் - எம்பெருமான், சம்சாரி ஜீவர்களுக்கு, ஸ்வரூப ப்ராப்தமான பலனை அளித்தருள்வான்.

ஈரிரண்டு மால் வரைத்தோள் - சரணாகத ரக்ஷணத்திற்கு தேவையான நான்கு குணங்களை பூரணமாகக் கொண்ட எம்பெருமான்

பரத்வம் - தான் செய்ய மற்றவர் ஒருவராலும் தடுக்க முடியாத தன்மை

வாத்ஸல்யம் - தன் அடியார்களின் குற்றத்தைப் பாராமல் ஏற்றுக் கொள்வது

ஸௌசீல்யம் - குற்றமே ஸ்வரூபமாக உடைய சம்சாரி ஜீவர்களையும், குற்றமற்ற நித்ய முக்தர்களைப் போல் நேசிப்பது

ஸௌலப்யம் - மஹா யோகிகளுக்கும் எளிதில் கிடைக்கப் பெறாத தன்னை சரணாகதர்களுக்கு நிபந்தனையின்றி கொடுத்தருள்வது

 # செங்கண் திருமுகத்து - எம்பெருமனின் கண்கள் அவனது கருணைக்கு வெளிப்பாடாக பல இடங்களில் அவன் ஸ்வரூபத்தை வர்ணிக்கும் போது கூறப் படுகிறது.

குளிர்ந்த தாமரையை ஒத்த கண்கள் ஸர்வேஸ்வரனான நாராயணனின் கண்கள் என்பதே சாந்தோக்ய உபநிஷத்தின்

தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவ அக்ஷிணி

என்பதின் பொருள்.

ஆண்டாளும், கண்ணனது கருணை பொழியும் கண்களை, திருப்பாவையில் பல ப்ரகாரங்களில் அருளினாள் :

(கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான், சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணானை, செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ, திங்களும் ஆதித்தனும் எழுந்தாற் போல் அங்கண் இரண்டும்..போன்றவை)

 # செல்வத் திருமாலால் - பரமன் ஆன பிராட்டியோடு கூடிய எம்பெருமான், (அளவிட முடியாத ஐசுவர்யங்களையும், அடியார்கள் பால் பேரன்பும், கருணையும் உடையவர்கள்) தங்களது ஸித்தோபாய அருளால்

 # எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் - இங்கும் அங்கும் எங்கும் திவ்ய தம்பதிகளின், மற்றும் அவர்களின் அடியார்களின், கைங்கர்யமாகிற பரம புருஷார்த்தத்தை பெற்று இருப்பர்.

4. இதனால், வேத சாரத்தை அருளிய ஆண்டாள் திருவுள்ளத்தை தெளிவாக அறிய வேண்டுவதாவது:

திருமாலான திவ்ய தம்பதிகளே **பர தத்வம்**

ஸாத்யோபாயமான சரணாகதி அநுஷ்டானமே ஸித்தோபாயனான எம்பெருமானை வசீகரிக்கக் கூடிய **பரம ஹிதம்**

திருமாலான திவ்ய தம்பதிகளை அடைவதே **பரம புருஷார்த்தம்**

இவ்விஷயங்களை பகவத் ராமானுஜரின் பல க்ரந்தங்கள் பல ப்ரகாரங்களில் நிர்தாரிக்கின்றன.

ஆகையால், திருப்பாவையை விவரிக்கும் போது பராசர பட்டர், **வேதம் அனைத்துக்கும் வித்து** என அறிவித்திருக்கிறார்.

பர தத்வம் மற்றும் **பரம ஹிதம்** விஷயங்களில் மாற்று கருத்து கொண்ட பூர்வபக்ஷிகள், பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தை விட்டு நழுவியவர்களாவர் ஏனெனில் இந்த மாற்று கருத்து பகவத் ராமானுஜரின் வேதார்த்த ஸங்க்ரஹம், ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், கத்ய த்ரயம் போன்ற க்ரந்தங்களோடு விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

124. <u>ஸ்வ ரக்ஷண ஸ்வ அந்வயம் முமுக்ஷுவுக்கு ஸ்வரூப விருத்தமா?</u>

ரக்ஷ்யனும் ரக்ஷகனும், அதாவது காக்கப்படுபவனும், காப்பவனும், காக்கப்படுபவன் ஸ்வரூபம் பாரதந்தர்யம். காப்பவன் ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம். காக்கப்படுபவன் தன் ரக்ஷணத்தில் கண் வையான். ஏனெனில் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம் ப்ரபன்னனுக்கு ஸ்வரூப விரோதம். பரதந்த்ரனுக்கு ஸ்வரக்ஷண அந்வயம் கூடாது என்பதை இந்த ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தம் காட்டும், என்கின்றனர் ஸித்தாந்த பூர்வக்ஷிகள் - விவாத மேடை விஷயம்

1. இந்த ஸ்லோகத்தினால், ஜீவ - ஈஸ்வர நவ வித சம்பந்தம் தெளிவாகிறது:

பிதா ச ரக்ஷக: சேஷி பர்த்தா ஜஞேயோ ரமாபதி, ஸ்வாமி ஆதாரோ மம அத்மா ச போக்தா சாத்யமநூதித:

என்கிற ஸ்லோகம் கொண்டு விஷயீகரிக்கலாம்.

 # பகவான் நமக்குத் தந்தை : நாம் அவனுக்கு மக்கள். மக்களுக்கு காரணம் தந்தை அல்லவா? அதனால், அவன்றி நாம் இல்லை என்தாகிறது.

தந்தை-புத்ரன் உபமானம்.

 # அவனே ரக்ஷகன் : பெருமான் காப்பாளன். நாம் அனைவரும் அவனால் காக்கப்படுபவர்கள். ஜீவர்கள் ஸாத்யோபாயத்தை (சரணாகதி) அநுஷ்டிக்க ஸஹேதுக க்ருபையாலே அவன் ஸித்தோபாயன்.

ரக்ஷகன்-ரக்ஷிய வஸ்துக்கள்.

ஜீவர்கள் சேதனர்கள் ஆகையால், இவர்கள் அசேதனம் போன்ற ரக்ஷிய வஸ்துக்கள் ஆக மாட்டார்கள்; ரக்ஷகனான எம்பெருமான் சாஸ்த்திரம் கொண்டு, ஆத்ம உஜ்ஜீவனத்திறுகாக, ஸாத்யோபாயத்தை விதிக்க, அதைப் பின் பற்றுவதே பரதந்திர சேதன ஸ்வரூபம்; இதை

மறுத்தால், தேஹ யாத்திரை காரணமாக போஜன வ்யாபாரமும், பரதந்தர சேதன்னுக்கு, தவிர்க்க ப்ரஸங்கிக்கும்.

இவ்விஷயத்தை, ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில் ஸ்வாமி தேசிகன் தெளிவிக்கிறார்:

உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே. ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஒர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்

 # அவனே சேஷீ : அதாவது அடிமைகளான நம்முடைய, தொண்டுகளை ஏற்றுக் கொள்பவன் பகவான் என்பது இதன் பொருள். நாம் அனைவரும் அவனுக்குத் தொண்டு புரியும் இயல்புடைய தொண்டர்கள் என்பதும் இதனால் உணர்த்தப்படுகிறது.

சேஷ சேஷி பாவம்

பகவத் ராமானுஜர், வேதார்த்த ஸங்க்ரஹம் எனும் தனது க்ரந்தத்தில், இவ்விஷயத்தை, தெளிவிக்கிறார்:

பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி

அதாவது, தனது செயலினால், பிறருக்கு ஒரு சந்தோஷத்தை ஏற்படுத்துபவன் சேஷன்; அந்த சந்தோஷத்தை அடைபவன் சேஷி.

அதனால், சேஷி சாஸ்த்திரத்தில் விதித்த ஸாத்யோபாயத்தை அநுஷ்டிப்பதால், சம்சாரி ஜீவன் சேஷனாகிறான்.

 # அவன் பர்த்தா : பெருமாள் தான் கணவன். ஜீவாத்மாக்கள் அனைவரும் மனைவி போன்றவர்கள். ஆக, அவன் நியந்தா; ஜீவர்கள் நியாம்யர்கள்.

கணவன்-மனைவி உபமானம்.

ஜனகர், தன் மகளான ஸீதா பிராட்டியை, ஸ்ரீராமனுக்கு அறிமுகம் செய்கிறார் :

இயம் ஸீதா மம ஸுதா ஸஹ தர்ம சரீதவ

அதாவது, இது ஸீதா; என் மகள்; தர்ம வழியில் உன்னோடு சேர்ந்து பயணிக்க ஸித்தமாய் இருப்பவள்.

ஆக, சாஸ்த்திரம் விதித்த ஸாத்யோபாயம், **தர்மம்** எனும் பத விளக்கம் என உணரலாம். அதனால் ஸாத்யோபாயம் அநுஷ்டேயம்.

 # அவனே க்ஞேயன் : அதாவது அறியப்பட வேண்டியவனான பரம்பொருள். அவனை சாஸ்த்திர முகத்தாலே அறிவதனாலேயே, ஸாத்யோபாயத்தை (சரணாகதி) அநுஷ்டிக்க அவனது ஸஹேதுக க்ருபையாலே ரக்ஷிக்கிறான்.

அறிபவன்- அறிவது பற்றிய விளக்கம்.

 # அவன் ஸ்வாமி : பகவான் அனைத்தையும் உடையவனாக – ஸ்வாமியாக – உள்ளான். நாம் அவனுடைய உடமையாக, சொத்தாக, ப்ருத்யானக உள்ளோம்.

ஸ்வாமி- தாஸ பாவம்.

தாஸ லக்ஷணமாவது, ஸ்வாமி விதித்தவற்றை, சரிவர செய்து போவது; ஸ்வாமியான எம்பெருமான் சாஸ்த்திரத்தில், ஸாத்யோபாயத்தை விதிக்க, அதை அநுஷ்டிப்பதே தாஸனின் கடமை ஆகும்.

 # அவன் ஆதாரம் : உலகனைத்தையும், ஜீவாத்மாக்கள் – அனைவரையும் தாங்குபவனாக பகவான் உள்ளான். நாம் அவனால் தாங்கப்படுபவர்களாக உள்ளோம்.

ஆதார-ஆதேய விளக்கம்

 # அவன் ஆத்மா : நாம் அனைவரும் பெருமானுக்கு சரீரம் போன்றவர்கள். பகவான் நமக்கு ஆத்மா (பரமாத்மா). அவன் ஜீவர்களை தாங்குபவனாயும், நியமிப்பவனாயும், அடிமை கொள்பவனாயும் இருக்கிறான்.

சரீர ஆத்ம ஸம்பந்தம்

பகவத் ராமானுஜர், ஸ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில்

யஸ்ய சேதனஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷு நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதரஹ சரீரி

அதாவது, சேதநமான ஆத்மா, அப்ருதக்ஸித்த சம்பந்தமுடைய த்ரவ்ய சேதந அசேதநங்களைச் சரீரமாகக் கொள்ளலாம், என்றபடி.

ஆதார - ஆதேய சம்பந்தம்

நியந்த்ரு - நியாம்ய சம்பந்தம்

சேஷி - சேஷ சம்பந்தம்

இதில், எம்பெருமான் நியமிக்க (நியந்தா), அதைச் செய்து போவதே சம்சாரி ஜீவர்களின் (நியாம்யன்) க்ருத்யம். அதனால் ஸாத்யோபாயம் அநுஷ்டேயம்.

 # அவன் போக்தா : பெருமாள் நம்மை அநுபவிப்பவன். நாம் பெருமாளாலே அநுபவிக்கப்பட வேண்டியவர்கள். நித்ய விபூதியில், ஜீவர்களின் கைங்கர்யம் கொண்டு போக ரஸத்தையும், சம்சாரி ஜீவர்களின் கர்ம குணமான எண்ணங்களையும் செயல்களையும் கொண்டு லீலா ரஸத்தையும் அநுபவிக்கிறான், பகவான்.

போக்தா-போக்ய விளக்கம்

2. திருமந்திரத்தில் அநுஸந்தானம் ஸ்வரூப உபாய புருஷார்த்த அநுஸந்தானம்:

 # ப்ரணவம் - மகார வாச்யனான ஜீவன், அகார வாச்யனான எம்பெருமானுக்கும், உகார வாச்யையான பிராட்டிக்கும் சேஷன்.

கடோபநிஷத் கூறும் போது,

அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேணோவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்

என்று

அ என்பதால், ஸர்வ லோகங்களுக்கும் ஈஸ்வரனாகிய விஷ்ணு சொல்லப் படுகிறான்; **உ** என்பதால் பகவானோடு சேர்ந்தே இருக்கும் பெரிய பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லப் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு **ம** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கும், எனப் பொருளாகிறது.

 # நம: - ஸ்தூல யோஜனையில்,

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாய ஆத்ம நிவேதனம்

எனப் படுகிறது.

அதாவது, நம: என்தால் **ஆத்ம நிவேதனம்** எனும் சரணாகதி சொல்லப் படுகிறது.

 # நாராயணாய எனும் பதத்தினால், ஸர்வ ஆதாரனாயும் ஸர்வ அந்தர்யாமியாயும் உள்ள ஸர்வேஸ்வரனுக்கு ஜீவர்கள் செய்ய வேண்டிய சேஷ வ்ருத்தி சொல்லப் பட்டதாகிறது.

இதனால், திருமந்திரத்தில் தெளிவு எற்பட்டால், முக்கிய மந்த்ரம் காட்டும் விஷயம் புலனாகும்:

அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு சேஷோ அபரிக்ரஹ: தமேவ சரணம் ப்ராப்த: தத் கைங்கர்ய சிகீர்ஷயா

அதாவது,

‘நான்’ என்கிற சொல் ஆத்மாவை குறிக்கும்; எனது சரீரத்தை குறிக்காது;

ஸர்வேஸ்வரனுக்கு நான் அடிமைப் பட்டவன்; எனக்கு அடிமைப்பட்டது என்பது எதுவும் கிடையாது.

நமக்கு அடிமைப் பட்டதாக இங்கு தோன்றும் அனைத்தும் சரீர சம்பந்தத்தினால்.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை சரண் அடைந்திருக்கிறேன்; அவனுக்கு அடிமைத் தொழில் செய்வதற்காக

என்கிறபடியே ஸ்வரூப, உபாய, புருஷார்த்த நிஷ்டைகளை நாம் அறியலாம்.

3. பிராட்டியோடு கூடிய எம்பெருமானே ஈஸ்வரன் என்பது ப்ரமாண ஸித்தம்.

இவ்விஷயத்தை விளக்கும் போது,

தத் அந்தர்பாவாத்வாம் ந ப்ருகபிததே ஸ்ருதிரபி

என பட்டர் **ஸ்ரீகுணரத்னகோஸத்தில்** அருளினார். அதாவது, எம்பெருமானுடன் சேர்ந்தே இருப்பதினால், பிராட்டியை தனியாக ஸ்ருதிகள், அனைத்து இடங்களிலும், கூறவில்லை.

இதையே, **வேதார்த்த ஸங்க்ரஹத்தில்** ஸ்ரீராமானுஜர் விளக்கும் போது,

அஸ்ய ஈஸாந ஜகத: விஷ்ணு பத்நி

என அருளினார். அதாவது,

பிராட்டியும் எம்பெருமானைப் போன்றே அனைத்து தன்மைகளையும் கொண்டவள் என அருளுகிறார். அதாவது, விபு ஸ்வரூபத்தையும், ஜீவர்களை ரக்ஷிக்கும் பொறுப்பையும், ஜகத் காரணத்வத்தையும் கொண்டவள், என்றாகிறது.

ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் ஆசார்ய பரம்பரையில், பகவத் ராமானுஜரையும், அவரது 74 ஸிம்மாஸநாதிபதிகளில் ஒருவரான பட்டரையும், கொண்டுள்ளனர். இருந்தும் பிராட்டிக்கு ஈஸ்வரத்வம் கிடையாது என அவர்கள் சொல்வது விந்தையே!

வேத மார்க்கமான, ஸ்ரீ ராமாநுஜ க்ரந்த நிர்தேசமான ஸாத்யோபாயத்தை, ஸ்வ ரக்ஷண ஸ்வ அந்வயம் முமுக்ஷுவுக்கு ஸ்வரூப விருத்தமாக்கி, அதனால் நிஷேதித்து யுக்தி வாதம் புரிவதும் ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் அப்ராமாண்ய ப்ரவேசம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

125. <u>ஸாத்யோபாயத்தை யுக்தியினால் நிஷேதிக்க ப்ராப்தமோ?</u>

ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய விஷயங்களை யுக்தி வாதம் செய்து மறுப்பது அநாதரணீயம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. **ஸித்தோபாயனான** ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய விஷயங்களை யுக்தி வாதம் செய்து மறுத்து ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

உலக நடப்பை ப்ரமாணமாக்கி, புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில் நிர்தாரிப்பது, சாஸ்த்ரீயமாகாது, என ஸ்வாமி தேசிகன் **ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்** நிஷ்கர்ஷிக்கிறார்.

தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த்தெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய் போருகிறது,

என்கிறார் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தத்தில் ஸ்வாமி தேசிகன்.

அதாவது, நம் புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில், வாதத் திறமையை மட்டுமே கை கொண்டு சாஸத்திரத்திற்கு விரோதமான கருத்துக்களை கூறாமல், சாஸ்த்திரத்தை ஆதாரமாய் கொண்டு விளக்குவதே ஆஸ்திகர்களின் தர்மமாகிறது, என்கிறார்.

1. மநு ஸ்ம்ருதியில் கூறப்படுவதாவது,

ஆர்ஷம் தர்மோபதேசம் வேத சாஸ்த்ரா விரோதிநா யஸ்தர்க்கேண அநுஸந்ததே ஸ தர்ம வேத நேத்ர:

அதாவது,

வேத வேதாந்தங்களுக்கு விளக்க உரையாக உள்ள க்ரந்தங்களை, அதாவது ஸம்ருதி, புராணம், ப்ருஹ்ம ஸுத்ரம் போன்றவைகளை, விளக்கும் போது, வேத வேதாந்த வரிகளுக்கு, விரோதம் வராத வகையில் யார் அறிந்து கொள்கிறானோ அவனே தர்ம சாஸ்த்திரம் அறிந்தவன். இவ்விதம் உணராதவன் தர்ம சாஸ்த்திரம் அறிந்தவனாக மாட்டான்.

ஆக, ஆழ்வார்கள் மற்றும் நம் பூர்வாசார்யர்களின் ஒரு சில வரிகளைக் கொண்டு மற்ற வரிகளை கை விட்டு, உபநிஷத்துக்கு விரோதமாக அர்த்தம் சொல்லுவது, வேத வேதாந்தங்கள் கூறும், சாஸ்த்திரம் அறிந்தவன் செய்யும் செயலாகாது, என்பது மநு பகவானின் நிர்தேசம்.

2. அத்ரி ஸ்ம்ருதி வரிகளாவது:

காணாத சாக்ய பாஷாண்டை: த்ரயி தர்ம விலோபித: த்ரிதண்ட தாரிணா பூர்வம் விஷ்ணுனா ரக்ஷிதா த்ரயி

அதாவது,

தார்க்கிகர்கள் (சப்த ப்ரமாணத்தை விட்டு வாதம் செய்வதையே கொள்கையாகக் கொண்டவர்கள்), பௌத்தர்கள் (வேத ப்ரமாணத்தை ஏற்காதவர்கள்), மற்றும் பாஷாண்டிகள் (வேத ப்ரமாணத்தை ஏற்று அதற்கு தவறான அர்த்தம் கற்பிப்பவர்கள்) இவர்களால் அபௌருஷேயமான வேதம் அழிகிறது. இம்மூவரிடம் இருந்தும், வேதத்தை காக்க, ஸர்வேஸ்வரனான விஷ்ணு, தத்தாத்ரேயர் எனும் ஸந்யாஸியாக க்ருத யுகத்தில் அவதரித்தான்.

ஆக, யுக்தி வாதம் செய்து வேத விஷயங்களை மறுப்பது அநாதரணீயம்.

3. இதனால் யுக்தி வாதத்தையே தனக்குரிய செயலாகக் கொண்ட ஹேதுகர்கள், எம்பெருமானையும் அவன் விபூதிகளையும் அபஹரித்தவர்களாவர்.

பர தத்வமான, அதாவது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை இல்லை என்பது, எம்பெருமானின் இருப்பை அபஹரிப்பதாகும்.

பர தத்வமான, அதாவது ஸ்ரீமந் நாராயணனை அவர தத்வமாக்கி, அவன் விபூதியான வேறொரு அவர தத்வ தேவதையை ஸர்வேஸ்வரனாக்குவது, அவன் விபூதிகளை அபஹரிப்பதாகும். இந்த பக்ஷங்கள், சாஸ்த்ரீயர்களுக்கு, அநாதரணீயம்.

4. வைதீக மதங்கள் (வேத ப்ரமாணத்தை ஏற்ற மதங்கள்) இவ்வாறு வேத முரணாக அர்த்தம் கற்பிப்பர், என ஸ்வாமி தேசிகன் அநுவதிக்கிறார்.

ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகசமதிகதா துல்ய தைக்யம் த்ரயாணாம் அந்யத்ர ஐஸ்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ ஆத்ரியந்தே ந சந்த த்ரயந்தை ஏக கண்டை தத் அநுகுண மனு வியாச முக்ய உக்திபி ச ஸ்ரீ மான் நாராயணோ ந பதி அகிலதநு முக்தித முக்த போக்ய

என ஸ்வாமி தேசிகன் அருளினார்.

அதாவது,

பல வைதீக மதங்கள் (வேத வேதாந்தத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொண்ட மதங்கள்) பரம்பொருள் யார் என்பதை பலவிதமாக அறிவிக்கின்றனர்.

ஆத்மைக்யம் என்கிற பதம் கொண்டு, அனைத்து ஆத்மாக்களும் ஒன்றே - ஜீவன் வேறு ஈஸ்வரன் வேறு என்பது கிடையாது என்கிற அத்வைத பக்ஷம்

தேவதைக்யம் என்கிற பதம் கொண்டு, வேத வேதாந்தங்களில் கூறப்படும் அனைத்து தேவதைகளும் ஒரே ஈஸ்வரன் என்கிற பக்ஷம்

த்ரிகசமதிகதா துல்ய என்கிற பதம் கொண்டு, மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரும் ஞானம் சக்தி முதலியவற்றை சம மாக க் கொண்ட ஈஸ்வரன் என்கிற பக்ஷம்

த்ரயாணாம் ஐக்யம் என்கிற பதம் கொண்டு, மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரும் ஒரே ஈஸ்வர தத்வத்தின் பல ரூபங்கள் என்கிற பக்ஷம்

அந்யத்ர ஐஸ்வர்யம் என்கிற பதம் கொண்டு, மூன்று ப்ரதான தேவதைகளாக கருதப்படும் (சதுர்முக ப்ருஹ்மா, விஷ்ணு மற்றும் சிவன்) அனைவரைக் கட்டிலும் உயர்ந்த பரம் பருளான ஈஸ்வரன், என்கிற பக்ஷம்

இத்யாதி என்பதால், இது போன்ற பக்ஷங்கள்

அநிபுணா பணிதீ ஆத்ரியந்தே ந சந்த என்பதால், அப்பக்ஷங்கள் அனைத்தும் வேத வேதாந்தங்களை முறையோடு கல்லாதவர் கூற்று என வேதமறிந்த நிபுணர்கள் எற்பதில்லை

த்ரயந்தை ஏக கண்டை என்பதால், உபநிஷத்துக்கள் ஒரே குரலில் கூறுவது என்னவென்றால்,

 # தத் அநுகுண என்பதால் மேலும் அந்த உபநிஷத்துக்களுக்கு அநுகுணமாக

 # மனு வியாச முக்ய உக்திபி ச என்பதால் மஹரிஷிகளான மநு, வ்யாஸர் போன்றவர்களின் விளக்கம் என்னவென்றால்

 # ஸ்ரீ மான் நாராயணோ ந பதி - பெரிய பிராட்டியோடு கூடிய ஸ்ரீமந் நாராயணனே அனைவருக்கும் ஆத்மா (அதாவது பரமாத்மா)

 # அகிலதநு என்பதால் அவனே ஸகல சேதன அசேதன வஸ்துக்களையும் தனக்கு சரீரமாகக் கொண்டவன்

 # முக்தித முக்த போக்ய என்பதால் அவனே சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷம் அளிப்பவனாயும் மோக்ஷத்தில் அநுபவிக்கப் படுபவனாயும் இருக்கிறன்,
என்பதாயிற்று.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

மற்றுளார்க்குத் தாங்கள் தெளிகைக்காகவும் குதர்க்கங்களாலே கலங்குவோரைத் தெளிவிக்கைக்காகவும் ஸமீசீன யுக்திகளோடே கேட்க ப்ராப்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

மற்றுளார்க்குத் - சாஸ்த்திர விவாதங்களில் ஈடுபடுவோருக்கு

தாங்கள் தெளிகைக்காகவும் - பூர்வாசார்யர்கள் அருளிய ப்ரமாண விஷயத்தில் தனக்கு தெளிவு உண்டாவதற்கும்

குதர்க்கங்களாலே கலங்குவோரைத் தெளிவிக்கைக்காகவும் - விபரீத வாதங்களைக் கொண்டு ப்ரமாண விஷயத்தில் தெளிவற்றவரைத் தெளிவிக்கவும்

ஸமீசீன யுக்திகளோடே - ப்ரமாண விஷயத்தை ஊர்ஜிதம் படுத்துவதான ஸத் தர்க்கங்களை முன் வைத்து

கேட்க ப்ராப்தம் - விவாதித்து தெளிய வேண்டும்.

6. ஆக, ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய விஷயங்களை யுக்தி வாதம் செய்து மறுப்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

126. ஸ்வாமி நம்மாழ்வாரின் ஸாத்யோபாய விளக்கம்

திருவாய் மொழி "**மாலை நண்ணி**" பதிகத்தில ஸ்வாமி நம்மாழ்வார் ஸாத்யோபாயத்தை விதிக்க ஸித்தாந்த ஏகதேசிகள் ஸாத்யோபாயம் ஸ்வரூப விருத்தம் என எப்படி நிர்தாரிக்கின்றனர்?

1. நீதி மன்றங்களில், பொதுவாக இரு கற்றறிந்த வக்கீல்கள் வாதிடுகின்றனர்; வாத ப்ரதி வாதத்தை, சட்டத்தோடு ஒப்பிட்டு, கற்றறிந்த நீதிபதி தீர்ப்பை ஒரு வக்கீலுக்கு ஸாதகமாக அளிக்கிறார் அன்றோ!

அது போன்றது தான், வைதீக மதங்களில், பூர்வ பக்ஷ ஸித்தாந்த ஸம்ப்ரதாய நிலைப்பாடு.

2. ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், வேத விதிகளான **நிதித்யாஸிதவ்ய**: எனப்படும் பக்தி யோகத்தையும், அதை அநுஷ்டிக்க தகுதி அற்றவர்களுக்கு, **முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே** எனும் சரணாகதி அநுஷ்டானம் விதிக்கப் பட்டிருக்கிற போதும், அந்த ஸாத்யோபாயம் ஸ்வரூப விருத்தம் என்கின்றனர்.

இவ்விஷயத்தில் கண்ணனும் பகவத் கீதையில் **பஜஸ்வ மாம்** என்றும் **மாம் ஏகம் சரணம் வ்ரஜ** என்றும் ஸாத்யோபாயத்தை விதித்து அருளினான்;

ஸ்ரீராமனும், **ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீத யாசதே** என்று சரணாகதி அநுஷ்டானத்தை விதித்தான்.
இதை, பகவத் ராமானுஜர், பக்தி யோக விஷயமாக **ஸ்ரீ பாஷ்யம்** மற்றும் **கீதா பாஷ்யம்** அருளி, **கத்ய த்ரயம்** கொண்டு சரணாகதி விஷயத்தை தெளிவித்தார்.

வேத சாஸ்த்திர மற்றும் பகவத் ராமானுஜ ஸம்ப்ரதாய விதிகளை மீறி, **தமிழ் மறை** என போற்றப்படும் ஆழ்வார் பாசுரங்களுக்கு விபரீத அர்த்தம் கற்பித்து பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் **ஸ்வரூப விருத்தம்** என கற்பித்து வாதிட்டனர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள்.

3. பூர்வபக்ஷிகளின் வாதங்களுக்கு கை கொடுக்கும் ப்ரமாணங்களை ஆராய்வோம்.

 # நாயமாத்மா ப்ரவசநேந லப்ய: ந மேதயா ந பஹுநா ச்ருதேந யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய; தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்

என்கிறது கடோபநிஷத். இதனால் ஸ்வதந்திரனான பகவான் யாரை வரிக்கிறானோ அவனே மோக்ஷத்தை அடைய முடியும் என்பதாகிறது.

 # ஸோஜ்ஜீவனேச்சா யதிதே ஸ்வ ஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர என மஹரிஷி விஷ்ணு தர்மத்தில் அருளியுள்ளார்; அதாவது ஆத்ம உஜ்ஜீவனத்திற்காக எப்போதும் ஹரி ஸ்மரணமே வேண்டும்.

 # ஸ்வயம் ம்ருத் பிண்ட பூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: ஸ்வ ரக்ஷணேபி அஸக்தஸ்ய கோ ஹேது பர ரக்ஷணே என்கிறது இதிஹாஸ ஸமுச்சயம்; அதாவது மண் கட்டிபோல் பரதந்தரனான ஜீவன் தன் ரக்ஷணத்திற்கான அநுஷ்டானம் செய்யத் தகாதவன்.

 # ப்ரபத்தி: விவாஸ:, ஸக்ருத்ப்ரார்தநா மாத்ரேண அபேக்ஷிதம் தாஸ்யதீதி விஸ்வாஸ பூர்வகம் ப்ரார்தநமிதியாவத் என பகவத் ராமானுஜர் அருளியுள்ளார்; அதாவது எம்பெருமானிடம் மஹாவிச்வசமே ப்ரபத்தி.

 # யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகர்மாபி சமார பந்தே தேஷாம் ஹி கார்யேஷூ பவந்தி நாதா சைப்யாதயோ ராம யதா யயாதே என ஐந்தாவது வேதமாக போற்றப் படும் மஹாபாரத வரி உள்ளது; அதாவது, உலகில் எவர்களுக்கெல்லாம் நாதன் இருக்கிறானோ, அவர்கள் தன்னை ரக்ஷித்துக் கொள்ளும் காரியத்தை செய்வதில்லை.

இந்த மாதிரியான ப்ரமாண வரிகள் ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின், ஸாத்யோபாயத்தை நிஷேதிக்கிற வாதங்களுக்கு வலு சேர்க்கின்றன.

4. பூர்வபக்ஷிகள், சம்சாரி ஜீவர்களின் மோக்ஷ ஸாதனத்தை மனோ வ்யாபாரம் என்கின்றனர்; அதாவது ஸித்தோபாய ப்ரதிபத்தி; ஸர்வ ரக்ஷகனிடம் மஹா விச்வாசம்; எம்பெருமானின் ஸ்வாதந்த்ரய தெளிவு போன்றவைகள்.

இந்த பூர்வபக்ஷ மற்றும் ஸித்தாந்த கூற்றுக்களை சாஸ்த்திர மற்றும் பூர்வாசார்ய ஸ்ரீஸுக்திகளைக் கொண்டு ஆராயும் போது, பூர்வபக்ஷிகள் செய்து போகும் மனோ வ்யாபர ப்ரமாண வரிகளுக்கான விளக்கங்கள், மற்ற செயல் வடிவத்தை விதிக்கிற ப்ரமாண வரிகளோடு விரோதிப்பதால், அவர்கள் விளக்கம் பொருந்தாது, என ஸ்வாமி தேசிகன் பல க்ரந்தங்களில் தெளிவித்து அருளியுள்ளார்.

முன் கூறப் பட்ட கடோபநிஷத் வரிகளாவது ஸாத்யோபாய நிஷேதம் என்கின்றனர் பூர்வபக்ஷிகள்.
ஆனால், **ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:**

என்கிறது பிரகதாரண்யக உபநிஷத்.

அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ஆக, இரண்டு உபநிஷத் வரிகளுக்குள் முரண்பாடு இருப்பதாக ஒரு தோற்றம் உண்டாகிறது. உபநிஷத் வரிகளில், ஒன்றை ஏற்று ஒன்றை விடுவது முறையாகாது. அது சாஸ்த்திரத்தை மீறிய செயலாகும், என பகவத் ராமானுஜர் தெளிவிக்கிறார்.

அதற்கு ஸ்ரீராமானுஜர் அருளிய விளக்கத்தை கவனித்தால், சாஸ்த்திர விரோதம் இல்லாமல், முரண்பாடு கூடியதாக தோற்றமுள்ள வரிகளை எவ்வாறு விளக்கமளிக்க வேண்டுமென புலப்படும்.

ஸ்ரீ பாஷ்யத்தில் இவ்விரண்டு உபநிஷத் வாக்யங்களும் முரண் படாதபடி, உபநிஷத் விஷயங்களை ஆராய்ந்து, கீழ் உள்ளவாறு, அருளிச் செய்தார் ஸ்ரீ ராமானுஜர்:

ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி

அதாவது,

தன் பக்கல் அன்புடன் பக்தி யோகம் செய்பவர்கள் இந்தப் பரம்பொருளை அடைய முடியும் என்று பிரகதாரண்யக உபநிஷத் விஷயத்தையும்,

தன் பக்கல் அன்பு இல்லாதவர்கள் இந்தப் பரம்பொருளை பக்தி யோகத்தால் அடைய முடியாது என்று கட உபநிஷத் விஷயத்தையும்,

ஒன்று படுத்தி கூறி அருளினார் ஸ்ரீ ராமானுஜர்.

மேலும், ஸ்ரீ பாஷ்யத்தில் **ஸாதனாத்யாயமே** அநுஷ்டானத்தோடு கூடிய மோக்ஷத்திற்கான வழியே!
அதாவது, **நாநா சப்தாதி பேதாத்**

(3ம் அத்யாயம் 3ம் பாதம் 24வது அதிகரணம் 56ம் ஸூத்ரம்)

பெயர் வேறுபட்டிருப்பதால், மோக்ஷத்தை அடைவிக்கிற ப்ருஹ்ம வித்யைகள் வெவ்வேறானவை, எனப் படுகிறது.

ஆக, உபநிஷத் சாரமான ப்ருஹ்ம ஸூத்ரத்தை கொடுத்தருளிய வேதவ்யாஸரும், அதற்கு விளக்கமாக ஸ்ரீபாஷ்யம் அருளிய ஸ்ரீ ராமானுஜரும், ஜீவர்களுக்கு தாஸத்வ ஞானம் மட்டுமே மோக்ஷ காரணம் என்பதை அங்கீகரிக்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஆக, ஸித்தோபாய ப்ரதிபத்தி; ஸர்வ ரக்ஷகனிடம் மஹா விச்வாசம்; எம்பெருமானின் ஸ்வாதந்த்ரய தெளிவு போன்றவைகள் மனத்தில் தரித்து, சாஸ்த்திரம் விதித்த மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிக்க வலியுறுத்துகிறது வேத ப்ரமாணமும் ஸம்ப்ரதாய ஸ்ரீ ஸுக்திகளும்.

இதையே ஸ்வாமி தேசிகன் **தத்வ ஞான விகலன் அதிகாரி அல்லனாம்** என அருளினார். ஈஸ்வர ஸ்வரூபத்தையும் ஜீவ ஸ்வரூபத்தையும் சாஸ்த்திர ப்ராமாணப்படி உணராதவன் மோக்ஷ உபாயத்தை அநுஷ்டிக்கும் தகுதி அற்றவன், என்றபடி.

5. இதே நோக்கில், பூர்வபக்ஷிகள், ஸ்வாமி நம்மாழ்வார் பாசுரங்களை - அதாவது, **இன்றென்னைந் பொருளாக்கி** மற்றும் **நெறி காட்டி நீக்குதியோ** போன்றவற்றை - ப்ரமாணமாக்கி மோக்ஷ உபாயம் மனோ வ்யாபாரம் என்றனர்.

இது முற்றிலும் அநுபபன்னம், ஏனெனில் ஆழ்வார், செயல் ரூபமான மோக்ஷ உபாயத்தை **மாலைநண்ணி** பதிகத்தில் விவரித்துள்ளார். அதாவது, பதிகத்தின் முதல் மட்டும் கடைசி பாசுரங்களை ஆராயந்தாலே, இவ்விஷயம் தெளிவாகும்.

 # மாலை நண்ணித் தொழுதெழுமினோ வினை கெட காலை மாலை கமல மலர் இட்டு நீர் வேலை மோதும் மதிள் சூழ் திருக்கண்ணபுரத்து ஆலின் மேலால் அமர்ந்தான் அடி இணைகளே

 # பாடு சாரா வினை பற்றற வேண்டுவீர்! மாட நீடு குருகூர்ச் சடகோபன் சொல் பாடலான தமிழ் ஆயிரத்துள் இப்பத்தும் பாடி ஆடிப் பணிமின் அவன் தாள்களே

இதில் **கமல மலர் இட்டு** என்பதும் **பாடி ஆடி பணி** என்பதும் செயலே.

6. பூர்வபக்ஷிகள், இப்பதிகத்துக்கு, பல விளக்கங்களில், ஸ்ரீராமானுஜ ஸம்ப்ரதாய கொள்கைகளை மீறி, ஸாத்யோபாயத்தையே விளக்குகின்றனர்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

127. யுக்தி வாதிகளான ஸித்தாந்த ஏகதேசிகளின் சம்பாஷணம் பரிஹரணீயம்

ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களையும், யுக்தி வாதம் செய்து ஆட்சேபிப்பவர்கள் சம்பந்தம் விலக்கப் பட வேண்டுவது

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. **ஸித்தோபாயனான** ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களும், விதித்து விளக்கிய விஷயங்களை யுக்தி வாதம் செய்து மறுத்து ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின் வாதிடுவர்; அது அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம். அவர்களோடு சம்பந்தம் தூர பரிஹரணீயம், என்பது ப்ரமாண ஸித்தம்.

உலக நடப்பை ப்ரமாணமாக்கி, புலன்களுக்கு அப்பாற் பட்ட விஷயங்களில் நிர்தாரிப்பவரோடு, சம்பந்தம் கொள்வது உசிதமாகது, என ஸ்வாமி தேசிகன் **ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்** நிஷ்கர்ஷிக்கிறார்.

2. சாஸ்த்திரம் விதித்தவற்றை தவறில்லாமல் ஸதாசார்யனிடம் பயில வேண்டும்; மீறும் போது குத்ருஷ்டி மத ஈடுபாடு உண்டாகலாம்.

இதிஹாஸ ஸமுச்சயத்தில், மஹரிஷி,

ஏகம் யதி பவேத் சாஸ்த்திரம் ஞானம் நிஸ்ஸம்சயம் பவேத் பஹுத்வாதிஹ சாஸ்த்ராணாம் ஞாநதத்வம் ஸுதுர்லபம்

அதாவது, சாஸ்த்திரம் ஒன்றை மட்டுமே உரைப்பவையாக இருத்தால், எந்த விதமான ஐயமும் இன்றி அனைவருக்கும் சரியான ஞானம் உண்டாகும். ஆனால் சாஸ்த்திரங்கள் பலவாக உள்ளதால் உண்மையான ஞானம் பெறுவது மிகவும் கடினமான செயலாகும்,

என அருளிகிறார்.

அதனால், சாஸ்த்திரங்களாக கருதப்படும் வேத வேதாந்தங்களையும், புராண இதிஹாஸ வரிகளையும், ஆழ்வார் பாசுரங்களையும் ஒன்றோடு ஒன்றை இணைக்காமலே, அதாவது சிலவற்றை ஏற்று மற்றதை கைவிட்டு, அர்த்தம் கூறுவதால், சாஸ்த்திரங்களை தவறாக புரிந்து கொள்ள நேரிடுகிறது.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (4-34)

தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஷ்னேன ஸேவயா. உபதேஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்ஷிந:

அதாவது,

ஆத்ம ஞானத்தை பெற விரும்பும் நீ அந்த ஜ்ஞானத்தை பிழையற உணர்ந்த தத்வ வித்துக்களான பெரியோர்களிடம், ப்ரணாமாதிகளை செய்து பணிவுடன் அடங்கி கேட்டு அறிய வேண்டும்,

என அருளினார்.

3. குதர்க்கம் கொடியது; முற்றிலுமாக கை விட வேண்டியது.

ஐந்தாவது வேதமாகப் போற்றப்படும் மஹா பாரத்த்தில்,

நிஸ்சம்சயேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: ஸசம்சயான் ஹேது பலான் நாத்யா வஸதி மாதவ:

என சொல்லப்படுகிறது.

அதாவது,

சாஸ்த்திர விஷயத்தில் சந்தேகமற்று தெளிவு உள்ளவர்கள் அனைவரிடமும் எம்பெருமான் இருந்து வழி நடத்துகிறான். உலக நடப்பான யுக்திகளைக் கொண்டு ஹேது வாதத்தினால் சந்தேகம் கொள்பவர் பக்கலிலே மாதவன் வழி நடத்தாது விட்டுச் செல்கிறான்.

யாக்ஞ்யவல்க்யர் ஸ்ம்ருதியால்,

டம்பி ஹைதுக பாஷண்டி பகவத் வ்ருத்தீச்ச வர்ஜயேத்

என்கிறது.

அதாவது, மற்றவர்கள் கொண்டாட வேண்டி தர்ம காரியங்களைச் செய்பவனும், வேத ஆதாரத்தை ஒத்துக் கொள்ளாமல் தன் அறிவைக் கொண்டு புலன்களுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை வாதிடுபவனும் (ஹைதுகர்), ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை, மற்ற ப்ருஹ்மா, ருத்ரன், பிள்ளையார், முருகன் போன்ற தாழ்ந்த தேவதைளுக்கு சமமாக நினைப்பவனும் (பாஷாண்டி), வஞ்சனையில் தான் நினைத்தவற்றை அடைய விரும்புபவனையும் கொடியவர்களாக சாஸ்த்திரம் வர்ணிக்கிறது.

மேலும் பஹுவித ப்ரமாணங்கள் யுக்தி வாதம் செய்பவரை நிந்திக்கிறது.

ஸத்பிரேவ ஸஹாஸீத் ஸத்பி: குர்வீத ஸங்கமம். ஸத்பி: விவாதம் மைத்ரீம் ச ந ஸத்பி: கிஞ்சிதாசரேத்

அதாவது,

ஈஸ்வர தத்வத்தின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளில் தெளிவான ஞானம் இல்லாதவர்களிடம் ஸஹவாஸம் ஸ்நேஹம் விவாதம் போன்ற சம்பந்தம் விடத் தக்கது.

4. ஸர்வேஸ்வரனிடம் பக்தியும் மோக்ஷ ஸாதனமும், சம்சாரி ஜீவர்களை ப்ராக்ருத லோகத்தில் இருந்து விடுபட்டுச் செல்ல காரணமாகிறது. அதனால், தேவதாந்தரங்கள், சம்சாரி ஜீவர்களை மோகிக்க செய்யும் வகையிலே தடைகளை உண்டாக்குகின்றன, என்பது ப்ரமாண ஸித்தம்.

சௌநக மஹரிஷியின் விஷ்ணு தர்ம வரி:

ஸரூயதே கில கோவிந்தே பக்திமுத் வஹதாம் ந்ருணாம். ஸம்ஸார ந்யூநதா பீதா: த்ரிதசா: பரிபந்தின:

அதாவது,

ஸர்வேஸ்வரனான கோவிந்தனிடம் பக்தி உள்ளவர்களால் சம்சாரம் குறைந்து விடுமோ என பயம் கொண்டு தேவதாந்தரங்கள் இவர்களுக்கு தடையை உண்டு பண்ண முயற்சிக்கிறார்கள், என்கிறது சாஸ்த்திரங்கள்.

சௌநக மஹரிஷியின் விஷ்ணு தர்ம வரி:

ஸத்யம் சதேன விக்னானாம் ஸஹஸ்ரேண ததா தப: விக்நாயுதேன கோவிந்தே ந்ருணாம் பக்தி: நிவார்யதே

அதாவது,

மனிதர்களுடைய ஸத்யம் நூறு விக்நங்களாலும், தபஸ் ஆயிரம் விக்நங்களாலும், கோவிந்த பக்தி பல மடங்கு விக்நங்களாலும் தடுக்கப் படுகின்றன.

பகவத் கீதை அத்யாயம் 7- ஸ்லோகம் 15ல், ஸர்வேஸ்வரனான கண்ணன், பாப விசேஷத்தால், அவனை விட்டு அகல்பவர்களை நான்கு விதமாக பிரித்து விளக்குகிறான்.

ந மாம் துஷ்க்ருதிநோ மூடா[4]: ப்ரபத்யந்தே நராதமா: மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஸ்ரிதா:

அதாவது,

என் ஞானமில்லாத மூடர்கள்.

ஞானமிருந்தும் என்னை அடைய முயற்சிக்காதவர்கள்.

ஹைதுகர்களோட (யுக்தி வாதம் செய்பவர்களோட) ஈடுபாட்டால், உண்டான ஞானத்தை இழந்தவர்கள்

• என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள்

சுவேதாசுதர உபநிஷத்,

‘**யஸ்ய தேவே பரா பக்திர் யதா தேவே ததா குரௌ தஸ்யைதே கதிதா ஹ்யர்தா: ப்ரகாஷந்தே மஹாத்மந:**’

என்கிறது.

அதாவது, எவனுக்கு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாரயணனிடத்தில் உள்ள பக்தி போல் குருவினிடத்திலும் பக்தி உள்ளதோ, அவனுக்கு குருவின் அநுக்ரஹத்தால் ஸகல ஆத்ம விஷயாமான அர்த்தங்களும், தெளிவாகும்.

ஆக, ஸதாசார்ய அநுக்ரஹத்தால், தெளிவான ஞானம் பெற்றிருப்பதும், ஹைதுகர்ளோடு விவாதத்தை தவிர்ப்பதால், பெற்ற ஞானத்தை இழக்காமல் இருக்கையும், ஸித்திக்கும் என்று தெளிய வேண்டும்.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

அசரண்ய சரண்யனான ஸர்வேஸ்வரனைச் சரணமாக பற்றுகிற பரம ஆஸ்திகனுக்கு சிலரோட சேர்த்தியால் பாஹ்யதை வாராதாகிலும் அவனுக்கு கலக்கங்கள் வரவும் அதுக்கு ஸதாசார்யர்கள் பரிஹாரம் பண்ணவும் காணா நின்றோம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

அசரண்ய சரண்யனான ஸர்வேஸ்வரனைச் சரணமாக பற்றுகிற - பரமேகாந்தியாக சரணாகதி அநுஷ்டித்த

பரம ஆஸ்திகனுக்கு - சரணாகதனுக்கு

சிலரோட சேர்த்தியால் - யுக்தி வாதம் செய்கிற குத்ருஷ்டி சம்பந்தம் கொள்வதால்

பாஹ்யதை வாராதாகிலும் - சாஸ்த்திர விரோத செயல்கள் உண்டாகாது போனாலும்

அவனுக்கு - அந்த சரணாகதனுக்கு

கலக்கங்கள் வரவும் - சாஸ்த்திர விதிகளில் மன அமைதி குலைய

அதுக்கு ஸதாசார்யர்கள் பரிஹாரம் பண்ணவும் - அதற்காக ஆசார்யர்கள் முயற்சித்த வரலாற்றை

(பகவத் ராமானுஜரின் சித்தி புத்ரனான கோவிந்த பட்டர், ஸத் ஸம்ப்ரதாய விரோத சேர்க்கையால், சிவ பூஜையில் தன்னை அர்ப்பணித்து நிற்க, பகவத் ராமானுஜரின் விருப்பதிதிற்கு இணங்கத, அவர்களது தாய் மாமனான பெரிய திருமலை நம்பிகளின் ப்ரயத்னத்தால், கோவிந்த பட்டர் பகவத் ராமானுஜர் திருவடியை அடைந்து, பிறகு எம்பார் என்கிற திருநாமம் கொண்டு ஸத் ஸம்ப்ரதாயத்தில் பணியாற்றியது வரலாறு)

காணா நின்றோம் - நாம் காண்கிறோம்

6. ஆக, ஸித்தோபாயனான ஸ்ரீமந் நாராயணனால் விதிக்கப் பட்ட, வேத ப்ரமாணமும், அதன் அநுகுணமான பகவத் ராமானுஜ க்ரந்தங்களையும், யுக்தி வாதம் செய்து ஆட்சேபிப்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

128. <u>பகவத் ராமாநுஜர் அநுஷ்டித்த புருஷகார ப்ரபத்தி</u>

1. பகவத் ராமானுஜர் ஒரு பங்குனி உத்தர திருநாளிலே, ஸ்வ நிஷ்டையாக, தான் அநுஷ்டித்த மோக்ஷ காரணமான சரணாகதி அநுஷ்டானத்தை, திவ்ய தம்பதிகளோடு தனக்கு ஏற்பட்ட உரையாடலாக விளக்கியுள்ளார்.

சரணாகதி கத்யத்தில், முதல் இரண்டு சூர்ணிகையில் தான் அநுஷ்டித்த புருஷகார ப்ரபத்தி விவரிக்கப் படுகிறது.

2. சௌநக மஹரிஷி,

வாசப் பரம் ப்ரார்த்தயிதா ப்ரபத்யே நியத: ஸ்ரியம்

என அருளியுள்ளார்.

அதாவது,

திவ்ய தம்பதிகளிடம் சரணாகதி அநுஷ்டிப்பதற்கு முன் நியமேன **புருஷகார ப்ரபத்தி** பெரிய பிராட்டியிடம் செய்து போக வேண்டும்.

3. சரணாகதி கத்யம் - முதல் சூர்ணிகை.

பகவன் நாராயண அபிமத அநுரூப ஸ்வரூப ரூப குண விபவ ஐஸ்வர்ய சீலாதி அநவதிக அதிசய அசங்க்யேய கல்யாண குண கணாம் பத்மவ நாலயாம் பகவதீம் ஸ்ரியம் தேவீம் நித்ய அநபாயிநீம்

நிரவத்யாம் தேவ தேவ திவ்ய மஹிஷீம் அகில ஜகன் மாதரம் அஸ்மின் மாதரம் அசரண்ய சரண்யாம் அநந்ய சரண்ய சரணம் அஹம் ப்ரபத்யே

அதாவது,

எம்பெருமானுக்கு மிகவும் அபிமதமான பெரிய பிராட்டியை, அவனோடு ஒத்த ஸ்வரூப ரூப குண விபூதிகளை உடையவளாக, ஜீவ உஜ்ஜீவனத்தின் பொருட்டு அதற்கு உபயோகமான பல திவ்ய தன்மைகளையும் எண்ணில் அடங்காத கல்யாண குணங்களையும் உடையவளாக, பகவானுக்கு நிகராக பகவதியாக, அதாவது ஞான-பல-ஐச்வர்ய-வீர்ய-சக்தி-தேஜஸ் உடையவளாக, அகலகில்லேன் என்று எப்போதும் பிரியாதபடி எம்பெருனுக்கு மஹிஷியாக, ஜகந் மாதாவாக, அடியேனுக்கும் தாயாக, அனைவராலும் சரணமடைய தகுந்தவளாக இருக்க, புகலொன்று இல்லாமல் பற்றுகிறேன்.

4. சரணாகதி கத்யம் - இரண்டாவது சூர்ணிகை.

பாராமார்த்திக பகவத் சரணாரவிந்த யுகளைகாந்திக ஆத்யந்திக பரபக்தி பரஞான பரம்பக்தி க்ருத பரிபூரண அநவரத நித்ய விஷததம அனன்ய ப்ரயோஜன அநவதிகாதிஷய ப்ரிய பகவதனுபவ ஜநித அநவதிகாதிஷய ப்ரீதிகாரிதா அசேஷாவஸ்தோசித அசேஷசேஷதைகரதி ரூப நித்ய கைங்கர்ய ப்ராப்த்யுபேக்ஷயா பாரமார்திகி பகவத் சரணாரவிந்த சரணாகதி: யதாவஸ்திதா அவிரதா அஸ்துமே

என பெரிய பிராட்டியிடம் தனது சரணாகதி பலிக்க வேண்டுமென புருஷகார ப்ரபத்தி செய்து போக,

 # அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே

என்று தாயாரால் அந்த புருஷகார ப்ரபத்தி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

அதாவது, இந்த சரணாகதி அநுஷ்டானத்தினால், பரபக்தி, பரஞானம் மற்றும் பரம பக்தி போன்ற நிலைகளை இங்கே பெற வேண்டும் என்றும், பகவத் கைங்கர்யமன்றி வேறொரு பலனில் இச்சை வராதபடி இருக்க வேண்டுமென்றும், குற்றமற்ற (அதாவது அஹங்கார மமகாரமற்ற) கைங்கர்யம் ஸித்திக்க வேண்டுமென்றும், சேஷ வ்ருத்தியையே தனக்கு உண்டான செயலாக லயித்து மிக பிரியத்துடன் சேஷியின் உகப்பிற்காகவே செய்து போவதுவும், சரீர அவஸாநத்திற்கு பிறகு, நித்ய விபூதியில் நித்ய கைங்கர்யம் ஸித்திக்கவும் சரணாகதி அநுஷ்டிக்கிற அடியேனுக்கு, இந்த சரணாகதி அநுஷ்டானம் பலனளிக்க வேண்டும்,

என்கிற **புருஷகார ப்ரபத்தி** , இங்கே தெரிகிறது.

அதற்கு, பெரிய பிராட்டியான ஸ்ரீரங்க நாச்சாயார்,

அப்படியே ஆகட்டும்; உன் மனோரதம் பூர்த்தி அடையட்டும்

என அந்த புருஷகார ப்ரபத்தி அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

129. சம்சாரி ஜீவர்களின் தாப த்ரயம்

1. சம்சாரி ஜீவர்கள் இந்த ப்ராக்ருத லோகத்தில் மூன்று வகைத் தாபங்களை அநுபவிக்கின்றனர்.

அவைகள் **தாபத்ரயம்** என சொல்லப் படுகின்றன.

ஆத்யாத்மிகம் - உடலுக்கு ஏற்படும் உபாதை; அதாவது, ஜலதோஷம், தலைவலி, காசம், குஷ்டம் போன்ற நோய்கள். மனத்தில் ஏற்படும் உபாதை; அதாவது, வருத்தம், பயம், கோபம் போன்ற அநிஷ்டங்கள்.

ஆதி பௌதிகம் - துஷ்ட மிருகங்களான புலி, சிங்கம் இவற்றாலும், விஷ ஜந்துக்களான தேள், பாம்பு இவற்றாலும் பீடிக்கப்படுவது.

ஆதி தைவிகம் - வெள்ளம், அதிக மழை, அதிக வெய்யில், புயல், அதிக குளிர் இவைகளால் உண்டாகும் துயரம்.

2. இவை அனைத்தும் ப்ராரப்த பாப விசேஷங்களால் சம்சாரி ஜீவர்களுக்கு உண்டாகும் இன்னல்கள்.

இவ்விஷயத்தில், பகவத் ராமானுஜரின் சரணாகதி கத்யம் :

ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக து:கவிக்ந கந்த ரஹித: த்வம் த்வயம்
அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்க ஸ்ேகமாஸ்வ

2. **சூர்ணிகை பத உரை** :

ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிக - சரீர மன நோய்களுக்கும், பிற ஜந்துக்களால் துன்பத்திற்கும், இயற்கையின் சீற்றத்தால் வரும் துயரத்துக்கும் காரணமான

து:கவிக்ந கந்த ரஹித: த்வம் - இடர்களின் சுவடுகள் களையப் பெற்று தேவரீர் வாழ்வீர்

த்வயம் அர்த்தாநுஸந்தாநேந - த்வய மந்திரத்தையும் அதில் உள்ள அங்க அங்கி விளக்கங்களையும்

ஸஹ ஸதா ஏவம் வக்தா - எப்போதும் ஆவர்த்தித்துக் கொண்டு

யாவச்சரீரபாதம் - பரமபதம் அடையும் வரையில் உத்தரக்ருத்யமாக இங்குள்ள காலம்

அத்ரைவ ஸ்ரீரங்க ஸ்ேகமாஸ்வ - வரையில் பூலோக வைகுண்டாமான ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் பகவத் கைங்கர்யங்களில் சுவை கொண்டு வாழ வேண்டும் (இந்த ஸ்ரீரங்க க்ஷேத்ரமானது,

ப்ரபன்னர்கள் இங்குள்ள காலம் வசிக்க, அனைத்து பகவத் க்ஷேத்ரங்களுக்கும் உபலக்ஷணம் என நம் பூர்வர்கள் அருளுவர்)

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

130. ஆகார த்ரய ஸம்பன்னாம் என்பது எதைக் குறிப்பதாகும்?

1. பெரிய பிராட்டியைக் குறித்து, நடாதூர் அம்மாள் அருளிச் செய்த ஸ்லோகம்:

ஆகாரத்ரய ஸம்பன்னாம் அரவிந்த நிவாஸிநீம் அசேஷ ஜகதீசித்ரீம் வந்தே வரத வல்லபாம்

அதாவது,

சேஷத்வ பாரதந்த்ர்ய போக்யதைகளில் அவனையன்றி அறியாதமை என்று சொல்லக்கூடிய முப்பெருமை பெற்றவளும் தாமரையில் வசிப்பவளுமான எல்லா உலகையும் நியமித்து நடத்துமவளுமான வரதனுடைய அன்புக்குரியவளை வணங்குகிறேன்.

2. பெரிய பிராட்டியின் மூன்று உயர்ந்த குணங்கள் சம்சாரி ஜீவர்களின் நலனுக்கு ஹேதுவாகின்றன.

#. **புருஷகாரம், உபாயம், உபேயம்** என்று மூன்று குணங்களை பிராட்டியின் குணங்கள் என்று சிறப்பாகச் சொல்வது வழக்கம்.

புருஷகாரமாவது சம்சாரி ஜீவர்களின் பாபங்களைக் களைய செய்யும் பரிந்துரை.

உபாயமாவது சம்சாரி ஜீவர்களின் பாபங்களைக் களைவது.

உபேயமாவது ஜீவர்களின் கைங்கர்யத்தை ஸ்வீகரிப்பது.

2. பிராட்டியின் பெயர் காரணமாக **ஸ்ரீ** என்பதற்கு ஆறு அர்த்தங்கள் ஸித்திக்கின்றன; அவைகளில் முதல் நான்கு புருஷகாரத்வத்தையும் மீதம் ஜீவர்களின் பாபத்தை தணிக்கும் ஸித்தோபாயத்வத்தையும் சொன்னபடி.

ச்ரீயதே - அடையப்படுகின்றாள்; எம்பெருமானிடம் பரிந்துரைக்க வேண்டி ஜீவர்கள் அவளை அடைகிறார்கள்.

ச்ரயதே - அடைகின்றாள்; தன்னை அண்டிய ஜீவரகளுக்காக எம்பெருமானை அவர்கள் விஷயமாக, பரிந்துரை செய்ய, அடைகிறாள்.

ச்ருணோதி - கேட்கறாள்; தன்னை அண்டிய ஜீவர்களின் குறைகளைக் கேட்கிறாள்.

 # ச்ராவயதி - கேட்பிக்கிறாள்; ஜீவர்களிடம் கேட்டதை ஸர்வேஸ்வரனிடம் விண்ணப்பிக்கிறாள்.

 # ச்ருணாதி - ஒழிக்கிறாள்; மோக்ஷத்திற்கு தடையான ஜீவர்களின் பாபங்களை ஒழிக்கிறாள்

 # ச்ரீணாதி - ஜீவர்களுக்கு பரிபூரண ப்ருஹ்மானுபவமான பலனை அளிக்கிறாள்.

3. பொதுவாக, பெரிய பிராட்டியின் புருஷகாரத்வத்தையும் உபேயத்தையும் அங்கீகரிக்கும் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், பிராட்டிக்கு ஸித்தோபாயத்வத்தை ஏற்க மறுக்கினாறனர்; இது ப்ரமாண விரோதம்; பிராட்டியிடம் ஏற்படும் அபசாரம்.

ஸ்ரீ ஸுக்த வரிகளாவது:

தாம் பத்மிநேமீம் சரணம் அஹம் ப்ரபத்யே: லக்ஷ்மீர்மே நஷ்யதாம் த்வாம் வ்ருணே

என்கிற ஸ்ருதி வாக்யத்தால்,

லக்ஷ்மி தேவியை சரணமடைந்து பாபத்ததைப் போக்கி அருளப் ப்ரார்த்திப்பதாக கூறுவதால், பிராட்டி ஸித்தோபாயம் என அறியலாம்.

பாஞ்சராத்ர சாஸ்த்திரங்களினாலும்,

லக்ஷ்ம்ய ஸஹ ஹ்ருஷிகேச: தேவ்யா காருண்ய ரூபயா. ரக்ஷக ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே

எனப்படுவதால் எப்போதும் பிரியாத லக்ஷ்மி பிராட்டியுடன் சேர்ந்து எம்பெருமான் ரக்ஷண கார்யத்தை செய்கிறான், என அறியலாம்.

4. ஆக, பெரிய பிராட்டியும் எம்பெருமானைப் போல ஸித்தோபாயமாகவும் ஸித்தோபேயமாகவும் இருக்கிறாள். **புருஷகாரம்** பிராட்டிக்கே உள்ள அதிகப்படியான ஆகாரம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

131. <u>நம: - சரணாகதி - ப்ரணாமம் - இவைகள் ஸக்ருத் கர்த்வ்யமா?</u>

1. ஒரு பதத்திற்கு பல அர்த்தங்கள் இருக்க வாய்ப்பு உளது. உதாரணமாக,

சரணம் எனும் பதம் மூன்று அர்த்தங்களைக் கொண்டது - **ரக்ஷகன் உபாயம்** மற்றும் **வீடு** என்பதாகும்.

ஸர்வஸ்ய சரணம் ஸுக்ருத் - எம்பெருமான் ரக்ஷகனாகிறான், என்றாகிறது

பறவை சரணாலயம் - பறவைகளின் வீடு என்றாகிறது

சரணம் வ்ரஜ - உபாயமாக பற்று என்றாகிறது

அதே போல, பல அர்த்தங்களைக் கொண்ட **நம:** மற்றும் **ப்ரணாமம்** எனும் போது ப்ரகரணத்தை.ஆராய வேண்டும்.

2. **நம:** எனும் பதம் ஸ்வரூப உபாய புருஷார்த்த பரம். மூன்று அர்த்தங்களைக் கொண்டது.

மந்த்ரராஜபத ஸ்தோத்திரத்தில், **நம:** எனும் பதம் **உபாயம்** என்பதைக் குறிக்கிறது.

நமஸ்காராத்மகம் யஸ்மை விதாயா ஆத்ம நிவேதனம்

எனப்படுகிறது.

அதாவது

நமஸ்காரம் என்பதான ஆத்மசமபர்ப்பணத்தை யாரிடம் செய்து, தன்னுடைய துக்கம் அனைத்தும் நீங்கப் பெற்று, அடையவேட்டிய அனைத்தையும் அடைகின்றானோ அந்த ஸர்வேஸ்வரனை வணங்குகிறேன்.

இவ்வழியிலே **நம:** உபாய பரம்.

இந்த **நம:** என்பது ஜீவ ஸ்வரூபத்தையும் குறிக்க வல்லது.

நம: என்கிற சப்த அர்த்தத்தைக் கொண்டு பார்க்கும் போது,

ந மம வ்வாதந்த்ரியம் (ஜீவனுக்கு நிரபேக்ஷ ஸ்வாதந்த்ரியம் கிடையாது), என்று

ஜீவர்களின் செயல்கள் அனைத்தும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு உட்பட்டது என அறியலாம்.

அதனால் ஜீவர்கள் பரதந்திரர்கள் என்பது தெளிவாகிறது. இது ஸ்வரூப பரம்.

நம: என்கிற சப்த அர்த்தத்தைக் கொண்டு மேலும் பார்க்கும் போது,

ந மம ஸ்வாமித்வம் (ஜீவனுக்கு நிருபாதிக ஸ்வாமித்வம் கிடையாது), என்றும்

தெளிவதால், ஜீவர்கள் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு ஸ்வாபாவிகமாவே சேஷ பூதர்கள், ஆவர், என்பது ஸித்தம். இதுவும் ஸ்வரூப பரம்.

இந்த **நம:** என்பது அநிஷ்ட நிவ்ருத்தியான புருஷார்த்தத்தையும் உணர்த்த வல்லது.

ஜீவ ஸ்வரூப விரோதமான மமகாரத்தை **நம:** என்பது நிஷேதிப்பதால், அநிஷ்ட நிவ்ருத்தி மற்றும் இஷ்ட ப்ராப்தி பூர்வகமான புருஷார்த்தம் சொன்னபடியாயிற்று.

இதனால் தெளிய வேண்டுவதாவது, **நம:** என்று சரணாகதி உபாயத்தைக் கூறும் போது மட்டுமே ஸக்ருத் கர்தவ்யமாகிறது. ஆனால் கார்ப்பண்ய அநுஸந்தானமாக ஸ்வரூப பரத்தை விவக்ஷிக்கும் போது, அது ஸக்ருதாகாது.

ஸ்ரீஆளவந்தார், ஸ்தோத்ர ரத்னத்தில்,

நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே

அருளியுள்ளார்.

அதாவது,

தனது இயலாமையான கார்ப்பண்யத்தை முன் வைத்து, அதற்காக நம: சப்தங்களை பல விதங்களில் ப்ரயோகித்து, கர்ம யோகம் ஞான யோகம் ஆகியவற்றை அங்கமாகக் கொண்ட பக்தி யோகம் செய்ய நான் தகுதி அற்றவன் என சரணாகதி அநுஷ்டானத்துக்கு தன் தகுதியை வெளியிட்டு, அதனால் எம்பெருமான் திருடிகளையே சரணமாகப் பற்ற ப்ரார்த்திப்பது, என்றபடி.

சரணாகதி அநுஷ்டானம் ஸக்ருத் கர்தவ்யமாயினும் காரப்பண்ய அநுஸந்தானம் அஸக்ருத் என்பதை உணர்ந்தால், ஸ்ரீ ஆளவந்தார் வரிகளில் உள்ள நம: பதத்தினால் கலக்கம் ஏற்பட விரகில்லை.

3. **ப்ரணாமம்** எனும் பதம் ஸ்வரூப உபாய புருஷார்த்த பரம். மூன்று அர்த்தங்களைக் கொண்டது.

ப்ரணாமம் எனும் வணங்குதல் - ஆகிஞ்சன்ய அநுஸந்தானம். ஸ்வரூப பரம்.

மஹாபாரதத்தில் வேதவ்யாஸர்,

தஸ்ய யக்ஞ வராஹஸ்ய விஷ்ணோர்மித தேஜஸ: ப்ரணாமம் யேபி குர்வந்தி தேஷாம்பி நமோ நம:

என்று கூறியதை ப்ரமாணமாக்கி,

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம், புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில், அளவற்ற தேஜஸை உடைய யக்ஞ வராஹனான ஸ்ரீவிஷ்ணுவை வணங்குபவர்களை பல முறை வணங்குகிறேன், என அருளிச் செய்தார். இங்கு வணங்குவதை (ஸேவிப்பதை) , ஒரு பலனுக்கான செயலாக அல்லாமல், ஆகிஞ்சன்ய அநுஸந்தானமாக கூறப்பட்டு, அஸக்ருத் கர்தவ்யமாக (பல முறை செய்ய வேண்டுவதாக) வெளியிட்டிருக்கிறார்.

கண்ணன் கீதையில்,

தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா. உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞாநிநஸ் தத்வதர்சிந:

என்கிறான்.

அதாவது, 'ஆத்ம ஞானத்தை பெற விரும்பும் நீ அந்த ஜ்ஞானத்தை பிழையற உணர்ந்த தத்வ வித்துக்களான பெரியோர்களிடம், ப்ரணாமாதிகளை செய்து பணிவுடன் அடங்கி கேட்டு அறிய வேண்டும்' என்கிறான்.

இங்கும், ப்ரணாமாதிகளை (ஸேவிப்பதை) அஸக்ருத் கர்தவ்யமாகவே கொள்ள முடியும்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் - அபராத பரிஹார அதிகாரத்தில், பாகவத அபசாரத்தை, ராஜ தார அபசாரம் போல் கொடியது ஆகிறது எனக் கூறி அதற்கு பரிஹாரம் சோல்லும் போது,

ரூக்ஷாக்ஷராணி ச்ருன்வன் வை ததா பாகவதேரி தான் ப்ரணாம பூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத் வைஷ்ணவோ ஹி ஸ:

என்கிற சாஸ்த்திர அர்தத்தை விளக்கியுள்ளார்.

அதாவது, 'ஒரு பாகவதன் தன்னை குறித்து கடுமையாகப் பேசினாலும், அவனை வணங்கியபடி இருந்து , அவன் கோபத்திற்கு தான் இலக்கானதற்காக மன்னிப்பு கேட்பவனே உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் ஆவான்' என்பதாகும்.

இங்கும் 'வணங்கியபடி இருந்து' (ஸேவித்தபடி இருப்பதை) அஸக்ருத் செயலாகவே கொள்ள முடியும்.

ஸ்ரீவைகுண்ட கத்யத்தில், ஸ்ரீராமானுஜர்,

ப்ரணம்ய உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய

என்று

மீண்டும் மீண்டும் முக்தன் பரம பதத்தில் ஸேவிப்பதாக அருளியுள்ளார். இது புருஷார்த்த பரம்.

முக்தனுக்கு இந்த ப்ரணாமம், புருஷார்த்தமான கைங்கர்யத்தில் சேருவதால், ஸம்ஸாரி ஜீவர்கள் இங்குள்ள காலமும், உத்தரக்ருத்யத்தை புருஷார்த்தமாகவே கூறும் போது, பல முறை ப்ரணாமங்கள் (ஸேவிப்பது) செய்யத் தகுந்ததாகவே கொள்ள வேண்டும்.

 # த்ரிஸந்த்யம் காரயேத்பாலான் ப்ரணாமம் தேவ பாதயோ: புத்ர ப்ரேஷ்யஸ்ததா சிஷ்ய இத்யேதம் ச நிவேதயேத்

என்கிற ஸம்ஹிதா வாக்யப்படி

ஒரு ஆசார்யன், சிஷ்யனுடைய ஆத்ம ரக்ஷா பரத்தை எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்க வேண்டும்.

இது, சரணாகதி அநுஷ்டினத்தில் உள்ள ஆசார்ய நிஷ்டையாகக் கூறப் படுகிறது. இந்த சரணாகதி அநுஷ்டானம், ஆசார்யன் செய்விக்கும் போது, அந்த சிஷ்யன் ஸேவித்த வண்ணம் இருப்பது ஸக்ருத் கர்த்தவ்யம் (ஒரு முறை செய்யும் செயல்) அன்று. பல முறை செய்ய

வேண்டுவதாயிற்று. ஏனெனில் அந்த செயல் வடிவமான சிஷ்யனின் செயல், ஆகிஞ்சன்ய அநுஸந்தானம். ஆசார்யன் செய்விக்கும் சரணாகதி அநுஷ்டானம் ஸக்ருத் கர்தவ்யம்.

ஆக **ப்ரணாமம்** உபாயமாகும் போது மட்டுமே ஸக்ருத் கர்தவ்யம்.

4. சரணாகதி எனும் உபாயம் ஸக்ருத் கர்தவ்யமே.

ஸ்ரீராமனும்

ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்தீதச யாசதே. அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி ஏதத் வ்ரதம் மம

என்று

ஒரு முறை சரணாகதி செய்தவனை தான் ரக்ஷிக்கும் வ்ரதம் உடையவன் என்றான்.

வராஹ சரமஸ்லோகத்தில், ஸர்வேஸ்வரன் பூமிப் பிராட்டிக்கு வாக்களிக்கிறான்.

ஸ்தீதே மனஸி ஸு ஸ் வதே சரீரே சதி யோ நர தாது சாம்யே ஸ்தீதே ஸ்மர்த்தா விஸ்வ ரூபஞ்ச மா மஜம் ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண சந்நிபம் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

அதாவது,

‘எவனொருவன், தனது உடல் நல்ல நிலையில் இருக்கும் போது, என்னிடம் மோக்ஷத்திற்கான சரணாகதியை அநுஷ்டித்து இருக்கின்றானோ, அவனது கடைசி காலத்தில், மூச்சு, பேச்சின்றி, நாக்கு தடுமாறும் நிலையில், மரக்கட்டையாக இருக்கும்போது, என்னை அவன் நினைக்கத்தேவை இல்லை. நானே அவனுக்கு என் நினைவை உண்டு பண்ணி வழி நடத்துவேன்’

இதனால், ஒரு முறையே சரணாகதி அநுஷ்டானம் செய்ய வேண்டுவதாகத் தெளியலாம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

132. <u>எம்பெருமான் வ்யாஜ நிரபேக்ஷமாக மோக்ஷமளிப்பானா?</u>

ஸ்வதந்தரனான ஸ்ரீமந் நாராயணன், பரம காருணிகனாக இருக்கிறபடியால், வ்யாஜ நிரபேக்ஷமாக சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷமளிப்பான், என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிப்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. ஸ்வதந்தரனான ஸ்ரீமந் நாராயணன், பரம காருணிகனாக இருக்கிறபடியால், வ்யாஜ நிரபேக்ஷமாக சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷமளிப்பான், என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிப்பது அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

ஆழ்வார் பாசுரத்தை ப்ரமாணமாக்கி, வேத ப்ரமாணங்களுக்கு முரணாக நிர்தாரிப்பவரோடு, ஸத் ஸம்ப்ரதாயத்துக்கு களங்கம் உண்டாக்கும், என ஸ்வாமி தேசிகன் **ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய சாரத்தில்** நிஷ்கர்ஷிக்கிறார்.

2. எல்லையற்ற காலம் ஜீவர்களை சம்சாரத்தில் வைத்திருப்பதும் பின்பு ஒரு காலத்தில் பரமபதத்தை அளிப்பதற்கும் எம்பெருமானுக்கு உள்ள ஸர்வ சுதந்திரமே காரணம், என பூர்வபக்ஷிகள் கருதுகின்றனர் ஏனெனில், ஸ்வாமி நம்மாழ்வார், பாசுரத்தில் அருளியதனால், என்பர்.

ஆனால், இவ்வாதம் சாஸ்த்திரத்தோடும் ஆழ்வாருடைய மற்ற பாசுரங்களோடும் விரோதிக்கும்.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (10-8-9) :

இன்று என்னைப் பொருள் ஆக்கி தன்னை என்னுள் வைத்தான் அன்று என்னைப் புறம் போகப் புணர்த்தது என் செய்வான் குன்று என்னத் திகழ் மாடங்கள் சூழ் திருப் பேரான் ஒன்று எனக்கு அருள் செய்ய உணர்த்தல் உற்றேனே

இதற்கு அர்த்தம் கூறும் போது,

அசேதனத்தைப் போலே இருந்த என்னை, மோக்ஷம் பெற தகுதி உள்ளவனாய் கருதி, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், ரக்ஷித்தருளினான். அவன் திருவருளைப் பெறுவதற்கு முன்புள்ள நாட்களில், பரதந்த்ரனான நான் சம்சார கடலிலே மூழ்க, அவன் ஒன்றும் செய்யாதிருந்தான். இப்படிப் பட்ட எம்பெருமான், முன்பு கை விட்டதற்கு காரணம் சொல்லாமலும், இன்று என்னை அங்கீகரித்ததற்கு காரணம் சொல்லாமலும், இருப்பதற்கு விஷயமானது, எம்பெருமானின் ஸர்வ சுதந்திரமே.

ஆக, ஜீவர்களாகிய நாம், தன்னை காத்துக் கொள்ள எந்த ஒரு அநுஷ்டானத்தையும் செய்வது பொருந்தாது. எம்பெருமானது கருணை எப்போது எவன் பக்கலிலே விழுகிறதோ, அப்போது அவன் ரக்ஷிக்கப் படுவான் என எண்ணி காத்தாருப்பதே சரணாகதியாகும்,

என பூர்வபக்ஷிகள் அர்த்தம் கூறுவர்.

இந்த விளக்கம், பக்தி யோகம் மற்றும் சரணாகதியை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும், ஸ்ரீ ராமானுஜர் அருளிய சரணாகதி கத்யம், ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் போன்ற க்ரந்தங்களோடும் முற்றிலுமாக விரோதிக்கும்.

3. ஸாத்யோபாயத்தை விதிக்கிற உபநிஷத்தோடு முரண் படாமல் விளக்கமளிக்க, ஸ்வாமி நம்மாழ்வாரின் சில பாசுரங்களைக் கொண்டு, அவருடைய திரு உள்ளக் கருத்தை அறிந்து, இந்த திருவாய் மொழி (10-8-9) பாசுரத்தை விளக்க வேண்டும்.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (9-10-5) :

சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் அரண் அமைந்த மதிள் சூழ் திருக் கண்ணபுரத் தரணி யாளன் தனது அன்பர்க்கு அன்பாகுமே

அதாவது,

ஞான, சக்தி, கர்மானுஷ்டானம் போன்றவைகளில் குறைகள் இருந்தாலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடியை சரணமாக பற்றினவர்க்கு, சரீர காலம் முடிந்த பிறகு, அவன் வைகுந்தத்தை கொடுத்தருளுகிறான், எனபதாயிற்று. ஆக, உபநிஷத் வரிகளோடு ஒக்க, சரணாகதி அநுஷ்டானம் தேவையே என்பது ஆழ்வார் திரு உள்ளம், என்று உறுதியாகிறது.

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (6-10-10) :

அகல கில்லேன் இறையும்என்று அலர்மேல் மங்கை உறைமார்பா நிகரில் புகழாய் உலகமூன்
றுடையாய் என்னை ஆள்வானே நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே புகலொன்றிலா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

அதாவது,

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே! வேறுகதி ஒன்றும் இல்லாத அடியேன் உனது திருவடியை சரணமாக அடைந்தேன் என்கிறார். ஆக, உபநிஷத் வரிகளோடு ஒக்க, சரணாகதி அநுஷ்டானம் தேவையே என்பது ஆழ்வார் திரு உள்ளம், என்று உறுதியாகிறது.

இவைகளைக் கொண்டு, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (10-8-9) இன்று என்னைப் பொருள் ஆக்கி என்கிற பாசுரத்தை கணிசிக்கும் போது, அந்த பதிகத்தில் உள்ள முதல் பாசுரத்தைக் கொண்டு (10-8-1) விளக்க வேண்டுவதாகிறது; அப்போது தான் அவர் அருளிய பதிகத்தின் பொருள் விளங்கும்.

**திருமாலிருஞ்சோலை மலை என்றேன் என்ன திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்
குருமா மணியுந்து புனல்பொன்னித் தென்பால் திருமால்சென்று சேர்விடம் தென் திருப்பேரே**

என அருளியுள்ளார்.

அதாவது, திருமாலிருஞ்சோலை என்று சொன்னேன் என்பதையே நிமித்தமாகக் கொண்டு என்னை ரக்ஷித்தான் என கூறுவதாயிற்று.

ஆக, ஒரு சிறு செயலான, அவன் ஊரைச் சொன்னதையே ஒரு காரணமாக்கி, தன் மனத்தில் வந்து புகுந்து, வழி நடத்தி, அதன் பிறகு தன்னை சரணாகதியில் மூட்டி, தன்னை ரக்ஷிக்க வேண்டிய பொருளாகக் கருதி ரக்ஷித்தருளினான் எனஅப்பதிகத்திற்கு கருத்து கொள்ள வேண்டும்.

அதனால் அறியப் படுவது என்னவென்றால், ஜீவர்களிடம் உள்ள எம்பெருமானின் எல்லையற்ற கருணை. இதுவே, இந்த திருவாய் மொழி 10-8-9, இன்றென்னை பொருளாக்கி பாசுரத்தின்,

தாத்பர்யம், என அறிய வேண்டும். இந்த விளக்கத்தினால், இப்பாசுரம் மற்ற பாசுரங்களோடும், உபநிஷத் வரிகளோடும் முரண்பாடு இல்லாமல் இருக்கும்.

அதாவது, சாஸ்த்திர விதிப்படி **பக்தி 'யோகம்** என்ற பெரியதோரு உபாயத்தை செய்யாத போதும், சாஸ்த்திரத்தில் அநுமதித்தபடி அவன் திருவடியில் சரண் புகுந்த காரணத்தால், இன்று என்னை சம்சார துக்கத்திலிருந்து விலக்களித்து மோக்ஷமளிக்க முன் வந்திருக்கிறான், அவன் கருணையின் காரணமாக, என்று உணர வேண்டும்.

ஆக, ஜீவர்களாகிய நாம், தன்னை காத்துக் கொள்ள ஒரு அநுஷ்டானத்தையும் செய்யலாகாது என, உபநிஷத் வரிகளுக்கு விரோதமாக, ஆழ்வார் அருளினார் என கூறலாகாது.

அப்படி ஆழ்வார் கூறி இருந்தால், அதை த்ராவிட வேத சாகரம் (தமிழ் வேதம்) என்று எப்படி கூற இயலும்?

4. மேலும், ஸ்வாமி நம்மாழ்வார், நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனை என்கிற திருவாய்மொழி (1-7-5) பாசுரத்தில் அருளியதனால், அதாவது

விடுவேனோவென் விளக்கை என்னாவியை, நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனை, தொடுவே செய்திள ஆய்ச் சியர்க்கண்ணினுள், விடவேசெய்து விழிக்கும்பிரானையே

அதாவது, சம்சார போகத்திலை அமிழ்ந்து கிடக்கும் ஜீவர்களை தன்னுடைய ஸ்வாதந்த்ரியத்தினால், ஸர்வேஸ்வரன் அவனுக்கு இஷ்டபட்ட காலத்தில் சம்சார பந்த்த்திலிருந்து விடுவிக்கிறான், என பூர்வபக்ஷிகள் விளக்கமளிப்பர்.

அந்த விளக்கம் பல ப்ரமாணங்களோடு விரோதிக்கும்.

தத்வங்களில் மாறாட்டம் ஏற்படாமல், உரிய உபாயத்தை அநுஷ்டித்து பரம புருஷார்த்தத்தை அடைய வேண்டிய சம்சாரி ஜீவர்களுக்கு, ஆசார்ய சம்பந்தமாவது சிலருக்கு உண்டாவதற்கு காரணத்திற்கான ப்ரமாணங்களை ஆராயும் போது,

ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்தம் யத்ருசயா ஸுஹ்ருதம் ததா. விஷ்ணோஹோ கடக்ஷம் அத்வேஷம் ஆபிமுக்யம் ச ஸாத்விகைஹை ஸம்பாஷணேம் ஷடேதானி ஆசார்ய ப்ராப்தி ஹேதவஹ

என தெளிகிறது.

அதாவது,

தெளிந்த தத்வ ஞானியாக, சாஸ்த்திரங்களை நன்கு அறிந்த, உயர்ந்த ஆசார்யன் ஒருவனை, இந்த சம்சாரி ஜீவன் அடைய, ஆறு காரணங்கள் சாஸ்த்திரத்தினால் கூறப் படுகின்றன; அவை ஆவன :

எம்பெருமானின், ஸகல ஜீவர்களிடம் கொண்டுள்ள பொதுவான நல்லெண்ணம்,

சம்சாரி ஜீவனனுடைய பூர்வ ஜன்ம யாத்ருச்சிக ஸுஹ்ருதம்,

சம்சாரி ஜீவனனுக்கு உண்டான ஸர்வேஸ்வரனின் கடாக்ஷம்,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் உண்டான இச்சை,

சம்சாரி ஜீவனுக்கு ஈஸ்வரனிடத்தில் த்வேஷம் இல்லாமை, மற்றும்

சம்சாரி ஜீவனனுக்கு உள்ள ஸாத்வீகர்களின் ஈடுபாடு

என்கிறது சாஸ்த்திரம்.

முன் ஜன்மத்தில் செய்த ஜீவர்களுடைய ஒரு அல்ப புண்ய விசேஷம் (யாத்ருச்சிக ஸுஹ்ருதம்), பிழையற கற்று பரிபூரண சாஸ்த்ர ஞானம் உடைய ஆசார்யனை அடைவதற்கு, ஒரு காரணமாக அமைகிறது என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

இந்த ஸுஹ்ருதத்தைக் கொண்டு ஒரு அல்ப உலக ஸுகத்தைக் கொடுத்து கழிக்காமல், உயர்ந்த பலனை அடைய காரணமாக்கும் எப்பெருமானை, நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதன் என ஆழ்வார் அருளினார், என்றபடி சாஸ்த்திர விரோதமற்ற விளக்கமே பொருந்தும்.

5. இதையே, ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

ஈஸ்வரன் ஸ்வதந்த்ரனேயாகிலும் வைஷம்ய நைக்ருஹ்ண்யங்களாகிற தோஷங்கள் தனக்கு தட்டாமைக்காக இவன் பக்கலிலே ஒரு வ்யாஜத்தை உண்டாக்கி, அத்தை அவலம்பித்துத் தான் ரக்ஷிக்கும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஈஸ்வரன் ஸ்வதந்த்ரனேயாகிலும் - யாராலும் கேள்வி கேட்க ஒண்ணாதபடி ஸர்வ சுதந்திரனாகவே ஸர்வேஸ்வரன் இருப்பினும்

வைஷம்ய - ஒருவரை ரக்ஷித்து மற்றவரை கை விடும் பாரபக்ஷம்

நைக்ருஹ்ண்யங்களாகிற தோஷங்கள் - அதன் காரணமாக ஏற்படும் சிலர் விஷயத்தில் கருணை இன்மை ஆகிய குற்றங்கள்

தனக்கு தட்டாமைக்காக - சாஸ்த்திரங்களால் ஹேய குணங்களற்றவன் என போற்றப் படும் தனக்கு ஏற்படாதிருக்க

இவன் பக்கலிலே ஒரு வ்யாஜத்தை உண்டாக்கி - இந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஒரு மோக்ஷ உபாயத்தை விதித்து அதை ஒரு ஸுக்ருத பலனுக்கான விசேஷமாய்க் கொண்டு அந்த சம்சாரி ஜீவரைச் செய்வித்து

அத்தை அவலம்பித்துத் தான் - அந்த உபாய அநுஷ்டானத்தைக் காரணமாக்கி

ரக்ஷிக்கும் - மோக்ஷ பலனை கொடுத்தருள்வான்

6. ஆக, ஸ்வதந்தரனான ஸ்ரீமந் நாராயணன், பரம காருணிகனாக இருக்கிறபடியால், வ்யாஜ நிரபேக்ஷமாக சம்சாரி ஜீவர்களுக்கு மோக்ஷமளிப்பான், என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிப்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

133. <u>எம்பெருமானின் ஸவாதந்திரயமும் தயையும் மட்டுமே மோக்ஷ ஸாதனமா?</u>

ஸவாதந்திரயமும் பரம காருணிகத்வமும் ஒன்று சேறும் போது, வ்யாஜ நிரபேக்ஷமாக பலனளிக்கக் காரணமாகிறது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிப்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. ஸவாதந்திரயமும் பரம காருணிகத்வமும் ஒன்று சேறும் போது, வ்யாஜ நிரபேக்ஷமாக பலனளிக்கக் காரணமாகிறது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிப்பது அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

2. ஸர்வேஸ்வரன் தானே பரம் பொருள் என்பதை தன் திருவாக்கினாலே வெளியிட்டு அருளினான்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் தன்னையே பரம்பொருளாக உபதேசத்தை செய்கிறான் (பகவத் கீதை 7-7):

மத்தப் பரதரம் ந அன்யத் கிஞ்சித் அஸ்தி தண்ஞ்ஜய மயி சர்வம் இதம் ப்ரோதம் சூத்ரே மனிகானா இவ

அதாவது,

‘என்னை விட உயர்ந்த வஸ்து ஒன்று கிடையாது. நானே பரம் பொருள்’

என்கிறான் கண்ணன்.

ஸர்வேஸ்வரனான கண்ணன், தானே ஸர்வ ஸ்வதந்த்ரனாயும் பரனாயும் இருப்பதால், தன்னை பூஜிப்பதில் உள்ள ஏற்றத்தை மேலும் பகவத் கீதையில் (9-24) அர்ஜுனனுக்கு விளக்குகிறான்.

அஹம் ஹி ஸர்வ யஞானாம் போக்தா ச ப்ரபுரேவ ச. ந து மாம் அபிஜாநன்தி அத தத்வேநது ச்யவந்திதே

அதாவது,

‘எந்த ஒரு தேவதையை பூஜித்தாலும் நான் அன்றோ அவர்கள் செய்யும் பூஜைகளை ஏற்று கொள்பவனாயும் பலனை கொடுப்பவனாயும் இருக்கிறேன். இதை அறியாதவர்கள் மற்ற தேவதைகளை பூஜித்து, அற்ப பலனை பெற்று அதனையும் பறி கொடுக்கின்றனர்.’

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய

ப்ருஹ்ம ஸூத்ரம் (3-2-8-37) மற்றும் அதற்கு விளக்க உரையாக இருக்கிற ஸ்ரீ ராமானுஜர் அருளிய **ஸ்ரீ பாஷ்யத்திலும்** இது விளக்கப் படுகிறது :

பலமத உபபத்தே:

அதாவது, ஸகல பலனும் ப்ருஹ்மத்திடமிருந்தே.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணைத் தவிர எந்த ஒரு தாழ்ந்த தேவதை பலன் அளிப்பதாக சாஸ்த்திரங்கள் கூறினாலும், அவை அனைத்தும் பரம்பொருளான் எம்பெருமானின் அநுக்ரஹத்தாலேயே என உணர வேண்டும், என்பதாகிறது.

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை **பரமாத்மா** என்றும் அனைத்து லோகங்களில் உள்ள **சேதன** மற்றும் **அசேதன** வஸ்துக்களும் அவனுக்கு சரீரம் என்றும் சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

3. இப்படி ஸர்வ ஸ்வதந்த்ரனாயும் பரனாயும் இருக்கும் ஸ்ரீமந் நாராயணன், தன்னுடைய அபார கருணையினால், அவரவர்கள் தகுதிக்கு ஏற்ப ஓர் உபாயத்தை விதித்து தான் மோக்ஷமளிக்கிறான், என்பது ப்ரமாண ஸித்தம்.

ஸர்வேஸ்வரனான கண்ணன் ப்ராக்ருத பலன்ககளில் உள்ள தோஷங்களை உபதேசத்தை செய்கிறான் (பகவத் கீதை 9-33):

கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்

அதாவது,

‘தாழ்ந்த உலக அநுபவத்தை விட்டு உயர்ந்த பலனை அடைய என்னை பஜி.’

என்கிறான் கண்ணன்

ஸர்வேஸ்வரனான கண்ணன் உயர்ந்த பலனாகிற மோக்ஷத்தை அடைய கடைசி அத்யாயத்தில் கடைசி உபதேசமான ஸ்லோகத்தில் இந்த உபதேசத்தை செய்கிறான் (பகவத் கீதை 18-66):

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:

அதாவது,

‘கடினமான மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் (கர்ம யோகம், ஞான யோகம் மற்றும் பக்தி யோகமங்களையும்), செய்ய சக்தி அற்றவனாக நீ இருந்தால், அவைகளை விட்டு, என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே’

என்கிறான் கண்ணன்.

சம்சாரி ஜீவர்களிடம் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ள ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், இந்த ஜீவர்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக, சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

அதாவது, அவனது க்ருபை (கருணை) இருவிதம்:

நிர்ஹேதுக க்ருபை (காரணம் இல்லாமல் வரும் கருணை) மற்றும் **ஸஹேதுக க்ருபை** (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) ; ஆனால் இந்த இரண்டு க்ருபைகளுக்கும் உள்ள விஷயங்கள் வேறுபட்டிருக்கின்றன :

அதாவது,

நிர்ஹேதுக க்ருபை (காரணம் இல்லாமல் வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது - ஆத்மாவை நித்யமாக வைத்திருத்தல், அவனது ஞானத்தை நித்யமாக வைத்திருத்தல், ப்ரளய தசையில் அசித் துல்யமாக இருந்த சம்சாரி ஜீவர்களுக்கு ஸ்ருஷ்டியின் தொடக்கத்தில் சரீரத்தையும் புலன்களையும் கொடுக்க ஸங்கல்பித்தல், இந்த ப்ரபஞ்சத்தை உண்டாக்குதல், சம்சாரி ஜீவர்களின் நலனுக்காக சாஸ்த்திரத்தை வெளியிடுதல், அந்த சாஸ்த்திரத்தில் எளிமையான மோக்ஷ வழியை அமைத்துக் கொடுத்தல், முக்தரை ஸ்ரீவைகுண்டத்திலிருந்து மீண்டும் ஸம்ஸாரதிதிற்கு அநுப்பாமல் இருத்தல் போன்றவைகள் எம்பெருமானுக்கே உள்ள, ஜீவர்களிடம் எதையும் எதிர் பார்க்காத, ஒரு கருணையின் காரியம்.

ஸஹேதுக க்ருபை (காரணத்தை முன்னிட்டு வரும் கருணை) என்பதற்கு விஷயமாவது - ஸர்வேஸ்வரன் சாஸ்த்திரத்தில் விதித்த கார்யங்களை செய்து போகின்ற சம்சாரி ஜீவர்கள் பக்கலிலே உண்டாகும் கருணை. அதாவது, ஸஹேதுக க்ருபைக்கு காரணமாவது, அவனால் சாஸ்த்திரத்தில் சொல்லப் பட்ட, **விதி** (செய்ய வேண்டுவன) மற்றும் **நிஷேத** (செய்யக் கூடாதவன) என்கிற பாகுபாடு, பயன் உள்ளதாக இருப்பதற்கு.

ஆக, ஸர்வேஸ்வரனோடு ஜீவர்களுக்கு உண்டான இந்த **நியந்த்ரு - நியாம்ய** சம்ந்தம் கொண்டு அறிய வேண்டுவது என்னவென்றால், சம்சாரி ஜீவர்களுக்கு நியந்தாவாக இருப்பவன், **நிர்ஹேதுக க்ருபை** என்கிற கல்யாண குணங்களோடு கூடிய ஸர்வேஸ்வரன் என்பதேயாகும்.

அதனால், அவன் தன்னுடைய **நிர்ஹேதுக க்ருபை** காரணமாக, துக்க ரூபமான பிறவிப் பிணியிலுருந்து விடுபட, சம்சாரி ஜீவர்களுக்கு ஒரு எளிமையான உபாயமாகிற சரணாகதி அநுஷ்டினத்தை விதித்திருக்கிறான். அதை அநுஷ்டிக்கும் சம்சாரி ஜீவர்களை, தன் **ஸஹேதுக க்ருபையால்** பிறவிப் பிணியிலிருந்து, அவன் விடுவிக்கிறான்.

ஆக, கருணை இரு ப்ரகாரமாய் இருக்கும்.

4. இது உலக நடப்பிலும் பொருந்தும்.

ஒரு வணிக நிறுவனத்தில் ஒரு ஊழியர் தனக்கு ஏற்பட்ட பெரியதொரு மருத்துவ செலவிற்காக அந்த நிறுவன சொந்தக்காரரை அணுகி ஒரு மனிதாபிமான கோரிக்கையை வைக்கிறார்.

அந்த நிறுவன கொள்கைப்படி இந்த தொகை இந்த ஊழியருக்கு பெற தகுதி இல்லாவிடினும், இவனுடைய போக்கற்ற நிலையைக் கண்டு மனம் இறங்கி அந்த நிறுவன சொந்தக்காரர் அந்த தொகை இந்த ஊழியருக்கு தருவதாக, ஒத்துக் கொள்கிறார்.

அதற்காக ஒரு விண்ணப்ப கடிதம் எழுதி கொடுக்குமாறு இந்த ஊழியரைப் பணிக்கிறார்.

ஆக, இந்த ஊழியருக்கு பண உதவி கிடைக்க முக்கிய காரணம் அந்த நிறுவன சொந்தக்காரரின் **நிர்ஹேதுக க்ருபையே** என்றும் இந்த ஊழியர் கொடுக்கும் விண்ணப்ப கடிதமும் அந்த நிறுவன சொந்தக்காரரின் **ஸஹேதுக க்ருபையே** என்பதை எளிதில் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

அதே போல் சம்சாரி ஜீவர்களின் போக்கற்ற நிலையைக் கண்டு ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் மனம் இரங்கி, மோக்ஷத்தை அளிப்பதற்காக, சரணாகதி அநுஷ்டானம் என்ற ஒரு விண்ணப்பத்தை, மோக்ஷத்தை விரும்பும் ஜீவர்களிடம், எதிர்பார்க்கிறான். அதனால் மோக்ஷத்தை பெற முக்கிய காரணம் ஸர்வேஸ்வரனின் **நிர்ஹேதுக க்ருபையே**; நாம் செய்யும் சரணாகதி அநுஷ்டானமும் அவனுடைய **ஸஹேதுக க்ருபைக்கு** விஷயமே என்பதை உணர வேண்டும்.

இதனால், அறிய வேண்டுவதாவது, பலனளிக்கும் ஸர்வேஸ்வரனிடம் **பரத்வம்** மற்றும் **கருணை** (அதாவது, **நிர்ஹேதுக க்ருபை** என்றும் **ஸஹேதுக க்ருபை** என்றும்) எனும் ரக்ஷக குணங்கள் சேர்ந்து இருந்து, சம்சாரி ஜீவர்களின் தாபங்களைக் களைகின்றன.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ரியம் பாதகம்; அஸ்வதந்த்ரனுடைய காருண்யம் பரர்க்கும் அநுபகாரமாய் தனக்கும் க்லேசாவகமாய் இருக்கும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

 # நிஷ்க்ருபனுடைய ஸ்வாதந்த்ரியம் - கருணை இல்லாதவனுடைய ஸர்வ சுதந்திரம்

 # பாதகம் - தீங்கையோ உண்டு பண்ணும் (பிறருடைய துன்பத்திலும் இன்பம் காணும் நோக்கு உண்டாகலாம்)

 # அஸ்வதந்த்ரனுடைய காருண்யம் - சுதந்திரம் அற்றவனுடைய கருணை (தன்னை நியமிப்பவர்களை எதிர் நோக்கி உதவி புரிய வேண்டிய நிலை)

 # பரர்க்கும் அநுபகாரமாய் - மற்றவருக்கும் உதவி அற்றதுவுமாய்

 # தனக்கும் க்லேசாவகமாய் இருக்கும் - தனக்கும் மன வருத்தத்திற்கு காரணமாக இருந்து போகும்

6. ஆக, **ஸ்வாதந்திரயமும் பரம காருணிகத்வமும் ஒன்று சேறும் போது, வ்யாஜ நிரபேக்ஷமாக பலனளிக்கக் காரணமாகிறது, என ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் வாதிப்பது** ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

134. <u>வ்யாஜ நிரபேக்ஷமாக மோக்ஷம் என நைமிசாரண்ய பாசுர விளக்கமா?</u>

1. திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி பாசுரம் 1-6-9

ஊன் இடைச்சுவர்வைத்து என்பு தூண் நாட்டி உரோமம் வேய்ந்து ஒன்பது வாசல், தான் உடைக் குரம்பைப் பிரியும் போது உந்தன் சரணமே சரணம் என்று இருந்தேன் தேன் உடை கமலம் திருவினுக்கு அரசே! திரைகொள் மா நெடுங்கடல் கிடந்தாய்! நானுடை தவத்தால் திருவடி அடைந்தேன் நைமிசாரணியத்துள் எந்தாய்

2. பத உரை :

ஊன் - சம்சாரி ஜீவ சரீரத்தில் உள்ள மாமிசத்தை

இடைச்சுவர்வைத்து - சுவராக எழுப்பி

என்பு - அதன் நடுவே எலும்புகளை

தூண் நாட்டி - தூண் போல நிறுத்தி

உரோமம் வேய்ந்து - அதன் மேல் தோலால் மறைத்து, மயிர்களை மேலே வைத்து

ஒன்பது வாசல் தான் உடை - ஒன்பது விதமான த்வாரங்களை இந்த ப்ராக்ருத சரீரத்தில் வைத்து

குரம்பைப் - சம்சாரி ஜீவன் குடி இருக்கும் குடிசை போன்ற இந்த சரீரத்தை

பிரியும் போது - அந்த ஜீவன் பிரியும் காலத்தில்

உந்தன் சரணமே சரணம் என்று இருந்தேன் - முன்பு உன்னுடைய திருவடிகளிலே செய்து போந்த சரணாகதி அநுஷ்டானத்தை நினைத்திருந்தேன்;

தேன் உடை கமலம் திருவினுக்கு அரசே! - பெரிய பிராட்டியோடு கூடிய எம்பெருமானே

திரைகொள் மா நெடுங்கடல் கிடந்தாய்! - அலைகள் நிரம்பிய மிகப்பெரிய திருப் பாற்டலில் பெரிய பிராட்டியோடு வீற்றிருப்பவனே!

நானுடை தவத்தால் திருவடி அடைந்தேன் - தேவரீர் விதித்த ஆத்ம ஸமர்ப்பண யாகத்தினால் அடியேனுடைய அநிஷ்டங்கள் விலகி இஷ்ட ப்ராப்தியைப் பெற தேவரீர் திருவடிவாரத்தில் சேரப்பெறுகிறேன்.

நைமிசாரணியத்துள் எந்தாய் - நைமிசாரத்து எம்பெருமானிடத்தே விண்ணப்பிக்கிற படியாய்.

3. விளக்கம்:

இப்பாசுரத்தில் த்வய மந்திர அர்த்த ப்ரதிபலிப்பு.

பூர்வ கண்டம் சரணாகதி உபாய அநுஷ்டானம். அதாவது,

ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே

பாசுரத்தில் அநுஸந்தேயம்:

தேன் உடை கமலம் திருவினுக்கு அரசே! - பெரிய பிராட்டியோடு கூடிய எம்பெருமானே **- ஸ்ரீமந் நாராயண**

உந்தன் சரணமே சரணம் என்று இருந்தேன் - முன்பு உன்னுடைய திருவடிகளிலே செய்து போந்த சரணாகதி அநுஷ்டானத்தை நினைத்திருந்தேன் **- சரணௌ சரணம் ப்ரபத்யே**

உத்தர கண்டம் கைங்கர்ய உபேய அநுஷ்டானம். அதாவது,

ஸ்ரீமதே நாராயணாய நம:

பாசுரத்தில் அநுஸந்தேயம்:

திரைகொள் மா நெடுங்கடல் கிடந்தாய்! - அலைகள் நிரம்பிய மிகப்பெரிய திருப் பாற்டலில் பெரிய பிராட்டியோடு வீற்றிருப்பவனே! **- ஸ்ரீமதே நாராயணாய**

நானுடை தவத்தால் திருவடி அடைந்தேன் - தேவரீர் விதித்த ஆத்ம ஸமர்ப்பண யாகத்தினால் அடியேனுடைய அநிஷ்டங்கள் விலகி இஷ்ட ப்ராப்தியைப் பெற தேவரீர் திருவடிவாரத்தில் சேரப்பெறுகிறேன் **- நம:**

4. உட்கருத்து :

பிராட்டியோடு கூடிய எம்பெருமானுக்கு **ஸித்தோபாயத்வமும்**,

சம்சாரி ஜீவர்களுக்கு அவன் விதித்த **ஸாத்யோபாய அநுஷ்டானமும்**,

அதனால் ஜீவர்களுக்கு பிறகு உண்டாகும் **ஸாத்ய உபேயமாகிற** கைங்கர்ய ப்ராப்தியும்

அதை ஸ்வீகரிக்கிற, பிராட்டியோடு கூடிய எம்பெருமானின் **ஸித்த உபேயத்வமும்**, இப்பாசுரத்தில் விளக்கப் படுகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

135. எம்பெருமானுக்கு அவதார காலத்தில் துக்கமா?

அவதார காலத்தில் துக்கங்கள், ஆனந்த மயனான எம்பெருமானுக்கு, உண்மை நிலை என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. எம்பெருமான் தனது திரு அவதார காலங்களில், துக்கங்கள் அடைவதாக சில சந்தர்ப்பங்களில் உண்டாகும் போது, அதை உண்மை நிலையென ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கருதுவர்; இது அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

இந்த பூர்வபக்ஷிகளின் ப்ரமாண விரோத கருத்துக்குக் காரணம், ஸ்ரீமத் ராமாயண ஸ்லோகம்:

வ்யஸநேஷு மனுஷ்யாணாம் ப்ருஷம் பவதி துக்கித:

அதாவது, மனிதர்களின் துக்கத்தைக் கண்டு ஸ்ரீராமனும் துக்கம் கொண்டவனாகிறான்.

2. ப்ருஹ்மம் - பரம் பொருள், என்கிற ஈஸ்வர தத்வம் என்பதை அதனுடைய ஸ்வரூப நிரூபக தர்மங்களைக் கொண்டு முதலில் தெளிய வேண்டும்.

இந்த பதமாவது, சம்சார பிணியிலிருந்து விலக்கி மோக்ஷத்தை கொடுக்கும் பரம்பொருளைப் பற்றிய விளக்கமாகிறது.

அதாவது,

ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ருஹ்ம; ஆனந்தம் ப்ருஹ்ம; அமலம் ப்ருஹ்ம

என்கிறது தைத்ரீய உபநிஷத் வரி.

பரம்பொருளானவன் விகாரமற்றவன்; பூரண ஞானமுடையவன், விபு ஸ்வரூபன், ஆனந்த ஸ்வரூபன் , குறைகள் அற்றவன். அவனே ஸ்ரீமந் நாராயணன்,

என தெளிவு பட கூறுகிறது.

ஆக, அந்த ப்ருஹ்மம் - பரம் பொருள் - அவதார காலத்தில் துன்பத்தை அநுபவிக்கிறான் என்பது ஸ்ருதி ப்ரமாண விரோதம் !

3. இதே விஷயம் ஐந்தாவது வேதமாகப் போற்றப்படும் மஹாபாரத வரிகளைக் கொண்டும் தெளியலாம்.

காலஸ்ய ஹிம்ருத்யோஸ்ச ஜங்கம ஸ்தாவரஸ்ய ச ஈஷதே பகவான் ஏக: ஸத்யமேதத் ப்ரமீதிதே

ஈஷன்னபி மஹாயோகி ஸர்வஸ்ய ஜகத: ப்ரபு: கர்மாண்யாரபதே கர்த்தும் கீநாச இவ துர்பல:

தேந வஞ்சயிதே லோகாந் மாயா யோகேந கைசவ: யே தமேவ ப்ரபத்யந்தே ந தே முஹ்யந்தி மானவா:

அதாவது, காலத்தையும் ம்ருத்யுவையும் ஜங்கம ஸ்தாவரங்களையும் ஸர்வத்தையும் எம்பெருமான் ஒருவனே நிர்வஹிக்கிறான். இத் ஸத்யம். ஈஸ்வரனாக இருந்த போதும், தூது செல்லுதல், சாரதியாக பணியாற்றுதல் போன்ற சிறு வ்யாபரத்தைச் செய்வது, ஸாதுக்களுக்கு தனது நீர்மையை விளக்குவதாயும், துஷ்டர்களுக்கு ஈஸ்வர விஷயத்தில் தவறாக எண்ணத்தினால் மோஹம் உண்டாக்கவும் காரணமாகிறது.

ஆக, அவதார காலத்தில் துக்கங்கள், ஆனந்த மயனான எம்பெருமானுக்கு, உண்டாவதாக தெரிவது, அவனது அபிநயம்; ஆஸ்ருதர்களை ஈர்ப்பதற்காகவும், பகவத் த்வேஷிகளை மோஹிக்க பண்ணுவதற்காகவும்.

எம்பெருமான், அவதார காலங்களில் அபிநயிக்கிறான், என்பதற்கு மேலும் ப்ரமாணங்கள்:

வ்யாஸர் அருளிய மஹாபாரத வரி:

க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந: மோஹ இத்வா ஜகத் ஸர்வம் கத: ஸ்வம் ஸ்தானமுத்தமம்

அதாவது, பூ பாரத்தைக் குறைக்க கண்ணனாக அவதரித்த எம்பெருமான் ஜநங்களுக்கு மோஹத்தை உண்டாக்கி விட்டு பரம பதத்தை அடைந்தான்.

பராசர மஹரிஷியின் விஷ்ணு புராண வரிகள்.

மனுஷ்ய தேஹிநாம் சேஷ்டாமித்யேவம் அநுவர்த்ததே. லீலா ஜகத் பதே: தஸ்ய சந்த ஸம்ப்ரவர்த்ததே

அதாவது, எம்பெருமான் அவதார காலங்களில், மனிதர்களின் செயல்களை அநுசரித்தே, அவன் ஸங்கல்பத்தினாலே அபிநயிக்கிறான்.

பரம காருணிகனான் எம்பெருமான், துக்கமுள்ளவனாக அபிநயித்து வஞ்சிப்பது ஹேயமன்றோ என சிலர் கலங்குவார்கள். அவன் செய்து போகும் உலக படைப்பு எக்காரணத்தைக் கொண்டதென்று உணர்ந்தால், தெளிவு எண்டாகும்.

4. உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (2-1-10-33) வ்யாக்யானமான ஸ்ரீராமானுஜரின் ஸ்ரீபாஷ்யத்தில்,

லோகவத்து லீலா கைவல்யம்

அதாவது,

ஸ்ருஷ்ட்டி முதலியவை எம்பெருமானுக்கு விளையாட்டே ப்ரயோஜனம்,

என அருளினார்.

லீலா விபூதியில் இருக்கும் ஜீவாத்மாக்கள், ப்ரக்ருதியால் உண்டாக்கப் பட்ட முக்குணங்களாலான (அதாவது ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ்), சரீரத்தை உடையவர்கள்;

அதனால் நல்ல குணங்களும் கெட்ட குணங்களும் சேர்ந்தே இருக்க் கூடியவர்கள்; அவர்களின் குணங்களும் செயல்களும் அவர்களுடைய பாப புண்ய கர்மாக்களின் ஆதிக்கத்தில் உள்ளன; அதனால் அவர்களுக்கு மிதமான ஸுகமும் மற்றும் துக்கமும் கலந்து இருந்தே தீரும்; மேலும், அவர்களின் ஞானத்தில் குறைபாடுகளும், அவர்களது பாப புண்ய கர்மாக்களின் அடிப்படையில், இருக்கும்;

இங்கு அவர்கள் சாஸ்த்ர விதிப்படி நடக்கக் கட்டுப் பட்டவர்கள்; அதனால் பாப புண்யங்கள் மேலும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது; பகவானுக்கு சீற்றத்தை உண்டு பண்ணி பாபத்தை சம்பாதிக்கக் கூடிய வாய்ப்பு இந்த லோகத்து ஜீவர்களுக்கு உண்டு.

இப்படி, இருக்கும் ஜீவர்களை காத்தருள, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஞானமுள்ள ஜீவர்களுக்கு,

மனித பிறவியைக் கொடுத்து, சாஸ்த்ரங்களைக் கொடுத்து, அதை சரிவர உபதேசிக்கத் தகுந்த ஆசார்யர்களைக் கொடுத்து, தன்னுடைய ஸ்வாபாவிக நிரந்தர பரமபத ஸுகத்தை அடைய வழியையும் அந்த சாஸ்த்ரங்களிலே காட்டிக் கொடுத்து, பிறகு அந்த சம்சாரி ஜீவர்கள் விஷயத்தில் ஒரு ஸுக்ருதத்தை (ஒரு விசேஷ புண்யத்தை) எதிர்பார்த்து காத்துக் கிடந்து பரம உபகாரம் இந்த ஜீவர்களிடம் சேஷியான ஸ்ரீமந் நாராயணன் செய்துள்ளான்.

ஆக, லீலா விபூதி ஸர்வேஸ்வரனின் உகப்பிற்காக உள்ளது என்பது அவனிடம் ப்ரீதி கொண்ட சம்சாரி ஜீவர்களுக்கு, பிறவிப் பிணியை தீர்க்க வகை செய்து உகப்பை அடைகிறான், என்பதாகும். அவன் விதித்த விதிகளை மீறுபவர்களை, சம்சார துக்கத்தினால் தண்டித்து, அதனால் அவர்கள் பாபங்களைக் களைந்து, உகப்பை அடைகிறான். இரண்டும் க்ருபா கார்யமே!

உதாரணமாக, ஆரோக்யமான குழந்தைகளுக்கு, சுவையான உணவை வழங்கியும், உடல் நலம் குன்றிய குழந்தை விஷயத்தில் கசப்பு மருந்தை அளித்தும், பெற்றோர்கள் தங்கள் கருணையை வெளிப்படுத்துகிறார்கள் அன்றோ! அது போலத்தான் ஸர்வ ரக்ஷகனான, பரம காருணிகனான எம்பெருமான்.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

ஆகையால், அவதார வ்ருத்தாந்தங்களிலும், துக்க அபிநய மாத்திரமே உள்ளது; அது தானும் க்ருபா மூலம்...இப்படி இருக்கை இவனுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமென்று தர்ம க்ராஹக ப்ரமாண ஸித்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஆகையால் - தன் ஸங்கல்பத்தாலே ஆஸ்ருதர்களை ரக்ஷிக்கைக்காகவும், துஷ்டர்களை மோஹிக்கச் செய்வதற்காகவும், அவதார காலங்களில் எம்பெருமான் அபிநயிக்கிறானாகையால்

அவதார வ்ருத்தாந்தங்களிலும் - அவனுடைய அவதார வரலாற்றிலும்

துக்க அபிநய மாத்திரமே உள்ளது - அவன் அடையப் படுவதாக தெரிகிற துக்கம் அபிநயமே

அது தானும் க்ருபா மூலம் - பரம்பொருளான அவன் அத்யந்த ஸௌலப்யம் கொண்டவன் என வெளிப்படுத்தி, சம்சாரி ஜீவர்களை லகு உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை அவனது அநுக்ரஹ கார்யமே

இப்படி இருக்கை இவனுக்கு - இம்மாதிரியான அவதார காலச் செயல்கள், ஸர்வேஸ்வரனுக்கு

ஸ்வரூப ப்ரயுக்தமென்று - இயற்கைத் தன்மை என்று

தர்ம க்ராஹக ப்ரமாண ஸித்தம் - பரம்பொருளின் தன்மைகளை விளக்கும் சாஸ்த்திரத்தால் தெளியப் படுகிறது.

6. ஆக, அவதார காலத்தில் துக்கங்கள், ஆனந்த மயனான எம்பெருமானுக்கு, உண்மை நிலை என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

136. <u>கருணையாவது பர துக்க துக்கித்வம் அநுசிதமா?</u>

கருணையாவது பர துக்க துக்கித்வம் என்பது பொருந்தாது ஏனெனில் ஸர்வ சக்தனான ஆனந்தமனான ஸர்வேஸ்வரன் பரம காருணிகன் என சாஸ்த்திரங்கள் விளக்குவதால் இவ்விளக்கம் ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. கருணையாவது பர துக்க துக்கித்வம், அதாவது பிறர் துக்கத்தைக் கண்டு சோகிப்பது, என்பது பொருந்தாது ஏனெனில் ஸர்வ சக்தனான ஆனந்தமனான ஸர்வேஸ்வரன் பரம காருணிகன் என சாஸ்த்திரங்கள் விளக்குவதால், ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின், இவ்விளக்கம் அத்யந்த ப்ரமாண விரோதம்; பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம்.

ஸர்வேஸ்வரனின் இரு விபூதிகளில் ஒன்றான லீலா விபூதியில், சம்சாரி ஜீவர்கள் பலவாறாக துக்கித்து இருப்பதைக் காணும் போது, பூர்வபக்ஷிகள், ஸஹஜ காருணிகனான எம்பெருமானது பகவத் கருணைக்கு பிறரது துக்கத்தைக் கண்டு சோகிப்பதாக கலங்குகின்றனர்.

இவ்விஷயத்தை,

உடையவன் உடமையை ரக்ஷிக்கையும், ஸமர்த்தன் அஸமர்தனை ரக்ஷிக்கையும் ப்ராப்தமிரே; ரக்ஷிக்கும் போது கர்ம வஸ்யரை ஒர் உபாயத்தில் மூட்டி ரக்ஷிக்கை ஈஸ்வரனுக்கு ஸ்வ ஸங்கல்ப நியதம்

என்று ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ராதான ப்ரதிதந்த்ராதிகாரத்தில் அருளிச் செய்தார். அதாவது, சாஸ்த்திர மரியாதையை மீறிய குற்றத்திற்காக, சம்சாரி ஜீவர்கள், தண்டனையாகப் பெற்ற சாம்சாரிக துக்கங்களைக் களைய எம்பெருமான், தனது கருணையின் காரணமாக உபாயத்தை சாஸ்த்திரத்தில் விதித்திருக்கிறான், என்றபடி.

ஆக, பகவத் கருணை அனைவருக்கும் ஹிதத்தையே செய்வதாகும்.

2. ஸர்வேஸ்வரன் அனைத்து நிலைகளிலும், தன் ஸ்வபாவமான, **ஸஹஜ காருணிகத்வத்தை** இழப்பதில்லை என்பது ப்ரமாண ஸித்தம்; அதாவது தன் அடியார்களுக்கு ஹிதத்தை செய்து போவது.

 # பர வாஸுதேவன் - ஸ்ரீவைகுந்தத்தில் வாஸம்

புராணங்களில்,

வைகுண்டே து பரே லோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத் பதி: ஆஸ்தே விஷ்ணு: சிந்த்யாத்மா பக்தை: பாகவதை: ஸஹ

எனும் போது,

நித்ய முக்தர்களுக்கு தன்னுடைய க்ருபையால் திவ்ய தம்பதிகளுக்கு விச்சேதமில்லாத நிரபராத கைங்கர்யங்களாகிய ஹிதத்தை செய்தருள்கிறான்

 # வ்யூஹ வாஸுதேவன் - திருப்பாற்கடலில் வாஸம்

வ்யூகம் என்பது வாஸுதேவ, சங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தன் என்னும் எம்பெருமானின் தன்மைகள் தனித்தனியேப் பிரிந்து வெளிப்படும் ஸ்வரூபங்களாம்.

ஸ்ரீமந்நாராயணன் பரமபதமாகிய இந்த வைகுண்டத்திலிருந்து புறப்பட்டு

க்ஷீராப்தி

என்ற பாற்கடலில் தேவர்களின் தரிசனத்திற்காகவும் தன்னைக் கீழ்க்கண்ட வ்யூகமாக பிரித்து ஆதிசேஷனின் படுக்கையில் திருமகளும், பூமகளும் திருவடி வருட யோக நித்திரை செய்து அறிதுயிலமர்ந்த நிலையில் உள்ளார். இதைத்தான்

தேவர்கள் தமக்குத் துன்பம் நேரிடும்போதெல்லாம் இந்தப் பாற்கடலின் கரையில் வந்து நின்று ஸ்ரீமந் நாராயணனைப் பற்றி எழுப்பி தமது முறையீட்டினைத் தெரிவித்து அபயக்குரல் கொடுப்பர்.

எம்பெருமானும், தன்னுடைய க்ருபையால், ஹிதத்தை செய்தருள்வான்

 # விபவ அவதாரம் - ஸ்ரீராம ஸ்ரீக்ருஷ்ண அவதாரம்

பகவத் கீதையில், தன் அவதார ரஹஸ்யத்தை அருஜுனனுக்கு கூறும் போது,

அஜோபி ஸந் அவ்ய்யாத்மா பூதானாமீஸ்வரோபி ஸன். ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா

என்கிறான் கண்ணன்.

அதாவது, 'நான் பிறவி அற்றவனே ஆகிலும், எல்லோருக்கும் ஈஸ்வரனாயும் இருக்கும் நான், அப்ராக்ருத திருமேனியுடன் என் இச்சையினால் மட்டுமே அவதரிக்கிறேன். நான் அவதார காலத்திலும் என்னுடைய ஈஸ்வர தன்மையை நான் விடுவதில்லை' என்கிறான்.

ஸஹஜ காருணிகனான் எம்பெருமான், தன்னுடைய அவதார காலங்களிலும் தன் அடியார்களுக்கு ஹிதத்தையே செய்து போகிறான்

 # அர்ச்சாவதாரம் - கோவில்களில் வாஸம்

சாண்டில்ய ஸ்ம்ருதி வசனத்தைக் காணும் போது,

ஆபீடான் மௌலி பர்யந்தம் பச்யத புருஷோத்தமம் பாதகான்யாசு நச்யந்தி கிம் புனச்தூப பாதகம்

அதாவது,

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் அர்ச்சா ரூபத்தை திருவடி முதல் திருமுடி வரை ஸேவிப்பவர்களுக்கு பஞ்ச மஹா பாபங்கள் களையப் படுகிறது என்றால், அர்ச்சா மூர்த்தி ஸேவேயினால், சரணாகதன் செய்யும் சிறு பாபங்கள் களையப் படுவதை கூறவும் வேண்டுமோ?

எனப் படுகிறது.

ஸஹஜ காருணிகனான் எம்பெருமான், அர்ச்சாவதார நிலையிலும், தன் அடியார்களுக்கு ஹிதத்தையே செய்து போகிறான்

 # அந்தர்யாமி - ஸர்வரின் ஹ்ருதய வாஸம்

பௌஷ்கர ஸ்ம்ருதி வசனத்தைக் காணும் போது,

நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்

அதாவது,

எவன் ஒருவன் எண்ணத்தில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திருமேனி விஷயத்திலும், அந்த ஸ்ரீமந் நாராயணன் தான் பரம் பொருள் என்ற விஷயத்திலும் தெளிவான ஞானம் இருக்கிறதோ அவன் அருகில் ஸர்வேஸ்வரன் வந்து நல்வழி நடத்துகிறான்.

ஸஹஜ காருணிகனான் எம்பெருமான், அந்தர்யாமியாக இருந்தும், தன் அடியார்களுக்கு ஹிதத்தையே செய்து போகிறான்

3. சாஸ்த்திர மர்யாதையை மீறும் போது, சம்சாரி ஜீவர்களிடம் சீற்றம் கொள்கிறான் எம்பெருமான், என ப்ரமாணங்கள் கூறுகின்றன.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராநணனுடைய மேன்மைகளை உணராமல், அவனை தூற்றி, சாஸ்த்ரங்களை அவமதித்து வாழும் நாஸ்திகளைப் பற்றி கண்ணன் கீதையில் கூறுகிறான்.

தானஹம் த்விஷத: க்ரூரான் ஸம்ஸாரேஷு நராதமான். ஷிபாம்யஜஸ்ரம் அஷுபான் ஆஸுரீஷ்வேவ யோனிஷு

அதாவது,

‘என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள், என்னை பற்றி சிந்திக்காமல் ஸம்ஸார ஸுகத்தில் மட்டும் ஈடுபடுபவர்களை நான் கடுமையாகத் தண்டிக்கிறேன், அசுர குடும்பத்தில் பிறக்க செய்கிறேன்.’

பலர் இந்த உலகத்தில், ஸர்வேஸ்வரனான கண்ணனால் கொடுக்கப் பட்ட மனித பிறவியை கொண்டு சாஸ்த்ரத்திற்கு விரோதமான செயல்களையே செய்து கொண்டு, ஸர்வேஸ்வரனை மறந்து, அவன் விதித்தவைகளையும் புறக்கணித்து, தான் ஸ்வதந்த்ரன் என்ற இறுமாப்புடன் இருந்து கொண்டு, என்றும் இங்குள்ள போகங்களே சிறந்தது என்று இருக்கும் போது, எம்பெருமானுக்கு மிகுந்த கோபம் ஏற்படுகிறது. அவர்களுக்கு தண்டனை அளிக்கிறான் ஸர்வேஸ்வரன்.

இதுவும் அவர்களின் பாபங்களைக் களையவே செய்யப் படும் க்ருபா காரியம். சம்சாரி ஜீவர்களை துக்கமயமான சம்சாரத்திலிருந்து விடுவிக்க, ஜீவர்களின் நற்கதிக்காக காத்திருக்கிறான், பரம காருணிகனான எம்பெருமான்.

4. முண்டகோகநிஷத்தில்,

தத் விக்ஞானார்த்தம் ஸ குருமேவ அபிகச்சேத்

ஆசார்யவான் புருஷோ வேத:

அதாவது,

‘நல்ல ஆசார்யனைப் பெற்றால் மட்டுமே பரம் பொருளை அறிய முடியும்’,

என சொல்லப் பட்டிருக்கிறது.

அதனால், ஸகல சம்சாரி ஜீவர்களையும் ஒரு ஸதாசார்யனிடம் கொண்டு சேர்க்க காத்திருக்க்கிறான்.

அதனை விளக்குமிடத்தில்,

ஈஸ்வரஸ்ய ச ஸௌஹார்த்தம், யத்ருச்சா ஸுஹ்ருதம் ததா, விஷ்ணோ: கடாக்ஷம், அத்வேஷம், ஆபிமுக்யம் ச ஸாத்விக: ஸம்பாஷணம், ஷடேதாநி: ஆசார்ய ப்ராப்தி ஹேதவ:

அதாவது **இயற்கையிலேயே ஸகல ஜீவர்களிடம் கருணை கொண்ட எம்பெருமான்**, அவனை நல் வழி படுத்த ஒரு ஸதாசார்யனை அடைவிக்க, அந்த சம்சாரி ஜீவனிடம் ஒரு **யாத்ருச்சிக ஸுக்ருத தருணத்தை** எதிர் பார்த்து காத்திருக்கிறான் என பொருளாகிறது.

5. ஸ்வாமி தேசிகன் ஸித்தோபாய சோதன அதிகாரத்தில் ,

இங்கு காருண்யமாவது பர ஹித ப்ரணவதை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இங்கு - ஸர்வ சக்தனான ஆனந்தமனான ஸர்வேஸ்வரன் பரம காருணிகன் என சாஸ்த்திரம் அறுதியிட்டுக் கூறும் ப்ரகரணத்தில்

காருண்யமாவது - எம்பெருமானின் கருணையாவது

பர ஹித - பிறருக்கு நன்மை செய்வதில்

ப்ரணவதை - உள்ள ஈடுபாடு என்பதே ஆகும்.

6. ஆக, கருணையாவது பர துக்க துக்கித்வம் என்பது பொருந்தாது ஏனெனில் ஸர்வ சக்தனான ஆனந்தமனான ஸர்வேஸ்வரன் பரம காருணிகன் என சாஸ்த்திரங்கள் விளக்குவதால் இவ்விளக்கம் ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

137. அந்தரங்க சத்ரு மற்றும் பஹிரங்க சத்ரு

1. ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழி (8-2-1)

நங்கள் வரிவளை ஆயங்காளோ! நம்முடை ஏதலர் முன்பு நாணி, உங்கட்கு யான் ஒன்று உரைக்கும் மாற்றம் நோக்குகின்றேன் எனக்கும் காண மாட்டேன், சங்கம் சரிந்தன சாய் இழந்தேன் தடமுலை பொன்னிறம் ஆய் தளர்ந்தேன், வெதம் கண் பறவையின் பாகன் எம் கோன் வேங்கட வாணணை வேண்டிச் சென்றே

2. பத உரை :

நங்கள் வரிவளை ஆயங்காளோ! - அழகிய வளை அணிந்த தோழிகளே

நம்முடை ஏதலர் முன்பு நாணி - நம்மிடம் பகை கொண்டவர்களின் முன்பு செல்ல வெட்கி

உங்கட்கு யான் ஒன்று உரைக்கும் மாற்றம் நோக்குகின்றேன் - தோழிகளான உங்கள் செவிக்கு விஷயமான ஒன்றைச் சொல்கிறேன்

எனக்கும் காண மாட்டேன் - இந்த விரோதியை விவரிக்கப் போவதில்லை

சங்கம் சரிந்தன சாய் இழந்தேன் - தேஹம் மெலிந்து கை வளைகள் கழன்றன

தடமுலை பொன்னிறம் ஆய் தளர்ந்தேன் - தேஹம் தளர்ந்தது

வெம் கண் பறவையின் பாகன் - கருடனில் ஆரோஹணம் செய்யும் எம்பெருமான்

எம் கோன் - என்னுடைய ஸ்வாமியான

வேங்கட வாணணை வேண்டிச் சென்றே - திருவேங்கடவனை ப்ரார்த்தித்து சென்றேன்

3. **ஸ்வாபதேச அர்த்தம்** - வேத மார்க்கமான ஸ்ரீராமானுஜ ஸ்வாமி தேசிக வழி

i) **நங்கள் வரிவளை ஆயங்காளோ! -** சாஸ்த்தி ஞானம் உள்ள ஆஸ்திகர்களே

ii) **நம்முடை ஏதலர் முன்பு நாணி -** சதுர்வித புருஷார்த்தங்களில் முதல் மூன்றான ஆர்த்தோ - ஜீக்ஞாஸு - அர்த்தார்த்திக்கான புருஷார்த்தங்களை விரோதியாகக் கொண்டு, அதனால் அவைகளை அபுருஷார்த்தம் என தெளிந்து அதனால் அந்த பரம புருஷார்த்த விரோதி வர்கத்தினால் வெட்கி

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில் (6-9-9)

ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம், பாவி யேனைப் பலநீ காட்டிப் படுப்பாயோ, தாவி வையம் கொண்ட தடந்தா மரைகட்கே, கூவிக் கொள்ளும் கால மின்னம் குறுகாதோ?

அதாவது,

ஐந்து புலன்களைக் (பார்ப்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, தொடுவது) கொண்டு சிற்றின்பங்களான உலக விஷயங்களில் பாபியான என்னை ஈடுபடுத்தி ஸர்வேஸ்வரனான நீ வருத்தப் படுத்தலாமா? உன் திருவடியை அடைகிற தருணம் எனக்கு விரைவில் வாராதோ?

iii) **உங்கட்கு யான் ஒன்று உரைக்கும் மாற்றம் நோக்குகின்றேன் -** பரம புருஷார்த்த விஷயமாக ஒன்றைச் சொல்ல இருக்கிறேன்

iv) **எனக்கும் காண மாட்டேன் -** இங்கு விரோதி வர்க்கத்தை விளக்க வரவில்லை

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில் (3-2-1)

முந்நீர் ஞாலம் படைத்த எம் முகில் வண்ணனே அந்நாள் நீ தந்த ஆக்கையின் வழி உழல்வேன் வெந்நாள் நோய் வீய வினைகளை வேர் அறப் பாய்ந்து எந்நாள் யானுன்னை இனி வந்து கூடுவனே

அதாவது,

இந்த சம்சாரி ஜீவர்கள், தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற அறிவை இழந்து, அந்த இழப்பையும் அறியாது, திரியும் போது, அவர்களது நிலையை ஸ்வாமி விவரிக்கிறார்.

கடல் சூழ்ந்த இவ்வுலகை ஸ்ருஷ்டித்தவனும் மேகத்தின் நன்மைபோன்ற தன்மையை உடையவனுமான எம்பெருமானே!

அந்த ஸ்ருஷ்டி ஸமயத்தில் நீ கொடுத்தருளின,

அழியக்கூடிய சரீரத்தினுடைய வழியிலேயே நடந்துகேட்டுத் திரிகின்றேன்.

அதாவது, புலன்களுக்கு விஷயமான உலக இன்பத்திலே,

அது நிரந்தரமற்றது உன்கிற எண்ணமில்லாமல்,

திளைத்திருக்கிறேன்.

இச்சரீரம் தளர்ந்த பின்பு, பரிதாபமயமான நாளிலே வியாதிகள் வந்து ஒட்டிக் கொள்கின்றன.

அப்போதும் உன் நினைவு அற்று, சரீர சம்பந்தத்தினால் ஏற்பட்ட உறவுகளைக் கொண்டு வருந்தி நிற்கிறேன்.

இப்படி இருக்க, இந்த பிறவிப் பிணி தீரும்படி கர்ம பந்தங்களிடம் பற்றை அறுத்து தொலைக்கப்பெற்று அடியேன், மஹோபகாரனான உன்னை அடையப் பெறுவது இனி என்றைக்கோ!

ஸர்வேஸ்வரனான கண்ணன் ப்ராக்ருத பலன்ககளில் உள்ள தோஷங்களை உபதேசத்தை செய்கிறான் (பகவத் கீதை 9-33):

கிம் புநர் ப்ராஹ்மணா புண்யா: பக்தா ராஜர்யஸ் ததா. அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வ மாம்

அதாவது,

‘தாழ்ந்த உலக அநுபவத்தை விட்டு உயர்ந்த பலனை அடைய என்னை பஜி.’

என்கிறான் கண்ணன்

ப்ராப்தி விரோதி - பஹிரங்க சத்ரு

v) **சங்கம் சரிந்தன சாய் இழந்தேன் -** சாஸ்த்திரம் விதித்த பக்தி யோகம் அநுஷ்டிக்க சக்தி அற்றவனாய் இருக்கிறேன்ன.

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழி (5-7-1)

நோற்ற நோன்பு இலேன் நுண் அறிவு இலேன் ஆகிலும் இனி உன்னை விட்டு,ஒன்றும் ஆற்ற நிற்கின்றிலேன் அரவின் அணை அம்மானே, சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர் சிரீவர மங்கலநகர், வீற்றிருந்த எந்தாய். உனக்கு மிகை அல்லேன் அங்கே.

அதாவது,

சாஸ்த்திரம் விதித்த பக்தி யோகத் திற்கு அங்கமான கர்ம யோகம் மற்றும் ஞான யோகம் செய்ய ஞான சக்தி அற்ற என்னை உன்னுடைய ரக்ஷிய வஸ்துவாகக் கருதி ஏற்க வேண்டுவதாய் சரண் புகுகிறபடி.

vi) **தடமுலை பொன்னிறம் ஆய் தளர்ந்தேன் -** அகிஞ்சனனான என் நிலையை உணர்கிறேன்

ஸர்வேஸ்வரனான கண்ணன் உயர்ந்த பலனாகிற மோக்ஷத்தை அடைய கடைசி அத்யாயத்தில் கடைசி உபதேசமான ஸ்லோகத்தில் இந்த உபதேசத்தை செய்கிறான் (பகவத் கீதை 18-66):

ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஷுச:

அதாவது,

‘கடினமான மோக்ஷ ஸாதனமான அனைத்து நிவ்ருத்தி தர்மங்களையும் (கர்ம யோகம், ஞான யோகம் மற்றும் பக்தி யோகமங்களையும்), செய்ய சக்தி அற்றவனாக நீ இருந்தால், அவைகளை விட்டு, என் ஒருவனையே சரணமாக பற்று. நான் உன்னை மோக்ஷத்திற்கு விரோதியான புண்ய பாபங்களிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கிறேன். சோகப் படாதே’

என்கிறான் கண்ணன்.

கார்ப்ண்யம் - பக்தி யோகத்திற்கு அந்தரங்க விரோதி

vii) **வெம் கண் பறவையின் பாகன் -** கருடனில் ஆரோஹணம் செய்யும் எம்பெருமான்

viii) **எம் கோன் -** என்னுடைய ஸ்வாமியான

ix) **வேங்கட வாணணை வேண்டிச் சென்றே -** திருவேங்கடவனை ப்ரார்த்தித்து சென்றேன்

ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழியில் (6-10-10)

அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பா, நிகரில் புகழாய். உலக மூன்று உடையாய். என்னை ஆள்வானே, நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திரு வேங்கடத்தானே, புகல் ஒன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே

என அருளினாள்.

அதன் பொருள் :

பூவில் வாழ் மகளான பெரிய பிராட்டியார் ஒரு கூஷணமும் பிரிந்திருக்க மாட்டேன் என்று சொல்லிக் கொண்டு நித்யவாஸம் பண்ணப்பெற்ற திருமார்வை உடையவனே! ஒப்பற்றதான புகழை உடையவனே! சேதந அசேதங்களுக்கும் ஸ்வாமியே! நீசனான என்னையும் அடிமை கொள்பவனே! பவனே தேவர்களும் மஹர்ஷி ஸமூஹங்களும் விரும்பி வந்து பணியுமிடமான திருமலையில் வாழ்பவனே! அநந்யகதியாக இரு இருக்கும் நான் உனது திருவடி வாரத்திலே மிகப் பொருத்தமாக அந்வயித்துவிட்டேன் !

ஸ்வாமி நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழி (9-10-5) :

சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்

என அருளினார்.

அதாவது,

ஞான, சக்தி, கர்மானுஷ்டானம் போன்றவைகளில் குறைகள் இருந்தாலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் திருவடியை சரணமாக பற்றினவர்க்கு, சரீர காலம் முடிந்த பிறகு, அவன் வைகுந்தத்தை கொடுத்தருளுகிறான், எனபதாயிற்று.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

138. <u>உபாயம் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரு வகை</u>

உபாயம் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரு வகை உண்டென்பதை மறுப்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. உபாயம் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரு வகை உண்டென்பதை மறுப்பது, பகவத் ராமானுஜ ஸித்தாந்த விரோதம். ஸித்தோபாயம் மட்டுமே மோக்ஷ காரணம் என்பர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். இது ஸாத்யோபாயத்தை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும் - **நிதித்யாஸிதவ்ய:** மற்றும் **முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே** போன்றவைகளோடும் - விரோதிக்கும்.

2. ஐந்தாவது வேதமான மஹா பாரதத்தில்,

யே ச வேத விதோ விப்ரா யே ச ஆத்யாத்ம விதோ ஜநா: தே விதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்

சொல்லப் பட்டிருக்கிறது.

அதாவது,

எந்த ப்ராம்மணர்கள் வேதத்தின் முன் பாகமான கர்ம காண்டத்தை அறிவார்களோ, எவர்கள் வேதாந்தமான ப்ருஹ்ம காண்டத்தின் அர்த்தங்களை தெளிந்திருக்கிறார்களோ, அவர்கள் ஸர்வ பலனுக்கும் காரணமாக ஸரெவேஸ்வரனான க்ருஷ்ணனையே, சொல்வார்கள்.

இதை ஒரு தனி ப்ரமாணமாக்கி, சாஸ்த்திரம் விதித்த ஸாத்யோபாயத்தை நிஷேதிப்பர், பூர்வக்ஷிகள்.

உபாயம் என்ற சொல்லாவது, 'பலத்திற்கான சாதனம்' என பொருள் கொண்டது. முதலில் **ஸித்தோபாயம்** மற்றும் **ஸாத்யோபாயம்** என்பதற்கு அர்த்தத்தைக் காண்போம்:

ஸித்தோபாயமாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், பலனை அளிப்பதற்கு ஸித்தமாக (தயார் நிலையில்) இருப்பதை குறிக்கிறது.

ஸாத்யோபாயமாவது, பலனை பெற வேண்டுபவர்கள், அதைப் பெறுவதாற்காக, சாஸ்த்திரத்தினால் விதிக்கப் பட்ட, சம்சாரி ஜீவர்களால் செய்ய வேண்டிய செயல்.

சாஸ்த்திரத்தில், அகிஞ்சனனான சம்சாரி ஜீவர்கள் மோக்ஷ பலனை அடைவதற்கு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை **ஸித்தோபாயமாகவும்**, பக்தி யோகம் அல்லது சரணாகதி அநுஷ்டானத்தை **ஸாத்யோபாயமாகவும்** கூறுகிறது.

சம்சாரி ஜீவர்கள், சுதந்திரம் அற்ற பரதந்ந்ரர்களாய் இருக்க, ஸாத்யோபாயத்தை அநுஷ்டிக்கக் கூடாது, என பூர்வ பக்ஷிகள் சாஸ்த்திர விரோதமாக வாதிடுவர்.

3. ஸித்தோபாயமான எம்பெருமான் இருக்க, சம்சாரி ஜீவர்கள், அவனை அறிந்து, மோக்ஷத்திற்காக எந்த ஒரு உபாயத்தையும் செய்யாமல் இருப்பதே சரணாகதி, என பூர்வ பக்ஷிகள் கூறுவர்.

 # இந்த விளக்கம், ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் போன்ற க்ரந்தங்களோடு முற்றிலுமாக விரோதிக்கும்.

மேலும், அந்த ஸித்தோபாய விளக்கம், சாஸ்த்திரத்தினாலும் ஒத்துக் கொள்ளப் பட்டது அல்ல.

ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையால் (7-14)

தைவி ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்ய்யா. மாமேவயே ப்ரபத்யந்தயே மாயாமேதாம் தரந்திதே

அதாவது,

‘என்னுடைய முக்குணங்களாலான மாயையை கடப்பதற்கு என்னையே சரண் அடைய வேண்டும்’ என சொல்லப் பட்டிருக்கிறது.

ஐந்தாவது வேதமாக போற்றப்படும் மஹாபாரதத்தில், வன பர்வாவில், மார்க்கண்டேய மஹரிஷி உபதேசிக்கும் போது,

ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ: கச்சத்வம்மேநம் சரணம் சரண்யம் புருஷர்ஷபா:

அதாவது,

மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேஸ்வரன் அனைத்து உலகங்களுக்கும் தந்தையாகவும் தாயாகவும் உள்ளான்; பாண்டவர்களே, அவனையே ரக்ஷகனாக கருதி அவனிடத்தில் சரணாகதியை கைக் கொள்ளுங்கள், என அருளியிருக்கிறார்.

இதனால், சம்சாரி ஜீவர்கள், பலனுக்காக சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட சரணாகதியை செய்ய வேண்டும், என்றதாகிறது.

ஆக, எம்பெருமான் ஸித்தோபாயமாய் இருக்க, அவன் தானாகவே ரக்ஷிப்பான் என அர்த்தம் கொண்டால், சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்ட மோக்ஷத்திற்கான பக்தி யோகம் மற்றும் சரணாகதி உபாயங்கள் அர்த்தமற்றதாகி விடும்.

ஆகையால், மோக்ஷ பலனில் ஆசை உள்ளவர்கள், ஸ்ரீராமானுஜர் ஆனுமானிகாதிகரணத்தில் (ஸ்ரீபாஷ்யத்தில்) அருளியபடி,

தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ

அதாவது,

சம்சாரி ஜீவர்கள் செய்த, சாஸ்த்திரங்களை மீறிய செயல்களால், சீற்றம் அடைந்திருக்கிற எம்பெருமானை வசீகரிக்க, சரணாகதியே சாதனம், என்று உணர்ந்து,

அங்கங்களோடு கூடிய சரணாகதியை எம்பெருமானிடம் சாஸ்த்ரப்படி அநுஷ்டித்து, அதனால் ஸித்தோபாயமான எம்பெருமானை வசீகரித்து மோக்ஷ பலனை அடைய வேண்டும், என்பதாகிறது.

4.. ஸ்ரீபாஷ்யத்தில் மூன்றாம் அத்யாயத்தில் ஸாதனத்தை (மோக்ஷத்திற்கான உபாயத்தை) விளக்கி அருள்கிறார் .

மூன்றாம் அத்யாயத்தில் இரண்டாம் பாதத்தில் கடைசி அதிகரணமான பலாதிகரணத்தில்

பலம் அத: உப பத்தே:

என்கிற ஸூத்ரத்திற்கு வ்யாக்யானம் செய்யுமிடத்தில்

ஸ ஏவஹி ஸர்வக்ஞ: ஸர்வ சக்திஹி மஹோதார: யாக தான ஹோமாதிபி: உபாஸநேன ச ஆராதித: ஜஹிக ஆமுஷ்மிக போகஜாதம், ஸ்வஸ்வரூப அவாப்தி ரூபம் அபவர்கம் ச தாதுமீஷ்டே

எம்பெருமானே அனைத்தையும் அறிபவன், ஸர்வ வல்லமை பொருந்தியவன், கருணை குணமுடையவன். அவன் தான், யாக தான ஹோமாதிகளாலும் உபாஸநத்தினாலும் ஆராதிக்கப் பட்டவனாய் காண்பதற்கு ஏற்றதாகவும், புலன்களால் அறியப் பட முடியாத ஸ்வர்க்காதி ப்ராக்ருத போகங்களையும், மோக்ஷத்தையும் கொடுப்பதற்கு ஸமர்த்தனாகிறான் என்று அருளிச் செய்கிறார்.

இதனால் ஸாத்யோபாய அநுஷ்டானத்தை (பலன் பெறுபவனின் உபாய அநுஷ்டானத்தை செய்வதை) முன்னிட்டே எம்பெருமானுக்கு ஸித்தோபயத்வமே (பலன் தருபவன்) என்பதை அறிந்து கொள்வதாகிறது.

மேலும் ஸ்ரீராமானுஜர் ஒரு பங்குனி உத்திர நன்னாளில் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் தாயார் சேர்த்தியில் சரணாகதியை அநுஷ்டித்துள்ளார் என்பது இன்று வரை ஸ்ரீ வைணவ திருக்கோவில்களில் நடந்து வருகிற உத்ஸவத்தினாலேயே ப்ரஸித்தம்.

இது ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தில் ஏற்றுக் கொண்டு, சரணாகதி அநுஷ்டானம் மோக்ஷத்திற்காக தேவை, என்பது தெளிவான விஷயம்.

இப்படி ஸ்ரீராமானுஜரரால் அநுஷ்டிக்கப் பட்ட சாஸ்த்ர விஹிதமான சரணாகதி அநுஷ்டானமாவது செய்யத் தகாதது என்றும், அது அபராத கோடியிலே சேர்ந்த்தாக, ஸ்ரீராமானுஜ க்ரந்த மற்றும் அநுஷ்டான விரோதமாக, ஸித்தாந்த பூர்வபக்ஷிகளால் கூறப் படுகிறது. ஆதலால், பூர்வ பக்ஷிகளின் வழி ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம் ஆகாது.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், ஸ்ரீபாஷ்யத்தை தழுவியே அனைத்து க்ரந்தங்களையும் அருளிச் செய்ததாலேயே, ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயம் என்கிற பெயர் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்திற்கு ஏற்றதாகிறது.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

இப்படிப் பட்ட க்ருபா விசிஷ்டனான ஈஸ்வரன் 'க்ருஷ்ணம் தர்ம ம் ஸநாதனம்' என்கிறபடியே ஸித்தோபாயம்; இவனுக்கு ப்ரஸாதனங்களான பக்தி ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இப்படிப் பட்ட க்ருபா விசிஷ்டனான ஈஸ்வரன் - ஸஹஜ காருணிகனான எம்பெருமான்

க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம் - ஸர்வேஸ்வரனான கண்ணனே ஸகல பலனுக்கும் உபாயமாகிறான்

என்கிறபடியே ஸித்தோபாயம் - என்கிற ப்ரமாணத்தினால் பலனளிக்கும் உபாயமாகிறான்

இவனுக்கு ப்ரஸாதனங்களான - அந்த கண்ணனை வசீகரிப்பதற்கான வழிகள்

பக்தி ப்ரபத்திகள் ஸாத்யோபாயங்கள் - பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம், சம்சாரி ஜீவர்கள் அநுஷ்டிக்க சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட ஸாத்யோபாயம்

6. ஆக, உபாயம் ஸித்தம் என்றும் ஸாத்யம் என்றும் இரு வகை உண்டென்பதை மறுப்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

139. சதுர் வித புருஷார்த்தங்கள்

1. பகவான் தன்னை வழிபடுபவர்கள் மற்றும் வழிபடாதவர்கள் என இரண்டாக பிரிக்கிறார். மேலும் சிலர் பகவானை வழிபட மாட்டார்கள் என்று உரைக்கிறார். பகவானை வழிபடும் பக்தர்களை நான்காக பிரிக்கிறார். இதில், **தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மட்டும் பகவானை வழிபடும் பக்தர்கள்**, சாமான்ய சம்சாரி ஜீவர்கள். பகவத் அநுபவத்தை நிரந்தரமாக விரும்புபவர்கள் ஞானிகள் ஆவர்.

ஆக, பகவத் பக்தர்கள் நால்வர் ; பகவத் கீதை (7- 16)

சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுஹ்ருதினோர்ஜுந. ஆர்த்தோ ஜிக்ஞாஸு அர்தார்த்தி ஞானீ ச பரதர்ஷப:

'என்னை (கண்ணனை) பூஜிப்பவர்கள் நால்வர்: # இழந்ததை பெற நினைப்பவன். # ஆத்ம ஸ்வரூபத்தை அநுபவிக்க ஆசைபடுபவன். # புதிய ஐஸ்வர்யத்தை வேண்டுபவன். # என்னையே அடைய விரும்புபவன்.'

பகவானை விட்டு விலகியவர்களும் நால்வர் ; பகவத் கீதை (7- 15)

ந மாம் துஷ்க்ருதினோ மூடா: ப்ரபத்யந்தே நராதம: மாய யா அபஹ்ருத க்ஞானா ஆஸுரம் பாவமாஸ்ருதா:

'என்னை (கண்ணனை) பூஜிக்காதவர்கள் நால்வர்: # என் க்ஞானமில்லாத மூடர்கள். # க்ஞானமிருந்தும் என்னை அடைய முயற்சிக்காதவர்கள். # உண்டான க்ஞானத்தை இழந்தவர்கள். # என்னிடம் த்வேஷம் உள்ளவர்கள் '

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

140. <u>ப்ராப்தி விரோதியான பகவந் நிக்ரஹத்தை சமிக்க வழி யாது?</u>

1. மோக்ஷ பலனில் ஆசை உள்ளவர்கள், ப்ராப்தி விரோதியான பகவந் நிக்ரஹத்தை சமிக்க , ஸ்ரீராமானுஜர் ஆனுமானிகாதிகரணத்தில் (ஸ்ரீபாஷ்யத்தில்) அருளியபடி,

தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ

அதாவது,

சம்சாரி ஜீவர்கள் செய்த, சாஸ்த்திரங்களை மீறிய செயல்களால், சீற்றம் அடைந்திருக்கிற எம்பெருமானை வசீகரிக்க, சரணாகதியே சாதனம், என்று உணர்ந்து,

அங்கங்களோடு கூடிய சரணாகதியை எம்பெருமானிடம் சாஸ்த்ரப்படி அநுஷ்டித்து, அதனால் ஸித்தோபாயமான எம்பெருமானை வசீகரித்து மோக்ஷ பலனை அடைய வேண்டும், என்பதாகிறது.

2. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

ஸமஸ்த புருஷார்த்தானாம் ஸாதகஸ்ய தயாநிதே ஸ்ரீமத: பூர்வ ஸித்தத்வாத் ஸித்தோபாயம் இமம் விது: பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் தத் வசீகார காரணம்; தத்தத் பலார்த்தி ஸாத்யத்வாத் ஸாத்யோபாயம் விதுர்புதா:

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

 # ஸமஸ்த புருஷார்த்தானாம் - ஸகல பலன்களுக்கும் (ஐஹிக, ஆமுஷ்மிக, கைவல்ய, மோக்ஷ பலன்கள்)

 # ஸாதகஸ்ய - கொடுக்கும் திறன் உடையவனான

 # தயாநிதே - கருணைக்கு இருப்பிடமான

 # ஸ்ரீமத: - பெரிய பிராட்டியோடு கூடிய எம்பெருமான், அதாவது திவ்ய தம்பதிகள்

 # பூர்வ ஸித்தத்வாத் - ஸாத்யோபாய அநுஷ்டானத்துக்கு முன்பே பலனளிப்பவனாக இருப்பதால்

 # ஸித்தோபாயம் இமம் விது: - திவ்ய தம்பதிகளை ஸித்தோபாயமாக வித்வான்கள் அறிகிறார்கள்

 # பக்தி ப்ரபத்தி ப்ரமுகம் - ஸகிஞ்சனர்களின் உபாஸனம் மற்றும் அகிஞ்சனர்களின் ப்ரபத்தி

 # தத் வசீகார காரணம் - ஸித்தோபாயனை வசீகரிக்க, அநாதி காலமாக ஆக்ஞாதிலங்கனம் பண்ணிய சம்சாரி ஜீவர்களுக்கு, காரணமாகிறது ; இதையே ஸ்ரீராமானுஜர், **தஸ்ய ச வசீகரணம் தச்சரணாகதிரேவ** என ஸ்ரீபாஷ்யத்தில் ஆனுமானாதிகரணத்தில் அருளினார்.

 # தத்தத் பலார்த்தி ஸாத்யத்வாத் - சம்சாரி ஜீவர்களின் அபேக்ஷித பலன்கள் வேறாக இருப்பதால்

 # ஸாத்யோபாயம் விதுர்புதா: - ஸாத்யோபாயத்தை வித்வான்கள் அறிகிறார்கள்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

141. <u>மாம் எகம் சரணம் வ்ரஜ என்பது அதிகாரி விசேஷணமா?</u>

சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்கள் அதிகாரி விசேஷமாயிருக்க, அதை அதிகாரி விசேஷணம் என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற **மாம் எகம் சரணம் வ்ரஜ** எனும் பதங்கள் அதிகாரி விசேஷமாயிருக்க, அதை அதிகாரி விசேஷணம் என்பர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். இது ஸாத்யோபாயத்தை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும் **- நிதித்யாஸிதவ்ய:** மற்றும் **முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே** போன்றவைகளோடும் - விரோதிக்கும்.

2. ஜீவாத்ம பரமாத்ம ஸ்வரூபங்களை அறிந்து, பரமாத்மாவை அடைந்து தன் ஸ்வாபாவிக தன்மை கொண்டு, அவனுக்கு கைங்கர்யம் செய்து போவதே, துக்க கலப்பற்ற முற்றிலும் ஸுகரூபமானது என்பதை சாஸ்த்திரம் கொண்டு உணர்ந்து போகும் முமுக்ஷுவிற்கு, அந்த உயர்ந்த பலனுக்கான அதிகாரம் எவ்வாறு ஸித்திக்கிறது என தெளிய வேண்டுவது அவசியம்.

இப்படிப்பட்ட நிவ்ருத்தி தர்மத்திலே இச்சை கொண்ட அதிகாரிகள் இரு வகையாக சாஸ்த்திரங்கள் கூறுகின்றன:

அத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் (மோக்ஷத்திற்காக செய்யப்படும் சரணாகதி)

மற்றும்

ஸத்வாரக ப்ரபத்தி நிஷ்டன் (மோக்ஷ பலனுக்கான பக்தி யோகம் தடைபடிமல் இருக்க செய்யப்படும் சரணாகதி)

ஒரு பலனைக் பெற, எந்த ஒரு கர்மாவை அநுஷ்டிக்கவும், அதற்கு அதிகாரமாக இரண்டு விஷயங்கள் சாஸ்த்திரங்கள் கூறுகின்றன:

அதாவது,

பலனில் ஆசையும்

மற்றும்

அதற்கான உபாயத்தை அநுஷ்டிக்க (செயலில்) ஸாமர்த்யமும்

இவ்வழியாலே,

வாரூணம் திவ்யமாக்னேயம் வாயவ்யம் பார்த்திவம் ததா; மாந்த்ரம் மானஸமித்யேவம் ஸ்நாநம் ஸப்த விதம் ஸ்ம்ருதம்

என, ஸ்நாநம் செய்வதில் ஏழு விதமான அதிகாரி பேதங்கள் சாஸ்த்திரத்தினால் சொல்லப் படுகிறது.

மந்திர ஸ்நாநம் - மந்திரத்தைக் கொண்டு

பார்த்திவம் - மண்ணைக் கொண்டு

ஆக்நேயம் - ஹோம குண்டத்தில் உள்ள சாம்பல் கொண்டு

வாயவ்யம் - பசுவின் பாத தூளி கொண்டு

திவ்யம் - வெய்யிலோடு கூடிய மழையில்

வாருணம் - நீர் நிலையில்.. ஆறு, குளம் போன்றது (பொதுவான ஸ்நாநம் என நாம் அறிவது)

மாநஸம் - பகவத் த்யானம்

இவை அனைத்து வித ஸ்நாநங்களும், ஒரு சில கால கட்டத்தில், செய்து சுத்தி பெற சாஸ்த்திரம் அநுமதிக்கிறது.

இந்த வித்யாஸங்கள் அதிகாரி பேதத்தினால் ஸித்திக்கிறது.

உதாரணமாக, வாருண ஸ்நாநம் செய்து போக உடல் வியாதி காரணமாக தடை இருப்பது, மந்திர ஸ்நாநம் செய்து அதே சுத்தியைப் பெற, அதிகாரம் ஆகிறது; அவர்களுக்கு இதை

சாஸ்த்திரம் அநுமதிக்கிறது; ஆக, நல்ல உடல் ஆரோக்யம் உள்ளவன் மந்திர ஸ்நாந்த்திற்கு அதிகாரி ஆக மாட்டான்.

மோக்ஷ பலனை அடைய சாஸ்த்திரங்கள் உபாஸநத்தை (பக்தி யோகத்தை) விதிக்கிறது.

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:

என்கிறது பிரகதாரண்யக உபநிஷத்.

அதாவது மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

இந்த பக்தி யோகத்திற்கு அதிகாரிகள், ஆத்ம விஷயத்தில் பரிபூரண சாஸ்த்திர ஞானம் உள்ளவர்களும், மற்றும் அந்த பக்தி யோகத்தை அநுஷ்டிக்க சக்தி உடையவர்களும் ஆவர்.

இவ்வாறு, ஆத்ம விஷயத்தில் பரிபூரண சாஸ்த்திர ஞானமும் மற்றும் அந்த பக்தி யோகத்தை அநுஷ்டிக்க சக்தியும் அற்ற முமுக்ஷுவானவர்களுக்கு, சாஸ்த்திரம் விதிப்பதாவது:

ச்வேதாசுதர உபநிஷத்தில்,

யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை, தகும் ஹ தேவம் ஆத்ம்புத்தி ப்ரகாசம் முமுக்ஷுர்வை சரணம் ப்ரபத்யே

என்கிறது.

அதாவது

எவனுடைய நாபியிலிருந்து ப்ருஹ்மா உதித்தானோ, எவன் ப்ருஹ்மாவுக்கு வேதத்தை உபதேசித்தானோ, எவன் ஸர்வருக்கும் தத்வ ஞானத்தை தெளிவாக ப்ரகாசிக்க செய்ய வல்லவனோ அவனை மோக்ஷத்தை விரும்புவர்கள் சரணமாக அடைய வேண்டும்.

அதாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனையே சரணமாகப் பற்ற வேண்டுவதாகிறது.

இந்த இரண்டு உபாயங்களில் ஒன்றை, அவரவர்களுக்கு தகுதிக்கு ஏற்ப, அநுஷ்டித்தே பரமபதத்தில் எம்பெருமானை அடைய முடியும், என்பது வேதாந்த ப்ரமாணம்.

இதை தவிர அவனை அடைய வேறு உபாயம் கிடையாது.

பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே I ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி:

‘பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் பக்தி யோகத்தை செய்தாவது அல்லது சரணாகதியை செய்தாவது என்னை அடைய வேண்டும். இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது’

என்று அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில் ஸ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளான்.

இந்த இரண்டு உபாயங்களில், பக்தி யோகத்தைப் பற்றி விரிவாக ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதனாத்யாயத்தில் பகவத் ராமானுஜர் அருளிச் செய்தார்.

சரணாகதியைப் பற்றி சரணாகதி கத்யத்தில் அருளிச் செய்து

அநந்ய சரண: த்வத் பாதார விந்த யுகளம் சரணமஹம் ப்ரபத்யே

என்று பெருமாள் தாயார் சேர்த்தியில், ஒரு பங்குனி உத்தர நிருநாளிலே, சரணாகதியை அநுஷ்டித்தார் பகவத் ராமானுஜர்.

3. மோக்ஷ காரணமான **சரணாகதி அநுஷ்டான ப்ரகரணத்தில்**, சில பதங்களின் விளக்கத்தைக் காண்போம் :

அதிகாரி - சம்பந்தப் பட்ட தனித் தன்மையால் சரணாகதி அநுஷ்டிக்க **அதிகாரம் உடையவன்** அதிகாரி

அதிகாரம் - மோக்ஷத்தில் இச்சை மற்றும் பூரண தத்வ ஞான இன்மையும், பக்தி யோகம் அநுஷ்டிக்க சக்தி அற்றதுவுமான தன்மைகளைக் கொண்டது அதிகராம்; அந்த அதிகாரத்தைக் கொண்ட முமுக்ஷுவானவன் சரணாகதி அநுஷ்டானத்துக்கு **அதிகாரி**;

அதிகாரி விசேஷம் - அதிகாரிகள் செய்ய வேண்டும் செயல், அதாவது **சரணாகதி அநுஷ்டானம்**

அதிகாரி விசேஷணம் - அதிகாரம் உடைய அதிகாரிக்கு உள்ள பொதுவான தன்மை - உதாரணமாக, சரணாகதி அநுஷ்டான அதிகாரிக்கு உள்ள மோக்ஷத்தில் இச்சையாவது **அதிகாரி விசேஷணம்**

ஆக, சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற **மாம் எகம் சரணம் வ்ரஜ** எனும் பதங்கள், அதிகாரி செய்ய வேண்டுவதாய் இருக்க, அதை அதிகாரியின் தன்மை என்பது முற்றிலும் அநுபபன்னம். ஸித்தாந்த பூர்வபக்ஷிகள், சாஸ்த்திர விரோதமான தங்கள் கொள்கைகளுக்கு, சரமஸ்லோக அர்த்த நிர்ணயம் பண்ண வேண்டிய கட்டாயத்தில், வேதங்களுக்கு முரணாக, ஸ்ரீராமானுஜ க்ரந்தங்களுக்கு விரோதமாக நிர்தாரிக்க யத்நிக்கின்றனர்.

4. இவ்விஷயங்களின் உபமானம்.

முமுக்ஷுவிற்கு சரணாகதி அநுஷ்டேயமாய் இருக்க, அதனை விசேஷணம் என்பது பொருந்தாது.

ஸ்வர்க்க காமோ யஜேத எனும் சாஸ்த்திர வரியைக் காணும் போது,

அதாவது ஸ்வர்க்க பலனில் ஆசை உள்ளவன் யாகத்தைச் செய்ய வேண்டுமென்கிறது, சாஸ்த்திர விதி.

இதில்,

அதிகாரி - யாகத்தைச் செய்பவன்.

அதிகாரம் - ஸ்வர்க்கத்தில் ஆசை மற்றும் யாகம் செய்யும் சக்தி

அதிகாரி விசேஷம் - அதிகாரிகள் செய்ய வேண்டும் செயல், அதாவது யாகக் க்ரியை.

அதிகாரி விசேஷணம் - அதிகாரம் உடைய அதிகாரிக்கு உள்ள பொதுவான தன்மை ; அதாவது, ஸ்வர்க்கத்தில் ஆசை

இதனால், தெளிய வேண்டுவதாவது, முமுக்ஷுவிற்கு சரணாகதி அநுஷ்டானம் **அதாகாரி விசேஷணம்** ஆகாது, எனெனில் **சரணம் வ்ரஜ** என்பது க்ரியை; ஸித்தோபாய ஞானம் பெறுவதிலிருந்து, ஸாத்யோபாய அநுஷடானம் வரை அனைத்துமே செயல் ரூபமான மனோ காயிக வ்யாபாரமே! இவ்யாபாரமானது, பொதுவான தன்மையாகாது.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

ஓர் அதிகாரி விசேஷத்துக்குக் கர்தவ்யமாக 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்று விதிக்கப் படுகிற ப்ரபத்தியை அதிகாரி விசேஷணம் என்று சிலர் சொன்னவிடம் அதிகாரி விசேஷணத்துக்ச் சொல்லும் லக்ஷணத்தோடு சேராமையாலே அதிவாதம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஓர் அதிகாரி விசேஷத்துக்குக் - சரணாகதி அநுஷ்டான தகுதியினால்

கர்தவ்யமாக - செய்ய வேண்டிய செயலாக

மாமேகம் சரணம் வ்ரஜ - 'என் ஒருவனையே சரணமாகப் பற்று' என்கிற சரமஸ்லோக வரி

என்று விதிக்கப் படுகிற ப்ரபத்தியை - விதிக்கிற சரணாகதி அநுஷ்டானத்தை

அதிகாரி விசேஷணம் - அதிகாரி என நிரூபிக்கப் பட்டவர்களின் தன்மை

என்று சிலர் சொன்னவிடம் - என ஸித்தாந்த பைர்வ பக்ஷிகள் சொன்னதாவது

அதிகாரி விசேஷணத்துக்ச் சொல்லும் லக்ஷணத்தோடு - அதிகாரி என நிரூபிக்கப் பட்டவர்களின் தன்மைக்குச் சொல்லப்படும் இலக்கணத்தோடு

சேராமையாலே அதிவாதம் - பொருந்தாமையால் மிகைப் படுத்தப்பட்டது; எற்புடையதாகாது.

6. ஆக, சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்கள் அதிகாரி விசேஷமாயிருக்க, அதை அதிகாரி விசேஷணம் என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

142. ஸித்தோபாய ப்ரதிபத்தி என்றால் என்ன?

1. விசிஷ்டாத்வைத ஸத் ஸம்ப்ரதாயத்தில், மஹரிஷி விஷ்ணு தர்மத்தை ப்ரமாணமாக்கி சொல்லுமிடத்தில்,

ஸோஜ்ஜீவனேச்சா யதிதே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவம் ச ஸதா ஸ்மர

அதாவது,

உயர்ந்த பலனாகிய மோக்ஷத்தில் விருப்பமுள்ளவர்கள், ஸர்வேஸ்வரன் ஸ்வாமி என்றும் ஜீவர்கள் இயற்கையாகவே அவனுக்கு தாஸனென்றும் அறிந்து, சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டுவதாயிற்று,

என அருளினர்.

உபநிஷத் ஸாரமான வேதவ்யாஸர் அருளிய 'ப்ருஹ்ம ஸூத்ரம்' (3-2-8-37)

பலமத உபபத்தே: என்கிறது.

அதாவது,

ஸகல பலனும் ப்ருஹ்மத்திடமிருந்தே; அதாவது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே ஸர்வ பலன்களையும் தர வல்லவன், என்பதாகிறது.

ஆக, பகவான் ஸித்தோபாயன் என தெளிந்து இருப்பது **ஸித்தோபாய ப்ரதிபத்தி**

பாஞ்சர்த்ர சாஸ்த்திரமானது,

ஸர்வக்ஞோபி விச்வேச: ஸதா காருணகோபி ஸந். சம்சார தந்திர வாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே

என்கிறது; அதாவது, கருணை உள்ளம் கொண்ட ஸர்வக்ஞனான எம்பெருமான், இந்த சம்சாரத்தை நடத்தும் பொருட்டு, சாஸ்த்திர விதிப்படி, சம்சாரி ஜீவர்களிடம் ரக்ஷண ப்ரார்த்தனையை, எதிர் பார்த்து பலனளிக்க காத்திருக்கிறான்.

ஆக, எம்பெருமான் ஸித்தோபாயமாய் இருக்க, அவன் தானாகவே ரக்ஷிப்பான் என அர்த்தம் கொண்டால், சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்ட **மோக்ஷத்திற்கான பக்தி யோகம் மற்றும் சரணாகதி உபாயங்கள்** அர்த்தமற்றதாகி விடும்.

ஆக, பகவத் திருவுள்ளத்தை, நம் பூர்வாசார்யர்கள் அருளிய விஷயத்தில், வேத மார்க்கமாக முன் பின் விரோதமில்லாமல், தாத்பர்யத்தை உணர வேண்டும், என்பதாகிறது.

2. ஆக, பக்தி ப்ரபத்தி நேரிடை மோக்ஷ காரணமாக ப்ரமாணங்கள் வலியுறுத்த, மற்ற உபாயங்கள் பரம்பரையாக மோக்ஷ ஸாதனம் ஆவதை ப்ரமாணங்கள் கூறுகின்றன :

புனித நதி நீராட்டம் மோக்ஷ ஸாதனம்

க்ஷேத்ர வாஸம் மோக்ஷ ஸாதனம்

பகவத் அவதார சிந்தனம் மோக்ஷ ஸாதனம்

பகவந் நாம உச்சாரணம் மோக்ஷ ஸாதனம்

இவை அனைத்தும் பரம்பரையாக மோக்ஷ ஸாதனம் என்பது பூர்வர்கள் நிர்வாகம் ; அப்படிப் பட்ட நிர்வாஹத்தால், பக்தி ப்ரபத்தி மட்டுமே மோக்ஷ ஸாதனம் என்னும் ப்ராமணங்களோடே விரோதிக்காமல் இருக்கும்.

பரம்பரையாக ஏற்படும் மோக்ஷ உபாயமானது, அந்த ஸுக்ருதம் பலனளிக்கும் வேளையில், ஓர் ஸதாசார்ய சேர்க்கைக்கு காரணமாகிறது. அதனால் மோக்ஷ உபாய அநுஷ்டானம் ஸித்தித்து, மோக்ஷ பலன் கை கூடுகிறது, என்பது ப்ரமாண விளக்கம்.

3. இதனால் தெளிய வேண்டுவது,

பக்தி ப்ரபத்தி - ப்ராப்தி விரோதியான பாபங்களை விலக்கி மோக்ஷமளிக்க வல்லது.

ஸித்தோபாய ப்ரதிபத்தி - உபாய விரோதியான பாபங்களைப் போக்கி, ஓர் உபாயத்திலே மூட்டி மோக்ஷமளிக்க வல்லது.

ஆதலால், **ஸித்தோபாய ப்ரதிபத்தி** மோக்ஷ காரணம் என்பதன் தாத்பர்யத்தை தெளிய வேண்டும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

143. <u>ஸித்தோபாய ப்ரதிபத்தியே சரமஸ்லோகம் வவியுறுத்துகிறதா?</u>

சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்கள் ஸித்தோபாய ப்ரதிபத்தி என்றும் சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற **மாம் எகம் சரணம் வ்ரஜ** எனும் பதங்கள் ஸித்தோபாய ப்ரதிபத்தி என்றும் சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். இது ஸாத்யோபாயத்தை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும் - **நிதித்யாஸிதவ்ய:** மற்றும் **முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே** போன்றவைகளோடும் - விரோதிக்கும்.

2. ஸித்தாந்த பூர்வபக்ஷிகளின், அர்த்த நிர்ணயங்களுக்கு ப்ரதான காரணம், சாஸ்த்திர ப்ராமணங்களின் அர்த்த நிர்தேசம் ப்ரகரணங்களை மறந்து பண்ணுவதேயாகும்.

சௌநக மஹரிஷியின் வரி:

யோ மே கர்ப கதஸ்யாபி வ்ருத்திம் கல்பிதவான் ப்ரபு: சேஷ வ்ருத்தி விதானேபி கிம் ஸுப்தஸ்ஸோத வா ம்ருத:

என்பதாவது,

கர்ப்பத்தில் சிசுவைக் காப்பாற்றும் ஈஸ்வரன், அந்த சிசு பிறந்து வளர்ந்த பிறகு ரக்ஷக கார்யத்தை செய்யாமல் இருக்க, அந்த ஈஸ்வரன் தூங்கி விட்டானா அல்லது இறந்து விட்டானா?

இதன் தாத்பர்யமாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறொரு தேவதையை நாடக் கூடாது என்பதை உரைக்க வந்தது; சாஸ்த்திரங்களில் விதிக்கப் பட்ட ஸாத்யோபாயத்தை மறுக்க வந்தது அல்ல. அப்படி ஜீவர்களின் ஸர்வ செயல்களையும் மறுப்பதாக இருந்தல் சரீர தாரணத்திற்காக செய்யப்படும் போஜந வ்யாபாரம், வ்யாதிக்காக ஸ்வீகரிக்கும் மருந்துக்கள் போன்றவைகளும் தவிர்க்க ப்ரஸங்கிக்கும்; இவ்விஷயத்தில் உள்ளபூர்வபக்ஷிகளின் வாதத்தை பரிஹஸிக்கிறார், ஸ்வாமி தேசிகன்.

வ்யாஸமஹரிஷியின் வரி:

ஆக்ஞோ ஜந்துரனீஷோயம் ஆத்மந: ஸுக துக்கயோ: ஈஸ்வர ப்ரேரிதா கச்சேத் ஸ்வர்க்கம் வா ஸ்வப்ரமேவ வா

என்பதாவது,

இந்த அறிவில்லாத ஜீவன் தனக்கு ஸுக துக்கங்களை தேடிக் கொள்ள சக்தி அற்றவன். ஈஸ்வர ஸங்கல்பத்தால் ஸ்வர்க நரகாதிகளை அடைகிறான்.

இதன் தாத்பர்யமாவது, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனிடம் ஜீவ பாரதந்த்ரியமும், ஈஸ்வரனின் கர்ம அநுகுணமான பல ப்ரதத்வமும் விளக்க வந்தது.

3. இவ்விஷயத்தில் தெளிவிற்காக மற்ற ப்ரமாணமாவது:

கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்; பராத் து தச்ருதே

என்ற ப்ருஹ்ம ஸுத்ரங்களுக்கு ஸ்ரீராமானுஜர், ஜீவர்கள் செயல் புரியும் தன்மை உடையவர்கள் என்றும், ஆனால் ஜீவர்கனின் செயல் புரியும் தன்மை ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் ஆதிக்கத்தில் உள்ளது என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

அதனால், சாஸ்த்ரப் படி ஜீவர்கள் செயல் புரிய வேண்டும். ஆக, பக்தி யோகம் செய்ய ஞான சக்தியாதிகள் அற்றவன் (மோக்ஷத்தை விரும்புகிறவன்), சரணாகதியை சாஸ்த்ர விதிப்படி அநுஷ்டிக்க வேண்டும் என்பதை கண்ணன், பகவத் கீதையில், வலியுருத்துகிறான்.

உதாரணமாக,

ஒரு வணிக நிறுவனத்தில் சில உயர் அதிகாரிகள் இருப்பர்.

அந்த அதிகாரிகளுக்கு முடிவு எடுக்கிற ஸ்வதந்தரம் இருக்கும்.

அப்படி இருக்கும் போது தான், அவர்கள் செயல்களால் வரும் லாபம் அல்லது நஷடம் மற்றும் அதனால் அவர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவைகளுக்கு அவர்கள் காரணமாவார்கள்.

ஆனால் அவர்களது ஸ்வாதந்த்ரியம் நிர்வாகத்தின் கட்டுபாட்டுக்குள் இருக்கக் கூடியது. நிர்வாகத்தின் விதிமுறைகளை மீறி முடிவு எடுக்க அவர்களுக்கு ஸ்வாதந்த்ரியம் கிடையாது.

அதனால் அவர்களுக்கு பூரண ஸ்வதந்தரம் கிடையாது என்பதே தவிர ஸ்வாதந்த்ரியமே கிடையாது என்று கொள்ள முடியாது.

அது போல,

ஜீவர்களுக்கு ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனால் கொடுக்கப் பட்ட ஞானத்தைக் கொண்டு, ஆசை, முடிவெடுக்கும் தன்மை, முயற்சி போன்றவைகள் அவர்களிடம் இருப்பதால், ஜீவர்களுக்கு செயல் புரியும் ஸ்வாதந்த்ரியம் உண்டு என்றும் அதைக் கொண்டு அவர்கள் செயல் பட வேண்டும் என்றும் தெளிவாகிறது.

ஆனால் அது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனால் கொடுக்கப் பட்டது என்பது உணரத் தக்கது.

4. ஸர்வேஸ்வரனான கண்ணன், ஸகல உபநிஷத் சாரமான பகவத் கீதையில் (2-47),

கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந மா கர்மபலஹேதுர்பூர்மா தே ஸங்கோSஸ்த்வகர்மணி

என அருளினான்.

அதாவது,

செயல் புரியத்தான் உனக்கு அதிகாரமுண்டு. அதன் பயன்களில் எப்போதுமே உனக்கு அதிகாரமில்லை. செய்கையின் பயனைக் கருதாதே; செல் செய்யாமலுமிராதே.

அதன் தாத்பர்யமாவது,

சாஸ்த்திரத்தில் விதித்தவற்றை, சரிவர செய்து கொண்டு, சாஸ்த்திரத்தினால் மற்க்கப் பட்ட செயல்களை செய்யாமல் தவிர்த்து, இருக்கும் சம்சாரி ஜீவர்களுக்கு, அவர்களின் செயல்களினால் ஏற்படும் பலன்கள், அவர்களது பூர்வ ஜன்ம பாப புண்யங்களுக்கு ஏற்ப பகவானால் பலன் அளிக்கப் படுகிறது, என்பதேயாகும்.

ஆக, நியாம்யனான சம்சாரி ஜீவன், சாஸ்த்திர அநுமதி பெற்ற செயல்களை செய்ய வேண்டுவதாகிறது.

சம்சாரி ஜீவர்களிடம் பிரிக்க முடியாத சம்பந்தம் கொண்டுள்ள ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், இந்த ஜீவர்களிடம் மிகுந்த கருணை கொண்டவனாக, சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், சாஸ்த்திர ஸம்ப்ரதாய ப்ரமாணங்களைக் காட்டி, ஸகல சம்சாரி ஜீவர்களும் பயன் படும் வகையால் அருளிச் செய்த தத்வ-ஹித-புருஷார்த்த விவரங்கள், நம் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அறிந்து கொள்வது, இரு விதத்தில் பெரிதும் பலனளிக்கும்:

தனக்கு ஏற்பட்ட தெளிவால், தன் ஆத்ம உஜ்ஜீவனத்திற்கு வழி வகுக்கும்.

இளைய தலைமுறையினர் மாசற்ற இந்த வைதீக ஸம்ப்ரதாயத்தை, பிழையற அறிய வாய்ப்பாகும்.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

ஆகையால் ஸித்தோபாயம் ப்ரதானமேயாகிலும் தத் வசீகாரணார்த்தம் ஸாத்யோபாய அநுஷ்டானத்துக்கு 'இன்றென்னை' இத்யாதி பூர்வாசார்ய வாக்ய விரோதமில்லை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

ஆகையால் - ஸித்தாந்த பூர்வ ஆசார்யர்கள், பகவத் ஸங்கல்பத்தின் தன்மையைப் பற்றி அருளிய படியால்

ஸித்தோபாயம் ப்ரதானமேயாகிலும் - மோக்ஷ காரணமாக எம்பெருமானே ப்ரதான உபாயமான போதிலும்

தத் வசீகாரணார்த்தம் - ஆக்ஞாதிலங்கன காரணமாக, சம்சாரி ஜீவர்களிடம், அந்த எம்பெருமான் கொண்ட நிக்ரஹத்தை சமிக்க

ஸாத்யோபாய அநுஷ்டானத்துக்கு - சரணாகதியை மோக்ஷ உபாயமாக அநுஷ்டிக்க

இன்றென்னை' இத்யாதி பூர்வாசார்ய வாக்ய - ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய் மொழி (10-8-9) மற்றும் இவ்விஷயமாக பல பூர்வ ஆசார்யர்கள் அருளியபடி

விரோதமில்லை - எம்பெருமானே ப்ரதான மோக்ஷ காரணம் எனக் கொள்ள குறையில்லை; அதாவது, சரணாகதி அநுஷ்டானமாவது, சாஸ்த்திரம் விதித்த, அகிஞ்சனனான முமுக்ஷுக்களால் அநுஷ்டிக்க வேண்டிய அப்ரதான காரணமே.

6. ஆக, சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்கள் ஸித்தோபாய ப்ரதிபத்தி என்றும் சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

144. <u>சேஷ சேஷி சம்பந்தம்</u>

1. ஸகல சேதந மற்றும் அசேதந வஸ்துக்களுக்கும் ஸர்வேஸ்வரன் ஆதாரமாயும், நியந்தாவாயும் மற்றும் சேஷியாயும் இருப்பது ப்ரமாண ஸித்தம். அதாவது,

நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:

என்கிற உபநிஷத் வரி அவனை பரமாத்மா என்கிறது. அதனால் மற்ற சேதந அசேதந வஸ்துக்கள் அவனுக்கு சரீரமாகிறது. அதனால், எந்த நிலையிலும் ஜீவனுக்கு பகவத் பாரதந்த்ரியம் இல்லாமல் போகாது. சரீர ஆத்ம சம்பந்த விளக்கமானது, பகவத் ராமானுஜர், ஸ்ரீபாஷ்யம் விலக்ஷணத்வாதி அதிகரணத்தில்

யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம் ஸர்வாத்மனா ஸ்வார்த்தேஷு நியந்தும் தாரயிதும் ஷக்யம் தத் ஸேஷதைக ஸ்வரூபம் தத் தஸ்ய சரீரம். இதர: சரீரி

என அருளினார்.

அதாவது, சேதநமான ஆத்மா, அப்ருதக்ஸித்த சம்பந்தமுடைய த்ரவ்ய சேதந அசேதநங்களைச் சரீரமாக்க் கொள்ளலாம், என்றபடி.

ஆத்மா ஆதாரம் - ஆத்மா இல்லாமல், அதனுடைய சரீரம் நிலை குலையக்கூடியது.

ஆத்மா நியந்தா - ஆத்மாவின் விருப்பப்படியே, அதனுடைய சரீரம் இயங்கக்கூடியது.

ஆத்மா சேஷி - ஆத்மாவின் உபயோகத்திற்காகவே அதனுடைய சரீரம் இருக்கிறது.

மேற் கூறிய இலக்கணத்தினால், ஜீவர்களுக்கு பகவத் பாராதந்த்ரியம் விலகாது.

2. மூன்று தத்வங்களையும் வைதீக ப்ரமாணங்களை கொண்டு

ஸ்வாதீன த்ரிவித சேதநா அசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ருவ்ருத்தி பேதம்

என்ற ப்ராமாணிகமாக, கத்யத்தில் அருளியிருக்கிறார் ஸ்ரீராமானுஜர்.

'மூன்று வித சேதநர்கள்' மற்றும் 'மூன்று வித அசேதந வஸ்துக்களின்' இருப்பு, வாழ்வு மற்றும் செயல்களை தன் ஆளுகைக்கு கீழ் கொண்டுள்ள 'சுதந்தரனான ஸர்வேஸ்வரன்', என அருளியுள்ளார். அதாவது, சேதநா அசேதந விசிஷ்ட ப்ருஹ்மம், ப்ரளய காலத்தில், சூக்ஷ்ம சேதந அசேதந விசிஷ்ட ப்ருஹ்ம மாக இருந்து, ஸ்ருஷ்டி காலத்தில், ஸ்தூல சேதநா அசேதந ப்ருஹ்மமாக மாறுகிறது, என்றபடி.

3. வேதார்த்த ஸங்க்ரஹத்தில்,

பரகத அதிசய ஆதான இச்சயா உபாதேய த்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ச சேஷ: பர: சேஷி

என்று ஸ்ரீ ராமானுஜர் விளக்கி அருளியதன் அர்த்தம்,

'பிறருக்கு சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணம் எவைகளுக்கு தன்மையோ, அவைகள் சேஷன். சந்தோஷத்தை அடைபவன் சேஷி'. அக, சேஷனான ஒரு சரணாகதன், சேஷியான ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுவதே தனக்கு தன்மை என உணர்ந்து செயல் பட வேண்டும். இதனால், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணுவது எது என அறிய வேண்டும்.

நிரூபாதிக பகவத் சேஷத்வமானது, சேதந அசேதநங்களுக்கு பொதுவாய் இருக்க, சேதனர்களுக்கு விசேஷித்து 'ஸ்வாமி - தாஸ' பகவத் சம்பந்தம் ப்ரமாணங்கள் சொன்னபடி ; இதை, கடோபநிஷத் கூறும் போது,

அகாரேண உச்யதே விஷ்ணு: ஸர்வ லோகேச்வரோ ஹரி: உத்ருதா விஷ்ணுனா லக்ஷ்மி: உகாரேண உவுச்யதே ததா. மகாரஸ்து தயோர் தாஸ: இதி ப்ரணவ லக்ஷணம்

என்று **அ** என்பதால், விஷ்ணு சொல்லப் படுகிறான்; **உ** பிராட்டியான மஹா லக்ஷ்மி சொல்லம் படுகிறாள்; அந்த திவ்ய தம்பதிகளுக்கு **ம** என்பதால் சொல்லப் படுகிற ஜீவன் தாஸனாகிறான், என்பது ப்ரணவத்தின் விளக்கம், எனப் பொருளாகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

145. <u>சரமஸ்லோகத்தால் சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணமாகுமா?</u>

சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்களால், சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணம் என்றும், சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற **மாம் எகம் சரணம் வ்ரஜ** எனும் பதங்களால், சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணம் என்றும், சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். இது ஸாத்யோபாயத்தை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும் - **நிதித்யாஸிதவ்ய:** மற்றும் **முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே** போன்றவைகளோடும் - விரோதிக்கும்.

2. ஈவரன் நமக்கு சேஷியாகவும், நாம் அனைவரும், அவனுக்கு குழந்தைகளாகவும் உள்ளோம்,என்பது ஸ்ரீமத் ராமாயண ஆரண்ய காண்டத்தில் உள்ள வசனத்தினால், இந்த வாதம், உதாஹரிக்கப் படுகிறது.

கர்ப்ப புதாஸ்தபோதநா:

என முனிவர்கள், தாங்கள் குழந்தை போன்றவர்கள் என ஸ்ரீராமனிடம் வர்ணித்தனர்.

பசி எடுத்த ஒரு கைக் குழந்தைக்கு, அதன் தேவையை அறிந்து, பால் கொடுப்பது ஒரு தாய்க்கு இயற்கை அன்றோ?

அக்குழந்தை வேண்டி கேட்காமலே, அந்த நற்பலனை அக்குழந்தை பெறுவதைப் போல், எம்பெருமானுக்கு, குழந்தைகளாக கருதப் படும் நாம், சரணாகதி அநுஷ்டிக்காமலே இருக்க, சேஷ - சேஷி ஸம்பந்தத்தினாலேயே, எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணன் மோக்ஷம் கொடுத்து ரக்ஷித்தருளுவான்,

என்று பூர்வபக்ஷிகள் கூறுவர்.

இந்த விளக்கம், மோக்ஷத்திற்கா பக்தி யோகம் மற்றும் சரணாகதியை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும், ஸ்ரீ ராமானுஜர் அருளிய சரணாகதி கத்யம், ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் போன்ற க்ரந்தங்களோடும் முற்றிலுமாக விரோதிக்கும்.

இந்த வாதம் சாத்யமானால், எம்பெருமான், ஸகல ஜீவர்களுக்கும் மோக்ஷம் அளிக்க வேண்டி வரும்.

இல்லாவிடில், ஒரு சில ஜீவர்களுக்கு மட்டும் மோக்ஷம் அளித்து மற்றவருக்கு கொடுக்காமல் இருப்பனேயானால், எம்பெருமானுக்கு, பாரபக்ஷம் என்கிற தோஷமும் வரும்.

மேலும், இன்னும் மோக்ஷம் அளிக்காத ஜீவர்கள் விஷயத்தில் அவனை கருணை அற்றவனாக கொள்ள நேரிடும்.

இக்கருத்துக்கள், உபநிஷத்தோடு விரோதிக்கும்.

வேத வேதாந்தங்களுக்கு முரணாக உப ப்ருஹ்மணங்களுக்கு (ஸ்ரீமத் ராமாயணத்திற்கு) அர்த்தம் கூறுவது சாஸ்த்திரத்தை அறிந்தவர்கள் செய்யும் செயலாகாது என்கிறார் மநு பகவான்.

3. ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (18-9)

கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதே அர்ஜுன. ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக ஸாத்விகோ மத:

அதாவது,

அவரவர்களுக்கு, சாஸ்த்திரத்தில் விதிக்கப் பட்ட கர்மாக்களை ஒரு போதும் கைவிடக்கூடாது என்றும் மேலும் அவைகளை ஸாதிவீக த்யாகத்தோடு செய்ய வேண்டுவதாக தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

ஸாத்வீக த்யாகம் என்பது

ஸர்வேஸ்வரனே என்னைக் கொண்டு செய்து போகிறான் என்ற எண்ணம் கொள்வது 'கத்ருத்வ த்யாகம்'.

மற்றும் 'என்னால் செய்யப்படுகிறது' என்ற எண்ணத்தை விடுவது 'மமதா த்யாகம்'. இந்த செயலும் ஸர்வேஸ்வரனாலேயே நடத்தி வைக்கப் படுகிறது என்று செய்து போக வேண்டும்.

மேலும், விதிக்கப் பட்ட வைதீக கர்மாக்களை செய்யும் போது, ஸர்வேஸ்வரனின் உகப்புக்காக, பலனில் பற்றற்று, செய்வதாக எண்ணம் கொள்ள வேண்டும். அதற்கு 'பலத் த்யாகம்' என்று பெயர்.

ஆக, ஈஸ்வரனின் எஜமான தொடர்பு ஜீவர்களுக்கு நித்யமாக உள்ள போதிலும், ஜீவர்கள் தங்களது பூர்வ பாப புண்ய கர்மாக்களால் பீடிக்கப் பட்டிருக்கிறபடியால், அவனுடைய க்ருபையை பெருவதற்காக ஏதோ ஒரு உபாயத்தை (பக்தி யோகமோ அல்லத் சரணாகதியோ) ஸாத்வீக த்யாகத்தோடு கைக் கொண்டால் மட்டுமே ஈஸ்வரன் அவர்களை ரக்ஷிக்கிறான், என்பது சாஸ்த்திரங்களால் அறுதியிட்டு கூறப்பட்டிருக்கிறது.

இல்லையென்றால் அவன் ரக்ஷிப்பதில்லை.

சாஸ்த்திரங்களை ஏற்பவர்கள் இதை ஒத்துக் கொள்ள வேண்டும், என்பதாகிறது.

4. ஸ்ரீராமனிடம் முனிவர்கள், தங்களை குழந்தை போன்றவர்கள் என்று உரைத்ததன் அர்த்தமாவது, ஸர்வேஸ்வரனான எம்பெருமான், தங்களுக்கு ஹிதத்தை செய்து (நல்லதை செய்து) ரக்ஷிக்க வேண்டுவதே ஆகும்.

ஒரு தாயானவள், ஒரு இனிப்பு பண்டத்தை, ரஸித்து உண்ணும் தன் குழந்தைக்கு, தான் செய்யும் ஹிதமாக கருதி (சந்தோஷத்திற்காக) கொடுக்கிறாள். அதே சமயம், அந்த குழந்தைக்கு உடல் நலம் சரி இல்லாத போது, அந்த இனிப்பு பண்டத்தை கொடுக்க மறுப்பதும் ஹிதம் கருதியே (உடல் நலம் பாதிக்கக் கூடாது என்கிற எண்ணத்தினால்).

குழந்தைக்கு, தனக்கு எது ஹிதம் என்று அறியாத போதும், அந்த தாய் குழந்தையின் ஹிதத்தை அறிவாள் அன்றோ?

அது போல், குழந்தைகள் போல் உள்ள தங்களுக்கு, ஹிதத்தை செய்ய வேண்டி, ஸ்ரீராமனிடம் முனிவர்கள் அவ்வாறு ப்ரார்த்தித்தனர்.

அந்த முனிவர்கள், தாங்கள் செய்யும் யாகங்களை ரக்ஷித்து தரவே ப்ரார்த்தித்தனர்.

ஆக அது, சாஸ்த்திரத்தில் தங்களுக்கு விதித்தவற்றை செய்யாமல் இருப்பதற்காக கூறிய வசனம் அன்று.

உபநிஷத் ஸாரமான, வேதவ்யாஸர் அருளிய, **ப்ருஹ்ம ஸூத்ரம்** (3ம் அத்யாயம் 4ம் பாதம் 13வது அதிகரணம் 49ம் ஸூத்ரம்)

அனாவிஷ்குர்வன் அன்வயாத்

அதாவது,

தன் பெருமையை வெளியிடாது பாலனை போல் செயல் செய்ய வேண்டும்,

என்கிறது.

இந்த ஸூத்ரம் ஆனாவிஷ்காராதிகரணத்தில் இடம் பெறுகிறது. இங்கு விளக்கப்படுவது, 'ஜீவர்கள் ஒரு குழந்தையைப் போல் இருந்து செயல் பட வேண்டும்' என்பது.

சாஸ்தரங்கள் ஜீவர்களை பரதந்தரன் (ஸ்வதந்தரம் அற்றவன்) என்று கூறுகின்றன. மேலும் சாஸ்த்ரங்கள், ஜீவர்களை 'பாலனை போல் செயல் செய்ய வேண்டும்' என்கின்றன.

ஆகையால், இதன் அர்த்தங்களாக இந்த ஜீவர்கள் சாஸ்த்ர விதிகளுக்கு கட்டுப் படாமல் தான் நினைத்ததை செய்து போகத் தகுமோ என்றால், 'பாலனை போல் செயல் செய்ய வேண்டும்' என்பது இவ்வாறு சொல்ல வந்தது அல்ல என உணர வேண்டும்.

அதாவது, ஜீவர்கள் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன், சாஸ்த்ரங்களில் விதித்த படி, செயல் புரிய கடமைப் பட்டவனாவார்கள்.

இங்கே, குழந்தை தன்மையாக உரைப்பது, 'அஹங்காரம்' அற்று, ஞானத்தைப் பெற்ற பிறகு எப்பொழுதும் ஆத்மாவை சிந்தித்த வண்ணம் இருக்க வேண்டும் என்பதையே வலியுருத்துகிறது. இதுவே மோக்ஷத்தை விரும்பும் ஜீவர்களுக்கு பால்ய தன்மையாகும்.

உபநிஷத்துகளிலும் 'பாலனை போல் செயல் செய்ய வேண்டும்' என்று கூறுவதன் நோக்கம் தன்னடக்கத்துடன் செயல் பட வேண்டும் என கூற வந்ததே. இதுவே பக்தி யோகம் செய்பவனுக்கும் பொருந்தும்.

சிறு வயதில் இருக்கும் பாலகனுக்கு, தன்னுடைய ஏற்றத்தையோ அல்லது தன்னுடைய குடும்பத்தின் ஏற்றத்தையோ மற்றவர்களிடம் வெளிக் காட்ட தெரியாது அல்லவா? அந்த ஏற்றத்தினால் கர்வம் ஏற்பட்டு எண்ணங்களும் செயல்களும் சிறு வயதில் இருக்கும் பாலகனுக்கு மாற்றம் அடையாது அல்லவா? அது போல இருக்க வேண்டும் யோகத்தில் ஈடுபட்டவர்கள் என இந்த ஸூத்ரத்திற்கு பொருள்.

அதனால், சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணம் என்று சொல்லப் போனால் அது சாஸ்த்திர விரோதம். பகவத் சம்பந்தத்தை உணர்ந்த பரதந்த்ர சம்சாரி ஜீவன், மோக்ஷ இச்சை கொண்டு, ஸாத்யோபாயத்தை, தன் அதிகாரத்திற்கு ஏற்ப, அநுஷ்டிப்பான் என்பதே பூர்வர்களின் கருத்து.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

அப்படிக் கொள்ளில் ஸர்வரும் நித்ய முக்தராக ப்ரஸங்கிக்கும்; ஸ்வாதந்த்ரியத்தாலே நியமம் சொல்லில், முன்பு சொன்னபடியே வைஷம்ய நைக்ருண்யங்கள் ப்ரஸங்கிக்கும்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

அப்படிக் கொள்ளில் - சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணம் என்று சொல்லப் போனால்

ஸர்வரும் - அனைத்து சம்சாரி ஜீவர்களுக்கும்

நித்ய முக்தராக ப்ரஸங்கிக்கும் - மோக்ஷம் அளிக்க நேரிடும்; இது காலம் சம்சாரத்தில் அவர்கள் துக்கமயமான சம்சாரத்தில் இருந்ததற்கு காரணம் இல்லாமல் போகும்

ஸ்வாதந்த்ரியத்தாலே நியமம் சொல்லில் - ஸர்வேஸ்வரன் தன் சுதந்தர தனமையாலே, எவருக்கு வேணுமானாலும் மோக்ஷ பலனை அளிப்பான் என்பதாகக் கருதினால்

முன்பு சொன்னபடியே - இதற்கு முன் அதிகாரங்களில் விளக்கியபடியே

வைஷம்ய நைக்ருண்யங்கள் ப்ரஸங்கிக்கும் - சாஸ்த்திரப் படி, ஹேய குணங்கள் அற்ற எம்பெருமானுக்கு, கருணை அற்றவன் மற்றும் பாரபக்ஷம் கொண்டவன் என்கிற தோஷங்கள் உள்ளவனாக்க் கொள்ள நேரிடும்

6. ஆக, சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்களால், சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணம் என்றும், சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

146. <u>பகவத் சம்பந்த ஞானம்</u>

1. பகவத் சம்பந்த விஷயத்தை, திருவஷ்டாக்ஷர விளக்கமாக, ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய சாரத்தில் விளக்குகிறார்.

அஹம் ஆத்மா ந தேஹோஸ்மி விஷ்ணு சேஷோ அபரிக்ரஹ: தமேவ சரணம் ப்ராப்த: தத் கைங்கர்ய சிகீர்ஷயா

அதாவது, **நான்** என்கிற சொல் ஆத்மாவை குறிக்கும்; எனது சரீரத்தை குறிக்காது; ஸர்வேஸ்வரனுக்கு நான் அடிமைப் பட்டவன்; எனக்கு அடிமைப்பட்டது என்பது எதுவும் கிடையாது. நமக்கு அடிமைப் பட்டதாக இங்கு தோன்றும் அனைத்தும் சரீர சம்பந்தத்தினால். ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை சரண் அடைந்திருக்கிறேன்; அவனுக்கு அடிமைத் தொழில் செய்வதற்காக.

2. ஸர்வேஸ்வரனுக்கும் ஜீவர்களுக்கும் உள்ள சரீர-ஆத்ம ஸம்பந்தம் உண்டு எனத் தெளிய வேண்டும் :

தைத்ரீய உபநிஷத்தில்,

நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சித் ஜகத் யஸ்மிந் த்ருஸ்யதே ஸ்ரூயதேபி வா அந்தர்பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:

என்கிறது. அதாவது, நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனே பரதத்வம், நாராயணனே பரஞ்சோதி, நாராயணனே பரமாத்மா, இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமாக எந்தெந்தப் பொருள்கள் உள்ளனவோ, அவையனைத்திலும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குபவன் நாராயணனே. ஆக, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே பரமாத்மா, என்றாகிறது.

ஸகல சேதந அசேதந வஸ்துக்களுக்கு சரீரத்வம் சொல்லக் கூடிய ஸ்ருதிகளும் இதனை உறுதி செய்கிறது. ப்ருஹதாரண்யக உபநிஷத்தில், அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில்,

ய ஆத்மநி திஷ்டந் ஆத்மந அந்தரோயம் ஆத்மா ந வேத யஸ்ய ஆத்மா சரீரம் ய ஆத்மநம் அந்தரோ யமயதி ஸ த ஆத்ம அந்தர்யாமி அம்ருத:

அதாவது, ஸகல ஜீவாத்மாக்களும் ஸர்வேஸ்வரனுக்கு சரீரம்; அதாவது, அவன் ஸர்வ ஜீவர்களுக்கும் அந்தர்யாமி, எனப்படுகிறது.

மேலும், ப்ருஹதாரண்யக உபநிஷத்தில்,

யப் ப்ருதிவியம் திஷ்டன் ப்ருதிவ்யா அந்தரோ யம் ப்ருதேவீ ந வேத யஸ்ய ப்ருத்வீ சரீரம் யப்ருதிவீம் அந்தரோ யமயதி தா ஆத்மா அந்தர்யாமி அம்ருத:

அதாவது, த்ரிகுணமான மூலப்ரக்ருதி ஸர்வேஸ்வரனுக்கு சரீரம்; அதாவது, அவன் விபுவானபடியால், தான் இல்லாத இடம் ஒன்று உண்டு என்று ஆகாதபடி அசேதநங்களுக்கும் அந்தர்யாமி, எனப்படுகிறது.

ஆக, சரீர ஆத்ம அப்ருதக் ஸித்த சம்பந்தத்தினால், **ஸகல சேதந அசேதநங்களும் ஈஸ்வரனுக்கு விசேஷணம்** ; அதுவே விசிஷ்டாத்வைதம் ; சேதந அசேதநங்களோடு கூடிய ஈஸ்வரன் ஒருவனே.

3. ஸ்வாமி தேசிகனின் ப்ரபாவ வ்யவஸ்தை அதிகாரம் வரிகள் :

குலம் தரும் - என்கிற பாட்டுக்கு வ்யாக்யானம் பண்ணின அபியுக்தரும் - ஜந்மத்தால் வ்ருத்தத்தால் குறைந்தான் ஒருத்தனுக்கு பகவத் சம்பந்தம் உண்டானால் அவனை இவை உடையான் ஒருத்தன் தாழ நினைக்கக் கூச வேண்டும்படி ஆயிற்று பகவத் ப்ரபாவம் இருக்கும்படி

இதன் பொருளாவது :

குலம் தரும் - அநுஸந்திப்பவர்களுக்கு, உயர்ந்த ஸ்ரீவைஷ்ணவ குலத்தைக் கொடுக்கும்

என்கிற பாட்டுக்கு வ்யாக்யானம் பண்ணின அபியுக்தரும் - என்கிற ஆழ்வார் பாசுரத்துக்கு வ்யாக்யானம் செயதருளிய பெரிய வாச்சான் பிள்ளையும்

ஜந்மத்தால் வ்ருத்தத்தால் குறைந்தான் ஒருத்தனுக்கு - பிறப்பின் செயல்களால் நீசனான ஒரு சம்சாரி ஜீவன்

பகவத் சம்பந்தம் உண்டானால் - சரண்யனிடம் சரணாகதி அநுஷ்டித்து சரணாகதனானால்

அவனை இவை உடையான் ஒருத்தன் - பிறப்பின் செயல்களால் உயர்ந்து இருக்கும் சரணாகதன்

தாழ நினைக்கக் கூச வேண்டும்படி ஆயிற்று - அவனை விலக்கத் தக்கவனாக கருதலாகாது

பகவத் ப்ரபாவம் இருக்கும்படி - ஏனெனில், சரணாகதனிடம் பகவத் ப்ரபாவம் அத்தகையது

ஆக, பகவத் சம்பந்தமானது, ஸ்வ ஸ்வரூபத்தை உணர்ந்து, ஆத்ம அபஹார சௌர்யம் நீங்க, ஆத்ம சமர்ப்பணம் வரை நீடிக்க ப்ராப்தம்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

147. மோக்ஷ பலன் பெற பகவத் சம்பந்த ஞானமே போதுமா?

சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்களால், சம்பந்த ஞானமே போதும்; தனியாக ஓர் ப்ரபத்தி அநுஷ்டானம் தேவையில்லை என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற **மாம் எகம் சரணம் வ்ரஜ** எனும் பதங்களால், சேஷ சேஷி சம்பந்தமே மோக்ஷ காரணம் என்றும், சரணாகதி அநுஷ்டானம் அநுபாயம் என்றும் அர்த்த நிர்ணயம் செய்வர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள். இது ஸாத்யோபாயத்தை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும் - **நிதித்யாஸிதவ்ய:** மற்றும் **முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே** போன்றவைகளோடும் - விரோதிக்கும்.

2. எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணன் சேஷியாய் இருக்க, மோக்ஷத்தை பெற விரும்பும் ஜீவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளாவது:

 # ஸர்வேஸ்வரனோடு உள்ள சம்பந்த ஞானம்

 # ஸர்வேஸ்வரன் ரக்ஷிக்கும் போது விலக்காமை

என கொள்ளும் கருத்து,

வேதாந்தங்களோடும் மற்றும் ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த க்ரந்தங்களோடும் முற்றிலும் முரண்படும்.

1.மஹாபாரதத்தில், வன பர்வாவில், சாத்யகி பலராமனுக்கு கூறும் அறிவுரை:

(அர்ஜுனனுக்கும், கிருஷ்ணருக்கும் நண்பராக இருந்தவன் சாத்யகி. யதுகுலத்தைச் சேர்ந்தவன். பஞ்ச பாண்டவர்கள் மனம் சோர்ந்த போதெல்லாம் அவர்களுக்கு உற்சாகமூட்டியவன்.)

யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகர்மாபி சமார பந்தே தேஷாம் ஹி கார்யேஷு பவந்தி நாதா சைப்யாதயோ ராம யதா யயாதே

அதாவது,

உலகில் எவர்களுக்கெல்லாம் நாதன் இருக்கிறானோ, அவர்கள் தன்னை ரக்ஷித்துக் கொள்ளும் காரியத்தை செய்வதில்லை. பலராமனே ! அந்த ரக்ஷண காரியத்தில் அவனது நாதனாகிய ஸ்வாமியே முயலுவான், யயாதிக்கு சிபி உதவியது போல்.

(யயாதி மஹாராஜனுக்கு தன் புண்யங்களைக் கொடுத்து சிபி சக்ரவர்த்தி, யயாதியை ஸ்வர்கம் அடைய செய்கிறான் என்பது இதிஹாஸ வசனம்)

ஆக, ஸகல ஜீவர்களுக்கும் ஸ்வாமியான ஸர்வேஸ்வரன், ஜீவர்களிடம் ஒரு செயலை எதிர்பார்த்திராதே, ரக்ஷிப்பான்; அதனால், மோக்ஷத்திற்காக சம்சாரி ஜீவர்கள் செய்ய வேண்டுவது:

நாதனை அறிவதும் (ஸர்வேஸ்வரனோடு ஜீவர்களுக்கு உள்ள ஸம்பந்த ஞானம் பெறுவதும்) மற்றும் அவன் ரக்ஷிக்கும் போது விலக்காமல் இருப்பதும்,

என்கின்றனர் பூர்வபக்ஷிகள்.

இந்த விளக்கம், மோக்ஷத்திற்கான பக்தி யோகம் மற்றும் சரணாகதியை விதிக்கிற உபநிஷத் வரிகளோடும், ஸ்ரீ ராமானுஜர் அருளிய சரணாகதி கத்யம், ஸ்ரீ பாஷ்யம், கீதா பாஷ்யம் போன்ற க்ரந்தங்களோடும் முற்றிலுமாக விரோதிக்கும்.

வேத வேதாந்தங்களில் கூறாதது சாஸ்த்திரமாகாது என்பதும், அவ்வாறு கூறுபவர்கள் சாஸ்த்திரம் அறிந்தவர்கள் ஆக மாட்டார்கள் என்பதும், மநு ஸம்ருதியில் கூறப்பட்டிருக்கின்றன.

3. மஹாபாரத வரியை கூர்ந்து கவனிப்போம்.

அங்கு கூறப் பட்டிருப்பது

நாதவந்தோ ஹி பவந்தி

அதாவது 'நாதனை அடைந்திருப்பவர்கள்' என பொருள் கொண்டது.

இந்த **நாதன்** என்ற பதத்திற்கு அர்த்தமாவது,

நாத்யத் இதி நாத: என்று பொருள் கிடைக்கிறது.

அதாவது, அந்த வார்த்தையின் அர்த்தம் ஸம்ஸ்க்ருத அகராதியின்படி, 'யாரிடம் யாசிக்கப் படுகிறதோ அவன் நாதன்' என்ற பொருள் கிடைக்கிறது.

ஆக, இதனால் **ரக்ஷக ப்ரார்த்தனை** என்பது பொருளாகிறது.

அந்த ஸ்லோகத்தில் உள்ள 'உலகில் எவர்களுக்கெல்லாம் நாதன் இருக்கிறானோ' என்பதற்கு 'உலகில் எவர்களுக்கெல்லாம் யாசிக்க பலன் கொடுக்க ஒரு ஸ்வாமி இருக்கிறானோ' என்ற பொருள் கிடைக்கிறது.

அதனால், அந்த சாத்யகியின் வசனத்திற்கு, வேதாந்தங்களுக்கு விரோதமில்லாமல் அர்த்தம் காணும் போது, ஸர்வ சேஷியான எம்பெருமான் பலன் அளிக்க நாதனாக இருக்கும் போது, எளிய அநுஷ்டானமாகிய சரணாகதி பலன் அளிக்க வல்லது என்று பொருள் கொள்ள வேண்டுவதாகிறது.

4. மேலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் வெளியிட்ட பாஞ்சராத்ர ஆகம சாஸ்த்திரப்படி,

அப்ரார்திதோ ந கோபாயேத் இதி தத் ப்ரார்த்தனா மதி: கோபாயிதா பவேத் ஏவம் கோப்த்ருத்வ வரணம் ஸ்ம்ருதம்

என்கிற ப்ரமாண வாக்கியத்தினால், ரக்ஷிக்க வேண்டும் என ப்ரார்திக்காது, ஆத்ம ஸமர்ப்பணமாகிற சரணாகதியை செடய்யாவிடில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஒரு போதும் மோக்ஷ பலனை அளிக்க மாட்டான் என தெளிவாகிறது.

அதனால்,

ஸர்வேஸ்வரனோடு உள்ள ஸம்பந்த ஞானம் மோக்ஷ ஸாதனம் என்பது பொருந்தாது,

ஏனெனில்,

ஸம்பந்த ஞானம் மோக்ஷம் அளிக்க வல்லது என்பதற்கு வேத வேதாந்த ப்ரமாணம் கிடையாது.

மேலும், வேதாந்தங்கள், பக்தி யோகத்தையும் சரணாகதி அநுஷ்டானத்தையுமே மோக்ஷத்திற்கான உபாயமாக கூறுகிறது.

நாந்யப்பந்தா அயனாய வித்யதே என்கிற

தைத்ரீய உபநிஷத், இதைத் தவிர மோக்ஷத்திற்கு வேறு ஒரு வழி கிடையாது என்கிறது.

இந்த ஸம்பந்த ஞானத்தினால் மோக்ஷம் என்கிற வாதம் ஸ்ரீராமானுஜர் அருளிய பல க்ரந்தங்களோடும் விரோதிக்கிறது.

இப்படிப்பட்ட அப்ராமாணிகமான வாதங்களால், ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தை, மாற்றி அமைக்க, பூர்வபக்ஷிகள் முற்படுகிறார்களோ, என்றே தோன்றுகிறது.

இரு கலைகளுள் பெரியதொரு வேற்றுமை கிடையாது, என ஸத் சிஷ்யர்களை மயக்கி வஞ்சிக்கும், ஸம்ப்ரதாய நவீன பாகவதர்கள், ஸாத்யோபாய விஷயத்தில், அதாவது சரணாகதி அநுஷ்டான விஷயத்தில் உள்ள இரு-கலை வேற்றுமையையும் தெளிவிக்க வேண்டும்.

ஏனெனில்,

எம்பெருமான் ஸகல ஜீவர்களும் உஜ்ஜீவிக்க, தன் நிர்ஹேதுக க்ருபையால், சாஸ்த்திரத்தை வழங்கினான்; ஸ்ரீமந் நாதமுனி, யாமுன முனி, ராமானுஜ முனி, ஸ்வாமி தேசிகன் போன்ற நம் ஸதாசார்யர்கள் அருளிய க்ரந்தங்களைக் காணும் போது, ஸாத்யோபாயமான சரணாகதி அநுஷ்டானமின்றி மோக்ஷ பலன் கிடைக்க வழியில்லை என்பதை ப்ரமாண பூர்வகமாக தெரிந்து கொள்ள முடிகிறது அன்றோ !

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

லோக நீதியில் உள்ளதெல்லாம் மோக்ஷ சாஸ்த்திரத்தில் ஊகிக்கை வசந விருத்தம்

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

லோக நீதியில் - உலக நடப்பில் உள்ள பழக்க வழக்கங்களை

உள்ளதெல்லாம் - ஒரு நியதி ஆக்கி

மோக்ஷ சாஸ்த்திரத்தில் - புலன்களுக்கு அப்பாற் பட்ட ஈஸ்வர, ஜீவ தத்வ விஷயங்களையும், மோக்ஷ ஸாதநமான வற்றையும்

ஊகிக்கை - நம் கர்ம சம்பந்தத்தோடு கூடிய, சங்குசிதமான ஞானத்தைக் கொண்டு அர்த்தம் பண்ணப் போவது

வசந விருத்தம் - உண்மையை உரைக்கும் வேத வேதாந்த ப்ரமாணங்களோடு விரோதிக்கும்; ஆதலால், புலன்களுக்கு அப்பாற் பட்ட ஸகல விஷயங்களிலும், சாஸ்த்திரமே கை விளக்கு; மாற்றாக விவாதிப்பது நாஸ்திக மத ப்ரவேசமாகும்.

6. ஆக, சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பதங்களால், சம்பந்த ஞானமே போதும்; தனியாக ஓர் ப்ரபத்தி அநுஷ்டானம் தேவையில்லை என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

148. அத்யந்த பரதந்த்ரனான ஜீவன் ஒரு உபாயத்தில் யத்நிக்கலாமா?

1. **பராதீன கர்த்ருத்வத்தை உடைய சேதந அசேதந வஸ்துக்களுக்குள் வாசி உண்டு :**

இதிஹாஸ சமுச்சய வரிகளைக் கொண்டு பார்க்கும் போது,

ஸ்வயம் ம்ருத் பிண்ட பூதஸ்ய பரதந்த்ரஸ்ய தேஹிந: ஸ்வ ரக்ஷணேபி அஸக்தஸ்ய கோ ஹேது பர ரக்ஷணே

அதாவது

மண் கட்டி போல் இருக்கும் சம்சாரி ஜீவனுக்கு **ஸ்வாதந்த்ரியம்** கிடையாது; தன்னை ரக்ஷித்துக் கொள்ளவே தகுதி இல்லாத போது பிறர்களை எப்படி ரக்ஷிப்பான் என அர்த்தமாகிறது.

2. அதனால், ஜீவர்கள், **அத்யந்த பரதந்ந்ரர்களாய்** இருக்க, செயல் செய்ய யோக்யதை அற்றவன், என்றாகிறது ; ஆனால், **பராதீனம்** என்பதாவது, சேதநனின் செயல் அனைத்தும் பகவத் அதீனம் ; அந்த பகவானானவன் சாஸ்த்திரங்களில் நியமிக்க, கர்ம அநுகுணமாக, ஞான சக்த்யாதிகளைக் கொடுக்க, அதானல் சேதநன் செய்கிறான், என்பதே இதன் விளக்கம்.

இதையே, உபநிஷத் சாரமான, ப்ருஹ்ம ஸுத்ரம்,

கர்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்; பராத்து தச்சுருதே:

என்கிறது. அதாவது, சாஸ்த்ரம் கூறுவதால் ஜீவன் செயல் புரியும் தன்மை உள்ளவன். ஆனால் ஜீவனுடைய செயல் புரியும் தன்மை பகவத் அதீனம். இதையே இந்த ஸுத்ரங்களுக்கு வ்யாக்யானமாக ஸ்ரீராமானுஜராலும் ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கப்படுகிறது.

3. சம்சாரி ஜீவர்களின் **பராதீன கர்த்ருத்வம்** என்பதில், ஜீவ கர்த்ருத்வம் எவ்வாறு இருக்கிறது ; ஸ்ரீ நடாதூர் அம்மாள், **தத்வ ஸாரத்தில்**,

ஆதா வீஸ்வரகத் தயைவ புருஷ ஸ்வாதந்தர்ய சக்த்யா ஸ்வயம் தத் தத் ஞான சிகீர்ஷண பிரயத்நாந் யுதபாதயந் வர்த்ததே தத்ரோ பேஷ்ய ததோநுமத்ய விததத் தத் நிக்ரஹ அநுக்ரஹவ் தத் தத் கர்ம பலம் பிரயச்சதி தத ஸர்வஸ்ய பும்ஸோ ஹரி

என அருளியுள்ளார். ஸர்வ நியந்தாவாய், ஸர்வ அந்தர்யாமியானவன், ஸ்ருஷ்டி தசையிலே, ஸ்வாதந்த்ரியத்தாலே, தான் உண்டாக்கிக் கொடுத்த, தேஹ இந்த்ராயங்களால், சேதநன் தானே அவ்வோ விஷயங்களில் **ஞான சிகீர்ஷா பிரயத்னங்களைப்** (அறிந்து, ஆசைப் பட்டு, அதனால் முயற்சி ஆகியவைகளை) பண்ணிக் கொண்டு இருப்பவன். அவ்விடங்களில் அசாஸ்த்ரீயங்களை உபேக்ஷித்தும் சாஸ்த்ரீயங்களை அபேக்ஷித்தும் இருக்க, அவ்வோ விஷயங்களில் நிக்ரஹ அநுக்ரஹங்களைப் பண்ணிக் கொண்டு அவ்வோ கர்ம பலன்களையும் ஸர்வேஸ்வரன் கொடுத்தருள்கிறான், என்றபடி.

4. இதையே, **பராதீன கர்த்ருத்வம்** உடைய ஜீவர்கள் என்பதால், விதி நிஷேத சாஸ்த்திரங்கள் பயன்ற்று போகாத வகையில்,

க்ருத ப்ரயத்ந அபேக்ஷ: து விஹித ப்ரதிக்ஷித்தா வையர்ய்யாதிப்ய:

என்கிற **ப்ருஹ்ம ஸுத்ரமாவது** (பராயத்தாதிகரணம்), விதி நிஷேத சாஸ்த்திரங்கள் வீணாகக் கூடாது என்பதால், ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஸ்வாதந்த்ரியம் உண்டு என்பதாகிறது.

ஆக, சாஸ்த்திர விதியான உபாயத்தில், அவ்வோ பலனில் இச்சை உள்ளவர்கள் யத்நிக்க வேண்டும் என்பது ப்ரமாண ஸித்தம் ; அதனை, ஸகல உபநிஷத் சாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில் (9-27)

யத் கரோஷி யத் அஷ்னாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத். யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மதர்பணம்

அதாவது, ‘அர்ஜுனா ! நீ செய்யும் அனைத்து லௌகீக வ்யாபாரங்களையும் மற்றும் வைதீக கர்மாக்களையும் என்னிடத்தில் அர்ப்பணம் செய்.’ எனக் கண்ணனால் சொல்லப் பட்டிருக்கிறது.

ஆக, பகவத் அர்ப்பணமாகிய, ஸாத்வீக த்யாகம் என்பது **பராதீன பரார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வத்தை உடைய ஜீவர்களின்** அனைத்து சாஸ்த்திர விஹித செயல்களுக்கும் பொருந்தும். இதையே, ஸகல விதமான விஹித க்ரியைகளைச் செய்து விட்டு **ஸ்வஸ்மை ஸ்வப்ரீதயே ஸ்வயமேவ காரிதவான்** என்கிற **பராதீன பரார்த்த கர்த்ருத்வ போக்த்ருத்வத்தை உடைய ஜீவர்களின்** நிலையை உணர்ந்து இருப்பதே ஸாத்வீக த்யாகத்தின் எல்லையாகிறது.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

149. <u>ஸித்தோபாயத்வ விளக்கம்?</u>

ஒரு பலனை அடைய இரண்டு உபாயங்கள் உள்ளன; இவ்விஷயத்தை, ஸ்வாமி தேசிகனின் **ரஹஸ்ய ரத்நாவளி ஹ்ருதயம்** உள்ள வரிகள் தெளிவிக்கின்றன:

ப்ராப்தி உபாயமாவது இஜ்ஜீவன் சம்சார ஸாகரத்தைக் கடந்து அக்கரைப் படுகைக்கு அனபாய ஸாதனமாக ஸ்வ புத்தியாலே கோரும்படி சாஸ்த்தர உக்தமான அர்த்தம். இது ஸித்தமென்றும் ஸாத்யமென்றும் இரண்டு படியாய் இருக்கும்

ஸித்தோபாயம் - பலன் கொடுப்பனிடம், எப்போதுமே பலன் தர தயாராக இருக்கக் கூடியதான நிலை; அது, ஒரு உபாயம். இதுவே ப்ரதான உபாயம்.

திவ்ய தம்பதிகள் ஸர்வ சேஷி, என சாஸ்த்திரங்கள் அறிவிக்கின்றன. ஆக, பிராட்டியோடு கூடிய பெருமாளே ஸித்தோபாயம்.

ஸாத்யோபாயம் - பலன் பெறுபவனால், ஸித்தோபாயனின் விதிப்படி, செய்ய வேண்டிய அநுஷ்டானம்; அது, ஒரு உபாயம். இது பகவத் அதீனமான அப்ரதான உபாயம். பகவத் சாஸ்த்திர விதி இருப்பதால், ஸாத்யோபாய அநுஷ்டானமும் பலனுக்கு தேவையாகிறது.

ஆக, ஆழ்வார்களும் மஹரிஷியும், பகவந் நாம உச்சாரண மகத்வத்தை கூறுவதாவது, ஸித்தோபாயத்தின் ப்ராதான்யத்தைக் கூறுவதாகும். அது ஸாத்யோபாயத்தை விலக்குவதாகாது.

ஸாத்யோபாயமற்ற ஸித்தோபாயம் இருக்க முடியாது என்பதை உலக வழக்கிலும் காண முடியும்.

மக்களின் நலனில் அக்கரை கொண்ட ஒருவன் ஒரு கிராமத்தில், நூலகம் ஒன்றை அமைத்து, 'அறிவை மக்களிடம் வளர்ப்பது' என்கிற பலனுக்கு ஸித்தோபாயமாக (பலனை அளிப்பதற்கு ஸித்தமாக, தயார் நிலையில்) இருக்கிறான். மக்கள் அந்த நூலகத்திற்கு வந்து அறிவை வளர்த்துக் கொள்வதாகிற ஸாத்யோபாயத்தையும், அந்த பலனுக்காக அந்த கிராமத்து மக்கள் செய்ய வேண்டுவதாகிறது அன்றோ? ஆக, இங்கு மக்களின் ஸாத்யோபாயம் இல்லாத போது, அதாவது மக்கள் நூலகத்தை உபயோகிக்காத போது, மக்களின் நலனில் அக்கரை கொண்ட ஸித்தோபாயமாக நூலகத்தை அமைப்பதனாலேயே, 'அறிவை மக்களிடம் வளர்ப்பது' என்கிற பலன் பெற இயலாது அல்லவா?

அது போலவே, சாஸ்த்திரத்தில் விதிக்கப்பட்டுள்ள மோக்ஷத்திற்கான ஸாத்யோபாய அநுஷ்டானமாகிற சரணாகதி அநுஷ்டானத்தை மறுத்தால் எம்பெருமானுக்கு ஸித்தோபாயமே நிலைக்காமலல்லவா போய்விடும்?

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

150. <u>ஸ்வ ரக்ஷணார்த்தம் ஸ்வ யத்நம் ஜீவனுக்கு கூடாதா?</u>

தம்மைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் சம்சாரி ஜீவனுக்கு சம்பந்தமில்லை என்றும் ப்ரமாணங்கள் அறிவுறுத்துவதால், சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பத விளக்கமாக, ஓர் ப்ரபத்தி அநுஷ்டானம் தேவையில்லை என்பது ப்ரமாண விரோதம்

மோக்ஷத்தில் இச்சை உள்ளவர்கள், பிராட்டியோடு கூடிய எம்பெருமானிடத்தில், சாஸ்த்திர விதிப்படி சரணாகதியை அநுஷ்டிக்க வேண்டுவதே!

1. தம்மைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் சம்சாரி ஜீவனுக்கு சம்பந்தமில்லை என்றும் ப்ரமாணங்கள் அறிவுறுத்துவதால், சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற **மாம் எகம் சரணம் வ்ரஜ** எனும் பத விளக்கமாக, ஓர் ப்ரபத்தி அநுஷ்டானம் தேவையில்லை என்று அர்த்த நிர்ணயம் செய்வர் ஸித்தாந்த பூர்வபக்ஷிகள்.

2. ஆழ்வார் பாசுர விளக்கமான,

தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே; ஈஸ்வரனால் வரும் நன்மை முலைப்பால் போலே

என்ற ஸ்ரீ பிள்ளான் ஸ்ரீ ஸூக்திக்கு,

விதிக்கப் பட்ட பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் செய்யத் தகாதது என்ற கருத்து உடையது, என பூர்வபக்ஷிகள் கூறுவர்.

அப்படி ஒரு அர்த்தம் கொண்டால், அது ஸகல உபநிஷத், ப்ருஹ்ம ஸூத்ர, புராண வரிகளோடும் விரோதிக்கும்.

பக்தி யோகம் மற்றும் சரணாகதி அநுஷ்டானம் எல்லாம் அவனாலே வருகின்றன வென்று நினைக்க வேண்டும் - என்று தன்னுடைய பராதீன கர்த்ருத்வத்திலே தாத்பர்யம், என அறிய வேண்டும்; இதுவே, பற்பல ஸ்ரீராமானுஜ க்ரந்த நிர்தேசம்.

பல உபநிஷத்து வரிகளைக் கொண்டு பார்க்கும் போது, பக்தி யோகமும் சரணாகதியும் உபாயமாக, எம்பெருமானை பரமபதத்தில் அடைவதற்கு, விதிக்கப் பட்டிருப்பது தெளவாகிறது.

#பிரகதாரண்யக உபநிஷத் :

ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:

மோக்ஷமடைய பரமாத்மாவை, தான் (அகக் கண்ணால்) பார்க்கப்பட வேண்டியது, (அகக் காதால்) கேட்கப்பட வேண்டியது, (உள்)மனதால் நினைக்கப்பட வேண்டியது, (இதய ஐக்கியத்துடன்) பக்தி யோகம் செய்ய வேண்டியது என்று கூறியது இந்த உபநிஷத் வாக்யம்.

ஸ்வேதாசுதர உபநிஷத் :

யோப்ரஹ்மாணம் விததாதி பூர்வம், யோவை வேதாம்ச ப்ரஹிணோதி தஸ்மை, தகும் ஹ தேவம் ஆத்ம்புத்தி ப்ரகாசம் முமுக்ஷூர்வை சரணமஹம் ப்ரபத்யே

எவன் நாபியிலிருந்து ப்ருஹ்மா உதித்தானோ, எவன் ப்ருஹ்மாவிற்கு வேதத்தை உபதேசித்தானோ, எவன் ஒருவன் சாஸ்த்திரங்களினால் ஆத்மாவையும், பரமாத்மாவையும் அறிவித்தானோ, அவனை மோக்ஷத்தில் விருப்பமுடையவர்கள் சரணமாக அடைய வேண்டும்.
இந்த இரண்டு உபாயங்களில் ஒன்றை அநுஷ்டித்தே பரமபதத்தில் எம்பெருமானை அடைய முடியும். இதை தவிர அவனை அடைய வேறு உபாயம் கிடையாது.

பக்த்யா பரமயா வாபி ப்ரபத்யாவா மஹாமதே l ப்ராப்யோஹம் ந அந்யதா ப்ராப்ய: மம கைங்கர்ய லிப்ஸுபி

பரமபதத்தில் என்னை அடைந்து எனக்கு கைங்கர்யம் செய்ய விரும்புவர்கள் பக்தி யோகத்தை செய்தாவது அல்லது சரணாகதியை செய்தாவது என்னை அடைய வேண்டும்.

இந்த இரண்டு வழிகளை தவிர வேறு வழியால் என்னை அடைய முடியாது என்று அஹிர் புத்ந்ய ஸம்ஹிதையில் ஸ்ரீயப்பதியான எம்பெருமான் தானே மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளான்.

இதையே பகவத் ராமானுஜர் தனது க்ரந்தங்களான ஸ்ரீபாஷ்யம், கீதீ பாஷ்யம், கத்ய த்ரயம் ஆகியவற்றில் விளக்கியுள்ளார். இவ்விஷயத்தில் பூர்வபக்ஷிகளின் அர்த்த நிர்ணயம், அதாவது ஸாத்யோபாய அநுஷ்டானம் சம்சாரி ஜீவர்களுக்கு அநுசிதம் என்பது, ஸ்ரீராமானுஜ க்ரந்த விரோதம்.

3. ஸகல உபநிஷத் ஸாரமான, கண்ணனால் உபதேசிக்கப் பட்ட, பகவத் கீதையில், வைதீக கர்மாவிற்கு த்யாகத்தை அல்லது ஸந்நியாஸத்தை எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும்:

 # நியதஸ்ய து ஸன்யாஸ: கர்மணா நோப பத்யதே. மோஹாதஸ்ய பரித்யாக தாமஸ: பரிகீர்தித: (பகவத் கீதை 18-7)

அதாவது,

‘அறியாமையால், சாஸ்த்திரம் விதித்த வைதீக கர்மாக்களை த்யாகம் செய்வது தாமஸ த்யாகமாகும்.’ எனக் கண்ணனால் சொல்லப் பட்டிருக்கிறது.

அதன் விளைவானது தீயதாகவும், தாமஸ குணத்தை வளர்ப்பதாயும் இருக்கும்.

 # துக்கமித்யேவ யத் கர்ம காயக்லேஷ பயா த்யஜேத். ஸ க்ருத்வா ராஜஸம் த்யாகம் நைவ த்யாக பலம் லபேத் (பகவத் கீதை 18-8)

அதாவது,

‘உடல் ஸ்ரமம் அல்லது பண செலவினால் சாஸ்த்திரம் விதித்த வைதீக கர்மாக்களை விடுவது ராஜஸ த்யாகமாகும். அதனால் த்யாகத்தின் பலன் கிடைக்காது.’ எனக் கண்ணனால் சொல்லப் பட்டிருக்கிறது.

அதன் விளைவானது தீயதாகவும், ராஜஸ குணத்தை வளர்ப்பதாயும் இருக்கும்.

 # கார்யமித்யேவ யத் கர்ம நியதம் க்ரியதே அர்ஜுன. ஸங்கம் த்யக்த்வா பலம் சைவ ஸ த்யாக ஸாத்விகோ மத: (பகவத் கீதை 18-9)

அதாவது,

'சாஸ்த்திரம் விதித்த வைதீக கர்மாக்களை செய்துவிட்டு, இந்த கார்மாவினால் வரும் பலன் எனதல்ல, எம்பெருமானின் உகப்பிற்காகவே செய்யப் படுகிறது என்கிற எண்ணத்தின் த்யாகம் செய்வது ஸாத்விக த்யாகமாகும்.' எனக் கண்ணனால் சொல்லப் பட்டிருக்கிறது.

அதன் விளைவானது பயனுள்ளதாகவும், ஸத்வ குணத்தை வளர்ப்பதாயும் இருக்கும்.

இவ்வாறு, சாஸ்த்ரங்களில் கூறியிருக்கும் கர்மாக்களின் 'த்யாகம்' மற்றும் 'ஸந்யாஸம்' என்கிற விஷயத்தை கண்ணன், பகவத் கீதையில், தெளிவாக விவரித்திருக்கிறான். பகவத் ராமானுஜர், இவ்விஷயத்தை தனது பாஷ்யங்களில் விளக்கியுள்ளார்.

ஆக, ஸாத்யோபாயம் அநுஷ்டேயமே.

4. ஸ்வாமி ஸ்ரீ தேசிகன், தான் அருளிய ந்யாஸ தசகத்தில்,

ஸ்வாமி ஸ்வேசஷும் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்பரம் ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மின் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்

என அருளினார். அதாவது,

அனைத்துக்கும் ஸ்வாமியான ஸர்வேஸ்வரன், தன்னுடைய தொண்டனாகவும், அதனால் வசப்பட்டவனாகவும் உள்ள என்னை, தன்னால் அளிக்கப்பட்ட சரணாகதி அநுஷ்டானம் என்கிற புத்தியாலே, என்னை காப்பாற்றிக் கொள்வதில் எவ்வித பொறுப்பும் எனக்கு இல்லாதபடி, என்னை காப்பாற்றும் பொறுப்பு தன்னுடையது என்று ஏற்றுக் கொண்டு, என்னை தன்னிடமே பாதுகாப்பாக அடையச் செய்கிறான், என்பதாயிற்று.

இந்த வரிகளில் உள்ள **ஸ்வ** சொற்களை விளக்கும் போது, நமக்கு விதிக்கப்பட்ட சரணாகதி அநுஷ்டானத்தை செய்ய வேண்டாம் எனக் கூறுவதாக, ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தை சேராத, ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த பூர்வபக்ஷிகள் கூறுவர்.

அந்த கருத்து தவறானது ஏனெனில் ந்யாச தசகத்தில், மற்ற வரிகளில், அங்கங்களோடு கூடிய சரணாகதி அநுஷ்டானம் விவரிக்கப் படுகிறது.

ஆக, இதனால் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் கூறுவது, ஸ்ரீராமானுஜர் க்ரந்தங்களால் உணர்த்தப்பட்ட, சம்சாரி ஜீவர்களுடைய பராதீன கத்ருத்வம், (அதாவது எம்பெருமானின் விதிகளுக்கு உட்பட்டு செயல் புரியும் தன்மை கொண்ட ஜீவர்கள்), என்பதாகும்.

இந்த ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸுக்திக்கும் தவறாக அர்த்தம் கற்பிக்கும் போது, ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தத்தை, மாற்றி அமைக்க, ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்தை சேராத பூர்வபக்ஷிகள் முற்படுகிறார்களோ, என்றே தோன்றுகிறது.

5. ஸ்வாமி தேசிகன் **ஸித்தோபாய சோதன அதிகாரத்தில்** ,

இது ஆத்ம ஸமர்ப்பண தசையில், க்யாதி லாப பூஜா பல-ஸங்க கர்த்ருத்வ உபாயத்வங்களாகிற தூரலற்ற பகவத் அநுஸந்தான கட்டளை

என அருளியுள்ளார்.

இதன் பொருளாவது:

இது - இந்த சரணாகதி அநுஷ்டானம்

ஆத்ம ஸமர்ப்பண தசையில் - சரணாகதியை அநுஷ்டிக்கும் போது

க்யாதி லாப பூஜா - பேர், புகழ், லாபங்களிலும்

பல-ஸங்க - தன் ப்ரயோஜந்த்திற்காக தான் பலனை அடையும் பொருட்டு செய்வதாயும்

கர்த்ருத்வ - தான் ஸ்வதந்திரன் என்கிற எண்ணம் கொண்டு தான் செய்யும் செயலாக கொள்வதுவும்

உபாயத்வங்களாகிற - பகவத் சம்பந்தம் அன்றிக்கே இந்த செயலானது தானே பலனளிக்க வல்லதாகவும்

தூரலற்ற - இவ்வித தோஷங்கள் இல்லாதபடி

பகவத் அநுஸந்தான கட்டளை - ஸ்வதந்தரனான பகவான் சாஸ்த்திரங்களில் நியமிக்க அதை, பரதந்தரனான சம்சாரி ஜீவர்கள் அநுஷ்டிக்க கட்டளையாகிறது.

6. ஆக, தம்மைக் காத்துக் கொள்ளும் விஷயத்தில் சம்சாரி ஜீவனுக்கு சம்பந்தமில்லை என்று ப்ரமாணங்கள் அறிவுறுத்துவதால், சரணாகதி அநுஷ்டானத்தை விதிக்கிற '**மாம் எகம் சரணம் வ்ரஜ**' எனும் பத விளக்கமாக, ஓர் ப்ரபத்தி அநுஷ்டானம் தேவையில்லை என்பது ஸத் ஸம்ப்ரதாய விரோதம்; இது வேத மார்க்கமாகாது ; பகவத் ராமானுஜ ஸித்தாந்தமாகாது ; ஸ்வாமி தேசிக க்ரந்த நிர்தேசத்தோடும் விரோதிக்கும்.

ந தைவம் தேசிகாத் பரம்

தாஸன் தண்ணீர்பள்ளி க்ருஷ்ணன்

++++++

நிகமனம்

நாம் **தேசிக க்ரந்த விசாரம் மட்டும்** குழுவில் பல வருடங்களாக கடந்து வந்த பாதையைக் காட்டுவது நோக்கம். இந்த பாகத்தில் உள்ள **150** விஷயங்களில், ஸம்ஸயங்களோ அல்லது ப்ரமாண பூர்வக எதிர்வாதம் உண்டானால், அதை **தேசிக க்ரந்த விசாரம் மட்டும்**

விவாதமேடைக்கு அநுப்பவும் ; ப்ரமாண பூர்வகமாக, விவாதித்து நிர்தாரித்து மறுபடி வெளியிடப்படும். இன்று வரை கேள்விகள் மூலம் ப்ரமாண பூர்வக பதில் அளிக்க தண்ணீர்பள்ளி திரு.க்ருஷ்ணன் ஸ்வாமியினை முன்னெடுக்க செய்த தேசிக க்ரந்த விசாரம் மட்டும் கேள்வியாளர்களுக்கு 'தலையல்லால் கைமாறிலோம்' தேசிக ஸிந்தாந்த சாஸ்த்ர ஸம்ப்ரதாய வழி மீறா ப்ரமாண பூர்வக பதிலை பெற்றுத்தரும் ஸத்தர்க அடிப்படை கேள்விகள்..வர்ததாம் அபிவர்ததாம்.. என எங்கும் பல்கி பெருகட்டும்.

வாசக தோஷ: க்ஷந்தவ்ய:

ந தைவம் தேசிகாத் பரம்
தேசிகக்ரந்தவிசாரம்மட்டும் (நிர்வாகத்தினர்)

कवि तार्किक सिंहाय कल्याण गुण शालिने । श्रीमते वेंकटेशाय वेदान्त गुरवे नम:

விற்பனை ப்ரதி அல்ல
காலக்ஷேபார்த்திகளுக்காக வித்வத் ஸதஸில் அந்வயிக்க

வெளியீடு : R. ஸ்ரீராம் ; எண் 1113, மீனாக்ஷி நகர் ; திருநின்றவூர், சென்னை 600024
மின் அஞ்சல் : sriram211175@gmail.com

பாகம் - 5 நிறைவு பெற்றது

(தேசிக க்ரந்த விசாரம் மட்டும் - புத்தக வெளியீடு - மேலும் தொடரும்...)



வினைகளால் உமக்கினி வேறோர் இடம் தேடவேண்டும்
எனைச்சின மேவி முன் போல் சிதைக்கும் வகை இங்கு அரிது கண்டீர்
எனினில் இராமானுசமுனி இன் உரை சேரும் தூப்புல்
புனிதர் என் புந்தி புகுந்து திகழ்ந்து பொருத்தினரே

சுவாமி தேசிகன்

Subanayagam 9282102533